சூரியகாந்தம்

சூரியகாந்தம்

லக்ஷ்மி

திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899
Fax: 91 - 44 - 24341559

ஐந்தாம் பதிப்பு: 1991
ஆறாம் பதிப்பு: டிசம்பர், 2000
ஏழாம் பதிப்பு: ஜூலை, 2005
எட்டாம் பதிப்பு : செப்டம்பர் 2007
உரிமை : ஆசிரியருக்கு ©

SURIYAKANTHAM

By: **Lakshmi**

Fifth Edition: 1991
Sixth Edition: December, 2000
Seventh Edition: July, 2005

No. of Pages: 528

Paper used: 11.6 cream wove

விலை ரூ. 155/-

THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9282152070

Printed at: **UDAYAM OFFSETS** ✆ : 28454808, 28451906

சூரிய காந்தம்



இருபது வருஷங்களுக்கு அப்பால் தனக்கு வரப்போகும் பெரும் கீர்த்தியை முன் கூட்டியே அறிந்து கொண்டிருந்தால் ஒரு சமயம் அன்று சூரியகாந்தம் மிகவும் உற்சாகத்துடன் விளங்கி இருக்குமோ என்னவோ? ஆனால், வழக்கம் போல் இரவு எட்டு மணி ஆவதற்குள் கிராமத்தின் நடுநாயகமாக இருந்த மேலத்தெருவில் ஜன சந்தடி அடங்கிக் காணப்பட்டது. மார்கழி மாத ஊதக் காற்றிற்கும் பனிக்கும் பயந்தவர்கள் போல் தெரு மக்கள், அஸ்தமிக்கு முன்பே தங்கள் இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு கதவை உள்புறம் அடைத்துக்கொண்டு உறங்கப் போய்விட்டனர். அவர் களுடன் கிராமமும் கூட உறங்கச் சென்று விட்டதனால், மெல்ல ஆடி அசைந்து கொண்டு ஒரு வழியாக ஊரை அடைந்த அந்த மாட்டு வண்டி தெரு முனையை அடையும்பொழுது, அதனை வரவேற்க மினுக்கென்று மங்கலாக எரிந்து சொண்டிருந்த விளக்குக் கம்பமும், அதனடியே சுருண்டு படுத்துக்கிடந்த தெரு நாய்களில் ஒன்றுமேதான் இருந்தன.

கிராமப் பஞ்சாயத்தாரின் கைங்கரியத்தின் அத்தாக்ஷி யாகப் பல வருஷங்களாக நின்று கொண்டிருந்த கல்தூணின் உச்சியில் மங்கலாக எரிந்து கொண்டிந்த மண்ணெண்ணெய விளக்கு எந்த நிமிஷமும் அணைந்து விடத் தயார் என பயமுறுத்திக் கொண்டிருந்தது. கிராமமே வறுமையிலும் பஞ்சத்திலும் வாடிக்கிடக்கை யில் தெருவில் திரியும் நாய்க்கு உணவுக்கு வழி ஏது? ஆகவே, சோர்வும் பட்டினியும் குளிரும் தாளாது உடலைச் சுருட்டிக்கொண்டு விளக்குக் கம்பத்தை அணைத்தவாறு படுத்துக் கிடந்தது அந்த நாய். என்னதான் பட்டினி என்றாலும் பல நாளையப் பழக்கம் என்பது பகுத்தறிவற்ற மிருகத்தைக்கூட விட்டபாடில்லை போலும். எதற்காக, என்னத்திற்காக யாருக்காகச் செய்கிறோம் என்ற எவ்வித முகாந்திரமுமின்றி சுருட்டிப் படுத்துக் கிடந்த நாய் ஒரே துள்ளலில் எழுந்து நிமிர்ந்து நின்றது. உடலை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டு மிகவும் ஆக்ரோஷத்துடன் தெருவிற்குள்ளே மெள்ளப் பிரவேசித்துக் கொண்டிருந்த அந்த மாட்டு வண்டியைப் பார்த்து 'லொள்' 'லொள்' எனக் குரைத்து இரவின் நிசப்தத்தைப் பயங்கரப்படுத்திய வண்ணம் வரவேற்றது.

வண்டிக்குள் சாக்கு விரிப்பின் மீது குளிருக்கு ஒண்டியபடி படுத்துக் கிடந்த தமயந்தி தூக்கத்தினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். திக்குத் தெரியாத காட்டில் திரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு சிங்கம் எதிர்பட்டு கோரமாக கர்ஜிப்பது போன்று அவளுக்கு அது சமயம் அந்த மெலிந்த நாயின் குரைப்பு மிகமிகப் பயங்கரமாகத் தோன்றவே, நடுங்கிக்கொண்டு தனது கரங்களால் சிவானந்தத்தின் சட்டையைப் பற்றிக் கொண்டாள்.

"தெரு நாய் குலைக்குது. அதுக்கு இத்தனை பயமா? படுத்துக்கோ!" என்று நாயின் குரைப்பிற்கு எதிரொலி போல் சிவானந்தம் அந்தச் சிறுமியிடம் எரிந்து விழுந்தார்.

முகத்தின் பெரும் பகுதியை வியாபித்து நின்ற நரைத்துப்போன அவரது கோர மீசையையும், கோபத்தில் சிவந்து விளங்கிய அவரது கருணையற்ற இருகொடுங் கண்களையும் இருட்டிலே பார்க்க முடியாவிடினும் அவைகளை நினைத்த மாத்திரம் அந்தச் சிறுமியின் உடல் பயத்தினால் சில்லிட்டுப் போயிற்று. அவர் சட்டை மீது வைத்த கரத்தை சட்டென மடக்கிக் கொண்டு, சிறிது நகர்ந்து சாய்ந்தவாறு உட்கார்ந்து கொண்டாள்.

தெரு நாய் குரைப்பதை நிறுத்தவில்லை. வண்டியைப் பின் தொடர்ந்து வேகமாக ஓடி வந்த அது, வண்டிக்கு முன்னாலும் பின்னாலும் பாய்ந்து பாய்ந்து ஓடி உக்கிரமாகக் குரைத்த வண்ணம் இருந்தது. தெருவின் முன்னே பரவிக் கிடந்த இருட்டும், தனிமையும், நாயின் குரைப்பும் தமயந்தியின் கிலியை இன்னும் அதிகப் படுத்தவே அவளது இருதயம் நின்றுவிடும் போல் மிகவும் துரிதமாக அடித்துக்கொண்டது. விவரிக்க முடியாத ஒரு துக்கம் அவளது நெஞ்சைப் பிடித்துக் கொண்டது. நித்திரை செய்து கொண்டிருக்கையில் எத்தனையோ முறைகள் அவள் திடீரென்று பயங்கரக் கனவினின்று விழித்துக்கொண்டு, 'அம்மா' என அலறிய படி அருகில் படுத்திருக்கும் தாயின் அருகில் ஓடிக் கட்டிக் கொண்டிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவளது தாய் மிருதுவாக அவளை அணைத்துக் கொண்டு, "பயப்படாதே, கண்ணு! ஒண்ணுமில்லேம்மா! நான் கிட்டதானே இருக்கிறேன்!" என்று தேறுதல் கூறுவது வழக்கம். அதே போல் இன்றும் அவளுக்கு பயத்தில், 'அம்மா!' என்று அலறி, சத்தம் போட வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அருகில்

அம்மாதான் இல்லையே! ஆமாம், அம்மா- அவள் எங்கே போய் விட்டாள்? அவளது இளம் உள்ளத்தில் ஒரே கணத்தில் பலவித நினைவுகள் தோன்றி அவளது துயரத்தையும் குழப்பத்தையும் அதிகப்படுத்தின.

பல தினங்களுக்கு முன்பு ஒரு நாள் தமயந்திக்குத் திடீரென்று காய்ச்சல் அடிக்கத் துவங்கியது. நோயின் உபாதையினால் அவள் தாயை விட்டு ஒருகணமும் பிரிய மறுத்து அழுது பிடிவாதம் செய்து கொண்டிருந்தாள். அவளது தாயும் அன்று ஒரு நாள் இரவு முழுவதும் சிறிது கூடத் தூங்காது குழந்தையை மடி மீது படுக்க வைத்துக்கொண்டு குழந்தை உபாதையினால் அழுத போதெல்லாம் தேறுதல் கூறிக் கொண்டிருந்தாள். ஆனால், அடுத்த நாள் முழுவதும் தாயார் குழந்தையின் அருகில் வரவேயில்லை. ரேழிக்கு அப்பாலிருந்த சாமான்கள் வைக்கும் அறையில் கிழிந்த பாய் ஒன்றின் மீது முனகிக்கொண்டு அவளது தாயார் படுத்துக் கிடந்தாள். அடிக்கொரு தடவை அறைக்குள்ளே போவதும், வெளியே வருவதும், பிறகு ஒன்றாகக் கூடி ரகஸ்யமாக ஏதோ பேசுவதுமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பெண்கள், ரேழித் திண்ணை மீது ஓரமாகப் படுத்துக் கிடந்த தமயந்தி, "அம்மா! அம்மா!" என்று அழைத்து அழுவதைச் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை.

காலையிலிருந்து தாய் தன் அருகே ஒரு முறைகூட வரவில்லை என்ற தாபத்தை அந்தச் சிறு குழந்தையினால் தாளக்கூடவில்லை. ஆகவே, அவள் யாரும் காணாத சமயம் தொப்பென திண்ணையிலிருந்து குதித்து, அறைக்குள்ளே ஓடிச் சென்று "அம்மா" என்று அலறியபடி படுத்துக் கிடந்த தாயைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

"அழாதே, கண்ணு!" என்று ஹீனஸ்வரத்தில் முனகிய தாய் அவளைத் தனது கரங்களை நீட்டி தழுவிக் கொள்ளுமுன் அதிலிருந்த வயோதிக ஸ்திரீ ஒருத்தி பலவந்தமாக தயந்தியை இழுத்துத் தூக்கி எடுத்துக் கொண்டு, "அவ உசிருக்கு மன்றாடறச்சே நீ ஒண்ணு வந்து கலாட்டா பண்ணறியே! அழுது கிழுது ரகளை செய்தியோ, தெரியுமா? சும்மா இங்கே படுத்துக் கிடக்க என்ன கொள்ளை?" என்று உறுமி விட்டு, அவளை மீண்டும் திண்ணை மீது கொண்டுவந்து கிடத்தினாள். "அம்மா!" என்று வீரிட்டு அலற வாய் திறந்த தமயந்தி, அந்த ஸ்திரியின் முகத்திலே பரந்து நின்ற கடுமையைக் கண்டு நடுங்கிப் போய் தலையை அப்பால் திருப்பிக் கொண்டு விக்கி விக்கி அழுதபடியே தூங்கி விட்டாள்.

அன்றிரவு திடீரென்று தூக்கத்தினின்று விழித்துக் கொண்டு அவள் எழுந்து உட்கார்ந்த பொழுது, தனது தாய் தன் தலையை மிருதுவாகத் தடவுவதை உணர்ந்தாள். "சரி! இப்ப என்ன வந்திடுச்சு. அழுவ ஆரம்பிச்சுட்டே? தூங்கின குழந்தையை ஏன் எழுப்பினாய்? அது வேறே இப்ப கத்தி ஊளையிடணுமா? நேரமாகுது, இப்ப வண்டியில் ஏறினாத்தானே விடியறதுக்குள்ளவாவது ஆஸ்பத்திரி போய்ச் சேரலாம்" என்று தமயந்தியை மிரட்டிய அந்த வயோதிக ஸ்திரீ அதட்டிப் பேசினாள்.

"ஐயோ, அத்தை! நீங்கதான் என் கண்ணுமணியைக் கவனிச்சுக்கணும்" என்று தினறிய அவள் தாய், குழந்தையின் கரங்களை எடுத்து அன்புடன் தனது கன்னங்களின் மீது அணைத்துக் கொண்டாள்.

அவளது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் தாரை தமயந்தியின் கரங்களின் மீது சூடாகப் பாய்ந்து ஓடியது. என்னத்திற்காக அவளது தாய் அப்படி விம்மி அழுகிறாள்? அவள் எங்கே செல்கிறாள்?- தமயந்திக்கு

ஒன்றுமே விளங்கவில்லை. தாயின் துயரம் அவளது இளம் உள்ளத்தை மிக்க வேதனை செய்யவே. அவளும் கூடவே ஹோ' வென்று ஓலமிடத் துவங்கிவிட்டாள்.

"இதுக்குத்தானே சொன்னேன்? நீ கேட்கலை. இப்ப துடைப் பொண்ணை சமாதானப்படுத்தித் தொலைக் கணும். இந்தாப்பா வடிவேலு! நீ என்ன சிலையாட்டமா ஒரேயடியா சமஞ்சு போய் நிக்கறே! இந்தக் குட்டியைக் கொஞ்சம் சமாதானம் செய்" என்று கத்தி உத்தரவிட்ட அந்த வயோதிக ஸ்திரீ, தமயந்தியின் தாயின் பக்கம் திரும்பி, "ஏ தில்லைநாயகி, இது என்ன இது? இப்படி அழுவறது நல்லாவேயில்லை. கிளம்பு!" என அவளது தோள்களைப்பற்றி வாயிற்புறம் அழைத்துச் சென்றாள். விம்மியழுது கொண்டு தள்ளாடியபடி வாயிலைக் கடந்து வெளியே இருட்டில் மறைந்த தாயின் பின்னால் ஓட வேண்டும் போல் ஆத்திரமும் துக்கமுமாக இருந்தது தமயந்திக்கு. அவள் தந்தையின் ஆதரவான அணைப்பு அவள் உள்ளத்திற்கு இதமாக இருந்தாலும், தாயின் பிரிவை அவளால் தாள முடியவில்லை. "அப்பா! அம்மா என்னை விட்டுட்டு எங்கே போறா?" என துக்கத்துடன் திணறியபடி கேட்டாள்.

துண்டினால் கண்களைத் துடைத்துக்கொண்டே வடிவேலு கம்மிய குரலில், "ஊருக்குப் போறா. நாளைக்கு வந்து விடுவா" என்றான்.

"ஊருக்கு என்னத்துக்குப் போறா!" என்று விடாப் பிடியாகக் கேட்டாள் தமயந்தி. அதற்குள் அந்த வயோதிக மாது உள்ளே திரும்பி வந்து விட்டாள். "என்ன இது! பெரும் தொல்லையாக இருக்கிறது! கைக்குழந்தை போல ரொம்பக் கொஞ்சுதே இந்தப் பொண்ணு. வடிவேலு, அதை எங்கிட்ட விட்டுட்டு நீ வண்டியோட போய்ட்டு வா... உம் சீக்கிரம்!" என அதட்டினாள்.

முரட்டுத்தனமாகத் தன்னை வாரி எடுத்துக் கொண்ட அந்த மாதின் முகத்தைப் பார்க்கவும் அஞ்சிய தமயந்தி, அழுகையை அடக்கிக் கொண்டாள். எனினும், வெகு நேரம் அவளது துக்கம் சிறு விம்மல்களாக வந்து கொண்டுதானிருந்தது. "இதோ பார், நீ நல்ல பெண் அல்லவா? தூங்கு. காலையிலே அம்மா உன்னோட விளையாட ஒரு தம்பிப் பாப்பா எடுத்துக் கொண்டு வருவா" என அந்த மூதாட்டி முடிவில் கொஞ்சம் தணிவாகவே பேசினாள். அவளது கட்டளைப்படியே கண்களை மூடிக்கொண்ட தமயந்தி அதற்குப் பிறகு நன்றாகத் தூங்கிவிட்டாள்.

அடுத்த இரண்டு நாட்கள் அவளது தாயோ தந்தையோ ஒருவரும் திரும்பி வரவில்லை. அவளுக்கு வேளைக்குக் கஞ்சி, மருந்து இவைகளை அந்த வயோதிக ஸ்திரீயேதான் அளித்து வந்தாள்.

மூன்றாவது நாள் அந்திப்பொழுது தன் வீட்டிற்குள் அக்கம் பக்கத்துப் பெண்களும், புருஷர்களும் வந்து கூடியிருப்பதைக் கண்ட தமயந்திக்கு மிகவும் அதிசய மாக இருந்தது. ஊருக்குப் போயிருந்த வடிவேலு வீடு திரும்பி உள்ளே பிரவேசிக்குமுன், கூடத்திலிருந்த பெண்கள் அனைவரும் முகத்தில் அறைந்து கொண்டு 'ஹோ'வென்று அலறத் தொடங்கிவிட்டனர். மேல் துண்டினால் வாயைப் பொத்திக் கொண்ட வடிவேலு, ஓடிவந்து தமயந்தியைக் கட்டி அணைத்துக் கொண் டான். தன்னைச் சுற்றிலும் பலர் போட்ட கூக்குரலில் திகைப்படைந்து போன அவள், கிலி பிடித்தவளாகத் தகப்பனை இறுக்கக் கட்டிக் கொண்டாள். "என் கண்ணே!" என்று அரற்றிய வடிவேலு குலுங்கக் குலுங்க அழுது கொண்டிருந்தான். ஒரு வழியாக அன்றைய ஆர்ப்பாட்டங்கள் முடிந்ததும் தமயந்தி தனது சந்தேகத்தை மெல்லத் தந்தையிடம் கேட்டு தெளியும்

நிமித்தம், "அப்பா! அம்மா ஏன் இன்னும் வரலை?" என வினவினாள்.

அதற்குள் அவள் தந்தை சில நிமிஷங்கள் மௌனமாக இருந்துவிட்டு, பரட்டையாகக் கிடந்த அவளது கூந்தலை கரங்களால் மெல்ல வருடிக் கொண்டு, "ஊருக்குப் போயிருக்கிறாள், வருவாள்" என்றான்.

"நீ ஏன் அழுகிறாய்?" என்று விடாப்பிடியாகக் கேட்டாள் அச்சிறுமி.

"உனக்கு உடம்புக்குக் காய்ச்சல் வந்துடுச்சேன்னு வருத்தப்பட்டேன்" என்றான் அவன்.

"எனக்குக் காய்ச்சல் நேத்தே விட்டுப் போச்சுப்பா. தொட்டுப் பாரு, என்னை. எனக்கு உடம்பு நல்லாப் போச்சு" என குதூகலமாகப் பேசிய குழந்தை, வடிவேலு வின் கரத்தை எடுத்துத் தன் நெற்றி மீது வைத்துக் கொண்டாள். பதிலுக்கு அவன் வறட்சியானதொரு புன்னகை செய்தான்.

நாலைந்து நாள் ஜ்வரத்திற்குப் பிறகு தமயந்தி ஒரு திடுக்கிடும் உண்மையை அறிந்து கொண்டாள். முன் போல் அவளால் எழுந்து ஓடியாடி விளையாட முடி யாது. வலது கால் இழுத்துக் கொண்டிருந்தது. அதைச் சரிப்படுத்த வடிவேலு பல வைத்தியர்களை அழைத்து வந்து குழந்தையைக் காட்டினான். அவர்கள் கொடுத்த ஏதேதோ மருந்துகளைக் காலில் பூசி வெந்நீர் ஊற்றிச் சிகிச்சை செய்து பார்த்தான். மந்திரங்கள் பூசைகள் எல்லாம் நடந்தன. ஆனால், மாதம் இரண்டு ஆகியும் தமயந்தியினால் முன்போல் நடக்க முடியவில்லை. "அவ்வளவுதான்னு விட்டுடு. ஏன் காசைக் கண்டபடி செலவழிக்கறே? இளம் பிள்ளைவாதம் வந்தா காலு இப்படித் தான் உதவாமப் போயிடும்!" என்று சலிப்பாகப் பேசினாள் அந்த வயோதிக மாது.

"பெண் குழந்தை நொண்டியாகப் போய்விட்டால்?" என்று வடிவேலு பேசி முடிக்குமுன், "நொண்டியாகப் போயிட்டாக்க... ன்னு சந்தேகம் வேறேயா? அவ இனி மேல் நொண்டிப் பொண்ணுதான்! அவ வாங்கி வந்த வரம்..." எனக் கடுத்துக்கொண்டு பேசினாள் அந்தப் பெண்மணி.

'நொண்டிப் பெண்' என்ற வார்த்தையைக் கேட்ட தமயந்திக்குத் துக்கம் தாளவில்லை. இனிமேல் அவளால் முன்போல் தட்டாரப் பூச்சிகளைப் பிடிக்க ஓடமுடியாது. வலது காலைத் தாங்கி இழுத்துக்கொண்டு நொண்டித் தான் நடக்க வேண்டும். தெருப்பிள்ளைகள் எல்லோரும் அவளை 'நொண்டி, நொண்டி' என்று கேலி செய்வார்கள். சில தினங்களுக்குமுன் தெருவில் பிச்சையெடுத்துச் சென்ற ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் ஒரு வீட்டிலே பிச்சை இட அழைத்ததைக் கேட்டு வேகமாக அங்கே போகத் திரும்பினான். ஊன்றிக் கொண்டிருந்த தடி நழுவி விழுந்துவிடவே, நொண்டி கால் இடறி கையிலிருந்த சட்டியைப் போட்டுக் கொண்டு தெருவில் விழுந்து விட்டான். அவன் அன்று முழுவதும் எடுத்த பிச்சைச் சோறு மண்மீது சிதறி விழுந்துவிட்டது. தெருப் பிள்ளைகள் அதைக் கண்டு, "நொண்டி நொண்டி நொடிச்சுக்கோ, வெல்லம் தரேன் கடிச்சிக்கோ!" என்று பாடி, கைகொட்டிச்சிரித்து ஆர்ப்பரித்தனர். மண்ணுடன் கலந்து கிடந்த சோற்றை வாரித் திரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் முகத்தை தமயந்தி பார்த்தாள். அவளுக்கு ஏனோ மிகவும் துக்கமாக இருந்தது. "ஐயோ பாவம்!" என்றாள் தனக்குள்ளே.

அந்த நொண்டிப் பிச்சைக்காரனைப் போல் தானும் நடக்க முடியாமல் சறுக்கி விழுந்து விட்டால், தெருப் பிள்ளைகள் எவ்வளவு கேலி செய்வார்கள் என எண்ணும் பொழுதே துக்கம் அவள் நெஞ்சைப் பிளந்தது.

சில தினங்கள் சென்றதும், ஒரு நாள் காலை அவள் வீட்டிற்கு ஒரு புது மனிதர் வந்திருந்தார். அவரது நரைத்த மீசையும், அவரது கடும் முகத்தையும் பார்த்த மாத்திரத்தில் தமயந்திக்கும் கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது. "ஊரிலிருந்து மாமா வந்திருக்கிறார் உன்னைப் பார்க்க" என்று வடிவேலு அவளுக்கு அந்த புது மனிதரை அறிமுகப்படுத்தி வைத்தான்.

அன்று மாலை அவளைத் தோளில் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்த வடிவேலு தயாராக வாயிலில் நின்ற மாட்டு வண்டியில் அவளை ஏற்றி உட்கார வைத்தான். வண்டிக்குள் மாமா மட்டுமே ஏறிக் கொள்வதைக் கவனித்த அவள், அச்சத்துடன் தந்தையின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"மாமா உன்னை ஊருக்குக் கூட்டிப் போகிறார்" என்று தந்தை கூறியதைக் கேட்ட தமயந்தி, "ஐயோ! நான் மாட்டேன். நான் போவலை!" என்று கிரீச்சிட்டு அலறினாள்.

"தே! சும்மா இரு" என அதட்டல் போட்ட மாமாவுக்குக்கூட அவள் அது சமயம் பயப்படவில்லை. வண்டியைப் பின் தொடர்ந்து வந்து வடிவேலு அவளுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டே வந்தான். "ஊரிலே அம்மா இருக்கா. அவளிடம் உன்னை அழைச்சிட்டுப் போகிறார் மாமா. உனக்கு அம்மாவைப் பார்க்க வாணாமா?" என்றார்.

"நீயும் வா!" என சிறு கைகளை வெளியே நீட்டித் தந்தையை அழைத்த தமயந்தி பிடிவாதம் செய்தாள். "வடிவேலு, நீங்க போங்க. குழந்தைகளே அப்படித்தான்" என்று அதட்டிய சிவானந்தம், தமயந்தியைத் தன் அருகே முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டார்.

"ஊருக்குப் போய் மாமா வீட்டிலே நல்ல பிள்ளையாயிரு. உனக்கு நான் மிட்டாய் நிறைய வாங்கிட்டு வருகிறேன். இந்தா, இதை வச்சுக்கோ" எனத் திணறிய தந்தை, சட்டைப் பையிலிருந்த ஒரு வெள்ளி நாணயத்தை எடுத்து அவளது வலது உள்ளங்கையில் வைத்து, அந்தச் சிறு விரல்களைப் பத்திரமாக அதன் மீது மூடினான். முகத்தில் வழிந்திருந்த கண்ணீரை ஆதரவுடன் துண்டினால் துடைத்துக்கொண்டு வடிவேலு நின்றான். உடனேயே தமயந்தி அலறியதையும் பொருட்படுத்தாமல் வண்டி வேகமாகச் சென்றது.

தந்தை தன்னை விட்டுப் போவதை உணர்ந்த தமயந்தி இன்னும் பலமாகக் கூக்குரலிட்டுக் கத்தினாள். ஆனால் மேலே அழுது புரட்சி செய்வதற்கு முன் "என்ன இது ரகளை! அழுதியா தெரியுமா? மென்னியைத் திருகி விடுவேன்" என்று பயங்கரமாகக கர்ஜித்த மீசைக்கார மாமா கையை ஓங்கினார். அவர் போட்ட அதட்டலில் திக்பிரமை அடைந்து போன தமயந்தி தனது ஓலத்தை உடனே நிறுத்திக் கொண்டு அந்த அதிர்ச்சியில் தூங்கியும் போனாள்.

நாய் குரைக்கும் சப்தத்தில் பயந்துகொண்டு எழுந்ததும் மீண்டும் மாமா போட்ட அதட்டலைக் கேட்டு நடுங்கிவிட்ட தமயந்தி குழப்பத்துடன் வாளாவிருந்தாள். "ஊரு வந்திடுச்சா?" என்று கேட்டறிந்து கொள்ள வேணும் போல் அவளுக்கு ஆவலாகத்தான் இருந்தது. ஆனாலும் மாமாவின் கடும் முகத்தை எண்ணிப் பயந்த வளாக ஆவலை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளது ஆவலுக்குப் பதில் அளிப்பது போல் வண்டி சட்டென ஒரு வீட்டு வாயிலில் நின்றது.

வண்டியை விட்டு இறங்கிய சிவானந்தம் தமயந்தியை உள்ளிருந்து வெடுக்கென இழுத்துத் தோள் மீது தூக்கி

உட்கார வைத்துக் கொண்டார். வண்டிக்காரனுக்குக் கூலியைக் கொடுத்த பின்பு அவளைச் சுமந்த வண்ணம் ஒரு சிறு ஓட்டு வீட்டின் வாயிற் கதவை வேகமாகத் தட்டினார்.

மாமா தன்னைக் கீழே இறக்கி விடுமுன் அவசரமாகக் குதித்து அருகே இருக்கும் தன் தாயை ஓடித் தழுவிக் கொள்ள வேண்டுமென்று தமயந்திக்கு ஒரே துடிப்பாக இருந்தது. கூடத்திலே வீற்றிருந்த அம்மாள் சிவானந்தத் தைக் கண்டதும் முகவாயில் கையை வைத்து, "இது என்னா இது!" என அதிசயத்துடன் வரவேற்றாள். தோளின் மீது சுமந்து கொண்டிருந்த பாரத்தைத் தரை மீது இறக்கி விட்ட சிவானந்தம் "அப்பாடா" எனப் பெருமூச்சு விட்ட வண்ணம் அருகிலிருந்த பெஞ்சி மீது உட்கார்ந்து கொண்டார்.

தமயந்திக்கு அந்த அம்மாளின் வெறுப்பு நிறைந்த முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை. தாயை ஓடிப்போய் கட்டிக்கொண்டு அழ வேண்டும் போல் அவளுக்குத் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. கூடத்திலிருந்து அவர்களை விட்டு அப்பால் ஓட எண்ணிய அவள் எழுந்து ஓர் அடி வைத்து விட்டு, மேலே நடக்க மாட்டாது தொப் பென உட்கார்ந்து விட்டாள். மாமாவுக்குப் பின்னால் ஆவலுடன் ஓடி வந்து நின்று கொண்ட இரண்டு சிறு பெண் குழந்தைகள் அதைக் கண்டதும் ஒருவரை யொருவர் கிள்ளி விட்டுக் கொண்டு 'களுக்'கெனச் சிரித்தார்கள்.

"காலு நொண்டி! அடாடா! வேடிக்கையா இருக்குது பார்!" என அவர்கள் மெல்லிய குரலில் பேசிச் சிரித்த தைக் கேட்ட தமயந்திக்கு வெட்கம் தாள முடியவில்லை. அவமானமும் கோபமும் துக்கமும் ஒருங்கே எய்திய அவள், "அம்மா!" என அழைத்து விட்டு அலறி அழத் துவங்கினாள். இவர்கள் எல்லோரும் அவளைப்

பரிகசிக்கும்படி விட்டு விட்டு அவளுடைய அம்மா எங்கே போய் விட்டாள்? தமயந்திக்குத் துயரத்தில் ஒன்றும் புரியவில்லை.

பெயர் வைப்பதில் பெற்றோர்களில் சிலர் எத்தனை பெரிய பிசகு செய்து விடுகிறார்கள் என்று தமது மனைவியின் பெயரைப் பற்றி எண்ணும் பொழுதெல் லாம் சிவானந்தம் வியப்பது வழக்கம். ஆலகால விஷம் எனப் பெயர் இடப்பட வேண்டிய அந்த மாதுசிரோன் மணிக்கு அமிர்தம் என்று தவறாக அல்லவா அவளது பெற்றோர்கள் பெயரிட்டிருந்தார்கள்? இவ்வாறு சிவானந்தம் பெயர் ஆராய்ச்சியில் அடிக்கடி ஈடுபடக் காரணமாக இருந்தது அவர் அவளுடன் நடத்திய இல்லறத்தின் பலன் என்று துணிவாகக் கூறலாம்.

பத்து வருஷ காலத்திற்கு முன் சிவானந்தம் என்ற பெயரைக் கேட்டாலே போதும். அழுத பிள்ளையும் வாயை மூடிக் கொள்ளும் என்று சூரியகாந்தத்தில் பிரசித்தம். அப்படிப்பட்ட கீர்த்தி வாய்ந்த மனிதரான அவர் அமிர்தம் அம்மாளிடம் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்ததற்குத் தகுந்த முகாந்திரம் இருக்காது போகவில்லை. தமது இருண்ட வாழ்க்கையிலே புதிய ஒளி உண்டாக்க மிகவும் பாடுபட்டுத் தேடிக்கொண்டு வந்த இரண்டாவது மனைவி அமிர்தம் என்பது அதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

தமது இளைய தாரத்துடன் ஆரம்பித்த தாம்பத்ய வாழ்க்கை எதிர்பார்த்தது போல் அமைதியையும்

ஆனந்தத்தையும் சிவானந்தத்திற்குக் கொடுக்கவில்லை என்றால், அதனுடைய பிசகு முழுவதும் அமிர்தத்தையே சாரும் என்று சொல்ல முடியாது. பதினாறு வயது வரை தாங்கொணாத வறுமையில் கழித்து விட்டிருந்த அவள், நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட சிவானந்தத்தை மணந்துகொள்ள மனம் ஒப்பியதன் ரகஸியம் பிரமாதமானதல்ல.

சூரியகாந்தத்திலே பெரிய மிராசுதாரர் என்று கூறப்படும் அவரது வாழ்க்கைத் துணைவியாக மாறினால், அதுவரை அனுபவித்து வந்த வறுமையை உதறி எறிந்து விடலாம் என அவள் எண்ணினாள். போதாதற்கு அவளது உறவினர்கள் சிவானந்தத்தைப் பற்றி மிகவும் உயர்வாகப் பேசிக் கொண்டார்கள். கல் அட்டிகை, காசு மாலை போன்ற விலையுயர்ந்த நகைகளைப் போட்டுக் கொள்ளலாம், தினம் ஒரு வித வர்ணப்பட்டுச் சேலையினால் சிங்காரித்துக் கொள்ளலாம். ராணி போல் உட்கார்ந்த இடத்திலிருந்து அசையாது அதிகாரம் செய்து கொண்டு கௌரவமாக வாழலாம் என்று இன்னும் என்னென்னவோ அவர்கள் சொன்னார்கள். அவளது வருங்காலக் கணவரை அவர்கள் எல்லோரும் அவ்வாறு வருணிக்கவே, மனத்தில் கொஞ்ச நஞ்சம் இருந்த அவ நம்பிக்கையும் ஒழிந்து நிம்மதியாக மிகவும் சந்தோஷத்துடன் சிவானந்தத்திற்கு மாலையிட்டாள்.

கல்யாணம் முடிந்ததும் புருஷன் வீட்டிற்குள்ளே வந்த பிறகுதான் அமிர்தத்திற்குத் தனது உண்மை நிலை தெரிய ஆரம்பித்தது. பிறந்த வீட்டில் குடிகொண்டிருந்த வறுமையே மேலானது என எண்ணும்படி, அவள் புகுந்த வீட்டின் செல்வ நிலை இருந்தது. எட்டுக் கண் விட்டெறியும் மிராசு என்று கல்யாண தரகர்கள் கூறி வர்ணித்த அவளது கணவனின் குடும்பம் பெரும் கடன் சுமையில் ஆழ்ந்து தத்தளித்துக் கொண்டிருந்தது.

கடனெல்லாம் அடைபட்டு ஒரு வழியாக ஏதாவது மிஞ்சினால் ஊருக்கு வடக்கேயிருந்த அரை ஏக்கர் நஞ்சை நிலமும், மேலத் தெருவில் அவர்கள் வசித்த மிகப் பழைய அந்தச் சிறு ஓட்டு வீடுந்தான் என அறிந்து கொண்டாள். இந்த ஏமாற்றத்தைத் தாள மாட்டாத அவளது இளம் உள்ளம் துக்கத்தினால் சுக்கல் துகளாக வெடித்துப் போயிற்று. 'கல்லட்டிகளையும்', காசு மாலையையும் கற்பனையில் எண்ணி மயங்கி, வயது மிஞ்சிய ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டோமே! கண்ணைத் திறந்து கொண்டு பாழுங் கிணற்றில் விழுந்து விட்டோமே; என்று தனக்குள்ளே எண்ணி எண்ணி அவள் உருகிப் போய் விட்டாள்.

வயோதிகரின் இளைய மனைவி என்ற ஒவ்வாத நிலையுடன் வாழ்க்கை அமைந்து விட்டிருந்தால் ஒருவாறு அவள் துக்கம் ஒரு சமயம் அடங்கிப் போயிருக்கக்கூடும். ஆனால், வீட்டிற்குள் மனைவி என்று அடி எடுத்து வைக்குமுன் மூத்தவள் விட்டுப்போன குழந்தை ஒன்றைத் தன் குழந்தை போல் எடுத்து வளர்க்க வேண்டியிருந்த பொறுப்பும், புருஷனால் திரஸ்கரிக்கப் பட்ட நாத்தியைத் தன்னுடன் கூட வீட்டில் வைத்துப் பராமரிக்க வேண்டிய கடமையும் சேர்ந்து கொள்ளவே, அமிர்தத்தின் துயரம் ஆறாத் துயரமாக அமைந்து விட்டது.

புருஷன் வீட்டிற்கு வந்த புதிதில் அவள் தனது துக்கத்தை வெளியே காட்டாது மிகவும் அமைதியாக நடந்து கொண்டாள். ஆனால், கணவன் தன்னிடம் அதிதமான அபிமானம் காட்டுகிறார் என அறிந்ததும் அவள் நாளா வட்டத்தில் தனது உண்மை ஸ்வரூபத்தைக் காட்டத் துவங்கி விட்டாள். அவளது உள்ளத்திலே குமுறிக்கொண்டு கிடந்த ஏமாற்றம், சந்தர்ப்பம் வந்த

பொழுதெல்லாம் ஆத்திரக் கனலாக வெளியே தலை நீட்ட ஆரம்பித்தது.

அதன் விளைவாக கணவனுக்கும் மனைவிக்கு மிடையே அடிக்கொரு தடவை பெரும் தாம்பத்யப் பூசல் எழுந்து வீட்டை இரண்டு படுத்தத் தொடங்கியது. சண்டையின் முடிவில் ஒவ்வொரு தடவையும், "என்னைக் கொண்டு வந்து பாழுங் கிணற்றில் தள்ளி விட்டார்களே, பாவிகள்!" என முகத்தில் அறைந்து கொண்டு அலறி அழுது, சிவானந்தம் செய்த தவறைச் சுட்டிக்காட்ட அமிர்தம் தவறியதே இல்லை. சில சமயங் களில் ஓவென்று இரைந்து அழுது சண்டையிட்டு ரகளை செய்வாள். சில சமயங்களில் மிதமிஞ்சிய கோபத்தில் பேசாமடந்தையாகி, நாள் கணக்கில் ஒரே மௌன விரதத்தில் மூழ்கிக் கிடப்பாள். சில சமயங்களில் கத்திக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தவள். திடீரென்று மயங்கிக் கீழே விழுந்து எந்தவிதமான வைத்யோபசாரங்களுக்கும் உணர்வு பெற மறுத்து, படுத்தபடி கட்டைபோல் நாள் முழுவதும் கிடந்து, வீட்டில் உள்ளவர்களைத் திணற அடித்து விடுகிறாள். கண்ணீர், மௌனம், மூர்ச்சை, இதில் எதுவாக இருந்தாலும் அதன் பலன் சிவானந்தத் தைப் பொறுத்தவரை ஒன்றாகத்தான் இருந்தது. வயது வந்த காலத்தில் அவர் செய்திருந்த பயங்கரமான தவறை, அவை ஒவ்வொன்றும் நினைவுறுத்தி அவரது வாழ்க்கையை வேம்பாக்கிக் கொண்டு வந்தன.

'இன்றைய பொழுது எவ்விதக் குழப்பமின்றிப் போனால் போதும்' என்று தினசரி தமது வாழ்வை எண்ணி நடுநடுங்கும் வரை அமிர்தத்துடன் ஆரம்பித்த இல்வாழ்க்கை அவரை பயங்கொள்ளியாக மாற்றி விட் டிருந்தது என்றால், அமிர்தம்மாளுக்குக் குடும்பத்திலிருந்த செல்வாக்கைப் பற்றி அதிகம் விவரிக்க வேண்டிய தில்லை.

சிறுமி தமயந்தியைக் கொண்டு வந்து வீட்டிற்குள் இறக்கியதும் எப்படிப்பட்ட வரவேற்புக் கிடைக்குமோ என்ற பெரும் சந்தேகம் அவரது உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தது வாஸ்தவம். அவரது ஐயம் வீண்போக வில்லை என்பதற்கு அடையாளமாக அமிர்தம் விருக் கென எழுந்து நின்றாள். தனது நீண்ட கூந்தலைத் தட்டி முடித்துக்கொண்டு தமயந்தியின் பக்கம் கோபத்துடன் அவள் திரும்பினாள். உடலைச் சிலிர்த்துக் கொண்டு தனது இரைமீது பாயத் தயாராக இருக்கும் பெண் புலியைப் போன்றிருந்தது அவளது அந்தச் செய்கை. உருட்டி விழித்த அவளது இருபெரும் விழிகளி லும் தேங்கி நின்ற கோபக்கனல், எழ இருந்த பெரும் யுத்தத்தின் அபாய அறிவிப்பு போல் தோன்றவே, சிவானந்தம் என்ன கூறுவதென்று விளங்காமல் ஒரு முறை இருமினார்.

தனது குரலை அமுக்கி விடும் அளவு உச்சஸ்தாயியில் ஓலமிட்டு அழும் அந்தச் சிறுமியிடம், "சே! வாயை மூடு! வந்ததும் வராததுமாய் புலம்ப ஆரம்பிச்சிட்டா அல்லவா? வீடு உருப்பட்டால் போல்தான்! உன்னை யார் இப்ப என்ன பண்ணி விட்டாங்க. இப்படி ஊளை யிடுகிறே?" என்று கத்தினாள் அமிர்தம் ரௌத்திரமாக.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் ஸ்தம்பித்துப் போன தமயந்தி சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு அந்தப் பெண்மணியின் முகத்தைப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். "அழுதியோ தெரியுமா?" என்று பதிலுக்கு உறுமிய அவள், கணவன் பக்கம் அதே வேகத்துடன் திரும்பினான்.

அவர் பின்னால் நின்று கொண்டிருந்த இரண்டு பெண் குழந்தைகளும், ஏதோ ஹாஸ்ய மொழிகளைக் கேட்டுவிட்டவர்கள் போல், ஒருவரையொருவர் அர்த்த

பாவத்துடன் பார்த்துக்கொண்டு குபீரென்று சிரித்தார்கள்.

"போங்கடி பெண்களா உள்ளே! சாப்பிட்டதும் போய்த் தூங்கித் தொலைக்கிறதுதானே! இங்கே வந்து என்ன சதிர் ஆட்டம்?" என்று அவர்கள் மீது எரிந்து விழுந்த அமிர்தம் உடனடியாக அதே மாதிரி எரிச்சல் மேலோங்கிய குரலில், "ஆமாம்! இந்தச் சனியனை இழுத்துக்கொண்டு வருவதற்காகவா அப்படி விடியற் காலையிலே விழுந்தடிச்சு ஓடினீங்க? இப்படி ஏதாவது நடக்குமின்னு நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். உங்களைச் சொல்லிக் குத்தமென்ன? அந்தப் பாவிகள் என்னைக் கொண்டுவந்து..." என்று கத்தியவள் முடிக்காது நிறுத்திவிட்டு, உணர்ச்சி வேகத்தில் படீரென்று கையால் தலையில் அடித்துக் கொண்டாள்.

ஏதோ கொலைக் குற்றம் செய்தவர் போல் சிவானந்தம் மிரண்டு கொண்டு எழுந்து நின்றார். "அமிர்தம் ராத்திரி வேளை! கூச்சல் போடாதே! அண்டை அசலார் காதில் கேட்டுவிட்டுப் போகிறது. வடிவேலு ஏதோ முக்கிய காரியம், புறப்பட்டு வரவும்' என்று எழுதியிருந்தார். கிளம்பும் பொழுது எனக்கு சத்தியமாக விஷயம் இன்ன தென்று தெரியாது. அங்கே போன பிறகு தான் தெரிய வந்தது. அந்த ஊரிலே இருந்தா எத்தனை காலமானாலும் நாலு காசு சம்பாதிக்க முடியாதுன்னு வெளியூருக்குப் புறப்பட வடிவேலு தீர்மானிச்சு, இருந்த தட்டு முட்டுச் சாமான்களையும் வீட்டையும் விற்று மலாய்க்குப் புறப்படத் திட்டம் போட்டு விட்டார்.

நாலைந்து நாளிலே புறப்படப் போற ஒரு கோஷ்டியோட அவரும் சேர்ந்துகொள்ளப் போகிறாராம். அவர் அங்கிருந்து திரும்பற வரைக்கும் குழந்தையை நம்பகிட்ட விட்டு வைக்கவே அழைச்சதாகச் சொன்னார். அதுக்கு மேலே நான் முடியாதுன்னு எப்படிச் சொல்கிறது?

சரின்னு அழைத்துக்கொண்டு வந்தேன்" என்று சிவானந்தம் பேசி முடிப்பதற்குள் குறுக்கிட்ட அமிர்தம், "முன்பின் யோசனை கேட்காமே இந்த நொண்டிப் பிணத்தை நம் தலையில் கட்டிப் போக அவருக்கு எத்தனை துணிச்சல்! என்னால் முடியாதுன்னு சொல்ல உங்களுக்கு ஏன் வாய் வரவில்லையா? தங்கச்சியே போன பிறகு இனிமே நமக்கும் வடிவேலுவுக்கும் என்ன உறவு வச்சு வாழுது? இருக்கிற குழந்தைகளைக் காப்பாத்த இங்கே விதியில்லை. இது வேறே பாக்கி. முடியாதுன்னு சொல்ல தைரியமில்லாம எந்த யோசனையுடன் இதை இழுத்துக்கிட்டு வந்தீங்க? முதல்லே இப்ப அடுத்த வண்டியிலே இதைக் கொண்டு அவ அப்பனிடமே விட்டுட்டு உள்ளே வாங்க. இல்லாட்டாக்க..." என்று அகங்காரத்துடன் இரைந்து கத்தினாள். அதிகமாகப் பேசியதன் பயனாக அவளுக்கு மூச்சுத் திணறியது. கணவனை எரித்து விடுகிறவள் போல் ஒரு முறை உற்றுப் பார்த்தாள்.

"நம்ப வீட்டு நிலைமை வடிவேலுக்குத் தெரியாதல்ல. நம்மை விட்டா, குழந்தையை அக்கறையாகப் பார்த்துக்கொள்ள வேறே நெருங்கிய பந்துக்கள் இல்லைன்னு தெரிஞ்சுதான் என்னை ரொம்பக் கேட்டுக் கொண்டார். குழந்தைச் செலவுக்கு என்று தனியா வைத்துக்கொள்ளச் சொல்லிக் கட்டாயப்படுத்தி இதைக் கொடுத்தார்" என்று முடிவில் உண்மையை மெல்ல எடுத்து விட்ட சிவானந்தம் இடுப்பில் பெல்டுடன் பத்திரமாகக் கட்டி வைத்திருந்த சிறு துணிப்பையை எடுத்து அவள் முன் விசிறிப் போட்டார்.

அமிர்தம் பாய்ந்து அதைக் கையில் எடுத்துப் பரபரப்புடன் திறந்தாள். அவளது வாழ்க்கையில் அன்று வரை சேர்ந்தாற் போல் அவ்வளவு ரூபாய் நோட்டுக்களை ஒரே சுத்தையாக அவள் கண்டதில்லை. அதை எண்ணி

முடிக்கும் முன் உணர்ச்சி வசத்தில் அவளது விரல்கள் நடுங்கின. தனக்கு ஏற்பட்ட சூதூகலத்தை வெளியே காட்டிக் கொள்ளாது. "இந்த முன்னூறு ரூபா காசுக்கு இந்தப் பொண்ணை வச்சுக் காப்பாத்தற பொறுப்பைத் தலையிலே கட்டிவிட்டாராக்கும் அந்த மனுஷர்; ஆமாம், இந்தப் பணம் எத்தனை நாளைக்கு அவ செலவுக்குக் கட்டி வருமாம்?" என்று சூள் கொட்டினாள்.

"மலேயாவுக்குப் போனதும் மாதா மாதம் குழந்தைச் செலவுக்குன்னு ஏதாச்சும் அனுப்புவதாகச் சொல்லி யிருக்கிறார் வடிவேலு. போகும் முன்னாடி இங்கே ஒரு முறை வந்து விட்டுத்தான் போவார். ஏதாவது உனக்கு சந்தேகம் இருந்தால் நேரிலே வேணுமானா அவரைக் கேட்டுக் கொள்ளலாம். இந்தப் பெண்ணுக் குன்னு நம்ப காசு ஒண்ணும் செலவழியப் போறதில்லை. தங்கச்சி பெண்ணை வச்சுக் காப்பாத்தினான்னு நல்ல பேர் கிடைக்கிறதை ஏன் விடணும்னு அழைச்சிட்டு வந்தேன். உனக்கு இஷ்டமில்லையானா, இந்த நிமி ஷம் வேணுமானா கொண்டு திருப்பி விட்டுவந்துட றேன்" என்று கொஞ்சம் துணிவாகக் கூறினார் சிவானந் தம் முடிவில்.

பணப்பையை பத்திரமாகத் தனது இடையில் சொருகிக்கொண்ட அமிர்தத்தின் முகத்தில் ஏற்பட் டிருந்த திருப்தியைக் கண்டு தான் அவருக்கு அவ்வாறு மிடுக்காகப் பேசத் துணிச்சல் ஏற்பட்டது. அதற்கு நேரடியாகப் பதில் கூறாத அவரது தர்ம பத்தினி, "ஆமாம், நீங்கள் வழியிலே ஒண்ணும் சாப்பிடலை போலிருக்குது. அப்படின்னா நாழியாகலையா சாப்பிட?" என்றாள் கொஞ்சம் தணிந்த குரலில்.

உள்ளே அடுக்களையிலிருந்து 'சொய்' என்று சப்தம் எழுந்தது. அதைத் தொடர்ந்து கல்லின் மீது தோசை

காயும் மணம் மெல்லக் காற்றின் ஊடே மிதந்து கூடத் திற்குள் வீசவே, பசியும் சோர்வுமாகத் திகிலுடன் உட்கார்ந்திருந்த தமயந்தி நாவினால் காய்ந்து போன தனது உதடுகளை மெல்லத் தடவிக் கொண்டாள்.

"இன்னிக்கு சனிக்கிழமை அல்லவா? மறந்துவிட்டேன். வெந்நித் தண்ணி தயாராக இருந்தாக்க ஒரு சொம்பு தலையில் கொட்டிக்கிட்டுச் சாப்பிட்டுவிட்டுப் படுக்க வேண்டியதுதான். ஒரே களைப்பாக இருக்கிறது" என்று தமக்குள்ளே முணுமுணுத்தார் சிவானந்தம். "ஏ மோகனா! உள்ளே போய் அத்தையைக் கேளு, ஐயா குளிக்க வரலாமான்னு!" என்று அமிர்தத்தின் அருகே நின்று கொண்டிருந்த பெண்களில் சிறியவளிடம் உத்தர விட்டார்.

கூடத்திற்கு அப்பால் தெரிந்த வாசற்படியில் மெல்லிய காலடி ஓசை கேட்பதை உணர்ந்த சிவானந்தம் அந்தப் பக்கம் திரும்பினார். அவரது கேள்விக்குப் பதில் அளிப்பதுபோல் கதவு அருகில் வந்து நின்ற பெண்மணி மெல்லிய குரலில், "புழக்கடையில் வெந்நீர்ப் பானையில் தண்ணி போட்டு வச்சிருக்கிறேன். சீக்கிரம் குளிச்சிட்டு வந்திடுங்க அண்ணா" என்றாள். அந்தக் குரல் எங்கேயோ கேட்டது போன்று தமயந்திக்கு மிக பழக்கமானதாகத் தோன்றவே, ஆச்சரியத்துடன் அந்தத் திக்கில் திரும்பிப் பார்த்தாள்.

அவளது விழிகள் வியப்பில் விரிந்தன. ஆனந்தத்தில் அம்மா என்று அழைக்கத் துடித்தது அவளது உள்ளம். ஆனால், என்ன ஏமாற்றம்? விளக்கு வெளிச்சத்தில் கொஞ்சம் முன்புறம் வந்து நின்ற அந்தப் பெண்மணி அவள் தாயைப் போலத்தான் இருந்தாள்; ஆனால் அவளது தாய் அல்ல அவள். ஆமாம், அவளுடைய அருமைத் தாயார் எங்கே? ஊரில் இருப்பதாக அப்பா

சொன்னாரே! குழந்தையை வந்து பாராது உள்ளேயே ஒளிந்து கொண்டிருக்கிறாளே? ஏன் இந்தப் பாராமுகம்? தனக்குள்ளே பலவாறு எண்ணிக் குழம்பிய தமயந்திக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக்கொள்ள கண்களை நீர் மறைத்துக் கொண்டது. அருகில் நின்று கொண்டிருந்த அமிர்தத்தின் அதட்டலுக்குப் பயந்து அவள் பீறிக் கொண்டு வந்த அழுகையை அடக்கிக்கொள்ள முயன்று கொண்டிருந்தாள்.

கொடியில் கிடந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு ஸ்நானம் செய்யக் கிளம்பிய சிவானந்தம், ஏதோ நினைத்துக் கொண்டவர்போல், "ஆமாம் இந்தப் பயல் தியாகு எங்கே, காணவில்ல?" என்று மனைவியிடம் கேட்டார்.

"என்னிடம் ஏன் கேட்கறீங்க. உங்க அருமை மகனைப் பத்தி? ஊர் சுத்திக் கழுதை! மத்தியானம் போனவன் இன்னமும் காணவில்லை" என்றாள் குரோதமாக அவள்.

"வரட்டும், சொல்றேன். முதுகுத் தோலை இன்னிக்கு உரிச்சு விட்டுடறேன்" என்று கோபத்துடன் பல்லைக் கடித்தார் கணவர்.

"நீங்கதான் அண்ணி அவனைப் பக்கத்து டவுனிலிருந்து சாமான்கள் வாங்கி வர அனுப்பினீங்க? ஐந்து மைல் தூரம் அவன் நடந்து போய் வர வேண்டாமா?" என்றாள் பதிலுக்குக் கதவருகில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண்மணி சாந்தமாக.

"இந்நேரம் பத்துவாட்டி கடையிலிருந்து திரும்பி வந்திருக்கலாம். எங்கேயெல்லாம் சுத்திக்கொண்டு திரியறானோ தெரியலை. அந்தப் பையன் மேலே ஒண்ணு சொன்னா உடனேயே பரிஞ்சு கொண்டு வந்துடறியே, காலமுச்சுடும் வச்சுக் காப்பாத்தறாப் போல பேச்சுக்கு

ஒண்ணும் குறைச்சலில்லை!" என்று பதிலுக்கு அமிர்தம் எரிந்து விழுந்தாள்.

அது சமயம் வாயிற் கதவு இடிபடும் ஓசை கேட்டதும் அந்தப் பெண்மணி சிவானந்தத்திடம், "அண்ணா அவனே இதோ வந்துட்டான்! ஆயுசு நூறு அவனுக்கு" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

ஒரு சிறு மூட்டையைத் தலைமீது சுமந்து கொண்டு முழங்கால் வரை புழுதி படிந்த தோற்றத்துடன் மிகவும் களைப்பாக உள்ளே வந்து நின்ற ஒரு சிறுவன் ஆச்சர்யத்துடன் தமயந்தியைப் பார்த்து விழித்துவிட்டு, மூட்டையை இறக்கிக் கீழே வைத்தான்.

"இத்தனை நேரமா உனக்கு?" என்று இரைந்து கேட்டார் சிவானந்தம்.

"மத்தியானம் இரண்டு மணிக்குப் போனவன், சுத்தி விட்டு இப்போ வந்திருக்கிறதைப் பார்! இதென்ன சட்டையிலே கிழிசல்? அடபாவி. புதுச் சட்டையை எங்கேயே மாட்டிக் கிழிச்சிட்டு வந்திருக்கிறானே!" என்று அலறினாள் அமிர்தம்.

"அம்மா! அண்ணா வேஷ்டியைக் கூட கிழிச்சிட்டிருக்குது, பாருங்க இங்கே" என்று மோகனா உற்சாகத்துடன் கிறீச்சென்று இடையே கத்தினாள்.

"அப்பா! நேத்துக் கூட அண்ணன் சுவர் மேலே ஏறிக் குதிச்சு வேட்டியைக் கிழிச்சிக்கிட்டு வந்தது" என்று சமயத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சமயத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று எண்ணியது போல் புகார் சொன்னாள் அமிர்தத்தின் பெரிய பெண் விஜயா.

"இது வந்து, சின்னம்மா..." என்று அவன் ஏதோ கூறத் துவங்கு முன் அருகில் நெருங்கிய சிவானந்தம் கோபத்துடன், "ஊர் சுத்திக் கழுதை! ராஜா மகன்னு

மனசிலே எண்ணம். கொஞ்சமாவது உடம்பிலே பய மிருந்தா சொக்காயைக் கிழிப்பியா இப்படி?" என்று ஆத்திரத்துடன் கையை ஓங்கி "படீர் படீர்" என்று அந்தச் சிறுவன் கன்னத்தில் இரண்டு அறைகள் வைத்தார்.

"படீர்" என்ற அந்த அறைகளின் ஓசையையும் தொடர்ந்தாற் போல் எழுந்த "இல்லேப்பா, இல்லேப்பா!" என்று அந்தச் சிறுவன் போட்ட கூக்குரலையும் கேட்ட தமயந்தி பயத்தில் உடல் வியர்க்க, நெஞ்சம் பதற, கிலி பிடித்து மூச்சு விடக்கூட பயந்து அசையாது உட்கார்ந்திருந்தாள்.

"சரிதான், நீங்க போய்க் குளியுங்க. நேரமாகுது!" என்று கணவனை அதட்டிய அமிர்தம், அங்கு நிற்கப் பிடிக்காதவள் போல், "விஜயா, மோகனா, போய் உள்ளே படுங்க. இன்னமும் முழிச்சிட்டு என்ன கொட்டம்? உங்களுக்கும் ரெண்டு பூசை கேட்குதாக்கும்?" என அந்த இரு பெண்களை அதட்டி அப்பால் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

கூடத்திலே தனியே விடப்பட்டிருந்த தமயந்தி, சற்றுத் தூரத்தில் விக்கி விக்கி அழுது கொண்டிருந்த அந்தச் சிறுவனை இரக்கமாக நிமிர்ந்து பார்த்தாள். அவன் அப்படி அழுவதைக் காண ஏனோ அவளுக்குத் தாள முடியவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை. அவளுக்கு சிறிது துணிவு ஏற்பட்டது. "பையா, அழாதே" என்றாள் கனிவு நிறைந்த குரலில் மெதுவாக. அதைக் கேட்ட அந்தச் சிறுவன் திடுக்கிட்டு அழுகையை நிறுத்தி அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"பெண் குழந்தையாட்டமா அழுறியே? உனக்கு வெட்கமா இல்லியா?" என்று கேட்ட தமயந்தி, தன் சிறுபற்கள் வெளியே தெரிய மெல்லச் சிரித்தாள். அதைக்

கேட்ட அந்தச் சிறுவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு பிரமிப்புடன், "ஆமாம் நீ யாரு?" என்றான் அவன்.

"நான்தான் தமயந்தி" என்று புன்னகை செய்தாள் அந்தச் சிறுமி.

"என் பெயர் உனக்குத் தெரியுமோ?" என்று தனது துயரத்தை மறந்து ஆவலுடன் கேட்ட அவன், அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"தெரியாது" என்று அவள் தலையை மெல்ல அசைத் தாள். நெற்றி மீது சுருள் சுருளாக வந்து விழுந்த அவளது கூந்தல் அவனது தங்கை மோகனா வைத்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு அழகிய பொம்மையின் முகத்தை அவனுக்கு நினைவுபடுத்தியது. ஆச்சரியத்துடன் அவ ளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த அவன், "என் பெயர் தியாகராஜன். இங்கே வீட்டிலே சின்னம்மா வும் அப்பாவும் என்னை தியாகுன்னு கூப்பிடுவாங்க. மோகனாவும், விஜயாவும் அண்ணான்னு கூப்பிடுவாங்க. நீ என்னை என்னன்னு கூப்பிடுவே, சொல் பார்க்கலாம்!" என்று சிரித்தான் அவன்.

"ராஜான்னு கூப்பிடுவேன்" என்றாள் அவள், தலையை ஆட்டிக் கொண்டு.

அது சமயம் அவர்கள் இருவரின் உள்ளத்திலே ஏற்பட்ட ஆனந்தத்தையும் நிம்மதியையும் விவரிக்கவே முடியாது. பல வருஷங்கள் பழகிய நண்பர்கள் போல் அவர்கள் இருவரும் மேலே தங்களுக்குத் தெரிந்த கதைகளையெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தனர்.

நினைவு தெரிந்ததிலிருந்து அன்றுநாள் வரை தியாக ராஜன் அந்த வீட்டில் தனிமையைத்தான் அதிகம் அறிந்திருந்தான். அவனது இளம் உள்ளத்திலே பொங்கிக் கொண்டு வந்து கற்பனைகளையும், இனிய அனுபவங் களையும் பகிர்ந்து அனுபவிக்க நண்பர்கள் என யாரும் இருந்ததில்லை. தானே வலிய வந்து கனிவுடன் வார்த்தை யாடிய அந்தச் சிறுமியை அவனுக்குப் பார்த்த அளவி லேயே பிடித்துவிட்டது. அவன் கூறிய விஷயங்களை யெல்லாம் அவள் வியப்புடன் கேட்ட வண்ணம் இருந்தாள் விஷயங்களைக் கேட்பதில் அவள் காட்டிய மகிழ்ச்சியும் ஆர்வமும் அவனுக்கு மிக்க உற்சாகத்தை அளித்தன. சற்றுமுன் அவன் அனுபவித்த பசி, களைப்பு, துக்கம் எல்லாம் நொடியில் ஒரு மறைந்து கொண்டன.

இதுவரை அவன் அனுபவித்து அறியாத நூதனமான தொரு நம்பிக்கையும் ஆனந்தமும், அவனது இளம் உள்ளத்தில் பெருகி ஓடத் தொடங்கின. எல்லையற்ற அந்த உவகையில், அப்பொழுதே அவளிடம் தனக்குத் தெரிந்த எல்லா விஷயங்களையும் சொல்லிவிட வேண்டு மென்ற ஆவலில் அவன் துடித்தான்.

தனது இரு சகோதரிகளில் மோகனா மிகவும் துஷ்டப் பெண், அதிகம் பொய் சொல்லுவாள். அம்மாவிடம் வேணுமென்றே கோள் சொல்லி அடி வாங்கி வைப்பாள் என்பதையும், விஜயா பார்வைக்குச் சாது போல் காணப் பட்டாலும் மிகவும் பொறாமைக்காரி, பொம்மைகளோ மிட்டாய்களோ பிறர் வைத்திருக்கப் பார்க்கச் சகிக்க

மாட்டாள். உடனே தனக்கு அவைகள் வேண்டுமெனப் பிடிவாதம் செய்து அவைகளைப் பறித்துக் கொண்டுதான் மறுவேலை பார்ப்பாள் என்பதையும் கூறி, தன் புது சிநேகிதியை அவர்கள்பால் எச்சரிக்கை செய்து விட வேண்டும் என்று அவனுக்கு மிக ஆவலாக இருந்தது.

தோட்டத்திலே அவன் கையால் நட்டுப் பயிராக்கிய சம்பங்கிக் கொடியை அவளுக்குக் காட்ட வேணும் என்றும், நெருப்புப்பெட்டிக்குள் தன் இரு சகோதரிகளுக் கும் தெரியாது ரகஸியமாக வைத்து வளர்க்கும் நீலநிறப் பொன் வண்டை அவளுக்கு மட்டும் காண்பிக்க வேண் டும் என்றும் அவன் மனத்தில் உற்சாகம் வெள்ளமாகக் குமிழியிட்டுக் கொந்தளித்தது. இவ்வாறு இன்பமான தொரு தனி உலகில் தன் புதிய சிநேகிதியுடன் சஞ்சரித் துக் கொண்டிருந்த தியாகராஜனை உள்ளிருந்தபடியே கவனித்த அவனது சிற்றன்னைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ஏண்டா தியாகு! கைகால் கழுவிக் கொண்டு உள்ளே போய்ச் சாப்பிடப் போகாமே ஏதோ கதை அளந்துக் கிட்டு உட்கார்ந்திருக்கிறியே. வெத்தலை பாக்கு வச்சு துரையை அழைக்கணுமாக்கும்" என்று இரைந்து கொண்டு உள்ளிருந்து வெளிப்பட்டாள். அமிர்தம் மாளின் சந்தோஷமெல்லாம் வினாடி நேரந்தான் நீடித்து நிற்கும். நாள் முழுவதும் அவள் நல்ல உற்சாகமான மன நிலையில் இருக்க வேண்டுமானால் நிமிஷத்திற்கு நிமிஷம் ஏதாவது அவள் எதிர்பாராத இன்பமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தால்தான் உண்டு.

பணப்பையைக் கொண்டு பெட்டியில் பத்திரமாக அடக்கப்படுத்தியவுடன் அந்த வினாடியே அவளுக்கு ஏற்பட்டிருந்த சந்தோஷமும் அஸ்தமித்துப் போய் விட்டது. "இருக்கிற தொல்லைகள் போதாதென்று இந்த

நொண்டி பெண்ணை வைத்துக் காப்பாற்றுகிற பொறுப்பு வேறே வந்து சேர்ந்து விட்டதே!" என எண்ணி வெகுண்டவளாக அவள் அறையை விட்டு வெளியே வந்தாள். யார் மேல் காட்டலாம் எனத் துடித்த அவள் கோபம், வழக்கம் போல் தனது மூத்தவளின் மைந்தன் மீது பாய்ந்தது.

குற்றம் செய்து விட்டவன் போல் பயந்து கொண்டு விருக்கென எழுந்து நின்றான் தியாகராஜன். "இந்தக் குட்டியையும் அழைச்சிட்டுச் சாப்பிடப் போயேன். புழுதியோட அப்படியே உட்கார்ந்து கிடக்கிறான் சோம்பேறிக் கழுதை" என்று அதட்டிய அவள், தரை மீது அவன் வைத்திருந்த மூட்டையை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குள் சென்றாள்.

சூடாக இலையில் வந்து விழுந்த தோசைகளில் இரண்டையும் அரை கூஜா நீரையும் ஒரே கணத்தில் காலி செய்துவிட்டு, சிவானந்தம் கூடத்தின் பக்கம் தமது திருஷ்டியைத் திருப்பினார். அந்த அற்ப ஆகாரத்தினால் அவருக்கு ஏற்பட்டிருந்த அகோரப் பசி கொஞ்சம் தணியவே, சற்று முன் அவருக்கு ஏற்பட்டிருந்த கோபமும் சிறிதளவு தணிந்து இருந்தது. தாம் அழைத்து வந்த சிறுமியின் ஞாபகமும் உடனடியாக எழுந்தது. "டேய் தியாகு! அந்தக் குட்டியை அழைச்சிட்டு வாடா. சாப்பிட நேரமாகல்லை?" என்று அழைத்தார் அவர்.

சிறிய தாயின் உத்தரவுக்கு அஞ்சி முற்றத்திற்கு பாய்ந்து ஓடிய தியாகராஜன். "சீக்கிரம் ஓடிவா. நீயும் கையைக் கழுவிக் கொண்டு சாப்பிடப் போவோம். நேரம் செய்தால் சின்னம்மா கோபிப்பாங்க" என எச்சரித்தான். தமயந்தி மெல்லத் தூணைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றாள். முகத்தை அவசரமாகக் கழுவித் துடைத்துக் கொண்டு அவன் திரும்பிப் பார்த்தான். தமயந்தி தூணை

அணைத்தபடி இடத்தை விட்டு அசையாது நின்று கொண்டிருந்தாள்.

"சீக்கிரம் வா, என்ன விளையாடுகிறே" என்று அவன் கொஞ்சம் கோபத்துடன் மெல்லிய குரலில் அதட்டினான். அப்பொழுதும் அவள் அசையாது குறட்டின் ஓரத்திலே நின்று கொண்டிருந்தது, அவனுக்கு விந்தையாகத் தோன்றவே அருகில் வந்தான். "டேய்! இன்னும் என்னடா பண்ணிக்கிட்டு இருக்கே!" என்று அடுக்களையிலிருந்து மீண்டும் ஓர் உறுமல் கேட்டது.

"உனக்கு நான் சொன்னால் தெரியாது. அப்பாகிட்ட உதை வாங்கினாத்தான் புரியும். சித்த முன்னாடி என்னை அடிச்சாரே, அப்படி உன்னையும் அடிச்சுக் கொன்று விடுவார். சீக்கிரம் வாயேன்" என்று அவளை வெகுவாக எச்சரித்த வண்ணம் அவளது கரத்தைப் பற்றி உள்ளே போக இழுத்தான் அவன்.

"அப்படி என்னை இழுக்காதே. நான் விழுந்து விடுவேன்" என்று கையை உதறினாள் அந்தச் சிறுமி.

"ஏன்?" என்று ஆச்சரியத்துடன் வினவிய அவனுக்கு அவள் பதில் ஏதும் அளிக்கவில்லை. "இதோ பார்" என்பது போல் தனது வலது காலை அவன் முன் நீட்டினாள். உட்புறம் சிறிது வளைந்து நலிந்து காணப்பட்ட அந்தப் பாதத்தை ஆச்சரியத்துடன் வைத்த விழி வாங்காது பார்த்தான் அவன். அவனால் நம்பவே முடியவில்லை.

சுருண்ட குழல் நெற்றிமீது புரள, அரிசிகளைப் போன்ற சிறிய பல் வரிசையாகத் தெரிய சிரித்துப் பேசும் அந்த அழகிய சிறுமி நொண்டியா! அந்த உண்மை அவனுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கவே, அவன் அவளைப் பார்த்து விழித்தான். இனம் விளங்காத ஒரு துயரம் அவன் நெஞ்சை என்னவோ செய்தது. 'தான் நொண்டி-

யாக இருப்பது ஒரு அதிசயமான விஷயமல்ல' என்பதைப் போல "என்னாலே தனியா நடக்க முடியாது. என்னைப் பிடிச்சுக்கோ" என்று சர்வ சாதாரணமாக அதைக் கூறிய தமயந்தி தனது சிறு கரத்தை நீட்டினாள். அமிர்தத்தின் பெண்கள் இருவரும் அவளை நொண்டி என்று பரிகசித்த பொழுது ஏற்பட்ட துக்கமோ, அவமான உணர்ச்சியோ அவளுக்கு அப்பொழுது ஏற்படவில்லை. 'தன்னால் உதவியின்றி நடக்க முடியாது. தான் ஒரு நொண்டி' என்பதைத் தனது நம்பிக்கைக்கு உகந்த அந்த நண்பனிடம் கூறிக்கொள்ள அவளுக்குக் கொஞ்சம் கூட வெட்கமாக இருக்கவில்லை.

"வேகமா நடக்காதே! எனக்குக் காலை வலிக்கும்" என்றாள் அவள் மெல்லிய குரலில். தொடர்ந்தாற் போல், அவனது கரத்தை ஆதரவாகப் பற்றிக் கொண்டு தத்தித் தத்தி நடந்து அவள் முற்றத்தை அடைந்தாள். செம்பில் இருந்த நீரை அவள் கையில் வார்த்துக் கொண்டிருந்த தியாகராஜனுக்குத் தன்னுள் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "கீழே விழுந்து காலை முறிச்சுக்கிட்டியா? எப்படி நொண்டியானாய்?" என்று பச்சா தாபத்துடன் வினவினான்.

"இல்லை, காய்ச்சலடிச்சுச்சு. அதனாலே காலு நடக்க முடியாது நொண்டியாயிடுச்சு. மருந்து போட்டா சரியாயிடும்னு அப்பா சொன்னார்" என்றாள் பதிலுக்கு. அவள் கூறியதில் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விட்டவன் போல் தலையை ஆட்டினான் அவன். 'இப்படி உட்கார்' என்பதற்கு அடையாளமாக மாமன் சுட்டிக்காட்டிய இடத்தில் சட்டென தமயந்தி உட்கார்ந்து கொண்டாள். தந்தைக்கு அருகில் அமர்ந்து கொண்ட தியாகராஜன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு இலைமேல் கண்ணாக இருந்தான். எதிரே சற்றுத் தூரத்தில் உட்கார்ந்திருந்த அமிர்தம் கடையிலிருந்து

அவள் வாங்கி வந்திருந்த சாமான்களில் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து கொண்டிருந்தாள். அடுப்பருகில் உட்கார்ந்து தோசை வார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்மணி தன் வேலை மேலேயே கருத்தாக இருப்பவள் போல் தமயந்தி வந்ததைக்கூடக் கவனிக்கவில்லை.

"காந்திமதி! உன் தங்கச்சி மகளைப் பாரு. காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. பாவம்! பசியாக இருப்பாள். முதல்லே தோசையை அவளுக்குப் போடு, நான் சித்த காத்திருக்கிறேன்" என்று சிவானந்தம் தமந்தியை அந்தப் பெண்மணிக்கு அறிமுகப்படுத்தினார்.

காந்திமதி அதற்கு ஒன்றும் பதில் அளிக்கவில்லை. தட்டுகள் மீது அடுக்காக வைத்திருந்த தோசைகளில் இரண்டையும் எடுத்து வந்து தமயந்தியின் இலையில் பரிமாறி விட்டு மறுபடியும் அடுப்பருகில் சென்று தனது காரியத்தில் ஈடுபட்டாள்.

" இந்தக் குட்டி சாயலே தில்லைநாயகி போலத்தான் இருக்கிறாள், இல்லையா" என்று தமையன் மீண்டும் பேசினார். அதற்குப் பதில் அளிப்பவள் போல் திரும்பிய காந்திமதியின் சோர்ந்திருந்த முகத்தில் புன்னகையின் ரேகை ஒன்று மெல்ல அரும்பியது. தமையனுக்கும் தங்கைக்கும் இடையே மெல்லத் தலை தூக்கிய வாத்ஸல்யமான சம்பாஷணையைக் காணச் சகிக்காத அமிர்தம், "இதென்ன பருப்பு! ஒரே கல்லும் குப்பையுமாக இருக்குது. பார்த்து வாங்கிட்டுவரக் கண்ணு கூடவா இல்லை?" என்று தியாகுவின் மீது குற்றப் பத்திரிகை படிக்கத் துவங்கினாள். தந்தை பக்கம் திரும்பவும் அஞ்சிய அவன் தலையை இன்னும் கொஞ்சம் குனிந்து கொண்டான். தோசையைக் கரண்டியினால் திருப்பிக் கொண்டிருந்த காந்திமதி மேலான பாசத்துடன்தான் நேசித்து வந்த அந்தச் சிறுவனை, அமிர்தம் சிறிது

நேரங்கூட நிம்மதியாக இருக்க விடாது ஏதாவது குற்றம் கண்டுபிடித்துக் கொண்டு அவனை வேதனைப்படுத்திக் கொண்டிருந்ததைக் காண அவளால் சகிக்க முடிய வில்லை. உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக் கொண்டு அமைதியாக இருக்க முயற்சித்தாலும், சில சமயம் தியாகுவின் மனவேதனையைக் காண சகிக்காது அவளது உள்ளமும் உடலும் உணர்ச்சியில் பதறிப் போய் விடுவதுண்டு.

"பத்து வயதுகூட அவனுக்கு இன்னமும் நிரம்பலை. கடையிலே போய் சாமான்களை விரதணையாப் பார்த்து வாங்க வயசு போதுமா?" என்று பரிந்து கொண்டு சொன்னாள் அவள்.

அதைக் கேட்ட அமிர்தத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "இலையில் உட்கார்ந்து வேளா வேளைக்குச் சாப்பிட மட்டும் வயசு பத்தும். நீ இப்படிப் பரிந்து பேசுவதனால்தான் அவனுக்கு என்னைக் கண்டால் கொஞ்சங்கூட அத்து மரியாதை ஒண்ணும் கிடையாது" என்று கணவன் பக்கம் மீடுக்காகத் திரும்பி, "இதோ பாருங்க நீங்களே. 'கடலைப்பருப்பு வாங்கிட்டு வாடா'ன்னு சொன்னேன். எதை வாங்கிட்டு வந்திருக் கிறான் பாருங்க. காதிலே வாங்கினாத்தானே? இந்தப் பிள்ளையை நம்பிக்கிட்டு நான் இந்தக் கால மூச்சுடும் வாழ்ந்தாகணும்" என்று கூக்குரலிட்டு விட்டு பல்லை நறநறவென்று கடித்தாள்.

தொட்டுக் கொண்டு நின்றால்தான் மின்சார அதிர்ச்சிக்கு ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் பாயும் சக்தி உண்டு. ஆனால், அமிர்தத்தின் கோபத்திற்கோ அதைவிட மகத்தானதொரு தனி மகிமை இருந்தது. அவள் இரைந்து ஒரு முறை கத்த வேண்டியதுதான். அவளிடம் ஆரோகணித்திருக்கும் கோபம், அருகிலிருக் கும் கணவர் மீது பாய்ந்து தொத்திக் கொண்டு விடும்.

"ஏண்டா! காவாலிக் கழுதை! உங்கம்மா சொல்லு வதைக் கேட்டு நடக்க என்ன கொள்ளை வந்தது? உப்புப் போட்டு சாப்பிட்டாத்தானே உனக்கு இருக்கப் போகிறது!" என்று அதட்டி விட்டு தமது மீசையைத் தடவிக் கொண்டார் கோபத்துடன் சிவானந்தம்.

மீண்டும் அவர் தம் கோபத்துடன் எங்கே அவனை அடித்து விடுவாரோ என்ற அச்சத்தில் அதிர்ச்சியடைந்து போன தமயந்தி சாப்பிடக் கையில் எடுத்த தோசை வில்லை இலை மீது போட்டு விட்டுத் திருதிருவென்று விழித்தாள்.

ஜன்னலிலிருந்து குளிர்ந்த காற்று விர் என உள்ளே வீசியது. அவளது உடல் பயத்திலும் குளிரிலும் குலுங் கியது. ஆனால் பொரி பறக்கும் விழிகளுடன் வெறித்துக் கொண்டு எதிரே உட்கார்ந்திருந்த அமிர்தம்மாளை அவளுக்குப் பிடிக்கவில்லை. கோபத்துடன் இரைந்து கத்திய மீசைக்கார மாமாவையும் அவளுக்குப் பிடிக்க வில்லை. துயரத்துடன் தலையைக் குனிந்து கொண்டு கிலியுடன் இருந்த தனது சிநேகிதன் பக்கம் மெல்லத் திரும்பிப் பார்த்தாள். "அழாதே, ராஜா!" என அவனுக்கு ஆறுதல் கூற வேண்டும் போல் அவளுக்கு ஆசையாக இருந்தது. ஆனால், எதிரே இருந்த அவர்கள் அனைவரும் பெரும் ராக்ஷசர்கள் போல் அவளுக்கு அச்சத்தை அளித்தார்கள். அவளுக்கு அழுகை நெஞ்சை அழுத்திக் கொண்டு வந்தது. இவர்கள் எல்லோரையும் விட்டு ஓடிப்போய், தனது தாயின் கழுத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற தீவிரமான ஒரு ஆசை அவளை வாட்டியது. 'ஆமாம், இந்த அம்மா ஏன் இன்னமும் வரவில்லை? எங்கே போய் விட்டாள்? அந்த வீட்டில் இருப்பதாக அவள் அப்பா உறுதியாகச் சொன்னாரே!" இவ்வாறு எண்ணமிட்ட அந்தச் சிறுமியின் கண்களில் நீர் படர்ந்தது.

"இலையில் போட்டதைத் தின்னு தொலைக்கிறது தானே? பூச்சி பிடித்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறாயே" என்று அமிர்தம் திடீரென்று தமயந்தியினிடம் எரிந்து விழுந்தாள். அச்சத்திலும் தனிமையிலும் அரண்டு போயி ருந்த தமயந்திக்கு அதைக் கேட்டுத் தாள முடியவில்லை. அவளது கண்களில் பெருகி நின்ற கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் கன்னத்தின் மீது பெருகி ஓடத் தலைப்பட்டது.

"அம்மா! அம்மா!" என்று அழைத்தபடி அவள் விக்கி விக்கி அழத் துவங்கி விட்டாள்.

சிறிது நேரம் அவளையே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த அமிர்தம் வெறுப்புடன் எழுந்தாள். "இதற்குத்தான் நான் அப்பவே சொன்னேன். இந்தச் சனியனை எப்படி வச்சு சமாளிக்க முடியும்னு. நீங்களே சொல்லுங்க சதா சர்வ நாழியும் அம்மான்னு புலம்பிக் கிட்டு இருந்தால், யாரால் சமாதானப்படுத்த முடியும்? வச்சுக் காப்பாத்த பணம் கொடுத்து விட்டா மட்டும் போதுமா?" என்று சலிப்பாகக் கூறிவிட்டு அப்பாற் சென்றாள்.

அவள் வெளியே சென்றதும் சிறிது நிம்மதியடையந்த சிவானந்தம் தமயந்தியை நோக்கி, "உஸ்! அழாதே! சாப்பிடு. அழுதாக்க என்ன நடக்கும் தெரியுமா? புழக் கடையிலிருக்கும் பிசாசுகிட்ட பிடிச்சுக் குடுத்துடுவேன்" என்று பயமுறுத்தினார்.

அதை தமயந்தி பொருட்படுத்தவேயில்லை. விடாது அழுது கொண்டேயிருந்தாள். அடுப்பை ஊதிக்கொண் டிருந்த காந்திமதி பொறுமையற்றவளாக வெடுக்கென எழுந்து அருகில் வந்தாள். "இதோ பார்! என்னத்துக்கு இப்படி ஓலமிடுகிறே! இப்படி அழுதால் உங்கம்மா ஓடி வந்து விடுவாளா! மூச்சுக் காட்டினால் என்ன

செய்வேன், தெரியுமா!" என்று கோபத்துடன் பேசிய அவள் நறுக்கென்று அந்தச் சிறுமியின் தலையில் ஒரு குட்டு வைத்தாள்.

ஓவென்று இன்னும் பலமாக ஓலமிட வாயைத் திறந்த அவளது அழுகை நெஞ்சிலேயே நின்றுவிட்டது. தொடர்ந் தாற்போல் அந்தப் பெண்மணி கூறிய சில வார்த்தை களைக் கேட்டு விட்டு அதிர்ச்சியடைந்து போய் அழு கையை மறந்து விட்டாள். பலமாகத் தலையில் விழுந்த குட்டினால் ஏற்பட்ட வலிகூட அதனால் மரத்துவிட் டிருந்தது.

"அம்மா அம்மான்னு அலறினா அவ வந்துடுவாளா என்ன? உன்னை இந்தக் கெதியிலே விட்டுவிட்டு அவ தான் செத்து ஒழிஞ்சிட்டாளே, மகராஜி!" என்று வெறுப் பாகச் சொன்னாள் காந்திமதி.

"அம்மா செத்துவிட்டாளா! அப்படி யென்றால், அவள் இனி வரமாட்டாளா! வரமாட்டாள்! இனி வரமாட்டாள்!" என்று சிறு இதயம் வெளியே வந்து விடும்போல் பீதி தாளாது தீவிரமாக அடித்துக் கொண்டது.

"ஏன் உட்கார்ந்திருக்கே? சீக்கிரம் சாப்பிடு. அம்மா வையே சாப்பிட்டு விட்டாய். இதைச் சாப்பிட உனக்கு என்ன கொள்ளை?" என்று கடுமையாக அதட்டினாள் காந்திமதி.

தமயந்தி இலையிலிருந்த தோசையை எடுத்து வாயில் திணித்துக் கொண்டு வேகமாக விழுங்கினாள். அவளுக்கு அச்சமயம் ஏற்பட்டிருந்த துயரத்தில் அந்த தோசை, இலை, கீழே இருந்த பூமி எல்லாவற்றையும் தின்று விட வேண்டும் போல் இருந்தது.

அடுக்களையிலிருந்த வேலைகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு முடிவில் சாப்பிட உட்கார்ந்தாள் காந்திமதி. இரவு வெகு நேரம் ஆகி விட்டதனால் அவளைத் தவிர வீட்டிலிருந்த அனைவரும் உறங்கச் சென்று விட்டனர். அமிர்தம் கூடத்தில் தன் இரு பெண்களுக்கு அருகில் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். ரேழித் திண்ணையில் படுக்கையை விரித்த சிவானந்தம் சில விநாடிகளில் நித்திரா தேவி வசமானார். பகல் முழுவதும் அலைந்த களைப்பில். தாழ்வாரத்துக் கயிற்றுக் கட்டிலில் வந்து சாய்ந்து கொண்ட தியாகராஜன் அப்படியே அயர்ந்து தூங்கி விட்டான்.

ஆறிவிட்டிருந்த சோற்றில் குழம்பை ஊற்றிக் கலந்து ஒரு பிடி அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள் காந்திமதி. அந்த உணவை அவளால் விழுங்கக்கூட முடியவில்லை. நெஞ்சைப் பிளந்துவிடும் போல் குமுறிக் கொண்டிருந்த துக்கம் தொண்டையை இறுக்கிக் கொள்ளவே, உணவு அவளுக்கு விஷம் போல் காணப் பட்டது. கையை உதறிவிட்டு இலையைச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கொட்டிலில் நின்று கொண்டிருந்த பசுவிடம் இலையை வீசிவிட்டு, கிணற்றடிக்குச் சென்று கையைக் கழுவிக் கொண்டாள். கைப்பிடிச் சுவர் ஓரமாய் இருந்த பெரிய கருங்கல் தூண்மீது சாய்ந்து கொண்ட அவளுக்கு உள்ளே திரும்பிப்போக விருப்ப மில்லை. அதுவரை அடக்கி வைத்திருந்த அவளது துயரம்

கட்டுக்கடங்காது பீறிட்டுக் கொண்டு எழவே, அவள் சிறு குழந்தை போல் வாய் விட்டுத் தேம்பி அழுதாள்.

பிறந்த வீட்டில் வந்து தஞ்சம் புகுந்ததிலிருந்து கடந்து சென்ற பன்னிரண்டு வருஷங்களில் காந்திமதி எத்தனையோ முறைகள் அந்தப் பெரும் கல்தூணை அணைத்துக்கொண்டு அவ்வாறு அழுதிருக்கிறாள். ஆனால், அன்றிரவு அவளுடைய கண்களில் பெருகிய கண்ணீருக்குக் காரணமே வேறாக இருந்தது. தனது முடிவற்ற இருண்ட வாழ்க்கையை எண்ணி அவள் துயரத்துடன் கண்ணீர் வடித்துக் கதறி அழவில்லை. பச்சாதாபத்தினால் ஏற்பட்ட துயரம் அவளது நெஞ்சைப் பிளந்து விடும்போல வேதனை செய்தது "தாயற்ற அனாதைக் குழந்தை; அதுவும் நடக்க முடியாத நொண்டிக் குழந்தை, அவளைப் போய் இரக்கமற்ற ராட்சஸத்தனமாக அடித்தோமே. எத்தனை பெரிய பாபச் செயல்? ஐயோ? ஏன் இந்த ஆத்திரம்!" எனத் தனது கொடுமையான செய்கைக்காக இரங்கி வருந்திய காந்திமதி பச்சாத்தாபமிகுதியினால் தனது தங்கை மகளின் ஆதரவற்ற நிலைமையை எண்ணித் துயரவசப்பட்டு அழுதாள்.

சுபாவத்தில் காந்திமதி ஈவு இரக்கமற்ற பாதகி அல்ல. பிறருடைய துன்பத்தைக் கண்ணால் பார்க்கச் சகிக்காது உள்ளம் உருகிப் போகும் கோழை மனம் கொண்டவள் தான். இருந்த போதிலும் திடீரென்று ஒரு பாவமும் அறியாத அந்தப் பேதைச் சிறுமியிடம் அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டது மிகவும் ஆச்சரியமாகும்.

வழக்கம் போல் அவள் தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அமைதியாக இருக்க அன்றிரவு வெகு பாடுபட்டாள். ஆனால் அவளால் முடியவில்லை.

அமிர்தத்தின் குணத்தை நன்கு அறிந்திருந்தும் வடிவேலு தன் குழந்தையை ஏன் இங்கே அனுப்பினான்?

தாய் அற்ற பெண்ணைத் தனியே விட்டு மலேயாவிலே என்ன புதையல் வைத்துக் கிடக்கிறது, அள்ளி வரப் போகிறான்? குழந்தையை வைத்துக் காப்பாற்ற பணம் கொடுப்பதாக இருந்தால் சிவானந்தம் வீடு ஒன்றுதானா அவனுக்கு அகப்பட்டது? வேறு உறவினர்கள் யாரும் கிடையாதா, என்ன? அமிர்தம்மாளிடம் குழந்தையை ஒப்படைப்பதைவிட ஆற்றிலோ குளத்திலோ தள்ளிவிட்டு நிம்மதியாக வெளியூருக்குப் போகலாமே!

மனைவியின் குணம் தெரிந்து அந்தக் குழந்தையை இங்கே அண்ணன் எதற்காக அழைத்து வந்தார்? தங்கையின் மகள் தாயற்ற அனாதையாகி விட்டாளே என்ற அனுதாபத்தினாலா? இல்லை, வடிவேலு மாதா மாதம் செலவிற்காக அளிக்கப் போகும் பெரும் தொகை மீது ஏற்பட்ட பேராசையினால் தானா? சந்தேகமென்ன? இல்லா விட்டால், அண்ணனுக்குத் திடீரென்று தங்கை மகள் மீது இரக்கம் பிறந்துவிட்டதா, என்ன? அமிர்தத்தை மணந்து கொண்டதும் மனிதனுக்கு ரோஷம் மங்கி விட்டது என்றாலும் சுயபுத்தி கூடவா அஸ்தமித்துப் போக வேண்டும்! அவள் கூறுவதையெல்லாம் வேதவாக்காக எண்ணிக்கொண்டு இப்படியா ஒரு ஆட்டம் ஆடுவார் மனிதர்? சாப்பாட்டு வேளை இல்லை, விளையாட்டு வேளை இல்லை என்று மூத்தாள் மகனை சதா அடித்தும் திட்டியும் அணு அணுவாகக் கொல்வதை விட ஒரேயடியாகக் கொன்று குழியை வெட்டிப் புதைத்து விட்டு நிம்மதியாக இருப்பதுதானே?

இந்தப் பாவி, தில்லைநாயகி! கஷ்டப் பிரசவத்தில் ஆஸ்பத்திரியில் போய்ச் செத்து வைத்தாளே! வந்த காய்ச்சல் தீவிரமாக அடித்து இந்தக் குழந்தையையும் கூட அம்மாவுடன் கூட்டி அனுப்பியிருக்கக் கூடாதா? காலை நொண்டியாக்கி, பிறர் தயவுக்கும் பரிகாசத்திற்கும் பாத்திரமாக வைத்து விட்டல்லவா போயிருக்கிறது!

கையும் காலும் நன்றாக உறுதியாக இருக்கையிலேயே இந்தப் பாழும் பெண் ஜென்மம் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. காலும் நொண்டியாகி விட்டிருந்தால் கேட்கவும் வேண்டுமா?

இவ்வாறு தனக்குள்ளே எண்ணி ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள் காந்திமதி. சிரமப்பட்டு அடக்கி வைத்திருக்கும் கோபம், உணர்ச்சி கட்டுக் கொள்ளாது பீறிட்டுக் கொண்டு எழும்பொழுது எதிர்ப்பட்டவர்கள் மீது எளிதல் பாய்ந்து விடுவது இயல்பே. யார் யாரிடமோ ஏற்பட்ட ஆத்திரத்தை அடக்கமாட்டாது வெகுண்ட காந்திமதி அந்தப் பேதைச் சிறுமியிடம் காட்டி விட்டாள். ஆனால் அது எத்தனை பாதகமான ஒரு செயல் என உடனேயே சிந்திக்கத் துவங்கியதும் அவள் உள்ளம் பச்சாதாபத்தினால் உருகிப் போயிற்று. "கடவுளே, என்னை மன்னியும். இரக்கமற்ற பாவி நான். இந்தப் பாவத்தைக் கொண்டு நான் எங்கே தொலைப் பேன்?" எனத் தனக்குள்ளே முணுமுணுத்த அவள் மனம் ஆறும் வரை அழுது கொண்டேயிருந்தாள்.

சில்லென மேலே வந்து வீசிய ஊதக்காற்று அவளது உடலைக் குளிரில் குலுக்கியது. புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு கல்தூண் மீது நன்றாகச் சாய்ந்து கொண்டு நின்ற அவள் தனக்கு முன் பரவிக் கிடந்த இருளை வெறித்துப் பார்த்தாள். அந்த இருளுக்கு ஒரு முடிவு இருந்தது. சிலமணி நேரங்களில் இந்த வானத்திலே மெல்லத் தோன்றப் போகும் அருணன் அந்த இருளுக்கு ஒரு முடிவு கட்ட வந்து விடுவான். ஆனால், அவளது வாழ்க்கையில் கலந்து நின்ற இருளுக்கு முடிவு உண்டா? இல்லவே இல்லை.

கண்ணிற்கு ஏதும் புலப்படாத அந்தக் கரிய இருளில் காந்திமதி தனது வாழ்விலே நடந்த பல சம்பவங்களை மீண்டும் பார்த்துக்கொண்டு நின்றாள்.

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு அவளிடம் யாராவது சுந்தரமூர்த்தியைப் பற்றித் தவறாகப் பேசியிருந்தால் ஒருகாலும் நம்பியிருக்க மாட்டாள். சுந்தரமூர்த்தி அவளது அன்பான கணவன். அப்பொழுதெல்லாம் அவளை எவ்வளவு நேசித்தான்? இன்பமான அவர்களின் தாம்பத்ய வாழ்க்கையில் தீராத ஒரு பெரும் பிளவு ஏற்படக் கூடும் என்று யாரும் எதிர்பார்க்கவேயில்லை. பூவும் மணமும், நகமும் சதையும் என்றெல்லாம் உவமைகளால் அலங்கரித்துப் பேசினால்கூட போதாது என்று சொல்லும்படி அளவு அந்நியோன்யமாக அல்லவா அவளும் அவள் கணவன் சுந்தரமூர்த்தியும் வாழ்ந்து வந்தார்கள்?

பிறந்த வீட்டிற்கு வந்து அடைக்கலம் அடைந்தபின், எத்தனையோ இரவுகளில் அவள் தூக்கத்தினின்று திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவள் உடல் பயத்தில் பதறும். மேனி முழுவதும் குப்பென்று வியர்வை அரும்பும். "அந்தப் பிசகை மட்டும் செய்யாதிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? ஐயோ! ஐயோ!" என்று எண்ணி அவள் நெஞ்சு படபட வென்று துடிக்கும். ஆனால், சிறிது பொழுதில் அதற்குத் தானாகவே சமாதானமும் அவள் உள்ளத்திலே எழுந்து விடும். அவள் என்ன பிரமாதமான பிசகு செய்து விட்டாள்? சுந்தரமூர்த்திக்கு மட்டும் உண்மையான உறுதியான அன்பு அவள் மீதிருந்தால் அவள் வாழ்வு இப்படிப் பாழாகி விட்டிருக்குமா?

கணவனும் மனைவியும் அந்நியோன்யமாக வாழ்ந்து கொண்டிருந்த அந்த நாளில் ஒரு சமயம் அவள் தூர பந்து ஒருவர் வீட்டுக் கல்யாணத்திற்குப் போயிருந்தாள். சுந்தரமூர்த்தியின் ஒன்று விட்ட சகோதரியின் பெண் கனகம் அங்கு வந்திருந்தாள். விளையாட்டும் சிரிப்புமாக இருந்த அந்தச் சிறுமியை காந்திமதிக்கு வெகுவாகப்

பிடித்திருந்தது. "நம்முடன் பத்து தினங்கள் இவளை அழைத்துச் சென்று வைத்திருப்போம். எனக்கு இவளை மிகவும் பிடித்திருக்கிறது" என்று தன் கணவனிடம் கூறி அவன் அனுமதியைப் பெற்றாள் அவள்.

பத்து தினங்கள் என்று வந்திருந்த கனகம் அவர்கள் இல்லத்தில் நாலைந்து மாதங்களுக்கு மேல் தங்கி விட்டாள். அந்தக் குறுகிய காலத்தில் தன் கணவன் அவ்வளவு பெரிய கசடனாக மாறி விடுவான் என காந்திமதி கொஞ்சம் எதிர்பார்க்கவேயில்லை. சுந்தரமூர்த்தி அந்தச் சிறு பெண்ணின் யௌவனத்தில் மயங்கி மனம் தடுமாறி விட்டான் என்ற உண்மையை அவள் ஒரு நாள் அறிய நேர்ந்தது.

குடிக்க நீர் எடுத்துவர ஆற்றுக்குப் போயிருந்த அவள் அன்று மாலை சீக்கிரமே வீட்டிற்குத் திரும்பி விட்டிருந்தாள். அவள் கணவன் சுந்தரமூர்த்தியும் அவள் வெளியே சென்ற உடனேயே ஏதோ காரியமாகக் கடைவீதிக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தான். அந்தி வேளையில் கனகம் வீட்டிலே தனியாக இருக்கப் பயப்படுவாள் என எண்ணி வேகமாக நடந்து வந்து, குறுக்காகத் தோட்டத்திற்குள் புகுந்து, காந்திமதி மெல்லப் பின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் இடையிலிருந்த குடம் நழுவிக் கீழே தடால் என்று விழுந்து விட்டது. சுந்தரமூர்த்தி தோட்டத்தில் மலர்ந்திருந்த ரோஜா மலர்களில் ஒன்றை கனகத்தின் குழலில் சூட்டிவிட்டுக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தான்.

நம்ப முடியாத இந்தக் காட்சியைக் கண்ணுற்ற பின்பு ஏற்பட்ட தாங்கொணாக் கோபத்தில் காந்திமதி கணவனிடம் ஏதும் பேசவேயில்லை. விடியும் வரை பொறுமை காத்திருந்த அவள், விடிந்ததும் வீட்டு வில்

வண்டியைக் கட்டிக் கொண்டு கனகத்தை அழைத்து கொண்டு புறப்பட்டாள். பெற்றோர்களிடம் அந்தப் பெண்ணை ஒப்படைத்து விட்டு அதே மூச்சில் வீட்டிற் குத் திரும்பிய காந்திமதி, சுந்தரமூர்த்தி கோபமே உரு வாகத் தன்னை வரவேற்கக் காத்து நிற்பதைக் கண்டாள்.

"இந்த வீட்டுக்கு நீ எஜமானியா, அல்லது நான் எஜமானனா?" என்று எடுத்த எடுப்பிலே ஆத்திரத்துடன் கேட்டான், அவள் கணவன்.

நியாயம் தன் பங்கில் இருப்பதாக எண்ணி ஆத்திர மடைந்திருந்த காந்திமதி, கணவனது கோபத்தைக் கண்டு அஞ்சவில்லை. "ஏன்? இரண்டு பேரும்தான் இந்த வீட்டின் எஜமானர்கள். அக்கிரமத்தினால் அறிவு அழிந்து நம்மில் யாராவது ஒருவர் தவறாக நடந்து கொண்டால் மற்றவர் எஜமான ஸ்தானம் வகிக்க வேண்டியிருக்கிறது" என்றாள் கோபத்துடன் பதிலுக்கு.

"ஓகோ! அவ்வளவிற்கு வந்து விட்டதா? அறிவு கெட்டவளே, எந்த தைர்யத்தில் கனகத்தை அழைத்துக் கொண்டு புறப்பட்டாய்? யாரைக் கேட்டுக் கொண்டு வெளியே கிளம்பினாய்?" என்றான் அவன் ஆத்திரத் துடன்.

"அக்கிரமமான ஒரு காரியத்தைத் தவிர்த்து நிவர்த்தி செய்வதற்கு உங்கள் உத்தரவு வேறே தேவையா என்ன? ஊரான் வீட்டுப் பெண்ணை பெற்றோர்களிடம் கொண்டு ஒப்படைக்க உத்தரவு கொடுப்பதற்கு நீங்கள் யார்?" என்று கோபத்துடன் கேட்டாள்.

"ஊரான் வீட்டுப் பெண் அல்ல அவள். இனி கனகம் என்று மனைவி என்று தெரிந்து கொள்" என இரைந்து கத்தினான்.

"மனைவியா?" என்று திடுக்கிட்டுப் போய் வின வினாள் காந்திமதி. அந்த வார்த்தைகள் நாராசம் போல்

அவள் காதுகளில் பாய்ந்து அவள் உள்ளத்தை வேதனை யினால் உலுக்கி விட்டன.

"கனகத்தை நான் மணந்து கொள்வது என்று தீர் மானித்து விட்டேன். அவளும் ஒப்புக் கொண்டிருக் கிறாள்" என்றான் அவன்.

காந்திமதிக்கு அதைக் கேட்டு ஏதும் பேசத் தோன்ற வில்லை. "ஐந்து வருஷ காலமாகி விட்டது நாம் குடித் தனம் ஆரம்பித்து இது வரை இந்த வீட்டில் எடுத்து விளையாட ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை. கனகத்தை இரண்டாவது தாரமாகக் கொண்டாலாவது அந்தக் குறை தீருமோ என்று..." என அவன் காரணத்தை முடிக்கு முன் காந்திமதி கூடத்து அறைக்குள்ளே புகுந்து கொண்டு கதவைப் படீர் என்று சாத்தித் தாளிட்டுக் கொண்டாள். அண்ட சராசரம் எல்லாம் நொடிப் பொழுதில் இருந்து தலைமேல் விழுந்து விட்டால் கூட நம்பியிருப்பாள். அவளது அன்பான கணவனின் துரோக நடத்தையை அவளால் நம்பவே முடியவில்லை. நெஞ்சு வெடித்து விடும்போல் துயரம் தாளாது அழுதாள். அழுததைத் தவிர அது சமயம் அவளுக்கு வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை.

இது நடந்து ஒரு மாத காலம் விரைவில் ஓடிச் சென்றது. அன்றைய சண்டைக்குப் பிறகு கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தை மற்றவர் நிமிர்ந்து பார்க் கவும் விருப்பமற்றவர்களாக அந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தனர். நேரிடையாக எதுவும் சொல்லா விடினும் தன் கணவன் தான் மனத்தில் கொண்ட காரியத்தை நிறைவேற்ற சகல விதமான ஏற்பாடுகளையும் செய்வதை காந்திமதி பார்த்துக் கொண்டே இருந்தாள். கணவன் இரண்டாவது மணம் செய்து கொள்ளத் துணிந்திருக்கிறான் என்ற விஷயத்தைத் தந்தைக்குத்

தெரிவித்து உதவி பெற வேண்டும் என்று அவளுக்கு அது சமயம் புத்தி தோன்றவில்லை. "நடக்கட்டும். எந்தத் தைரியத்தில் கனகத்தின் பெற்றோர்கள் சுந்தரமூர்த்திக்குத் தங்கள் பெண்ணைக் கட்டிக் கொடுத்து விடுவார்கள் பார்க்கலாம்? ஊரில் நியாயத்திற்கு அஞ்சிய பெரியவர்கள் நாலு பேர்களாவது இருக்காமலா போய் விடுவார்கள்? எல்லாவித ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கட்டும். கல்யாணப் பந்தலில், முகூர்த்த வேளையில் காளிபோல் பிரவேசித்து என்ன செய்கிறேன் என்பதைப் பார்க்கட்டும்! இவர் கனகத்தின் கழுத்தில் மாங்கல்யம் அணிவிப்பதைப் பார்த்து விடுகிறேன்! என்று தன்னுள் கறுவிக் கொண்டு வாளா இருந்தாள்.

காந்திமதியின் தந்தைக்கு விஷயம் தெரிந்து எங்கே அவர் கல்யாணத்தைத் தடுத்து விடுவாரோ என்ற கிலியில் சுந்தரமூர்த்தி தனது இரண்டாவது திருமணத்தை மிகவும் அவசரமாகவும் இரகசியமாகவும் முடித்துக் கொள்ளத் திட்டமிட்டிருந்தான்.

வாயிலில் பெரிய பந்தல் போட்டு, அமர்க்களமாகக் கல்யாணம் நடக்கும் என்று காந்திமதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தவள், ஏமாந்தே போய் விட்டாள். ஒரு நாள் காலை விடிவதற்கு முன் வில் வண்டியைக் கட்டிக் கொண்டு புறப்பட்டுப் போன அவள் கணவன், மாலை வீட்டிற்கு திரும்பி வரும் பொழுது கனகத்துடன் உள்ளே நுழைந்தான்.

"அக்கா! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க" என்று தன் காலில் விழுந்து கும்பிட்ட அச்சிறு பெண்ணின் கழுத்திலேயே விளங்கிய மஞ்சள் கயிற்றை வெறித்துப் பார்த்தாள் காந்திமதி. புரட்சி செய்து நியாயத்தை நான்கு பேர்களுக்கு அறிவிக்கக்கூட இடம் வைக்காது அவள் கணவன் அவளை இவ்வாறு ஏமாற்றி விட்டதை அவளால் தாள முடியவேயில்லை.

கணவனையும் அவனது இளமனைவியையும் ஒரு வினாடி காலம் அவள் பார்த்துக்கொண்டு நின்றாள். மறுவினாடி பயித்தியம் பிடித்தவள் போல் வீட்டை விட்டு வெளியே வந்து தெருவிலே வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தாள்.

"காந்திமதி! ஏ காந்திமதி!" என்று பின்னால் அதட்டிக் கொண்டு தொடர்ந்து வந்த கணவனை அவள் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை. இந்தக் காட்சியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்ற தெருமக்களை அவள் திரும்பிப் பார்க்கவும் இல்லை. ஏதோ ஒரு விசையினால் தள்ளப்பட்டவள் போல் வேகமாக நடந்து ஆற்றங் கரையை அடைந்தாள்.

"இதோ பார்! நீ செய்கிற காரியத்தின் முடிவு என்ன வாகும், தெரியுமா?" என்று அதட்டி விட்டு அவளது கரங்களைப் பற்றி இழுத்தான் சுந்தரமூர்த்தி.

"விளைவு என்ன என்பது தெரியும். என்னை விடுங்கள் நான் திரும்பி வரப்போவதில்லை. உங்கள் துரோகத்தைச் சகித்துக்கொண்டு அந்த வீட்டில் இனி அரைக் கணம் கூட நான் இருக்க மாட்டேன்" என்று கோபத்துடன் கத்திய அவள் வெடுக்கென கரங்களை அவனது பிடியி னின்று விடுவித்துக் கொண்டு புறப்படத் தயாராக இருந்த பரிசில் ஒன்றில் ஏறிக்கொண்டாள். அதுதான் கடைசியாக தன் கணவனிடம் பேசிய வார்த்தைகள்.

காந்திமதி வீட்டிற்கு வந்த சமயம் அவள் தந்தை உயிருடன் இருந்த காலம். தன் அருமை மகளுக்குக் கணவன் இழைத்த கொடுமையைக் கேட்டுவிட்டுக் கோபத்தில் கொதித்த அந்தக் கிழவர் தன் மருமகனைப் பழிவாங்கத் துடித்தார். "கொன்று விடுவேன், தின்று விடுவேன்' என்று' அவர் வறட்டுக் கூச்சல் போட்டது தான் மிச்சமாக இருந்தது. இரண்டு வருஷ காலம்

சென்றதும் சுந்தர மூர்த்தி தனது குற்றத்திற்காக அவரிடம் மன்னிப்புக் கோர வரவும் இல்லை; காந்திமதியைத் திரும்ப அழைத்துக் கொள்ளவும் அவன் முயற்சிக்க வில்லை.

சூரியகாந்தத்தில் இதைப்பற்றி இரண்டு வித அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. 'சுந்தரமூர்த்தி செய்தது மன்னிக்க முடியாத குற்றம்' என்று அவனைத் தூஷித்து காந்திமதிக்குப் பச்சாதாபப்பட்டவர்கள் ஒரு சாரார் இருந்தனர். "என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு ஆணவமா? பத்திரகாளி போல் புறப்பட்டு வந்து விட்டாளே, ஆத்திரக்காரி! புருஷன் என்றால் இப்படி ஏதேனும் தவறு செய்வது இயற்கைதானே?" என்று காந்திமதியின் மேல் குற்றம் சாட்டி, சுந்தரமூர்த்திக்காக வாதிக்க ஒரு சாரர் இருந்தனர். ஆனால், காந்திமதி மட்டும் ஒரே பிடிவாதமாக இருந்தாள். "அப்பா, எனக்காக நீங்கள் யாருடனும் விவாதிக்க வேண்டாம். நியாயம் கேட்டுக் கொண்டு நீதி மன்றத்திற்குப் போக வேண்டாம். என் கணவர் இறந்து போயிருந்தால் நீங்கள் என்னை வைத்து ஆதரிக்க மாட்டீர்களா? சிவானந்த அண்ணனைப் போல் நானும் உங்களுக்கு ஒரு பிள்ளை என்று நினைத்துக் கொள்ளுங்கள். தானே கனியாத பழத்தைத் தடிகொண்டு அடித்துக் கனிய வைப்பது போலத்தான் இனிமேல் எனக்கும் அவருக்கும் ராசி செய்து வைக்க முயற்சிப்பது" என்று நிர்த்தாட்சண்யமாகக் கூறிவிட்டாள். கனகத்திற்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து விட்டது என்று செய்திதான், கணவன் மீது அவள் அந்தராத்மாவில் கொஞ்ச நஞ்சம் குடியிருந்த அன்பையும் அவ்வாறு உதறி எறியச் செய்தது.

மகளின் வாழ்க்கையின் முடிவு என்ன என்று தீர்மானிக்குமுன் ஒருநாள், காய்ச்சலில் கிழவர் கண்மூடி விட்டார். அதுவரை சகோதரியிடம் மிகவும் அன்பாகவே

நடந்து கொண்டிருந்த சிவானந்தம், அமிர்தம் வந்த பிறகு முற்றிலும் மாறி விட்டார். புருஷனிடம் ஜீவனாம்சம் என்று ஏதும் வாங்காது வெறுங்கையுடன் வீட்டிற்குள் வந்து விட்டிருந்த காந்திமதி, அவருக்குப் பெரும் பாரமாகத் தோன்றினாள். தமது மனத்திற்குள்ளே அவர் அடக்கி வைத்திருந்த அந்த உண்மையை ஒவ்வொரு சமயம் வெளியிடவும் செய்தார். அப்பொழுதெல்லாம் காந்திமதியில் உள்ளத்திலே குமுறி எழுந்த ஆத்திரக்கனலை யாரும் அறியவே மாட்டார்கள்.

சிவபெருமானைப் போல் அவளுக்கு ஒரு நெற்றிக்கண் ஏற்பட்டிருந்தால் இந்த உலகில் உள்ள புருஷ வர்க்கத்தையே ஒரே பார்வையில் எரித்து விடவும் அவள் தயங்கியே இருக்க மாட்டாள். மனைவி தடுக்கையில் மோக வசப்பட்டு இன்னொருத்தியை மணந்துகொள்வது நியாயம் என்றும், ஒரே வயிற்றில் பிறந்த ஆண், பெண் இரு குழந்தைகளில் ஆணாய் பிறந்த ஒன்றுக்கு மட்டும் தந்தையின் சொத்து முழுவதும் ஆள உரிமை, பெண் குழந்தைகளுக்கு அதில் ஒரு செப்புத் தம்படிகூட எடுத்து ஆள உரிமையில்லை; வேறு கதியில்லையென அவள் பிறந்த வீடு வந்து விட்டால், அவள் ஒரு பாரம் எனவும் கருதும் தனிப்பட்ட நியாயம் ஒன்றைத் தங்களுக்காக வகுத்துக் கொண்ட புருஷர்கள் அனைவரையும் அவள் வெறுத்தாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தோட்டத்து கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே வந்தாள் காந்திமதி. கைவிளக்கை எடுத்துக்கொண்டு தாழ்வாரத்தை அடைந்த அவள் விளக்கு ஒளியில் தூங்கிக் கொண்டிருந்த தமயந்தியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். குளிருக்கு உடலை மடக்கிக் கொண்டு பாயின் மீது முடங்கிக் கிடந்த அந்தச சிறுமியின் பால்வடியும் வதனம் அவள் மனத்தை என்னவோ செய்தது.

தூங்கிக் கொண்டிருந்த தமயந்தி விழித்துக் கொண்டு பார்த்தாள். தாயைப் போல் சாயலிலிருந்த அந்தப் பெண் மணி தன்னை மடியில் கிடத்திக் கொண்டு கண்ணீர் வடித்த வண்ணம் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. சிறிது நேரம் மிரள மிரள விழித்து விட்டு ஆவலை அடக்க மாட்டாது அவள், "ஏன் அழுகிறே?" என்று வினவினாள் மெல்லிய குரலில்.

அந்தச் சிறுமியின் கேள்வியில் திகைப்படைந்து போன காந்திமதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புன்னகை செய்தாள். "விதியை நினைத்துக் கொண்டு அழுகிறேன்" என்றாள்.

"அழாதே! நீ அழுதால் எனக்கும் அழுகை வரும் ஏன் தெரியுமா? நீ என் அம்மாவைப் போலவே இருக்கிறாய்" என்று மழலையாக மொழிந்த அந்தக் குழந்தை, தன் சிறு கரங்களை நீட்டி அவள் கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்தாள்.

காந்திமதியால் பேச முடியவில்லை. அந்தச் சிறு உள்ளத்திலே நின்ற அந்தப் பரிசுத்தமான அன்பில் அவள் உள்ளம் உருகிப் போய் அச்சிறுமியை மார்புடன் அணைத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

ஒரு மாத காலம் ஓடிச் சென்று விட்டது. தமயந்திக்கு சிவானந்தத்தின் வீட்டு வாழ்க்கை அந்தக் குறுகிய காலத்தில் முற்றிலும் பழக்கமாகி விட்டிருந்தது.

அந்தச் சிறுமியின் வரவால் தனது குடும்பத்திற்குக் கொஞ்ச லாபம் ஏற்பட்டிருந்தும், அமிர்தம் அந்தக் குழந்தையிடம் சிறிதும் அபிமானம் காட்டவில்லை. அவளது உள்ளத்திலே தனக்கும், தன் இரு பெண்களுக்கும் அன்றி வேறு யாருக்குமே இடம் இருக்கவில்லை யாதலால், அவள் தமயந்தியிடம் மிகவும் அலட்சியமாக நடந்து கொண்டாள். மாமியிடம் தயையோ அல்லது அன்பையோ எதிர்பார்க்க முடியாது, தவறு செய்து விட்டால் பொறுக்க மாட்டாள். மிகவும் கடுமையாகத் தண்டித்து விடுவாள் என்பதை விரைவில் உணர்ந்து கொண்ட அந்தச் சிறுமி கூடியவரை அமிர்தத்தின் அதிருப்திக்கு ஆளாகாதிருக்க முயற்சித்து வந்தாள்.

மாமன் மனைவி கூடத்தில் இருந்தால், தமயந்தி சமையலறைக்குள் ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். எதேச்சையாக அமிர்தம் சமையலறைக்குள் வந்து விட்டால், மெல்லச் சுவரைப் பிடித்துக் கொண்டு, தத்தி நடந்து சப்தமிடாது கூடத்திற்கு வெளியே விடுவாள். தன்னைக் கண்டு அந்த பேதைச் சிறுமி அவ்வாறு அஞ்சி விலகிக் கொள்வதை அமிர்தம் கவனிக்கக்கூட இல்லை. பிறர் தவறுகளை ஊன்றிப் பார்த்துக்கொண்டு எப்பொழுது சண்டை போடலாம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் சுபாவம் வாய்ந்த அவளுக்கு, குடும்பச் சச்சரவுகளில் நாட்டம் குறைந்திருந்தது. வடிவேலு குழந்தையைக் கவனித்துக்கொள்ள செலவுக்கெனக் கொடுத்திருந்த அந்த எதிர்பாராத பெருந்தொகை அவளது பெட்டிக்குள் வந்து சிக்கிக் கொண்டிருந்தது. அதை எவ்வாறு செலவழிப்பது என்ற யோசனையில் அவள் தீவிரமாக மூழ்கிக் கிடந்தாள்.

பெண் குழந்தைகள் இருவருக்கும் சிவானந்தம் அன்று வரை நகைகள் என்று ஒரு குன்று மணி எடைகூடத் தங்கத்தில் செய்து போடவில்லை. அந்தப் பணத்தைக்

கொண்டு தன் இரு பெண்களுக்கும் கையில் தங்கக் காப்பு செய்து போடலாமா, அல்லது வெகு நாளாக ஆசை கொண்டிருந்த கல் அட்டிகை ஒன்றை கனமாகச் செய்து தானே போட்டுக் கொண்டு மகிழலாமா என்று ஒரு முடிவுக்கு வரமுடியாது அமிர்தம் தனது மூளையைக் குழம்பிக் கொண்டிருந்தாள். அதனால் வீட்டில் அப்போதைக்கப்போது தலைகாட்டி வந்த பூசல்கள் சிறிது ஓய்வடைந்து கிடந்தன.

தங்கை மகளை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டதும் தனது பொறுப்பு அத்துடன் தீர்ந்து விட்டது என்பதைப்போல் சிவானந்தம் அதற்குப் பிறகு அந்தச் சிறுமியிடம் எவ்விதமான அக்கறையும் காட்ட வில்லை. தன் குடும்பத்தில் அதிகப்படியாக இன்னொரு ஆத்மா வந்து சேர்ந்திருப்பதைக்கூடச் சில சமயம் அவர் மறந்து காணப்பட்டார். சண்டையும் ரகளைகளும் சிறிது ஓய்வடைந்திருந்ததனால் அவருடைய மனமும் சிறிய நிம்மதியை அடைந்திருந்தது. முன் போல் அவசியமற்ற சமயங்களில் கூட வயல் வெளிகளைச் சுற்றிக் கொண்டிருந்தது போல் வீணாக அலையாது, காந்திமதி ருசியாகச் சமைத்துப் போட்ட உணவை வேளை தவறாது, உண்டு விட்டுத் தெருத் திண்ணையில் படுத்து உறங்கிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்.

அமிர்தத்தைப் போல் சிவானந்தமும், சிறு குற்றங்களுக்கும் தயையின்றி தண்டித்து விடும் பெரும் கோபக்காரர் என்பதைப் புரிந்து கொண்டு விட்ட அந்தச் சிறுமி, மாமியைக் கண்டு விலகி ஓடிமறைந்து கொண்டது போல், மாமனைக் கண்டும் அஞ்சி, ஒதுங்கி இருக்கத் தலைப்பட்டாள்.

அடுத்தபடியாக தமயந்தி அறிந்து கொண்டது அமிர்தம்மாளின் அருமைப் புத்திரிகள் இருவரைப்

பற்றியதாகும். தியாகராஜனைப் போல் அவர்கள் இருவரும் தமயந்தியிடம் நேசம் பாராட்ட முன் வரவில்லை. பிடிக்கவில்லை என்பதற்காக அவர்கள் அந்தச் சிறுமியை விட்டு ஒதுங்கியும் போய் விடவில்லை. காந்திமதியோ, தந்தையோ, அமிர்தமோ காணாத சமயம், தனியாக விடப்பட்ட அந்தப் பெண்ணிடம் குறும்புத் தனமான சேஷ்டைகள் செய்து அவளைத் துன்புறுத்தி மகிழ்ந்தனர்.

பெண்களில் சிறியவளான மோகனா தாயைப் போல் நல்ல சிவந்த மேனியுடையவளாக இருந்தாள். வட்ட வடிவமான முகமும், நெளிந்த கூந்தலும், வண்டுகளைப் போல் சதா வட்டமிட்டு அலையும் இரு பெரும் கருவிழிகளும் கொண்டிருந்த அந்தச் சிறுமி தான் ஒரு அழகி என்ற உண்மையைப் பரிபூரணமாக அறிந்து கொண்டிருந்தாள். "மோகனாவின் கண்களுக்கல்லவோ மை தீட்டிப் பார்க்க வேணும்?" என்று அமிர்தம் அடிக்கடி மகளின் அழகை பற்றிப் பெருமையடித்துக் கொள்வது வழக்கமாதலால், மோகனாவிற்குத் தனது அழகைப் பற்றி மிகவும் கர்வம் ஏற்பட்டிருந்தது. பள்ளிக்குப் புறப்படும் முன் கண்ணாடி முன் நின்று வெகு நேரம் தன்னை அழகு பார்த்துக் கொள்ளுவாள். தன் சேவையில் முக்கிய பங்கைத் தன் இரு பெரு விழிகளும் கொண்டிருந்தன என்ற எண்ணம் வேறு அவளுக்கு ஏற்பட்டிருந்ததனால் அவள் பேசும் பொழுதெல்லாம் கண்களைச் சுழற்றிக் கொண்டு முகத்தை அசைத்துத்தான் பேசுவது வழக்கம்.

தமயந்தி எதிர்பாராத சமயம் திடீரென்று பாய்ந்து வந்து அவள் கரத்திலிருக்கும் பொம்மையைத் தட்டிப் பறித்துக் கொள்வதில் மோகனாவுக்கு அலாதி திருப்தி. பொம்மையைச் சிறிது நேரம் தான் வைத்திருந்து விட்டு வேண்டுமென்றே சிறிது தூரத்தில் விட்டெறிந்து விட்டு, "போய் எடுத்துக்கொள். உன் பொம்மை எனக்கு வேண்

டாம்!" என்பாள். அதை எடுத்துக்கொள்ள, தமயந்தி மிகவும் பிரயாசைப்பட்டு தத்திச் செல்வதைக் காண அவளுக்குப் பெரும் விளையாட்டாக இருந்தது.

அத்துடன் நிறுத்திக் கொள்ளாது சில சமயம் அவள் தமயந்தியின் ஊனத்தை இடித்துக் காட்டுவது போல், "ஏ நொண்டி! இங்கே வேகமாக ஓடி வா. உன் பொம்மையை உன்னிடம் கொடுக்கிறேன்" என்று சிறிது தூரத்தில் சென்று நின்று கொண்டு ஆர்ப்பரிப்பாள். அவள் தன் பொம்மைகளைப் பறித்துக் கொண்டு ஓடுவதைக்கூட தமயந்தி பொருட்படுத்த மாட்டாள். தன்னை நொண்டியென அந்தச் சிறுமி அடிக்கடி சுட்டிக் காட்டி இகழ்ச்சி செய்வதை அவளது தளிர் உள்ளம் சகிப்பதில்லை.

தன்னை அவள் துன்புறுத்தும் அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் தமயந்திக்குக் கோபம் எல்லை மீறிப் போய் விடுவது வழக்கம். பாய்ந்து சென்று வெடுக்கென மோகனாவின் கரத்தைக் கடித்துவிட வேண்டுமென்று ஆத்திரம் குமுறிக் கொண்டு வரும். அப்படிச் செய்தால் அமிர்தம் அடித்துக் கொன்று விடுவாள் என்ற அச்சத்தினால் துக்கமும் கோபமும் தாளாது கண்ணீருடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு விடுவாள்.

துஷ்டத்தனத்திற்கு விஜயா தன் தங்கையை விடச் சிறிதும் குறைந்தவள் அல்ல என்பதைச் காட்டிக் கொண்டாள். மோகனாவைவிட அவள் மூன்று வயது பெரியவள். தந்தையைப் போல் கறுப்பாக இருந்தாள். வயதிற்கு மீறிய உயரமும், மெலிந்த தோற்றமும் அவளது அழகை இன்னும் சிறிது குறைத்துக் கொண்டிருந்தன. மோகனாவைப் போல் தான் அழகி அல்ல என்ற மனக்குறை அவளுக்கு ஒரு தாழ்வு உணர்ச்சியை உண்டு

பண்ணி விட்டிருந்தது. அதன் விளைவாக அவள், தங்கையிடமும் தியாகராஜனிடமும் காரணமின்றிச் சண்டை போடுவது வழக்கம். வீட்டிற்குப் புதிதாகத் தங்களுடன் வாழ வந்திருந்த அந்தச் சிறுமியைப் பார்த்த அளவிலேயே விஜயாவிற்குப் பிடிக்காது போயிருந்தது. கால் ஊனமாக இருந்த போதிலும் அந்தச் சிறுமி மோகனாவைப் போல் மிகவும் அழகானவளாக இருந்ததுதான் காரணம்.

தமயந்தியை இம்சித்து மகிழ்ந்ததில் விஜயா கையாண்ட முறை வேறுவிதமாக இருந்தது. மோகனாவைப் போல் விளையாட்டுக் கருவிகளைப் பறித்துக் கொண்டு அவள் அந்தச் சிறுமியைத் துன்புறுத்தவில்லை. அப்படிச் செய்வது தன் லயத்திற்கு உகந்ததல்ல என்பது அவளது எண்ணம். அந்த மூன்று பெண்களில் அவள் தான் வயதில் பெரியவளாக இருந்தாள், செய்கைகளால் துன்புறுத்துவதைவிட அவள் வார்த்தைகளால் அந்தக் குழந்தையை இம்சை செய்து கொண்டிருந்தாள்.

பள்ளியிலிருந்து திரும்பி வந்ததும் வேலையொன்றும் இல்லாவிடில் அவள் கூடத்துத் தரையிலே தனியே உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் தமயந்தி அருகில் வந்து அமர்ந்து கொள்வாள். யாரும் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கவில்லை என்று நிச்சயமாகத் தெரிந்த பின்னர் வம்புச் சண்டையைத் துவங்குவாள்.

"நீ ஏன் இங்கே இருக்கிறே? உன் வீட்டுக்குப் போகமாட்டியா?" என்று விஷயமாக வேண்டுமென்றே கேட்பாள்.

"இங்கேதான் இருப்பேன். அப்பா இங்கேதான் இருக்கச் சொன்னார்" என்று பதில் அளிப்பாள் தமயந்தி.

"எங்க வீட்டிலே வந்து இருந்தாக்கா உங்கம்மா உன்னைத் தேட மாட்டார்களா?"

இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று தமயந்திக்கு மிகவும் குழப்பம் ஏற்பட்டு விடும். தன் தாயார் இறந்து போய் விட்டாள், இனி வரமாட்டாள் என்ற உண்மையை விஜயாவிடம் ஒப்புக்கொள்ள அவளுக்கு மனம் இடந்தராது.

"எங்கம்மா ஊருக்குப் போயிருக்காங்க. அவங்க வந்ததும் நான் எங்க ஊருக்குப் புறப்பட்டுப் போயிடுவேன்" என்று சளைக்காது பதில் அளிப்பாள்.

"பொய்! பொய்! சீ! உங்கம்மா எங்கிருந்து வருவாங்க? அவங்கதான் செத்துப் போயிட்டாங்களே! எனக்குத் தெரியும். அப்பா சொல்லிக்கிட்டிருந்ததை நான் கேட்டுக் கிட்டுத் தானிருந்தேன். செத்தவங்க திரும்பி வருவாங்களா? உங்கப்பாவும் உன்னை விட்டுட்டு மலேயா புறப்பட்டுப் போயிட்டாங்க. உனக்கு இங்கே அப்பா கிடையாது. அம்மா கிடையாது. நடக்கக் கூட ஒரு காலும் கிடையாது. ஐயோ, நினைச்சாலும் எனக்கு வெட்கமாக இருக்கிறது, என்று கூறி விட்டுத் தன் இரு தோள்களையும் குலுக்கிக் கொண்டு சிரிப்பாள் விஜயா.

இதையெல்லாம் கேட்டதும் தமயந்திக்குத் தாள முடியாது போய்விடும். தன்னை விட்டு மறைந்து போன தாய், அயல்நாடு சென்றுவிட்ட தந்தை, நொண்டியாகி விட்ட தன் கால் எல்லாவற்றையும் ஒருங்கே நினைத்துக் கொண்டு ஓவென்று முடிவில் அழுது விடுவாள்.

வார்த்தைகளால் இவ்வாறு தன்னைப் புண்படுத்தி அழச் செய்து வேடிக்கை பார்த்த அமிர்தம்மாளின் மூத்த புதல்வி விஜயா மீது தமயந்திக்கு வெறுப்பு ஏற்பட்டதில் வியப்பேயில்லை.

சிவானந்தத்தின் குடும்பத்தினர் அனைவருமே அவளுக்கு வேண்டாதவர்களாகப் போய் விடவில்லை.

முதல் நாளே தன்பால் மிக்க கருணை காட்டி, நட்புப் பாராட்டிய தியாகராஜனை அவள் மிகவும் நேசித்தாள். பள்ளிக்குப் புறப்படுமுன், தினமும் ஒரு முறை அவளிடம் சொல்லிக் கொண்டு போக அவன் தவறவே மாட்டான். அவன் திரும்பி வரும்வரை மிகவும் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பாள். பள்ளிக்கூடத்தில் அவனது தோழர்களுடன் பகிர்ந்து கொண்ட நூதன அனுபவங்கள் அவன் சொல்லக் கேட்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாகத் தோன்றின. எந்த விதமான தின்பண்டங்களையும் அவளுக்குச் சிறிது அளவாவது கொடுக்காமல், அவன் தின்னவே மாட்டான். அதைப் போலவே மிட்டாயே எதுவானாலும் தன் நண்பனுக்குக் கொடுக்காது தின்ன மாட்டாள். சில சமயங்களில் தனது புத்தகங்களையும், தங்கைகளுக்குத் தெரியாது மறைத்து வைத்திருக்கும் பொம்மைப் படங்களையும், அவள் வசம் ஒப்படைத்து விட்டுப் போவான். அவைகளை அந்தத் துஷ்டப் பெண்களின் கண்களுக்குத் தெரியாத இடத்தில் மறைத்து வைத்திருந்து பிறகு அவன் கேட்டபொழுது திரும்பக் கொடுப்பாள். தங்கைகளைவிடத் தன்மீது அவனுக்கு அபார நம்பிக்கை ஏற்பட்டிருந்ததைப் பற்றி அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. பரஸ்பரம் தானாகவே ஏற்பட்ட நம்பிக்கையினால், இருவர் உள்ளங்களிலும் தோன்றி வளர்ந்து கொண்டு போன இந்தப் பரிசுத்தமான அன்பு, விதி என்பதைத் தவிர, மனிதர்கள் யாராலும் பிரிக்க முடியாது போல் அவ்வளவு உறுதியுடன் இருந்தது என்றால் மிகையில்லை.

அடுத்தபடியாக அந்தக் குடும்பத்தில் தமயந்திக்கு மிகவும் பிடித்தவளாக இருந்தது காந்திமதிதான். முதல் நாள் இரவு சம்பவத்தில் ஏற்பட்ட பச்சாதாபத்தினாலும் தாயற்ற தன் தங்கை மகள் என்ற இரக்கத்தினாலும், காந்திமதிக்கு அந்தக் குழந்தையிடம் கருணை ஏற்பட்

டிருந்தது. ஆனால், அவை மட்டுமே அவள் உள்ளத்திலே நாளடைவில் அச்சிறுமியால் பொங்கி வளர்ந்து வந்த அந்தத் தவிர்க்க முடியாத பாசத்திற்குக் காரணமாகும் என்று சொல்லிவிட முடியாது.

அமிர்தம்மாளின் இரு பெண்களைப் போல் இன்றி தமயந்தி தனது வயதிற்கு மீறிய அறிவு படைத்தவளாக இருந்தாள். அவளால் காந்திமதிக்கு எத்தகைய தொல்லை யும் தொந்தரவும் ஏற்படவில்லை. சாப்பிட அழைத்த போது நண்பன் உதவி செய்ய உள்ளே வந்து எல்லோ ருடனும் அமர்ந்து அமைதியாகச் சாப்பிட்டாள். தூங்கும் நேரத்தில் தனக்குக் காட்டப்பட்ட இடத்தில் படுத்து எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யாது தூங்கினாள். மீதிப் பொழுதில் கூடத்துத் தரையில் காந்திமதி அளித்த பொம்மை ஒன்றை வைத்துக் கொண்டு தானே விளையாடிக் கொண்டிருந்தாள்.

சொல்லுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு, தான் இருந்த சூழ்நிலைக்குத் தக்கபடி அமைத்துக் கொண்டு வாழ முயற்சித்த அந்த சிறுமியின் அறிவு காந்திமதியைப் பெரிதும் கவர்ந்து விடவே, அவள் பால் ஏற்பட்டிருந்த கருணை நாளடைவில் பெரும் பாசமாக மாறி விட்டது.

சூரியகாந்தத்திற்குத் தமயந்தி வந்து சேர்ந்த சில தினங்களுக்குப்பின், வடிவேலு மலேயா நாட்டிற்குச் சென்றான். அயல்நாடு செல்லுமுன் தன் குழந்தையைப் பார்த்து விட்டுப் போக அவன் அங்கே வந்திருந்தான். காந்திமதியம்மாள் முன்கூட்டியே அதைப்பற்றி வெகு வாக தமயந்திக்கு எச்சரிக்கை செய்து வைத்திருந்தாள். ஆதலால் தன்னப் பார்த்து விட்டுப்போக வந்திருந்த தந்தையைக் கண்டதும் அவள் ஏதும் பிடிவாதம் செய்து அழவில்லை. அவன் கூறியதையெல்லாம் புரிந்து கொண் டது போல் அவள் தன் சிறு தலையை ஆட்டினாள் பலமாக.

அவளது சின்னஞ்சிறு கரங்களில் மிட்டாய்ப் பொட்ட லங்களைத் திணித்து விட்டுப் பிரிய மனமின்றி எழுந்த வடிவேலுவுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் மறைத்துக் கொண்டது. வாயிற்படியிலே நின்று கொண்டு இந்தக் காட்சியைப் பார்த்த வண்ணமிருந்த காந்திமதிக்குக் கூடத் தாள முடியவில்லை. கண்களில் கசிந்த நீரை அவள் சிரமப் பட்டு அடக்கிக் கொண்டாள். "இங்கே வந்த பிறகு தமயந்தி ரொம்ப புத்திசாலியாகப் போய் விட்டாள். எல்லாம் உங்களால் தான்" என்று கூறிவிட்டு நாத் தழதழக்க வடிவேலு கண்ணீரைத் துடைத்துக் கொண் டான்.

காந்திமதி பதில் பேசாது புன்முறுவல் செய்தாள். அருகில் நின்றிருந்த அமிர்தத்திற்கு அந்தப் புகழ்ச்சியைக் கேட்கப் பிடிக்கவில்லையெனினும், அது சமயம் அவள் தன் அதிருப்தியைக் காட்ட முடியவில்லை.

"பச்சைக் குழந்தையை விட்டு வெளிதேசம் போகி றோமே என்று நான் கொஞ்சநாளா ரொம்பக் கலங்கிக் கிட்டுக் கிடந்தேன், ஆனால் இங்கே வந்து எல்லாத்தை யும் பார்த்த பிறகுதான் மனசிலே நிம்மதி ஏற்பட்டுச்சு. அவ அம்மாளைப் போல சாயலாக இருப்பதானாலோ என்னவோ தமயந்திக்கு உங்க மேலே ரொம்பப் பிடித்த மாக இருக்கிறதாகத் தெரிகிறது. தாய்க்கு மேலே தாயாக இருந்து கவனிச்சுப்பீங்கன்னு தெரிஞ்ச பிறகு மனசை ஏன் வீணா அலட்டிக்கணும்? போயிட்டு வரேன். மாசா மாசம் ஏதோ கையிலே கிடைத்ததை அவ செலவுக்கு அனுப்புகிறேன்" என்று துக்கத்துடன் திணறிய வடிவேலு பிரியா விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

அவனது இருதயத்திலிருந்து எழுந்து அந்த வேண்டு கோளைக் கேட்ட காந்திமதிக்கு, தாயைப் போல்

அக்குழந்தையைக் கவனித்துக் காக்க வேண்டியது தனது கடமை என்ற எண்ணம் உண்டாகியது. இவ்வாறான பல காரணங்களால் காந்திமதிக்கு அந்தச் சிறுமி மீது அளவு கடந்த பிரமை உண்டாகி விட்டிருந்தது.

மாதங்கள் பல சென்றன. வடிவேலுவிடமிருந்து தமயந்தியின் செலவிற்கு என்று ஒழுங்காக சிவானந்தம் பெயருக்குப் பணம் வந்து கொண்டிருந்தது, தந்தை அயல்தேசம் சென்று தன் உடலை வாட்டிப் பொருள் சேர்த்து அனுப்புகிறான், தாயைப் போல அருகிலிருந்து கவனிக்கத்தான் இருக்கிறோம் என்றாலும் காந்திமதியின் மனம் அமைதியடைந்து விடவில்லை. முன்போல் பூரண குணம் அடைந்து கால் சரியாக மாறிவிடும் என்றில்லா விடினும், தமயந்தி பிறர் உதவியை என்றும் எதிர்பார்த் திருக்கும்படி அவளை நொண்டியாகவே யிருக்கவிட்டு விடக்கூடாது. கால் ஊனத்தை நிவர்த்தி செய்ய ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

இரண்டாவதாக, அவள் செய்த தவறை தமயந்தி செய்து விடாது பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியம். கல்வி அறிவற்ற பெண்ணாக இருந்ததனால்தானே அவள் தன் புருஷன் செய்த துரோகத்திற்காக அந்த வீட்டில் ஓடிவந்து அடைக்கலம்புக நேரிட்டது? சூரியகாந்தத்திலே இருக்கும் பெண்கள் பள்ளிக்கூடத்து உபாத்தியார் அம்மா மேரியைப் போல் கல்வி கற்றிருந்தால், அண்ணன் வீட்டிலே சமையற்காரியாக மாறி, பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டு பிறர் தயவிலே வாழாது கல்வியின் உதவியினால், அவளும் உபாத்தியாயினியாகவோ, அல்லது வேறு எந்த ஒரு வேலையோ செய்து கொண்டு கௌரவமாக வாழ்ந்து கொண்டிருக்கலாம் அல்லவா?

அந்த வருஷம் பள்ளிக்கூடம் திறந்தவுடன் தமயந்தியை அதில் சேர்த்துப் படிக்கவைத்து விட வேண்டும்.

அமிர்தம்மாள் தானாக தமயந்தியின் கல்வி பற்றி ஏதாவது பேசுவாள் என எதிர்பார்த்த காந்திமதி ஏமாந்து தான் போனான். பள்ளிக்கூடம் திறந்ததும், தனது குழந்தைகளை வழக்கம்போல் கல்வி கற்க அனுப்பிய அமிர்தம். தமயந்தியின் படிப்பைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. நாட்கள் பல வீணாகக் கழிந்துகொண்டு போவதைக் கண்டு ஆத்திரமடைந்த காந்திமதி ஒருநாள் தானே அந்தப் பிரச்னையை மெல்லத் துவங்கினாள்.

"அந்தப் பொண்ணுக்குக் கால்தான் இப்படி போச்சுன்னா, ஏதாவது கொஞ்சம் படிக்கவாவது வச்சால் தானே உண்டு? நாளைக்குப் பெரியவாளாகிய பின்பு, நொண்டிப் பெண் என்று யாரும் கட்டிக் கொள்ளாவிடில், படிச்சிருந்தால் தன் வரைக்கும் அவள் தானே சமாளித்துக் கொள்ளுவாள், இல்லையா?" என்று ஆரம்பித்தாள்.

காந்திமதியின் யோசனை கூறுவதாவது, அதைத்தான் கேட்பதாவது என்ற நினைவில் வெகுண்ட அமிர்தம், "தினமும் இந்த நொண்டிக் குட்டியை யார் பள்ளிக்கூடத் திலே கொண்டு விட்டு அழைச்சுக் கொண்டு வர முடியும்! வேலையத்த வேலை. எல்லாம் அவ அப்பன் வந்ததும் தானே படிக்க வைக்கட்டும். நமக்கு இந்த எழவு பொறுப்பெல்லாம் எதற்கு?" என்று ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

அதைக் கேட்ட காந்திமதிக்கு ஏமாற்றமும் கோபமும் தாங்க முடியாமல் வந்தது. அண்ணியுடன் விவாதிப்பதில் லாபம் ஒன்றுமில்லை என்ற காரணத்திற்காகக் கோபத்தை அடக்கிக்கொண்டு என்ன வழிசெய்யலாம் என்று யோசனையில் ஈடுபட்டாள். மலேயாவிற்குச் சென்றிருக்கும் வடிவேலுவுக்கு ஒரு கடிதம் போட்டு,

தமயந்தியைப் படிக்க வைக்க பள்ளிக்கு அனுப்பும்படி சிவானந்தத்திற்குக் கடிதம் எழுதச் செய்வதுதான் தகுந்த வழி என்று முடிவுக்கு வந்தாள் அவள்.

தமயந்திபால் அவள் கொண்டிருந்த சிரத்தையைக் கண்டு விதி சிரித்தது! சில தினங்களுக்குப் பிறகு மலேயாவிலிருந்து சிவானந்தம் பெயருக்கு ஒரு தந்தி வந்தது. என்ன விஷயமோ எனப் பதறிக்கொண்டு அதைப் பிரித்துப் படித்த அவர், அதிர்ச்சியடைந்து போய் கட்டிலின் மீது உட்கார்ந்து விட்டார்.

வெளிநாட்டிற்குப் பொருள் தேடச் சென்றிருந்த வடிவேலு காலரா நோயினால் திடீரென்று மரண மடைந்து விட்டான் என்ற செய்தியை, அவனது நண்பர் களில் ஒருவன் மிகவும் கருத்துடன் அவனது நெருங்கிய உறவினரான சிவானந்தத்திற்குப் பணம் செலவு செய்து தந்தி மூலம் தெரிவித்திருந்தான்.

வடிவேலுவின் மரணம் அவனது மகளின் வாழ்க் கையை மிகவும் அவலப்படுத்தி விட்டது. இனி அந்தச் சிறுமியை வைத்துக் காப்பாற்றும் பொறுப்பு தங்களு டையதாகி விட்டது என்ற உண்மையை அறிந்தவுடன் அமிர்தம் துர்க்கை ரூபம் ஏற்றுக்கொண்டு விட்டாள். "எனக்குத் தெரியும் இப்படி நடக்குமென்று! இந்த வீட்டுக்கு உங்களால் ஆன உபகாரம் இது ஒண்ணு பாக்கியாக இருந்திச்சு" என்று அவள் தன் கணவனை இடித்துக் காட்டி அடிக்கடி சண்டை போட்டு ரகளை செய்தாள்.

அத்துடன் அமைதியடையாது தனது ஏமாற்றத்தையும் வயிற்றெரிச்சலையும் அந்தச் சிறுமியிடம் காட்டிப் பழி தீர்த்துக் கொண்டாள்.

அதன் பயனாகத் தமயந்தி முன் போல், மற்ற குழந்தை களுடன் சேர்ந்து உட்கார்ந்து உணவு, உட்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. "மோகனாவுக்கும் விஜயாவுக் கும் போடுவது போல் நெய்யும் தயிரும் இவளுக்கும் போடக் கட்டுப்படியாகுமா? எல்லோரும் சாப்பிட்ட பிறகுதான் தமயந்திக்குச் சாப்பாடு போட வேண்டும்" என்று காந்திமதிக்கு உத்தரவு போட்டிருந்தாள். அமிர்தம் அத்துடன் நிற்கவில்லை. முன்பெல்லாம் வடிவேலு பெண்ணுக்காகப் பணம் அனுப்பி வந்தான். அதனால் நமக்கென்ன என்று அவள் வாளா இருந்தாள். இனியும் அவ்வாறு இருந்தால் சரியாகுமா? தின்கிற சோற்றுக்கு ஏதாவது செய்து தொலைக்கட்டும் என அவளை விளையாட விடாது வேலைகளில் ஏவிக் கொண்டிருந்தாள்.

மாமியின் கோபத்திற்குப் பெரிதும் அஞ்சிய அந்தச் சிறுமி, தனது நொண்டிக் காலை இழுத்துக் கொண்டு, உடனுக்குடன் தனக்கிட்ட வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. எப்பொழுதாவது தான் குறிப் பிட்ட காரியத்தைச் செய்ய சாத்தியப்படாது தமயந்தி நிணறினால், அமிர்தத்திற்குக் கோபம் தாள முடியாது போய் விடுவது வழக்கம், "சாப்பிட வயதாக வில்லையா? இதைச் செய்ய என்ன கொள்ளை! நொண்டிப் பிணமே! நீ செத்து அழிஞ்சிருக்கப் படாதா? என் வயிற்றெரிச்சலை கொட்டிக்கொள்ள வந்திருக்கிறாய்!" என்று இரைந்து அந்தச் சிறுமியின் தளிர் உள்ளத்தைத் துயரத்தில் நோகச் செய்தாள்.

அன்றாடம் குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாது தத்தளித்துக் கொண்டிருந்த சிவானந்தத்திற்கு,

தமயந்தி பெரும் பாரமாகத் தென்பட்டாள். "என்னால் முடியாது என்று முதலிலே உதறிக்கொண்டு வந்து விடாமல் என்னத்துக்கு அழைத்து வந்தோம்?" என அவர் தமது முட்டாள் தனத்தை எண்ணி வருந்தினார். வாழ்வு முழுவதும் பெரும் சுமையாக வந்து உட்கார்ந்து கொண்ட அந்தச் சிறுமியை அவர் வெறுத்தார். தமது வெறுப்பை வார்த்தைகளால் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டதுடன் திருப்தியடையாது, சமயம் வந்த பொழுதெல்லாம், நண்பர்களிடம், 'என்ன செய்கிறது? தங்கச்சி மகள் என்கிற உறவு விட்டுப் போகுதா? எனக்கு இருக்கிற பந்தம் போதாதுன்னு இதைவேற சுமத்திக்கிட்டு இருக்கிறேன்" என்று தாம் கஷ்டப்பட்டுப் புரிந்துவரும் கடமையைப் பறைசாற்றிக் கொண்டார்.

வடிவேலுவின் மரணத்திற்குப் பிறகு அண்ணனும் அவர் மனைவியும் தமயந்தியிடம் நடந்து கொண்ட முறையை காந்திமதியால் தாளவே முடியவில்லை.

"அண்ணி! விஜயா, மோகனா இவர்களைப் போல் தமயந்தியும் விவரம் தெரியாத பச்சைக் குழந்தைதானே! அவளுக்கு வீட்டு வேலைகள் செய்யத் தெரியும் வயசா? ஏன் இப்படிப் பாரபக்ஷமாக நடந்துக்கறீங்க?' என்று அமிர்தத்திடம் சண்டையிட வேண்டுமென்று அவளுக்கு எத்தனையோ முறைகள் ஆத்திரம் பற்றிக்கொண்டு எழுந்தது. அதே போன்று "அண்ணா! இப்படி ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துக்கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லையா? யார் குழந்தைக்கு உபகாரம் செய்து விட்டீங்க? உங்க தங்கச்சி மகளை வைத்துக் காப்பாற்றுவது உங்கள் கடமை இல்லையா?" என்று சிவானந்தத்திடம் கேட்க வேண்டும் என்றும் அநேகம் தடவைகள் அவள் சினத்தினால் துடித்தது உண்டு. ஆனால், எவ்வாறு அண்ணனிடமும், அவர் மனைவியிடமும் சண்டையிட்டால் வீணாக தமயந்தியின் வாழ்க்கை முன்னைவிடப்

பயங்கரமாகி விடக்கூடும் என்ற பயத்தில் அவள் பொறுமையுடையவளாய் இருந்தாள்.

அன்றைய காலை நடந்த ஒரு சிறு சம்பவத்தைக் கண்டபின்பு அவளால் மேலும் பொறுமையுடன் மௌனமாக இருக்க முடியவில்லை. பள்ளிக்கூடம் போகத் துடித்த தன் இரு பெண்களுக்கும் கூந்தலை வாரிச் சிங்காரித்து விட அமிர்தம்மாள் கூடத்துத் தரையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அதற்குப் பிறகுதான் அவளுக்கு அலமாரியிலிருந்த எண்ணெய்ச் சீசாவைப் பற்றிய ஞாபகம் வந்தது. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அசைய மனமின்றி, "ஏய் தமயந்தி, அந்த அலமாரியிலிருந்து அந்த எண்ணெய் பாட்டிலை எடுத்துவா." என உத்தரவிட்டாள். மாமியின் கட்டளையைச் சிரமேற் தாங்கிக் கொண்டு எழுந்து நின்று தமயந்திக்கு அலமாரியின் இரண்டாவது தட்டு எட்ட வில்லை.

"எடுத்து வாடி சீக்கிரம்!" என்று கர்ஜித்த அமிர்தத்தின் குரல் தொடர்ந்தாற் போல் எழவே, பயத்துடன் தட்டிலிருந்த சீசாவைத் தாவி எடுத்தாள். மறுகணம், ஊனமாயிருந்த கால் இடறி எண்ணெய்க் குப்பியைக் கீழே தவறவிட்டுத் தானும் விழுந்து விட்டாள். தரையெல்லாம் எண்ணெய்ப் பெருக ஓடவிட்டு, சீசா உருண்டு முற்றத்தில் போய் விழுந்து, சுக்கல் தூளாக உடைந்தது. முதல்நாள் வாங்கி வைத்த எண்ணெயை ஒரு விநாடியில் நாசமாக்கி விட்டதைக் கண்ட அமிர்தத்தினால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

"அடிப்பாவி!" எனக் கத்திக் கொண்டு அவன் துள்ளி எழுந்தாள். அது சமயம் ஏதோ செய்ய உள்ளே நுழைந்த சிவானந்தம், தாம் அரும்பாடுபட்டுச் சம்பாதித்து வந்த பணம், எண்ணெய் உருவத்தில் தரையெல்லாம் வழிந்து நாசமாகி விட்டதைத் தம் கண்களாலேயே காண நேரிட்டது.

"பார்த்துக்குங்க, நான் சொன்னால் பொய்யினு தோணுது. மாடு போல் வயசு. ஆனாலும் உடம்பிலே பயமே கிடையாது. சீசா எண்ணெயையும் ஒரு நொடியிலே பாழாக்கி விட்டா இந்தப் பாவி மகள்" என்று கோபத்துடன் இரைந்து கத்தினாள் அமிர்தம்.

இந்த வார்த்தைகள் சிவானந்தத்தின் கோபத்திற்குத் தூபம் போட்டது போல் ஆகிவிடவே, அவர் என்ன செய்கிறோம் என்ற நினைப்பின்றி, முற்றத்தில் கிடந்த விறகுக் குச்சிகளில் ஒன்றை ஒடித்து எடுத்துக் கொண்டு தமயந்தியிடம் வேகமாக நெருங்கினார்.

"ஐயோ! இல்லை! இல்லை!" கிறீச்சென எழுந்த அபயக் குரலைக் கேட்ட காந்திமதியின் உள்ளமும் உடலும் ஒருங்கே பதறின. சமையல் அறையிலே சோற்றைக் கிளறிக் கொண்டிருந்தவள். கரண்டியைக் கீழே போட்டுவிட்டு வேகமாகச் சமையலறையிலிருந்து ஓடி வந்தாள். "அண்ணா! நிறுத்துங்க! இந்தப் பாவத்தைக் கொண்டு நீங்க எங்கே தொலைக்கப் போறீங்க!" என்று ஆவேசத்துடன் அலறிய காந்திமதி, ஓடிச்சென்று தமயந்தியை வாரித் தூக்கிக் கொண்டாள். விம்மிக் கொண்டு தன்னை அணைத்துக் கொண்ட அந்தச் சிறுமியின் கண்ணீரை துடைத்துவிட்ட காந்திமதி. கோபத்துடன் அண்ணன் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

"வேணுமென்று செய்தானா அவள்! தவறிப் போய் விட்டது. அதுக்காக, ஒரு தாயில்லாக் குழந்தையை இப்படியா போட்டு அடிப்பாங்க?" என்று சுடச்சுடக் கேட்டாள்.

கோபத்திலே நாம்செய்த காரியம் எவ்வளவு பாதகமானது என்பதை உடனுக்குடனே உணர்ந்து கொண்டு விட்டதனால், சிவானந்தத்திற்கு காந்திமதியின் முகத்தைப் பார்த்து பதில் சொல்ல மனம் கூசியது. "காலை

வேளையிலே இந்தச் சனியனை யார் வேலை செய்யச் சொன்னது?" என் முணுமுணுத்த வண்ணம் அப்பால் திரும்பிச் சென்றார்.

கணவன் தன் தங்கையின் அதட்டலைக் கேட்டு இவ்வாறு தணிந்து பேசியது அமிர்தத்திற்குப் பிடிக்கவேயில்லை. "கொலை பண்ணிவிட்டாற் போல பதறிக் கொண்டு ஓடிவரியே! வச்சுக் காப்பாத்தற அவருக்கு ரெண்டு தட்டு தட்டறதிற்கு உரிமையில்லையா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ரெண்டு தட்டு என்கிறீங்க அண்ணி! இதைப் பாருங்க, நீங்களும் குழந்தைகளைப் பெத்த ஒரு தாயார் தான்" என பதிலளிக்க காந்திமதியின் கண்களில் பொல பொலவென்று நீர் வழிந்தது. வரிகள் போல் சிவப்பாக தமயந்தியின் முதுகின் மீது படிந்திருந்த காயத்தை கரத்தால் மெல்லத் தடவிக் கொண்டு அவளை அணைத்த படியே உள்ளே சென்று விட்டாள்.

அன்று வெகுநேரம் சமையலறையில் தன் மடிமீது தமயந்தியைக் கிடத்திக் கொண்டு அழுது கொண்டே உட்கார்ந்திருந்தாள். இந்த ஒரு முறை அவள் தமயந்திக்காகப் பரிந்து பேசி அண்ணனிடம் சிறிது வெற்றி கண்டுவிட்டாள். ஆனால் இனி எப்பொழுதும் இவ்வாறு வெற்றி ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. நொண்டிக் குழந்தை என்றுகூடப் பாராது கைதொட்டு அடிக்கும் அளவிற்குத் துணிந்துவிட்ட சிவானந்தத்திடம் இனி கருணை என்பதையே பார்க்க முடியாது. அமிர்தத்தைப் பற்றியோ யோசிக்க வேண்டாம்; கண் முன்னால் அந்தப் பெண்ணைக் கொலை செய்தாலும், அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் அவள். வடிவேலு இறந்து விட்டான் என்பதற்காக இவர்கள் இருவருடைய கையிலிருந்த அந்தக் குழந்தை உதைபட்டு மடிவதைப் பார்த்துக்

கொண்டு காந்திமதி வாளா இருப்பதா? இல்லை! இல்லை! தமயந்தியை அவர்கள் இனி துன்புறுத்தா வண்ணம் கட்டிக் காத்திட வேண்டும். அதனால், என்ன வந்தாலும் சரி.

பலவாறு சிந்தித்து, ஒரு திடமான முடிவிற்கு வந்த காந்திமதிக்கு என்றுமே ஏற்படாத ஒரு தனி துணிவு அன்று ஏற்பட்டது. சமையல் வேலையை அவசரமாகக் கவனித்து முடித்ததும் உச்சி வெயிலையும் பாராட்டாது குடத்தை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் புறப்பட்டான்.

வயல் வெளியெல்லாம் சுற்றிவிட்டுக் களைப்புடன் வந்து தெருத் திண்ணைமீது உட்கார்ந்து கொண்டார் சம்பந்த முதலியார். "இந்தா, உன்னைத்தானே! கொஞ்ச குடிக்க சில்லுனு ஒரு லோட்டா தண்ணி கொண்டு வா!" என உத்தரவு போட்டுவிட்டு "உஸ்! அப்பாடி!" என்ற வண்ணம் திண்ணை மீது சாய்ந்து கொண்டார். வயோதிகத்தினால் சில காலமாக முதலியாரது பார்வை சிறிது மங்கிவிட்டிருந்தது. "யாரது! நிலாவிலே நடக்கிறாப் பல இந்த வெயிலிலே நிதானமா நடந்து வரது?" என்று தமக்குள்ளே கேட்டுக் கொண்ட அவர் வீட்டை நோக்கிச் சிறிது தொலைவில் வந்து கொண்டிருந்த ஆசாமியை வெறித்துப் பார்த்தார்.

குளிர்ந்த நீரை வெண்கல லோட்டாவிலே நிரப்பிக் கொண்டு வந்து அருகில் வைத்த அவரது சகதர்மிணி, "யார்? காந்திமதியாட்டம் தோணுதே! ஆமாம், அவளே தான்!" என்றாள் வியப்புடன்.

இடையிலே சுமந்து கொண்டிருந்த நீர்க்குடத்தை இறக்கித் திண்ணை மீது வைத்த காந்திமதி அவர் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"அண்ணாச்சி! உங்ககிட்டத்தான் ஒரு காரியமா வந்தேன். நீங்க மாட்டேன்னு சொல்லாம எனக்கு இந்த உபகாரத்தைப் பண்ண வேண்டும்" என்றாள்.

குழந்தைப் பருவத்திலிருந்து முதலியார் காந்திமதியை வெகுவாக அறிவார். இறந்து போன தமது மகளை அவளது முகம் நினைவு படுத்திக் கொண்டிருந்ததனால் அவருக்கு என்றுமே அவளிடம் அலாதியானதொரு பாசம் உண்டு. மேலும், சமீப காலத்தில் அவளது வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த பலவித கஷ்டங்களையும் அவர் நன்கு அறிந்தவர். அதற்காக அவளுக்காக அனுதாபப் பட்டவர்களில் அவரும் ஒருவர். சூரியகாந்தத்தில் காந்திமதிக்கு அதிக நண்பர்கள் இருக்கவில்லை. அண்ணனிடமோ அண்ணியிடமோ மனஸ்தாபப்பட்டுக்கொண்டு மனம் நொந்து போய்விடும் சமயங்களில் அவள் மனத் துயரத்தை அந்த முதலியார் தம்பதிகளிடம்தான் கூறி ஆறுதல் பெறுவது வழக்கம். வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்களான அவர்கள் இருவரையும் தன் பெற்றோர்களைப் போல் கருதி அவர்களின் புத்திமதிகளுக்குப் பெரும் மதிப்புக் கொடுத்து வந்தாள் அவள்.

அவசியமின்றி நல்ல வெயில் வேளையில் அவள் அவ்வாறு பதட்டத்துடன் வந்திருக்க மாட்டாள் எனத் தமக்குள் எண்ணிக் கொண்ட முதலியார். "என்னால் முடிஞ்சதைச் செய்யறேன், அம்மா! விவரமாச் சொல்" என்றார் அன்புடன்.

காந்திமதிக்குப் பேச முடியாது தொண்டையைத் துயரம் பிடித்துக் கொண்டது. கண்களில் நீர் பொங்கியது. "அண்ணாச்சி! இத்தனை நாளும் நான் என் விஷயமாகத் தான் உங்களிடம் எல்லாம் சொல்லி ஆறுதல் பெற வந்திருக்கிறேன். ஆனால் இன்னைக்கு, நான் வந்திருக்கும் காரியமே வேறு. என்னைப் போல இந்த உலகில்

துர்பாக்கியசாலியாகி, அனாதையாகி விட்டிருக்கும் ஒரு பெண்ணுக்கு நீங்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்க வந்திருக்கிறேன்" என்றாள் தினறிக் கொண்டு.

"இன்னமும் நீ சொல்றது விளங்கலை, அம்மா! ஆதங்கப்படாமல் பூரா விவரமும் சொல்லேன்" என்றார் முதலியார் பதிலுக்கு.

தமயந்தி தன் வீட்டிற்கு வந்ததிலிருந்து ஆரம்பித்து அன்று வரை நடந்த சங்கதிகள் யாவற்றையும் ஒன்று விடாது கூறி முடித்த காந்திமதி முடிவில், "அண்ணாச்சி! உங்களுக்கு எத்தனையோ பெரியமனுஷங்களை நன்றாகத் தெரியும். பட்டணத்திலே இந்த மாதிரி அனாதைக் குழந்தைகளை வைச்சுக் காப்பாத்திப் படிக்க வைக்கிற ஆசிரமங்கள் பல இருக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதிலே எதாவது ஒண்ணுலே இந்தக் குழந்தையைச் சேர்த்துவிட நீங்கதான் உதவி பண்ணனும்." என்றான்.

முதலியார் சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பிறகு பேசலுற்றார்: "காந்திமதி! உன் அண்ணனிடம் இதையெல்லாம் பத்திக் கலந்து யோசிக்காம, நீயா திட்டம் போட்டுட்டியா, பின்னாலே அவன் கோவிச்சுக் கொண்டா நல்லா இருக்குமா?" என்று மெல்லக் கேட்டார்.

"தமயந்திக்கு ஒரு பிடி சோறு போடுவதற்கே அவளை ஒரு சுமை என்று அண்ணா நினைக்கிறார் இந்த லட்சணத்திலே அவளது படிப்பைப் பத்தி அவருக்கு என்ன அக்கறை? அண்ணியைப் பற்றியோ கேட்கவே வேணாம். இந்தக் குடும்பத்துக்கு நான் ஒருத்தி உழைச்சுப் போட்டு ஓடாகிறது போதாதா? இதோ பாருங்க அண்ணாச்சி, உங்க தங்கச்சியை! பத்து பாத்திரம் தேச்சு வீட்டைப் பெருக்கி மொழுகி, விரல் எல்லாம் தேஞ்சு

போய்க் கிடக்கிறது! கல்வி அறிவில்லாத முட்டாளாக நான் இருந்ததனாலே தானே எனக்கு இந்தக் கதி வந்தது? இந்த அவல வாழ்வு என் கட்டையுடன் போகட்டும். என் கண்மணி தமயந்திக்கு இந்தக் கதி நேரக் கூடாது, அண்ணாச்சி! நீங்க மட்டும் இந்த உதவியைச் செய்தால் ஆயிரம் கோயில்கள் கட்டின புண்ணியம் உங்களுக்கு ஏற்படும். அவளுடைய அறிவுக் கண்ணைத் திறக்க உதவி செய்வதற்காக நான் உங்கள் பாதத்திலே விழுந்து கும்பிடறேன்!" என்று கூறிவிட்டு காந்திமதி விக்கி விக்கி அழுதாள்.

முதலியாரின் மனம் அனலில் இட்ட மெழுகாய்க் கரைந்து போயிற்று. காந்திமதி கூறியபடி நகரத்திலிருந்த சில பெரிய மனிதர்களை அவர் வெகுவாக அறிவார். கொஞ்சம் சிரமப்பட்டால் அந்தப் பெண்ணிற்கு உதவி செய்ய முடியும். ஆகவே அவர், "காந்திமதி! துயரப் பட்டாதே அம்மா. என்னால் முடிஞ்சதை உனக்குச் செய்கிறேன். ஆனால் உன் அண்ணன் நம்மிடம் மனஸ் தாபம் கொண்டுவிடப் போகிறானே என்று மட்டும் எனக்கு அச்சமாக இருக்கிறது" என்றார்.

"காந்திமதி ஆறுதல் அடைந்தவளாக எழுந்து வீட்டிற்குப் புறப்பட குடத்தை எடுத்துக் கொண்டாள். "என் அண்ணனை நானே எதிர்த்துக் கொண்டு இந்தக் காரியம் செய்யப் புறப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு என்னத்துக்கு அச்சம்! நீங்க கொஞ்சமும் கவலைப்படாதீங்க! எனக்கு இந்த விஷயமாக யார் உபகாரம் செய்தாங்கன்னு ஒருத்தருக்கும் தெரியப் போறதில்லை. நான் வரேன் அண்ணாச்சி நீங்க மறக்காம சீக்கிரம் கவனியுங்க" என்று கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டாள்.

வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த காந்திமதி கூடத்திலிருந்து எழுந்த ஆடவனின் குரலைக் கேட்டு கலவரமடைந்து போனாள். "என்ன, நல்ல வெயிலில் தண்ணி

எடுக்கப் போயிருந்தாப் போல காணுதே! சவுக்கியந் தானே?" என விசாரித்த வண்ணம், குதப்பிக் கொண் டிருந்த வெற்றிலையைக் காரி முற்றத்தில் உமிழ்ந்து விட்டு எழுந்தான் நமச்சிவாயம்.

அமிர்தத்தின் அருமைச் சகோதரனான அவனைக் கண்டதுமே காந்திமதிக்கு ஒருவித அச்சம் ஏற்பட்டது. எதிர்பாராத அவனது வரவு நல்லதற்கு அடையாளம் இல்லை என்று அவளது உள்ளுணர்ச்சி எச்சரிக்கவே "சௌக்கியந்தான் உங்க புண்ணியத்திலே" என பதில் அளித்துவிட்டுச் சமையலறைக்குள் சென்று மறைந்து கொண்டாள், வெகு நேரம்வரை அவள் நெஞ்சு விவரிக்க இயலாத ஒரு பயத்தில் 'படபடவென்று' அடித்துக் கொண்டது.

அமிர்தத்தின் அன்புக்கினிய சகோதரன் சில விசேஷ குணங்களுக்கு இருப்பிடமாக இருந்தான். தங்கையிடம் அவனுக்கு தனிப்பட்டதொரு செல்வாக்கு இருந்தது. அண்ணனைக் கண்டவுடன் அமிர்தத்திற்குக் கொஞ்ச நஞ்சமிருக்கும். சுயபுத்தியும் மங்கிவிடும். அவன் கூறுவது யாவும் கலப்பற்ற உண்மை என்றும், அவனது அபிப் பிராயங்கள் எல்லாம், தகர்த்தெறிய முடியாத பொன் மொழிகள் எனவும் எடுத்துக்கொண்டு அண்ணனது கைப் பொம்மையாக விரைவில் மாறி விடுவது வழக்கம். தன்னுடைய இந்த அலாதியான அந்தஸ்தை, நமச்சிவா யம் ஒருநாளும் வீணாக்கியதே இல்லை.

சகோதரியின் வீட்டிற்கு விருந்தாளியாக வந்து தங்கும் ஒவ்வொரு சமயமும் அவன் அமிர்தத்தின் கோபத்தைப் பலவழிகளிலும் தூண்டி விட்டுக் குடும்பத்திற்குள் பெரும் குழப்பத்தை உண்டாக்கிவிட்டுப் போவது வழக்கம்.

அமிர்தத்தை விட அவள் சகோதரன் பல வருஷங் களுக்கு மூத்தவன். துள்ளித் திரியும் வாலிப வயதில் சுயேச்சையானதொரு வாழ்விலே ஏற்பட்டிருந்த மோகத் தின் காரணமாக, விவாகத்தைப் பற்றி அசட்டையாக இருந்து விட்டிருந்தான்.

வாலிபமிடுக்கு ஒடுங்கி வயோதிகத்தின் தளர்ச்சி மெல்லத் தோன்றத் தொடங்கிய நாற்பத்தைந்தாவது வயதில் விவாகம் அவனை அசட்டை செய்து விட்டிருந் தது. கல்யாணச் சந்தையிலே தனக்கிருந்த மதிப்பு மங்கி அஸ்தமித்து விட்டது என்பதை அறியத் துவங்கியதி லிருந்து அவனது கண்கள் அவ்வளவு காலமாக காணத் தவறியிருந்த பெண்மையின் அழகைத் துழாவி ஆராயும் வேலையில் ஈடுபட்டன. இளவயதுடைய எந்தப் பெண் மணியும் அவனுக்கு அப்ஸரஸ் மங்கைபோல் பேரெழி லுடன் காணப்பட்டாள்.

காதுப்புறமும், நெற்றி ஓரமும் வெளுத்து விட்டிருந்த சிகையும், சதைப்பற்று அற்றுச் சுருக்கங்கள் காணத் தலைப்பட்ட ஒட்டிய தாடையும் கொண்ட தனது தோற்றத்தைப் பற்றி சிறிதும் எண்ணாமல், அவன் ஆற்றங் கரையிலும் கடைத்தெருவிலும் கும்பலாகக் காணப்படும் இளம் பெண்களைக் கூர்ந்து பார்க்கும் ஒரு துர் வழக்கத் திற்கு அடிமையாகி விட்டிருந்தான்.

இதனால் அவன் எண்ணில்லாத பல தொந்தரவு களுக்கு உட்படவும் நேர்ந்தது; ஒரு முறை ரஸ்தாவிலேயே வெளியில் தன்னந்தனியாக நடந்து கொண்டிருந்த இரண்டு இளம் பெண்களை அவனது கண்கள் கண்டு

விட்டன. அவ்வளவுதான்! ஒயிலாகத் தலுக்கு நடை போட்டுச் சென்ற அந்த யுவதிகள் பின்னால் காந்தத் தினால் கவரப்பட்ட இரும்புத்தூளைபோல் மயங்கி எரிக்கும் சூரியனையும் பொருட்படுத்தாமல், மூன்று மைல்கள் தூரம் கால்கடுக்க வேகமாகப் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தான்.

வெயிலில் ஏற்பட்ட களைப்பினால் மேலே நடக்க முடியாது அந்தப் பெண்கள் இருவரும் ரஸ்தா ஓரத்தி லிருந்த ஆலமரம் ஒன்றின் நிழலிலே இளைப்பாற உட் கார்ந்தனர். அதைக் கவனித்த நமச்சிவாயம் மிகவும் பரபரப்புடன், மரத்தை நெருங்கினான். அவர்களில் ஒருத்தி எதேச்சையாக திரும்பிப் பார்த்தாள். அவ்வளவு தான்! நமச்சிவாயத்திற்குக் காலடியிலிருந்த தரை நழுவி திடீரென ஒரே வினாடியில் பாதாள உலகைப் போய் அடைந்து விட்டதைப் போன்று ஒரு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. மஞ்சள் அரிதாரத்தை முகம் முழுவதும் பூசிக்கொண்டு பெண் வேடம் பூண்டு கொண்டிருந்த பகல் வேஷக்காரன் ஒருவன் அவனைப் பார்த்துப் பல்லை இளித்தான்!

நமச்சிவாயம் நிதானித்து, மேலே யோசிக்கு முன் "ஐயா நம்பளையே தேடிக்கிட்டு வந்திருக்காப்பல இருக்கு. எழுந்திருடா, செங்கமலம்" என உற்சாகத்துடன் கத்திய மற்றொரு வேஷக்காரன் துள்ளி எழுந்து நின்றான். வலுவிலே வந்து சிக்கிக் கொண்ட அவனிடம் "பொங்கல் இனாம்" வாங்காது விடுவதில்லை என்று சபதம் செய்து கொண்டவர்கள் போல் அந்த வேஷக்காரர்கள் இருவரும் அவனைச் சுற்றி வந்து பாட்டுகள் பாடி, கும்மியடித்து கூத்தாடத் துவங்கி விட்டனர். இதற்குள் ஒரு பெரும் கூட்டம் அங்கே கூடி விட்டது. இவ்வளவிற்கும் காரண பூதமாக இருந்த நமச்சிவாயம் இந்த ஆபத்தை வளர விடாது தடுத்துத் தன்னை விடுவித்துக்கொள்ள, வெற்

றிலை பாக்குக்காகச் சேமித்து பத்திரமாக வைத்திருந்த அரைரூபாய் நாணயத்தை அந்த வேஷக்காரர்களுக்கு இனாம் கொடுத்து வெளியேற வேண்டியிருந்தது.

இப்படி அடிக்கடி அநேக எதிர்பாராத விபத்துகளில் சிக்கிக் கொண்டும், நமச்சிவாயத்தை அந்தச் சபலம் விடவேயில்லை. சங்கடங்களும் தொந்தரவுகளும் அதி கரிக்க அதிகரிக்க, அவன் ஆசையும் தீவிரமாக வளர்ந்து கொண்டே போயிற்று.

அவனது கிராமத்தில் அவனைவிட வயதில் மூத்தவர் களுக்கும், நடை தளர்ந்து, தலை தும்பைப் பூவைப் போல் வெளுத்து விட்டிருந்த படும் கிழங்களுக்கும் கூட விவாகங்கள் நடந்தன. ஆனால், யாரும் நமச் சிவாயத்திற்குப் பெண் கொடுப்பதாகத் தப்பித் தவறிக் கூட வாயை அசைத்து விடவில்லை. அதன் காரணத்தை அவன் நன்கு அறிவான். அந்தக் கிழ மாப்பிள்ளைகளிட மிருந்த பணம் என்னும் கவர்ச்சி நிறைந்த பொருள் அவனிடம் சிறிதும் இல்லை. கல்யாணம் என்பதற்கு வேண்டிய வாலிபம், அந்தஸ்து, பணம் என்ற மூன்று அம்சங்களில் ஒன்றுகூட இல்லாத நமச்சிவாயத்தைக் கண்டு பெண்களைப் படைத்த பெற்றோர்கள் ஒதுங்கிக் கொண்டு விட்டனர். கல்யாணச் சந்தை தன்னை கல்தா கொடுத்தனுப்பி விட்டது என்பதை அறிந்து கொண்ட அவன் வேறு வகையின்றி, பிரம்மச்சரியத்தை மேற் கொள்ள வேண்டியிருந்தது.

நமச்சிவாயத்தின் பொருளாதார நிலைமை படுமோச மாகப் போனதற்கு அவனேதான் பொறுப்பாளி. எந்தக் காரியத்தையும் அவன் வாழ்க்கையிலே அது நாள் வரை நிரந்தரமாக ஈடுபட்டுச் செய்தவனல்ல. எந்தத் தொழில் மீதும் அவனுக்கு சீக்கிரம் சலிப்பு ஏற்பட்டு விடும்.

ஒரு சமயம் சில தினங்கள் கிராமத்திலிருக்கும் மிராசுதார் ஒருவருக்கு நிலங்களை மேற்பார்வையிடும்

வேலையைச் செய்து கொண்டிருப்பான். சில நாட்களில் அந்த வேலை அவனுக்கு அலுத்துவிடும். அதை உதறி விட்டு, மளிகைக் கடையொன்றில் கணக்கு எழுதும் தொழிலில் அமர்ந்து விடுவான். ஒரே மாதத்தில் அந்த வேலை அவனுக்குக் கசந்து விடும். அதை விட்டுத் தொலைத்து விட்டு, வேறு ஒரு வேலையில் ஈடுபடுவான். இவ்வாறு ஒன்றிலும் நிரந்தரமாக இருந்து தொழில் செய்யாது, பூவுக்குப் பூ தாவும் தேனீ போல் திரிந்து கொண்டிருந்ததனால் சில சமயங்களில் ஒரு இடத்திலும் வேலை அகப்படாது போய் விடுவதும் உண்டு. அப்படி நிலைமை மிகவும் மோசமாகி விட்டால், வேலை நெருக்கடி தீரும் வரை தன் அருமைச் சகோதரி வீட்டில் விருந்தாளியாக வந்து உட்கார்ந்து கொண்டு விடுவான்.

அமிர்தம்மாளின் வீட்டிற்கு அவன் தற்சமயம் செய் திருந்த விஜயம், அவ்வாறு நெருக்கடியினால் ஏற்பட்ட தல்ல. சமீப காலத்தில் கடைசியாக அவன் அமர்ந்து கொஞ்சம் கவனத்துடன் செய்து வந்த தொழில் அவனுக்கு முன்னவைகளைக் காட்டிலும் வெகுவாகப் பிடித்திருந்தது. அதை சீக்கிரமாக உதறிவிட்டு, வேறு வேலையில் அமரும் உத்தேசம் அவனுக்கு இருக்க வில்லை. அருகிலிருந்த நகரத்துப் புடவைக் கடை யொன்றில் விற்பனை ஆளாக அவன் வேலை செய்து கொண்டிருந்தான்.

மாதம் இருமுறை புடவைகளை மூட்டையில் கட்டிக் கொண்டு, அருகிலிருந்த கிராமங்களுக்கு விற்பனை செய்யப் புறப்படும் வேலை அவனுக்குக் கொஞ்சமும் அலுக்கவேயில்லை. நெற்றியில் தம்படி அளவு குங்குமத் தைப் பொட்டு வைத்துக் கொண்டு, வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு, புடவை மூட்டை யைத் தோளில் சுமந்து கொண்டு, காலை பத்து மணி சுமாருக்குப் புறப்படுவான். அதுதான் சரியான சமயம்

என்பது அவன் அனுபவத்திலே கண்டு கொண்டிருந் தான், வயலுக்கோ, கடைகளுக்கோ, தங்கள் அன்றாட அலுவலைப் பூர்த்தி செய்யக் கணவன்மார்கள் வெளியே புறப்பட்டுச் சென்றதும், அடுப்பிலே பானையில் நீரைக் கொதிக்கப் போட்டு விட்டு, பெண்மணிகள், வாசற் பக்கம் தலை நீட்டுவார்கள். "புடவை! புடவை!" என்று எட்டு திக்குகளில் கம்பீரமாக ஒலிக்கும் அவனது குரலைக் கேட்டு திரும்பிப் பார்க்காதவர்கள் ஒருவருமே இருக்க மாட்டார்கள்.

வழ வழவென்று மெழுகிக் கோலமிட்டிருக்கும் தெருத் திண்ணையொன்றில் ஜமுக்காளத்தை விரித்து, தனது கடையைப் பரப்பி விடுவான் நமச்சிவாயம். பலாப் பழத்தை ஈ மொய்ப்பது போல், பெண்களின் கூட்டம் அவனைச் சுற்றிக் கொண்டு விடும். 'முத்துக் கண்டாங்கி பாக்குசரம், டெல்லி கொட்டடி, ரெட்டைப் பேட்டை' என்று நெட்டுருப் பண்ணியிருந்த பெயர்களை ஒரே மூச்சில் ஒப்பித்து விட்டு, அவைகளைப் பிரித்து ஜமுக் காளத்தின் மீது அலட்சியமாகப் போடுவான்.

வியப்புடன் அந்த வர்ணச் சேலைகளை அவர்கள் ஆசை தீரப் பார்த்து நிற்கும் அதே சமயம், நமச்சிவாயத் தின் கண்களும் சிந்தனையும் ஒரு பெரும் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடக்கும். ஒவ்வொரு பெண்ணிடமும் சிருஷ்டி கர்த்தா ஏதோ ஒருவித அழகை ஏற்படுத்தியிருக்கிறானே என்பதுதான் அவனது ஆராய்ச்சிக்குட்பட்ட மாபெரும் விஷயம்.

அந்தப் பெண்களில் யாரும் புடவையை வாங்காது போனாலும் அவன் வருத்தப்பட்டது கிடையாது. உண்மையில் புடவையைப் பார்த்து விட்டுத் தங்களுக்கு வாங்கக் கையில் பணமில்லையே என ஏக்கத்துடன் பெருமூச்செறியும் பெண்களிடம் அவனுக்கு அபாரமான அநுதாபம். புடவைகளைத் தூக்கிக் கொண்டு திரிந்து

விற்பனை செய்யும் இந்தத் தொழிலில் இல்லாமல் அவன் மட்டும் புடவைக் கடையின் முதலாளியாக இருந்தானானால், முத்துக்கள் போல் பற்கள் தெரிய மெல்லச் சிரிக்கும் அழகிய பெண் ஒருத்தியும் புடவை வாங்கப் பணமில்லை என ஏங்கிப் பெருமூச்செறியும்படி பார்த்துக் கொண்டிருக்க மனம் சகிக்க மாட்டான். 'முத்துப் பல்லழகி மேனியை அலங்கரிக்காது பீரோவிலே அடுக்கிக் கிடப்பதால் என்ன பயன் இவைகளுக்கு' எனக் கனிந்து உருகிப் போய், அவ்வளவையும் எடுத்து ஆளுக்கு ஒன்றாக தானம் செய்து விட்டிருப்பான். ஆனால், அவ்வாறு செய்ய அவன் முதலாளி அல்லாததால், வாங்க முடியவில்லையென வருந்தும் அந்தக் கட்டழகிகளின் ஏக்கத்திற்கு எதிரொலி போன்று தானும் பெருமூச்சுவிட்டு வருந்தி "அடுத்த தடவை வரும்போது கொண்டு வருகிறேன்" என சமாதானம் கூறிவிட்டு உச்சிப் பொழுது வருவதற்குள் கடையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவான்.

தினமும் புதிய முகங்களும் புதிய குரல்களும் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்த இந்தப் புதிய வேலை அவனுக்கு மிகமிகப் பிடித்திருந்தது.

நமச்சிவாயத்தின் குண விசேஷத்தை காந்திமதி நன்கு அறிவாள். கொஞ்சமும் வெட்கமின்றி சகோதரியின் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு நாள் கணக்கிலே விருந்தாளியாகத் தங்கி விடுவதுடன் அல்லாமல் தங்கைக்கு இல்லாததும் பொல்லாததும் கூறி, வீட்டில் சண்டைகளை உண்டாக்கி விடும் அவனை அவள் அறவே வெறுத்தாள். மேலும், அவனுக்கு அந்நியப் பெண்களைக் கண்டால் சிறிது புத்தி தடுமாறி விடும் என்ற அவனது அற்ப ஆசையையும் அவள் அறிந்திருந்தாள். முந்திய தடவைகளில் சிவானந்தத்தின் வீட்டிற்கு அவன் வந்திருந்தபோது அவனது நடத்தை பற்றி காந்திமதி சந்தேகிக்கும் அளவு சற்று ஒழுங்கு தவறியே நடந்து கொண்டிருந்தான். அமிர்தத்தின் வாய்க்கு அஞ்சி அவள் அதைக் கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. சண்டைகளை உற்பத்தி செய்து வேடிக்கை பார்க்கும் துர்க்குணமும், சந்தேக நடத்தையுடையவனுமான நமச்சிவாயத்தின் வரவு கண்டு காந்திமதி கிலியடைந்து போனதில் கொஞ்சமும் வியப்பேயில்லை.

பூழக்கடையிலிருந்து உள்ளே வந்த அமிர்தம், சாவகாசமாகக் கூடத்துத் தரையில் அண்ணன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள், ஊரிலிருந்து அப்பொழுது தான் வந்திருந்த அவனிடம் சேமம லாபங்கள் விசாரித்து விட்டு "நீங்க இப்படியே காலம் கடத்தறதுன்னு வச்சுட்டீங்களா? காலா காலத்திலே ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்ளாமல் இப்படி இருக்கிறது நல்லாவா இருக்கு?" என்று அவனைக் கண்ட பொழுதெல்லாம் ஆரம்பிக்கும் பல்லவியை எடுத்தான்.

"ஆமாம்! கல்யாணம் கட்டிக்கொண்டு நீங்க எல்லோரும் சுகத்தைக் கண்டு விட்டீங்க! அந்தப் பேச்சை விட்டுத் தள்ளு, அமிர்தம்!" என பதில் அளித்த நமச்சிவாயம், தங்கையின் சம்பாஷணையை மாற்றும் நிமித்தம் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனது கவனம் தாழ்வாரத்திலே அது சமயம் தத்திக் கொண்டு வந்து உட்கார்ந்த தமயந்தி மீது விழுந்தது.

"இது யாரு இந்தப் பொண்ணு!" என ஆர்வத்துடன் வினவினான். அன்று காலையில் நடந்த சம்பவத்திலேயே வெகுண்டு போயிருந்த அமிர்தத்திற்கு அந்த வார்த்தைகள் எரியும் தீயில் வார்த்த எண்ணெயைப் போன்றிருந்தன; உடனே அவள் ஆரம்பித்து விட்டாள்.

தமயந்தி அங்கு வந்ததிலிருந்து அன்றுவரை நடத்த விஷயங்களை ஒன்று விடாது அமிர்தம் வாயிலாகக்

கேட்ட நமச்சிவாயம், முற்றத்திற்கு விரைந்து; வாயிலிருந்த வெற்றிலையைக் காறி உமிழ்ந்து விட்டு வந்து உட்கார்ந்து கொண்டு, "அமிர்தம்! உனக்குக் கொஞ்சமும் புத்தி கிடையாது. பெற்ற பிள்ளைகளே இந்தக் காலத்தில் தாய் என்கிறதை மறந்து நன்றியற்றவங்களாகத் திரிகிறாங்க. யாரோ பெத்துவிட்ட இந்த சனியனை வச்சுக் காப்பாத்த தற பொறுப்பை நீ ஏன் ஏத்துக் கொண்டாய்?' என்றான் உரத்த குரலில்.

அடுப்பருகிலே கை வேலையாக இருந்த காந்திமதி யின் காதுகளில் அந்த வார்த்தைகள் நன்கு விழுந்தன. "ஏன் ஏற்றுக் கொண்டாளா? வடிவேலு கொடுத்த பணத்தைக் கண்டு மயங்கி ஏற்றுக் கொண்டாள். பண விஷயத்தைப் பற்றி அவள் சொல்லாவிட்டாலும், நான் சொல்லுகிறேன் கேட்டுக் கொள். வடிவேலு தன் பெண் ணிற்காக மாதா மாதம் செலவிற்குப் பணம் வேண்டியது அனுப்பிக் கொண்டிருந்தான். போகும் போது மொத்த மாகப் பெருந்தொகை ஒன்றும் கொடுத்து விட்டுப் போயிருந்தான். உன்னுடைய அருமைத் தங்கை, கருணை மிகுதியினால் அந்த அனாதைக் குழந்தைக்கு இனாமாகச் சோறு போட்டு விடவில்லை" என்று கூக்குரலிட்டுக் கத்த வேண்டும் போல் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. பல்லைக் கடித்துக் கொண்ட அவள், அருகி லிருந்து விறகுக் குச்சி ஒன்றை ஆத்திரத்தில், படக்கென ஒடித்து அடுப்புக்குள் திணித்து விட்டு, மேலே சம்பா ஷணையைக் கவனிக்க எழுந்து கதவு அருகில் வந்து நின்றாள்.

நமச்சிவாயத்தின் மூளையில் மின்னல் போல் ஒரு யோசனை உதயமாயிற்று. "அமிர்தம்! எனக்கு ஒரு யோசனை தோணுது. அதுபடியே செய்தால் உனக்கும் பொறுப்புத் தொலையும், லாபமும் உண்டு" என்றான்.

"அது என்ன சொல்லுங்களேன். நீங்க வந்து எப்பவா வது எனக்கு எடுத்துச் சொன்னாதான் உண்டு. இல்லா விட்டால், மூளையற்ற மண்டுப் பெண்பிள்ளை நான் என்ன கண்டேன்?" என்றாள் அமிர்தம் பதிலுக்கு.

குரலைத் தாழ்த்திக் கொண்டே நமச்சிவாயம் சுற்றிலும் பார்த்துவிட்டு, "இந்தக் காலத்திலே ஜாதி மதம் எல்லாம் பார்க்கிற வழக்கம் குறைஞ்சு போச்சு. அதனாலே இந்த யோசனையில் தப்பு ஒண்ணும் இருக்கிறதா எனக்குத் தோணலை" என்ற பூர்வ பீடிகையுடன் நிறுத்தி விட்டு, தொண்டையைக் கணைத்துக் கொண்டான். அவன்கூறி முடிக்குமுன் காந்திமதியின் இருதயம் பயத்திலே வெடித்து விடும் போல் தீவிரமாக அடித்துக் கொண்டது.

"நம் கிராமத்தில் காரைச் சீமை மரைக்காயர்னு ஒருத்தர் இருந்தாரே, ஞாபகம் இருக்கிறதா? அவர் மச்சான் ஒருத்தர் ஹைதராபாத்திலே தோல்கடை வச்சு ஏராளமாகப் பணம் சேர்த்திருக்கிறார். அவருக்குக் குழந்தையின்னா உயிரு. அத்தனை பணமிருந்தும் தன்னு துன்னு சொல்லிக்கொள்ள ஒரு குழந்தை பிறக்கவில்லை. போன தடவை நம்ப கிராமத்திற்கு அவர் வந்தபோது ஒரு விஷயம் நடந்து ஊர் திமிலோகப்பட்டுக் கொண் டிருந்தது. வாய்க்கால் கரையோரமிருந்த அரசமரத்தடி யிலே, ஒரு பச்சைக் குழந்தையை யாரோ போட்டு விட்டுப் போயிருந்தாங்க. போலீஸ் கிலீஸ் எல்லாம் வந்து ஒரே அமர்க்களம் ஆயிடுத்து. ஒரு வாரம் தேடி னார்கள். குழந்தையின் தாயைக் கண்டு பிடிக்கவில்லை. ஹைதராபாத் மரைக்காயருக்கு ஒரு யோசனை தோணவே, அந்தக் குழந்தையைத் தாம் எடுத்து வளர்க்கிற தாக ஒப்புக்கொண்டு அப்படியே எழுதிக் கொண்டு விட்டு வாங்கிக் கொண்டார். அது ஆண் குழந்தை. அதுக்கு ஜோடியாக வளர்க்க ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டுக் கொண்டு

வெகுவாய் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த குட்டியைப் பார்த்தால் அவருக்கு ரொம்பப் பிடித்து விடும். பாவம், பிள்ளையில்லாத மனுஷன், பிழைத்து போகட்டும் குழந்தையை அவர் சும்மா வாங்கிக் கொண்டுவிட மாட்டார். ஏதாவது ஈடாகப் பணம் கொடுத்து விடுவார். ஆயிரம் ரெண்டாயிரம் வரைகூடப் பணம் பெயர்ந்து விடும். உடனே ஹைதராபாத்துக்குக் கூட்டிக் கொண்டு போய்விடுவார். உனக்குத் தொல்லை யும் விட்டது. அந்தக் குழந்தைக்கும் தரித்திரம் விட்டது" என்றான் உற்சாகத்துடன்.

ஆயிரம் இரண்டாயிரம் என்றதும் அமிர்தத்தின் கண்கள் ஆச்சரியத்துடன் விரிந்தன. "வீட்டிலே இவர் ஒப்புக்க மாட்டார் இதுக்கெல்லாம்!' என்றாள் அவள். சட்டெனக் கவலையுடன்.

"அதையெல்லாம் பத்தி உனக்கென்ன! உனக்கு சம்மதம் என்றால் காரியத்தை என்னிடம் விட்டுவிடு, நான் கவனிச்சுக்கறேன்" என்றான் கர்வத்துடன் அவன். "இவர் சம்மதிச்சுட்டாக்கூட அப்படி சுலபமா காரி யத்தை நடத்திட முடியாது. அந்தப் பாவி இருக்கிறாளே, அவள்தான் பெத்த குழந்தையைப் போல் பாிஞ்சு கொண்டு சண்டைக்கு வந்து விடுவாளே?" என்றாள்.

"காந்திமதியைத் தானே சொல்றே? பூ! அதையும் என்கிட்ட விட்டுவிடு... நான் கவனிச்சுக்கிறேன்" என்றான் நமச்சிவாயம் வீறாப்பாக.

திடீரென்று அமிர்தத்திற்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இதுவரை அவர்கள் பேசி வந்த அந்த சம்பாஷணை காந்திமதி காதுகளில் பட்டுவிட்டிருந்தால்- என எண்ணித் திகிலுடன், எழுந்திருந்து, சமையலறைப் பக்கம் சென்றாள்.

காந்திமதியை அங்கே காணவில்லை. சமையலறைக் குப் பின்புறமிருந்த கதவு திறந்திருந்தது. மெல்ல வெளியே எட்டிப் பார்த்த அமிர்தம் காந்திமதி பின்கட்டுத் தாழ் வாரத்தில் கிடந்த அம்மியில் அவசரமாகத் துகையலுக்கு அரைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். "கொஞ்சம் மெதுவாகச் செய்யம்மா, குழவி உடைஞ்சிடப் போவுது" என்று அதட்டிவிட்டு, தாங்கள் பேசிய இரகசிய திட் டத்தை அவள் கேட்டுக் கொண்டிருக்கவில்லை என்ற மனநிம்மதியுடன் திரும்பி கூடத்திற்கு வந்தாள்.

உண்மையில் காந்திமதி அம்மிக்குழவி இரண்டாகி விடும்படிதான் ஆத்திரத்துடன் அரைத்துக் கொண்டிருந் தாள். அம்மி மீது வைத்திருந்த மிளகாயை நமச்சிவாயத் தின் தலையென்று எண்ணிக் கொண்டு ஆத்திரத்துடன் 'டகார், டகார்" எனக் குழவிக் கல்லால் நசுக்கிக் கொண் டிருந்த அவளது உள்ளத்திலே கோபம் புயல் போல் வீசிக் கொண்டிருந்தது.

நமச்சிவாயத்தினால் தன் அன்பிற்கு உகந்த தமயந் திக்கு வரவிருந்த ஆபத்தைப் பலவாறு கற்பனை செய்து எப்பொழுது விடியும் என்று துடித்துக் கொண்டு காத்திருந்த அவள், எல்லோருக்குமுன் எழுந்திருந்து வீட்டுக் காரியங்களை, மிகவும் துரிதமாகச் செய்து முடித்துவிட்டு சூரியன் உச்சி முகட்டை அடையும் தருவாயில் குடந்தை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குக் கிளம்பினாள். அவசரமாகக் குடந்தைத் திண்ணை மீது இறக்கி வைத்துவிட்டு மிகவும் பதட்டத்துடன்

உள்ளே நுழைந்த அவளைக் கண்ட சம்பந்த முதலியார் "என்னம்மா காந்திமதி" எனக் கவலையுடன் வினவிய வண்ணம் உள்ளிருந்து எழுந்து வந்தார்.

"காந்திமதிக்குச் சட்டென்று பேச முடியவில்லை. ஆத்திரமும் துக்கமும் அவளது நெஞ்சைப் பிடித்துக் கொள்ளவே, சொல்லத் துடித்துக் கொண்டு வந்த விஷயங்களைக் கூற முடியாது அருகிலிருந்த தூண் ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 'ஹோ' வென வாய் விட்டு விம்மி விம்மி அழத் துவங்கி விட்டாள்.

காந்திமதி மனத்தை வேதனை செய்யக்கூடிய விபரீதமான சம்பவம் ஏதோ நடந்து விட்டிருக்கிறது எனத் தமக்குள்ளே ஊகித்துக் கொண்ட முதலியார், அழுது முடித்து அவள் சிறிது சமாதானம் அடைந்தபின் தானே கூறட்டும் என எண்ணியவராய், "இந்தா நாகரத்தினம், உன்னைத்தானே! ஒரு லோட்டாவிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு இங்கேவா. காந்திமதி தங்கச்சி வந்திருக்கு." என்று உள்ளே காரியமாக இருந்த தமது மனைவியை உரத்த குரலில் கூப்பிட்டார். காந்திமதி விம்மியழுவதைக் காணச் சகிக்காது அமைதியற்றவராகத் தாழ்வாரத்தில் முன்னும் பின்னும் உலாவ ஆரம்பித்தார்.

கணவனது கட்டளைப்படியே விரைந்து வந்த முதலியாரின் மனைவி. காந்திமதியைக் கண்டதும் மிகவும் பரபரப்படைந்து போய், "என்னம்மா தங்கச்சி! என்ன நடந்திச்சு!" என அனுதாபத்துடன் விசாரித்துக் கொண்டு அருகில் ஓடிவந்து, அவளது முகவாயை ஆதரவுடன் நிமிர்த்தி. கன்னங்கள் மீது வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள். அவளது அன்புப் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்ட காந்திமதி லேசாகப் புன்முறுவலித்துவிட்டு, "அண்ணாச்சி! உங்களுக்கு நான் தொந்தரவு கொடுக்கவே பிறந்திருக்கிறேன். மன்னிச்சுக் கொள்ளுங்கள். உங்களைத் தவிர எனக்கு ஆதரவு காட்டி

உதவும் மனிதர் வேறு யாரும் இல்லை" என்று துயரத்துடன் கூறி முடிக்க முடியாது நிறுத்தினாள்.

மீண்டும் அவளது கண்கள் கலங்குவதைக் கவனித்த நாகரத்தினம் மிகவும் இரக்க வசப்பட்டுப் போய் விட்டாள். "என்னம்மா தங்கச்சி! என்ன நடந்திச்சு? விவரமாகச் சொல்லம்மா. உங்க அண்ணார் உனக்கு உதவி செய்யாது பின் யாருக்குச் செய்யப் போகிறார்! வருத்தப்படாதேயம்மா! என்றாள்.

அவளது மிருதுவான அந்த வார்த்தைகளில் சற்று ஆறுதலடைந்த காந்திமதி கண்களைத் துடைத்துக் கொண்டு "அண்ணாச்சி! என் தங்கையின் மகள் தமயந்தி அதிர்ஷ்டத்தில் என்னைக் கொண்டுதான் பிறந்திருக்கிறாள். இடி மேல் இடி போல் இந்தச் சிறு வயதிலே அவளுக்கு நேர்ந்திருக்கிற பல துன்பங்களும் போதாது போல், இன்னும் ஒரு பெரிய ஆபத்து ஏற்படப் போகிறது" என்றாள் துக்கத்துடன்.

"நேத்து பகல் நீ இங்கிருந்து போன பிறகு அந்தக் குழந்தைக்கு இன்னும் ஏதாவது கஷ்டம் ஏற்பட்டதா?" என அனுதாபத்துடன் விசாரித்தார் முதலியார்.

"மற்றவைகள்கூடத் தேவலாம் என்கிற வரைக்கும் தமயந்திக்கு ஒரு பெரும் ஆபத்துவரக் காத்து நிற்கிறது. அது வராது தடுத்து, குழந்தையைச் சட்டுனு இந்த வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு போய் ஒரு நல்ல அனாதை ஆசிரமத்திலே சேர்ந்து விடணும். அதுக்கு நீங்க உபகாரம் பண்ணணும்" என்றாள் காந்திமதி பதிலுக்கு.

"செய்கிறேன் என்று நேத்தே உனக்கு வாக்குக் கொடுத்து விட்டிருக்கிறேன். இன்னிக் காலை தபாலுக்கு ஆசிரமத்தைப் பற்றி விசாரித்து பதில் போடும்படி என் நேநேதர் ஒருத்தருக்குக் கடிதம் போட்டிருக்கிறேன்.

இரண்டு நாளில் கட்டாயம் பதில் கிடைத்துவிடும். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதைச் செய்து தருகிறேன். நீ ஏன் இப்படி மனத்தை அலட்டிக் கொள்கிறாய்?" என்று கேட்டார் முதலியார்.

முதலியார் தம்பதியை நன்றி பெருகும் கண்களால் ஏறிட்டுப் பார்த்துவிட்டு காந்திமதி பேசலுற்றாள்; "நீங்கள் செய்கிறேன் என்று ஒப்புக் கொண்டால் கட்டாயம் உதவி செய்வீர்கள் என்பதை அறிவேன்; அந்தக் குழந்தைக்கு வேறு ஒரு பெரும் ஆபத்து வர இருக்கிறது. அதை உங்களிடம் கூறி யோசனை கேட்டுப் போகத்தான் அவசரமாக ஓடி வந்தேன். ஊரிலிருந்து நேற்று பகல் எங்கள் வீட்டிற்கு நமச்சிவாயம் விருந்தாளியாக வந்திருக்கிறான்" என்றாள்.

"அந்தக் கடன்காரன் இப்போ எதுக்கு வந்தானாம்?" என்று முதலியாரின் மனைவி கோபத்துடன் கேட்டாள்.

நமச்சிவாயத்தினால் சிவானந்தத்தின் வீட்டிற்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளைப் பற்றி அவள் அறிவாளாதலின், அவளுக்கு அவன் பெயரைக் கேட்டதுமே சினம் பற்றிக்கொண்டு வந்தது.

"ஏன் வந்தான் என்று கேட்க எனக்கு உரிமை ஏது அண்ணி? அப்படிக் கேட்டு விட்டால் அமிர்தம் என்னைச் சும்மா விட்டு விடுவாளா? வந்ததும் வராததுமாக நமச்சிவாயம் தன் வேலையைக் காட்டத் துவங்கிவிட்டான்" என்று ஆரம்பித்த காந்திமதி, ஒன்றும் விடாது விவகாரமாக அமிர்தத்திற்கும் அவன் சகோதரனுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை முழுதும் கூறி முடித்தாள்.

அதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்த முதலியார் கோபத்துடன் பற்களைக் கடித்தார். "இரு குழந்தைகளுக்குத் தாயான உன் அண்ணியா இப்படிப்

பேசுகிறாள்? வெட்கம்? அவள் புத்தி இவ்வளவு ஈனமான காரியத்தைச் செய்ய நினைக்கவே வேண்டாம். நமச்சிவாயம் இஷ்டப்படி, தமயந்தியை எடுத்து எவனிடமும் தானம் செய்து விட அவள் கேள்வி முறையில்லாதைப் பெண்ணா? நியாயத்தைக் கேட்க ஊரிலே நாங்க நாலு பேர் இல்லையா? ஓகோ! வெகு பேஷாக இருக்கிறதே!" என்று கோபத்துடன் இரைந்து கத்தினார்.

"அதற்காகத்தான் உங்களிடம் ஓடி வந்தேன். இதைப் பற்றி முதலிலேயே உங்களுக்கு எச்சரிக்கை செய்து விட்டால், தவறு நடக்குமுன் தடுக்க முடியும் அல்லவா? அவர்கள் இருவரும் அப்படிப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட பொழுது என் இரத்தம் கொதிச்சுப் போச்சு. எனக்கு வந்த கோபத்தில் என்னவெல்லாமோ செய்துடணும் போல் தோணிச்சு. ஆனால், காரியந்தான் பெரிசு, அவசரப்பட்டுக் காரியத்தை வீணாக்கிடக் கூடாதுன்னு நான் பொறுமையோடு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தேன்" என்றாள் காந்திமதி.

"இதைக் கேட்கும் பொழுது என் இரத்தமும் கொதிக்குதம்மா! உலகத்திலே ஈவு இரக்கமில்லாத இப்படிப்பட்ட கல்நெஞ்சர்களும் இருக்கிறாங்கறது ஆச்சர்யமாக இருக்கு. நீ ஒண்ணுக்கும் பயப்படாதே! எது நடந்தாலும் நான் இருக்கிறேன் உதவி செய்ய" என்றார் முதலியார் முடிவாக.

"அண்ணாச்சி! உங்களுக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன்னு வார்த்தையால் சொல்லிவிட்டால் போதாது. என் உயிர் உள்ளவரைக்கும் உங்களைத் தெய்வமென்று நினைச்சு நன்றியோட இருக்க வேண்டியவள்" என்று கூறிய காந்திமதி, சிறிது நேரம் மேலே பேச யோசிக்கிறவள் போல் தயங்கினாள். பிறகு தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டு, "எனக்கு இன்னும் ஒரு சிறு உபகாரம் செய்யவேணும். ஆற்றுக்குத்

தண்ணி எடுக்கிறதாக நான் உங்கள் வீட்டிற்குத்தான் ஏதாவது அவசர சமயத்தில் வரதேயொழிய, வேறே எங்கேயும் நான் போவதில்லைங்கிறது உங்களுக்குத் தெரியும். அதனாலே பக்கத்து டௌனிலே காசுக் கடையிலே இதை வித்து வந்த பணத்தை எனக்கு வாங்கித் தரணும். தமயந்தியைக் கொண்டு ஆசிரமத்திலே படிப்பதற்காகச் சேர்க்கணும்னா கையில் கொஞ்சம் செலவுக்குப் பணம் தேவையா இருக்குமல்லவா!" என்று கூறி ஒரு காகிதப் பொட்டலத்தை அவரிடம் கொடுத்தாள்.

அதை வாங்கி நிதானமாகப் பிரித்த முதலியார் கையில் தேள் கொட்டி விட்டது போல் துள்ளிக்கொண்டு நகர்ந்து நின்றார்.

"என்னம்மா தங்கச்சி இது? இதையா விற்கச் சொல்கிறாய்!" என்று வியப்புடன் கேட்ட அவர், அனலைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பவர்போல் பொட்டலத்தைக் கீழே வைத்தார். காகித மடிப்புகளின் இடையே பளபளவென்று மின்னிக் கொண்டு இருந்த தங்க மாங்கல்யத்தைக் கண்ட நாகரத்தினம், துணுக்குற்று அச்சத்துடன் காந்திமதியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏன் அண்ணாச்சி! இதை விற்பதில் தவறு என்ன? என்னிடம் என்னுடையது என்று சொல்லிக்கொள்ள இதைத் தவிர வேறு நகை ஏதும் கிடையாது? நான் பணத்திற்கு எங்கே போவேன்? எத்தனையோ தடவைகள், என்னைப் போன்ற ஏழைப் பெண்கள் ஆபத்துக் காலத்தில் தங்களுடைய மாங்கல்யத்தையும் விற்க நேர்ந்திருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அது என் விஷயத்தில் இப்பொழுது நடக்கிறது.

"பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் இப்படி ஒரு கஷ்ட காலம் ஏதேனும் எனக்கு வந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு யோசனையே எனக்குத் தோன்றி

யிருக்குமா? என் மீது பரிசுத்தமான அன்பு கொண்டிருந்த அவரது அன்புக்கரங்களால் எனக்கு அணிவித்த இந்த ஆபரணத்தைக் கழுத்தை விட்டு உயிர் போனாலும் கழட்டத்தான் துணிவேனா? ஆனால் அண்ணாச்சி, இன்றைக்கு விஷயமே வேறு! என் மன நிலையும் அதே போல் வேறு! ஒரு பொருளுக்கு நாம் கொடுக்கும் மதிப்பும் குறைவு, மனத்தையும் கர்ப்பத்தையும் பொறுத்துத்தானே இருக்கிறது? வாழ்க்கையிலே எந்த ஒரு மனிதரையே சதம் என்று முழுவதும் நம்பியிருந்தேனோ அந்த மனிதரே என்னை மோசம் செய்து, எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படும்படி இந்த நிலையில் வைத்து விட்டுப் போயிருக்கையில், கேவலம் இந்த ஜடப் பொருள் என்னை விட்டுப் போவதால் என் கௌரவமும் மதிப்பும் மங்கி விடப் போகின்றனவா? நான் இழந்து விட்டிருக்கும் இன்ப வாழ்க்கையை ஒவ்வொரு நிமிஷமும் ஞாபகப்படுத்திக்கொண்டு என் கழுத்திலே இருப்பதைவிட, என்னை விட உலகிலே மிகவும் துர்பாக்கியசாலியாகி விட்டிருக்கும் ஓர் ஏழைக் குழந்தையின் கல்விக்கு உபயோகமாக இது அமைவது எவ்வளவோ நல்லது" என்று உணர்ச்சி வேகத்தில் படபடவென்று பேசிக்கொண்டு போனாள்.

முதலியார் பதில் அளிக்காது பெருமூச்செறிந்தார். காந்திமதி தொடர்ந்தாப்போல், "ஒரு சில பெண்கள் இந்த ஆபரணத்தைத் தங்கள் கணவர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தைச் சமாளிக்க விற்றிருக்கிறார்கள். ஒரு சில பெண்கள் தங்கள் அருமைக் குழந்தை உயிருக்கு மன்றாடுவதைத் தடுக்க இதை விற்க முன் வந்திருக்கிறார்கள். ஆனால், யாரும் இது வரை என்போல் ஒரு கொள்கைக்காக இதை விற்று உதவிசெய்ய நினைத்ததில்லை. நான் அறிவேன்.

"தமயந்தி என் தங்கை மகள் என்றோ, தாயற்ற குழந்தை என்றோ நான் இதை விற்க முன் வரவில்லை, தகப்பனுக்குப் பின் கணவன், அவனுக்குப் பின் மகன் அல்லது சகோதரன் என்று பெண் என்பவள் எப்பொழு தும் ஆணுக்கு அடிமைப்பட்டு வாழ வேண்டும் என்ற தனிச்சட்டம் வகுத்து வைத்திருக்கும் இந்த அநியாய சமூகத்திலே, பெண் கல்வியென்கிற உதவியிலே தனியே வாழ முடியும் என்ற கொள்கைக்காக விற்கிறேன்.

"நான் பரம ஏழைப் பெண்களின் அடிமைத்தனத்திற்கு விடுதலை அளிக்க நான் பெரிய பள்ளிக்கூடம் கட்டி வைக்கப்போவதில்லை. காலேஜுகள் அமைத்துவிடப் போவதில்லை. ஏழையிலும் பரம ஏழையான என்னால் ஒரு பெண்ணின் அறிவுக் கண் திறக்க ஒரு சிறு உதவி செய்ய முடிந்தது என்ற வரைக்கும் எனக்கு செய்ய முடிந்தால் போதும், அண்ணாச்சி. வீணாக மலைக் காதீங்க! என் ஆசையைத் தடுக்காதீங்க" என்றாள் உணர்ச்சி வசத்தில் நடுங்கும் குரலில்.

"உன் பேச்சிலிருக்கும் உண்மைகளை நான் அறியாமல் இல்லை. உனக்குப் பதில் சொல்லவே எனக்கு விளங்க வில்லை. நீ இருபது வருஷத்திற்கு அப்பாலே பிறக்க வேண்டியவள் அவ்வளவுதான் சொல்வேன்!" என்றார் பச்சாதாபத்துடன் முதலியார்.

"இருபது வருஷத்திற்கு முந்தி பிறக்க வேண்டியவர் களும் சில சமயம் தவறிப் பிறந்து விடுகிறார்கள். அதை விட்டுத் தள்ளுங்கள். முடியாதுன்னு சொல்லாம இந்த உதவியை எனக்குச் செய்யுங்கள். அதுதான் நான் கேட்பது!" என்றாள் காந்திமதி முடிவில்.

"உனக்குப் பணம் தேவையானால் நான் தருகிறேன்" என்று முதலியார் முடிக்குமுன் குறுக்கிட்ட அவள், "அதை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்! கடனாக

எடுத்துக்கொள்" என்பீர்கள். அதுவும் சரியல்ல. எனக்கு என்று மஞ்சள் காணி இருக்கிறதா, அதன் மாசூல் பணத்திலிருந்து கடனைத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று சொல்ல. நான் தீர யோசிச்சு விட்டுத்தான். இந்தக் காரியம் செய்ய வந்திருக்கிறேன். அந்தக் காலத் திலே செய்ததாகையால் இது நாலு பவுன் எடைக்குக் குறையாது இருக்கும். விற்றால் ஒரு நாற்பது ரூபாயாவது கிடைத்தால் போதும்" என்றாள் பிடிவாதமாக.

இதுவரை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வாளா இருந்த நாகரத்தினம், "உன் அண்ணி கழுத்தைப் பார்த்துவிட்டு, காணல்லையே என்று கேட்டா பின்னாடி வீண் பொல்லாப்பல்லவா வந்து சேரும்!" என்ற கவலை யுடன் வினவினாள்.

"ஆற்றிலே குளிக்கையில் நழுவி விழுந்து விட்டது என்று சொல்லிக் கொள்வேன், அண்ணாச்சி. அதைப் பத்திக் கவலைப்படாதீங்க" என்று கூறிவிட்டு வறட்சி யாகச் சிரித்த காந்திமதி. "நாளை பகல் இந்த வேளைக்கு வருகிறேன். நேரமாச்சு!" என கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

பக்கத்து கிராமத்திலிருந்து புடவை மூட்டையுடன் நல்ல நடுப்பகல் நேரத்திற்குப் பசியுடன் தங்கையின் வீட்டை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தான் நமச்சிவாயம். சிறிது தூரத்தில் ஆற்றோரம் அமைந்திருந்த வீட்டின் திண்ணை மீதிருந்த குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக்கொண்டு ஒற்றையடிப் பாதை வழியே தனியாகச் செல்லும் பெண்மணி ஒருத்தியைக் கண்டதும் அவனது நடை தயங்கிப்பட்டது. சற்று அருகில் வந்ததும் தனக்கு முன் நடந்து கொண்டு செல்லும் அந்தப் பெண் மணி யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டு விட்டதும் அவன் நெஞ்சு பல்வேறு உணர்ச்சியில் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஆற்றோரமிருந்த அந்தக்கூரை வீட்டையும் காந்திமதி யையும் வியப்புடன் மாறி மாறிச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்ற அவனது மூளையில் பலவிதமான சந்தேகங்கள் எழும்பலாயின. உடனடியாக அன்று மாலை காந்திமதி தன்னிடம் நடந்து கொண்ட விதத்தை நினைத்துக் கொண்டதும் அடங்கியிருந்த அவனது ஆத்திரம், எரிமலை போல் குமுறிக் கொண்டு வந்தது. வெண்கல லோட்டாவிலே காப்பியை நிரப்பி எடுத்துக் கொண்டு வந்து தரையில் வைத்தாள் அன்று காலை காந்திமதி. கூடத்திலே நமச்சிவாயம் மட்டுமே தனியாக அது சமயம் இருந்தான்.

"தரையிலே வச்சுட்டுப் போகணுமா? கையிலே கொடுத்திருக்கப்படாதா? அவ்வளவு பாக்கியம் நான் செய்யலையா?" என்று சரளமாகப் பேசிய நமச்சிவாயம் காந்திமதியை நிமிர்ந்து பார்த்து விஷயமாகப் புன்னகை செய்தான்.

விர் என்று திரும்பிய காந்திமதியின் கண்கள் அனலைக் கக்கிக் கொண்டிருந்தன. "மேலே பேசினால் முற்றத்தில் கிடக்கும் விறகுக் கட்டையினால் மண்டை யைப் பிளந்து விடுவேன், ஜாக்கிரதை!" என்று எச்சரிப் பவள் போல், அவனை வெறித்துப் பார்த்துவிட்டு மின்னல் வேகத்தில் உள்ளே சென்று விட்டாள்.

அலைகள் போல் சரிந்த கருங்கூந்தலும். தாழம் பூவைப் போன்ற நிறமும், யௌவனத்தின் சோபை மங்காத தோற்றமும் கொண்ட காந்திமதியைக் காணும் பொழுதெல்லாம் நமச்சிவாயத்தின் உள்ளம் இல்லாத கற்பனையெல்லாம் எண்ணிக்கொண்டு சஞ்சலப்பட்டது வாஸ்தவம். 'பாலைவனத்து வெண்ணிலவு போல இவ்வ ளவு அழகும் பாழாகுதே என எண்ணி அவன் பெரு மூச்சு செறிவதுண்டு. ஆனால், என்ன காரணத்தினாலோ தனது உள்ளத்து சபல உணர்ச்சிகளை வெளிப்படையாக

அன்று வரை எடுத்துச் சொல்லவோ, செய்கைகளால் தெரிவிக்கவோ அவனுக்குத் தைரியம் ஏற்பட்டதில்லை.

சொல்லவும் மாட்டாது ஓரேயடியாக மறந்து ஒழிய வும் மனமின்றித் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்த அவன் அன்று காலை கொஞ்சம் துணிவடைந்து, காந்திமதியின் கவனத்தைத் தன்பால் திருப்ப மெள்ள அவ்வாறு பேசிப் பார்த்தாள். அதற்கு கிடைத்த பதில் அவனுக்கு ஏமாற்றத்தையும் பயத்தையும் உண்டு பண்ணி யிருந்தன. தான் முறை தவறிப் பேசுவதாக காந்திமதி தன் அண்ணனிடம் சொல்லிவிடப் போகிறாள் என்ற பயத்தில் அவனுக்கு அதற்கு மேல் வீட்டிலே இருப்பே கொள்ளவில்லை.

"உச்சி வெய்யில் வேளையில் தண்ணிக்குப் போகிற ரகசியம் இது தானா! இருக்கட்டும் சொல்கிறேன். விளையாட்டாக ரெண்டு வார்த்தை பேசினதற்கு அப்படி முறைத்தாளே கள்ளி?" என தன் மனத்திற்குள்ளே கறுவிக் கொண்டு ஆத்திரத்தில் துடித்த நமச்சிவாயம் வயல்கள் வழியே குறுக்காகப் புகுந்து ஓட்டமும் நடையுமாக காந்திமதிக்கு முன் வீட்டைச் சென்றடைந்தான்.

வயிறு நிறையச் சோற்றை உண்டு விட்டு, வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு அமிர்தம் கூடத்துத் தரையில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அண்ணனைக் கண்டதும், "என்னங்க இது, பொழுதுக்கு சாப்பிடக்கூட இல்லாம, எங்கேயோ சுற்றித் திரிஞ்சுகிட்டு இது என்ன வேலை?" என்று பல்லை இளித்து வர வேற்றாள்.

"அமிர்தம் உன்னைப் போல வெள்ளை மனசு படைச் சவங்க எல்லாம் உலகத்திலே இருக்கிறதுக்கே தகாதவங்க. உன் கண் முன்னாடி நடக்கிற சங்கதி உனக்குத் தெரி

கிறதே கிடையாது, காலம் கெட்டுக் கிடக்கிறது. யாரையும் நம்புவதற்கில்லை" என்றான் வேதாந்தமாக.

அமிர்தத்திற்குச் சட்டென்று ஒன்றும் விளங்கவில்லை. "என்னமோ வந்ததும் வராததுமாகப் புதிர் போடறீங்களே! விஷயத்தை விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்" என்றாள் ஆவலுடன்.

"நேற்று நான் வந்தப்பவே எனக்கு விபரீதமாகப் பட்டது. நல்ல வெயில் வேளையிலே இளம் பிராயத்துப் பொண்ணு தனியா ஆற்றுக்குப் போய் வந்திருக்கிறாளேன்னு காந்திமதியைப் பார்த்ததும் நினைச்சேன். இன்னிக்கு அதன் காரணம் பட்டவர்த்தனமாய்த் தெரிஞ்சுடுச்சு. ஆற்றோரம் தனியா ஒதுக்குப்புறமாக இருக்கிற கூரை வீட்டிலே இவளுக்கு என்ன வேலை? நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே. உன் நாத்தி நடத்தையைப் பத்தி எங்க ஊரிலே பலவிதமாகச் சொல்லிக்கிறது உண்டு. நான் இத்தனை நாளும் வெறும் கட்டுக் கதையின்னு இருந்தேன். இன்னிக்குக் கண்ணாலே பார்த்துட்டேன். ஆற்றுக்குத் தண்ணி எடுக்கப் போவதாகப் போக்குக் காட்டிவிட்டு, தன் மனசுக்கு பிடித்த மன்மதனைச் சந்திக்கப் போகிறான் இவள்! இதை நீ ஆரம்பத்திலே கவனிச்சு அடக்கா விட்டால் குடும்ப கௌரவம் நாசமாகப் போய்விடும். ஆமாம், சொல்லி விட்டேன்" என்றான்.

"அப்படியா! நிசமாவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்ட அமிர்தம் மின்சாரத்தில் தாக்குண்டவள் போல், அதிர்ச்சியுற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். காந்திமதி மீது பழிவாங்க நல்ல ஒரு விஷயம் தன்னிடம் சிக்கிக் கொண்டு விட்டது என்று எண்ணிய மாத்திரத்தில் கோபமும் சந்தோஷமும் ஒருங்கே தாளாது அவளது இருதயம் வெடித்துவிடும் போல் படபட வென்று துடித்துக் கொண்டது.

அமிர்தத்தின் கோபத்திற்கு தூபம்போட்டதும் அவள் தன் சுய அறிவை இழந்து விடுவாள் என்பதை அனுபவத்தில் அறிந்திருந்த நமச்சிவாயம், இந்த அரிய சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுக்க மனமின்றி, "அமிர்தம் இன்னொரு விஷயம். நான் சொல்ல வேண்டாமின்னு பார்த்தேன். ஆனால் உன்கிட்ட மறைக்க எனக்குக் கொஞ்சமும் மனசில்லை" என்று ஆரம்பித்தான்.

காந்திமதி தன்னைப்பற்றி அண்ணனிடமோ அண்ணியிடமோ குறை கூறுமுன் தானே முந்திக் கொண்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் நமச்சிவாயத்தின் மூளையில் சட்டென்று ஒரு கற்பனை தோன்றியது.

"பூனை போல் இருந்தாளேன்னு பார்த்தேன் இப்படியா சங்கதி!" என ஆச்சரியத்துடன் தனக்குள்ளே முணுமுணுத்த அமிர்தம், தமையனின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

"இதைக் கேட்டால் நீ இன்னும் அதிகம் ஆச்சர்யப்படுவாய், இன்றைய காலையிலே நீ ஏதோ வேலையாகக் கிணற்றடிக்குப் போயிருந்தாய். அப்போ நான் மட்டும் கூடத்திலே தனியா உட்கார்ந்திருந்தேன். காந்திமதி காப்பியை எடுத்துக்கொண்டு வந்து நின்று கொண்டிருந்தாள் 'இதோ இப்படி இங்கே வச்சுட்டுப் போயேன்? அம்மா!' என்று நான் தரையைச் சுட்டிக் காட்டினேன். அதுக்கு அவ என்ன பதில் சொன்னாள்னு நினைக்கிறே. என் கையிலேயிருந்து வாங்கிச் சாப்புட்டா இந்தக் காப்பி கசந்து போயிடுமா?" என்று

கேட்டு விட்டு அவள் ஒரு தினுசாகச் சிரித்தாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தப் பேச்சும், அந்தப் பச்சைச் சிரிப்பும், சே!சே! குடும்பப் பெண்ணுக்கு உகந்ததே இல்லை. சின்ன வயது தடுமாறிப் போற இளம் பருவம், ஏதோ அறியாத்தனமா உளறி விட்டாள்னு நான் அதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக்கலை. இருந்தாலும், உனக்குச் சொல்லி கொஞ்சம் எச்சரிக்க வேண்டியது நியாயம்னு தோணிச்சு. அதனாலே..." என்று இழுத்தான்.

அமிர்தத்தின் கண்கள் கோபத்தினால் சிவந்து போயின. அவள் நெஞ்சம் பதைத்தது. "நிசமாகவா' அண்ணா! இவள் தன் கேவலமான நடத்தையை வீட்டிலேயும் துவங்கி விட்டாளா? இருக்கட்டும், சொல்லுகிறேன்" என ஆவேசத்துடன் எழுந்திருந்தாள்.

அவ்வளவு தூரம் அமிர்தத்தைத் தூண்டிவிட்ட போதும், இனி விஷயங்கள் தானே முன்னேறிக் கொண்டு பெரும் யுத்தமொன்று ஆரம்பித்து விடும் என்று திருப்தியடைந்த நமச்சிவாயம் முகத்திலே பீதிக் குறிகளை வரவழைத்துக் கொண்டு மிகவும் பயந்தவன் போல் மெல்லிய குரலில், "இதுதான் உன்னிடம் எனக்குப் பிடிக்கிறதில்லை. ஏதாவது சொல்லிவிட்டா உடனே துடிதுடிச்சுக் கொண்டு சண்டைக்குக் கிளம்பி விடுகிறாய்! இந்தத் தடவையாவது நான் சொல்லுகிறபடி செய். அவசரப்பட்டுக் கொண்டு உன் நாத்தியோட சண்டை போட்டியோ உன் புருஷன், நாம் இருவரும் வேணுமின்னு அவள் மேல் கதை கட்டி வுட்டதாக எண்ணிக் கொள்வார். அதனாலே ஆத்திரப்படாது அமரிக்கையாக இரு. நான் சொல்றது பொய்யா நிஜமான்னு உன் கண்ணாலேயே பார்த்து விடு. பிறகு அவருக்கும் காட்டி விடு. அதற்கப்புறம் அவர் உன்

பேச்சைக் கேட்பார். காந்திமதியைக் கண்டிக்கிறது அவருக்கு நியாயமாகவும் தோணும்" என்று உபதேசித்தான்.

அமிர்தத்திற்கு அண்ணன் கூறுவது மிகவும் சரியென்று தோன்றியது. "சரிதான்! நீங்க சொல்றபடியே கொஞ்சம் நிதானிச்சே செய்கிறேன்" என்று அரை மனசுடன் ஒப்புக் கொண்டாள். ஆனால் அன்று முழுவதும் அவளுக்குப் பொறுமையாகவே இருக்க முடியவில்லை. காந்திமதியைக் கண்ட பொழுதெல்லாம், 'உன் சாயம் வெளுத்துப் போச்சு. உன் ரகசியம் என் கையில் சிக்கிக் கிடக்கிறது. இரு சொல்கிறேன்" எனத் தனக்குள்ளே கறுவிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பகல் வேளைக்கு காந்திமதி, முதலியாரிடம் கூறியிருந்தபடி சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆற்றுக்கு நீர் எடுத்து வருவதாகக் குடத்துடன் கிளம்பினான். கூடத்துத் தரை மீது மோகனாவின் கிழிந்த பாவாடையொன்றைச் சரிப்படுத்தித் தைத்துக் கொண்டிருந்த அமிர்தம் அண்ணன் முகத்தை அர்த்த பாவத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

கயிற்றுக் கட்டிலின் மீது கால்களை முடக்கிக் கொண்டு சாவதானமாக வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருந்த நமச்சிவாயம் பதிலுக்குக் கண்களைச் சிமிட்டி ஜாடை செய்தான்.

"என்னம்மா காந்திமதி! இந்த வெயிலிலே என்னத்துக்குப் புறப்படறே? கொஞ்சம் வெயில் தணிஞ்ச பிறகுதான் போகக் கூடாதா?" என்றாள் ஏளனம் மிகுந்த குரலில்.

வாயிலைத் தாண்ட கால் எடுத்து வைத்து காந்திமதி சிறிது தயங்கியபடி தன் அண்ணன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தாள். கடுமையும் அதிருப்தியும் நிலவி

நின்ற அந்த முகத்தினின்று அவளால் எதுவும் ஊகிக்க முடியவில்லை.

"இப்போ போனாத்தான் எனக்கு மத்த வேலைகளை உடனே வந்து கவனிக்கச் சரியாக இருக்கும்" என்று பதில் அளித்து விட்டு, அதற்குமேல் நின்று வார்த்தை யாட விரும்பாது வேகமாக வெளியே சென்று விட்டாள்.

"பார்த்துக்கோ! பார்த்துக்கோ!" என்று கூறுவது போல் தலையைப் பலமாக ஆட்டி அபிநயித்த நமச்சிவாயம் வெற்றிலையை வாயில் திணித்துக் கொண்டான்.

தன் வார்த்தைகளுக்குக் கொஞ்சமும் மதிப்புக் கொடுக்காது மிகவும் அலட்சியமாக வெளியே சென்ற காந்திமதி மீது அமிர்தத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. கையில் இருந்த பாவாடையை வெறுப்புடன் சுருட்டி மூலையில் எறிந்துவிட்டு எழுந்திருந்தாள்.

"நீ எங்கே புறப்படறே?" என வினவிய நமச்சிவாயம் உற்சாகத்துடன் சிரித்தான்.

"அந்தத் திருட்டுக்கள்ளியைக் கையுங் களவுமாகக் கண்டு பிடித்து விடப்போகிறேன். நான் வருகிற வரைக்கும் வீட்டைக் கொஞ்சம் பார்த்துக்குங்க. அந்த நொண்டிப் பிணம் புழக்கடையிலே வேர்க்கடலையை உரிச்சுக் கொண்டு உட்கார்ந்திருக்கு அதையும் கொஞ்சம் கவனிச்சுக்கோங்க. இல்லாட்டா, அரை வினாடியிலே ஒரு கூடை கடலையும் அந்த பூதகி தின்னு விடுவாள்" என்று உத்தரவிட்டு அமிர்தம், முற்றத்திலே வைத்திருந்த நீர் நிறைந்த குடத்தை மடார் எனக் கீழே சாய்த்து ஒரு நொடியில் காலி செய்தாள். காந்திமதி மேல் ஏற்பட்ட ஆத்திரத்தைக் குடத்தின் மீது காட்டுகிறவள் போல அதை எடுத்து 'ஜங்' கென இடுப்பில் வைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

"நீயும் ஆற்றுக்குத் தண்ணிக்கு வெயிலிலேயே இளம் பிட்டியா? வேடிக்கைதான்!" என்று கைதட்டி ஆர்ப் பரித்த நமச்சிவாயம், "அமிர்தம்! பின்னாடியே போய், தூரத்திலே நின்று பார்த்துட்டு, வந்த சுவடு தெரியாம வந்துடு. பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்கிறாப் போல உன் புருஷனிடம் இந்த நாடகத்தை ஒரு நாள் கண்கூடாகக் காண்பிச்சுவிட, இடத்தையும் ஆசாமியையும் தெரிஞ்சுக்கோ" என்று யோசனை சொல்லிக் கொடுத் தான்.

அமிர்தம் தெருக்கோடி வரை சென்று மறையும் வரை வாசலில் நின்று பார்த்து விட்டுக் கதவைத் தாளிட் டுக் கொண்டு உள்ளே வந்தான் நமச்சிவாயம். புழுக் கடைத் தாழ்வாரத்தில் தமயந்தி உட்கார்ந்து கொண்டு கடலையை உரித்துச் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டிருக் கிறாள் என்பதை அங்கே சென்று ஒரு முறை மேற்பார் வையிட்டு நிச்சயம் செய்து கொண்ட பின்பு, நிம்மதி யான மனத்துடன் கூடத்திற்குத் திரும்பி வந்தான். இரண்டு நாட்களாகக் கிடைக்காத ஓர் அரிய சந்தர்ப்பம் இப்பொழுது அவனுக்குக் கிடைத்திருந்தது. வீண் காலதாமதம் செய்து முட்டாள்தனம் என மிகவும் ஜாக்கிரதையாகக் கூடத்து அறைக்குள்ளே சென்றான். அமிர்தத்தின் பெட்டியில் எப்பொழுதும் கொஞ்சம் சில்லறை தாராளமாகக் கிடைக்கும் என்பதைப் பன்முறை அனுபவத்தில் அறிந்திருந்த அவன், கையில் தயாராக வைத்திருந்த கொத்துச் சாவிகளில் ஒன்றன் பின் ஒன்றாகப் பூட்டைத் திறக்க உபயோகித்துப் பார்த்தான். சில வினாடிகளில் அவனது முயற்சி வெற்றி யளித்தது விட்டது.

அமிர்தம் வருவதற்குள் முந்திக் கொண்டுவிட வேணுமென்று துரிதமாக அவளது பெட்டியை மேலும் கீழும் ஆராய்ந்தான். புடவைகளின் மடிப்புக்கள்

இடையே கனமாக ஒரு கத்தை கையில் தட்டுப்படுவதை உணர்ந்து அதை வெளியே இழுத்து வெளிச்சத்தில் பார்த்த அவனது கரங்கள் பேராசையினால் நடுங்கின. அந்த நோட்டுக் கத்தையை அப்படியே எடுத்துக் கொண்டுவிட்டால் பிறகு பெரிய ஆபத்து வந்து சம்பவிக்கும் என்று அஞ்சியவனாக, கத்தையின் நடுவே சில நோட்டுகளை மட்டுமே உருவி எடுத்து இடையில் செருகிக்கொண்டு அதைத் திரும்ப முன்னிருந்த இடத்தில் பத்திரமாக வைத்தான். இன்னும் ஏதாவது கிட்டுமா என்று துழாவிப் பார்க்கையில் துருப்பிடிக்காத தகர டப்பா ஒன்றிலே நசுங்கித் தேய்ந்து உருமாறிக் கிடந்த தங்கக் காப்பு ஒன்று அவன் கண்ணில் தென்பட்டது. சமயத்திற்கு உதவியாக இருக்கும் என்று அதையும் எடுத்து இடுப்பிலே பத்திரப்படுத்திக்கொண்டு, பெட்டியைச் சந்தடி செய்யாது சாத்தி மூடி பூட்டி விட்டு, வாயிற்கதவை நன்றாகத் திறந்து வைத்துவிட்டுப் புழக்கடைக்குச் சென்று தமயந்தி அருகில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அமிர்தத்தைக் கண்டு பயப்படுவது போல், அவளது அண்ணனான நமச்சிவாயத்தையும் கண்டு தமயந்தி வெகுவாக அஞ்சினாள். தன்னையே விறைத்துப் பார்த்துக் கொண்டு அருகில் உட்கார்ந்திருந்த அவனைக் கண்டு அவளது கரங்கள் பயத்தில் நடுங்கின.

"இவ்வளவு நாழியா செய்த வேலை இதுதானா?... உம்!" என்று அந்தச் சிறுமியிடம் ஓர் அதட்டல் போட்டு விட்டு, வாயிலிருந்த வெற்றிலைச் சாறை உட்கார்ந்த இடத்திலிருந்து 'தூ' வென காறி உமிழ்ந்தான். தமயந்தி சிரமப்பட்டு உரித்துச் சேகரித்திருந்த கடலை விதைகளை இரு கைகளிலும் வாரி எடுத்துக் கொண்டு உல்லாசமாக அவைகளை ருசி பார்த்த வண்ணம் இருந்தான்.

விரட்டப்பட்ட நாயைப் போன்று பெருமூச்செறிந்து கொண்டு வேகமாக உள்ளே வந்த அமிர்தம் குடத்தை இறங்கிக் கீழே 'டக்'கென வைத்து விட்டு 'அண்ணா!' என்று அலறினாள். கூடையில் மிகுதியாகக் கிடந்த ஒரு பிடி கடலையையும் அள்ளி வாயில் போட்டுக் கொண்ட நமச்சிவாயம், அவசரமாக அதை மென்று கொண்டே, "ஏன் அமிர்தம்! இங்கேதான் இருக்கிறேன்" என்று பதில் அளித்த வண்ணம் கூடத்திற்கு வந்தான்.

"கதவைத் திறந்து போட்டுட்டு அங்கே என்ன செய்றீங்க?" என இரைந்து கேட்ட அமிர்தம் மூச்சுவிடத் தடுமாறிக் கொண்டு, "நீங்க சொன்னது அவ்வளவும் உண்மை, அண்ணா! அந்த திருட்டுக் கள்ளி சம்பந்த முதலியார் வீட்டுக்குள்ளே போனவள், அரை மணியாகியும் வெளியே வரவில்லை. அவளுக்குப் பின்னாடி ஆற்றுக்குப் போன நான் தண்ணி எடுத்துக் கொண்டு இதோ திரும்பி வந்திருக்கிறேன். அவர் வீட்டிலே, வயசுப் பொம்பளை, இவளுக்கு என்ன வேலை? இன்னிக்கு அவர் வரட்டும், சொல்லுகிறேன்" என்று கோபத்துடன் கூச்சலிட்டாள்.

இனி அமிர்தம் மேற்கொண்டு கவனித்துக் கொண்டு விடுவாள் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட நமச்சிவாயம் "அமிர்தம்! உன்னை ஒண்ணு கேட்டுக்கிறேன். எனக்காக நீ தயவு செய்து அதைச் செய்யணும். எப்ப நான் இங்க வந்தாலும் உங்க குடும்பத்திலே சண்டையை உண்டு பண்ணி விட்டுப் போகிறேன்னு உன் புருஷன் போன வாட்டி ஜாடையா என்னைத் திட்டிவிட்டார். அதனாலே நான் இன்னிக்கு சாயங்காலம் ஊருக்குப் போகிறவரைக்கும் நீ சும்மா வாயை அடக்கிக் கொண்டு இருக்கவேணும். நான் போன பிறகு உன் புருஷனிடம் எல்லாத்தையும் சொல்லி, இஷ்டப்படி செய்துக்கோ. அதுவரைக்கும் சும்மா இரு. உனக்குப் புண்ணியமுண்டு"

என்று மிகவும் கெஞ்சுகிறவன் போல் குழைவாகக் கேட்டான்.

"என் பிறந்த வீட்டு மனுஷங்களைக் கண்டாலே அவருக்கு ஆகாது. அவர் கிடக்கிறார். உங்களுக்காக நான் இன்னிக்கு முழுவதும் வாயை மூடிக்கொண்டிருக்கிறேன். நாளைக்கு இவளை என்ன பண்ணுகிறேன். "பாருங்க! வைக்கிற இடத்திலே இவளை வைக்காட்டா என் பெயர் அமிர்தம் இல்லை!" என ஆக்ரோஷத்துடன் பேசிய அமிர்தம், புடவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு மறுநாள் யுத்தத்திற்கு இப்பொழுதே ஆயத்தம் செய்கிறவள் போல் வேகமாகப் பின் பக்கம் சென்றாள்.

அன்றைய சாயங்காலம் நமச்சிவாயம் தன் மூட்டை களைக் கட்டிக்கொண்டு ஊருக்குத் திரும்பினான். ஒரு மாத காலத்திற்கு வேலை இல்லாவிட்டாலும் தேவை யான அளவு பணம் அவனிடம் இருந்தது. வீணாக சகோதரி வீட்டில் தங்கி, பிறகு சந்தேகத்திற்கு இடம் வைத்துக் கொள்வதை விட, முன்னாடியே விலகி விடு வது உத்தமம் என்ற எண்ணத்தில், அவசரமாக விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

சிவானந்தம் உசுப்பிற்காக, "இருந்து விட்டுப்போங் களேன். அவசரமென்ன!" என்று ஒரு தடவை சொல்லி வைத்தார். இந்தக் கஷ்ட காலத்தில் விருந்தாளியாக வந்து பத்து நாள் நங்கூரம் போட்டுவிடப் போகிறானே என்று அவனைக் கண்டு பயந்திருந்த அவனுக்கு, அவன் ஊருக்குப் புறப்பட்டதும் நிம்மதி ஏற்பட்டது.

நமச்சிவாயம் இந்த முறை இவ்வளவு சீக்கிரம் சகோ தரியின் வீட்டை விட்டுக் கிளம்பிச்சென்றது காந்தி மதிக்கு பிக்க ஆச்சரியத்தைக் கொடுத்தது. அது சமயம் அவன் தமயந்தியின் விஷயமாகத் தன் சகோதரியுடன் சேர்ந்து செய்திருக்கும் சூழ்ச்சிக்கு நேரில் சென்று

முயற்சிக்கப் புறப்பட்டுப் போய் விட்டானோ என்று கூடச் சந்தேகமும் அவளுக்குத் தோன்றியது. எனினும், அவன் வருவதற்குள் தான் எடுத்துக் கொண்ட காரி யத்தை வெற்றிகரமாக முடித்து விடலாம் என எண்ணிக் கொண்டு காந்திமதி நிம்மதியாக அன்று பொழுதைக் கழித்தாள்.

முதல் நாளைப் போல் நீண்ட நேரம் முதலியார் தம்பதியிடம் பேசிக் கொண்டிருக்க காந்திமதிக்கு அன்று பகல் வேலை இருக்கவில்லை. அவள் வீட்டை விட்டுப் புறப்படுகையில் சிவானந்தம் வெளியே இருந்து களைப்புடன் வந்து கொண்டிருந்தார். சம்பந்த முதலி யாருக்கு அவரது நண்பர் ஆசிரமத்தைப் பற்றி விசாரித்து நீண்டதொரு கடிதம் எழுதியிருந்தார். அதை முதலியார் படித்து முடிக்கும் வரை காந்திமதிக்குக் காத்திருக்கப் பொழுது இருக்கவில்லை. "அண்ணாச்சி, அதைக் கொடுங்கள். தமிழிலேதானே எழுதியிருக்கிறார்? அதைச் சாவகாசமாக வீட்டிலே ராத்திரி மெல்ல எழுத்துக் கூட்டி படித்துக் கொள்கிறேன் நாழியாகி விட்டது. ஒரு நாள் போல இப்படி நாழியாகி வீடு சென்றால் பின்னால் வீண் சந்தேகத்திற்கு இடமாகி விடும்" என்றாள்.

"சரிம்மா, தங்கச்சி, கடிதத்தைப் படிச்சு விட்டுப் பின்னாடி என்னிடம் கொடுத்து விடு, அதன் கடைசி பக்கத்திலே ஆசிரமத்து விலாசம் விவரமாக அவர் எழுதியிருக்கிறார். அதன் தலைவிக்குக் குழந்தையைப் பற்றி எழுதிக் கேட்கணும். நாளைக்கு அல்லது மறுநாள் இந்தப் பக்கம் வரும் போது மறக்காமல் இதை எடுத்து வா என்று கூறிவிட்டு, அந்தக் கடிதத்தை அவளிடம் அளித்தார்.

காந்திமதி அதை வாங்கிப் பத்திரமாகப் புடவைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு, நீர்க்குடத்துடன் வேக

மாகத் திரும்பினாள். வீட்டிற்குள் நுழைந்தவுடன் காந்தி மதியைக்கண்ட அமிர்தம் "குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பு வருகிறாள், திருட்டுக் கள்ளி! பாருங்க. உங்க அழகு தங்கையை!" என்று கிறீச்சென்று அலறினாள்.

குடத்தை முற்றத்து ஓரத்திலே இறக்கி வைத்துவிட்டுக் காந்திமதி திகைப்புடன் கூடத்துத் தரையைத் திரும்பிப் பார்த்தாள். சொத்து என்று கூறிக்கொள்ள சொந்தமா யிருந்த அவளது மரப்பெட்டி கூடத்துத் தரையில் திறந்து கிடந்தது. அதனுள்ளே மடித்து பத்திரமாக வைத்திருந்த அவளுடைய இரு பழம் புடவைகளும், மூலைக் கொன்றாக அலங்கோலமாகச் சுருட்டி வீசியெறியப்பட் டிருந்தன. பெட்டிக்கு அருகிலே கிடந்த வெற்றுக் காகித உறையைக் கண்ட அவளுக்கு ஏற்பட்ட கிலியில் இருத யம் நின்று விடும்போல் இருந்தது.

முதல் நாள் விற்ற அந்த ஆபரணத்திற்காக முதலியார் காந்திமதியிடம் அளித்த நாற்பது ரூபாய்களையும் அவள் பத்திரமாக அந்தக் காகித உறையில் தன் பெட்டிக்குள் வைத்திருந்தாள். காகித உறையையும் அமிர்தத்தையும் மாறி மாறிப் பார்த்த காந்திமதிக்குத் துயரம் தாள முடியவில்லை.

கண்களில் பெருகிய நீரை சமாளித்துக் கொண்டு அவள் எதுவும் பேசு முன் புழக்கடையிலிருந்து வேக மாகப் பாய்ந்து வந்த சிவானந்தம் உரத்த குரலில், "நீ இப்பொழுது எங்கே போயிருந்தாய், சொல்! நிதமும் வெயில் வேளையில் ஆற்றுக்குப் போவதன் மர்மம் தெரிந்துவிட்டது. உண்மையைச் சொல்லி விடு. இல்லா விட்டால்..." என்று எட்டு வீடு கேட்கும்படி கர்ஜித்தார்.

அவமானத்தினால் காந்திமதியின் முகம் ரத்தமெனச் சிவந்து போயிற்று. துக்கத்தினால் பேச முடியாது உதடுகள் துடித்தன. முடிவில் அவள் மிகவும் சிரமப் பட்டுக் கொண்டு, "அண்ணா!" என்று வாயைத் திறக்கும் முன் அமிர்தம் அடிபட்ட வேங்கைபோல் கோபத்துடன் குறுக்கிட்டாள்.

"நான் சொன்னதை இவள் இல்லை என்று நிரூபிக்கட் டும் பார்க்கலாம்! ஒரு நாள் போல நிதைக்கும் இந்த வேளையில் இவள் சம்பந்த முதலியார் வீட்டுக்குப் போய் வந்து கொண்டு இருப்பதை இந்த ஊரே தெரிஞ்சு கொண்டிருக்கு. முதலியாருக்கும் இவளுக்கும் சிநேகிதம் உண்டு என்பதை இங்கே அறியாதவங்க ஒருத்தர் பாக்கி இல்லை. வெட்கக்கேடு! எனக்கு நாக்கைப் பிடுங்கிக்க லாமென்று இருக்கு" என்று கத்தினாள்.

தன் தலை மீது யாரோ ஒரு வண்டி நெருப்பை அள்ளிக் கொட்டி விட்டதைப் போன்று ஒரு கணம் திகைப்பில் ஸ்தம்பித்துப் போனாள் காந்திமதி. அண்ணன் மனைவி தன் மீது சுமத்திய அபாண்டமான பழியைக் கேட்டு அவள் நெஞ்சம் பதைத்தது.

"அண்ணி! அக்கிரமமாகச் சொல்லாதீங்க, வீணா ஒரு பெண் மேலே பழி சொல்கிறது கடவுளுக்குப் பொறுக்காது. பெண்களைப் பெத்திருக்கும் நீங்கள் இப்படிச் சொன்னால் நல்லாவேயில்லை!" என்று பதிலளித்த காந்திமதிக்கு மேலே பேச முடியவில்லை. துக்கம் தாளாது 'ஹோ'வென்று அவள் வாய்விட்டு அழுது விட்டாள்.

"நீலிக்குக் கண் நெற்றியிலே' என்பாங்க. அது போல உடனே அழுதுவிட்டா செய்கிற தப்பெல்லாம் மறைஞ்சு போயிடுமா? கண்ணகிபோல என்னமோ சாபம் போட்டுப் பாக்கிறியே! நான் உன் மேலே வேணுமின்னு கதைகட்டிச் சொல்லலை. உங்கண்ணாவே, தன் கண்ணாலே பார்த்த பின்புதான் கேட்கிறார்!" என்று உரத்த குரலில் கர்ஜித்த அமிர்தம் கோபத்துடன் கணவன் பக்கம் திரும்பி, "உங்க தங்கச்சி மேலே நானா வீண்பழி போட்டுப் பேசுகிறேன்? கல்லுப்பிள்ளையார் மாதிரி கேட்டுக் கொண்டு இருக்கீங்களே? முதலியாருக்கும் இவளுக்கும் சிநேகிதமோ என்னமோ. அது உங்கப்பாடு, உங்க தங்கச்சி பாடு! இந்தத் திருட்டுக் கள்ளி என் பொட்டியைத் திறந்து நாற்பது ரூபாயை எடுத்து தன் பெட்டிக்குள்ளே ஒளிச்சு வைத்திருந்தாளே. அதுக்கு என்ன சொல்றாளாம். கேளுங்க! அந்தத் தங்கப் காப்பை என்ன பண்ணினாளாம், கேளுங்க" என்று கத்தினாள்.

"உங்கள் பணத்தைத் திருடிக் கொண்டேனா அண்ணி? இதென்ன இடிமேல் இடி?" என்று அழுகையை மறந்து ஆச்சரியத்துடன் கேட்டாள் காந்திமதி.

"ஆமாம் இடி மேல் இடி இடிச்சு மழை பெய்யுது. என் பெட்டியைத் திறக்காம உன் பெட்டிக்குள்ளே பணம் பறந்து ஓடி வந்து குடியேறிக்கிட்டது இல்லையா?" என்று எகத்தாளமாக வினவிய அமிர்தம், கோபத்துடன் முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள்.

"அண்ணி! அது என்னுடைய பணம். உங்கள் பணத்தைப் பற்றி சத்தியமா எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறி விட்டு, துக்கம் தாளாது விம்மியழத் துவங்கினாள் காந்திமதி.

இதுவரை கோபத்துடன் சற்று மௌனமாக இருந்த சிவானந்தம். "உன்னுடைய பணம் என்கிறாயே, உனக்குத்

திடீர்னு இவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது? அந்த முதலியார் பயல் கொடுத்ததா? ஒப்புக்கொள், உண்மையை! இவ்வளவு கேவலமா நடந்துகொண்டு நீ என் மானத்தைக் குலைப்பதைவிடச் செத்து ஒழிஞ்சியானாலும் எனக்கு எவ்வளவோ நிம்மதியாக இருக்கும், வெட்கம் கெட்டவளே உன் புத்தி இவ்வளவு ஈனமாக இறங்கிப் போகணுமா? பட்டப் பகலிலே. ஐயோ, சகிக்கலை!" என ஆத்திரத்தில் சரமாரியாகப் பேசிக் கொண்டு போனார்.

மேலே கேட்டுக் கொண்டிருக்க மனம் தாளாத காந்திமதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அண்ணா! தீர விசாரித்து விட்டுப் பேசுங்க! வீணா வார்த்தைகளைக் கொட்டி விட்டா பின்னாடி அள்ள முடியாது. முதலியார் வீட்டுக்கு நான் போனது வாஸ்தவம். ஆனால் நீங்க சந்தேகிக்கிறபடி அவருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. முதலியார் வீட்டிலே அவர் மட்டும் தனியாவா இருக்கிறார்? அவர் பெண்ஜாதியும் இருக்கிறார்கள். அண்ணா! வயசிலே அவர் எனக்கு அப்பா போல! அத்தனை நல்ல மனுஷரைப் பத்தி சந்தேகிப்பது பெரிய பாவம். அவங்க வீட்டுக்கு நான் ஒரு காரியமாகத்தான் போய் வந்து கொண்டிருந்தேன். தமயந்தியைப் படிக்க வைக்காம வீட்டுடன் வச்சிருக்கிறது நியாயமில்லைன்னு எனக்குத் தோன்றியது. எங்கே படிக்க வைக்கலாம்னு யோசனை கேட்க அங்கே போனேன். அவருடைய உதவியைக் கேட்டு, அங்கே நான் போக நேர்ந்ததற்கு ஒரு வழியில் அண்ணிதான் காரணம், அமிர்தமும் அவங்க அண்ணார் நமச்சிவாயமும் உங்களுக்குக் கூடத் தெரியாம, ரகஸியமா யாரோ ஒரு மரக்காயர் கிட்ட தமயந்தியை வித்துவிட ஏற்பாடு பண்ணிக்கொண்டிருந்தாங்க. அதனாலே அதைத் தடுக்க நான் முதலியார் உதவியை நாடினேன்,

இதுதான் உண்மை! நீங்க வேணுமானாலும் அவரை விசாரிச்சுக் கொள்ளுங்க" என்று மூச்சு விடாது பேசினாள்.

அமிர்தத்தின் குற்றமுள்ள மனம் இதைக் கேட்டதும் பதட்டமடைந்தது. அடித்து விடுகிறவள் போல் கையை நீட்டிக் கொண்டு காந்திமதி முன்னால் ஓடிவந்து ஆக்ரோஷத்துடன் நின்றாள் அவள்.

"பொய்! பொய்! இவள்தான் கெட்டவள் என்பதோட போகக் கூடாது என்று என் மேலே ஒரு பெரும் அபவாதத்தைச் சுமத்துகிறாள்! இவள் கண் அவிஞ்சுதான் போயிடும். என் அண்ணாகிட்ட இவள் தவறாக நடந்து கொண்டதைக்கூட இல்லையின்னு சொன்னாலும் சொல்லுவாள். அவர்தான் அப்படித் தவறி நடந்தார் என்று மாற்றிச் சொன்னாலும் சொல்லுவாள் பொய்க்காரி! இந்தப் பணத்தை என் அண்ணன் தான் திருடித் தன் பெட்டியிலே வைத்து விட்டதாகக் கதை சொன்னாலும் சொல்லுவாள் கள்ளி!" என்று கத்திய அமிர்தம் தொடர்ந்தாப்போல், "இவ்வளவு நெஞ்சழுத்தமா? என் மேலேயே அபாண்டமா ஒரு பொய் சொல்லுகிறாளே இவள்! அதைக் கேட்டுக் கொண்டு நீங்க சும்மா நிக்கறீங்களே? உங்க நெஞ்சு கொதிக்கலையா, இந்த ஆத்திர வார்த்தைகளைக் கேட்டு, என்னிக்கு இவள் வீட்டிலே காலடி வைத்தாளோ அன்னிக்கே என் சந்தோஷம் அஸ்தமித்து போயிடுச்சு. யாரைச் சொல்லியும் குற்றமில்லை. என்னைப் பெற்ற பாவிகள் என்னைக் கொண்டு வந்து ஒரு பாழுங்கிணற்றில்..." என முடிக்காது தலையில் படீர் படீர் என அறைந்து கொண்டு, ஹோவென்று ஓலமிடத் தொடங்கி விட்டாள்.

கூடத்தில் நடந்த இந்தச் சண்டையையும் அழுகுரலையும் கேட்ட தமயந்தி மிகவும் கலவரமடைந்து போனாள்.

ஆவலை அடக்க மாட்டாது தாழ்வாரத்தினின்று மெல்ல வாயிற்படியருகில் வந்து எட்டிப் பார்த்தாள். காந்திமதி முகத்தைக் கரங்களினால் புதைத்துக் கொண்டு விம்மி யழுது கொண்டு நிற்பதைக் காண அவளுக்கும் அழுகை வந்தது. கூடத்திலே முன்னும் பின்னும் கோபத்துடன் உலாவிக் கொண்டிருந்த சிவானந்தம் தன் பக்கம் திரும்புவதைக் கவனித்து அச்சிறுமி, அத்துடன் தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு சுவருடன் ஒண்டிக் கொண்டாள்.

தம் ஆருயிர் மனைவி அழுது புலம்புவதைக் காணச் சகிக்காத சிவானந்தம், "மிகவும் உத்தமி போல அண்ணி மேலே குற்றம் பேச வந்துவிட்டாயே? இந்த முதலியாருடன் உனக்கு எத்தனை நாளா சிநேகிதம்? அது முதல்லே எனக்குத் தெரிஞ்சாகணும்? உண்மையைச் சொல்!" என்று உக்கிரமாக அதட்டினார்.

அண்ணன் தன் பேச்சுக்களை நம்பவில்லை. மனைவி சொல்லிக் கொடுத்ததைத்தான் உண்மை என்று எண்ணுகிறார் என்பதை உணர்ந்து கொண்ட காந்திமதிக்கு, அவமானத்தினால் உடல் குன்றிப் போயிற்று. அவளது கண்ணீரும் அழுகையும் நின்றன. அதற்குப் பதில் அவ்வளவு நாட்களாக அடங்கிக் கிடந்த ஒரு துணிச்சல் நாட்டுக்கு மீறி பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது.

அண்ணியின் பேச்சை நம்பிக்கொண்டு நீங்க இப்படித் தாறுமாறாகக் கேட்கிறது நியாயமில்லை" என பதிலுக்குக் கோபத்துடன் மொழிந்தாள்.

"சிவானந்தத்தின் சினம் உச்ச நிலையை அடைந்தது. தன்னை எதிர்த்துப் பேசும் அளவுக்குக் காந்திமதிக்கு, அவ்வளவு தைரியமா என வெகுண்டு, 'எனக்குக் கேட்க உரிமையில்லாமல் பிறகு எவனுக்கு உரிமை இருக்கிறது? என் ஆதரவிலே நீ இருக்கிறது ஞாபகம் இருக்கட்டும்!" என்று சீறினார்.

"உங்கள் ஆதரவிலே நான் இருக்கிறது வாஸ்தவம் அண்ணா. நானும் உங்களைப் போல ஒரு ஆண் பிள்ளையா இருந்தா இந்த வீட்டிலே இருப்பதை உங்களோடு பகிர்ந்து சாப்பிட எனக்கு சட்டப்படி உரிமை இருந்திருக்கும். ஆனால், பாழும் பெண் என்று பிறந்து விட்டதனால் தர்மத்திற்கு எனக்குச் சோறு போடுவது போல நீங்க அலுத்துப் பேசறீங்க. நான் உங்களுக்குப் பாரமாக இங்கே இருப்பது தப்புதான், அண்ணா!" என்றாள் துயரத்துடன். மீண்டும் அவள் கண்களை நீர் மறைத்துக் கொண்டது.

"உரிமை கிரிமையினு பெரிய நியாயம் பேச வந்து விட்டாள் அவ்வளவு ரோஷக்காரியாக இருந்தா வெளியிலே புறப்பட்டு போய்விடணும்" என்று தன் ஓலத்தின் நடுவே கிறீச்சிட்டுக் கத்தினாள் அமிர்தம்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட காந்திமதி, அமிர்தத்தின் பக்கம் திரும்பி திடமான குரலில், "அண்ணி! நீங்க கேட்கிற கேள்வியைத்தான் நானும் என் மனசுக்குள்ளே சித்தெ முன்னே கேட்டுக் கொண்டேன். எனக்கு மட்டும் ஒரு கடுகளவு தன் மதிப்புங்கிறது இருந்ததுன்னா நான் இங்கே அரைக்கணம் இனி மேலே தங்கி இருக்கக் கூடாது. நான் ஏன் உங்களுக்கு எல்லாம் பாரமாக இருக்கணும்? இதோ இந்த நிமிஷமே போய் விடுகிறேன்" என்று கூறிவிட்டு சட்டெனக் குனிந்து தரையில் கிடந்த தன் இருபுடவைகளையும் சுருட்டிக் கையில் எடுத்துக் கொண்டாள்.

"போ வெளியே!... இந்த உறுதி கடைசி வரைக்கும் சாசுவதமா இருக்கட்டும். எந்த நெஞ்சழுத்ததிலே நீ புறப்பட்டுப் போகிறேன்னு தெரியும்! ஆனால் மறுபடி நீ என் வீட்டுக்குள்ளே காலை வச்சியோ, தெரியும் சங்கதி!" என்று உக்கிரமாகக் கையை வீசிக் கொண்டு கண்களில் அனல் பொறி பறக்கச் சிவானந்தம் கர்ஜித்தார்.

பதிலளிக்காத காந்திமதி விடுவிடுவென்று புழக்கடைத் தாழ்வாரத்திற்குச் சென்று சுவர் ஓரமாகப் பயத்தில் ஒண்டிக்கொண்டு நின்ற தமயந்தியைத் தூக்கித் தன் தோள் மீது சாத்திக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

"இதென்ன இது?" என்று சிவானந்தம் கோபத்துடன் அதட்டி மேலே குறுக்குக் கேள்விகள் தொடங்குமுன் அமிர்தம் இடைமறித்து, "உங்களுக்கென்ன? பேஷா இந்தக் குட்டியை இவளே அழைத்துக் கொண்டு போகட்டும். இந்தப் பெண் இல்லையின்னு இங்கே யாரும் அழவில்லை. நீங்க சும்மா இருங்க" என்று அதட்டினாள்.

"வடிவேலு மலேயா போகுமுன் தன் குழந்தையை என்னிடந்தான் கவனிச்சிக்கச் சொல்லி ஒப்படைச்சுட்டுப் போனார். அதனாலே நான் வெளியே போகையிலே என்னோட இவளையும் அழைத்துக் கொண்டு போகிறேன்!" என்று பதிலளித்த காந்திமதி வேகமாக வாயில் பக்கம் நடந்தாள்.

"பேஷாக அழைச்சிட்டுப் போ! தொல்லை விட்டது எனக்கு. ஆனால், ஒண்ணு சொல்லிவிட்டேன்! எந்த தைர்யத்திலே இன்னிக்கு வெளியே போறியோ அதே தைர்யத்திலே வெளியிலேயே இருந்து கொள். எந்தக் காரணம் கொண்டும் என் முகத்தில் நீ இனி முழிக்கக் கூடாது. இந்த வீட்டு வாசல்படி மிதிக்கக்கூடாது. எனக் கிருந்த ஒரு தங்கச்சியும் இன்னிக்குச் செத்துவிட்டாள் என்று தலைமுழுகி விடப் போகிறேன்" என்று ஆத்திரம் அடங்காக்குரலில் சிவானந்தம் கூறினார்.

வாயிற்படி மீது காலை எடுத்து வைத்த காந்திமதி கடைசியாக ஒரு முறை அண்ணன் முகத்தைப் பார்க்க விரும்புகிறவள் போல் திரும்பி நின்று கொண்டு, "அண்ணா உங்கள் தங்கை நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு மானம் கெட்டு விடவில்லை. 'போ' என்று

சொன்ன பிறகு அந்த வீட்டிற்குள்ளே மறுபடி வருவதற்கு அவள் நிலைமை அவ்வளவு கேவலமாகி விடவில்லை. இன்றிலிருந்து எனக்கும் அண்ணன் என்பவர் இறந்து விட்டார் என நினைத்துக் கொள்கிறேன்" என்று துயரத்துடன் கூறிவிட்டு கண்ணில் பொங்கிய நீரை அடக்கிக் கொண்டு வேகமாக வெயிலில் கால் வந்த திசையில் நடந்தாள்.

ஆற்றங்கரை ஓரமாக அமைக்கப்பட்டிருந்த பாழடைந்து போன பிள்ளையார் கோயில் அருகே வந்ததும் மதில் சுவரை ஒட்டி வளர்ந்திருந்த நாவல் மரத்திலே தமந்தியை இறக்கி உட்கார வைத்துவிட்டு, களைப்புத் தாளாது உடைந்து போன ஒரு கல்தூண் மீது காந்திமதியும் உட்கார்ந்து கொண்டாள். அவளது உள்ளத்திலே எரிந்து கொண்டிருந்த துயரத்தைக் காட்டிலும் பன்மடங்கு கொடுமையுடன் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஆற்றங்கரையிலும், சுற்று வட்டாரத்திலும் மனித நடமாட்டமேயின்றி ஒரே சூன்யமாகத் தென்பட்டது. ஆற்றங்கரை, அந்தப் பாழடைந்த பிள்ளையார் கோயில், அந்த நாவல் மரம் இவைகளை மாறி மாறி வெறித்துப் பார்த்துக் கொண்டு வீற்றிருந்த அவளது உள்ளத்திலே, கடந்து போன பிள்ளைப் பருவத்து நினைவுகள் காட்டாற்று வெள்ளம் போல் வேகமாக வந்து மோதின.

எவ்வளவு தடவைகள் பிள்ளைப் பருவத்தில் அவளும் சிவானந்தமும் அந்த ஆற்றங்கரையில் ஈர மணலில் கிளிக் கூடு அமைத்து விளையாடியிருக்கின்றார்கள்? எவ்வளவு முறைகள் சிவானந்தம் கொஞ்சமும் அச்சமின்றி நாவல் மரத்திலே பாய்ந்து ஏறி, தங்கைக்குப் பழங்கள் பறித்துக் கொடுத்திருக்கின்றான்? எவ்வளவு நாட்கள் அண்ணனும் தங்கையும் பிள்ளையார் கோவிலை வலம் வந்து பிரார்த்தித்து பக்தியில்கூடப்

போட்டியிட்டு விளையாடியிருக்கிறார்கள்? அதே அண்ணனுக்கு அந்த அருமைத் தங்கை இன்று வேண்டாதவளாகப் போய் விட்டாள்; அவளைத் தன் வீட்டில் வைத்து போஷிப்பதே பெரும் சுமையாகத் தோன்றிவிட்டது? ஆச்சர்யம்! மனித உள்ளத்திலே காலம் எவ்வளவு வேற்றுமை செய்துவிடுகின்றது!- இப்படிப் பலவாறு எண்ணிய மாத்திரம் காந்திமதிக்கு துயரத்தைக் கட்டுப்படுத்த இயலாது போய் விட்டது. அதுவரையில் அடங்கிக் கிடந்த கண்ணீர் மீண்டும் ஊற்றெடுத்துக் கொள்ளவே, புடவைத் தலைப்பால் முகத்தை மறைத்துக் கொண்டு தேற்றுவாரின்றி வாய் விட்டு அழுதாள்.

மணல் மீது கிடந்த நாவல் பழங்களைப் பொறுக்கித் தன் சிறு கைகளில் சேர்த்துக் கொண்ட தமயந்திக்குப் பசி தாங்க முடியவில்லை. சற்று முன் வீட்டில் நடந்த சண்டையும், அதைத் தொடர்ந்து காந்திமதியுடன் தான் வெளியே வந்ததும் எல்லாம் அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தன. பசியைத் தணித்துக் கொள்ள நாவல் பழங்களை ருசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவள் விம்மி அழும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். காந்திமதி அழுது கொண்டிருப்பதைக் காண அவளது பிஞ்சு உள்ளம் சகிக்கவில்லை. அருகில் நெருங்கி, "பெரியம்மா" என்று மெல்லிய குரலில் அழைத்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன்னை ஒருவாறு சமாதானப் படுத்திக் கொண்ட காந்திமதி நிமிர்ந்து பார்த்தாள்.

"இந்தாங்க உங்களுக்கு நாலு, எனக்கு பாலு பழம், பெரியம்மா, உங்களுக்குப் பசிக்கலையா?" என தன் சிறு கைகளில் நாலு பழங்களை எடுத்து அவளிடம் நீட்டியபடி தமயந்தி வினவினாள்.

கீழே சர்ப்பம் சீறிக் கொண்டு காத்திருக்க, மேலே பிடித்திருக்கும் ஆலம் விழுதை எலி கத்தரித்துக்

கொண்டிருக்க நிர்க்கதியாகத் தொங்கிக் கொண்டிருந்த துர்ப்பாக்கியமான அந்த நிலையில், வாயில் எதேச்சையாக மரத்திலிருந்து சொட்டிய ஒரு துளி தேனின் இனிமையைச் சுவைத்துக் கொண்டு தன் நிலைமையை மறந்துவிட்ட மனிதனைப் போல், காந்திமதி அந்தச் சிறுமியின் வார்த்தைகளைக் கேட்டு ஒருகணம் பரவசம் அடைந்து தன் சோகத்தை மறந்து மெல்லச் சிரித்தாள்.

"எனக்குப் பசிக்கலையம்மா, தமயந்தி உன்னைக் கொண்டு பள்ளிக்கூடத்திலே சேர்த்து உனக்கு ஒரு நல்ல வழி பண்ணும் வரை பசிக்காது, தூக்கமும் வராது" என்று முணுமுணுத்த அவள் சுருக்கென எழுந்து அந்தச் சிறுமியைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

ஆதரவாக அவளது கழுத்தைத் தன் சிறு கரங்களால் கட்டிக்கொண்ட தமயந்திக்கு ஆவலை அடக்க முடியவில்லை. "பெரியம்மா, வீட்டுக்குத் தானே போகிறோம்? மாமா கோபமாகக் கத்தினாரே, இப்போ அங்கே போனா திட்டுவாங்க, இல்லையா?" எனக் கவலையுடன் கேட்டாள்.

"நாம் இப்போ வீட்டுக்குப் போவதில்லை. இனி மேலே அங்கே நாம் போகப் போவதில்லை. புதுசா நீ இதுவரை பார்த்திராத ஒரு ஊருக்கு நான் உன்னை அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். அங்கே உன்னை ஒரு அம்மா மிகவும் ஆசையுடன் வரவேற்று உனக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பாள். நீ நல்ல பெண்ணாகப் படிப்புக் கற்றுக்கொண்டு கெட்டிக்காரியாகப் போக வேணும், தெரிஞ்சுதா? இன்றிலிருந்து நமக்கு இந்த சூரியகாந்தத்தின் வாழ்க்கையிலிருந்து விடுதலை" என்று கூறிய காந்திமதி, ஆற்றிலே நீர் குறைவாக தெரிந்த பாதையிலே இறங்கினாள்.

அவள் கூறியது முற்றிலும் தமயந்திக்குப் புரியவில்லை என்றாலும் இனி மாமாவையும் மாமியையும் பற்றிய பயம் இல்லை என்பது மட்டும் அவளுக்கு விளங்கியது. கடைசியாக, அவள்தன் ஒரு சிறு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள விரும்பினாள். "அந்த ஊரிலே என்னை வரவேற்கிற ஒரு அம்மாள் இருப்பாள் என்னீங்களே, பெரியம்மா! அந்த அம்மா உங்களைப் போல தானே இருப்பாங்க?" என வினவினாள்.

ஆற்றின் நடுவே இருந்த சிறுமணல் திட்டை சமீபித்து விட்ட காந்திமதி களைப்புடன் சிறிது நின்றாள் "இல்லை! என்னைப் போல் படிக்காத முட்டாளாக அவள் இருக்க மாட்டாள். அவள் நிரம்பப் படித்து இருப்பாள். உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பாள் தமயந்தி! நீ நன்றாகப் படிக்க வேணும். தெரிஞ்சுதா? படிப்புத்தான் உனக்கு சகலமும், தெரிஞ்சு கொள். படிக்காத போனா, நீ என்னைப் போல இப்படி அழுது கொண்டு வெயிலே தனியா நடந்து போக நேரும். அதனாலே சமத்தா படிக்க வேணும்" என்று உபதேசித்துக் கொண்டு மீண்டும் மேலே நடக்கலுற்றாள்.

11

உள்ளத்திற்குத் தாங்கொணாக் கசப்போ வேதனையோ ஏற்பட்டுவிடும் பொழுது, அதை உண்டாக்கிய மனிதர்களை விட்டு வேறு எங்கேனும் பெயர் தெரியாத ஒரு புது ஆத்திர எண்ணம் அநேகருக்கு ஏற்படுவது இயல்பு. அத்தகைய ஒரு எண்ணத்தின் தூண்டுதலினால் காந்திமதி ஆற்று நீரிலே நிர்ப்பயமாக, துணிச்

சலுடன் வெயிலைப் பொருட்படுத்ததாது தன்னந் தனியாக இடுப்பிலே ஒரு சுமையுடன் நடந்தாள். மனத் தைப் புண்படுத்தும்படி பேசிய அண்ணன், அபாண்ட மான பழியைச் சுமத்திய அண்ணி இவர்களை விட்டுப் போய்விட வேண்டும். எக்காரணம் கொண்டும் இவர்கள் முகத்திலே மீண்டும் விழிக்கக் கூடாது. வம்பர்களின் தூஷணையும் பொய் வதந்தியும் நிரம்பிய சூரியகாந்தத் தின் மண்ணை உதறிவிட்டு, கண்காணாத ஒரு புது இடத்திலே ஒரு புது வாழ்க்கையைக் காண வேண்டும் என்று விவரிக்க இயலாத ஒரு உள்ளத் துடிப்பிலே தூண்டப்பட்டவளாக வேகமாக ஆற்றைக் கடந்து மறு கரையை அடைந்தாள். தமயந்தியைக் கீழே இறக்கி விட்டு, மரம் ஒன்றின் நிழலில் களைப்பு மிக்கவளாக உட்கார்ந்து கொண்டாள்.

வீட்டை விட்டுப் புறப்பட்டதிலிருந்து அதுவரை அவள் உணர்ச்சி வேகத்தில் எங்கே செல்கிறோம் என்றே யோசிக்கவில்லை. ஆற்றிலிருந்த நீரின் தன்மையைச் சுமந்து கொண்டு மெல்ல வீசிய இளங்காற்றிலே அவளது மூளையின் கொதிப்பு சிறிது அடங்கியது. காந்திமதி யோசிக்கலுற்றாள். ஆமாம்! அவள் இப்பொழுது எங்கே போய்க் கொண்டிருக்கிறாள்?

"இந்த கேள்விக்குப் பதில் அளிப்பதுபோல் அவளது நினைவு சிறிது பொழுதிற்கு முன்பு முதலியார் தன்னிடம் அளித்த கடிதத்தைத் தொடர்ந்தது. புடவைத் தலைப்பிலே பத்திரமாக சுற்றிச் சொருகிக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தை நிதானமாகத் தேடி எடுத்து மரநிழலில் காலை நீட்டிக் கொண்டு சாவதானமாகப் படிக்க ஆரம்பித்தாள்.

சூரியகாந்தத்திற்கு வடக்கே முன்னூறு மைல்களுக்கு அப்பாலிருந்த தேவநகர் என்னும் நகரத்திலிருந்து நண்பர் ஒருவர் சம்பந்த முதலியாருக்கு அக்கடிதத்தை எழுதி யிருந்தார். தேவ நகரில் ஏழைப் பெண்களுக்கென்று

'அருணோதயம்' என்ற பெயர் கொண்ட அனாதை ஆச்ரமம் இருப்பதாகவும் கடந்த பல வருஷங்களாக திருமதி அசலாம்பிகை என்னும் ஸ்திரீ அதை மிக்கத் திறமையுடன் நடத்துவதாகவும், முதலியார் சிரத்தை கொண்டிருக்கும் அந்த ஏழைச் சிறுமியை அந்த ஆச்ரமத்திலே சுலபமாகப் படிக்கச் சேர்த்துவிட முடியும் என்றும் அதெற்கென்று தனியே பொருட் செலவு அதிகம் தேவையில்லை என்றும் கண்டிருந்தது.

கடிதத்தைப் படித்து முடித்ததும் காந்திமதி, தான் போகுமிடத்தைப் பற்றித் தீர்மானித்து விட்டாள். அன்றைய இரவு வண்டியிலே அவளும் தமயந்தியும் புறப்பட்டு தேவநகர் சென்று விட வேண்டியது; அங்கே சென்ற பிறகு அருணோதயம் என்ற அந்த அனாதைக் குழந்தைகளின் ஆச்ரமத்தைத் தேடிக் கண்டு பிடிப்பது சிரமமான காரியமல்ல. ஆச்ரமத்தைக் கண்டு பிடித்த வுடனே ஆச்ரமத் தலைவியிடம் நேரிலே சுஷ்டங்களை எடுத்துக் கூறி தமயந்திக்குக் கல்வி கற்பித்து ஆளாக்கும் பொறுப்பை அந்த அம்மாள் வசம் ஒப்படைத்துவிட்டால் காந்திமதியின் ஒரு பெரும் கடமை பூர்த்தியாகி விடும். அதற்குப் பின் இந்தப் பரந்த உலகிலே அவள் தன்னைக் காத்துக்கொள்ள ஏதேனும் ஒரு வழி பிறக்காமலா போய்விடும்? அப்படியே காந்திமதிக்கு வாழ்வதற்கு ஒருவகை இல்லாது போய்விட்டால், கேவலமான துன்பம் நிறைந்த அந்த அற்ப ஆயுளை ஒரேயடியாக முடித்துக்கொள்ள எவ்வளவோ வழிகள் இருக்கின்றன- இப்படியாக அவள் சிந்தனை தொடர்ந்தாற் போல் ஓடியது.

சிந்தனையின் நடுவே அவளுக்குத் திடீரென்று ஒரு கவலையும் ஏற்பட்டது. தேவநகர் புறப்பட்டுப் போவ தெல்லாம் சரி, முதலில் அங்கே செல்வதற்கு ரயில் கட்டணத்திற்குப் பணம்? கையில் கால் அணாக் கூட

பணம் இருக்கவில்லை. தன்னுடையது என்று இருந்த அந்த ஒரு ஆபரணத்தையும் விற்றாகி விட்டது. ரயில் செலவிற்குக் கொஞ்சம் பணம் மிகவும் அவசிய மாயிற்றே? முதலில் அதற்கென்ன வழி! மீண்டும் ஆற்றைக் கடந்து ஊர் சென்று முதலியாரிடம் நடந்ததைக் கூறி வழிச் செலவிற்கு ஏதாவது பெற்றுக் கொண்டால்? சே! என்ன தவறான யோசனை? அண்ணனுக்கு இது வரை ஒரு பெரும் பாரமாக இருந்தது போதாதென்று நண்பர் என உலகிலே சொல்லிக் கொள்ள இருக்கும் அந்த ஒரு நல்ல மனிதருக்கு அவள் ஏன் பாரமாக இருக்க வேண்டும்? இதுவரை அவளால் இவருக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தி போதும். இன்னமும் அவர் உதவியை நாடிச் சென்று மேலும் அவருக்கு அவள் தீங்கு இழைப்பது பாவம்!

அமிர்தத்தின் கற்பனைக் கதை பல சிறகுகளுடன் சூரியகாந்தம் முழுவதும் பறந்தோடியதும், ஊரில் உள்ள வம்பர்கள் நாக்கிலே நரம்பின்றி, அச்சமின்றி அவளது பெயரையும் அந்த உத்தம மனிதரின் பெயரையும் நாசப் படுத்தி விடுவார்கள். காந்திமதிக்கு இரக்கப்பட்டு உதவி செய்ய வந்த அந்த மனிதருக்குச் சாகுமளவும் வீண் அபவாதம் ஏற்பட்டிருக்கிறதே! அது ஒன்றே போதும். இனி எக்காரணத்தைக் கொண்டும் காந்திமதி அவரிடம் மேலும் உதவி எதிர்பார்ப்பது நியாயமே இல்லை. கூடவே கூடாதென்று பலவிதம் தனக்குள்ளே எண்ணி மனம் புழுங்கிய காந்திமதி மூளையைக் குழப்பிக் கொண்டு பலவாறு யோசித்தாள்.

தேவநகர் போய்ச் சேர கைச் செலவிற்கு ஒரு பத்து ரூபாயாவது வேணுமே! பணத்திற்கு வழி என்ன? இந்த பயங்கரமான பிரச்னையிலே வெகு நேரம் தன்னை அலட்டிக் கொண்டு மேலே என்ன செய்வது என்று குழம்பிக் கொண்டிருந்த அவளது கண்களில் எதேச்சை

யாக தமயந்தியின் காதுகளில் அணிவிக்கப் பட்டிருந்த சிறு பொன் தோடுகள் தென்பட்டன. தாங்க முடியாத மகிழ்ச்சியில் கவலையை உதறி விட்டு உற்சாகத்துடன் எழுந்தாள், கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறேனே முட்டாள் நான்' எனத் தனக் குள்ளே முணுமுணுத்துக் கொண்டவள். உவகையுடன் தமயந்தியை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு அந்த ஊரை நோக்கி வேகமாக நடந்தாள்.

தமயந்திக்குக் கல்வி அளிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என அவனை எச்சரிப்பது போல் காந்தி மதியின் ஒவ்வொரு முயற்சியிலும் ஒரு முட்டுக்கட்டை குறுக்கே வந்து வீழ்ந்து கொண்டேயிருந்தது. அந்த ஊரின் கடைத்தெரு முழுவதும் அன்றைய பகல் வெயில் தன் தலைமீது அடிக்க, தமயந்தியைச் சுமந்து கொண்டு தேக முழுவதும் வியர்வை வழிந்தோட, பசியினால் கால்கள் தள்ளாட, காசுக் கடையைத் தேடிக் கொண்டு அலைந்தாள்.

அந்த ஊர் கடைத் தெருவிலிருந்த இரண்டு மூன்று பழைய நகை வாங்கும் கடைக்காரர்கள். அவள் அணிந்த அந்தச் சிறு ஆபரணத்தை வாங்கிப் பார்த்து விட்டு, தங்களுக்கு அது தேவையில்லை என்று தலையசைத்து விட்டனர்.

கடைசியாக, அஸ்தமிக்கும் சமயத்தில் அவள் கடைத் தெருவின் முடிவிலே இருந்த ஒரு 'பழைய நகை வாங்கும் கடை' யை அடைந்தாள். ஆரம்பத்திலே அவ ளுக்கு இருந்த உற்சாகம் எல்லாம் குறைந்து, சோர்வும் துயரமும் தாளாது அவளுக்கு அழுகை வந்து விடும் போலிருந்தது. எல்லாக் கடைக்காரர்களிடமும் கூறிய ஒரே பல்லவியை அந்தக் கடை முதலாளியிடமும் கூறிவிட்டு, அந்த நகையை அவர் கையில் அளித்துவிட்டு,

பதிலுக்காகப் பொறுமையுடன் திண்ணைமீது உட்கார்ந்து கொண்டாள்.

அவளது அவசரத்தை நன்றாகப் புரிந்து கொண்ட தனால், இந்த பேரத்தில் தனக்கு முடிந்தவரை பெரும் லாபத்தை அடைய எண்ணியவர் போல், கடை முதலாளி மிகவும் நிதானமாக நகையை உரைக்கல்லின் மீது பலமுறை தேய்த்துப் பார்த்துவிட்டு, "பூ!" என்று உதட்டை வளைத்தார்.

அவர் மேலே கூறுமுன் காந்திமதியின் நெஞ்சு பயத்தில் படபடவென்று அடித்துக் கொண்டது. இது ஒண்ணுக்கு உபயோகமில்லை என மற்றவர்களைப்போல் அவரும் கூறி விட்டால் அவளும் தமயந்தியும் என்ன கதியாவது என்ற பயத்திலே அவளது நா வறண்டு போய்விட்டது. "காக்காப் பொன்னு போல சுத்த மட்ட மாக இருக்குதே! என்னமோ அவசரம்னு வந்திருக்கிறே. அரைப் பவுனுக்கு அஞ்சு குந்துமணி குறைவாக இருக்கு. உள்ளே அரக்கு வேறே இருக்குமோ; என்னவோ! சரி, ஒரு ரூபாய் கொடுக்கறேன். சரி தானே?" என்றார் தாராளமாக.

அதைக் கேட்ட காந்திமதிக்கு போன உயிர் மீண்டும் வந்தது போல் சிறிது மன ஆறுதல் ஏற்பட்டது "ஐயா உங்கள் தர்மமாக இருக்கட்டும். அவசரமாக நான் வேத நகர் போக வேண்டியிருக்கிறது. ரயில் செலவுக்குக்கூட இந்தப் பணம் காணாது. ஒரு மூணு ரூபாய் கூடப் போட்டு சேர்த்துக் கொடுங்கள்" என கெஞ்சிக் கேட் டாள். முன்பின் தெரியாத ஒரு மனிதனிடம் இவ்வாறு கெஞ்சிக் கேட்க நேர்ந்து விட்டதே என்ற நினைவில் அவமானத்தினால் அவள் முகம் சிவந்து போயிற்று. துக்கத்தினால் வார்த்தைகள் தடுமாறின. கண்களை நீர் மறைத்தது.

பெண்களின் கண்ணீரையும், கொஞ்சம் பேச்சுக்களை யும் கண்டு அசைந்து கொடுக்கும் ஆசாமியல்ல அந்தக் கடைக்காரர். "ஏதோ நான் கொடுத்த புண்ணியம். அதற்கு மேலே அரைத்தம்படி கூட இந்த நகை பெறாது. இஷ்டமிருந்தால் கொடு, இல்லாவிட்டால் மகராஜியாக எடுத்துக் கொண்டு போய்வா!" என நிர்த்தாட்சண்ய மாகப் பேசினார்.

கடன் வாங்கியும் பட்டினி என, தன்னிடமிருந்து ஒரு நகையை விற்றும் அந்தப் பணம் தன் சமயத்திற்கு உதவாது, அமிர்தம் வசம் சிக்கிவிட்டதையெண்ணிக் காந்திமதியின் உள்ளம் வேதனையினால் குமுறியது. பிச்சை கேட்பதுபோல் அல்லவா கடைக்காரனிடம் பொருளைக் கொடுத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது என்று எண்ணித் துயரத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

கால்மேல் காலைப் போட்டுக் கொண்டு, திண்டின் மீது உல்லாசமாகச் சாய்ந்து கிடக்கும் அந்தக் கடை முதலாளி, பசியுடன் எச்சில் இலைக்குத் துடித்துக் கொண்டு வாலையாட்டியபடி காத்து நிற்கும் ஒரு தெரு நாயைப் பார்ப்பது போல் அவளை அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்துவிட்டு, மூக்குக் கண்ணாடியைச் சரிப் படுத்திக் கொண்டு பத்திரிகை ஒன்றைப் படிக்க ஆரம் பித்தார்.

பொழுது நன்றாக அஸ்தமிக்குமுன் அதை விற்றுப் பணமாக்கி இரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டும். வேறு ஒரு கடையில் பார்க்கலாம் என்றாலோ, கடைத் தெரு வில் அதுதான் கடைசிக்கடை. மேலும் பேரம் பேசிக் கொண்டு அலைந்து கொண்டிருக்கப் பொழுதும் இல்லை என்று துடித்த காந்திமதி, "ஐயா! இன்னும் ஒரு மூன்று ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் நலமாக

இருக்கும், இந்தப் பணம் ரயில் செலவிற்குக் கூடப் பத்தாது" என்றாள் மீண்டும் கெஞ்சும் குரலில்.

பத்திரிகையைத் தொப்பென்று கீழே விசிறிப் போட்ட கடைக்காரர், மூக்குக் கண்ணாடி வழியே அவளை விறைத்துக் கோபத்துடன் பார்த்தார். "என்னம்மா நீ ஒண்ணு. பெரும் ரோதனையாக இருக்கிற. போனாப் போவுதுன்னு பார்த்தா பெரிய தொண தொணப்பாக இருக்கிறியே. உனக்கு ஆயிரம் செலவுகள் இருக்கும். அதுக்கு நான் ஜவாப்தாரியா!" என்று கடுமையாகப் பேசினார்.

காந்திமதிக்கு, அவமானத்தினால் அழுகை பொத்துக் கொண்டு வந்து விடும் போலிருந்தது, "சரி ஐயா! கொடுங்கள்!" என்று குனிந்த தலையை நிமிராது தழதழத்த குரலில் கேட்டாள்.

பெட்டியிலிருந்து பணத்தை எண்ணி எடுத்துத் தரை மீது வைத்த கடைக்காரரின் கண்களில், காந்திமதி கரத்திலே பிடித்திருந்த துணி மூட்டை எதேச்சையாகப் பட்டது. காந்திமதியின் விரல்கள், குழப்பத்துடன் கசக்கிக் கொண்டிருந்த அந்தப் புடவையின் தலைப்பின் ஓரத்திலே மெல்லிய கோடுகள் போல் ஓட்டிக் கொண் டிருந்த வெள்ளி சரிகையைக் கண்ணுற்ற அவர். "மேலே ரெண்டு ரூபா வேணுமானால் கையில் வைத்திருக்கிற அந்தப் புடவைகளைப் பழைய விலைக்குக் கொடுத்துடு, அல்லது அடகு வச்சுட்டுப் போ. அந்த உதவி வேணு மானால் செய்கிறேன்" என்றார், திடீரென்று கொஞ்சம் இரக்கத்தை வரவழைத்துக் கொண்டு.

காந்திமதி பதில் பேசாது கையில் வைத்திருந்த புடவை மூட்டையைக் கடைக்காரர் அருகில் வீசிப் போட்டாள். தரை மீது அவர் எண்ணி வைத்த பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள் தமயந்தியைத் தூக்கி இடையில்

வைத்துக் கொண்டு அவர் முகத்தை மீண்டும் ஒரு முறை பார்க்கக்கூட பிடிக்காதவள் போல வேகமாக ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

தன் காதுகளிலிருந்த தோடுகளை காந்திமதி கழட்டிய பொழுது குழந்தைகளுக்கு இயற்கையாக ஏற்படும் ஆவல் தமயந்திக்கு ஏற்படத் தான் செய்தது. ஆனால், அவள் அதை உடனே கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வில்லை. கடைசியாகக் கையில் வைத்திருந்த நாவல் பழங்களைச் சுவைத்துத் தின்று கொண்டிருந்த அவளது கவனம் கடைத்தெருவிலே காணப்பட்ட பல்வேறு காட்சிகளிலும் சென்று விட்டிருந்தது.

காந்திமதியின் தோள்மீது சாய்ந்து கொண்டு ரயில்வே ஸ்டேஷனைச் சமீபித்துக் கொண்டிருந்த தமயந்தியின் உள்ளத்திலே பலவிதமான கற்பனைகள் எழும்பிக் கொண்டிருந்தன, அவைகளை வெளியே சொல்லாது நீண்ட நேரமாகத் தன்னுள்ளே அடக்கி வைத்துக் கொள்ள அவளால் முடியவில்லை. "பெரியம்மா! நான் கெட்டிக்காரியாகப் படிப்பேன். சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டு நல்ல பெண்ணாக இருப்பேன்" என்று திடீரென்று மெல்லிய குரலில் கூறினாள்.

அதைக் கேட்ட காந்திமதி தனக்குள்ளே லேசாகப் புன்னகை செய்தாள். "எனக்குத் தெரியும், நீ சமர்த்தாக இருப்பாய் என்று" என பதில் அளித்துவிட்டு, அந்தச் சிறுமியைத் தோள்மீது சற்று இறுக்கமாக அன்புடன் அணைத்துக் கொண்டாள். தான் கூற ஆசைப்பட்ட விஷயத்தைப் பேசாது மௌனமாகி விட மனம் ஒப்பாத தமயந்தி, "நான் படிச்சு ரொம்ப கெட்டிக்காரியானதும் வேலைக்குப் போவேன்; நிறையப் பணம் சம்பாதிப்பேன். அந்தப் பணத்திலே உங்களுக்கு நல்ல பட்டுச் சேலை ஒண்ணு வாங்கித் தருவேன். அந்தக் கடைக்காரன் எடுத்துக் கொண்டு விட்டான் அல்லவா, அது போனால்

போகட்டும். அதைவிட உசத்தியா நல்லதாக நான் உங்களுக்கு வாங்கித் தருவேன்" என மழலையுடன் கொஞ்சலாக உற்சாகத்துடன் மொழிந்தாள்.

அந்தச் சிறுமி தன்னிடம் காட்டிய களங்கமற்ற பரிவைக் கண்டு காந்திமதி உள்ளம் நெகிழ்ந்து போனாள். "என் சமத்துக் கண்ணே, என்ன பெரிய பேச்செல்லாம் பேசுகிறாய்! நீ சௌக்கியமா நல்லா இருடியம்மா, என் செல்வமே!" என அன்புடன் மொழிந்த அவள் அந்தக் குழந்தையின் கன்னத்தின் மீது தன் முகத்தை வைத்து ஆசையுடன் அழுத்திக் கொண்டாள்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு தேவநகர் ரயில்வே ஸ்டேஷனில் தோளில் தமயந்தியைச் சார்த்திக் கொண்டு காந்திமதி வண்டியை விட்டு இறங்கினாள். முன்பின் பார்த்திராத அந்தப் பெரிய ஸ்டேஷன் அவளுக்கு மிக்க பிரமிப்பை உண்டு பண்ணியது. டிக்கெட்டிற்குப் போனது போக மீதம் வைத்திருந்த ரூபாய் ஒன்றில், எட்டணாவை அவள் முதல் நாள் இரவு தனக்கும் தமயந்திக்கும் சாப்பிடக் கொஞ்சம் தின்பண்டங்கள் வாங்கிச் செலவழித்திருந்தாள். அவள் கையிலே மீத மிருந்தது எட்டணா நாணயத்துடன் நாகரிக வாழ்வின் சிகரம் போல் திகழ்ந்து கொண்டிருந்த தேவநகருக்குள்ளே காந்திமதி பிரவேசித்தாள்.

சூரியகாந்தத்தையும், தான் வாழ்க்கைப்பட்டிருந்த கிராமத்தையும் தவிர நகரங்களைக் கனவில் கூடப் பார்த்திராத அவளுக்கு எல்லாம் ஒரே பிரம்மிப்பாக இருந்தன. தெருக்களிலே சென்ற நானாவித வாகனங்களை ஆச்சரியத்துடன் வெறித்துப் பார்த்தாள். நடைபாதையிலோ கும்பலாக அங்குமிங்குமாகச் சென்று கொண்டிருந்த ஜனங்கள் அவளுக்கு மிகவும் புதுமையாகக் காணப்பட்டனர். வானளாவி நின்ற பல கட்டடங்களைப் பிரம்மிப்புடன் அண்ணாந்து பார்த்தாள். வழ

வழப்பாகப் பெருக்கி மெழுகிய கிராமத்துத் திண்ணை யைப் போன்று குறுக்கும் நெடுக்குமாகச் சென்ற தார் போட்ட பாதைகளை ஆச்சரியத்துடன் பார்த்தாள். தமயந்தியைத் தோளில் சுமந்து கொண்டு அருணோதயம் என்ற ஆச்ரமத்தைத் தேடிக் கொண்டு நகர் முழுவதும் சுற்றி வந்தாள்.

இரண்டு மணி நேரம் பலரைக் கேட்டுப் பல திக்கு களில் சென்றும் ஆச்ரமத்தை அடைய வழி தெரியாது தவித்த காந்திமதி, கடைசியாக மிகவும் பத்திரமாக வைத்திருந்த கடைசி எட்டணாவையும் செலவழிக்க நேர்ந்தது. ஊருக்குப் புதியவள் என்பதை அறிந்து கொண்ட ஒரு குதிரை வண்டிக்காரன், சில கஜ தூரத்திலே இருந்த ஆச்ரமத்திற்குத்தான் அழைத்துச் செல்வதாகப் பேரம் பேசி, எட்டணாவைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு நகரத்தை ஒரு முறை வலம் வந்து, கடைசியாக அவளை ஆச்ரமத்தின் வாயிலில் கொண்டு விட்டான்.

ஆச்ரமத்திற்கு வந்து விட்டோம். இனி கவலை விட்டது என்று பெருமகிழ்ச்சியடைந்த காந்திமதி, தலைவியைக் காணப் பொறுமையுடன் பல மணி நேரம் வராந்தாவில் கிடந்த ஒரு பெஞ்சுமீது உட்கார்ந்து கொண்டு காத்துக் கிடந்தாள். வெகு நேரத்திற்குப் பிறகு தன்னைப் பார்க்கத் தலைவி அழைக்கிறாள் என்பதைக் கேட்டதும், பரபரப் புடன் எழுந்து, குழந்தையைத் தூக்கிக் கொண்டு தலைவி வீற்றிருந்த அறைக்குள் ஆச்ரம வேலையாள் வழி காட்ட நுழைந்தாள்.

இரட்டை நாடி சரீரமும், தும்பைப் பூவைப்போல் வெளுத்த தலையும், தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுமாகக் காட்சியளித்த ஸ்ரீமதி அசலாம்பிகை முகத்திலே கோபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சாப்பாட்டிற்கு இல்லை என்றும், தாயார் இல்லை

யென்றும் இன்னும் பல காரணங்கள் கூறிக்கொண்டும் அன்று காலை ஆச்ரமத்தில் குழந்தைகளை அனுமதிக்க வந்திருந்த பலரும் அவளது பொறுமையை ஏற்கெனவே சோதித்து விட்டிருந்தனர். துயரம், துன்பம், தரித்திரம், கொடுமை என்பவை போன்ற வார்த்தைகளை அடிக்கடி கேட்டு அலுத்துப் போயிருந்ததனால் ஸ்ரீமதி அசலாம்பிகையின் உள்ளம் மரத்துப் போயிருந்தது.

காந்திமதி மூச்சுவிடாது தன்னைப் பற்றியும் தமயந்தியைப் பற்றியும் சோகம் பொங்கக் கூறிய நீண்ட கதையை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவள் முடிவில் "ம்"! என்று பதிலுக்குக் கனைத்துவிட்டு, "அம்மா! உனக்கு இது சமயம் நான் உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். ஏற்கெனவே இங்கே வந்து தங்கியிருக்கும் குழந்தைகளைப் போஷித்துக் கவனிக்கவே தற்சமயம் கைவசமிருக்கும் நிதி போதவில்லை. இன்னும் இரண்டு வருஷத்திற்கு நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை" என்றாள்.

பெரும் நம்பிக்கையுடன் வந்திருந்த காந்திமதிக்கு இதைக் கேட்டதும் தலை சுற்றியது.

மேலே பேசிக் கொண்டிருக்கப் பிரியமற்றவள் போல மேஜை மீது குவிந்து கிடந்த காகிதங்களைப் பரபரப்பாக அள்ளி மேஜை அறைக்குள் திணித்து விட்டு அசலாம்பிகை அம்மா விறுக்கென எழுந்தாள். "இன்னும் ஏனம்மா நின்று கொண்டிருக்கிறாய்? அதுதான் பதில் சொல்லி விட்டேனே!" என்று கூறுவதுபோல் காந்தி

மதியை மூக்குக் கண்ணாடி வழியே ஒரு முறை உறுத்துப் பார்த்துவிட்டு, "பையா! டிரைவரை வண்டி கொண்டு வரச் சொல். மீட்டிங் கூடும் நேரமாயிற்று! சீக்கிரம்!" என உத்தரவிட்டாள்.

காந்திமதி எதுவும் மேலே பேசுமுன், புயற்காற்றைப் போல் வேகமாக ஆடைகள் சப்திக்க நடந்து சென்று, வராந்தாவின் மறுகோடியை அடைந்து விட்டாள் அந்த அம்மாள்.

'அம்மா!' என்று தீனமாக எழுந்த காந்திமதியின் குரல் நெஞ்சிற்குள்ளேயே அடங்கிவிட்டது. இவ்வளவு எடுத்துக் கூறிக் கெஞ்சிக் கேட்டபிறகும் மனம் இளகாது நிர்த்தாக்ஷண்யமாகப் பதில் அளித்துவிட்ட அந்தப் பெண்மணியின் பின்னால் ஓடி. மீண்டும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. ஆகவே, அவள் மௌனமாக தமயந்தியைச் சுமந்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

வராந்தா ஓரத்தில் நின்று கொண்டிருந்த வேலைக்காரன் உடனே ஓடிவந்து அறைக் கதவுகளைச் சாத்தித் தாளிட்டுப் பூட்டி விட்டு அப்பால் சென்று விட்டான். வராந்தாவினின்று தள்ளாடியபடி கீழே இறங்கித் தோட்டத்திற்குள் வந்த காந்திமதி சுற்று முற்றும் பார்த்தாள். சற்றுத் தொலைவில் ஆச்ரமத்திலிருந்த குழந்தைகளில் சிலர் மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த சிறு ஊஞ்சல் ஒன்றில் ஆடிக் கொண்டு, கூக்குரலிட்டு மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்த காட்சி கண்களுக்குத் தென்பட்டது. அனாதைக் குழந்தைகள் எனினும், அவர்களது மகிழ்ச்சிக்குச் சிறிதும் குறைவில்லை என்பதுபோல், காற்றிலே மிதந்து வந்த அவர்களது சிரிப்பின் ஒலி மிகவும் குதூகலமாகத் தொனித்தது. சிட்டுக் குருவிகள் போல் ஓடியாடி விளையாட

அவர்களுக்கு காலும் கையும் உரமாக இருந்தன. அந்த பாக்யம் கூட தமயந்திக்கு இருக்கவில்லையே?

அனாதை என்பதுடன் நொண்டிப் பெண்ணாக, தத்தித் தத்தி நடந்து கொண்டு வாழ் நாட்களைக் கழிக்க வேண்டியிருந்த மிகவும் துர்பாக்கியசாலி. எவ்வளவோ மனமுருகி அவளைப் பற்றி எடுத்துக் கூறியும் தலைவி அசைந்து கொடுக்காது கடுமையாக 'இடம் இல்லை' என்று மறத்து விட்டது காந்திமதிக்குத் தாங்க முடியாத பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

தோட்டத்திற்குள் மெல்ல நடந்து வந்த அவள் அங்கே கிடந்த சிமெண்ட் மேடையருகில் வந்ததும் தமயந்தியை இறக்கி, அதில் உட்கார வைத்துவிட்டு, பித்தம் பிடித்தவள் போல் செயலற்று நின்றாள். பழக்கமற்ற நகரம்; தெரிந்தவர்கள் என்று போய் அண்டிக்கொள்ள யாரும் அற்ற புதிய ஊர். செலவிற்குக் கையில் காலணா நாணயம் கூட இல்லாத ஒரு பயங்கர நிலை. எந்த ஒரு நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு, எல்லாவித கஷ்டங்களுக்கும் துணிந்து புறப்பட்டு வந்தாளோ, அந்த ஒரு நம்பிக்கையும் சற்று முன், தலைவி அளித்த பதிலில் தவிடு பொடியாகி விட்டது. இனி அவன் என்ன செய்வாள்? எங்கே போவாள்? யாரிடம் உதவி பெறுவாள்? தன் நிலைமையை எண்ணிப் பார்த்த காந்திமதியின் நெஞ்சு துக்கத்தின் சுமை தாளாது வெடித்துவிடும் போலக் குமுறியது. கண்களை நீர் மறைத்துக் கொண்டது. துயரத்தினால் துடித்த தன் உதடுகளைப் பற்களால் கடித்துக்கொண்டு முன்னே தெரிந்த நீல வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

முந்திய நாள் போதிய ஆகாரமில்லாததனால் தமயந்திக்கு அன்று காலை பசியை வெகு நேரம் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. மூக்குக் கண்ணாடி

வழியே முறைத்துப் பார்த்த அந்த அம்மாள் எதிரே பேசப் பயந்து கொண்டு, அவள் அது வரையில் வாளா இருந்தாள். தோட்டத்து சிமெண்ட் திண்ணை மீது உட்கார்ந்திருந்தபடி தன்னைச் சுற்றிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவளது கவனம். சற்று தூரத்தில் தெரிந்த ஓட்டுக் கட்டடம் ஒன்றின் பக்கம் சென்றது. அவளை ஒத்த பல சிறு குழந்தைகள் எங்கிருந்தோ சந்தோஷத்துடன் ஆரவாரித்துக் கொண்டு கும்பலாக ஓடிவந்து வராந்தா அருகில் கூட்டமாகச் சேர்ந்து கொண்டனர்.

அறையிலிருந்து வெளியே ஒரு பெரும் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு வந்த ஒரு பெண்மணி, "கூச்சல் போடாதீர்கள்! ஒருவர் பின் ஒருவராக வரவேணும்?" என அதட்டி விட்டு, பாத்திரத்திலிருந்த பாலைச் சிறு கிண்ணங்களில் வார்த்து, அந்தக் குழந்தைகள் ஒவ்வொரு வருக்கும் அளித்த வண்ணமிருந்தாள். கன்னங்களின் மீது வழிய விட்டுக் கொண்டு அவசரமாக அதை அவர்கள் அருந்துவதைக் கண்ட தமயந்தியின் நாவில் நீர் சுரந்தது. பசி வயிற்றைக் கிண்டியது. காந்திமதியின் புடவைத் தலைப்பை மெல்லப் பிடித்து இழுத்து, 'பெரியம்மா! அங்கே பாருங்க! அது போல எனக்கும் இங்கே சாப்பிட பால் கொடுப்பாங்களா?" என்று கேட்டாள்.

'பாலா? இன்னும் கொஞ்ச நாழி இங்கே நின்று கொண்டிருந்தால் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் தள்ளி விடுவார்கள்' என்று துக்கத்துடன் பதில் அளித்த காந்திமதி கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

'ஏன் தரமாட்டாங்க? அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் கொடுக்கிறாங்களே! அவங்களைப் போல் நான் நல்ல

பிள்ளை இல்லையா? பெரியம்மா, எனக்கு ரொம்பப் பசிக்குதே!" என்று ஏக்கத்துடன் வினவினாள் தமயந்தி.

காந்திமதிக்கு துக்கத்தினால் நெஞ்சு பிளந்து விட்டது போல பெரும் வேதனை ஏற்பட்டது. 'இவ்வளவு சாதுர்ய மாகப் பேசுகிற உனக்கு ஆண்டவன் அதிர்ஷ்டத்தைக் கொஞ்சமும் இல்லாமல் வைத்துவிட்டானே!' என்று முணுமுணுத்தபடி அந்தக் குழந்தையின் நெற்றி மீது சுருள்களாக விழுந்த கேசத்தை விரல்களால் அன்புடன் கோதி விட்டாள். ஆனால், அடுத்த கணம் காந்திமதியின் கூற்று முற்றிலும் தவறு என்று நிரூபிப்பது போல் அதிர்ஷ்ட தேவதை கங்காதர முதலியார் வீட்டு வேலைக் காரி பாஞ்சாலி ரூபத்தில் தோட்டத்திற்குள் பிரவேசித் தாள்!

எஜமானியம்மாள் தன்னிடம் அளித்த கடிதம் ஒன்றை எடுத்துக் கொண்டு அசலாம்பிகை அம்மாளைக் காண விரைந்து வந்து கொண்டிருந்த பாஞ்சாலி, தோட்டத்திற் குள் நுழைந்த உடனேயே, ஆபீஸ் அறையின் கதவுகள் மூடி பூட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். தான் வருவதற் குள் ஆசிரமத்தின் தலைவி புறப்பட்டு வெளியே சென்று விட்டாள் என்பதை ஊகித்துக் கொண்டாள். எனினும், அதை ஊர்ஜிதம் செய்து கொள்ளச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, வேகமாக சிமெண்ட் திண்ணையருகில் வந்து, 'என்ன சிவகாமி, உன் பாடு கொண்டாட்டம் போலிருக்குது! அம்மா வெளியே புறப்பட்டுப் போனதும், வேலையைக் கவனிக்காம இங்கே வந்து நின்னுக்கிட்டு இருக்கிறே!' என்று உற்சாகமாக உரத்த குரலில் கேட்டு விட்டு, மிக்க உரிமையுடன் திண்ணையருகில் நின்று கொண்டிருந்த பெண்மணியின் முதுகில் கையை ஓங்கி தட்டிக் கொடுத்தாள்.

திடுக்கிட்டுத் திரும்பிய காந்திமதியைக் கண்ட பாஞ்சாலி திகைத்துப் போய்விட்டாள்.

"மன்னிச்சுங்கோங்க அம்மா! இந்தக் கண்டாங்கி கட்டம் சேலையைப் பார்த்ததும் என் சிநேகிதி சிவகா மின்னு விளையாட்டுத்தனமாகத் தட்டி விட்டேன்' மிகவும் அச்சத்துடன் சமாதானம் கூறினாள்.

'அதனால் என்ன? கவலைப்படாதே!' என்று தினறிய காந்திமதி, கண்களில் பெருகிய நீரை, சிரமப்பட்டு அடக்கிக் கொள்ளும் நிமித்தம் முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டாள்.

'யாரோ ஊருக்குப் புதியவள் போலிருக்கிறது. குழந்தை யுடன் ஆசிரமத்திற்கு வந்திருக்கிறாள். என்ன காரணத் தினாலோ பாவம், வெகு நேரமாக அழுது கொண்டிருக் கிறாள் போலிருக்கிறது. முகமும் கண்களும் சிவந்து மிகவும் பரிதாபமாக இருக்கிறதே, எனத் தனக்குள்ளே எண்ணி இரக்க வசப்பட்ட பாஞ்சாலி, தான் வந்த காரியத்தைச் சற்று மறந்தவளாக, "அம்மா! நீங்க ஊருக் குப் புதியவங்களா? ஏன் இங்கே நின்று கொண்டிருக் கீங்க? இந்தக் குழந்தையை இங்கே சேர்க்கிறதுக்குக் கொண்டு வந்தீங்களா! அம்மா எங்கேயோ வெளியே போயிருக்காங்க போலிருக்கு. வர மணி ஒண்ணாகும். அதுக்கப்பாலே மூணு மணிக்கு மறுபடி ஆபீஸுக்கு வருவாங்க. இப்பத்தான் இங்கே நீங்க வந்தீங்களா!" என அனுதாபத்துடன் மூச்சு விடாது கேட்டாள்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு காந்திமதி நிமிர்ந்து தன் எதிரே நின்று கொண்டிருந்த அந்த இளம் பெண்ணை ஏக்கத்துடன் பார்த்தாள். பாஞ்சாலியின் வதனத்திலே பொங்கி நின்ற கருணை அவளது உள்ளத் நிற்குக் கொஞ்சம் அமைதியை உண்டு பண்ணவே' "அம்மா! ஆசிரமத் தலைவியைப் பார்த்து விட்டேன். இங்கே குழந்தையைச் சேர்த்துக்கொள்ள இடம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இதையே நம்பிக் கொண்டு புறப்பட்டு வந்திருக்கும் எனக்கு எங்கே போவதென்று

தெரியவில்லை. நானும் இந்தக் குழந்தையும் யாருமற்ற அனாதைகள், என்னைவிட இந்தக் குழந்தை மிகவும் துர்ப்பாக்கியசாலி. நீயே பார்; இந்தச் சின்ன வயதிலே விதி இவளுக்குக் கொடுத்திருக்கும் பரிசைப் பார்" என்று துக்கத்துடன் திணறிவிட்டு மேலே பேச முடியாது நிறுத்திக் கொண்டாள்.

அழுக்கடைந்த சேலையும், வாராத அலங்கிய கூந்தலும், களைப்பு நிறைந்த முகமுமாக இருந்த போதிலும், காந்திமதியிடம் காணப்பட்ட அலாதியான தொரு சோபை மிகுந்த தோற்றம், பார்த்த அளவிலே பாஞ்சாலியின் மனத்தைச் சட்டெனக் கவர்ந்து விட்டது.

சிமெண்ட் திண்ணை மீது உட்கார்ந்திருந்த அழகிய சிறுமியையும் அவளது ஊனமான காலையும் வியப்புடன் சிறிது நேரம் வெறித்துப் பார்த்த அவள், பச்சாதாபத்துடன், "ஐயோ! பாவம்! நடக்கிறதுக்கு முடியாத ஊனமான குழந்தையின்னு சொல்லிக்கூட, அம்மா இடமில்லைன்னுட்டாங்களா?" என வினவினாள்.

காந்திமதிக்குத் துக்கம் தொண்டையைப் பிடித்துக் கொள்ளவே 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

"அப்படியா!" என்று கேட்ட பாஞ்சாலிக்கு அசலாம்பிகை அம்மாள் மீது கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. "இடமில்லையா! நேற்றுகூட இரண்டு குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டாங்களே!" எனத் தனக்குள்ளே அதிசயப்பட்டுக் கொண்டு சிறிது நேரம் யோசித்தாள். பிறகு திடீரென்று காந்திமதி பக்கம் திரும்பி அன்புடன் அவள் தோள் மீது கரத்தை வைத்துக் கொண்டு, "அம்மா! நீங்க என்னோட கூட இப்ப வாங்க, இந்தக் குழந்தையை இங்கே சேர்த்துவிட ஒரு வழி பண்ணுகிறேன். எங்க எஜமானி அம்மா ஒரு சிபாரிசுக் கடுதாசி கொடுத்தாப் போதும். இந்த அசலாம்பிகை அம்மா வாயை மூடிக்கிட்டு உள்ளே சேர்த்துப்பாங்க. நேத்துக்கூட அப்படியே இரண்டு குழந்தைகளை இங்கே சேர்த்தோம் நாங்க. எங்க எஜமானியம்மாளுக்கு இந்த ஆசிரமத்திலே ரொம்பச் செல்வாக்கு உண்டு. அவங்க மாமனார் இதுக்கு நன்கொடையாக இருபது ஆயிரம்ரூபா போன மாசம் கொடுத்திருக்கிறார். அதனால், எங்க எஜமானியம்மா ஒரு வார்த்தை சொன்னாப் போதும்!" என்று கூறினாள் சந்தோஷத்துடன்.

காந்திமதிக்கு ஏற்பட்ட திகைப்பிலும் ஆனந்தத்திலும் சட்டென்று பேச முடியவில்லை "இந்த உதவி செய்தால் உனக்கு ரொம்பப் புண்ணியம். வயசிலே என்னைவிட மிகவும் சிறியவள் நீ. இந்த ஆறுதல் வார்த்தை சொன்னதற்கு உன் காலில் விழுந்து கும்பிட வேணும் போல் என் நெஞ்சு துடிக்கிறது" என்றாள் நன்றி வசப்பட்ட உணர்ச்சியுடன்.

"புண்ணியம், பாபமெல்லாம் இருக்கட்டும் அம்மா. உலகத்திலே ஒருத்தருக்கொருத்தர் இந்த வாய் உபகாரம் கூடச் செய்யாட்டி, அப்புறம் மனுசங்கன்னு எதுக்குத் தான் இருக்கிறதாம்? இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு இப்பவே என்னோட வாங்க!" என்றாள்.

அதற்குப்பின் நடந்ததெல்லாம் காந்திமதிக்கு அதிசயமானதொரு கனவிலே நடப்பது போல் தோன்றியது. முன்பின் யாரையும் அறியாத ஒரு நகரத்தில், நிர்க்கதியான அந்த வேளையில் பாஞ்சாலி அவளுக்குத் தேவகன்னிகை போல் தோன்றினாள்.

"முதலிலே நீங்க ரொம்பப் பசியாக இருப்பீங்க போலிருக்கு. என் வீட்டுக்கு வாங்க கொஞ்சம் சாப்பிட்டு விட்டு எல்லாத்தையும் விவரமாகக் கேட்டுக் கொண்ட பிறகு பங்களாவுக்கு எங்க எஜமானி அம்மா கிட்ட

அழைச்சுப் போகிறேன்" என்றாள். பாஞ்சாலி காலையில் கொண்டு வந்து படைத்த பழைய சோறும் மோரும், பசிக்கு அமிர்தம் போல் சுவையாக இருக்கவே காந்திமதி யும் தமயந்தியும் திருப்தியுடன் சாப்பிட்டனர்.

குழந்தையின் முகத்தைக் கழுவி தலையை வாரி, உடையைத் தட்டிச் சரிபடுத்தி விட்டு, தன் தோற்றத்தை யும் சரிபடுத்திக் கொண்டு காந்திமதி பாஞ்சாலியைப் பின் தொடர்ந்தாள். அவளது வீட்டிலே தங்கியிருந்த அந்தக் கொஞ்சப் பொழுதில் அவள், தன்னையும் தமயந்தியையும் பற்றிய சகல விவரத்தையும் விடாது முழுதும் கூறி முடித்து விடவே, பாஞ்சாலி புறப்படுமுன் தன் எஜமானியிடம் என்னவெல்லாம் கூறி காரியத்தைச் சாதிக்க முடியும் என்பதை நன்றாக ஆராய்ந்து தீர் மானித்துக்கொள்ள சௌகர்யமாக இருந்தது.

கங்காதர முதலியாரின் ஒரே புத்திரன் தணிகாசலத் தின் மனைவி லீலாவதி, கலாசாலைப் படிப்புப் படித்து முதன் முதலில் முதலியார் வீட்டு வட்டாரத்திலே பட்ட தாரிணியான பெருமை படைத்த பெண்மணி. பிறந்த இடத்திலும் தந்தையின் ஒரே மகள் என்று செல்லமாக வளர்க்கப்பட்டவள். புகுந்த இடத்திலும் படித்த மருமகள் என்று கொண்டாடப்பட்டு வருகிறவள். செல்வத்தின் சுகத்திலே பிறந்தும், செல்வந்தருக்கு வாழ்க்கைப்பட்டும் லீலாவதிக்குச் சிறிய வயதிலிருந்தே, பொதுநல சேவைகள் மீது அபாரமான பிரியம். அவளது கருத்திற்கு இசைந்த ஒரு கணவனும் வாய்த்து விட்டதனால், அவளது அபிலாஷைகளைத் தடையின்றிப் பூர்த்திசெய்து கொள்ள மிகவும் எளிதாக இருந்தது.

இருபத்தைந்து வயது கூடப் பூர்த்தியாகாத சிறு வயதிலேயே அவள் நகரத்திலே மிகவும் பிரபலமாக இருந்த பல பொது ஸ்தாபனங்களில் அங்கத்தினர், அக்கிராசனாதிபதி, செயலாளர், நிதிக்காரியதரிசி என்ற

பலவித பதவிகளைத் தாங்கித் திறமையுடன் வகித்து வந்திருந்தாள். ஆரம்பத்திலே அவளது பொதுஜன ஊழியத்திலே அதிருப்தியடைந்து கோபங் கொண்டிருந்த அவளது மதிப்புக்குகந்த மாமனாரும், மாமியாரும் தங்கள் அருமை மருமகளின் பெயர், புகைப்படங்களுட னும் புகழுரைகளுடனும் பத்திரிகைகளில் அடிக்கடி தோன்றுவதைக் கண்டதும் அவளது வெளி அலுவல் களைப் பற்றிக் குறை கூறிப் பேசுவதை நிறுத்திக் கொண் டனர். "ஸ்ரீ மதி லீலாவதி சேவா நிலைய கட்டடத்தைத் திறந்து வைத்தார்." "ஸ்ரீமதி லீலாவதி கூட்டத்தினரை வரவேற்றுப் பேசுகையில் இவ்வாறு சொன்னார்." எனத் தமது மருமகளின் பெயர் நாளுக்கு நாள் பிரபலமடைந்து வருவதைக் கண்ட ஸ்ரீ மதிகங்காதர முதலியார், கொஞ்ச நஞ்சமிருந்த தனது அதிருப்தியையும் உதறிவிட்டு, பூரண சம்மதத்துடன் மருமகளின் கட்சியை ஆதரித்துத் தானும் பொதுநல சேவையில் வெளியே மருமகளுடன் ஒத்து ழைக்கும் அளவுக்கு வந்து விட்டாள். 'உன் மருகமள் பக்கத்திலே நீ கூட நிற்கிறது போட்டாவிலே விழுந்திருக் கிற்தே!' என்று பத்திரிகைகளில் வரும் புகைப்படங் களைக் கேலி செய்து கொண்டு மனைவியின் பிரபல் யத்தை அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருந்த முதலியாரும் கடைசியில் மெல்லப் பொதுநல ஊழியங்களின் மகிமை யினால் கவரப்பட்டு விட்டார்.

மனைவி, மருமகள் இருவரின் தூண்டுதலின் பேரில் புகழுக்கும் கௌரவத்துக்கும் ஆசைப்பட்டு, மிகவும் கருமி எனப் பிரசித்தி பெற்றிருந்த கங்காதர முதலியார், அருணோதயம் ஆசிரமத்திற்கு இருபதனாயிரம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்து, நகரத்தையே பிரமிக்கச் செய்துவிடும் அளவிற்கு மாறி விட்டிருந்தார்.

பொதுநல சேவையினால் இவ்வாறு கவரப்பட்டுத் தங்களை மறந்து ஊழியம் செய்து வந்த முதலியார்

குடும்பம் வசித்து வந்த 'கங்கா பவன'த்திற்குள் பாஞ்சாலி தனது புதிய சிநேகிதியை அழைத்துக்கொண்டு மிகவும் உரிமையுடன் பிரவேசித்தாள். வெளியே போவதற்குத் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு, உற்சாகத்துடன் பாட்டொன்றை மெல்லப் பாடியபடி மாடிப் படிகளின் மீது மானைப் போல் துள்ளி இறங்கி வந்து கொண்டிருந்த லீலாவதி, பாஞ்சாலியைக் கண்டதும், "நான் கொடுத்த கடுதாசியை அம்மாவிடம் கொடுத் தாயா? இன்னிக்கு சாயங்காலம் மறக்காமல் அந்த டீ பார்ட்டிக்கு வந்து விட வேணுங்கிறதையும் சொன் னியா?" எனக் கேட்டாள்.

"இல்லேம்மா. அதற்குள்ளே அவங்க வேறே எங்கேயோ வெளியே புறப்பட்டுப் போயிட்டாங்க. மத்தியானம் ஆபீஸ் வேளைக்குத்தான் போயி கடுதாசியைக் குடுத்துட் டுச் சொல்லிட்டு வரணும். அம்மா. நீங்க அவசரமா எங்கேயாவது போய்க்கிட்டு இருக்கீங்களா? வந்து..." என்று இழுத்து விட்டு, பாஞ்சாலி தயக்கத்துடன் தலையைச் சொறிந்து கொண்டு நின்றாள்.

சற்றுத் தூரத்திலே சுவர் ஓரமாக நின்ற புதிய பெண் மணியையும் அவள் இடையில் இருந்த குழந்தையையும் பார்த்த லீலாவதி, அவர்கள் விஷயமாக ஏதோ உதவி கேட்கவே பாஞ்சாலி இந்தப் பூர்வ பீடிகையெல்லாம் போடுகிறாள் என ஊகித்துக் கொண்டு, "என்ன விஷயம், சட்டுனு சொல்லு! நான் சும்மா கடைத் தெருவரை போகக் கிளம்பினேன். இந்த அம்மா யாரு?" என்று கேட்டுவிட்டு அங்கிருந்த சோபா ஒன்றில் அமர்ந்து கொண்டாள்.

பாஞ்சாலி தனது திறமை முழுவதையும் திரட்டிக் கூறிய அந்த சோக வரலாற்றை கதை போல் பிரமிப் புடன் கேட்டு லீலாவதியின் உள்ளம் பச்சாதாபத்தினால் வெகுவாகக் கரைந்து போயிற்று. பத்து வருஷ தாம்

பத்ய வாழ்க்கையில் தனக்கென்று ஒரு குழந்தை பிறக்க வில்லை என்ற குறை அவளது அந்தராத்மாவில் சதா குடி கொண்டிருந்ததனால், எந்தச் சிறு குழந்தையைக் கண்டாலும் அவளது உள்ளம் சட்டென்று நெகிழ்ந்து விடும். அதுவும் சற்று அழகான குழந்தை. நோயினாலோ பசியினாலோ வருந்திக் கண்ணீர் விட்டு அழும் காட்சியை அவளால் காணச் சகிக்கவே முடியாது. தமயந்தியின் அழகிய வட்ட வடிவமான சிறிய முகமும், சுருண்ட கூந்தலும் அவளைப் பெரிதும் கவர்ந்தன. அந்த அழகிய சிறுமியின் காலில் ஏற்பட்டிருந்த ஊனம் அவள் மனத்தை வருத்தியது.

"பாஞ்சாலி! கவலைப்படாதே! உன் சினேகிதிக்கு உதவி செய்கிறேன், சாயங்காலமே அசலாம்பிகையிடம் சொல்லி, நாளைக்கே இந்தக் குழந்தையை ஆச்ரமத்தில் சேர்த்துக்கொள்ளச் செய்கிறேன் என்றாள்.

காந்திமதிக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை விவரிக்கவே இயலாது. நன்றிப் பெருக்கினால் நாத் தடுமாற, கை குவித்து "நீங்க குழந்தை குட்டிகளுடன் க்ஷேமமாக இருக்கணும் அம்மா! இந்த உதவிக்கு இந்த ஏழை எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லவே முடியாது" என்று கூறிவிட்டு, தமயந்தியைப் பார்த்து, "இதோ பார் இந்த அம்மாவுக்குக் கைகுவிச்சு நமஸ்காரம் பண்ணு" என்றாள்.

வெட்கத்துடன் ஒரு கணம் தன் முகத்தைக் காந்திமதியின் தோளருகில் மறைத்துக் கொண்ட தமயந்தி, மெல்லிய குரலில் ரகஸ்யமாக, "பெரியம்மா, என்னைக் கூப்பிட்டுப் படிப்பு சொல்லிக் கொடுப்பாங்கன்னு நீங்க சொன்ன அம்மா இவங்க தானே? எனக்குத் தெரிஞ்சு போச்சு, இவங்கதான்னு" என மகிழ்ச்சியுடன் கூறினாள். ஏதோ நினைத்துக் கொண்டவள் போல்

காந்திமதி கூறிய படியே தன் சிறு கரங்களைக் குவித்துக் கொண்டு, வெட்கத்தினால் கன்னம் சிவந்து குழியிட, "நமஸ்காரம் அம்மா!" என்று மழலையுடன் கொஞ்சலாக லீலாவதியைப் பார்த்து மொழிந்தாள்.

யாழும் குழலும் மழலை மொழிக்கு முன் இனிமை யற்றவை என்று கூறிய தெய்வப் புலவரின் வாக்கு எவ்வளவு உண்மையானது என்று உணர்ந்து வியப் படைந்த லீலாவதி மெய்ம்மறந்து அந்தக் குழந்தையின் கபடமற்ற அழகிய முகத்தை ஆர்வத்துடன் பார்த்து, தன்னை மறந்து சிறிது நேரம் சிலை போல் வீற்றிருந்தாள்.

"இந்த குழந்தைக்குக் கட்டாயம் உதவி செய்து ஆச்ரமத்தில் சேர்த்துவிட வேண்டும்" என்ற நல்ல எண்ணம் அவளது உள்ளத்தை வியாபித்து நின்றது.

அன்று பகல் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிய தியாகராஜன் வாயிற் கதவு தாளிடப்படாது திறந்து கிடப்பதைக் கண்டான். சப்தமிடாது மெல்ல உள்ளே நுழைந்து, புத்தக மூட்டையைச் சுவர் ஓரமாக வைத்து விட்டு, முற்றத்தில் இறங்கினான். செம்பில் நீரை முகந்து எடுத்துக் கை கால்களைக் கழுவிக்கொண்டு, கடைக் கண்ணால் மெல்லத் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். மயானத்தை விடப் பயங்கரமானதொரு அமைதி வீட் டில் நிலவியிருந்தது. கூடத்துத் தரை மீது திறந்து கிடந்த பெட்டியையும் எதையோ பறிகொடுத்து விட்டவள் போல், அவிழ்ந்து கிடந்த கூந்தலை முடித்துக்கொள் ளாது தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அமிர்தத்தையும்

கண்ட அவனது நெஞ்சு படபடவென்று பயத்தில் அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. வழக்கம் போல் தந்தைக்கும் தன் சிறிய தாயாருக்கும் ஏதோ ஒரு பெரும் சண்டை நடந்திருக்கிறது என்பதை வீட்டின் பொதுத் தோற்றத்திலிருந்து விரைவில் புரிந்துகொண்ட அவனது மனம் கவலைப்படத் தொடங்கியது.

'சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குத் திரும்பி ஓடி விட வேண்டும். இல்லாவிட்டால் அப்பாவிடம் வீணா கப் பூசை வாங்கிக்கொள்ள நேரும் என்று தனக்குள்ளே எண்ணி அச்சமடைந்திருந்த அந்தச் சிறுவன், தாழ்வாரத் தில் மௌனமாக முன்னும் பின்னும் உலாவிக் கொண் டிருந்த சிவானந்தத்தைப் பாராதவன் போல் மிக விரை வாக சமையலறையின் பக்கம் ஓடிச் சென்றான். வழக்கம் போல் காந்திமதியை அங்கே காணவில்லை. அதற்குப் பதில், அவனது இரு சகோதரிகளும் சாப்பிட்டுக் கொண் டிருப்பதைக் கண்டான்.

அறைக்குள்ளே வந்து திருதிருவெனத் திகைப்புடன் விழித்து விட்டு, அடுப்பருகிலிருந்த ஜன்னல் வழியே பின் கட்டுத் தாழ்வாரத்தை எட்டிப் பார்த்தான். வழக்க மாகத் தாழ்வாரத்தின் தூண் ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் அருமைத் தோழி தமயந்தியைக் காணவில்லை. அவளது விளையாட்டு மரச் செப்புகளும், பொம்மைகளும், தரையில் தாறுமாறாக இரைந்து கிடந்தன. தியாகராஜனது கவலையையும், ஆவலையும் புரிந்து கொண்டவள் போல், மோகனா, விஜயாவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி விட்டுக் 'களுக்' கென்று சிரித்தாள். அதற்கு பதில் கூறுகிறவள் போல் விஜயா 'வீட்டிலே இல்லாத வங்களை சில பேர் எங்கேயோ தேடுகிறாங்க" என்று மெல்லிய குரலில் பாடிவிட்டுத் தங்கையுடன் சேர்ந்து சிரித்தாள்.

தன்னை அவர்கள் அவ்வாறு கேலி செய்து மகிழ்வ தைக் காண தியாகராஜனுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. எனினும், அமிர்தம்மாளுக்கு அஞ்சி அவன் அதைப் பொருட்படுத்தாதவன்போல் அலட்சியமாக அலமாரியிலிருந்த சோற்று வட்டில்களில் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு அவர்கள் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

குழம்புச் சோற்றை அள்ளி வாயில் திணித்துக் கொண்டு அதை விழுங்கு முன் "அம்மா! அண்ணா சாப்பிட வந்திருக்குது!" என்று மோகனா உரத்த குரலில் தாய்க்கு அறிக்கை விடுத்தாள்.

மறுகணம், வெறுப்பும் கடுமையும் பொங்கி வழியும் முகத்துடன் ஆத்திரமாக உள்ளே வந்த அமிர்தம், "இந்தச் சனியன் பிடித்தவள் உப்பு, ஊறுகாய் வைச்சிருக்கிற இடம்கூட எனக்கு வகையாகத் தெரியாது. நான் போட் டதைத் தின்னுவிட்டு எல்லாரும் இன்னிக்கு ஒழியுங்க ஆமாம்! சொல்லி விட்டேன்" என்று அதட்டிவிட்டு, மூலையிலிருந்த சோற்றுப் பானையைத் தரதரவென இழுத்து அறையின் நடுவில் வைத்தாள். அகப்பையினால் சோற்றை பரபரப்பாக அள்ளி, தியாகராஜனது வட்டி லிலே படைத்துவிட்டு அதன் மீது குழம்பைச் சொர் எனக் கொட்டினாள்.

"ஏண்டி மோகனா, விஜயா! இரண்டு பேரும் சாப்பிட் டாய் விட்டதுன்னா கையைக் கழுவிக்கிட்டுக் கிளம்புங்க. அது வேணும், இது வேணும் நின்னுக்கிட்டிருந்தீங்க, கழுத்தைத் திருகிப்புடுவேன், தெரியுமா!" என அதட்டிவிட்டு, வந்த வேகத்தில் அறையை விட்டு வெளியே சென்றாள்.

காந்திமதியையும் தமயந்தியையும் காணவில்லையே என்ற கவலையிலும், ஏதாவது கேட்டால் தந்தையின்

வீணான கோபத்திற்கு ஆளாக வேண்டுமே என்ற அச்சத் திலும், தியாகராஜனது பசி இருந்த இடம் தெரியாது மறைந்து விட்டது. வட்டிலிலே சிறிய தாயார் அள்ளிக் கொண்டு வந்து ஆத்திரத்துடன் போட்டிருந்த அவ்வளவு சோற்றையும் அவனால் விழுங்கவே முடியவில்லை. அவசரமாகச் சிரமத்துடன் போஜனத்தை முடித்துக் கொண்டு, முற்றத்திற்கு வந்து கையைக் கழுவிக் கொண்டான். யாரும் கவனிக்கு முன் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு சிட்டுக் குருவி போல் வாயிலுக்கு ஓடிவிட்டான். நாலைந்து வீடுகளுக்கு அப்பாலிருந்த ஒரு பாழடைந்த கூரை வீட்டின் திண்ணை மீது வந்து உட்கார்ந்து கொண்டு, தனக்கு இனி எவ்வித அபாயமும் நேர சந்தர்ப்பமே இல்லை என உணர்ந்த பின்புதான் அவனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

'காந்திமதி அத்தையை ஏன் காணவில்லை? தமயந்தி எங்கே போய்விட்டாள்? அவளையும் காணவில்லையே! சின்னம்மாவும் ஐயாவும் சண்டைபோட்டுக்கொள்ள வில்லை. சண்டை போட்டிருந்தால், சின்னம்மா அழுது கொண்டல்லவா இருப்பாள்? பின் ஏன், ஐயா அவ்வளவு கோபமாக இருந்தார்?'- இவ்வாறு பலவாறாகத் தனக்குள்ளே எண்ணிக் கொண்டு மிகவும் சஞ்சலத்தில் தவித்துக் கொண்டிருந்தான் தியாகராஜன். சற்றுத் தொலைவில், நிழல் ஓரமாகத் தோள்மீது கையைப் போட்டு அணைத்துக் கொண்டபடி அமிர்தத்தின் இரு பெண்களும் வந்து கொண்டிருப்பதைக் கவனித்து அவனுக்கு ஒரு யோசனை சட்டென்று உதயமாயிற்று.

"மோகனா! இங்கே வாயேன்!" என அழைத்த அவன் தன் சட்டைப் பையில் கையைவிட்டுத் துழாவி, மீத மிருந்த இரு மிட்டாய்களையும் எடுத்தான். "இந்தா, வாங்கிக் கொள்ளுங்க. உங்களுக்காகத்தான் கொண்டு

வந்திருந்தேன்" என்று ஆளுக்கொன்றாக எடுத்துத் தன் சகோதரிகளுக்குக் கொடுத்தான்.

"ஏன் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறே? பள்ளிக் கூடம் போக வேணாமா?" என விசாரித்த மோகனா, தன் கண்களை அகல விரித்துத் தலையை ஒருமுறை குலுக்கி அபிநயம் செய்து விட்டு, மிட்டாயை வாயில் அடைத்துக் கொண்டாள். சமயத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதென்பது போல், "ஆமாம்! அத்தையும் தமயந்தியும் எங்கே போயிருக்கிறாங்க மோகனா?" என வினவினான் தியாகராஜன்.

"மோகனா தோளைக் குலுக்கி விட்டு மிட்டாயைச் சுவைத்து விழுங்கி வாயைச் சப்புக் கொட்டினாள் "எனக்குத் தெரியாது; விஜயாவைக் கேளு" என்று குறும் புத்தனமாகப் பதில் அளித்து விட்டுச் சிரித்தாள். தான் அளித்த மிட்டாயை ஆவலுடன் வாங்கித் தின்று விட்டு சிறிதும் நன்றியின்றி அவள் அளித்த பதிலைக் கேட்ட தியாகராஜனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. தோளில் தொங்கிய புத்தகப்பையை எடுத்து ஓங்கி அவள் தலையில் ஒரு தடவை நன்றாக வலிக்கும்படி மோத வேண்டும் போல் துடிப்பு ஏற்பட்டது. என்றாலும் அந்த விஷமக்காரப் பெண்ணுடன் வீண் வம்பு பேசிப் பயனில்லை என நினைத்து "விஜயா! நீ நல்ல பெண் அல்லவா? நீ எனக்குச் சொல்லு. அத்தையும் தமயந்தியும் எங்கே போயிருக்கிறாங்க?" என்று கேட்டான் கொஞ்சும் குரலில்.

"எனக்கு இன்னொரு மிட்டாய் கொடுத்தா சொல்லு வேன்! இல்லாட்டி, சொல்ல மாட்டேன்" என்று பயமுறுத்தி பேரம் பேசினாள் விஜயா. வேறு வழியின்றி தமயந்திக்காக புத்தக மூட்டையில் ஒளித்து வைத்திருந்த மிட்டாய் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு, "சரி, இப்ப சொல்லு!" என்று கேட்டான் அவன்.

'வீட்டை விட்டு நட' அப்படின்னு அப்பா கோவிச்சுக் கிட்டு கத்தினார். 'இதோ போறேன்' அப்படின்னுட்டு அத்தை தமயந்தியை எடுத்துக் கொண்டு வெயிலிலே எங்கேயோ வெளியிலே போயிட்டாங்க. பள்ளிக்கூடத்தி லிருந்து வந்த நாங்க ரெண்டு பேரும் அப்பா திட்டு வாங்கன்னு பயந்துகிட்டு, இரேழியிலே ஒளிஞ்சிக்கிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தோம். இனிமே இந்த வீட்டுக்குள்ளே வரக்கூடா'துன்னு ஐயா சத்தம் போட் டார். அத்தையும், 'இனிமேலே நான் வரமாட்டேன்' அப்படின்னுட்டுப் போயிட்டாங்க." என விவரித்தாள் அவள்.

"போயிட்டாங்களா? இனி மேலே வரவே மாட்டாங் களா?" எனத் திகிலுடன் விசாரித்த தியாகராஜனின் இருதயம் வெடித்து விடும்போல் வேகமாக அடித்துக் கொண்டது.

"இனிமே வரவே மாட்டாங்க!" எனத் தலையை ஆட்டினாள் விஜயா.

"வர மாட்டாங்க. நீ இனிமே என்ன செய்வே? அத்தைகிட்டே போய்க் கோள் சொல்ல முடியாதே. நல்லா வேணும் உனக்கு! அந்த மிட்டாயை விஜயாவுக்கு மட்டும்தானே கொடுத்தே இரு, உன்னை அம்மாகிட்டே சொல்லி, என்ன செய்றேன் பார்!" என சீற்றத்துடன் கையை ஆட்டி பயமுறுத்திவிட்டு, கோபத்துடன் மோகனா தன் சகோதரியை விட்டுப் பள்ளிக்கூடத் திற்குப் புறப்பட்டாள்.

"ஆமாம்! அத்தை எங்கே போனாங்க? அது உனக்குத் தெரியுமா?" என அவன் கேட்கத் துவங்கு முன், "ஏ மோகனா! கொஞ்சம் இரு. நானும் வந்து விட்டேன்" எனக் கத்திக் கொண்டு விஜயா பறந்தோடிச் சென்று விட்டாள்.

தியாகராஜன் நேரே பள்ளிக்கூடம் செல்லவில்லை. புத்தகப் பையைத் தோளின்மீது போட்டுக் கொண்டு, அத்தையையும் தமயந்தியையும் தேடத் துவங்கினான். அத்தை இரண்டொரு சமயம் வேப்பம்பூ, கீரை இவைகளை முதலியார் வீட்டிற்கு அவனிடம் கொடுத்து அனுப்பியிருந்ததுண்டு. ஒரு சமயம் சம்பந்த முதலியார் வீட்டிற்கு அவள் போயிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றவே அந்தச் சிறுவன் கடும் வேகத்தில் ஓட்டமும் நடையுமாக முதலியார் வீட்டைச் சென்றடைந்தான்.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு முதலியார் தெருத் திண்ணையில் சாய்ந்து கொண்டு, தேவாரப் பாடல்கள் ஒதுண்ட புத்தகமொன்றை இசையோடு உரத்த குரலில் படித்துக் கொண்டிருந்தார். "ஐயா! ஐயா!" என்று மெது வாக தியாகராஜன் கூப்பிட்டது முதலில் அவருக்குக் காது கேட்கவில்லை. சாப்பிட்ட பின்பு கை கழுவ வாயிற்புறம் வந்த முதலியாரின் மனைவி, 'என்னப்பா தம்பி? எங்கே வெயிலிலே வந்தாப்பலே! அத்தை ஏதாச்சும் சொல்லி அனுப்பினாளா?" என்று வினவிய பொழுதுதான் முதலியார் புத்தகத்தைக் கீழே வைத்து வீட்டுத் தமக்கு முன் வந்து நின்று கொண்டிருந்த சிறுவனைப் பார்த்தார்.

"இல்லை" என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிய தியாகராஜனுக்குத் துக்கத்தினால் பேச முடியவில்லை. கண்களில் நீர் பொங்க, நாத் தடுமாற 'அத்தை இங்கு வந்தாங்களா?" என வினவினான்.

"வந்தாளே! கொஞ்ச நேரத்துக்கு முன்பே, ஆத்தி லிருந்து தண்ணி எடுத்துக்கிட்டு வந்தவ, இங்கே என் னோட கொஞ்சம் பேசிக்கிட்டு இருந்து விட்டுப் புறப்பட் டுப் போனாளே! ஏன் கேட்கிறே?" என்றாள் முதலியார் மனைவி.

"என்னடா நடந்திச்சு? சொல்லடா தம்பி? ஏன் அழுகிறே!" என அனுதாபத்துடன் மேலே முதலியார் கேட்கத் தொடங்கவே, தியாராஜன் வெட்கத்துடன் "ஒன்றுமில்லை" எனத் திணறிவிட்டு ஒரே ஓட்டமாக ஆற்றை நோக்கி ஓடினான்.

ஊர்ப் பிள்ளைகள் வந்து விளையாடும் நாவல் மரத்தடிக்குச் சென்று அங்கிருந்தபடியே சுற்றும் முற்றும் ஏக்கத்துடன் பார்த்தான். கோடை காலத்துப் பிற்பகல் வெயில் நெருப்பைப் போல் மிகவும் கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஆறு நீரும், அனலை வீசுவது போல் தோன்றிய நீலவானமும் தான் அவன் கண்களுக்குத் தென்பட்டன. தன்னைத் தனியே விட்டுவிட்டு, அத்தையும் தமயந்தியும் எங்கேயோ சென்று மறைந்து விட்டார்கள் என்பதை எண்ணிப் பார்த்த தியாகராஜனுக்குத் துக்கம் தாள முடியாது போகவே, ஓவென்று வாய்விட்டு வெகு நேரம் அழுது கொண்டே இருந்தான்.

அன்று இரவும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. தமயந்தியையும் அத்தையையும் பற்றிப் பலவிதமான கற்பனைகள் செய்து கொண்டு, படுக்கையில் புரண்ட வண்ணமாயிருந்தான். கூடத்துக் கயிற்றுக் கட்டிலின் மீது படுத்திருந்த சிவானந்தமும் தூக்கம் பிடிக்காது எழுந்து உட்கார்ந்திருந்தார். தாழ்வாரத்தில் தன் பெண்கள் அருகில் படுத்திருந்த அமிர்தத்திற்கும் அன்றிரவு நித்திரை வரமறுத்தது.

"இந்தாங்க! ஏன் இப்படி மனசை அலட்டிக்கிட்டு, தூங்காமல் உடம்பைக் கெடுத்துக்கறீங்க?" என்று கேட்ட அமிர்தம், எழுந்து உட்கார்ந்து அருகிலிருந்த விளக்கைப் பெரிதாக எரியும்படி தூண்டிவிட்டாள். அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த தியாகராஜன், தூங்கு

பவன் போல் கண்களை இறுக மூடிக்கொண்டு முகத்தைச் சுவர்ப் பக்கம் திருப்பிக் கொண்டான்.

"முதலியார் வீட்டுக்குத்தான் போயிருக்கிறாளான்னு கோடி வீட்டு குப்பனை விசாரிச்சுக்கிட்டு வரச்சொன்னேன். அவள் அங்கேயும் போகவில்லையாம்" என சிவானந்தம் வருத்தத்துடன் அரற்றினார்.

"எங்கேயோ போகட்டும்? அவ்வளவு ரோஷக்காரியா இருந்தா இருக்கட்டுமே! சித்தகூட அண்ணன்னு அவள் உங்களுக்கு மரியாதை வைச்சுப் பேசினாளா? நீங்க கிடந்து இப்படி மனசை அலட்டிக்கிறாப் போல. அவள் கவலைப்பட்டாளா! அண்ணன் மேலே கொஞ்சமாவது இரக்கம் இருந்தா, இத்தனை நேரம் வீட்டிற்குத் திரும்பி வந்திருக்க மாட்டாளா? நான் சொன்னா உங்களுக்குத் தப்பாகத்தான் தோணும். வெளியிலே அவளுக்கு யாரோ வேண்டியவங்க இருக்காங்க. அந்தத் துணிச்சலிலேதான் அவள் அப்படி ஆவேசம் பிடித்தவள் போல் புறப்பட்டுப் போனா" என்று அதட்டிப் பேசினாள் அமிர்தம்.

"இல்லை! எப்பவும் 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'ன்னு சொல்லுவாங்க, அதனாலே, கோபத்திலே நான் சொன்ன தகாத வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து உசிரை மாய்த்துக் கொண்டு விட்டால்..." என்று இழுத்தார் மனவேதனையுடன்.

"பூ! ஆற்றிலே குளத்திலே விழுந்து உசிரை விடற ஆளைப் பார்க்கவில்லை! நீங்க ஒரு சமயம் விழுந்தா விழுவீங்க. அவள் ஏன் விழுகிறாள்? அவள் எங்கேயோ போய், நல்ல சுகமா, அவள் இஷ்டம் போல், ஆளுவார் அடக்குவாரில்லாமே இருப்பாங்கறது நிச்சயம்" என்று ஆத்திரத்துடன் கத்திய அமிர்தம். தொடர்ந்தாற் போல் "உங்களுக்குத் தங்கச்சி மேலே அத்தனை ஆசையிருந்தா

ஏன் அவளை வெளியே போன்னு விரட்டினீங்களாம்? கடைசிலே ஏதாச்சும் பொல்லாப்பு வந்தால் 'எல்லாம் இவளால்தான் ஏற்பட்டது'ன்னு என்மேலே போடவா?..." என்று கோபத்துடன் இரைந்து கேட்டாள்.

மனம் வெதும்பிப் போயிருந்த சிவானந்தம், மனைவியுடன் தர்க்கிக்க விருப்பமில்லாது. "காந்திமதிக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அந்தப் பாவமெல்லாம் என்னைச் சேர்ந்ததுதான். நான் பழிகாரன்! இரக்கமில்லாத பாவி!' என்று துக்கத்துடன் அரற்றினார்.

அனாதையான தன் சகோதரியை வெளியே துரத்தியது மிகவும் பயங்கரமானதொரு பாவச் செயல் எனப் பச்சாதாபத்தினால் நொந்துபோன அவரது மனம் இடித்துக் காட்டவே, அவருக்கு மண்டை வெடித்து மூளை வெளியில் வந்து விழுந்து சிதறிவிடும் போலிருந்தது. இரு கரங்களாலும் தலையைச் சட்டெனத் தாங்கிக் கொண்டார். கணவன் இவ்வாறு தங்கைக்காகத் துயறுருவதைக் காணச் சகிக்காத அமிர்தம், முகத்தை வலித்துக் கொண்டு" இனிமே என்ன ஆனாலும் சரி. அவள் இந்த வீட்டிலே, நான் உயிரோட இருக்கிற வரைக்கும் நுழையக்கூடாது! எங்கேயாவது போய்த் தேடிக்கிடி அழைச்சுக்கிட்டு வந்தீங்க, அண்ணனும் தங்கையும் குடித்தனம் நடத்துங்க. நான் புறப்பட்டு என் பிறந்த வீட்டுக்குப் போயிடறேன்." எனப் பயமுறுத்திவிட்டு போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு படுத்து விட்டான்.

ஒன்றுவிடாது அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த தியாகராஜனின் நெஞ்சம் திகிலில் படபடவென அடித்துக் கொண்டது. "அப்பா கூறுவதுபோல், அத்தையும் தமயந்தியும் ஆற்றிலே விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டு விட்டால்..." இந்த நினைவுக்கு அவனுக்கு

மிகப் பயங்கரமான பல கற்பனைகளை உண்டாக்கவே. அவனால் அன்றிரவு சிறிதுகூடத் தூங்க முடியவில்லை.

காந்திமதி வீட்டை விட்டுச் சென்று இரண்டு மாத காலம் ஆகியும், சிவானந்தத்திற்கு அவளைப் பற்றிய தகவல் ஒன்றும் கிட்டவில்லை.

ஊரிலும் பலர் பலவிதமாகப் பேசுவதைப் பற்றிக் கேள்விப்பட்ட அவரது உள்ளம் வேதனையில் வெந்து உழன்றது. தாம் செய்த காரியம் மிகவும் அக்கிரமமானது என எண்ணித் தம்மையே கொன்று கொண்டிருந்தார். தமது உள்ளக் குமுறலை வெளியே சொல்லிக்கொள்ள, மனைவியின் கோபத்திற்குப் பயந்து ஆறுதல் மொழிகளுக்கு ஏங்கித் தவித்த அவர் அந்தச் சில நாட்களில் பாதியாக இளைத்துப் போய்விட்டார். பொருளற்ற பேச்சுக்களும் செயல்களும் அவரிடம் அதிகம் காணப்படவே, ஊரிலுள்ளவர்கள் சிவானந்தத்திற்கு தங்கையின் மறைவினால் பித்தம் பிடித்துவிட்டது என்றும் பேசிக் கொண்டனர்.

அமிர்தம்மாளின் வார்த்தைகளை மெய்ப்பிக்கிறவர் போல், சிவானந்தம் ஒரு நாள் ஆற்றுக்கு நீராடச் சென்றவர் திரும்பி வரவே இல்லை. ஞாபகமறதி அதிகமாகிவிடவே, நிதானத்தை விட்டு, குமிழியிட்டுப் பெரும் வெள்ளத்துடன் கரை புரண்டு ஓடிய ஆற்றில், மிகவும் அபாயமானதொரு சுழலருகில் நீராட இறங்கிவிட்டார்; ஆற்று நீர் வேகமாக இழுத்துச் சென்று விட்டது.

நாள் முழுதும் தேடிச் சலித்த பின்பு மறுநாள் காலை அடுத்த கிராமத்தில் கரையோரம் இருந்த மரக்கிளை ஒன்றில் சிக்கிக் கொண்டிருந்த அவரது உடலை நண்பர்கள் சுமந்து கொண்டு வருவதைக் கண்ட அமிர்தம் தலையில் அடித்துக்கொண்டு 'கோ'வெனக் கதறியழுதாள். சங்கதியைக் கேள்விப்பட்டு விரைவாக

நமச்சிவாயம் புறப்பட்டு வந்தபொழுது, சிவானந்தத்தின் ஈமச்சடங்குகள் முடிந்து இரண்டு தினங்கள் சென்றிருந்தன. துக்கமே உருவாக வீற்றிருந்த அமிர்தம் தமையனைக் கண்டதும், "அண்ணா இப்படி மோசம் பண்ணிவிட்டாரே! ஒரு பாழுங்கிணத்திலே என்னைக் கொண்டு வந்து தள்ளின பலனைப் பாருங்க! எனக்கு இனி யார் கதி!" என்று கதறி அழுது கொண்டு ஓடிவந்து தரையில் விழுந்தாள்.

தங்கையைச் சமாதானப்படுத்திய நமச்சிவாயம், "அமிர்தம்! அப்படிச் சொல்லாதே, நான் இல்லையா? உன்னை அனாதையாப் போகும்படி நாங்க விட்டு விடுவோமா? அவ்வளவுதான் கொடுத்து வச்சது!" என்று கூறிவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

சிவானந்தத்தின் வீட்டுக் கூடத்து மூலையிலே நிரம்பி வழிந்து கொண்டிருந்த பெரிய நெற்குதிர் அமிர்தத்தின் இடையிலிருந்த பெட்டிச்சாவி எல்லாவற்றுக்கும் இனி அவன்தான் எஜமான் என்ற ஒரு நினைவு ஏற்படவே, சகோதரியின் துயரம் அவனைக் கொஞ்சமும் பாதிக்கவில்லை. புடவை மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு வெயலில் அலைவதைவிட்டு நிம்மதியாகச் சாப்பிட்டுக் கொண்டு அமிர்தத்தையும் அவள் குழந்தைகளையும் அதிகாரம் செய்தபடி ராஜாபோல் வாழப் போகும் வாழ்க்கையை எண்ணி உள்ளம் மகிழ்ந்தான்.

'அமிர்தம் கவலைப்படாதேயம்மா! உன்னைத்தனியே தவிக்கவிட்டு நான் போய்விடுவேனா? பின்னே உடன் பிறப்பு என்று எதற்காக இருக்கிறதாம்!" என்று கௌரமாகக் கூறி தங்கைக்கு அபயமளித்தான்.

சாதாரண நாட்களிலேயே அண்ணனைக் கண்டதும் சுய அறிவை இழந்துவிடும் அமிர்தம், கணவனை இழந்த பின்பு, அண்ணன் ஆட்டுவிக்கும் ஒரு பொம்மையாக மாறி விட்டாள். தன் சகோதரியின் இந்தப் பலவீனத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டு நமச்சிவாயம் காலஞ் சென்ற சிவானந்தத்தின் சொத்துக்களைக் கண்டபடி விரயம் செய்து கொண்டு, நிம்மதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான்.

சிவானந்தம் தமது இளைய மனைவியைப் பிச்சையெடுத்து உண்ணும் அளவுக்கு அவ்வளவு நிர்க்கதியாக விட்டுச் சென்று விடவில்லை. சில வருடங்களுக்கு முன்பு, அவர் தமக்கிருந்த கொஞ்சம் நஞ்சை பூமியையும் தமது வீட்டையும் மனைவியின் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். தமக்குத் திடீரென மரணம் சம்பவித்து விட்டால் யாருடைய தயையும் எதிர்பாராது அமிர்தம் சுகமாக வாழ வேண்டும் என்பதுதான் அவரது முக்கிய கருத்தாக இருந்தது.

நமச்சிவாயம் தன் சகோதரி வீட்டில் மகிழ்வாகத் தனது வாழ்நாட்களைக் கழிக்க வந்திருந்தான். வேலை செய்து உடலை அலட்டிக்கொள்ள அவன் அங்கு வரவில்லை. சிவானந்தத்தைப் போல தினசரி வயல்களுக்குச் சென்று மேற்பார்வையிடவோ, அறுவடைக் காலத்தில் வெயிலில் களத்தருகிலே நின்று கொண்டு கண்காணிக்கவோ அவனுக்குப் பிடிக்கவில்லை. மேலும் அவன் நினைத்தபடி பணத்தை எடுத்துத் தாராளமாகச்

செலவிட சிவானந்தத்தின் பெட்டியில் பணம் தாராளமாக இருக்கவில்லை. இதையெல்லாம் பற்றி யோசித்து அவன் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படியே தன் சகோதரியையும் ஒப்புக்கொள்ளும்படி செய்தான்.

'நிலம், நீர், இதெல்லாம் எதற்கு? நிலங்களின் விலை நாளுக்கு நாள் தலைகீழாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. நான் சொல்கிறபடியே கேள், அமிர்தம். இந்த நிலத்தை வந்த விலைக்கு விற்று விடுவோம். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, ஒரு லேவாதேவிக் கடை ஆரம்பிக்கிறேன். பணத்தை நிலத்திலே போட்டுத் தூங்க வைக்காமே, நாலா பக்கமும் போட்டுப் புரட்டிக் கொண்டிருந்தால்தான் பணம் மேலும் பெருகும்' என்று உபதேசித்தான்.

அமிர்தத்திற்கு அண்ணன் சொல்வது மிகவும் சரி என்று படவே, அவன் உத்தரவிட்டவுடன், நீட்டிய காகிதத்தில் கையெழுத்துப் போட இசைந்து விட்டாள். நமச்சிவாயம் அங்கு வந்து தங்கத் தொடங்கிய சில நாட்களில் சிவானந்தத்தின் அருமையான நஞ்சை பூமி, கால் விலைக்கு விற்கப்பட்டு அந்தப் பணம் அவனது கைக்குப் போய்ச் சேர்ந்தது.

நமச்சிவாயம் தான் ஒரு பெரிய கடைக்காரன் என ஜம்பமாகக் கூறிக் கொண்டு சில நாட்கள் ஊரில் மிகவும் கர்வமாகத் திரிந்து கொண்டிருந்தான். கையில் அமிர்தம்மாளின் பணம் தாராளமாக இருக்கவே, அவனது நடையுடை பாவனைகள் வேகமாக விருத்தியடையத் துவங்கின.

கல்யாண மாப்பிள்ளை போல் நெற்றியில் சந்தனப் பொட்டும், சரிகைக்கரை வேஷ்டியும், ஸில்க் ஷர்ட்டும், அங்கவஸ்திரமுமாக வெளியில் தென்பட்டான். அவன் வருவதைத் தொலைவிலே முன்கூட்டி அறிவிப்பது..

போல் 'கம்'மென்று அத்தர், ஜவ்வாது மணம் அவனது ஆடைகளில் வீசிக் கொண்டிருந்தது. முன்போல் அவனது வெற்றிலைப் பெட்டியில் காய்ந்த வெற்றிலைச் சருகுகளும், மட்டமான புகையிலைக் கட்டைகளும் இருக்கவில்லை; துளிர் இளம் வெற்றிலைகளும், வாசனைப் புகையிலையும் சுண்ணாம்பும் வந்து குடியேறி, அவனது வெற்றிலைப் பெட்டியின் அந்தஸ்தையும் ஆகாய அளவுக்கு உயர்த்தி விட்டிருந்தன.

வட்டிக்கடை கொடுக்கல்- வாங்கல் விஷயமாகச் சென்று வருவதாக நமச்சிவாயம் அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்று வருவான். திரும்பி வரும்பொழுது, வீட்டிற்கு வேண்டிய சாமான்களுடன் பழம், மிட்டாய் முதலியவைகளையும் தாராளமாக வாங்கிக் கொண்டு வருவான்.

சில சமயம், அமிர்தத்திற்கு முன்னால் ஐம்பது ரூபாய் பணத்தைக் கொண்டு வந்து வெகு அலட்சியமாகப் போட்டு விட்டு, "அந்த மேலப்பட்டி லட்சுமணன் செட்டியாருக்குப் போன மாதம் கடன் கொடுத்த பணத்திற்கு வட்டி கொடுத்தான்" என அழுத்தலாகக் கூறுவான்.

அமிர்தம் அண்ணனிடம் எதையும் பற்றித் தர்க்கித்ததே இல்லை. யாருக்கு, எதற்கு, எவ்வளவு பணம் வட்டிக்கு அவன் கொடுத்திருக்கிறான் என்று கேட்டுக் கொள்வதே கிடையாது.

சில சமயங்களில் அமிர்தத்திற்குத் திடீரென்று சந்தேகமும் கவலையும் ஏற்பட்டு விடுவது உண்டு. "என்ன அண்ணா? இந்த வட்டிப்பணம் யாரிடமிருந்து வந்ததுன்னு சொன்னீங்க?" என்று அவள் குறுக்குக் கேள்விக் கேட்டு விட்டால் போதும், நமச்சிவாயம் கோபத்துடன் துள்ளிக் குதித்துப் பெரிய ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்து விடுவான்.

"அமிர்தம்! இப்படி இது என்ன, அது என்ன என்று என்னைக் கேட்டுக் கொண்டேயிருந்தா, என்னாலே பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது! நம்பிக்கையோட எல்லாத்தையும் என் கையில் ஒப்புச்சுவிட்டு நீ சும்மா இருந்தால்தான் என்னாலே இந்தக் குடும்பத்தை நிர்வகிக்க முடியும். பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்கல் வாங்கலைப் பற்றி என்ன தெரியப் போகிறது? பணத்தை வச்சு நிர்வகிக்கப் பெண் பிள்ளைகளுக்குத் தெரியுமா? உன் பணத்தை எடுத்துக் கொண்டு நான் ஓடியா போயிடுவேன்? எனக்குப் பொண்டாட்டி பிள்ளை குட்டியென்று யாராவது இருக்காங்களா, அதை எடுத்துக் கொடுத்து விடுவேன்னு நீ பயப்பட, ஒன்றைப் பத்தாகப் பெருக்கி உன் வீட்டுப் பொறுப்பை இவ்வளவு கஷ்டத்துடன் நான் வகிச்சுக்கிட்டுப் போறேன். அதை நினைத்துப் பார்க்காமே, அப்படி ஏதேனும் சந்தேகம் இருந்தால் உன் கையிலேயே எல்லாத்தையும் ஒப்படைத்துவிட்டு நான் இதோ போய் விடுகிறேன். நீயாச்சு, உன் குடும்பமாச்சுன்னு நான் உதறிவிட்டு விடுகிறேன்" என்று கூச்சல் போட்டு ரகளை செய்வான்.

அண்ணன் எங்கே தன்னைத் தனியே விட்டுப் போய் விடுவானோ என்ற பயத்தில் அமிர்தம் தனக்குள்ளே அவ்வப்பொழுது எழும் சிறிய சந்தேகத்தை அடக்கிக் கொண்டு வாளா இருக்க வேண்டியிருந்தது.

நமச்சிவாயத்தின் தடபுடல் செலவுகளுக்கு சிவானந்தத்தின் பணம் அதிக நாட்கள் கட்டி வரவில்லை. கையிலிருந்த தொகை சீக்கிரமே செலவாகி விட்டதை உணர்ந்த நமச்சிவாயம், சகோதரியிடம் இன்னமும் கொஞ்ச நஞ்சமிருப்பதைவிட்டு வைக்க மனமில்லாதவனாய், மேலும் பல சூழ்ச்சிகள் செய்தான். வட்டிக்குப் பணம் கொடுத்த இடத்தில் மோசம் செய்து விட்டார்கள் என்றும், அதை வசூலிக்கக் கேஸ் போட கோர்ட்டுக்குச்

செல்ல நேருமென்றும் ஒரு கதையைத் தங்கையிடம் அளந்துவிட்டு, அதற்கு பணமில்லாததனால் வாளா இருக்க வேண்டியிருப்பதாகச் சலித்துக் கொண்டான்.

அண்ணன் கூறியதை நம்பிய அமிர்தத்திற்குக் கவலை அதிகமாகிவிட்டது. கஷ்டப்பட்டு சிவானந்தம் தேடி வைத்த சொத்தை எவனோ எடுத்துக் கொண்டு விடச் சும்மா விடுவதா என உள்ளம் பதைத்த அவள், "கேஸ் போட்டு எப்படியாவது கொடுத்ததைத் திருப்பி வாங்கிடுங்க. அதற்குப் பணம் வேணுமே என்று கவலைப் படாதீங்க அண்ணா! இந்த நகை நட்டெல்லாம் இனிமேலே எனக்கு எதற்கு? இதையெல்லாம் விற்று, கோர்ட்டு செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று தன் மேலிருந்த இரண்டொரு தங்க ஆபரணங்களையும் சுழற்றி அண்ணனிடம் கொடுத்து விட்டாள்.

கோர்ட்டுக்குச் செல்வதாகவும், வக்கீல் வீட்டிற்கு அலைவதாகவும் சாக்குகள் கூறிக் கொண்டு வெளியில் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்த நமச்சிவாயம், தன்னுடைய துர்விநியோகங்களுக்கு அமிர்தத்தின் நகைகளை விற்றதுடன் மட்டும் நிற்காமல் கொட்டிலி லிருந்த மாடுகள், வீட்டில் இருந்த விலையுயர்ந்த இரண் டொரு தட்டு முட்டுச் சாமான்கள் என ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டிருந்தான்.

வீட்டின் மீதும் அடமானம் வைத்துக் கடன் வாங்கிச் செலவு செய்தாகிவிட்டது. இனி விற்பதற்கோ, அடகு வைப்பதற்கோ பொருள் ஒன்றும் கிடையாது என்ற பயங்கர நிலைமை ஏற்பட்டுவிடவே, நமச்சிவாயம் மேலே என்ன செய்வது என்று தெரியாது விழித்தான். "என்னால் முடியாது நீ எப்படியோ போ!" என்று சகோதரியை உதறி விட்டு ஓடிவிட அவனால் முடிய வில்லை. கஞ்சியோ, கூழோ வேளைக்கு அமிர்தம் ருசியாகச் சமைத்துப் போட்டாள். வீட்டைவிட்டு

வெளியேறினால் சாப்பாட்டிற்குக் கூட அவனுக்கு வகை இல்லாது போய்விடும் அளவுக்கு அவனது பொருளா தார நிலை வெளியே படுமோசமாக இருந்தது.

மூன்று குழந்தைகளும், இரண்டு பெரியவர்களும் எத்தனை நாட்கள்தான் இருப்பதையெல்லாம் திரட்டி வைத்துக் கொண்டு காலம் கடத்த முடியும்? திடீரென ஒரு நாள் வீட்டிலே அரிசிக்கும்கூட வகையில்லாது போய்விட்டால் எல்லோரும் பட்டினியால் அல்லவா சாக வேண்டி வரும்?- என எண்ணிப் பார்த்த அமிர்தத்தை விசாரம் பிடித்துக் கொண்டுவிட்டது. அண்ணனது கோபத்திற்கும் மனத்தாங்கலுக்கும் பயந்து அவன் போன போக்கெல்லாம் விட்டுப் பேசாது இருந்த அவள், சகிக்க முடியாமல் ஒரு நாள், "அண்ணா! கடன் கொடுத்த பணமெல்லாம் திரும்ப வராது. போனது போகட்டும். கேஸ் கேஸ்னு கொஞ்ச நஞ்சமி ருந்த பணமும் தொலைஞ்சிட்டது. இனிமேலே நாம் இப்படியேயிருந்தா, நம்ம கதி என்ன ஆகிறது!" என்றாள் ஆத்திரத்துடன்.

அவளது வார்த்தைகள் நமச்சிவாயத்தின் குற்றமுள்ள மனத்தை மிகவும் உறுத்தின. எங்கேயாவது வேலை தேடிச் சம்பாதித்துக் கொண்டுவந்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது அவன் பொறுப்பு என்பதை அவன் மறைமுகமாக இடித்துக் காட்டியதைக் கண்டு அவனுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. தன் வயிற்றுக்கே அவன் இது நாள் வரை உடலை அலட்டிக் கொண்டு சம்பாதிக்க முயற்சித்ததில்லை. துள்ளித் திரிந்த வாலிபப் பிராயத்திலேயே அவன் உடல் நோக உழைத்து அறியாதவன். வயோதிகத்தை மெல்ல எட்டிப் பார்க்க முயற்சிக்கும் இந்த வயதில், அமிர்தத்தையும் அவளது குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டி, சம்பாதித்துப் போட அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? நெற்றி

வியர்வை நிலத்தில் விழச் செய்யும் உழைப்பு என்பது நமச்சிவாயத்தின் அகராதியிலேயே கிடையாது. ஆகவே, அமிர்தத்தின் வார்த்தைகள் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கின.

"நீ கேட்கிற இதையேதான் நானும் நாலு நாளா என் மனசைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்படியே இருந்தா குடும்பத்தின் கதி என்ன ஆகிறதுன்னு கவலை யால் எனக்குப் பித்துப் புடிச்சுவிடும் போல் இருக்குது. இந்த தியாகராஜனுக்கு வயது இப்ப என்ன ஆகிறது?" என்று கேட்டான் நமச்சிவாயம்.

அமிர்தத்தின் மூளையில் கணக்கு என்பது எப்பொழு தும் இடம் கொண்டதில்லை. தன்னுடைய வயது எவ்வளவு என்றே அவளுக்குத் தெரியாது. அவள் தன் குழந்தைகளுக்கு என்ன வயது என்று ஒரு நாளும் கணக்கிட்டுப் பார்த்தவள் அல்ல. அப்படிப்பட்ட அமிர்தம், "பத்தோ பதினைஞ்சோ ஆகிறது" என்றான் அலுப்புடன் பதிலுக்கு.

"நான் நினைச்சேன்! ஒரு பதிமூணு வயசாவது இருக்கும்னு. எருமை மாட்டைப் போல வயசாகுது. இந்தப் பயலுக்கு! இவனுக்குப் பள்ளிக்கூடப் படிப்பு எதற்கு? பள்ளிப்படிப்பு இந்தக் காலத்திலே எதுக்கு உபயோகம்? மேலும் நாம்ப என்ன பெரிய சீமானா, பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலே ஆசைக்குப் படிக்க வைக்க? போதும் இவன் படிச்சது! படிப்பை நிறுத்தி, இந்தப் பயலை ஏதாச்சும் ஒரு வேலையிலே அமர்த்தி விடப் போறேன். இந்தச் சின்ன வயதிலே உடம்பு வணங்காவிட்டால் பெரியவனாப் போன பிறகு ஒண் ணுக்கும் உதவாமல் போய் விடுவான். நான் கொண்டு வந்து போடுகிற இரண்டோட இந்தப் பயலும் ஏதாச்சும் சம்பாதித்துக் கொண்டு வந்து போட்டால் குடும்பம் கஷ்டமில்லாமல் நடக்கும்" என்றான் நமச்சிவாயம்.

தியாகராஜன் படிப்பைப் பற்றியோ அவனது பிற்கால வாழ்க்கையைப் பற்றியோ அமிர்தத்திற்கு என்றுமே அக்கறை இருந்ததில்லை. கணவன் இறந்த பின்பு அவளுக்குத் தன் மூத்தாள் மகன் மீது ஏற்கெனவே இருந்த வெறுப்பு இரண்டு மடங்காக அதிகரித்திருந்தது. எனவே, அவள் சகோதரனது திட்டத்தை மறுத்துக் கூறாது, அதை உடனடியாக ஒப்புக் கொண்டு விட்டாள். அத்தை காந்திமதியையும், ஆருயிர்த் தோழி தமயந்தியை யும் இனி காணப் போவதில்லை என்ற ஏக்கத்தினால் உருகிக் கொண்டிருந்த தியாகராஜனது வாழ்க்கை, தந்தையின் மறைவுக்குப் பிறகு மிகவும் மோசமாகி விட்டிருந்தது என விவரிக்கத் தேவை இல்லை.

நமச்சிவாயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த அந்த வீட்டில் அந்தச் சிறுவன், அடிமையிலும் கேவலமாக நடத்தப்பட்டான். மாமனின் வார்த்தைகளே சட்டமென இருந்த அந்த வீட்டில் பெரியவர்கள் செய்ய வேண்டிய பல வேலைகள் அந்தச் சிறுவன் தலையிலே சுமத்தப் பட்டன. காலையில் எழுந்ததும் ஆற்றிலே குளித்து விட்டு தாயார் போட்ட பழைய அமுதைச் சாப்பிட்டு விட்டு மூன்று மைல்கள் ஓடிச் சென்று கடை சாமான் வாங்கி வர வேண்டும். பள்ளிக்கூடம் செல்வதற்கு முன், தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, நமச்சிவாயத்தின் ஆடைகளைக் கிணற்றடியில் சோப்புப் போட்டுத் தோய்த்து உலர்த்த வேண்டும். நினைத்த பொழுது மாமன் ஏவிய இடங்களுக்கு ஓடிச்சென்று வரவேண்டும் என இரவு படுக்க போகும் வரை வேலைகள் இருந்து கொண்டே இருந்தன.

தியாகராஜன் இந்த வேலைகளையெல்லாம் பொருட் படுத்தாது செய்து கொண்டிருந்தான். ஆனால், சில சமயம் தன் சிறிய தாயார் ஏவும் சில வேலைகளைச் செய்ய அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

பெண் குழந்தையைப் போல் வீட்டைப் பெருக்கவும் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி வைக்கவும், அவனைத் தாயார் ஏவும் பொழுது வெட்கத்தினால் உள்ளம் கூசிய அவனுக்கு அழுகையே வந்தது. ஆனால், அந்த வேலை களைச் செய்ய மாட்டேன் எனப் புரட்சி செய்ய அவ னால் முடியவில்லை. இரண்டொரு முறை எதிர்த்துப் பேசியதற்காக நமச்சிவாயத்திடம் செம்மையாகப் பூசைகள் வாங்கிக் கொண்ட பின்பு தியாகராஜன் எதிர்ப் பதன் பலனைப் பூரணமாக அறிந்து கொண்டிருந்தான். இஷ்டமில்லாத கடின வேலைகளைச் செய்யும்படி மாமா ஏவும் போதெல்லாம், அடிக்கு பயந்து கொண்டு அழுத வண்ணம் மாமன் கட்டளைக்குக் கீழ்ப்பணிந்தான்.

அந்த வேளையில் அவனது இளம் உள்ளம் அத்தை யையும் தமயந்தியையும் எண்ணி ஆறாத் துயரம் அடைவதுண்டு. 'அத்தை மட்டும் இப்பொழுது இங்கே இருந்தால் இப்படி? நடக்குமா? அத்தை வெகு நேரம் நான் பட்டினியாக இருப்பதைக் கண்டு பேசாமல் இருந்திருப்பாளா?" என்று காந்திமதியைப் பற்றி அடிக் கடி எண்ணி மனம் ஏங்கித் தவித்தான் அப்பேதைப் பாலகன்.

நமச்சிவாயத்தின் திட்டப்படி தியாகராஜனின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அருகிலிருந்த கிராமத்தில் மளிகைக்கடை யொன்றில் சாமான்களை எடுத்துக் கொடுக்கும் வேலையில் மாதம் எட்டு ரூபாய் சம்பளத்தில் மாமாவின் முயற்சியால் அமர்த்தப்பட் டான். கடைக்கார செட்டியார் மிகவும் கண்டிப்பான முதலாளியாக இருந்தார். காலை ஏழு மணியிலிருந்து இரவு ஏழு மணிவரை சிறிதும் ஓய்வு கொடுக்காது, சிறு பையன் எனவும் இரங்காது கொடுக்கும் சம்பளத் திற்கு தியாகராஜனிடம் வேலை வாங்கிக் கொண்டார்.

கடைசியில் முதலாளியின் கண்டிப்பும் வசை மொழியும் கேட்டு அலுத்துச் சோர்ந்து இரவு வீடு திரும்பும் அந்தச் சிறுவனை ஆறுதல் மொழி கூறி வரவேற்க யாரும் இல்லை. அதற்குப் பதில் எப்பொழுது தவறு செய்வான் என எதிர்பார்த்து நிற்பவன் போல் நமச்சிவாயம் ஒரு சிறு விஷயத்தைப் பெரிதாக அமர்க்களப்படுத்தித் தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்ட சதா அந்த சிறுவனைத் தண்டித்த வண்ணம் இருந்தான். கருணை என்பதையே அறியாத அமிர்தமும் தியாகராஜனை மாமன் போட்டு நையப் புடைப்பதைத் தடுக்காது வேடிக்கை பார்ப்பதும் வழக்கமாகி விட்டது. வெளியில் வேலை இடத்தில் வசை மாரி, வீட்டிலே தண்டனை என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அறியாத தியாகராஜனுக்கு வாழ்வு ஒரு பெரும் சிறையாக இருந்தது. அந்தச் சிறையினின்றும் விடுதலையடைந்து வெளியே ஓடிவிட அவனது இளம் உள்ளம் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்ததை அமிர்தமோ நமச்சிவாயமோ சிறிதும் அறியவே இல்லை.

ஒருநாள் மாலை, தியாகராஜன் வேலைக்குக் கடைக் குச் சென்றதும் முதலாளி தம் வரவிற்குக் கோபத்துடன் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டான், பெட்டியிலிருந்த சில்லறையில் நான்கணா நாணயம் குறைந்து காணப் பட்டதாக அறிந்த அவர் அதை தியாகராஜன்தான் எடுத்திருக்க வேண்டும் என எண்ணி ஆத்திரத்துடன் இருந்தார்.

"எண்டா! பயலே! எங்கேடா அந்த நாலணா? திருட்டு நாயே!" எனக் கையை ஓங்கிப் 'பளார் பளார்' என நான்கு அறைகள் வைத்தார் முதலாளி. வலியினால் ஏற்பட்ட ஆத்திரத்தில் வெகுண்டு முதலாளி மீது பாய்ந்து விட்டான். செட்டியார் மறுபடியும் கையை ஓங்கு முன்

அவரது கையை ஆங்காரத்துடன் ரத்தம் வரும் வரை அழுத்திக் கடித்து விட்டான்.

"அடே பாவி! கையை விடா!" என்று கதறிக் கொண்டு தம்மை விடுத்துக்கொண்ட செட்டியார், அவனைப் பிடிக்குமுன் ஒரே பாய்ச்சலில் பித்தம் பிடித்தவன் போல் தெருவில் பாய்ந்து ஓடத் தலைப்பட்டான். 'பிடி!பிடி!' எனக் கத்திக் கொண்டு இரண்டொருவர் தொடர்ந்து ஓடி வருவதற்குள் தியாகராஜன் தெருமுனையைத் தாண்டி, அருகில் இருந்த ஒரு சந்திற்குள் சென்று மறைந்து கொண்டுவிட்டான். அவனுக்கு ஏற்பட்ட பயத்தில் நெஞ்சு திக்திக் என அடித்துக் கொண்டது. உடல் முழுவதும் வியர்வை அரும்பி ஆறாக வழிந்தோடியது. நா வறண்டு தொண்டை காய்ந்து போயிற்று.

சூரியன் அஸ்தமிக்கும் வரை திருடனைப் போல் அந்தச் சந்திலே ஒளிந்துகொண்டு நின்ற அவன், இருட்டிய பின்பு மெல்லத் தெருவுக்குள் எட்டிப் பார்த்தான். தன்னை யாரும் கவனிக்கவில்லை என நிதானித்த பின்பு தெருவிற்குள் வந்த அவனுக்கு எங்கே போவதென்றே விளங்கவில்லை. இவ்வளவு நடந்த பின்பு வீட்டிற்கு அவன் எந்தத் தைர்யத்தில் போவான்? இதற்குள் நடந்ததைக் கேள்விப்பட்டிருக்கும் நமச்சிவாயமும் அமிர்தமும் அவனை எப்படி வரவேற்பார்கள் என்பதை எண்ணும் போதே, கிலியினால் அவன் மேனி சிலிர்த்தது. 'அத்தை மட்டும் இப்பொழுது இருந்தால் நிரபராதியான என்னை இப்படித் தண்டித்த அந்த முதலாளியைச் சும்மாவிட்டு விடுவாங்களா?' என எண்ணிக்கொண்ட அவனது புண்பட்ட உள்ளம் ஆறுதல் மொழிக்காக ஏங்கியது. கண்களில் நீர் பொங்க, துக்கம் நெஞ்சை யடைக்க, அந்தச் சிறுவன் வீட்டிற்குச் செல்ல அஞ்சி, கால் வந்த வழியே நடந்து சென்றான்.

அன்று இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த நமச்சிவாயம் வழியில் கடைத்தெருவில் விஷயத்தை அரை குறையாகக் கேள்விப்பட்டதும், நேரே செட்டியார் கடைக்கு விரைந்து ஓடிச்சென்றான். வீங்கிப் போயிருந்த தமது கரத்திலே மருந்து போட்டு கட்டுக்கட்டி, சிசுருஷைகள் செய்து கொண்டிருந்த செட்டியாருக்கு, அவனைக் கண்டதும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. நமச்சிவாயம் விசாரிக்க வாயைத் திறக்குமுன், அவர் அவனையும் அவன் கொண்டு வந்து கடையில் வேலைக்கு வைத்த பையனையும் பற்றி வசைமாரி பொழிந்து தள்ளி விட்டார். அத்துடன் நிற்காது முடிவில், தம்மைக் காயப்படுத்தியதற்காக தியாகராஜனை அவர் விடப் போவதில்லையென்றும் போலீஸில் பிராது கொடுக்கப் போவதாகவும் கூறி பயமுறுத்தினார்.

போலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதுமே நமச்சிவாயம் சப்த நாடியும் ஒடுங்கி, சோர்ந்து, நா வறண்டு பேச முடியாது திகைத்துப் போனான். அவனது வீரமும் கைவரிசையும் அரட்டைப் பேச்சுக்களும் அமிர்தத்தைப் போன்ற ஏமாந்த பெண்களிடந்தான் அதிகம் செல்லும்! ஆண்களிடம், அதுவும் காக்கி உடை தரித்த போலீஸ் அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம், அவனுக்குக் காரணமற்றதொரு நடுக்கம். ஆகவே அவன் "இதேது! பெரிய வம்பில் கொண்டு போய் விட்டு விட்டானே இந்தச் சோம்பேறிப் பயல்!" என தனக்குள் எண்ணி அதிர்ச்சியடைந்தவனாக, செட்டி

யாரை மிகவும் வேண்டிக்கொண்டு தியாகராஜனை உடனுக்குடனே கண்டிப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு, நடந்து போன சம்பவத்தை மறந்து விடும்படி மிகவும் குழைவாகக் கெஞ்சிக்கொண்டு, வீட்டை நோக்கிப் பறந்தோடி வந்தான்.

தமையன் கூறிய விஷயத்தைக் கேள்விப்பட்ட அமிர்தத்திற்கு மேலே சாப்பிட மனமே இருக்கவில்லை. "வரட்டும், அந்தப் பயல்! இன்னிக்கு அவனுக்கு நான் யார் என்கிறதை விளக்கி விடுகிறேன்" என ஆத்திரத்துடன் கர்ஜித்த அவள் கையை உதறிக் கொண்டு அரைச் சாப்பாட்டில் எழுந்து விட்டாள். அவசரமாகக் கையைக் கழுவிக்கொண்டு செம்மையாகப் பூசை கொடுக்க மகனை வரவேற்கும் எண்ணத்துடன் கூடத்துத் தரையில் பசியுடன் இரைமீது பாயத் தயாராயிருக்கும் புலிபோல் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

தியாகராஜன் எப்பொழுது வீடு திரும்புவான் என எதிர்பார்த்துக் கொண்டு இடுப்பு 'பெல்ட்'த் தயாராகக் கழற்றிக் கையில் பிடித்தபடி, நமச்சிவாயம் கூடத்துத் தரையில் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தான்.

இவ்வாறாக மாமனும், சிற்றன்னையும், கோபாவேசத்துடன் தண்டிக்கக் காத்துக் கொண்டு இருந்த அதே சமயம் தியாகராஜன் தேவபட்டணம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த புகை வண்டியில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில், நிம்மதியாகத் தயிர் சாதத்தை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"தம்பி, எலுமிச்சங்காய் ஊறுகாய் நல்லா இருக்குதா? இன்னும் கொஞ்சம் போட்டுக்கோ! சாப்பிட்டதும் அந்த அறையிலே போய் நல்லாக் கழுவிக்கிட்டு தண்ணி குடிச்சுக்கோ, போ" என அவனது அருகிலே உட்கார்ந்

திருந்த பெரியவர் அன்புடன் உபசரித்துக் கொண்டிருந்தார்.

போஜனத்தை முடித்துக் கொண்டு ஜன்னல் அருகே வந்து உட்கார்ந்து கொண்ட தியாகராஜன், கழுத்தை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தான். இருண்ட வானத்திலே மின்னிய தாரகைகள், சில்லென ஜன்னல் வழியாக வீசிய குளிர் காற்று. வண்டித் தொடர் தண்டவாளத்திலே எழுப்பிய நானாவித ஓசை- எல்லாம் அவனுக்கு ஒரே புதுமையாகவும் பிரமிப்பாகவும் இருந்தன.

அவனது வாழ்விலே அதுவரை அவன் ரயில் வண்டியிலேயே பிரயாணம் செய்தறியான். முதல் முதலாகச் செய்த அந்தப் பிரயாணம், எதிர்பாராத விதமாக வழியிலே கிடைத்த அந்தப் பெரியவர் நட்பு, எல்லாம் அவனுக்கு ஒரே அதிசயமாக இருந்தன. தான் அனுபவிப்பவை யாவும் கனவா அல்லது நினைவுதானா எனப் புரியாதவன் போல் ஜன்னலினின்று திரும்பி வண்டியினுள் பார்த்தான்.

இரவின் முன்பகுதி வேளையாக இருந்தும் பிரயாணம் செய்து கொண்டிருந்த பிரயாணிகளில் அநேகர் நித்திரை வசப்பட்டிருந்தனர். விழித்துக் கொண்டிருந்த சிலரும் தூங்குவதற்கு வசதிகள் தேடிக் கொள்வதில் முனைந்திருந்தனர்.

"என்னடா தம்பி! தூக்கம் வந்தால் இப்படிப் படுத்துத் தூங்குகிறது தானே!" என்று உபசரித்த பெரியவர், ஆசனத்தில் அவனுக்கு இன்னமும் கொஞ்சம் இடம் விட்டு நகர்ந்து உட்கார்ந்து கொண்டு, இடையில் செருகியிருந்த சிறு பையைக் கையில் எடுத்துத் திறந்தார். பத்திரமாக அதற்குள் சேமித்து வைத்திருந்த திருநீற்றைக் கையில் தாராளமாக எடுத்து, "சிவ சிதம்பரம்! சிவ சிதம்பரம்! அப்பனே! நடராஜா!" என உரத்த குரலில்

ஜெபித்து விட்டுத் தமது நெற்றியிலே அதை அணிந்து கொண்டார்.

காற்றினால் மெல்ல அசைந்தாடிய அவரது வெண்ணிற நீண்ட தாடியையே வெகு நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தியாகராஜனுக்குத் தூக்கம் கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. அன்று நடந்த சம்பவங்கள் யாவும் மீண்டும் மீண்டும் அவனது கனவிலே ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்ற, அவன் உடலை மடக்கி ஒடுக்கிக் கொண்டு ஆசனத்தில் சாய்ந்தபடி தூங்க ஆரம்பித்தான்.

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு, நமச்சிவாயத்தையோ தன் சிற்றன்னையையோ சந்திக்கப் பயந்து ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்த அந்தச் சிறுவன், சூரியன் மறைந்து நன்றாக இருள் பரவிவிட்ட சமயம் ஆற்றங்கரையை அடைந்துவிட்டிருந்தான். தெரிந்த மனிதர்கள் கண்களில் தென்பட்டுவிட்டால் எந்த விதஆபத்து நேரிடுமோ என்ற அச்சத்தில் ஆற்று நீரைக் கண்டு அஞ்சாது இருட்டிலே துணிவுடன் இறங்கி விட்டான். நல்ல வேளையாக ஆற்றில் நீர்ப்பெருக்கு அது சமயம் மிகவும் குறைவாக இருந்ததனால், எவ்விதக் கஷ்டமுமின்றி சில நிமிஷங்களில் அக்கரையை அடைந்துவிட்டான். ஈர உடைகளுடன், தன்னந் தனியாக ஆற்றின் மறுகரையிலே நின்று கொண்டிருந்த அவனுக்கு என்ன செய்வது, எங்கே போவது என்று ஒன்றும் விளங்கவில்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இருள் பூரவிக் கிடந்தது. சோர்வும் பசியும் உடலை வாட்டின. உள்ளத்தில் கவலையும் திகிலும் நிரம்பி இருந்தன. தன்னை விட்டுச் சென்ற அத்தை, இறந்து போன தன் தந்தை, கடைக்காரச் செட்டியார் தன் மீது சுமத்திய பழி, இவையெல்லாவற்றையும் ஒருங்கே நினைத்துக் கொண்ட அவனுக்குத் துக்கம் நெஞ்சைப் பிளக்கவே,

கட்டுப்படுத்த இயலாது வாய்விட்டு விம்மியழுது கொண்டு நின்று கொண்டிருந்தான்.

"யாரது?" என்று அதட்டிய குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு அழுகையை நிறுத்திக் கொண்டு திரும்பிப் பார்த்தான். தன்னைத் தேடிக் கொண்டு மாமன் வந்து விட்டானோ என்ற பயத்தில் அவன் நெஞ்சு படபடத்தது.

"கையிலேயே சிறு லாந்தருடன் அவன் அருகில் வந்த மனிதர், "யாரப்பா இருட்டிலே தனியா நிற்கிறது?" என வினவியபடி விளக்கைத் தூக்கிப்பிடித்தார். தும்பைப் பூவைப் போல் நரைத்த நீண்ட தாடியும், சிகையும் கொண்ட வயதான ஒரு பெரியவர் தன் முன்னே நிற்பதை தியாகராஜன் உணர்ந்தான். தனக்கு முன்பின் பழக்கமில்லாத யாரோ ஒருவர் என்பதை அறிந்ததும் அவனுக்கு கவலை அகன்றுவிடவே, துணிவு சிறிது ஏற்பட்டது. "ஒண்ணுமில்லை" என்றான் துக்கத்திலிருந்து உடைந்த மெல்லிய குரலில்.

மேலும் கீழும் விளக்கைத் தூக்கிப் பிடித்து அந்தச் சிறுவனை நன்றாக ஆராய்ந்து பார்த்த அவர், 'என்னப்பா தம்பி? இருட்டிலே இங்கே ஏன் தனியா நின்னுட்டிருக்கிறே? ஏன் அழுகிறே?" என மிகவும் கனிவுடன் கேட்டார்.

மனம் புண்பட்டிருந்த தியாகராஜனுக்கு அந்த அன்பு மொழிகளைக் கேட்டதும் தாள முடியவில்லை. "ஒன்றுமில்லை" என்று திணறிவிட்டு, கையினால் கண்களை மூடிக் கொண்டு விக்கி விக்கி அழத் துவங்கினான். மனமுருகி விட்டவர் போல் அருகில் நெருங்கிய அந்தப் பெரியவர் வலது கரத்தினால் அவனை ஆதரவுடன் அணைத்துக் கொண்டு, "அழாதே, தம்பி! உனக்கு என்ன கஷ்டம் அப்பா? என்னிடம் சொல்" என்று கேட்டார்.

சில நிமிஷங்களில் அந்தப் பெரியவர் தியாகராஜனின் மனத்தைத் தமது கனிவான மொழிகளால் கவர்ந்து கொண்டு விட்டதுடன், அவனைப் பற்றிய சகலமும் தெரிந்து கொண்டு விட்டார்.

விளக்கைத் தூக்கிப்பிடித்து மீண்டும் ஒரு முறை தமக்கு முன் நின்று கொண்டிருந்த அச்சிறுவனைக் கூர்ந்து கவனித்து விட்டுத் திருப்தியடைந்தவராக, தொண்டையைக் கனைத்துக் கொண்டார் அவர்.

சிறிது நேரம் ஏதோ யோசிக்கிறவர் போல் மௌன மாக இருந்துவிட்டு, "தம்பி! கவலைப்படாதேய்யா. உன்னைப் பார்த்ததுமே எனக்குப் போன வருஷம் இறந்து போன என் பேரன் செல்வதுரையின் நினைவு வருகிறது. தன்னந்தனியா நீ இப்போ எங்கே போவே? என்னோட என் வீட்டிற்கு வா. உனக்கு ஒரு கவளம் சோறு போடுவதில் எனக்கு ஒன்றும் குறைந்துவிடாது. இந்த சமயம் நீ வீட்டிற்குப் போனால் உன் மாமனும் சித்தியும் உன்னை ரொம்பத் துன்பப்படுத்துவாங்க. அதனாலே நீ கொஞ்ச நாள் என்னோட தங்கியிரு. அதுக்கப்பாலே அவர்களின் கோபம் தணிஞ்சதும் நான் உன்னை அவர்கள் வசம் ஒப்படைத்து, சமாதானம் செய்து வைக்கிறேன். வா" என்று வியப்புடன் அழைத்தார்.

விளக்கைப் பிடித்துக் கொண்டு அவர் அடிக்கொரு தடவை "சிதம்பரம்! சிதம்பரம்" என முணுமுணுத்துக் கொண்டு முன்னே நடக்க, தியாகராஜன் அவரைப் பின்பற்றிச் சென்றான்.

ரயில்வே ஸ்டேஷனைச் சமீபித்ததும் கையிலிருந்த விளக்கை அணைத்துக் கொண்டு, அவர் டிக்கெட் கொடுக்கும் இடத்திற்கு பரபரப்பாக விரைந்து சென்றார். சில வினாடிகளில் திரும்பி வந்த அவர், "இந்தாப்பா, தம்பி! இதையெல்லாம் கொஞ்சம் எடுத்துக் கொடு"

என்று கூறி தாம் சுமந்து வந்த மூட்டையையும் விளக்கை யும் அவன் வசம் ஒப்புவித்து விட்டு, அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு ஸ்டேஷனை அணுகிக் கொண்டிருந்த வண்டியருகிலே அழைத்துச் சென்றார். தியாகராஜன் எதுவும் கேட்குமுன் மூன்றாம் வகுப்புப் பெட்டிக்குள்ளே, வெகு விரைவாகத் தள்ளப்பட்டு உள்ளே போய் விழுந்தான். 'இங்கே உட்காரு, இடம் போயிடும் பிடிச்சுக்கோ' எனக் கத்திக் கொண்டு பின்னால் மூட்டை போல் வந்து விழுந்த அந்தப் பெரியவர், அவன் அருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

'நாம் எங்கே போகிறோம்? ரயில் வண்டியிலே எந்த ஊருக்குப் போகிறோம்? என வியப்புடன் தியாகராஜன் வினவி முடிப்பதற்குள் வண்டி ஸ்டேஷனை விட்டு நகர்ந்து விட்டது.

'என் வீட்டுக்குத்தான் சில ஸ்டேஷன்களுக்கு அப்பால்தான் நான் குடி இருக்கிற ஊர் இருக்கிறது. அங்கே உன்னைக் கூட்டிக்கொண்டு போகிறேன். அது கிடக்கட்டும் நீ இப்போ ரொம்பப் பசியாக இருப்பாய் அல்லவா?" என்று கூறி விட்டு, பேச்சை மேலே வளர்க்க பிரியமற்றவராக அந்தப் பெரியவர், தாம் கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்து, அதில் அடக்கப்படுத்தி யிருந்த தயிர் சோற்றுப் பொட்டலத்தைப் பிரித்தார். தியாகராஜனது அபாரப் பசியின் அளவை ஊகித்துக் கொண்டவர் போல், அவன் அருகில் பொட்டலத்தை நகர்த்தி, "சாப்பிடு தம்பி' சாப்பிடு! அப்பால் எல்லாம் பேசிக் கொள்ளலாம். என் மகள் உன்னைப் பார்த்தாளா னால் சந்தோஷப் படுவாள்' என்றார்.

தியாகராஜன் மறுபடி கண்களை விழித்துக் கொண்டு பார்த்த பொழுது, நன்றாக விடிந்து விட்டதையும் ரயில் வண்டி மிகவும் பெரிய ஒரு ஸ்டேஷனுக்குள்ளே பிரவே சித்துக் கொண்டிருப்பதையும் கண்டான். பிரமிப்புடன்

அவன் விழிப்பதைக் கண்டு, "நாம் இறங்குமிடம் வந்து விட்டது. இந்த மூட்டையையும் விளக்கையும் எடுத்துக்கப்பா' என்று அந்தப் பெரியவர் எழுந்தார்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்த அவன் ஆச்சர்யத் துடன் தனக்கு முன் தெரிந்த அந்தப் பெரிய நகரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். 'இதுதானா நீங்க இருக்கிற ஊர் ஐயா!' என வியப்புடன் அவன் கேட்ட கேள்விக்கு. 'ஆம்' என்ற பாவத்தில் தலையை ஆட்டிய அந்தப் பெரியவர், குதிரை வண்டியொன்றை அழைத்தார். தியாகராஜன் கையிலிருந்த மூட்டையை வாங்கி வண்டிக்குள் போட்டுவிட்டு, அவனைத் தூக்கி வண்டிக்குள் ஏற்றி விட்டுத் தாமும் ஏறிக் கொண்டார். வண்டி நீண்ட பல பெரிய தெருக்களைக் கடந்து நகரத்தின் மறுகோடியை அடைந்தது. முன்பு காணப் பட்டது போன்று அப்பிரதேசத்தில் தெருக்கள் சுத்தமாக வும் வீடுகள் அழகாகவும் இருக்கவில்லை என்பதை தியாகராஜன் கவனித்தான். குறுகலாகவும், அசுத்தமாக வும் இருந்த இருண்ட சந்துகள் இரண்டொன்றில் திரும்பிய வண்டி, முடிவில் இடிந்து விடும் நிலையி லிருந்த மிகப் பழையதானதொரு வீட்டின் முன்வந்து நின்றது. வண்டிக்காரனுக்குக் கூலியைக் கொடுத்துவிட்டு இறங்கிய பெரியவர், மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு முன்னால் சென்று கதவைத் தட்டினார்.

"யாரது?" என்று உள்ளிருந்து அதட்டிக் கேட்ட ஒரு பெண்மணி வேகமாக வந்து கதவைத் திறந்தாள். 'நாகம்மா! இந்தப் பையனைப் பாரு! சாயலில் உன் மகன் செல்லதுரையைப் போல இருக்கிறான் இல்லையா? வீட்டிலே கோபித்துக்கிட்டு வெளியிலே புறப்பட்டு விட்டானாம் பாவம்! நான் பரிதாபப்பட்டு நம்ப வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வந்தேன்' என்றார்.

"யாரது அது, வீட்டிலே கோவிச்சுக்கிட்டு வெளியிலே கிளம்ப விட்ட பெரிய மனுசர்!" என்று பரிகாசமாகக் கேட்ட ஒரு ஆடவனின் உரத்த குரல் தியாகராஜனைத் திடுக்கிடச் செய்தது. சப்தம் வந்த அந்த திசையைத் திரும்பிப் பார்த்தான்.

இடுப்பிலே கைலி வேஷ்டி. மேலே அரக்கை வைத்த பனியன் சட்டை. கழுத்திலே தாயத்துக் கோத்த மெல்லிய தங்கச் சங்கிலி, அம்மைத் தழும்புகள் நிறைந்த முகத்திலே அரும்பு மீசை, தூக்கத்தினால் சிவந்த கொடுமை நிறைந்த பெரும் விழிகள், அலைபோல் உயர்ந்து நின்ற கட்டுக் கடங்காத கிராப் சிகை, இத்தகையதொரு தோற்றத்துடன், ஆறடி உயரத்தில் கட்டுமஸ்தான உடலமைப்புக் கொண்ட நடுத்தர வயது கொண்ட மனிதன் ஒருவன். கட்டிலினின்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "முன்னே பின்னே இந்தப் பய இந்தப் பக்கம் வந்த தில்லை போலக் காணுது. ரொம்ப மிரண்டுக்கிட்டு நிக்கிறானே!" என்று கேலியாகக் கேட்டான்.

"பட்டணத்தைப் பார்த்ததே கிடையாது. பாவம்! தாயில்லாப் பிள்ளை. கிராமத்திலே வளர்ந்தவன்" என தியாகராஜனை அறிமுகப்படுத்திய பெரியவர், "தம்பி! உட்காரு. அப்பா இனி இது உன் வீடு. இங்கே நீ சுகமாக இருக்கலாம். இவங்க உன்னை நல்லா கவனிச்சுப் பாங்க?" என்று கனிவுடன் கூறிவிட்டு உள்ளே சென்றார்.

சிறிது பொழுது விடைபெற்றுக் கொண்டு அவர் தமது மூட்டை, லாந்தர் சகிதம் புறப்படுவதைக் கண்ட தியாகராஜன் அவசரமாக எழுந்திருந்தான். அருவருப் பைத் தரும் அந்த வீடு. அந்த முரட்டு மனிதன். அசுத்த மான தோற்றம் கொண்ட அந்தப் பெண்மணி, இவை யெல்லாம் அவனுக்குப் பிடிக்கவேயில்லை. கண நேரம் கூட அங்கே அவனால் தங்கியிருக்க முடியாதுபோல் இருக்கவே, அவசரமாகப் பெரியவருடன் வெளியே

ஓடிவிட எழுந்தான். வேகமாக வாயிலை நோக்கித் திரும்பிய தன்னை இரும்பைப் போன்ற கரங்கள் பிடித்துக் கொண்டதை உணர்ந்து மெய்சிலிர்த்துப் போய் நிமிர்ந்து பார்த்தான்.

"எங்கேடா கிளம்பிட்டே! தேவலையே பையன்! போடா உள்ளே!" என அதட்டிய அம்மனிதன் பலமாகத் தள்ளிய வேகத்தில் அறையின் மூலையிலிருந்த இரண்டு பானகளை உருட்டி உடைத்துக் கொண்டு தரையில் போய் விழுந்தான். தடுமாறி எழுந்து உட்கார முயற்சித்த அந்தச் சிறுவனின் உடல் பயத்தினால் வெட வெட வென நடுங்கியது. "முன்பின் தெரியாத ஒரு இடத்தில், ஒரு முரடனிடம் சிக்கிக் கொண்டோமே" என்ற கிலியானது அவனது அந்தராத்மாவில் குடி கொண்டது.

"உம்! ஜாக்கிரதை! மறுபடி ஒரு வாட்டி இந்த ஆட்டம் காட்டினால் என்ன நடக்கும் தெரியுமா?" என்று கடுமையாக அதட்டிய அந்த முரட்டு மனிதன். இடுப்பிலிருந்த ஒரு சிறு பிச்சுவாயை உருவி எடுத்து, தியாகராஜன் முன் நீட்டினான். "இதனாலே ஒரே குத்து. ஆமாம்! சத்தம் கித்தம் போடாம, இங்கே போட்டதைத் தின்னுவிட்டு சொன்னதைக் கேட்டுவிட்டு இருந்தியோ, பிழைச்சே!" என்று உறுமிவிட்டு அருகில் நின்று கொண்டிருந்த நாகம்மாள் பக்கம் திரும்ப, "இவனைக் கொஞ்சம் ஜாக்கிரதையா கவனிச்சுக்கோ. அசந்து மறந்து வெளியிலே உட்டுடாதே!" என்றான்.

இடது கரத்தால் தலையை சுவாரஸ்யமாகச் சொறிந்து கொண்டிருந்த நாகம்மாள் பதிலுக்கு அதிருப்தியுடன் முகத்தைச் சுருக்கிவிட்டு சமையலறைக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

சுவரோடு சுவராய் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த தியாகராஜனது உடலும் நெஞ்சும் பயத்திலே பதறின. கண்களில் தளும்பிய நீர் அந்த மனிதனின் கரத்தில் மின்னிய கத்தியைக் கண்டதும் வற்றி விட்டது. வாய் விட்டு அழுதால், எங்கே அந்த மனிதன் தன்னைக் கொன்று போட்டுவிடுவானோ என்று அஞ்சியவனாக மூச்சு விடவும் பயந்து. இடத்தை விட்டு எழுந்திருக்கச் சக்தியின்றி அசையாது உட்கார்ந்திருந்தான்.

"மாரிமுத்து! என்னப்பா! இன்னுமா தூங்குகிறே! வீராசாமி வந்து குப்பத்து மதகு கிட்டே காத்திருக்கிறான்!" என்று யாரோ அழைப்பதைக் கண்ட அந்த மனிதன், "யாரது? மருதையா! நீ போய் அங்கே குப்பத் தண்டையிரு. ஒரு அஞ்சு நிமிசத்திலே வந்து விடுகிறேன்." என்று பரபரப்பாகப் பதில் அளித்துவிட்டு வீட்டின் பின்பக்கம் சென்றான்.

சிறிது பொழுதில் வெளிவந்த அவனது தோற்றம் மிகவும் மாறியிருந்ததைக் காண தியாகராஜனுக்கு மிக ஆச்சர்யமாக இருந்தது. சற்றுமுன் 'பம்' என்று உயரப் பறந்து நின்ற அவனது கிராப் சிகை மிகவும் நாசூக்காக வாரி விடப்பட்டிருந்தது. சிவந்த இரு கண்களையும் கறுப்பு நிறக் கண்ணாடியொன்று மறைத்துக் கொண்டு இருந்தது. மல்லிகை மலர் போன்ற வெண்ணிற ஷர்ட்டும் மடிப்புக் கலையாது சலவையினின்றும் பிரித்து அணிந்த வேஷ்டியுமாக வெளிப்பட்ட அவன் தன் முகத்தை ஒரு முறை சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

"நாகம்மா! கதவைத் தாள் போட்டுக்கோ! இந்த விருந்தாளிப் பயலையும் கவனிச்சுக்கோ! என்று கூறி விட்டு. சீட்டியடித்துக் கொண்டு உற்சாகமாக வெளியே சென்றான்.

மாரிமுத்து சென்ற பின்பு கதவைத் தாளிட்டு உள்ளே பூட்டிக் கொண்டு வந்த நாகம்மாள் மூலையில் ஒண்டிக் கொண்டிருந்த சிறுவனை ஏற இறங்க நன்றாகக் கவனித்தாள். நீண்ட வடிவமான அந்த முகமும், சஞ்சலம் ததும்பிய இருவிழிகளும், துயரத்தினால் துடித்த மெல்லிய உதடுகளும் அவளுக்குப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னிருந்த வாழ்வின் இந்த ஒரு நினைவை ஊட்டி, அத்துடன் விவரிக்க இயலாத மனோ வேதனையும் உண்டு பண்ணியது. வழக்கம் போல் அவளுக்கு அன்று தன் சிடு சிடுப்பு சுபாவத்தை அந்தச் சிறுவனிடம் காட்ட ஏனோ மனம் வரவில்லை.

"எழுந்திரு, தம்பி! சும்மாத்தான் அவரு உன்னை அப்படி அதட்டினார். பயப்படாதே! எழுந்திருந்து அந்த அறையிலே போய்ப் பல் விளக்கிட்டு வா! காப்பி பலகாரம் வச்சிருக்கிறேன். சாப்பிடலாம்" என்று உப சரித்தாள்.

அவளிடமிருந்து எழுந்த வார்த்தைகள் அவளது தோற்றத்திற்கு எதிராக இருந்ததைக் கண்ட தியாகா ராஜனது பயம் சிறிது தெளிந்தது. சொன்ன பேச்சைக் கேட்காவிடில் மாரிமுத்துவினால் ஆபத்து சம்பவிக்கும் என்ற ஒரு பயத்தில் அவன், அவளுடைய கட்டளைப் படியே செய்ய எழுந்தான்.

காய்ந்த சருகு இலையிலே அவள் கொண்டு வந்து வைத்த இட்டலிகளைக் கைகளால் தொடவும் தியாக ராஜனுக்கு மிக்க அருவருப்பாக இருந்தது. அருகில் கொண்டு வந்து வெண்கல டம்ளரில் வைக்கப்பட்ட

காப்பி என்ற கருநிற திராவகத்தைக் கண்டதுமே அவ னுக்கு வயிற்றைக் குமட்டியது. அவள் கோபிப்பாளோ என்ற அச்சத்தினால் இட்டலியை அவசரமாகப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டான். அவனால் அதை விழுங்கக்கூட முடியவில்லை. எண்ணெய்ச் சட்டியி லிருந்து எரியும் தீக்குள் பாய்ந்து விட்டதைப் போன்ற தன் நிலையைச் சிந்தித்துப் பார்க்கவும் சக்தியற்றவனாய்த் திகிலும் குழப்பமும் ஒருங்கே எய்தி, சாப்பிட முயன்று கொண்டிருந்தான்.

புகைந்த அடுப்பைக் கிளறிவிட்டு ஊதிக்கொண்டிருந்த நாகம்மாள், திரும்பி மீண்டும் ஒரு முறை அந்தச் சிறுவனை ஏற இறங்க விழுங்கி விடுகிறவள் போல் பார்த்தாள். அந்தச் சிறுவனின் சஞ்சலம் தவழும் இரு கண்களும் அவளது உள்ளத்திலே கடந்துபோன நாட் களை விரைவில் ஞாபகப்படுத்தவே, தன் வேதனையைத் தாளாது துன்பத்துடன் பெருமூச்செறிந்தாள்.

இட்டலித் துண்டுகளை சிரமத்துடன் மென்று கொண் டிருந்த தியாகராஜன் நாகம்மாள் தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததும் திடுக்கிட்டுப் போனான். அத்தை காந்திமதி அவனுக்குச் சில சம யங்கள் கதைகள் சொல்வதுண்டு. வாராது பறக்கவிட்டு கொண்டு நிற்கும் கூந்தலுடன், குரோதம் பொங்கும் பெரிய விழிகளுடன், அழுக்கு ஆடை தரித்துக் கொண் டிருக்கும் ஒரு சூனியக்காரியைப் பற்றி அத்தை ஒரு கதையில் விவரித்ததைக் கேட்டு, பயத்தில் ஒருநாள் இரவு முழுவதும் அவன் தூங்காது கழித்து விட்டிருந் தான். அவனது கற்பனையிலே உருப்பெற்றிருந்த அந்தச் சூனியக்காரியே நாகம்மாள் உருவில் அவன் முன் நிற்பது போல் தோன்றியது. திடீரென்று அவனது மேனி பயத்தில் சிலிர்த்தது.

கையில் எடுத்த இட்டலித் துண்டத்தைக் கீழே தொப் பெனப் போட்டுவிட்டு அவன் தலையைக் குனிந்து கொண்டான். கதைக் கேட்ட இரவு கனவிலே கத்தியது போல், 'அத்தை! அத்தை! என்னைக் காப்பாற்று!" என்று கூவி அழைத்துக் கதற வேண்டும் போல் அவன் உள்ளம் துடித்தது

அடுப்பைக் கிளறி எரிய விட்டுவிட்டுத் திரும்பி உட்கார்ந்த நாகம்மாள். 'தம்பி! சாப்பிடப்பா? உனக்குப் பசிக்கவில்லையா?' என்று மெல்லிய குரலில் கேட்டாள். அவன் மௌனமாக இருப்பதைக் கண்டதும் தொடர்ந் தார் போல். 'தம்பி! உன் பெயர் என்ன?' என்று வின வினாள்.

"தியாகராஜன்" எனத் திணறிய அவன், கண்களில் பொங்கிய நீரைச் சமாளிக்கும் நிமித்தம் முகத்தை இன்னும் சற்றுக் கீழே தாழ்த்திக் கொண்டான்.

"ஆமாம்! வீட்டை விட்டு நீ ஓடிவந்து விட்டாயாமே? ஏன் வந்தாயாம்? உன் அப்பா ஏதாச்சும் உன்னைக் கோவிச்சுக்கிட்டாரா?" என அவள் மேலும் கேட்டார்.

"அப்பா செத்து விட்டார்; அம்மாவும் இறந்து போய் விட்டாள். வீட்டிலே மாமாதான் இருக்கிறார். அவர் கோபிப்பார்னு பயந்து கொண்டு ஓடி வந்திட்டேன்" என்று துக்கத்துடன் அரற்றிய தியாகராஜன் தான் செய்த காரியம் எவ்வளவு தவறானது, எத்தனை அபாயகர மானது என்பதை அந்த நிமிஷம் மிகவும் உணர்ந்தவன் போல், மேலே பேச முடியாது விக்கி விக்கி அழத் துவங்கினாள்.

"வீட்டைவிட்டு ஓடிவந்தியா? அதுவும் இந்தச் சடையாண்டி கையிலா வந்து அகப்படவேணும்! ஏன் தம்பி! உனக்கு இந்தக் கிழத்தை எத்தனை நாளாத் தெரியும்?" எனக் கேட்டாள்.

திக்கித் திணறிக் கொண்டு அவன் கூறி முடிக்கும் வரை பேசாது கேட்டுக்கொண்டு வந்த நாகம்மாள் முடிவில் நீண்டதொரு பெருமூச்சு விட்டு, 'ஐயோ தம்பி! உன்னைப் போல உலகம் தெரியாத குழந்தையாய் ஒரு காலத்தில் நானும் இருந்தேன். அதனாலே என் கதி எப்படியாச்சுன்னு நீ பார்த்துக்கோ. இது வீடு இல்லை. பெரிய நரகம். கொஞ்சம் பொறுத்து உன் கண்ணாலேயே நீ பார்க்கப் போறே. நீ என்னாத்துக்கு இங்கே வந்து எங்களோட மாட்டிக் கொண்டாய்? நான்தான் வேற கதியில்லாம இங்கே வந்து நல்லா அகப்பட்டுக் கொண்டு பாவ வாழ்க்கை நடத்துறேன். நீ அறியாப் பையன். இன்னும் எத்தனையோ இருக்கு உனக்கு உலகத்திலே வாழறதுக்கு. இந்த நரகத்தை விட்டு ஓடிப் போயிடு; தம்பி; ஓடிப்போயிடு!" என்றாள் உணர்ச்சி வசத்தில் படபடப்பாக.

"நான் எப்படி வெளியே ஓடிப்போவேன்? கதவைத் தாளிட்டு நீதான் உள்ளே பூட்டி இருக்கிறாயே! மாரி முத்து அப்படி ஓடினால் கொன்று விடுவதாகச் சொல்லி இருக்கிறானே?" என்றெல்லாம் பல கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் நிமிர்ந்து அவளது முகத்தைப் பார்த்த தியாகராஜன், ஆச்சரியத்தில் மௌனமாகி விட்டான். நாகம்மாள் கண்களிலிருந்து மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

கடந்த பல மாதங்களாக நாகம்மாளது உள்ளத்திலே ஒரு பெரும் வெறுப்பு வளர்ந்து கொண்டே வந்தது உண்மைதான். அவளும் மாரிமுத்துவும் நடத்தி வந்த அந்தப் பயங்கரமான வாழ்க்கை சிறிதும் பிடிக்கவே யில்லை. "இது ஒரு வாழ்வா?" எச்சில் இலைக்கு அலையும் நாயையும், சாக்கடையிலே படுத்து உறங்கும் பன்றியையும்விட கேவலமாக வாழ்கிறோமே" எனத்

தனக்குள்ளே எண்ணி அவள் உள்ளம் வெதும்பிக் கொண்டிருந்தாள்.

அவள் கணவன் மாரிமுத்து உண்மையில், உலகத்திற்கும் சமூகத்திற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு, அவளை சாஸ்திரோக்தமாக மணந்து கொண்ட புருஷன் அல்ல. சின்னாபின்னமாகி விட்டிருந்த அவளது வாழ்க்கையில், அவன் ஒருமுறை அவளைச் சந்தித்து அவளது நீடித்த காதலுக்குப் பாத்திரமாகியிருந்தான். அவளைப் பொறுத்த வரை அவனைக் கணவனாகவே கருதி அவனுடன் பதினைந்து வருஷ காலத்தைக் கடத்தி விட்டாள்.

நாகம்மாள் அவன் மீது கொண்டிருந்த பிரிக்க முடியாத அவ்வளவு பாசம் மாரிமுத்துவுக்கு அவளிடம் இருந்ததில்லை. பல சௌகரியங்களை முன்னிட்டு அவன் தன்னுடன்கூட வாழ்க்கை நடத்துகிறான் என்ற கசப் பான உண்மையை அவள் நீண்ட காலமாக அறிந்திருந் தாள். உயிருக்கு மேலாகத் தான் நேசிக்கும் அந்த மனிதனிடம் தன்பால் அதற்கீடான அன்பு எந்தக் காரணத்தினாலேயோ இருக்கவில்லையே என எண்ணி அவள் வெகுவாக உள்ளம் நைந்து போயிருந்தாள்.

மாரிமுத்து தன் ஜீவியத்திற்காக நடத்தி வந்த தொழில் களில் ஒன்றுகூட நாகம்மாளுக்குப் பிடித்ததில்லை. அவன் சடையாண்டிக் கிழவனைப் போல் வேறு இரண்டு கூட்டாளிகளுடன் சேர்ந்து கொண்டு, புதுச்சேரியிலிருந்து பட்டு, வைரம், தங்கம் இவைகளை சுங்கவரியின்றிக் கடத்திக் கொண்டு வந்து திருட்டுத் தனமாய் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந் தான். அத்துடன் திருட்டு கஞ்சா, அபினி முதலிய வியாபாரத்திலும் அவனுக்கு பழக்கம் இருந்தது.

வாரத்திற்கு இருமுறை அவர்கள் குடியிருந்த வீட்டு மாடியில் மாரிமுத்துவின் தோழர்கள் பலர் பணம்

வைத்துச் சீட்டாடக் கூடி விடுவார்கள். அவர்கள் போடும் கூச்சலும் சத்தமும் கேட்டு, போலீஸ் வந்து தொந்தரவு கொடுக்கப் போகிறார்களே என்ற கிலியில் தனது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண் டிருந்தாள் நாகம்மாள்.

கள்ளத்தனமாக, சட்டத்திற்குப் புறம்பான பல காரியங்களில் ஈடுபட்டிருந்த அவன் மீது போலீஸ் கண்காணிப்பு அதிகமாக இருந்தது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். ஒரு சிறு திருட்டுக் குற்றத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதித் தண்டிக்கப்பட்டிருந்த மாரிமுத்து, ஆறுமாத கடுங்காவல் சிறைவாசத்திற்குப் பிறகு வெளிவந்து அப்பொழுதுதான் மாதம் இரண்டாகி யிருந்தது. வாட்ட சாட்டமான உடல் அமைப்பும் தேக வலுவும் இருந்தது, உடலை வாட்டி நல்ல தொழில் செய்து கௌரவமாக வாழ முயற்சிக்காது குறுக்கு வழி களில் பணம் சம்பாதிக்க அவன் துணிந்து இறங்கி யிருந்ததை நாகம்மாள் சிறிதும் ஆதரிக்கவேயில்லை.

அவன் மீது கொண்டிருந்த கட்டுக்கடங்காத காதலி னால் எத்தனையோ முறைகள் அவனது துஷ்ட காரியங் களில் தனது பஞ்ச அறிவுகளையும் உதறிவிட்டு அவள் தானும் பங்கு எடுத்து உழைக்கப் பாடுபட்டது உண்டு. எவ்வளவு முயற்சித்தாலும் அவளது இருதயத்திலே ஒரு மூலையில் அசையாது குடிகொண்டிருந்த மனிதத் தன்மையின் ஒரு சிறு அணு அவளை அவ்வாறு அறிவை விடுத்து மிருகமாக மாறி விடாது தடுத்துப் புரட்சி செய்த வண்ணம் இருந்தது.

மாரிமுத்துவின் கொடும் செயல்களுக்கு உதவியாக இருக்கும் ஒவ்வொரு சமயமும், மனிதத் தன்மை என்னும் உணர்ச்சியினால் உந்தப்படும் அவள், "சே! நாம் என்ன மிருகமா! இதெல்லாம் பாவமான செய்கையல்லவா? இப்படி வாழ்வதும் ஒரு வாழ்வா?" என்று எண்ணித்

துயரம் அடைவாள். மேலும், அவள் இவ்வாறு நல்ல உணர்ச்சிக்கும் சிந்தனைக்கும் உட்பட இன்னும் ஒரு காரணமும் இருந்தது. சிறையிலிருந்து வெளிவந்த மாரி முத்து புதிதாக வேறு விதமானதொரு தொழில் நடத்த ஆரம்பித்திருந்தான்.

சடையாண்டிக் கிழவன் உதவியால் எங்கிருந்தோ சிறு குழந்தைகளைக் கடத்திக் கொண்டு வந்து அவர் களை இரண்டொரு தினங்கள் தங்கள் வீட்டில் ஒளித்து வைத்திருந்து விட்டு, பிறகு பெயர் தெரியாத ஊர்களில் முகம் அறியாத மனிதர்களிடம் அவர்களை விற்றுவிடும் பாபகரமான தொழிலில் மும்முரமாக இறங்கியிருந்தான். அந்தக் குழந்தைகளை எதற்காக, எங்கே, ஏன் வாங்கிக் கொள்கிறார்கள்? இதனால் லாபம் என்ன?" என்ற விஷயங்கள் எல்லாம் அவளுக்கு விளங்காத பெரும் புதிராக இருந்தது. திருட்டு, பொய், புரட்டு முதலிய பஞ்சமா பாதங்களைக் கண்டு கூட அவள் அவ்வளவு கலங்கியதில்லை.

தாயிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் உலகம் அறியாச் சிறுவர் சிறுமிகளை நயவஞ்சமாகப் பேசிப் பிரித்துச் சென்று, வேற்று மனிதர்களின் வாழ்க்கையுடன் அவர்களைப் பிணைத்து, அவர்களின் சுதந்திர வாழ்வையும் சுகத்தையும் நாசப்படுத்தும் இந்தப் பயங்கர மான தொழிலை அவள் அறவே வெறுத்தாள். மாரிமுத்து விடம் இதைப்பற்றி இரண்டொரு முறை தர்க்கித்து அவனது அதிருப்திக்கு ஆளாகிவிட்டிருந்தாள்.

எல்லாவற்றையும் விட அன்று காலை அவள் மனத் திலே வெறுப்பும் விரக்தியும் குடிகொண்டிருந்ததற்குக் காரணம், முதல் நாள் இரவு அவளுக்கும் அவள் காத லனுக்கும் நடந்த ஒரு மனஸ்தாபமே முக்கியமானதாக இருந்தது.

சிறையிலிருந்து வெளிப்பட்டதிலிருந்து மாரிமுத்து தன்னிடம் மிகவும் மாறுதலாக நடந்து கொள்வதை அவள் கவனிக்கத் தவறவேயில்லை. தன்பால் அவனுக்கு ஏற்பட்டிருந்த கொஞ்ச நஞ்ச அன்பும் அஸ்தமித்துப் போனதன் காரணம் என்னவாயிருக்கலாம் என அவள் பலவாறு சஞ்சலத்துடன் வருந்திக் கொண்டிருந்தாள். யதேச்சையாகப் பேச்சு வாக்கில் அவனது கருத்து வேறொரு பெண்ணிடம் லயித்துப் போயிருந்ததனால் தான் அவன் அவ்வாறு மாறி விட்டிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டதிலிருந்து, நாகம்மாளுக்கு வாழ்க்கை வேம்பாகி விட்டது. பொறாமையினால் அவள் உள்ளம் கொதித்தாள். ஆனால் மாரிமுத்துவிடமிருந்த பயத்தால் அதை வெளியே காட்டத் துணிச்சல் இன்றித் தவித்தாள். உயிருக்கு மேலாகக் காதலித்த அந்த மனிதன் தனக்குச் செய்யும் பெரும் துரோகத்தை அவளால் சகிக்க முடிய வில்லை.

முதல் நாள் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு மாரிமுத்து வெளியே கிளம்ப அவசரமாகப் புறப்பட்டான். அதைக் கண்டதும் பல நாட்களாக அடக்கி வைத்துக் கொண் டிருந்த கேள்வி அவளையுமறியாது வெளியே வந்து விட்டது.

"இத்தனை நேரத்திற்கு மேலே வெளியிலே என்னாத் துக்குப் போறியாம்" என அவள் உரிமையுடனும், ஆத்திரத்துடனும் கேட்டு விட்டாள்.

கைக் கடிகாரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மாரிமுத்து அவள் பக்கம் கோபத்துடன் திரும்பி, "என்ன கேட்கிறே? ஆம்பளைக்கு வெளியிலே ஏதாச்சும் வேலை இருந்துகிட்டே தானிருக்கும் பெரிசா, கட்டின பெண் ஜாதியாட்டமா, கேள்வி கேட்க வந்துட்டியா? ஏது, ஆளு துளுத்து விட்டாப்பல இருக்குதே?" என்று உறுமி னான்.

"அப்படி ஒரு வார்த்தை சொல்றியே, உனக்கு நியாயமா? எங்கே போறேன்னு எனக்குத் தெரியும்! உன்னையே நம்பிக்கிட்டு இருக்கிற என்னை துச்சமாப் பேசினா சாமி பொறுக்க மாட்டார்' என்று சீற்றத்துடன் கூறிய நாகம்மாள் முடிவில் துக்கம் தாளாது விம்மி யழுதாள்.

இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு அவள் சட்டப்படி தன் மனைவி அல்ல என்ற அந்தப் பயங்கர உண்மையை அவளது காதலன் சுட்டிக் காட்டியது ஆயிரம் வேல்கள் கொண்டு பாய்ச்சியது போல் அவள் உள்ளத்தை வேதனை செய்தது.

'சே! உன் ரோதனையை நிறுத்து! நான் எங்கேயோ போவோன், வருவேன்! அதைப் பத்திப் பேசவோ கேட்கவே நீ யாரு? ஏதாச்சும் அனாவசியமாப் பேசினால் உன் மென்னியை முறிச்சுடுவேன். ஞாபகம் இருக்கட்டும், உன்னைச் சொல்லிக் குத்தமில்லே! உனக்குச் செம்மையா உதை கொடுத்து ரொம்ப நாளாச்சு. அந்தத் திமிர் அப்படிப் பேசச் சொல்லுது என்று அதட்டி விட்டு மாரிமுத்து வெளியே சென்று விட்டான்.

மனம் மிகவும் புண்பட்டுப் போன நாகம்மாள் அன்று இரவு முழுவதும் தூங்கவேயில்லை. பதினைந்து வருஷங் களுக்கு முன்பு தான் ஏமாந்து உதறிவிட்டு வந்த இன்ப மான அந்த வாழ்வை எண்ணி உள்ளம் உருகிப் போய் அழுதுகொண்டே இருந்தாள்.

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல், வரப்பிலே தகப்பனுக்குப் பகல் சாப்பாடு எடுத்துக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறுமி யின் கவனம், அருகிலிருந்த புளியமரத்தடியில் சென்றது. காவியுடையுடன் நீண்ட தாடியும் கொண்ட ஒரு பெரியவர் மரத்தடியிலே உட்கார்ந்திருந்தார். அருகிலே

வயலில் வேலை செய்து கொண்டிருந்த சில பெண்கள், தங்கள் கையை அவரிடம் நீட்டி ரேகை பார்த்துக் கொண்டு கூச்சலும் மகிழ்ச்சியுமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிதுநேரம் அவர்களையே பார்த்துக் கொண்டு நின்ற அந்தச் சிறுமி தன்னை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அந்தக் கிழவர் உற்றுக் கவனிப்பதை உணரவே யில்லை. தந்தைக்குச் சாப்பாட்டு வேளை நெருங்கி விட்டதை உணர்ந்த அவள், அங்கே நின்று மேலும் வேடிக்கைப் பார்க்கப் பயந்து கொண்டு வயலை நோக்கி வேகமாகச் சென்றாள்.

தந்தை சாப்பிட்டு முடிந்ததும் காலியான பாத்திரத்தை வாய்க்காலில் கழுவிக் கொண்டு புறப்பட்டாள். வழியில் அந்தப் புளிய மரத்தடியில் அப்பொழுது அந்தக் கிழவர் மட்டும் தான் இருந்தார். 'உன் கைரேகையைப் பார்க்க ஆசையில்லையா? இங்கே வாம்மா, குழந்தை!" என்று பெரியவர் மிகவும் அருமையாக அழைக்கவே, தயக்கத் துடன் மரத்தை நெருங்கித் தரையில் உட்கார்ந்து கொண்டு ஆவலுடன் கையை நீட்டினாள்.

எவ்வளவோ அவரிடம் கேட்கவேண்டும் என்று அவள் மனம் துடித்தது. "அப்பாவும் அம்மாவும் இப்படித் தான் தினமும் சண்டை போட்டுக் கொண்டேயிருப் பார்களா, என்றைக்காவது வீட்டிலே கொஞ்சம் அமைதி ஏற்படுமா? எப்பவும் நாங்கள் சோற்றுக்கில்லாது இப்படித்தான் ஏழையாகக் கஷ்டப்படுவோமா? தம்பிக்கு வந்திருக்கும் காசநோய் சௌக்கியமாகி அவன் உடம்பு முன் போல ஆகிவிடுமா? என்ற இத்யாதி கேள்விகளைக் கேட்க நா துடிதுடித்துக் கொண்டு, ஆவலுடன் கரத்தை நீட்டினாள்.

கிழவர் தமது தாடியை உருவிக் கொண்டு, அவள் கரத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, 'அடேயப்பா! அதிர்ஷ்ட சக்கரம் இந்தக் கையிலே இருக்குதே! இந்தக் கையாலே பொன்னும் வெள்ளியும் அள்ளி அள்ளி எல்லாருக்கும் கொடுக்கப் போகிற பெரிய அதிர்ஷ்டக்காரியல்லவா நீ?' என்று புகழ்ந்தார்.

இப்படியே அந்தக் கிழவர் தமது பேச்சுக்களால் அவளது இளம் உள்ளத்திலே பலவித கற்பனைகளையும் ஆசைகளையும் தூண்டி விட்டார். கிராமத்துத் தரித்திர வாழ்வை உதறிவிட்டுப் புறப்பட்டால், நகரத்திலே புதுமையான இன்ப வாழ்க்கையொன்று அவளுக்குக் காத்திருப்பதாக மெல்ல உபதேசம் செய்தார்.

முதலில் சிறிது தயங்கிய நாகம்மாள் ஒரு நாள் இரவு தன் தாயும் தந்தையும் போட்டுக் கொண்ட சண்டை யைக் கண்டு வெறுப்படைந்து மனம் வெதும்பி, தரித்திரத் தையும், கிராமத்து அல்ப வாழ்வையும் திரகஸ் கரித்து விட்டு யாருக்கும் தெரியாது புறப்பட்டுச் சென்று விட்டாள்.

ஆரம்பத்தில் கூறியபடி அவர் அவளை நகரத்திலிருந்த பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்க்கவில்லை. அதற்குப்பதில், முன்பின் தெரியாத ஒரு முரட்டு மனிதனிடம் அவளைக் கொணர்ந்து ஒப்படைத்து விட்டு அவர் மாயமாக மறைந்து விட்டார்.

விதி இவ்வாறு வகுத்த பாவ வாழ்க்கைய வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டு, நாகம்மாள் மாரிமுத்து வுடன் பதினைந்து வருஷ காலத்தை எப்படியோ கழித்து விட்டாள். இவ்வளவு காலத்திற்குப் பிறகு அவளைத் துச்சமாகக் குறைவுபடுத்திப் பேசியதை அவளால் தாள முடியவில்லை. அன்று மட்டும் அந்த பாவிக் கிழவன் பேச்சை நம்பி மோசம் போகாதிருந்தால் நம் கதி

இப்படியா ஆகிவிட்டிருக்கும்? வயலிலே உடல் வாட உழைத்துப் பாடுபட்டு வாழும் புருஷன் ஒருவனை மணந்துகொண்டு எவ்வளவோ சுகமாகவும் கௌரவ மாகவும் வாழ்ந்து கொண்டிருப்போமே!" என எண்ணி அவள் இரவு முழுவதும் மிகவும் வருந்திக் கொண்டிருந் தாள்.

கனவினின்று திடுக்கிட்டு விழித்தவள் போல் பழைய நினைவினின்று தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்த நாகம்மாள் 'தம்பி அழுவாதே! அழுதால் மட்டும் என்ன நடக்கப் போவுது? ஒண்ணுமில்லை உன்னையும் என்னையும் போல பேச்சை நம்பி ஏமாந்த சங்கடத்திலே சிக்கிக்கிறவங்க எத்தனையோ பேர் இந்த உலகத்திலே இருக்காங்க. இட்லியைச் சுருக்கத்தின்னுவிட்டு கையைக் கழுவிக்கிட்டுப் போய் வாசப் பக்கத்து அறையிலே உட்கார்ந்துடு. அழுதுக்கிட்டு இருக்கிறதைப் அந்தப் பிசாசு பார்த்தால் உன்னை அடிச்சு நொறுக்கிப்பிடுவான்" என்றாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தியாகராஜன் அவளை மிகவும் இரக்கமாகப் பார்த்து, 'அம்மா! கதவைத் திறந்து என்னை வெளியே போக விட்டுவிடு. நான் திரும்ப எங்க வீட்டுக்கே ஓடிப் போயிடுவேன். எனக்கு இங்கே இருக்க பயமா இருக்குது.' என்று விக்கினான்.

'தம்பி! அப்படி சுலபமாக உன்னை அனுப்பிவிட் டால் மாரிமுத்து என்னை உசிரோட சமாதி வச்சிடு வானே! பயப்படாதே! நான் சொல்றபடி கேள். உன்னை இங்கிருந்து இவங்க கையிலே சிக்காம காப்பாத்தி எங் காச்சும் அனுப்பிச்சு விடறேன். ஆனால் ஒண்ணு, நீ மட்டும் நான் சொல்றதைக் கேட்டுக்கிட்டு நல்ல பையனா நடக்கணும்' என்றாள். இரக்கம் மிகுந்த மெல்லிய குரலில்.

'சரி' எனத் தலையை ஆட்டிய தியாகராஜன் உள்ளத்தில் தம்பிக்கை சிறிது உதயமாயிற்று.

ஒரு மாத காலம் விரைவில் ஓடிச் சென்றது. தியாகராஜன் அந்தக் குறுகிய காலத்தில் தன் வாழ்நாட்களிலேயே மறக்க முடியாத பல நூதன அனுபவங்களை உணர நேரிட்டது. எளிமையும், இல்லாமையும் அவனுக்கு மிக்க பழக்கமானவை. எனினும், மனிதர்கள் எளிமையுடன் பிணைக்கப்பட்டு மிருகத்தினும் கேவலமாக வாழும் ஒரு கொடிய வாழ்க்கையும் உலகத்தில் இருக்கிறது என்ற உண்மை அவனுக்கு உதயமான பொழுது, அவனது இளம் உள்ளத்திலே பெரும் அதிர்ச்சி உண்டாகத்தான் செய்தது.

மாரிமுத்து தம்பதியைப் பற்றி அவன் பல விஷயங்களை நேரில் கண்டறிந்து கொண்டான். மாரிமுத்து பலவித வழிகளில் பொருள் தேடியும், அவனும் நாகம்மாளும் தாராளமாகச் செலவு செய்து கொண்டு நிம்மதியாக வாழ இயலவில்லை. அவன் சம்பாதித்த பணம் எவ்வளவு வேகமாக அவனை வந்து அடைந்ததோ, அதே வேகத்தில் அவனைவிட்டுப் பறந்தோடிச் சென்று விடுவதனால் மாரிமுத்து சதா கடன் தொல்லைகளிலும் தரித்திரத்திலும் உழன்று கொண்டிருந்தான். பொழுது விடிந்தது முதல் அஸ்தமிக்கும் வரை அவன் வீட்டு வாயில் கதவைக் கடன்காரர்கள் தட்டிக்கொண்டவண்ணமிருந்தனர். கடன் தொல்லைகளால் மன அமைதி இழந்த மாரிமுத்து நாகம்மாளிடம் அடிக்கடி

எரிந்து விழுந்து கொண்டேயிருந்தான். சிறு விஷயங்களுக்கெல்லாம அவர்கள் இருவரும், வீடு இடிந்து விழும்படி உரத்த குரலில் சண்டை போட்டுக் கொண்டனர்.

தியாகராஜனுக்கு இவ்விதமான குடும்பப் பூசல்கள் புதியதல்ல. அவனது சிறிய தாயும் தந்தையும் எத்தனையோ முறைகள், அவனது முன்னிலையில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வீட்டிலே அப்போதைக்கப்போது எழுந்த யுத்தங்களுக்கும் நாகம்மாள் தன் கணவனிடம் போட்டுக் கொண்ட சண்டைகளுக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை அவன் கவனிக்கத் தவறவேயில்லை. சண்டையின் பொழுது, அந்த விசித்திர தம்பதி வழங்கிக் கொண்ட வார்த்தைகள் அவன் அதுவரை கேட்டறியாத மிக்க ஆபாசமான மொழிகளாக இருந்தன.

இதைவிட அவனுக்கு விசித்திரமும் வேடிக்கையுமாக இருந்தது. சண்டை முடிந்தவுடன் தம்பதிக்குள் நிலவி நின்ற அன்னியோன்ய பாவம். ஒரே அறையில் கொன்று விடுவான் போல் கோபத்துடன் கொக்கரிக்கும் மாரிமுத்துவா என்று ஆச்சரியப்படும்படி அவனது கோபம் விரைவில் தணிந்து போகும். கூந்தல் ஒரு முழ உயரம் பறக்கும் அளவு அல்ங்கோலமாக நின்று கொண்டு, கண்களில் தீப்பொறி பறக்க உரத்த குரலில் கிறீச்சிட்டு ஆவேசம் பிடித்தவள் போல் அலறிக் கொண்டு அழும் நாகம்மாள், மாரிமுத்துவின் இரண்டொரு கனிவான மொழிகளைக் கேட்டதும் மந்திரசக்தியினால் கட்டுண்ட நாகம் போன்று சொக்கி அடங்கி விடுவாள்.

ஆத்திரத்துடன் இருவர் போட்டுக் கொள்ளும் பூசலை எவ்வாறு காணச் சகிக்காது. திகில் பட்டானோ அதை விடப் பன்மடங்கு அவர்களது காதல் நாடகங்களைக் காண அருவருப்படைந்து மனம் கூசினான் தியாக

ராஜன். அருகிலே அந்தச் சிறுவன் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கூடக் கவனிக்காதவள் போல், அன்பு மிகும் சமயங்களில் நாகம்மாள் மிக்க உரிமையுடன், மாரிமுத்துவின் மடியில் தன் பரட்டைத் தலையை வைத்துக் கொண்டு தன் இரு கரங்களால் அவனது முகத்தை வருடிக் கொஞ்சிக் கொண்டிருப்பாள். இத்தகைய ஒரு காட்சியை அவன் வாழ்நாட்களில் முதல் முதலாகக் காண நேரிட்டதனால் ஏற்பட்ட அதிர்ச்சியும் சங்கோஜமும் தாளமுடியாது தியாகராஜன் அவமானத்தினால் குன்றிப் போனான்.

வெறுப்பு விருப்பு என்ற இரண்டு பெரும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, அவைகளினின்று மீளத் தெரியாது தவித்த அவர்களின் உண்மை மன நிலையை ஆராய்ந்து அறியும் அளவு அந்தச் சிறுவனுக்கு வயதாகிவிடவில்லை. அவர்கள் வாழ்ந்து வந்த அந்தத் தீயவாழ்வு, அவர்கள் பேசிய ஆபாச மொழிகள், அசம்பாவிதமான அன்புச் செயல்கள்- இவை யாவும் அவனால் சகிக்க முடியாத வைகளாக இருக்கவே, அந்த வீட்டை விட்டு எங்கேனும் ஓடி விட வேண்டும் என்று துடியாகத் துடித்துக் கொண்டிருந்தான். அதற்கு ஏற்ற சந்தர்ப்பமும் சமயமும் வாய்க்காது போகவே, அவனது பொறுமை குறைந்து கொண்டு வந்தது. உதவுவதாகக் கூறிய நாகம்மாளிடம் அவ நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

கடைசியாக தியாகராஜனின் உள்ளத் துடிப்பிற்கு ஒரு முடிவுகாலம் மிகவும் எதிர்பாராத விதத்தில் வந்து சேர்ந்தது. மாரிமுத்து நாகம்மாளுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு மனஸ்தாபம், அந்தச் சிறுவனின் விடுதலைக்கு வழிகோலியாக அமைந்தது.

அன்று காலை வெளியே ஏதோ அலுவலாகச் சென்று விட்டு வீடு திரும்பிய மாரிமுத்து மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டான். சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டி

விட்டு, பின் கட்டிற்குக் குளிப்பதற்காக அவசரமாக அவன் செல்வதைக் கவனித்த நாகம்மாள், ஆவலும் சந்தேகமும் ஒருங்கே எய்தியவளாக, ஓடிச்சென்று அவனது சட்டைப் பையைப் பரிசோதனை செய்யலுற்றாள். எதிர்பாராத விதமாகப் பின்கட்டிலிருந்து விரைந்து வந்து கொண்டிருந்த மாரிமுத்து, அவளது செய்கையைக் கவனித்து விட்டான். நெற்றி மீது புரண்ட ஈர சிகையை ஒரு குலுக்கலில் சரிபடுத்திக் கொண்டு ஆத்திரத்துடன் பாய்ந்து வந்து அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான். அவனது இரும்புப் பிடியைத் தாளாது, கரத்தில் பிடித்திருந்த தங்கச் சங்கிலியை நழுவவிட்டு, நாகம்மாள் நோவு பொறுக்க முடியாது வாய் விட்டு அலறினாள்.

"திருட்டுக் கழுதை! என்ன வேலை செய்யத் துணிஞ்சுட்டே? ஏதேது ரொம்பத் துளுத்துப் போனாப்பல இருக்குது!" என கர்ஜித்த மாரிமுத்து. அவளது கூந்தலைப் பற்றி ஒரு உலுக்கு உலுக்கி, வேகமாக அப்பால் தள்ளினான். தரையில் போய் விழுந்த நாகம்மாளின் கரங்களிலிருந்த கண்ணாடி வளையல்கள் உடைந்து, துண்டுகள் நாலாபுறமும் சிதறின. அதில் ஒரு சிறு துண்டு அவளது கரத்தில் குத்தி விடவே, அந்தக் காயத்தினின்று இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து வழிந்தோடியது.

'நான் ஒண்ணும் திருட வரவில்லை. உன் திருட்டுத் தனத்தைக் கண்டுபிடிக்கத்தான் எழுந்து வந்து பார்த்தேன். என்னைவிட அவள் உனக்கு உசத்தியாப் போயிட்டா, இல்லையா? இந்தத் தங்கச்சங்கிலி யாருக்கு வாங்கி வச்சிருக்கிறேன்னு தெரியும்!' என்று விக்கி அழுத நாகம்மாள் புடவைப் தலைப்பால் காயத்தை அழுத்திக் கொண்டாள்.

அருகிலிருந்த அறையில் ஒட்டிக் கொண்டு நின்ற தியாகராஜன் ரத்தத்தைக் காணப் பயந்தவனாகக்

கண்களை இறுக மூடிக்கொண்டான். இந்தச் சண்டை எங்கே போய் முடியுமோ என்ற கிலியில் அவன் நெஞ்சு அடித்துக் கொண்டது.

'தெரியுமல்லவா? வாயை மூடிக்கிட்டுக் கிட. அவளை பத்தி ஏதாச்சும் பேசினால் மென்னியை முறிச்சு விடு வேன்!" என்றான் கோபத்துடன் மாரிமுத்து பதிலுக்கு.

'அரிசி வாங்கப் பணம் கேட்டா 'இல்லை'யின்னு கையை விரிச்சே! இப்ப அவளுக்குத் தங்கச்சங்கிலி வாங்க மட்டும் பணம் எங்கிருந்து வந்துச்சாம்? நீ பண்ற இந்த அக்கிரமத்துக்குச் சாமி உன்னைக் கேட்பார்" என்ற பொறாமையும் துக்கமும் தாளாது கத்தினாள் நாகம்மாள்.

பதினைந்து வருஷகாலம் மாரிமுத்துவுடன் நடத்திய வாழ்க்கையில் அவள் ஆசைப்பட்ட பொருள் ஒன்றையும் அவன் அவளுக்கு வாங்கிக் கொடுத்ததில்லை. எவ்வளவோ பணம் அவன் சம்பாதித்தான்; எவ்வளவோ செலவு செய்தான். நாகம்மாள் ஆசையுடன் பலமுறை கேட்டுக் கொண்டும் ஒரு தங்கச் சங்கிலி வாங்கி அவள் கழுத்தில் பூட்ட அவனுக்கு மனம் வந்ததேயில்லை. பல வருஷங்கள் அவனது வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளைப் பொறுமையுடன் பங்கிட்டு ஒத்துழைத்த தனக்கு ஏற்படாத ஒரு பாக்யம்- முன்பின் தெரியாத எவளோ ஒருத்தி, சில தினங்களுக்கு முன்புதான் அவனுக்குப் பழக்கமானவள்- அவளுக்கு ஏற்படுவதைக் காண நாகம் மாளின் உள்ளம் பொறாமையினால் எரிமலைபோல் கொந்தளித்தது. புலி போல் பாய்ந்து மாரிமுத்துவின் கழுத்தை நகங்களால் கிழித்து அவனைக் கொன்று விட்டால்கூட அவளது ஆத்திரம் அடங்காது போல் அவன் மீது அவளுக்குத் தாங்கமுடியாத ஒரு வெறுப்பு அதுசமயம் பொங்கிக் கொண்டு வந்தது.

கீழே விழுந்துகிடந்த தங்கச்சங்கிலியை எடுத்து பத்திரமாகப் பொட்டலத்தில் மடித்து வைத்துக்கொண்ட மாரிமுத்து. வெளியே செல்ல உடுத்திக் கொள்ள ஆரம்பித்தான். சிறிது பொழுதில் வெள்ளை வேஷ்டியும் சரிகை அங்கவஸ்திரமுமாக கண்ணியமான தோற்றத் துடன் கிளம்பிய அவன், இரண்டு ரூபாய்களை நாகம் மாள் முன் விட்டெறிந்தான். 'துட்டு இல்லையின்னு புலம்பாதே. இன்னும் நாலு நாளைக்குப் பணம் என்கிற பேச்சு உங்கிட்டேயிருந்து வரக்கூடாது. கதவைத் தாள் போட்டுக்கோ. பத்திரமா எல்லாத்தையும் கவனிச்சுக்கோ, ராத்திரி நான் ஊட்டுக்கு வர வெகு நாழியாகும் என்று அதட்டிவிட்டு வெளியே செல்லத் திரும்பினான்.

தன்னை விட்டு வேறு ஒரு பெண்ணின் அன்பை நாடிச் செல்லும் தன் காதலனின் துரோக நடத்தை அவளது நெஞ்சைப் பிளந்தது. அவளால் அந்தத் துயரத் தின் கொடுமையைச் சகிக்கவே முடியவில்லை. மாரி முத்து தன்னை விட்டுப் போவதைத் தடுக்கவேணும் என்ற ஒரு ஆவேச உணர்ச்சியால், எழுந்து ஓடி, அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டாள், 'நான் மாட்டேன், உன்னை விட மாட்டேன்!' என்று ஆவேசத்துடன் கூறிய நாகம்மாள்' அவளது காலடியில் விழுந்தாள்.

உல்லாசமாக வெளியே செல்ல உடுத்தியிருந்த தனது ஆடைகளை அவள் கசக்கிப் பாழாக்குவதைக் காணப் பொறுக்காத மாரிமுத்து தனது பலம் பொருந்திய கரங்களால் அவளை உதறித் தள்ளிவிட்டு கோபத்துடன் 'உனக்கு இன்னிக்கு பிசாசு பிடிச்சிருக்குது. என்னமோ இல்லாத ஆட்டபாட்டமெல்லாம் காட்டுறியே. ஏதேது! ரொம்பத் துள்ளுறாப்பல இருக்குதே! சே கழுதை! எழுந்து கதவைத் தாளிட்டுக்கிட்டு வீட்டைப் பத்திரமா பாத்துக்க. ஏதாச்சும் முரண்டு பண்ணினியோ, மாரிமுத்து

யாருன்னு புரிஞ்சிடும்' என கர்ஜித்து விட்டு, ஆத்திரமாக வீட்டை விட்டு வெளியே சென்றான்.

தெருவிலே வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்த அவனது பின்னால் ஓடிச் சென்று அவனை இறுகப்பற்றி இழுத்துத் தன்னிடம் என்றும் பிரியாது வைத்துக் கொள்ள வேண்டும் போன்ற அடக்க மாட்டாத ஆத்திரம் நாகம்மாளுக்கு அது சமயம் பொங்கிக் கொண்டு வந்தது. கண்ணீருடன் விம்மியபடி, தெரு வாசல்படிவரை ஓடிய அவள் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, திரும்ப உள்ளே ஓடி வந்து கதவைப் படீரென சாத்திக் கொண்டாள்.

அவர்கள் வீட்டிலே எழுந்த கூக்குரலைக் கேட்டு வழக்கம் போல் அக்கம் பக்கத்தில் வசித்து வந்தவர்கள் வேடிக்கை பார்க்கும் நிமித்தம், அவரவர்கள் வீட்டு வாயிலில் வந்து நின்று கொண்டிருந்தனர்.

நாணம் வெட்கம், எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டிருந்தாள். என்றாலும் அவ்வப்பொழுது எழுந்து புரட்சி செய்யும் மனிதத்தன்மை என்ற உணர்ச்சி காரணமாக, நாகம்மாளுக்குத் திடீரென சமூகத்தைப் பற்றி அச்சம் ஏற்பட்டு விடுவது உண்டு. அக்கம் பக்கத்தவர்கள் சிரிப்பார்களே என்ற நினைவில் சட்டென்று உள்ளே திரும்பி வந்த அவள், துக்கம் தாளாது தரையில் விழுந்து புரண்டு அழுதாள். கள்ளம் கபடமற்ற தனது இன்பமான இளமைப் பருவம், வஞ்சனை வார்த்தைகளால் ஏமாற்றப் பட்ட சம்பவம், மாரிமுத்துவிடம் ஏற்பட்ட கட்டுக்கடங்காத காதல், பதினைந்து வருஷ வாழ்விலே ஏற்பட்ட பல்வேறு போராட்டங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே நினைத்துக் கொண்டு துயரமடைந்த நாகம்மாளுக்கு, அவளது காதலன் மீது துவேஷம் பொங்கி எழுந்தது, தன் மனத்தைப் புண் செய்து விட்டுச்சென்ற கருணை அற்ற அந்தக் கிராதகனை வஞ்சித்து மோசம் செய்ய

வேண்டும் என்ற ஒரு எண்ணம் எழவே, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புத்துணர்ச்சி எய்தியவளாய் எழுந்து உட்கார்ந்தாள்.

அஸ்தமிக்கும் பொழுது நெருங்கியதும் நாகம்மாளின் பார்வையில் ஒரு பரபரப்பு காணப்பட்டது. அலங்கோலமாயிருந்த தனது கூந்தலை வாரி முடித்துக் கொண்டு தூசிபடிந்த தனது ஆடையைத் தட்டி சரிப்படுத்திக் கொண்டாள்.

'மூஞ்சியைக் கழுவி, கைகால் சுத்தம் பண்ணிவிட்டு ஓடியா, சோறு திங்க!" என தியாகராஜனுக்கு உத்தரவிட்டுவிட்டு, அவசரமாக இலையில் சோறு பரிமாற ஆரம்பித்தாள். சாப்பிட- உட்கார்ந்த தியாகராஜனுக்கு அவளது செய்கைகளின் தாத்பரியம் புரியவில்லை. அவன் ஏதும் கேட்கு முன் நாகம்மாள் முந்திக்கொண்டு, 'தம்பி! இன்னிராத்திரி ஒரு வாட்டி தான் என் கையால் பொங்கிய சோறு திங்கப்போறே. நல்லா வயிறாரத் தின்னுக்கோ! சட்டுப்புட்டுனு, நாம் கிளம்பிப் போயிடணும். இல்லாட்டி அந்தப் பாவி பிசாசு வந்து விடும்' என்றாள் உணர்ச்சிவசத்தில் நடுங்கிய மெல்லிய குரலில்.

தனக்கு அந்த பயங்கரமான வீட்டினின்று விடுதலை ஏற்படப் போகிறது என்று அறிந்துகொண்ட தியாகராஜனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில் அவனால் சாப்பிடவே முடியவில்லை. தனக்கு உதவி செய்யப்போகும் அவள் மீது ஏற்பட்ட நன்றிப் பெருக்கால் அவனது தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் துளித்தது.

அவசரமாக போஜனத்தை முடித்துக்கொண்ட நாகம்மாள் தெருவில் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அஸ்தமித்து வெகு நேரமாகவில்லை. எனினும், வழக்கம் போல் அவர்கள் குடியிருந்த தெரு மனித சஞ்சாரமற்று அமைதியாக இருந்தது. இதுதான் சமய

மென எண்ணியவள் போல் மிகவும் பதட்டத்துடன் வாயிற்கதவைச் சாத்தி பூட்டிக் கொண்டு, தியாகராஜனது கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு, தெருவில் இருளில் பதுங்கியபடி வேகமாகச் சென்றாள். எங்கே போகிறோம் என்ற ஒரு முடிவுமின்றி, சந்துகளில் குறுக்கும் நெடுக்குமாக அவனை இழுத்துக் கொண்டு அவள் பயித்தியக்காரி போல் ஓடினாள். பின்னால் ஆள் வரும் சப்தம் கேட்ட பொழுதெல்லாம் தியாகராஜன், எங்கே மாரிமுத்து வந்து விடுவானோ என்று மிரட்சியடைந்து அரண்டு போனான்.

நகரத்தின் மறு கோடியை அடைந்ததும் நாகம்மாள் மிக்கத் துணிச்சலுடன் அவனையும் புறப்படத் தயராக இருந்த பஸ் ஒன்றில் ஏற்றிவிட்டு தானும் ஏறிக் கொண்டாள். அரைமணி நேரப் பிரயாணத்தின் முடிவில் அவளது கட்டளைப்படியே பஸ்ஸிலிருந்து இறங்கினான் தியாகராஜன்.

வானத்திலே மின்னிய நக்ஷத்திரத்திரங்கள் மீது வேகமாக கருமேகம் வந்து சூழ்ந்து கொள்ளவே, எங்கும் கண்ணை மறைக்கும் இருள் பரவிக்கிடந்தது. வரப் போகும் பெருமழைக்கு அடிகோலுவது போல், வானம் லேசாக இடித்து மின்னத் துவங்கியது. சில்லென்று வீசிய குளிர்காற்று அந்தச் சிறுவனின் பயத்தை இரட்டிப் பாக்குவது போல் அவனது மேனியை நடுங்கச் செய்தது.

அவர்களை ஏற்றி வந்த பஸ் புறப்பட்டுச் செல்லும் வரை வாளா நின்ற நாகம்மாள், அது சென்று மறைந்த தம் தியாகராஜன் அருகில் நெருங்கி, அன்புடன் அவனது கன்னத்தை ஒரு முறை தடவிக் கொடுத்து, அந்தக் கரங்களைத் தன் நெற்றிமீது வைத்து, விரல்களை சொடுக்கிக் கொண்டாள். "தம்பி! என் வாழ்க்கையிலே நான் இதுவரை எவ்வளவோ தப்புகள் செஞ்சிருக்கிறேன். ஆனால், இன்னியோட அந்தப் பாவமெல்லாம்

போயிடும்னு நினைச்சுக்கிட்டு, மாரிமுத்துவைக் கூட லட்சியம் பண்ணாமல் உன்னை வெளியே ஓடிப்போக இட்டுக்கொண்டு புறப்பட்டு வந்திருக்கிறேன். உன்னோட வெகு நேரம் பேசிக்கிட்டிருக்க முடியாது. நான் வந்த சுவடு தெரியாம திரும்பி ஓடிப் போகணும் என்றாள். அவளது குரல் துக்கத்தினால் தடைப்பட்டது.

'அப்படியானா என்னை இங்கே விட்டு விட்டுநீ போயிடுவியா?" எனத் திகைப்புடன் கேட்டான் அந்தச் சிறுவன்.

'அதோ தெரியுது பார், அந்தப் பாதை வழியே போனீன்னா, கூப்பிடு தூரத்திலே ஒரு கிராமம் வரும். அங்கே போய் ராத்திரிக்கு தங்கிப்புட்டு விடிஞ்சதும் உன் ஊர் போய்ச் சேர்ந்துடு. இந்தா, செலவுக்கு இதை வச்சுக்க. உனக்கு இதுக்கு மேலே கொடுக்க எங்கிட்ட பணம் இல்லை. உன்னைப் போல நானும் ஒரு அனாதை; ஏழை உன்னோட என்னை ஒப்பிட்டுப் பேச லாயக்கத்தவள்" சின்னஞ்சிறு பயல் நீ. இன்னும் உலகத்திலே வாழ உனக்கு எத்தனையோ இருக்கு. எனக்கோ அப்படியில்லை. இனிமேலே எனக்கு இந்த உலகத்திலே என்ன இருக்கு? ஒண்ணுமேயில்லை! நான் பூமிக்கும் பாரமாகவும் தண்டமாகவும் உசிரை வச்சிக்கிட்டு இருக்கிறேன்" என்று பேசிக்கொண்டு போன நாகம்மாள், மேலே பேச முடியாது துக்கத்துடன் திணறினாள்.

தன் வலது கரத்தைப் பிடித்து உள்ளங்கையிலே அவள் பரிவுடன் இரு ரூபாய்களை வைத்து அழுத்துவதை உணர்ந்த தியாகராஜனுக்கு, பதில் என்ன கூறுவதென்று விளங்கவில்லை. நாகம்மாளின் துக்கம் அவன் உள்ளத்தை வேதனை செய்தது.

'என்னுடன் வந்து விடேன். நாம் இருவரும் எங்கேயாவது போய் வாழ்வோம். நான் வேலை செய்து உன்னை

என் தாய் போலக் காப்பாற்றுவேன்' என்று கூற வேண்டும் போல் ஒரு ஆவல் ஏற்பட்டதெனினும், அவனால் ஏதும்பேச முடியவில்லை.

"தம்பி, போய்வா! மழை தூற ஆரம்பிச்சுடுச்சு. நீ பெரியவனாப் போய் நல்லா படிச்சு, பெரிய உத்தியோகம் பண்ணி, நல்லா இருக்கிறச்சே இந்தப் பாவி நாகம்மாளை நினைச்சிக்கோ. அதுவே எனக்குப் பெரிய பாக்கியம்! போய் வா தம்பி, நிக்காதே இங்கே. மாரிமுத்துவுக்குத் தெரிஞ்சவங்க கண்ணிலே தென்பட்டாலும் ஆபத்து!' என்று தழ தழத்த குரலில் கூறிய நாகம்மாள், அந்தச் சிறுவனை அன்புடன் ஒரு முறைகள் மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

கன்னத்திலே வந்து சுடச்சுட விழுந்த அவளது கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தியாகராஜன் சோவெனப் பொழியத் துவங்கிய மழையில், அவள் காட்டிய திசையை நோக்கித் தலைதெறிக்க ஓடினான்.

மாரிமுத்து வேகமாக வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். வழக்கம்போல் சந்துகளில் குறுக்காகப் புகுந்து இருட்டில் மறைந்து பதுங்கியபடி செல்லாமல் நிர்ப்பயமாகப் பகல் போல் விளக்கின் ஒளி வீசிக் கொண்டிருந்த ராஜபாட்டையில் அவன் நடந்து வந்து கொண்டிருந்தான். சட்டைப்பையில் 'ஆக்ஷேபகரமான வஸ்துக்கள்' என சட்டப்படிக் கருதப்படும் பிச்சுவாவும், புதுச்சேரியிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த இரண்டு தங்கக் கைக்கடிகாரங்களும் இருந்தன. இந்த மாதிரி

சந்தர்ப்பங்களில் தெருவிலே அங்குமிங்கும் காணப்படும் ரோந்து செய்யும் போலீஸ் ஜவான்களைக் கண்டு பயந்த மாதிரி காண்பித்துக் கொள்வது மிகவும் அபாயம் விளைவிக்கும் என்பதைப் பல வருஷ அனுபவத்தில் அறிந்திருந்த மாரிமுத்து, நகரத்து நடுச் சந்தியில் நின்று கொண்டிருந்த போலீஸ் ஜவானிடம் நெருங்கி, மிக்க துணிவுடன், "ஐயா, நெருப்பு பெட்டி இருக்கிறதா?' என்று வினவினான்.

நாணயமான அவனது ஆடைகளை ஏற இறங்க விறைத்துப் பார்த்த ஜவானின் கண்களில் தோன்றிய சந்தேகக் குறி விரைவில் மறைந்து விட்டது. இந்தாங்க...' என்று தன் சட்டைப்பையில் இருந்து அவன் நெருப்புப் பெட்டியை எடுத்து நீட்டினான்.

நிதானமாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்ட மாரிமுத்து, "இரவு முழுவதும் கண் விழிக்க வேண்டுமே! உங்கள் வேலை மிகவும் தொல்லையானது தான் பாவம்!" என தைரியத்துடன் கூறிவிட்டு, "இந்தாருங்கள் நீங்களும் ஒன்று பற்ற வைத்துக் கொள்ளுங்கள். தூக்கத்துக்கு இது நல்ல மருந்து" என, தன் சிகரெட் பெட்டியை அவன் முன் நீட்டினான்.

"நான் புகை பிடிக்கும் பழக்கமுடையவன் அல்ல. அவசரத்திற்கு விளக்குக் கொளுத்த வேண்டுமானால் இருக்கட்டும் என்பதற்காகத் தான் தீப்பெட்டியை வைத்துக் கொண்டிருக்கிறேன்" என பதிலளித்த ஜவான் மெல்ல நகைத்தான், தூக்கம் வராது விழிப்புடன் காவல் காத்து நிற்க, அவனுக்கு இப்படி யாருடனாவது சற்றுச் சம்பாஷித்துக் கொண்டிருந்தால் பெரும் ஆறுதலாக இருக்கும்போல் தோன்றியது.

"நல்ல பிள்ளை...! உங்களுக்கு இன்னமும் கல்யாணம் ஆகவில்லை என்று நினைக்கிறேன்" எனப் பரிகாசமாகக்

கேட்ட மாரிமுத்து உரக்கச் சிரித்தான். இரவின் நிசப்த மான அவ்வேளையில் அவனது சிரிப்பு, காற்றின் ஊடே வேகமாக வெகு தொலைவு வரை சென்று ஒலித்தது.

"இல்லை. எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என ஆச்சரியத்துடன் கேட்டான் அந்த ஜவான்.

"மிகவும் சுலபம். என்னைப்போல் ஒரு குடும்பஸ் தனாக இருந்தால் இந்தப் பழக்கம் தானாகவே ஏற்பட் டிருக்கும். ஆண் பிள்ளைகள் இவ்விதமான துர்ப்பழக்க வழக்கங்களுக்கு அடிமையாவதற்கு வீட்டிலிருக்கும் பெண் பிள்ளைகள்தான் காரணம். நல்லவனாகவும், ஒழுங்கு நடத்தையுடையவனாகவும் நாம் வாழ அவர்கள் ஒரு நாளும் விடுவதில்லை. நீங்க ரொம்ப அதிர்ஷ்ட சாலிதான். ரோந்து முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பினால், "ஏன் இவ்வளவு நாழி, எங்கே போயிருந்தீங்க?" என்று மிரட்டிக் கேட்டு சண்டை போட வீட்டிலே ஒரு பெண் மணி இருக்க மாட்டாங்க, இல்லையா? வெளியிலே போறதையும் வரதையும் பற்றித் தர்க்கித்துச் சண்டை போட ஒருத்தரும் இல்லையென்றால் எத்தனை நிம்மதி!" என்றான் கேலியாக.

முன்பின் தெரியாத அந்த மனிதன் திடீரென வலிய வந்து நட்புப் பாராட்டிப் பேசிய தோரணை போலீஸ் ஜவானுக்கு மிகவும் நூதனமாகவும் ரஸமாகவும் இருந்தது. உத்யோகத்தில் அனுபவம் சரிவர ஏற்படாத கற்றுக்குட்டி அவன். ஆச்சர்யத்துடன் மாரிமுத்துவை விழித்துப் பார்த்து, "உங்கள் மனைவி அப்படி தினமும் உங்களுடன் தர்க்கம் செய்து சண்டை போடுகிறாங்களா என்ன?" என்று பரிகாசமாகக் கேட்டான்.

மாரிமுத்து அவனுக்கு நேரிடையாகப் பதில் அளிக்காமல், "கல்யாணம் செய்து கொண்ட புதிதில் வீட்டிற்கு எப்போது போவோம் என்று மனம் துடிக்கும்.

கொஞ்ச காலம் ஆனதும் ஏன் போகவேணும். வெளியி லேயே இருந்து விட மாட்டோமோ என்று வாழ்க்கை. ஒரே நடுக்கமாக மாறிவிடும். இதுதான் வாழ்க்கை காரணம் என்னைக் கேட்டால் உங்களுக்கு நான் ஒரு சிறு புத்திமதி சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருப்பதுபோல் எப்பொழுதும் சுதந்திரமாக நீங்கள் தனியாகவே இருந்து விடுங்கள், மயங்கிப் போய்த் தப்பித் தவறி குடும்ப பந்தம் என்பதில் அகப்பட்டுக் கொண்டு விடாதீர்கள். தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக் கிறார்கள்– பெண் என்னும் மாயப் பைசாசம் என்று?" என வேதாந்தமாகக் கூறிவிட்டு பெருமூச்செறிந்தான்.

"நான் இந்த வழியாக ரோந்து போக வேணும். தாங்கள் எந்த வழி செல்லப் போகிறீர்கள்?" என்று முடிவில் ஜவான் கேட்டான்.

அது சமயம் எதிர்ப்புறமாக வந்து கொண்டிருந்த இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களைச் சற்றுத் தொலைவிலே கண்டு கொண்ட மாரிமுத்து சட்டென, "ஏன், நானும் நீங்கள் செல்லும் வழிதான் போக வேணும். உங்களுடன் நடந்து சென்றால், ஒரு விதத்தில் அனு கூலமே! பாருங்கள், இப்பொழுதெல்லாம் காலம் கெட்டுக் கிடக்கிறது. இரவுவேளைகளில் தனி வழியே தெருவிலே போவதுகூட ஆபத்தாக இருக்கிறது. போக்கி ரிகள் நடமாட்டம் ஊரில் மிகவும் வலுத்துப் போயி ருக்கிறது" என்றான்.

'ஆமாம், முந்தாநாள் கூட ஒரு சுத்திக்குத்து சம்பவம் தெற்குத்தெரு முகப்பிலே நடந்தது. அடிக்கடி இப்படி நடப்பதால்தான் இப்பொழுதெல்லாம் ராத்திரி பாரா அதிகமாக ஏற்பட்டிருக்கிறது' என்றான் ஜவான்.

"எதிரே கையில் விளக்குடன் ரோந்து சென்று கொண்டிருந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருவரும்,

மாரிமுத்துவைச் சந்தேகத்துடன் இடைமறித்து நிறுத்த வில்லை. அந்த இளம் ஜவானுடன் பரிகாசமும் சிரிப்பு மாகப் பேசிக் கொண்டு சென்ற அவன், அவனது நண்பனாக இருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொண்ட அவர்கள் தாங்கள் வழியே சென்றனர்.

ஜவானது அருகாமையில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்காது நிம்மதியாக நடந்து சென்று கொண் டிருந்த மாரிமுத்து, தெருவின் கோடியை அடைந்ததும், 'நான் வருகிறேன். தனியே வருகிறோமே என்று எனக்குக் கொஞ்சம் திகிலாத்தான் இருந்தது. உங்கள் துணையுடன் வீடு அருகே வந்து விட்டேன். ஞாபகம் வச்சுக்குங்க' என்று நீண்டநாள் பழகியவன்போல் ஜவானின் முதுகில் ஒரு தட்டு தட்டிவிட்டு, ஒரு சந்திற்குள் சென்று மறைந்தான்.

'வீடு அருகில் என்றானே, கொஞ்சம் தாகத்திற்கு நீர் கேட்டு வாங்கிச் சாப்பிட்டிருக்கலாமே' என ஒரு கணம் எண்ணிய ஜவான், பிறகு அந்த உத்தேசத்தை மாற்றிக் கொண்டு தனது கடமையை ஆற்றும் பணியில் ஈடுபட்டவனாக, தெருவில் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு மேலே சென்றான்.

சற்றுநேரம் வரை சுவர் ஓரமாகச் சந்தில் இருளிலே நின்று கொண்டிருந்த மாரிமுத்து, ஜவான் தெருவின் முனையை விட்டுத் திரும்பி அப்பால் சென்று மறையும் வரை காத்திருந்து விட்டு வெளியே வந்தான். ஒருமுறை தன் சட்டைப் பையிலிருந்த கடிகாரங்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பத்தாம் பசலியாக இருந்த அனுபவமற்ற அந்த இளம் ஜவானை எண்ணிய மாத்தி ரத்தில் அவனுக்கு சிரிப்பு வந்தது. 'முட்டாள்! இவன் ரோந்து சுத்தறதும் ஒண்ணுதான், சுத்தாததும் ஒண்ணு தான்.' இந்த மாதிரி ஏமாந்த சோணகிரிகள் மேல் சர்க்கார் செலவழிக்கும் பணம் தண்டம்தான் எனத்

தனக்குள்ளே இகழ்ச்சியாகக் கூறிக்கொண்டு, சிறிது தூரத்தில் இருந்த தன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். ஒரு போலீஸ்காரன் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்ட தன் திறமையைப் பற்றி எண்ணி மிக்க பெருமிதம் அடைந்தான்.

வீட்டை நெருங்க நெருங்க அவனது உற்சாகம் உச்சநிலையை அடைந்தது. அன்றிரவு அவன் வெளியே சென்றிருந்த ஒரு முக்கிய வேலை மிகவும் திருப்திகரமாக முடிந்து விட்டிருந்ததால் ஏற்பட்ட சந்தோஷந்தான் அதற்குப் பெரிதும் காரணம். ஒரு மாத காலமாக வீட்டில் வைத்திருந்து சோறு போட்டுக் காப்பாற்றி வைத்திருந்த விருந்தாளிப் பையனை அவனது கூட்டாளிகளில் ஒருவன் நல்ல விலைக்கு விற்றுக் கொடுப்பதாக அவ னிடம் வாக்குக் கொடுத்திருந்தான். மறுதினம் காலை அதற்காக முன் பணம் ஐந்நூறு ரூபாய் வேறு தருவதாக அவன் கூறியிருந்தான்.

வடக்கே இருந்த நகரமொன்றில் வெளி தேசத்தி லிருந்து அபினி முதலிய போதைப் பொருள்களைக் கள்ளத்தனமாகக் கடத்திச் சென்று வியாபாரம் செய்த ஒரு கூட்டம் இருந்தது. அவர்களுக்கு அந்தத் திருட்டுத் தொழிலில் பழகி உதவி செய்ய சிறுவர்கள் சிலர் தேவை யாக இருந்தனர். உற்றார் உறவினர்கள் அதிகம் இல்லாத, கள்ளங்கபடமற்ற சிறுவர்களே அந்த வேலைக்கு எளிதில் உபயோகப்படுவார்கள் என அறிந்த அந்தக் கூட்டம் அத்தகைய இளம் பிள்ளைகளை விலை கொடுத்து வாங்குவதில் ஈடுபட்டிருந்தது.

மாரிமுத்து எத்தனையோ குழந்தைகளை அவ்வாறு சடையாண்டிக் கிழவன் உதவி செய்ய, கடத்திச் சென்று, விற்று லாபமடைந்திருந்தான். இதுவரை கிடைத்த

தொகையை விட தியாகராஜனுக்காகக் கிடைக்கப் போகும் பணம் மிகவும் அதிகமாக இருந்ததனால் அவனுக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை.

காதல் பாட்டொன்றைச் சீட்டியடித்த வண்ணம் உல்லாசமாக வீட்டு வாயிலை நெருங்கிய மாரிமுத்து திடுக்கிட்டு நின்று விட்டான். என்றுமில்லாப் புதுமை யாக அவன் வீட்டு வாயில் கதவு பூட்டியிருந்தது! நாகம்மாள் தன்னை மோசம் செய்திருக்கக் கூடும் என்று அவனால் நம்பவே முடியவில்லை. அவ்வளவு வருஷங்களாக அவனது அன்பையும் ஆத்திரத்தையும் சமமாகப் பகிர்ந்து கொண்டிருந்த அவள் அவனை ஏமாற்றுவாளா?

மாரிமுத்து இருதயம் படபடவென்று துடித்தது முகத்தில் குப்பென வியர்வைத் துளிகள் அரும்பின. ஆத்திரத்தில் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டு இடது கரத்தினால் தன் அரும்பு மீசையைத் தடவிக் கொண்டான். எத்தனையோ பெரிய பெரிய போலீஸ் உத்தியோகஸ்தர்களையெல்லாம் வினாடியில் ஏமாற்றி வெற்றி பெற்று வந்த அவனை, கேவலம் சொன்னதைக் கேட்டுக்கொண்டு அடிமையாகக் கிடந்த ஒரு பெண் பிள்ளை ஏமாற்றி விடுவதா? நாகம்மாள் அப்படி ஒரு துரோகச் செயலைச் செய்து விட்டு உயிருடன் இருந்து விடுவாளா, பார்க்கலாம் என எண்ணி மனம் கொதிக்க மாரிமுத்து, அக்னிப் பிரவாகத்தை வாரி வீசும் ஒரு எரிமலை போல் கோபமே உருவாக நின்று கொண்டிருந் தான்.

நாகம்மாள் எங்கு போயிருப்பாள் என்று யோசித்த வண்ணம் தெருவை எட்டிப் பார்த்த அவன் உள்ளப்பட படப்பு அதிகரிக்கத் துவங்கியது. சற்றுத் தொலைவில் தெரிந்த விளக்கொளியில் தள்ளாடிக் கொண்டு நாகம் மாள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

பதுங்கிப் பாயத் தயாராக நிற்கும் காட்டு விலங்கைப் போல் தூண் மறைவில் மறைந்து கொண்டான் மாரிமுத்து. நாகம்மாள் பரபரப்பாக இடையிலிருந்த சாவிக் கொத்தை எடுத்துக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். உடனடியாகக் கதவைத் தாளிடத் திரும்பிய அவள், தன் கரத்தை யாரோ முரட்டுத்தன மாகப் பற்றுவதை உணர்ந்து பயத்தில் கிறீச்சென அலறிவிட்டாள். ஆத்திரத்துடன் சுவரின் மீது போய் மோதிக் கொண்டு விழும்படி அவளைத் தள்ளிய மாரி முத்து, கதவைப் படீரென்று சாத்தித் தாளிட்டு விட்டு, அங்கவஸ்திரத்தைக் கோபத்துடன் கழற்றி கட்டில் மீது வீசிவிட்டு, நாகம்மாள் அருகே அனல் பொறி பறக்கும் விழிகளுடன் பல்லைக் கடித்துக் கொண்டு நெருங் கினான். 'துரோகி சண்டாளி எங்கே அந்தப் பையன?' என்று உறுமிய அவன் ஆக்ரோஷத்துடன் தன்னை அணுகுவதை உணர்ந்த நாகம்மாள், விருக்கென எழுந்து அவனது பிடிக்கு அப்பால் தள்ளி நகர்ந்து நின்றாள்.

பயத்தினால் அவளது கால்கள் தள்ளாடின. வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட மானைப் போல், களைப்பு நிறைந்த பெருமூச்சினால் அவளது நெஞ்சு விம்மி யெழுந்து கொண்டேயிருந்தது. என்ன பதில் கூறுவ தென்ற திகைப்பில் அவள் திகிலுடன் விழித்தாள். இந்த நிலை கண் இமைக்கும் நேரம் வரைதான் நீடித்திருந்தது.

"உன் துரோகத்திற்கு உன்னை நான் இன்று சும்மா விடப்போவதில்லை!" என்று உறுமிய மாரிமுத்துவின் கையில் மின்னிய பிச்சுவாவைக் கண்டதும், நாகம் மாளின் பயமும் திகிலும் மின்னலைப் போல் மறைந்தன. அவளது வாழ்விலே அதுவரை அடைந்திராத ஒரு பெரும் துணிவு திடீரென்று ஏற்பட்டு விடவே, அவள் மிடுக்காக புலிபோல் அவனைக் கம்பீரமாக நிமிர்ந்து பார்த்து, "துரோகி என்று யாரைப் பார்த்து பேசுகிறாய்? நாவை

அடக்கிப் பேசு! நாகம்மாள் உன் கையில் அகப்பட்டு இஷ்டப்படி ஆடும் பொம்மை இனி மேலே இல்லை! அந்தப் பயலை நான்தான் வெளியே கொண்டு விட்டு ஊருக்கு ஓடிப்போக உதவி செய்தேன்" என்றாள்.

"பாவி! சண்டாளி!" என்று கத்திய மாரிமுத்து கோபத்துடன் பிச்சுவாவை ஓங்கிக் கொண்டு நெருங்கியதைக் கண்ட நாகம்மாள், ஒரே பாய்ச்சலில் எதிர்ப்புறத்தில் போய் நின்று கொண்டு, "ஐயோ, கொல்றானே, பாவி! கொல்றானே!" என அலறினான்.

"கத்தி ஊரைக் கூட்டினாலும் உன்னை விடப்போவ தில்லை, துரோகி!" என்று கத்திய மாரிமுத்து அவளைப் பிடிக்கப் பாய்ந்தான். "துரோகின்னு இன்னும் ஒரு வாட்டி சொன்னா மண்டையைப் பிளந்து விடுகிறேன். திருட்டுப் பாவி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி என்னை ஏமாற்றி என் வாழ்வைப் பாழாக்கிட்டு, என்னை உதறிவிட்டுப் போகப் பாத்தியே! நான் துரோகியா, நீ துரோகியா? நீ செஞ்சதுக்கு நான் பழி வாங்கிட்டேன். அந்தப் பயல் ஊட்டுக்குப் போய், உன்னைப் பத்திப் போலீசிலே எழுதிக் கொடுத்துடுவான். கையிலே காப்பு போட்டுக்கிட்டு போய் ஜெயிலிலே இரு. தங்கச்சங்கிலி வாங்கிட்டு ஓடினியே பாக்கிறதுக்கு, அந்த ஆசைநாயகி உன்னை வந்து காப்பாத்தட்டும்!" என்று ஆத்திரத்துடன் படபடவென்று கத்திய நாகம்மாள், மூலையில் சாத்தியிருந்த இரும்பு கடப்பாரையைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

"என்ன சொன்னே!" என்று உறுமிக்கொண்டு முன்னேறிய மாரிமுத்துவின் பிச்சுவா நாகம்மாளின் இருதயத்திற்குள் பாய்வதற்குள், அவளது கரத்திலிருந்த கடப்பாரை முந்திக் கொண்டு விட்டது. தடாலென்று கீழே விழுந்த மாரிமுத்துவின் தலையிலிருந்து இரத்தம் பாய்ந்து

ஓடுவதைத் திகைப்புடன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

அப்போது வாயிற் கதவை யாரோ படபடவென்று தட்டும் சத்தம் கேட்டது. நாகம்மாள் மெல்லச் சென்று நிதானமாகவே கதவைத் திறந்தாள். அண்டை அயலில் இருந்தவர்கள் பலரும் வாயிலில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். போலீஸ் உடுப்பிலே காணப்பட்ட ஒரு வாலிபன் "என்னம்மா கலாட்டா? அக்கம் பக்கத்தவர்களுக்குப் பெரிய தொல்லை கொடுத்துக் கொண்டு இங்கே என்ன சண்டை?" என்று அதட்டினான்.

"எப்பவும் ராத்திரி வேளையில் இவங்க போட்டுக்கிற சண்டை சகிக்கவில்லை. ஐயா! ஏதோ கொலை விழுந்து விட்டாப் போலத்தான் தினமும் யுத்தம்?" என்று கூட்டத்தில் ஒருவன் பதிலளித்தான்.

"என் புருஷனை நான் கொன்றுவிட்டேன், சந்தேகமாயிருந்தா உள்ளே வந்து எல்லாரும் பாருங்கள்!" என கூச்சலிட்ட நாகம்மாள் தொடர்ந்தாற்போல் கடகடவென நகைத்தாள். உலகம் கிர் என்று சுற்றுவதுபோல் அவளுக்குத் தோன்றியது, தலையைக் கரத்தால் பற்றிக் கொண்டு, "இதோ பாருங்கள், எல்லோரும் பாருங்கள்" என்று கூறிவிட்டு அவர்கள் உள்ளே வர வழி விட்டு விட்டு நகர்ந்து நின்றாள்.

தரையில் கிடந்த மனிதனின் முகத்தை நிமிர்த்திப் பார்த்த போலீஸ்காரன் திடுக்கிட்டான். சற்று முன்னுடன் வேதாந்தமாகவும் பரிகாசமாகவும் பேசிக் கொண்டு நடந்துவந்த அந்த மனிதன் தரையில் பிணமாகக் கிடப்பதை அவனால் நம்பவே முடியவில்லை. அவனுக்காக மரணம் அவ்வளவு அருகில் காத்துக் கொண்டிருக்கையில் அந்த மனிதன் எவ்வளவு ரஸமாகவும் ஹாஸ்யமாகவும் பேசிக் கொண்டிருந்தான்

எனத் தனக்குள் எண்ணி ஆச்சரியப்பட்ட அந்த இளம்போலீஸ் ஜவானின் உடல் பயத்தில் சிலிர்த்தது. உத்தியோகத்தில் அவன் அடைந்த பயங்கரமான இந்த முதல் அனுபவம், அவனுக்குப் பலவித உணர்ச்சிகளை உண்டாக்கவே, அவன் செயலற்றுப் போய் நின்றான்.

"எத்தனை தைரியம்! ஒரு பெண் பிள்ளை செய்திருக் கிற காரியத்தைப் பாரேன்!" என்று கூட்டத்தில் யாரோ கூறுவதைக் கேட்ட நாகம்மாள், கோபத்துடன் அந்தப் பக்கம் திரும்பி, "உங்கள் ஒருத்தருக்கும் இந்தப் பாவிப் பயலை அடக்க தைர்யமில்லாட்டி, என்னை ஏன் குத்தம் சொல்றீங்க? அதனால் தான் நான் கடப்பாரை யால் அடிச்சுக் கொன்னுட்டேன். போலீஸ்காரய்யா, ஏன் சும்மா முழிச்சுக்கிட்டு நிக்கறே? நான் ஏன் புருஷனைக் கொன்னுட்டேன். என்னைப் பிடிச்சுக் கொண்டு ஜெயிலிலே வைக்காம பொம்மையாட்டம் நிக்கிறியே?" என்று கேட்டாள்.

"புத்தி கலங்கிவிட்டது நாகம்மாவுக்கு" கூட்டத்தி லிருந்த ஒருத்தன் ரகஸ்யமாக இன்னொருத்தனின் காதில் கூறினான்.

ஜன்னல் அருகே சென்று கம்பியைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்ப்பவள் போல் நின்ற நாகம் மாள், "குத்தி விடுவேன்னு மிரட்டினான். போட்டேன் ஒரு போடு, செத்துட்டான், பாவி. தங்கச் சங்கிலியை வாங்கி அவளுக்குக் கொடுக்கும்போது மனசு என்ன பாடுபட்டது? என்னை மோசம் பண்ணி, துரோகம் பண்ணி, என்ன பாடுபடுத்தினான்? ஐயோ, எவ்வளவு கஷ்டப்பட்டேன்? வீடு வாசலை விட்டு ஓடி வந்து இந்தக் கதியானேன். ஐயோ அம்மா!" என மெல்லிய குரலில் முணுமுணுத்துக்கொண்டு முடிவில் ஓவென்று விம்மியழத் துவங்கினாள்.

தரையில் கிடந்த மாரிமுத்துவின் உடலைச் சுற்றி நின்ற கும்பல், அவர்களிடையே எழுந்த பல்வேறு அபிப்பிராயங்கள், இடுப்பில் கை வைத்துக் கொண்டு விழித்தபடி நின்ற அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன், ஒருவரும் அவளது கண்களில் தெரியவில்லை. பல வருஷங்களுக்கு முன், வயல் ஓரத்தில் மரநிழலில், நீண்ட தாடியுடன் விளங்கிய ஒரு பெரியவரிடம் கைரேகை பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த ஒரு சிறுமிதான் அவளுக்குத் தெரிந்தாள்.

"பாவிக் கிழவன் ஏமாத்தி விட்டான்" என்று முணு முணுத்த அவள் உடலைப் பெரும் விம்மல்கள் குலுக் கின.

தன்னுடைய சுதந்திரம் இரண்டு பேருடைய வாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதித்து விட்டது என்பதை அறிய முடியாத தியாகராஜன், மழையைப் பொருட்படுத்தாது விழுந்தடித்து ஓடிக் கொண்டே யிருந்தான். ஆடை தொப்பலாக நனைந்து விட்டது. கால்கள் மேலே ஓட முடியாமல் சோர்வுடன் தடுமாறின. கிலியில் குழம்பிப் போயிருந்த அவனுக்கு இருளில் திசையும் புரியவில்லை

சிறிது நேரத்தில் மழை நின்று வானம் மெல்ல தூறிக் கொண்டிருந்தது. ஆனால் அவன் மட்டும் விடாது ஓடிக் கொண்டே இருந்தான்.

'யாரது' என்று அதட்டிய ஒரு மனிதனின் குரலைக் கேட்டதும் பயத்தில் அவன் அங்கமெல்லாம் சோர்ந்து விட்டது. மாரிமுத்துவே தான்பின் தொடர்ந்து பிடிக்க வந்து விட்டான் என்ற ஒரு பயத்தில் உடலிலிருந்த சக்தியெல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு இன்னும் வேகமாக ஓடினான். தெருவிலே புகுந்து யாரோ ஓடுவ தைக் கண்ட தெரு நாய்கள், தூக்கத்தினின்று விழித்துக்

கொண்டு, 'லொள், லொள்' எனக் குரைக்க ஆரம்பித்தன. தியாகராஜனது கிலி இன்னமும் பன்மடங்கு அதிகரித்தது. தெரு நாய்கள் யாவும் தன்னைத் துரத்திக் கொண்டு விழுங்க வரும் கொடிய விலங்குகள் போல் அவனுக்கு அது சமயம் பயங்கரத்தை உண்டு பண்ணவே, தட்டுத் தடுமாறிக் கொண்டு அருகிலிருந்து ஒரு சிறு தோட்டத் திற்குள் புகுந்தான். பளீரென்று வீசிய மின்னல் ஒளியில் தோட்டத்திற்குள் ஒருசிறு கூரைவீடு திண்ணை மீது சிறிது நேரம் படுத்துத் தூங்க வேண்டும். என்ற ஆவலினால் வீட்டை நோக்கித் தள்ளாடிக் கொண்டு சென்றான்.

கொட்டிலில் இருந்த பசு கத்துவதைக் கேட்ட காந்தி மதி தூக்கம் கலைந்து எழுந்தாள். தும்புக்கயிறு இறுகி விட்டதால் கத்துகிறதோ என்ற சந்தேகம் வந்துவிடவே, விளக்கை எடுத்துக்கொண்டு வாயிற் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். திண்ணையில் ஈர உடை களுடன், தூணோடு ஒட்டிக் கொண்டு நின்ற ஒரு சிறு உருவத்தைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'யாரது?' என்று அதட்டிவிட்டு விளக்கைத் தூக்கிப் பிடித்தாள்.

பழக்கமான அந்தக் குரலைக் கேட்ட தியாகராஜன் பிரமிப்புடன் நிமிர்ந்து பார்த்தான். பூமியும் வானமும் ஒரே வினாடியில் ஒன்றாகி விட்டதைப் போன்ற ஒரு மகிழ்ச்சியினால் 'அத்தை!' என கீச்சுக் குரலில் கத்திய அந்தச் சிறுவன் பாய்ந்து ஓடி, காந்திமதியைக் கட்டிக் கொண்டான். சந்தோஷமும் துயரமும் ஒருங்கே எய்திய அவளது உடல், காற்றிலே அகப்பட்ட இறக்கை போல் படபடவென நடுங்கியது.

கங்காதர முதலியாரின் மருமகள் லீலாவதிக்கு ஒரு தனி குணம் இருந்தது. அவளது அனுதாபத்திற்கு யாரே னும் பாத்திரமாகி விட்டால் போதும். அவர்களுக்குத் தன்னால் ஆன உதவியைச் செய்து முடிக்கும்வரை அவளுக்குத் தூக்கமே வராது என்று கூடச் சொல்லலாம். தமயந்தி மீதும் காந்திமதி மீதும் பார்த்த அளவிலே ஏற்பட்ட இரக்கத்தினால் லீலாவதி அன்று சாயங்காலமே அருணோதய ஆச்ரமத்திற்குப் புறப்பட்டுச் சென்றாள்.

அசலாம்பிகை அம்மாளுக்கு. தன் ஆச்ரம விவகாரங்களில் லீலாவதி தலையிட்டுக் குழப்பும் விதம் சற்றும் பிடிக்கவில்லை. ஆச்ரமத்திற்கு நன்கொடை என சிறிது பொருளுதவி செய்து விட்டு, அதனால் பல வித சலுகைகளை எதிர்பார்க்கும் பெரிய மனிதர்களின் வட்டாரத்தையே அவள் மிகவும் வெறுத்தாள். 'இட மில்லை' என தான் மறுத்திருந்த ஒரு குழந்தையைத் திரும்ப ஆச்ரமத்தில் சேர்த்துக்கொள்ள அவளுக்குச் சிறிதும் மனம் இல்லை. ஆனால், கங்காதர முதலியாரின் செல்வாக்கிற்குப் பயந்து, நிர்தாட்சண்யமாக லீலாவதி யின் வேண்டுகோளைத் தட்ட முடியாது வேண்டா வெறுப்பாக, தமயந்தியைத் தன் ஆச்ரமத்தில் ஏற்றுக் கொண்டாள்.

குழந்தைக்கு ஒரு வழி பண்ணியதுடன் லீலாவதி திருப்தியடைந்து விடவில்லை. காந்திமதியின் துயரமான வாழ்க்கையைப் பற்றிக் கேட்டு மனமுருகிப் போயிருந்த லீலாவதி, அவளுக்கும் உதவி செய்ய முன் வந்தாள்,

தேவநகர் அருகில் இருந்த கிராமத்தில் வசித்து வந்த தங்கள் தூரபந்து ஒருவருயை வீட்டில். சமையல் வேலை செய்ய மிகவும் நாணயமான ஒரு வேலைக்காரி தேவை என்பதைக் கேள்விப்பட்டு, தக்க சிபாரிசுகளுடன் காந்தி மதியை அந்த இடத்தில் வேலைக்கு அமர்த்தி வைத்தாள்.

காந்திமதியின் வாழ்க்கையில் இடையே ஏற்பட்ட எவ்வளவோ போராட்டாங்களுக்குக் கடைசியாக ஒரு முடிவு வந்தது போல் இருந்தது அவள் புதிதாக ஆரம் பித்த இந்த வாழ்க்கை. அவள் வேலை செய்து வந்த வீட்டுக்காரர்கள், மிகவும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மாதம் பத்து ரூபாய் சம்பளமும், இரு வேளை போஜனமும் அவர்களுக்குக் கிடைத்தன. வேலை யும் அதிகம் இருக்கவில்லை. காலையில் சிறிது நேரமும் மாலையில் சிறிது நேரமும் மட்டுமே அவர்கள் வீட்டில் தங்கும்படி இருந்தது. மற்றைய பொழுதில், அவள் தெருக் கோடியில் ஒரு சிறு தோட்டத்திற்குள் அமைந்திருந்த தான் குடியிருந்த வீட்டிற்கும் போய் ஓய்வாகப் பொழு தைக் கழிக்க வேண்டிய அவகாசம் இருந்தது. காந்திமதி தனது ஓய்வான பொழுதை வீணே கழிக்கவில்லை. தமயந்தியை ஆச்ரமத்தில் சேர்த்து விட்டதும் தனது பொறுப்பும் குறைந்து விட்டதாக அவள் எண்ணவில்லை.

கல்வி அறிவு கொடுக்க முயற்சித்ததுடன் தன் கடமை பூர்த்தியடைந்து விடவில்லை என்பதை உணர்ந்திருந்த காந்திமதி, தமயந்தியின் காலில் ஏற்பட்டிருந்த ஊனத்தை எப்பாடுபட்டாவது குணப்படுத்தி விட வேண்டியது எனத் தீர்மானித்திருந்தாள். "வைத்தியத்திற்கு ஏதேனும் பொருள் தேவையாக இருந்தால் என்ற ஒரு எண்ணம் தோன்றவே, அவள் தனது ஓய்வு நேரத்தை வீணே கழிக்காது மிகவும் பாடுபட்டு உழைக்கலானாள்.

வீட்டு வாடகை. மற்ற இதர செலவுகள் போக மாதச் சம்பளத்தில் பத்திரமாகச் சேமித்து வைத்திருந்த பணத்

தைப் போட்டு, தான் வேலைக்கு வந்த ஆறாவது மாதத்தின் முடிவில் ஒரு பசுமாடு விலைக்கு வாங்கினாள். அண்டை அயலாரிடம் தன் குணத்தினாலும் செயல் களாலும் நல்லபெயர் பெற்றிருந்த காந்திமதி ஆரம்பித்த பால் வியாபாரம் மிகவும் வெற்றிகரமாகப் பெருகி வரத் துவங்கியது. சில மாதங்களில் அவரது வியாபாரம் மும்முரமாகிவிட, தான் வேலை செய்து வந்த இடத்தி லிருந்து விலகிக்கொணடு சுயேச்சையாக வாழத் தொடங் கினாள்.

சூரியகாந்தத்திலிருந்து புறப்பட்டு வந்ததிலிருந்து ஒரு வருஷ காலத்திற்குள் காந்திமதி நான்கு பசுக்களுக்குச் சொந்தக்காரியானாள். எதிர்பார்த்த அளவு அவள் கையில் பொருள் பெருகி வழிந்தோடிக் கொண்டிருக்க வில்லையென்றாலும், அவள் தரித்திரத்தில் வாடாது அமைதியாகவும் திருப்தியாகவும் மிகவும் சுதந்திரமாகவும் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் தமயந்தி மீது அசலாம்பிகை அம் மாளுக்கு மிகவும் அதிருப்தியும் கோபமும் ஏற்பட் டிருந்தன. தன்னை மிகவும் நிர்ப்பந்தித்து, வலுக்கட்டா யம் செய்து தமயந்தியை ஏற்கும்படி செய்தாள் கங்காதர முதலியார் மருமகள் லீலாவதி என்கிற காரணத்தினால், அந்தச் சிறுமியைச் சிறிது வெறுக்கவும் செய்தாள். சில சமயங்களில் அந்த வெறுப்பு மிகவும் கடுமையாக மாறி, தமயந்தி சிறு பிழை செய்தாலும் வெகுண்டு கடுமையாகத் தண்டிக்கவும் செய்தாள். ஆனால், நாளாவட்டத்தில் அசலாம்பிகை அம்மாளின் மனத்திலே அந்த அனாதைச் சிறுமியிடம் ஏற்பட்டிருந்த கோபம் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு போயிற்று. அதற்குப் பதில் அவளை அறியாது அனுதாபம் அவள் உள்ளத்திலே குடியேறி விட்டது.

தமயந்தியிடம் காணப்பட்ட எல்லையில்லாத பொறுமையும், கபடமற்ற ஒரு தன்மையும், அலுப்பினால் கல்லாகிப் போயிருந்த அசலாம்பிகையின் உள்ளத்தில் கருணையை ஏற்படச் செய்தன.

ஆரம்பத்தில் தமயந்தி அங்கே இலவச போஜனமும் கல்வியும் ஏற்கும் அனாதைக் குழந்தையின் கோஷ்டியிலே சேர்க்கப்பட்டிருந்தாள். ஆனால், காந்திமதி தன் வியாபாரத்தில் கொஞ்சம் பணம் சேர்க்கத் துவங்கியதும் தமயந்தியை அந்த விதமான நிலையில் வைத்திருக்க விரும்பவில்லை. ஆச்ரமத்தில் தங்கிக் கல்வி கற்பதற்கு ஏற்படும் செலவில் ஒரு பகுதியை அவள்தானே முன் வந்து கொடுக்க ஒப்புக் கொண்டாள்.

இதனாலும் இன்னும் பல காரணங்களிலும் தமயந்தி மீது அசலாம்பிகைக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தி மறைந்து, அவள் மீது ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட ஏதுவாயிற்று.

முன் போல அந்தச் சிறுமியை அசட்டை செய்யாது அவளது படிப்பிலும், அவளது உடல் நலத்திலும் தானே சிரத்தை எடுத்துக் கொண்டாள் அசலாம்பிகை. அவளது போதனைப்படியே காந்திமதி, தமயந்தியைத் தூக்கிக் கொண்டு நகரிலிருந்த பிரபல ஆஸ்பத்திரிகளுக்கு நடையாக நடந்தாள். ஆஸ்பத்திரி சிகிச்சையினாலோ, மந்திரத்தினாலோ, நாட்டு மருந்துகளாலோ தமயந்தியின் கால் ஊனம் குணமாகி, அவள் எல்லாச் சிறுமிகளையும் போல் துள்ளி ஓடி விளையாட வேணும் என்ற ஒரே ஆவலினால் காந்திமதி, தான் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த சிறிது பொருளையும் அவளது சிகிச்சைக்கு மனமுவந்து செலவு செய்தாள்.

வாரம் ஒரு முறை, தான் வசித்த கிராமத்திலிருந்து இருபது மைல்களுக்கு அப்பாலிருந்த தேவநகர் பட்டணத்திற்குச் சென்று, அருணோதய ஆச்ரமத்திலிருந்து

தமயந்தியை விடுமுறை தினங்களைத் தன்னுடன் கழிக்க வீட்டிற்கு அழைத்து வருவாள். தன் கையினால் மருந்து எண்ணெய்களை அவள் காலில் பூசி அழுத்தித் தேய்த்து அதற்கு நல்ல வலுவு ஊட்ட முயற்சி செய்தாள், தமயந்தியைத் தன் செய்கையாலும் அன்பான மொழிகளாலும் கண்ணின் கருமணி போல் கட்டிக்காத்து வந்தாள்.

அன்று இரவு திடீரென்று தன்னை ஓடிவந்து அணைத்துக் கொண்டது தியாகராஜன் என்பதை உணர காந்திமதிக்குச் சிறிது நேரம் சென்றது.

'அத்தை! என்னை விட்டு விட்டுப் போனீங்களே...? நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?' என்று விக்கி விக்கி அழுதான் தியாகராஜன். அவளை இன்னமும் இறுக அணைத்துக் கொண்டு.

'ராஜா! கண்ணு! எனக்கு ஒண்ணும் புரியலையே. நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று பதட்டத்துடன் வினவிய காந்திமதி கதவைத் தாளிட்டுக் கொண்டு அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

'தமயந்தியை மட்டும் கூட்டிக்கிட்டு என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களே அத்தை! நான் மாமன்கிட்டேயும், சித்திகிட்டேயும் எவ்வளவு கஷ்டப்பட்டேன்! அத்தை, இனிமேலே என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டீங்களே?" என்று ஒரே வேகத்தில் பிதற்றுகிறவன் போல் தியாகராஜன் காந்திமதியின் மடியில் தலையை வைத்துக் கொண்டு விம்மியழுதான்.

அவனது முதுகை அன்புடன் தடவிக் கொடுத்து சமாதானப்படுத்திய காந்திமதி தன் கண்களில் லேசாகச் சுரந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். எதிர்பாராத வசமாக அவனைச் சந்தித்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் உள்ளத்திலே சிறிது அடங்கி அமைதி ஏற்பட்டவுடன், 'ஏன் ராஜா! நீ எப்படியடா

இங்கே என்னைத் தேடிக்கிட்டு வந்தே? வீட்டை விட்டு சொல்லாமல் ஓடி வந்து விட்டாயா? என்னடா சங்கதி, விவரமாகச் சொல்லடா, கண்ணு!' என மிகவும் அன்பாக வினவினாள்,

தியாகராஜனின் புண்பட்ட உள்ளத்திலே சிந்தனைகள் குமுறிக் கொண்டு வந்தன. ஆனால், அவனால் எதையும் கோர்வையாகக் கூற முடியவில்லை. 'அத்தை, அப்பா ஆத்து வெள்ளத்திலே மூழ்கிச் செத்துவிட்டார். அதுக்கப் பாலே...' என்று திணறிவிட்டு, முடிக்காது நிறுத்தினான்.

'ஹா! அண்ணா செத்துவிட்டாரா' என்று அலறிய காந்திமதியின் கண்களில் கண்ணீர் பொல பொல வென வழிந்தது. ரத்த பாசமானது அவளது உள்ளத்தை யும் உடலையும் ஓரேயடியாக குலுக்கவே, காந்திமதி அது நாள் வரை வெறுத்து வந்த தன் சகோதரனுக்காக மனம் இளகி வாய்விட்டு விம்மியழுதாள். 'ஐயோ ராஜா! தமயந்தி மாதிரியே நீயும் தாயும் தகப்பனும் இல்லாத அனாதையாகப் போயிட்டியா?' என்று அரட்டிய அவள் அந்தச் சிறுவனைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு வெகுநேரம் கண்ணீர் வடித்த வண்ணம் இருந்தாள்.

ஒருவாறு அழுது சமாதானமடைந்த பின்பு விவரங் களை ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டறிந்த காந்திமதிக்கு ஆச்சர்யம் தாளவே முடியவில்லை. தியாகராஜன் மாமனிடம் பட்ட கஷ்டங்கள், பிறகு வீட்டை விட்டு வெளியே ஓடி போக்கிரி மாரிமுத்துவிடம் சிக்கியதனால் ஏற்பட்ட தொல்லைகள், எல்லாவற்றையும் பிரமிப்புடன் கேட்ட அவள் முடிவில் பெருமூச்செறிந்தாள். 'ராஜா! அந்த நாகம்மாள் நல்லவேளை, பொல்லாதளோ எப்படி யிருந்தாலும் ஒண்ணு மட்டும் நிசம், அப்பா உன்னை அந்த மீளா நரகத்திலிருந்து விடுதலை செய்து கொடுத் தாளே, அவ மகா உத்தமி, அவ எங்கேயிருந்தாலும்

நல்லா சௌக்கியமா இருக்கணும்னு உன் காலம் முழுவதும் அவளுக்காகக் கடவுளைக் கும்பிடக் கடமைப்பட்டிருக்கிறாய்' என்றாள் ஆயாசத்துடன்.

அத்தை அருமையாகப் பரிமாறிய இட்லியை ஆவலுடன் சாப்பிட்டுக் கொண்டு தியாகராஜன் அவள் முகத்தைப் பரிவுடன் நிமிர்ந்து பார்த்து, "அத்தை, நீங்க சொன்னபடியெல்லாம் கேட்டுக்கிட்டு நான் நல்ல பையனாக இருக்கிறேன். என்னைத் திரும்ப மாமன் கிட்ட மட்டும் போகச் சொல்லாதீங்க. எனக்கு ரொம்ப பயமாக இருக்கு' என்று கூறிவிட்டுத் துக்கம் தாளாது தேம்பினான்.

'ராஜா! உன்னை அப்படி அனாதையாக நான் விட்டுட மாட்டேண்டா, கண்ணு! இந்தக் கட்டையிலே உயிரு இருக்கிறவரை நீ மாமனுக்கோ, வேறே எவனுக்கோ இந்த உலகத்திலே பயப்படவே வேணாம். மேலும் எனக்கு காப்பாற்ற வேண்டியது கடமையும் கூட. புருஷனாலே கைவிடப்பட்ட என்னை எங்க அண்ணன் எளிமையிலும் இல்லாத கொடுமையிலும், வைச்சுக் காப்பாத்தலையா? அவர் குழந்தையை நான் நடுத் தெருவில் விட்டு விட்டால் எனக்கு அதைவிட மகா பாவம் வேறே ஏது?' என்று கூறிவிட்டு, உணர்ச்சிப் பெருக்கில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

தமயந்தியின் கல்விக்கு எவ்வளவு சிரத்தை காட்டி னாளோ, அது போன்று தியாகராஜனது கல்விக்கும், அவனது வாழ்க்கை நலத்திற்கும் சிரத்தை காட்ட வேண்டியது தனது கடமை என்று எண்ணிய காந்திமதி, மறுநாளே அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு தேவநகருக்குப் புறப்பட்டாள்.

தமயந்தியையும் தியாகராஜனையும் வளர்த்து நல்ல பிரஜையாக்குவதில் காந்திமதி தன்னையும் தன் பிற்கால

வாழ்க்கையையும் கூட மறந்தே போனாள். தியாகராஜன் தமயந்தி இவர்கள் இருவரும் தன் கண்ணின் இருவிழிகள் என அவர்கள் இருவரையும் மிக்க அன்புடன் நேசித்தாள். அவர்கள் இருவரும் வளர்ந்து, படித்து, பண்புள்ள நல்ல மாந்தர்களாக ஆகி நல்ல வாழ்வு அடையும் நிமித்தம் விரல்கள் நோக, நெற்றி வியர்வை நிலத்தில் விழ மிகவும் அரும்பாடு பட்டு உழைத்தாள். இருபது வருஷங்கள் இவ்வாறு சென்றன.

அன்றைய பிற்பகல் வேலை அத்துடன் முடிந்து விட்டது என்பதை அறிவித்த வண்ணம் ராபர்ட்ஸன் அண்ட் கம்பெனி வாயிலிருந்து பெரிய மணி மூன்று முறை அடித்து ஓய்ந்தது, அதைக் கேட்டதும் பல்வேறு தொகுதியில் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் அனைவரின் முகத்திலும் ஒரு சிறு மலர்ச்சி ஏற்பட்டது. மேஜை மீது குவிந்து கிடந்த காகிதங்களை மிகவும் சிரத்தையுடன் எடுத்து, பத்திரமாக உள் அறையில் வைத்து பூட்டிவிட்டு விஜயா எழுந்திருந்தாள். நெற்றி மீது அரும்பி நின்ற வியர்வையைக் கைக்குட்டையால் மெல்லத் துடைத்துக் கொண்டு, அழகுப் பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவள் நடையில் வழக்கமாகக் காணப்பட்ட சுறுசுறுப்பு இருக்கவில்லை. முகம் வாடி மிகவும் சோர்ந்திருந்தது. அதைவிட அவளது உள்ளம் எந்த நிமிஷமும் இரண்டாக வெடித்து விடும்போல் துயரத்தினால் மிக்க பாரமாக இருந்தது. எதிரே குறுக்கும் நெடுக்குமாக

வந்து கொண்டிருந்த யாரையும் அவள் பார்க்க விரும்பவில்லை. பரிச்சயமானவர்கள் யாரேனும் சந்திக்க நேர்ந்து விட்டால், எங்கே துயரம் தாளாது அழுகை வந்து விடுமோ என்ற பயத்தில் தலையைக் குனிந்த வண்ணம் வந்து கொண்டிருந்தாள்.

அவசரமாகப் படிகளைக் கடந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த அவளை, 'மிஸ் விஜயா!' என்ற கனிவு நிறைந்த ஒரு குரல் சற்றுத் திடுக்கிட வைத்தது. வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த மனோகரன், வேகமாகப் படிகளைக் கடந்து அவள் அருகில் வந்து நின்றான்.

'கேள்விப்பட்டேன்! நான் உங்களுக்காக மிக்க வருந்துகிறேன்' என்றான் பச்சாதாபத்துடன்.

விஜயாவின் மெல்லிய உதடுகள் துக்கம் தாளாது துடித்தன. கண்களில் பொங்கிய நீரை அவள் சிரமத்துடன் சமாளித்துக் கொண்டு, 'எனக்கு அவ்வளவுதான் அதிர்ஷ்டம், எனக்குப் பின்வந்த 'டைப்பிஸ்ட்டு' களையெல்லாம் மானேஜர் வேலையில் வைத்திருக்கிறார். என்னை மட்டும் இந்த மாதத்துடன் வேலையினின்று எடுத்து விடுகிறார்' என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

மனோகரன் தன் சுருண்ட கேசத்தை இடது கையினால் ஒரு முறை தடவிக்கொண்டு, சிந்தனையினால் புருவங்களை நெரித்தான்.

ராபர்ட்ஸன் கம்பெனி, கடந்த சில மாதங்களாக மிகவும் நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்தது. அதைச் சமாளிக்கும் நிமித்தம் சிக்கன முறைகள் பலவற்றை அதன் நிர்வாகிகள் கையாளத் தொடங்கினார்கள். அதன் பலனாக புதிதாக வேலையில் சேர்க்கப்பட்ட குமாஸ்தாக்கள், 'டைப்பிஸ்ட்டு'கள் முதலியவர்கள் ஒரு மாதச்

சம்பளத்துடன் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். அப்படி நீக்கப்பட்டவர்களில் விஜயாவும் ஒருத்தியாக இருந்தாள்.

வேலையிலிருந்து நீக்கப்பட்டதை அறிவித்து மானேஜர் கையெழுத்திட்ட காகிதம் அன்றைய பகல் கைக்குக் கிடைத்ததிலிருந்து விஜயாவிற்கு உலகமே திடீரென்று இருண்டு, வாழ்க்கையே அஸ்தமித்துப் போய்விட்டதைப் போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. வறுமையுடன் மிகவும் போராடிக் கொண்டிருந்த அவர்களது குடும்பத்தை அந்த சிறு வருவாய் மூலம் ஒருவாறு சமாளித்துக் கொண்டிருந்தாள், இனி அவள் என்ன செய்வாள்? வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்து கிடந்த இந்தச் சமயத்தில் மறுபடி எங்கே வேலையைத் தேடிக்கொண்டு அவள் செல்வாள்? தாயார் அமிர்தம் கடந்த ஒரு மாதமாக மலேரியா ஜுரத்திலே மிகவும் நலிந்து படுத்த படுக்கையாகக் கிடந்தாள். மோகனாவின் காலேஜ் படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் இருந்தது.

இவ்வளவு தரித்திர நிலையில் குடும்பம் சிரமப்பட்டுக் கொண்டிருந்தும் மாமா நமச்சிவாயம், சிறிதும் சிரத்தை யின்றி வீட்டைப் பற்றிக் கவலையின்றி, பழைய காலத் தைப் போன்று வெளியில் திரிந்து கொண்டிருந்தார். வயது அறுபதுக்கு மேல் ஆகியும், அவரது குணத்திலே ஒரு சிறு அபிவிருத்தியும் ஏற்படவேயில்லை. நினைத்த பொழுது வீட்டிற்கு வருகிறது, அவர்கள் அனைவருக்கும் தான் ஒருவனே ஆண் துணை என்ற நினைப்பில், மிக்க கர்வத்துடன் தங்கையையும், அவளது இரு பெண் களையும், அதட்டி ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, திடீ ரென கோபித்துக் கொண்டு அவர்களைத் திரஸ்கரித்து விட்டு, வெளி ஊர்களுக்குச் சென்று விடுவது என்று பழைய நாட்களில் கையாண்ட அதே முறையை அன்று வரை கையாண்டு வந்தார். நமச்சிவாயத்தினால்

அமிர்தத்தின் குடும்பத்தில் வீண் மனக்கஷ்டமும் பொருள் நஷ்டமும் ஏற்பட்டனவே ஒழிய, ஒரு சிறு பிரயோசனமும் இல்லாதிருந்தது.

தன் குடும்பத்தின் தரித்திர நிலையை எண்ணி எண்ணி விஜயாவின் நெஞ்சு துக்கம் தாளாது குமுறியது. இந்த மாத முடிவிலிருந்து என் வேலை போய்விட்டது; அம்மா என்று விஷயத்தை அமிர்தத்திடம் கூறினால், அவள் முகம் ஏமாற்றத்தினால் எவ்வாறு மாறுதலடையும் என்பதை அவளால் சிந்தித்துக்கூடப் பார்க்க முடிய வில்லை, மோகனாவின் படிப்பிற்கும். குடும்பத்தின் அன்றாட நிர்வாகத்திற்கும், அமிர்தம் தன் மூத்த பெண் விஜயாவின் சம்பாத்யத்தை ஒரு மலைபோல் நம்பிக் கொண்டிருந்தாள். அவளது நம்பிக்கை அன்று எவ்வாறு உடைந்து சிதறி விடப் போகிறது என்பதைக் கற்பனை செய்து உள்ளம் குமுறிய விஜயாவிற்குப் பேச முடியாது துயரம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

குடும்பத்தின் தரித்திரம், மோகனாவின் படிப்பு இவைகளைச் சமாளிக்க, அந்த வேலை அவளுக்குப் பெரும் உதவியாக இருந்தது வாஸ்தவம் என்றாலும், அதையெல்லாம்விட அந்த வேலை விஜயாவின் மனத்தை மிகவும் ரசிக்கச் செய்ததற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது. மருந்துகள் விற்கும் பகுதியில் முக்கிய, ரஸாயன நிபுணனாக வேலை பார்த்து வந்த மனேஜர் பால்அவள் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டிருந்தாள். வேலைக்கு வந்த புதிதில், மனேஜரனை முதல் முதலாக அவள் சந்தித்துப் பேசியது, அவளது வாழ்விலே உள்ளத்தினின்று என்றும் மறக்க முடியாத ஒரு சம்பவமாக இருந்தது என்றே கூறவேண்டும்.

'உங்களை ரஸாயண நிபுணர் அழைக்கிறார்' என்று ஆபீஸ் பையன் வந்து கூப்பிட்டபொழுது, விஜயா திடுக்

கிட்டுப் போய்விட்டாள். வேலைக்கு வந்த புதிதில் தனது வேலையில் யாரும் குறை கண்டு குற்றம் கூறுவதை அவள் விரும்பவில்லை.

'உங்கள் பெயர் மிஸ் விஜயா அல்லவா? நீங்கள் வேலைக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள் என ஊகிக் கிறேன். பாஷாணங்கள் விற்பனை செய்தால் அதற்குத் தயாரிக்க வேண்டிய 'பில்'களை, சாதாரண மற்றைய மருந்து 'பில்' களுடன் ஒன்றாகச் சேர்த்து விட்டீர்கள். அது தவறு. இதனால் பிறகு பல கஷ்டங்கள் ஏற்படும். இனி அவ்வாறு செய்யக்கூடாது, என்று பேசிக் கொண் டிருந்த அந்த மனிதனை அவள் பயத்தினால் பார்க்கவும் அஞ்சித் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தாள்.

மௌனமாக அவள் வீற்றிருப்பதைக் கண்ணுற்ற அவன், 'மிஸ் விஜயா இதற்காக நீங்கள் பெரிதும் அதைரி யமடைய வேண்டாம். இவ்விதமான தவறுகள் மீண்டும் ஏற்படக்கூடாது என்பதை எச்சரிக்கவே அழைத்தேன்' என்றான். அவனது குரலில் தொனித்த தனியானதொரு கனிவு அவளை மெல்ல நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

அவ்வளவுதான்! நெற்றிமீது கொஞ்சலாகத் தவழ்ந்து கொண்டிருந்த சுருண்ட கேசம், களைபொருந்திய கம்பீரமான அந்த முகம், தூரத்திலே எங்கேயோ ஒரு சிந்தனையிலே வியாபித்து நிற்பவை போன்ற அந்த இரு கண்கள் இவைகள் அனைத்தும் அவளை ஒரே கணத்தில் வசீகரித்துக் கொண்டு விட்டன. இனம் அறியாத ஒரு இன்ப உணர்ச்சியில் அவள் நெஞ்சு படபடவெனத் துடித்தது. முகம் சிவந்து, நாத் தடுமாற, 'வந்தனம்' என பதிலளித்து விட்டு, அவள் விரைவாகத் தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

மறுபடி மனோகரன் இருந்த திசைப்பக்கம் கூட அவள் திரும்பிப்பாராவிடினும், தன்னை இரு கண்கள்

மிக்க பரிவுடன் பார்த்தவண்ணம் இருப்பது போன்ற ஒரு உணர்ச்சி அவளுக்கு அன்று வெகுநேரம் வரை இருந்து கொண்டேயிருந்தது.

அங்கு வேலை செய்யத் தொடங்கிய சில தினங்களில் அவள் மனோகரனைப் பற்றிய சில விவரங்களையும் மெல்ல அறிந்து கொண்டுவிட்டாள். மருந்து விற்பனைப் பகுதியில் ரஸாயன நிபுணனாக வேலை பார்த்து வந்த அவன், மிகவும் கௌரவமான ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். பெற்றோருக்கு மிகவும் அருமையான ஏக புத்திரன். வயது முப்பதிற்கு மேலாகியும் மணம் செய்து கொள்ளாது தனி மனிதனாக வாழ்ந்து கொண்டிருந்தான். வாழ்க்கையில் எவ்விதப் பொறுப்பும் இல்லாத உல்லாச பிரம்மச்சாரி என்ற ஹோதாவில், அவன் கம்பெனியில் 'டைப்பிஸ்டு' களாகவும். குமாஸ்தாக்களாகவும் வேலை பார்த்து வந்த பெண்களுடன் உரிமை பாராட்டிச் சிரித்துப் பேசிப் பழகாது, மிகவும் கௌரவமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டான்.

அவனது கம்பீரமான தோற்றம், மரியாதையான பழக்கவழக்கங்கள், கனிவான பேச்சு இவையாவும், நாளாவட்டத்தில் விஜயாவின் உள்ளத்தில் பெரும் காதலை எழுப்பி விட்டிருந்தன. மரியாதைக்காக இரண் டொரு சமயம் தன்னிடம் வார்த்தையாடினான் என் பதைத் தவிர, அவளுக்கு அவனது மன உணர்ச்சிகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவளைப் பொறுத்தவரை மனோகரன் மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த கட்டுக்கடங் காத இந்தப் பாசம் ஒருதலைக் காதலாகத்தான் இருந்தது.

வாழ்க்கையிலே விஜயா எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்திருந்தாள். சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்ட அவளது குடும்பம் தரித்திரத்தாலும் இல்லாக் கொடுமையாலும் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருந் தது. தங்கை மோகனாவைப் போல் கலாசாலைப் படிப்பு

படிக்க வேணும் என்ற ஆசை விஜயாவுக்கும் தீவிரமாக இருந்தது என்றாலும், குடும்பத்தின் ஏழ்மை நிலை காரணமாக அவள் தன் ஆசையைத் தியாகம் செய்து விட்டு, மேற்படிப்புக்குச் செல்லாமல், 'டைப்பிஸ்ட்' வேலையில் அமர நேரிட்டது. வேலை நெருக்கடி காரண மாக ஒரு இடத்திலும் நீடித்து நிலைத்து வேலை செய்ய முடியாது அடிக்கடி வேலையினின்று நீக்கப்பட்டு மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருந்தாள்.

ராபர்ட்ஸன் கம்பெனியார் அவளுக்கு அளித்த சம்பளம் அவள் செய்த வேலைக்கு மிகவும் குறைவுதான் என்றாலும், அவளுக்கு அது பெரிய விஷயமாகத் தோன்றவில்லை. மனோகர் வேலை செய்யுமிடத்தில், அவனை தினமும் ஒருமுறை தரிசித்துக் கொண்டு வேலை செய்வது ஒரு பெரும் பாக்கியம் என எண்ணி அவள் மகிழ்ந்து போயிருந்தாள்.

எவ்வளவோ முறைகள் அவள் தாங்கள் குடியிருந்த சிறு வீட்டின் உள் அறைச் சுவரின் மாட்டியிருந்த பழைய நிலைக்கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொள்வாள். 'மோகனாவைப் போல் சிவப்பான மேனியும் அழகு நிறைந்த பெரும் கண்களும் தனக்கும் இருந்திருந்தால்'- என எண்ணி ஏங்கி அவள் அடிக்கடி பெருமூச்சு விடுவதுண்டு. பார்த்த உடனே மயக்கம் கொள்ளும் அளவுக்கு அவள் எழில் படைத்தவளாக இல்லாவிடினும் விஜயாவின் உள்ளம் மிகவும் அழகு படைத்தது. பொறுமை, பொறுப்புணர்ச்சி, தியாக மனப்பான்மை பலவும் கொண்ட ஒரு நல்ல பெண் தான் என்பதைப் பிறர் கூறவும், அவள் தாய் மோகனா வுடன் ஒப்பிட்டுப் பேசும் பொழுதும் அவள் அறிந்திருந் தாள்.

'உள்ளம் எவ்வளவு அழகானதாக இருந்தால்தான் என்ன பார்த்தவுடன் ஆண்களின் கண்ணையும் கருத்தை

யும் கவர்வது பெண்ணின் முகத்தின் எழில் தானே' உல்லாசமான கற்பனைகள் பல நிறைந்த வாலிப வயதில் பெண்ணின் உள்ளத்து அழகை ஊடுருவிப் பார்த்துப் பாசம் கொள்ள, ஆண் பிள்ளைக்குப் பொறுமை எங்கே இருக்கிறது? தன் மனத்தை ஒரு நொடியில் கவர்ந்து கொண்டுவிட்ட மனோகரனைத் தன்பால் பாசங் கொள்ளச் செய்ய, போதிய முக வசீகரம் தன்னிடம் இருக்கவில்லை என்பதை உணரும் பொழுதெல்லாம் விஜயா துயரத்தினால் துடித்தாள். மனோகர் தன்னைக் காதலிக்காவிடினும் போகட்டும், அவன் அருகே தினமும் இருந்து அவனைத் தரிசித்த வண்ணம் தான் வேலை செய்து விடுவதே ஒரு பாக்கியம், அதுவே போதும் என்று அவள் தன் மனத்தை அடிக்கடி சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ஆனால், இன்று அந்த ஒரு ஆனந்தத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதையறிந்தும் அவளது துயரம் கட்டுக்கடங்காத நிலைக்குப் போய்விட்டது.

'வருந்தாதீர்கள் மிஸ், விஜயா! உங்களை வேலையி லிருந்து நீக்கியிருப்பதைக் கேட்டதும் என்மனம் மிகவும் கஷ்டப்பட்டது. நான் வேண்டுமானால் ஒரு சிறு உதவி செய்யக்கூடும். என் நண்பன் ஒருவன் இங்குள்ள ஒரு பெரிய கம்பெனியில் மனேஜராக வேலை பார்க்கிறான். அவனிடம் தங்களுக்கு ஏதாவது ஒரு உத்தியோகம் தரும்படி சிபாரிசு செய்து பார்க்கிறேன்' என்றான் மிகவும் பச்சாதாபத்துடன் மனோகரன்.

விஜயாவின் முகம் மிகவும் சங்கோஜத்தினால் சிவந்து போயிற்று. எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தும். அவள் தன் மதிப்பை விட்டுவிடக் கூடாது என்ற பெரும் கொள்கை உடையவளாதலால், விஜயா, 'இல்லை மிஸ்டர் மனோகர்! தாங்கள் எனக்காக வீண் சிரமம் எடுத்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. அது

முறையுமல்ல" என்று கூறி விட்டு, துக்கத்தை அடக்கிக் கொண்டு மேலே நடந்து வெளியே வந்தாள்.

'ஏழைப் பெண், பாவம்' என்ற அனுதாபத்தில் மிகவும் மனம் இளகிப் போயிருந்த மனோகரன். அவள் பின்னால் தொடர்ந்து வெளியே வந்தான். 'இதில் தவறு என்ன இருக்கிறது? உங்களுக்கு உதவி செய்வதில் குற்றம் ஏதும் ஏற்படப் போவதாக எனக்குத் தோன்றவில்லையே, நாளையே நான் என் நண்பனைக் கண்டு பேசுகிறேன். பாவம், வேலையையே நம்பியிருக்கும் தாங்கள் இனி என்ன செய்விர்கள்? அதை நினைத்தால் எனக்கு மிக்க பச்சாதாபமாக இருக்கிறது' என்றான்.

மனோகரன் தன்னிடம் காட்டியது அன்பு அல்ல, பசியினாலோ நோயினாலோ துடிக்கும் மிருகத்தினிடம் மனிதன் காட்டும் இரக்கம் என்பதை உணர்ந்துகொண்ட விஜயாவின் 'உள்ளம் வெட்கத்தினால் வெம்பியது. மனோகரிடம் அவள் விரும்பியது அன்பு, இரக்கமல்ல, ஆகவே அவள், 'இல்லை, மிஸ்டர் மனோகர். தாங்கள் எனக்கு உதவிசெய்ய சிரத்தை காட்டுவது முறையல்ல. தாங்கள் மணமாகாத மனிதர். நானும் அவ்வாறே இருக்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் என்னைப்பற்றி தங்கள் நண்பரிடம் சிபாரிசு கூற முயன்றால், அவர் என்னைப் பற்றித் தவறாக எண்ணிக்கொள்ள இட மிருக்கிறதல்லவா? வேலை கிடைக்காது நான் பட்டினி யாக இருக்க நேரிட்டாலும் பரவாயில்லை. என் பெய ருக்கு எந்தவிதமான அபக்கியாதியும் ஏற்படக்கூடாது' என்று கூறி முடிக்குமுன் துயரம் தாளாது கண்ணீர் பெருகி விடவே, சட்டென மேலே வேகமாக நடந்து சென்றுவிட்டாள்.

சிறிது நேரம் திகைப்புடன் அவள் சென்ற திக்கையே கவனித்து நின்ற மனோகர், பிறகு வீட்டை நோக்கி நடந்தான்.

ஒரு வார காலம் வெளியூரில் தங்கிவிட்டு, அப்பொழுது தான் தங்கை குடும்பத்து ஞாபகம் வந்த நமச்சிவாயம் திரும்பி ஊருக்கு வந்து கொண்டிருந்தான். பஸ்ஸை விட்டு இறங்கியவன் தலையில் சிறு மூட் டையைத் தூக்கிவைத்துக் கொண்டு, தள்ளாடி நடந்த வண்ணம் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். வயது ஆகியும் அவனது பார்வையின் திக்ஷண்யம் குறைய வில்லை. சற்றுத் தொலைவில் வரும் பொழுதே அவன் கண்களுக்கு விஜயாவும் அந்த ஆடவனும் தென் பட்டனர்.

'நான் சொன்னால் கேட்கிறாளா? பெண்ணை வேலைக்கு அனுப்பினால் வரும் விபரீதத்தைச் சொன் னால், அந்தத் தரித்திரம் பிடித்தவளுக்குத் தெரிகிறதா? இப்படியா சங்கதி... இருக்கட்டும்!' என ஆத்திரத்துடன் தனக்குள் முணுமுணுத்த நமச்சிவாயம் வேகமாக தங்கை வீட்டை நோக்கி நடந்தான்.

21

'கொல், கொல்' என இருமிக் கொண்டு அமிர்தம் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்திருந்தாள். பல வருஷங்களுக்கு முன்பு அவளைப் பார்த்திருந்த வர்கள், தற்போது அவள்தான் அமிர்தம்மாள் என ஒருகாலும் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். காலம் அவ்வளவு பெரும் மாறுதலை அவளது தோற்றத்தில் விளைவித்திருந்தது. அவளது சுருண்ட கரிய கூந்தல் தும்பைப் பூவைப் போல் வெளுத்துப் போய் அவளது வயோதிகத்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்தது. தாழம்

பூவை நிகர்த்த அவளது அழகுமேனி போஷணைக் குறைவினால் வாடி, கறுத்து மெலிந்து விட்டிருந்தன. சில தினங்களாக அவளைப் பீடித்திருந்த இருமல் ஜுரம் கொஞ்ச நஞ்சமிருந்த திடத்தையும் குறைத்து விடவே, அவளது குரல் கூடப் பழைய கம்பீரத்தை இழந்து காணப்பட்டது.

"மோகனா! அக்கா இன்னும் ஆபீஸிலிருந்து திரும் பலையா அம்மா? தாகமா இருக்கு. கொஞ்சம் தண்ணி கொண்டு வாயேன்" என்று மூச்சுத் தடுமாற மெல்லிய குரலில் கேட்டாள்.

இடது கை விரல் நகத்தைச் சுவைத்துக் கொண்டு சுவாரஸ்யமாகப் புத்தகம் ஒன்றில் முழு மனதுடன் லயித்துப் போயிருந்த மோகனா, தூக்கத்தினின்றும் திடுக்கிட்டு விழித்தவள் போல், தாயின் பக்கம் சடக் கெனத் திரும்பிப் பார்த்தாள். அவளது அழகிய கருவிழிகள் இரண்டிலும் அலுப்பு நிரம்பியிருந்தது. "உன் தொல்லை சகிக்கவில்லை! சிறிது நேரம் சும்மா இருக்க மாட்டியா?" என்பது போன்று அவளது முகபாவம் கடுமையாக மாறியதை அமிர்தம் கவனிக்கவில்லை. புத்தகத்தைச் சடக்கென்று மூடி வைத்து விட்டுப் பல்லைக் கடித்துக்கொண்டு எழுந்திருந்தாள் அவள்.

"பரீட்சை சமயம் உன்னைத் தொந்தரவு செய்யறது சரியில்லைதான். இந்த நேரம் விஜயா வீட்டிற்கு வந் திருந்தால் உன்னைக் கஷ்டப்படுத்தியிருக்க மாட்டேன்" என பெருமூச்செறிந்து அமிர்தம், மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

அவசரமாகச் சமையலறைக்குள்ளே பிரவேசித்த மோகனா அடுப்பைக் கிளறி எரியவிட்டு, ஆத்திரத்துடன் ஒரு பாத்திரத்தில் நீரை முகந்து, அடுப்பின் மீது டக்கென ஓசையுடன் வைத்தாள்.

சற்று வசதிக் குறைவான சிறிய வீட்டில் ஏழ்மையின் நடுவே வசிப்பதை அமிர்தத்தின் இளைய மகள் அறவே மறந்துவிட்டு தனியாக ஒரு கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டு கதைப் புத்தகம் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் போதும்! அவளது கற்பனைக் குதிரை கடிவாளத்தைப் பிய்த்துக் கொண்டு கிளம்பிவிடும்.

புத்தகத்தை மூடிவிட்டு. இடையிடையே கண்களை மூடிக் கொண்டு தன் பிற்கால வாழ்வைச் சிந்தித்துப் பார்ப்பாள். அவளது வாழ்க்கையில் ஏழ்மை எள்ளளவும் தலைகாட்டாது. பிரமாண்டமான மாடி வீடு, விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்கள், பூரண நிலவு வீசும் கவலையற்ற ஆனந்த வாழ்க்கை. காதலைப் பொழியும் சுந்தர புருஷன்- என அவளது மனக்கோட்டைகள் வான் முகட்டையே தொட்டுக் கொண்டு எழும்பிவிடும். தனக்கு இருக்கும் அழகிற்கும் படிப்பிற்கும் சாமர்த்தியத் திற்கும். தான் ஒரு பெரிய அந்தஸ்துள்ள பணக்காரர் வீட்டில் இருக்க வேண்டியவள், தவறிப் போய் சிவானந்தத்தின் மகளாகப் பிறந்து விட்டது எத்தனை பெரிய துர்ப்பாக்கியம் எனச் சில சமயம் எண்ணி, அவள் நெஞ்சம் வருந்துவதும் உண்டு. அப்படிப்பட்ட ஏக்கமான நிலையில் இருக்கையில் அவளை அமிர்தம் எதற்காவது அழைத்து விட்டால் கூடப் போதும், மோகனாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும்.

சிறிய பெண்ணின் மனநிலையை அமிர்தம் நன்று அறிந்து கொண்டிருந்தாள். சிறுவயதிலேயே, அழகி என்று அதிகப்படி சலுகைகள் கொடுத்து வளர்த்ததனால் மோகனா, பிடிவாதக்காரியாகவும், சுயநலமும் அகம்பாவ மும் கொண்டவளாகவும் வளர்ந்து விட்டிருந்தாள். அதன்

பிசகு தன்னைத்தான் சாரும் என்பதை அமிர்தம் உணர்ந்திருந்தாள். மூத்த மகளை அதட்டி உருட்டிப் பேசிக் கீழ்ப்படியாகச் செய்வதைப் போல் தன் இளையமகளிடம் தன் வீச்சு பலிக்காது என்பதைப் பல அனுபவங்களில் அறிந்திருந்த தாயார், "இன்னிக் குன்னு பார்த்து விஜயா இவ்வளவு நேரம் என்ன பண்ணுகிறாளோ! சீக்கிரமாக வீட்டுக்குத் திரும்ப வேண்டாமா? ஏதடா, அம்மாவுக்கு உடம்பு சுகம் இல் லாமே உயிருக்கு மன்றாடறாளேன்னு கொஞ்சமாவது இருக்குதா" எனத் தனக்குள்ளே பேசிக் கொண்டு படுக்கை மீது சாய்ந்து கொண்டாள்.

அது சமயம் வாயிற் கதவைத் திறந்து கொண்டு யாரோ உள்ளே வரும் சப்தம் கேட்கவே, அமிர்தம் ஆவலுடன், "யாரு, விஜயாவா? ஏனம்மா இவ்வளவு நேரம் இன்னிக்கு?" என்று கேட்டாள்.

'உஸ்' என்று இரைந்து பெருமூச்செறிந்து கொண்டு உள்ளே பிரவேசித்த நமச்சிவாயம், தலையில் சுமந்து வந்த மூட்டையைத் தொப்பெனக் கீழே இறக்கி வைத்து விட்டு துண்டை உதறித் தரையில் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

அமிர்தம் அண்ணனை ஒருமுறை ஏறிட்டு பார்த்து விட்டு மௌனமாக முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள். "சகோதரி ஜுரமாகப் படுத்திருக்கிறாளே, வீட்டில் தங்கி, வைத்ய சாலைக்குச் சென்று ஏதாவது மருந்து வாங்கிக் கொடுப்போம்" எனக் கொஞ்சமும் எண்ணாது, பொறுப்பற்றவனாக வெளியூருக்குக் கிளம்பிச் சென்றிருந்த அண்ணன் மீது அவளுக்கு மிக்க வருத்தம் ஏற்பட்டிருந்தது. குடும்பத்தின் மீது சிரத்தையற்ற மனிதனின் தயவைநாடி வாழும்படி கதியற்றுப் போய் விட்டோமே எனத் தன் தூர்ப்பாக்கிய நிலையை எண்ணி மனம் புழுங்கிய அமிர்தத்திற்குத் துக்கம் தாளவில்லை.

"இப்பத்தான் வந்தீங்களா? விஜயாதான் வருகிறா ளோன்னு நினத்தேன்..." என்று வேண்டா வெறுப்பாய்க் கேட்டாள்.

"ஏ மோகனா! இங்கே வா! இந்தப் பையைக் கொண்டு உள்ளே வச்சுட்டு, ஒரு டம்ளர் காப்பி சுடச் சுடப் போட்டு சீக்கிரம் கொண்டு வா. தலைவலி மண்டையை இரண்டாய்ப் பிளக்குது" என அதட்டிய நமச்சிவாயம், 'தங்கையின் பக்கம் மிடுக்காகத் திரும்பினான்.

"விஜயா இன்னிக்கு வீட்டுக்கு வர நேரமாகும். அவளுக்கு வெளியிலே அதிகமாக வேலை இருக்கிறது. நான் அப்பவே முட்டிக்கிட்டேன். என் பேச்சு உன் காதிலே ஏறிச்சா? பொண்ணு உத்தியோகம் பண்ணணும், நீ ராணி போல் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து சாப்பிடணும்னு உனக்கு ஆசை" என்று ஏளனமான குரலில் மடமடவென்று மூச்சு விடாது பொரிந்து தள்ளினான்.

அண்ணன் வார்த்தைகளின் உள் அர்த்தத்தை உணர முடியாவிட்டாலும், அமிர்தம் அதைக் கேட்டுக் கலவர மடைந்து போனாள். "என்னாங்க அண்ணா? நீங்க பாட்டிலே என்னவோ பேசிக்கிட்டே போறீங்க?" என வினவினாள் அவள் திகிலுடன்.

"உன் பெண் விஜயா எவனோ ஒரு தடிப்பயலுடன் பல்லைக் காட்டிப் பேசிக் கொண்டு நடுத்தெருவில் நிற்கிறாள். அவங்க ரெண்டு பேருடைய பேச்சு சுவாரஸ்யத்திலே, கல்லுப்புள்ளையாட்டமா நிற்கிற என்னைப் பார்த்துக் கூட அவளுக்குக் கண் தெரியலை, "வயசு வந்த பெண்ணை வெளியிலே அனுப்பாதே வேண்டாம். இந்தப் பாழும் படிப்பு, வேண்டாம் இந்த உத்தியோகம்' அப்படின்னு முட்டிக்கிட்டேன். கேட் டியா? பின்னாடி ஏதாச்சும் அவமானம் வந்து சேர்ந்தா,

நாலு பேர் முகத்திலே எப்படி விழிக்க முடியும்?" என்று கூச்சலிட்டுக் கத்திய நமச்சிவாயம், அதே உரத்த குரலில், "ஏ மோகனா இன்னும் என்ன செய்துகிட்டிருக்கே உள்ளே? சொன்னது காது கேட்கலையா?" என அதட்டினான்.

"காரியத்திலே ஒண்ணும் உருப்படியா சாதிக்க முடியா விட்டாலும் வறட்டு அதிகாரத்திற்குக் குறைச்சல் கிடை யாது" என்று கோபத்துடன் முணுமுணுத்த மோகனா, ஆத்திரத்துடன் விறகுச் சுள்ளி ஒன்றை மடக்கென ஒடித்து அடுப்பில் திணித்து விட்டு எழுந்தாள்.

"காலா காலத்திலே பெண்களைக் கட்டிக் கொடுக் காமல் படிக்கிற வைக்கிறாளாம் படிக்க! பெரிய செல்வச் சீமான்கள் எல்லாம் படிக்க வைக்கத் திண்டாடித் திணறிப் போற இந்தக் காலத்திலே ஒரு நாள் சோத்துக்கு விதியில்லாத நாம் படிக்க வைக்கிறதாம்! ரொம்ப நல்லாத்தான் இருக்கிறது!" என்று தொடர்ந்தாற் போல் உச்சஸ்தாயியில் இரைந்தான்.

வயது ஆகியும் அமிர்தத்திற்கு அண்ணனை எதிர்த்துப் பேசச் சிறிதும் தைரியமே கிடையாது. எனவே அவன் கூறியவற்றை அவள் மௌனமாகக் கேட்டுக் கொண் டிருந்தாள்.

தாயாருக்குக் குடிக்க வெந்நீரைப் பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்து தரையில் வைத்த மோகனா, மாமனைப் பார்க்கவும் மனமில்லாதவள் போல் சரே லெனத் திரும்பிச் சமையலறைக்குள் சென்று விட்டாள்.

"அப்பவே, போன வருஷமே கட்டிக் கொடுத்துடுன்னு அடிச்சிக்கிட்டேன். என் பேச்சைக் காதில் போட்டுக்க வில்லை. உன் பெண்களுக்கு வயசு கொஞ்சமாவா ஆகுது? முன் காலமா இருந்தால் இவங்கரெண்டு பேருக்

கும் மருமகன்கள் வந்திருப்பார்கள்" என்று கோபித்துக் கொண்டான் நமச்சிவாயம்.

"என்ன அண்ணா பண்ணுகிறது? தக்க இடத்தில் தானே கொண்டு கொடுக்க முடியும்? படிச்ச பெண்கள். அதுகளுக்கு இஷ்டமில்லாத வரனுக்கெல்லாம் கட்டி வைக்க முடியுமா? நீங்க நல்ல இடமாப் பார்த்துக் கொண்டு வருகிறதை நானா வேண்டாம்னு தடுக் கிறேன்?" என்றாள் அமிர்தம் சலிப்பாக.

"நான் கொண்டு வந்த வரன் ஏதாவது உனக்குப் பிடிச்சாத்தானே? உனக்குப் பிடிச்சா உன் மகளுக்குப் பிடிச்சாத்தானே? படிச்சுவிட்ட கர்வத்திலே அதுதான் தலை கொள்ளாமல் நிற்கிறதுகள். எங்கேயாவது போய் நல்ல இடமாப் பார்க்கலாம்னா, 'வயசு இருபத்தஞ் சாவுதா'ன்னு கேட்டு விட்டுப் பிள்ளை வீட்டவங்க மூர்ச்சை போட்டு விழறாங்க. இந்த இரண்டுக்கும் சுத்த தரித்திரம் பிடிச்ச ஜாதகமா இருக்குதே! அறியாத சின்ன வயசிலே அப்பனை முழுங்கி விட்டதுங்க. இதுங்க பேரைச் சொல்லி ஏதாவது ஆரம்பிச்சாலும் உருப்பட் டால்தானே? மூணு நாளைக்கி முன்னாடி ஒரு முக்கிய வரனை உத்தேசித்து வெளியூருக்குப் புறப்பட்டுப் போனேன், புறப்படறச்சேயே சின்னச் சனியன் தும் மிச்சு. அப்பவே காரியம் கைகூடாதுன்னு தெரியும். அதுப்படியே, அந்த வரனுக்கு வேற இடத்துலே கல்யாணம் நிச்சயமாகி விட்டதாம்" எனக்கூறி, மூச்சு வாங்க நமச்சிவாயம் நிறுத்தினான்.

காப்பியைக் கலந்து கொண்டு வந்து வெறுப்புடன் மாமன் அருகில் வைத்த மோகனா எரிச்சலுடன், "போதும் மாமா! நீங்க வரன் தேடிக் கல்யாணம் செய்து வைக்கவில்லையின்னு நாங்க இங்கே ஒண்ணும் அழுதுகிட்டுக் கிடக்கவில்லை. வந்ததும் வராததுமா பெரிய கூப்பாடு போடாதீங்க" என்றாள்.

"பாத்தியா, பாத்தியா! இந்த வாண்டுக்குட்டி என்னை அதட்டுகிறது? இந்த மாதிரி வாயாடிகளைக் கட்டிக்கிட எவனும் பயப்படத்தானே செய்வான்? இதுகளுக்கு நீ கொடுக்கிற இடத்துலே, வரவர என்கிட்டே மரியாதை கூட இல்லாமல் போயிடுச்சு. இப்படி உன் பெண்கள் என்னை வயதுகாலத்துலே அதட்டி, உருட்டிப் பேசுகிற துன்னு ஆயிட்டா, நான் இந்த வீட்டிலே ஒரு க்ஷணம் கூட இருக்கமாட்டேன், சொல்லி விட்டேன்!" என்று கோபத்துடன் நமச்சிவாயம் பயமுறுத்தினான்.

மகளையும் கோபித்துக்கொள்ள முடியாது. அண்ணனது மனஸ்தாபத்திற்குப் பயந்து அமிர்தம்மாளின் நிலை மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. 'இந்தா, மோகனா! நீ சித்த சும்மா இரு. சிறுசா லக்ஷணமாப்போய் உன் வேலையைக் கவனி' என அன்புடன் கடிந்து கொண்டு விட்டு, 'அது கிடக்குது, அறியாத பொண்ணு. நீங்க அதைப் பெரிசா ஏன் எடுத்துக்கணும்? என சகோதரனுக்கும் சமாதானம் சொன்னார்கள்.

நமச்சிவாயம் கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்கிறவன்போல் ஒரு முறை கவனித்துவிட்டு, கண்களில் தீப்பொறி பறக்க மோகனாவை ஒரு தடவை வெறித்துப் பார்த்தான், பிறகு சகோதரி பக்கம், அதே மிடுக்குடன் திரும்பி கூறினான், 'அமிர்தம்! நான் பல தடவை உன்னிடம் சொல்லி விட்டேன். வரன் விஷயத்தைப் போல இதையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டேன் என்கிறாய். இந்தத் தடவை வெளியூருக்குப் போயிருந்த இடத்திலே, அப்படியே ஒரு காரியமா தேவநகர் வரை போக வேண்டியிருந்தது. இங்கே பெற்ற தாயார் நீ உன் குடும்பத்துடன் தரித்திரத்தில் தாண்டவமாடுறே. அங்கே அத்தையம்மாளுக்கு ராஜயோகம் அடிக்கிறது. 'ஹாய்'னு அவ நிம்மதியா பணத்திலே புரண்டுக்கிட்டு கிடக்கிறாள். தியாகராஜனுக்கு சொந்த

வியாபாரத்திலே ரொம்ப லாபம் வந்து விட்டதாம் பெரிய பங்களா, கார், தோட்டம், துரவுன்னு ஒரே தடபுடலாக இருக்கிறானாம் பையன்.

"வண்டியிலே அந்த வழியா போனபோது அவன் பங்களாவைத் தாண்டிக் கொண்டுதான் போனேன். அப்பப்பா! என்ன வீடு அது போ! வெளியிலிருந்து பார்க்கிறதுக்கே கண் கொள்ளாத காட்சியா இருக்கிறது. என்னவோ, நடந்தது நடந்துவிட்டது. அதுக்குன்னு உறவு விட்டுப்போகுமா? 'நான் உன் சிறிய தாயார். பெற்ற தாயாரைப் போல. இரண்டு பெண்களை வைச்சுக்கிட்டுச் சாப்பாட்டுக்கு இல்லாம திண்டாடிக்கிட்டிருக்கேன். நடந்ததை மறந்து மன்னிச்சு எனக்கு ஆதரவு காட்ட வேணும்' அப்படின்னு நீ ஒரு கடுதாசி எழுதிப் போடுன்னு எத்தனை வாட்டி சொல்றது. சிறிய தாயார்னு உனக்கு அனுபவிக்கப் பாக்யம் இருக்குது. நீ இருந்து அனுபவித்து ஆள வேண்டிய உன் சொத்து சுதந்திரத்தை அந்த காந்திமதி அனுபவிக்கிறாள். உனக்கு நான் சொன்னால்தான் காதிலே ஏறுவதில்லையே?" என்றான் நமச்சிவாயம்.

"உயிர் போனாலும் தியாகராஜனுக்கு அப்படி ஒரு கடிதாசு எழுத மாட்டே'னு விஜயா பிடிவாதமாக இருக்கிறாள். நான் என்ன செய்யட்டும்?" என்று முனகினாள் அமிர்தம் வருத்தத்துடன்.

கார், பங்களா, தோட்டம் என்ற வார்த்தைகளைக் கேட்டதும் பிரமிப்புடன் மோகனா சமையறைக்குள்ளிருந்து ஓடி வந்து மாமன் முகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றாள். "அண்ணன் தியாகராஜன் தேவ நகரில் பிரபல வர்த்தகனாக செல்வத்திலே புரண்டு கொண்டிருக்கையில் அதைப் பகிர்ந்து கொள்ளாது தரித்திரத்தில் ஏன் உழல வேண்டும்?" என்று அவள் மனம் துடியாகத் துடித்தது.

"உனக்கு சொந்த புத்தி கொஞ்சமும் கிடையாது. விஜயா ரொம்ப உலகத்தைக் கண்டு விட்டவள். புத்தி சொல்ல வந்து விட்டாள்! அவள் பேச்சைக் கேட்டியாக் கும்? இன்னிக்காவது நான் சொல்றபடி ஒரு கடிதாசு எழுதிப் போடு. என்ன இருந்தாலும் நீ தாய் இல்லையா? அவளைத் தவிக்கவிட்டு வேடிக்கை பார்ப்பானா மகன்?" என்று கூறிய நமச்சிவாயம், "நீங்க சொல்றபடி ஒரு நாளும் நடக்கப் போவதில்லை. ஏன் மாமா அம்மாவுக்கு அந்த தவறான உபதேசம்?" என்று ஏளனமாகப் பதில் அளித்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

சப்தமிடாது உள்ளே வந்து நின்ற விஜயா, மாமனை ஒருமுறை அலட்சியமாகப் பார்த்து விட்டுத் தாயின் அருகில் வந்தாள்.

"அம்மா! மாமாவின் பேச்சைக் கேட்டு நீங்கள் அவ்வாறு கடிதம் எழுதிப் போடாதீர்கள். அண்ணா விடம் உதவி கேட்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது! அவர் படிப்பிற்கோ, முன்னுக்கு வந்து தொழிலில் அபிவிருத்தி அடைவதற்கோ நாம் அவருக்கு என்ன உதவி செய்திருக்கிறோம்! நம்மை வைத்துக் காப்பாற்று வதற்கு அவர் எந்த விதத்தில் கடமைப்பட்டிருக்கிறார்? 'அந்தக் காலத்தில் நீங்கள் நடந்து கொண்டவிதம் மறந்து விட்டதா?' என்று அவர் திருப்பிக் கேட்டுவிட்டால் அந்த அவமானத்தை எப்படி அம்மா நாம் சகிப்போம்? பங்களா, பணம், பதவி, அந்தஸ்து இவைகள் வாழ்க்கைக் குத் தேவை என்றாலும் தன் மதிப்பைக் காட்டிலும் இவைகள் உயர்ந்தவையா? பட்டினியால் இறந்தாலும் சரி, அம்மா! நாம் சுயமதிப்பைக் கெடுத்துக் கொண்டு போய் யாசகம் கேட்பது தவறு. இதற்கு ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட்டேன். உங்களுக்கு என்ன குறை வந்து விட்டது? நான் உயிர் உள்ள வரை, எப்படியாவது பாடுபட்டு இந்தக் குடும்பத்தை வைத்துக் காப்பாற்று

வேன். பெண் குழந்தையானாலும், கஷ்டப்பட்டாவது குடும்பத்தைக் காப்பாற்றுகிறாளே என்று நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்வதை விட்டு, இல்லாத தவறான யோசனை யெல்லாம் செய்கிறீர்கள். இது நியாயமா" என்று உணர்ச்சிவசப்பட்டு மூச்சு விடாமல் பேசினாள்.

கோபத்தைத் தாள முடியாத நமச்சிவாயம் துள்ளிக் கொண்டு எழுந்திருந்தான்.

"உன்னாலே உங்கம்மா ரொம்பப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். நீ பண்ணுகிற காரியம் எங்களுக்குத் தெரியாதுன்னு நினைச்சு ரொம்பத் துள்ள வேணாம். உன் அண்ணனுக்குக் காகிதம் எழுதுகிற. சங்கதியை அப்புறம் பேசிக்கலாம். முதல்லே நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு. கொஞ்சம் முன் னாடி நடு வீதியிலே நின்னுகிட்டுப் பேசிக் கொண்டிருந் தியே அவன் யார்?" என்று உக்கிரமாக அதட்டினான்.

அவமானத்தினால் விஜயா ஒரு கணம் உடல் குன்றிப் போனாள். குப்பென அவள் முகம் வியர்த்தது. நெஞ்சு துடித்தது. ஆத்திரமும் துயரமும் தாளாது அவளது உதடுகள் துடித்தன.

"யார் அவன்? குடும்பத்து மானத்தைக் குலைக்க எப்பொழுதிலிருந்து இந்தக் காரியம் செய்ய ஆரம்பித் தாய்? ஊம்! பதில் சொல். இந்த வீட்டில் உங்களை அடக்கி ஆள நான் ஒருத்தன் உயிருடன் இருக்கிறது ஞாபகம் இருக்கட்டும்" என்று வலது கையை ஆட்டிய படி கர்ஜித்தான் நமச்சிவாயம்.

அடிபட்ட பெண் புலி போல் கோபத்துடன் மாமா வின் பக்கம் விஜயா திரும்பினாள். "மாமா! நிறுத்துங்கள்! தாறுமாறாகப் பேசுவதை இன்றுடன் நிறுத்திக் கொள் ளுங்கள். நான் வயது வந்த பெண். என் வாழ்க்கையை

இஷ்டப்படி வகுத்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டு. நான் என்ன செய்தேன் யாருடன் பேசினேன்.

எவ்வாறு நடந்து கொண்டேன் என்று என் நடத்தை யைப் பற்றிப் பேச நீங்கள் யார்?" என்று படபடப்பாகக் கேட்டாள்.

"நான் யாரா? பேஷ்! அப்படியும் ஒரு போடு போட் டியே! நான் இல்லாத போனா நீ இருந்த இடம் புல் முளைச்சுப் போயிருக்கும் தெரியுமா?" என இகழ்ச்சி யாகப் பதிலுக்குக் கேட்ட நமச்சிவாயம், மேலே தொடர்ந்தாப் போல் பேசு முன் விஜயா குறுக்கிட்டாள்.

"நீங்கள் இந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு செய்திருக் கிறீர்கள்? ஒரு பாவமும் அறியாத என் அத்தை மீது வீண் பழி சுமத்தி வீட்டை விட்டு அடித்து விரட் டினீர்கள். பச்சைப் பாலகனான அண்ணனை அறியா வயதிலே அன்பாக நடத்துவதை விட்டு, இம்சை செய்து வீட்டை விட்டு ஓடச் செய்தீர்கள், உலக ஞான மில்லாத என்தாயை இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைத்து இருந்த கொஞ்ச நஞ்சம் சொத்தையும் விற்று ஏப்பம் விட்டு, எங்களை நடுத் தெருவிலே நிர்க்கதியாக்கி விட்டீர்கள். எங்க அத்தையையும் அண்ணனையும் வீட்டை விட்டு விரட்டியது போதாதென்று இப்போது மகளையும் வெளியே அடித்துத் துரத்த வந்திருக் கிறீர்களா?

"உங்க வித்தையும், வாய் வீச்சும் இனி இங்கே பலிக்காது. இந்த மாதிரி அடுத்துக் கெடுத்துக் கொண்டு இங்கே அரை நிமிஷம் கூட நீங்க இருக்க நான் அனுமதிக் கப்போவதில்லை. இந்த முறை இந்த வீட்டை விட்டு வெளியேறப் போவது நீங்க தான். என் தாயின் சகோ தரன் என்பதைத் தவிர, உங்களுக்கு என்ன சம்பந்தம் வைத்துக் கிடக்கிறது? இது என் வீடு என்பது ஞாபகம்

இருக்கட்டும். கை விரல்கள் ஒடிய நாள் முழுவதும் 'டைப்' அடித்துக் கொண்டு வந்து இந்தக் குடும்பத்தை நடத்துகிறேன். மாமா! அது உங்களது அறிவுக்கு உதயமாகட்டும்.

"பொறுப்பு இல்லாமல் உங்களைப் போல் ஆண் பிள்ளைகள் சமூகத்திலே குடும்பக் கவலையற்றுத் திரிவ தால் தான் என்னைப் போல் பெண்கள் உத்தியோகம் செய்யக் கிளம்ப வேண்டியிருக்கிறது. இன்னொரு முறை பெண்கள் படிப்பதையும், உத்தியோகம் செய்வதையும் இழிவாகப் பேசுங்கள், பிறகு சொல்கிறேன்!" என்று உணர்ச்சியுடன் படபடத்த விஜயா, பெருமூச்சு வாங்க தாயின் பக்கம் திரும்பி, "அம்மா! என்ன ஆனாலும் சரி! அண்ணாவுக்குக் கடிதம் போட்டு நீங்கள் உதவி கேட்கவே கூடாது. அப்படிச் செய்தால் கோயில் தெப்பக் குளத்திலே என் பிணத்தைத்தான் பார்ப்பீர்கள்!" என்றாள் தீர்மானமாக.

22

நாளுக்கு நாள் அபிவிருத்தியை அடைந்து கொண்டு வளர்ச்சியுற்றுக் கொண்டு போன அருணோதய ஆச்ரமம் இப்பொழுது பார்வைக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. எந்த நிமிஷமும் இடிந்து விடத் தயாராக இருந்த பழைய ஆபீஸ் கட்டடம் இருந்த இடத்திலே இப்பொழுது வானை அளாவும் இரண்டடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று காணப்பட்டது. "தலைமை உபாத்தியாயினி' என்ற பித்தளைத் தகடு பதித்த அறைக் கதவிற்கு முன்னால் நின்று கொண்டிருந்த டவாலிச் சேவகன்

கூட இப்பொழுது மாறிப் போயிருந்தான். பழைய கேசவனைப் போல் முக்காலி மீது அமர்ந்து அடிக்கொரு தடவை அரைத் தூக்கத்தில் ஆடி விழுந்து கொண்டிருக் காமல், பெரிய கோட்டையின் வாயிற் கதவை யுத்த காலத்தில் கருத்துடன் காவல் காத்துக் கொண்டிருக்கும் ராஜ விசுவாசமிக்க காவலாளி போல் சுற்றிலும் கவனமாகப் பார்த்துக் கொண்டு வராந்தாவில் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தான்.

அது சமயம் முன்புறத் தோட்டத்து நடைபாதையில் சப்தமிடாது வேகமாக ஒரு கார் வந்து நின்றது. கதைவைத் திறந்து கொண்டு டிரைவர் ஆசனத்திலிருந்து இறங்கிய மனிதனைக் கண்டதும் டவாலிச் சேவகன், உலாவுவதை நிறுத்திவிட்டு, ராணுவ மோஸ்தரில் ஒரு சலாம் வைத்தான். மடிப்புக் கலையாத ஆங்கில உடைகளில் வந்திருந்த அந்த மனிதன், சட்டைப் பையிலிருந்த கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். 'உள்ளே போகலாமா?' என மெல்லிய குரலில் வினவினான்.

'அம்மா ஓய்வாகத்தான் இருக்கிறாங்க, போகலாம்' என்று பதிலளித்த சேவகன், தனக்குள்ளே அர்த்த பாவத்துடன் இலேசாகப் புன்முறுவலித்துக் கொண்டு, வந்த மனிதன் உள்ளே போகக் கதவைத் திறந்து வழிவிட்டார்.

'டக்டக்' என ஒலித்த பாதரக்ஷை ஓசைகளைக் கேட்டதும் கையிலிருந்த காகிதக் கத்தைகளை மேஜை மீது வைத்துவிட்டு தமயந்தி நிமிர்ந்தாள். பட்டுப் பூச்சிகளின் சிறகைப்போல் அவளது கண் இமைகள் மகிழ்ச்சியினால் மெல்லத் துடித்தன, ரோஜாவை ஒத்த அவளது மெல்லிய அதரங்களின்மீது ஒரு சிறு புன்னகை உதயமாயிற்று.

'ராஜ்! நீங்கள் வருவதற்குள்ளே நான் கிளம்பத் தயாராகி விடவேண்டும் என்று அவசர வேலையைக் கவனித்தும், கொஞ்சம் பாக்கியிருக்கிறது. இதோ வந்து விட்டேன் உட்காருங்கள்' என்று அவனை வரவேற்றாள்.

'சில நாட்களாக ஏற்பாடு செய்து கொண்டிருந்த அந்த பங்களாவை இன்று விலைக்குப் பேசி முடித்துத் தீர்த்து விட்டேன். தொழிற்சாலைக்கு அருகில் உள்ள அந்த பங்களாவின் மீது எனக்குக் கொஞ்ச காலமாக ஒரு கண் இருந்தது என்பது உனக்குத் தெரியுமே! 'கைகாஸ் பவனம்' என்ற அந்தப் பழைய பெயரை உடனடியாக மாற்றி வைத்து விட்டேன். 'காந்தி பவனம்' என்று நமது பங்களாவுக்கு இனி பெயர், தெரியுமா! பங்களாவைக் சுற்றிப் பார்த்த அத்தைக்கு சந்தோஷமும் பெருமையும் தாளவில்லை. இன்னிக்கு வெள்ளிக்கிழமை, வார விடுமுறைக்காக தமயந்தி இங்கே நம்முடன் தங்கக் கிளம்பிக் கொண்டிருப்பாள். சீக்கிரம் போய் அழைத்து வா. அவளும் இதைப் பார்த்து அபிப்பிராயம் சொல்லட் டும் என்று ஒரே அடியாக உத்தரவு போட்டு என்னை அனுப்பியிருக்கிறார்கள். நீ என்னவென்றால் புறப்பட இன்னும் தயாராகவில்லை. நான் வரும் ஒவ்வொரு தடவையும் நீ இப்படித்தான் வேலை வேலையென்று கொஞ்சம் தாமதம் செய்யத் தவறுவதில்லை. உம்!' என்று ஒரே மூச்சில் பேசிவிட்டு, எதிரே கிடந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

'நீங்கள் சொந்தமாக பங்களா வாங்கி விட்டதைப் பற்றி ரொம்ப சந்தோஷம், ராஜ்! உங்களுடைய முன்னேற்றம் எனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கும் விஷயம் என்பதைச் சொல்லவா வேண்டும்? ஒரு நிமிஷம் பொறுங்கள். வந்துவிட்டேன் என்று மகிழ்ச்சியுடன் பதிலளித்த தமயந்தி மேஜையின் மீது கிடந்த காகிதக்

கத்தைகளை எடுத்து உள் அறையில் வைத்துப் பூட்ட ஆரம்பித்தாள்.

தியாகராஜன் கைக்குட்டையால் மீண்டும் முகத்தை நாசூக்காகத் துடைத்துக் கொண்டான். அதனின்று எழுந்த நறுமணம் அறை முழுதும் வினாடிப் பொழுதில் வியாபித்துக் கொண்டதை உணர்ந்த தமயந்தி நெற்றியைச் சுருக்கிக் கொண்டு, 'ம்!' என்று பரிகாச பாவத்தால் பெருமூச்செறிந்தாள்.

கலாசாலைப் படிப்பின் மீது நம்பிக்கை இல்லாத தியாகராஜன், ஹைஸ்கூல் படிப்பிற்குப் பிறகு, கல்வி ஸ்தாபனங்களுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டுத் தொழிலில் அமர்ந்து விட்டான். காந்திமதியம்மாள் எவ்வளவோ எடுத்து உபதேசித்தும் ஒரே பிடியாக அவன் கல்லூரிகளைத் திரும்பிப் பார்க்க மறுத்து விட்டான். தமயந்தி கல்விமீது காட்டிய கருத்திற்கும் எதிராக தியாகராஜனுக்கு அதன்மீது ஏற்பட்டிருந்த அலட்சியம், கல்வியை மிக உயர்வாக மதித்த காந்திமதியின் உள்ளத்தை நோகச் செய்தது வாஸ்தவம்.

கல்வியென்றால் கலாசாலைப் படிப்பு ஒன்று தான் என்றல்ல. மனிதன் பிழைக்க வழி தெரிந்து கொண்டு அபிவிருத்தியடையும் எந்தத் தொழில் திறமையும் ஒரு பெரும் கல்வி என்று அவன் அத்தையிடம் அடிக்கடி தர்க்கம் செய்வான். அதை உண்மை என்று நிரூபிப்பவன் போல் பத்து வருஷங்களுக்கு முன்பு தேவநகரில் பிரபலமாக இருந்த பென்சில் கம்பெனி ஒன்றில் மாதம் முப்பது ரூபாய்க்கு ஒரு சாதாரணத் தொழிலாளியாகச் சேர்ந்தான். இரண்டு வருஷங்களில் தொழிலில் ஏற்பட்ட தனித் திறமையினால் உதவி மானேஜர் பதவிக்கே வந்து விட்டான். தொழிலின் நுட்பங்களை விரைவில் கிரகித்துக் கொண்டு விட்டதனால் அதிக நாட்கள் அந்தக்

கம்பெனியிலேயே உத்யோகம் வகிக்காது, அதனின்று விலகிக் கொண்டு சொந்தமாக பென்சில் தயாரிக்கும் தொழிலை ஸ்தாபிக்கத் துவங்கினான்.

காந்திமதியம்மாள் பால் விற்று மோர்விற்று அரும்பாடு பட்டுச்சேர்த்து வைத்திருந்த ஆயிரம் ரூபாய்களைக் கடனாக வாங்கிக் கொண்டு தன் தொழிலை முதல் முதல் சிறு திட்டத்தில் ஆரம்பித்தான். நாலைந்து வருஷங்களில் அவன் தயாரித்த 'காந்தி மார்க்' பென்ஸில்கள் மிகவும் பிரபலமடைந்து விட்டன. அவனது முன்னேற்றத்திற்கு யுத்தகாலமும் ஓரளவு பெரும் உதவி செய்தது. ஒரு சில வருஷங்களில் இந்தியாவில் பல பெரிய நகரங்களில் காந்தி மார்க் பென்ஸிலின் பிராஞ்சுக் கடைகள் ஏற்பட்டிருந்தன. தியாகராஜன் தனது முப்பதாவது வயதில் யாரும் அதிசயிக்கக்கூடிய அளவில் தொழிலில் முன்னேறியிருந்தான்.

தேவநகரில் சொந்தமாக அவனுக்கு நான்கு பங்களாக்கள் இருந்தன. கொடைக்கானலிலும் பங்களூரிலும் கோடைகால வாசஸ்தலத்திற்காக, இரண்டு பெரும் வீடுகள் வாங்கியிருந்தான். தொழில் அபிவிருத்தியைப் போல் அவனது தோற்றத்திலும் மிகவும் மாறியிருந்தான் என்பதை தமயந்தி நன்றாக உணர்ந்து கொண்டிருந்தாள். ஆரம்பகாலத்தைப் போன்று அவன் கதர்ச் சட்டையும் வேஷ்டியும் அணிவதை இப்போது விட்டிருந்தான். மடிப்புக் கலையாத ஸூட், கோட்டு, டை என்று ஆங்கில நாகரிக உடை மீது அவனது கவனம் திரும்பியிருந்தது. தனியாக உயர்ந்த கடையிலிருந்து தருவித்த சிகரெட்டுகளை அவன் பிடிக்க விரும்பினான். வெளியூர் சென்று தங்கினால் மிகப்பிரபலமான ஹோட்டல்களில்தான் வசிக்க அவனுக்கு பிடித்தது. ஆடையில், தோற்றத்தில், பேச்சில் எல்லாவற்றிலும் ஆடம்பரம் தொனித்ததை தமயந்தி கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

சின்னஞ்சிறு வயதில் அவளுக்கு சமமாக உட்கார்ந்து கொண்டு பொம்மையை வைத்து விளையாடிய அந்தச் சிறுவனுக்கும் அத்தர் மணம் வீசும் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு தன் முன் வீற்றிருக்கும் உல்லாச பழக்க வழக்கங்கள் நிறைந்த மனிதனுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? காலமும் செல்வ நிலையும் மனிதர்களை எவ்வளவு மாற்றி விடுகின்றன. எனத் தனக்குள்ளே அதிசயித்த வண்ணம் அவள் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

'ஏன் முகத்தைச் சுளிக்கிறாய், தமா! இந்த மணம் உனக்குப் பிடிக்கவில்லையா? காஷ்மீரத்திலிருந்து என் நண்பன் ஒருவன் கொண்டு வந்த கலப்பற்ற ரோஜா அத்தர். உனக்காகக் கொஞ்சம் ஒரு சீசாவில் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன், என்ன இனிமையான மணம்' என்று கூறிய தியாகராஜன் விளையாட்டாகக் கைக் குட்டையை அவள் முகத்தின் மீது வீசினான்.

தலையைப் பின்னுக்கிழுத்துக் கொண்டு எழுந்து நின்ற தமயந்தி. 'ராஜ் இத்தனை வயதாகியும் இன்னமும் உங்களுக்கு விளையாட்டுக் குணம் போன பாடில்லை. யாராவது பார்த்தால் என்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொள்வார்கள். சரி, வீட்டிற்குக் கிளம்புவோம்' என்றாள். தியாகராஜன் பதில் அளிக்காது சட்டென எழுந்து அருகில் வைத்திருந்த தோல் பெட்டியை எடுத்துக் கொண்டான். தமயந்தி மெல்ல நிதானமாக நடந்து அவன் பின்னால் சென்றாள்.

ஆடம்பரமான அவனது ஆடை அலங்காரத்திற்கு முன்னால் தமயந்தியின் தோற்றத்தின் எளிமை பன் மடங்காகக் காணப்பட்டது. வெண்ணிற மில் புடவையும், அதற்கேற்ற சிவப்புநிற சோளியும் அன்று அவள் அணிந்து கொண்டிருந்தாள். கழுத்திலே மெல்லியதொரு பொன் சங்கிலியும் கைகளில் ஒரு வளையலும்தான் அவள்

அணிந்திருந்த ஆபரணங்கள். நெற்றி மீது காற்றுடன் மோதிக் கொண்டு தவழ்ந்த தன் சுருண்ட கூந்தலைப் பின்னால் மடித்துக் கட்டியிருந்த முறை அவள் தன் தலையலங்காரத்தைப் பற்றி அதிகம் சிரத்தை காட்ட வில்லை என்று அறிவித்துக் கொண்டிருந்தது.

தமயந்தியுடன் பழகியவர்களுக்கும், அவளது நடையைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கும் மட்டுமேதான் அவளது கால்களில் ஒன்று ஊனமானது என அறிந்து கொள்ள முடியும். தரைமீது புரளும் அளவு புடவையை மிகவும் தாழ்வாக அவள் உடுத்தியிருந்ததால் வியாதியால் நலிந்திருந்த அவளது பாதத்தை யாரும் சுலபத்தில் கண்ட கொள்ள இயலாதிருந்தது. மிகவும் நிதானமாகவும் சாமர்த்தியமாகவும் அவள் நடந்ததனால், வலது காலைச் சற்றுத் தூக்கி அந்தப் பக்கம் சாய்ந்து நடந்ததை முதன் முதலாக அவளைக் காணும் யாரும் புரிந்துகொள்ள முடியாதபடி அவள் தன் ஊனத்தை மறைத்துக் கொண்டாள்.

காரில் தன் அருகே அமர அவளுக்கு உதவி செய்து விட்டு, டிரைவர் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண் டான் தியாகராஜன். 'உனக்கு இன்று நான் கொடுக்கப் போகும் பரிசை நீ கட்டாயம் ஏற்க மறுக்கக் கூடாது. ரோஜா அந்தர் சீசாவை மறக்காமல் நீ என்னிட மிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று கொஞ்சம் அதட்டலாகக் கூறிய தியாகராஜன், காரைத் தன் பங்களாவை நோக்கிச் செலுத்திக் கொண்டு போனான்.

'ராஜ்! நான் அத்தர், ஸெண்ட் போன்ற வாசனைத் திரவியங்களை உபயோகப்பதில்லை என்பது உங்களுக் குத் தெரிந்த விஷயம்தானே? ஏன் இந்த சிரமம் உங்களுக்கு?" என்றாள் பதிலுக்கு.

"இந்த முறை நீ என் பரிசை நிராகரித்தால் எனக்கு மிகவும் கோபம் ஏற்படும், தமா! அத்தை அவர்கள் புகழ்வது போல் உன்னிடம் பல நல்ல குணங்கள் இருந்தாலும், ஒரு பெரிய கெட்ட குணமும் கூடவே இருக்கிறது. உன் மேலிருக்கும் அன்பால் அத்தை கண்களுக்கு அது புலப்படுவதேயில்லை" என்று சீற்றத்துடன் தியாகராஜன் கூறி விட்டு, காரை வேகமாகச் செலுத்திக் கொண்டு போனான்.

சிறு கோபத்திற்குக்கூட அவனது முகம் ரத்தம் போல் சிவந்து போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டே வீற்றிருந்த தமயந்தி, 'அது என்ன கெட்ட குணம் அதைச் சொல்லுங்கள். அறிந்து என்னைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கிறேன்!" என்றாள் பரிகாசமாக.

"திருத்திக் கொள்வது என்பது முடியாத காரியம். அது உன் இரத்தத்திலே ஊறி உடம்புடன் லயித்துக் கிடக்கிறது' என்றான் அவன் கோபத்துடன்.

மேலே அவன் என்ன கூறப் போகிறான் என்பதை விரைவில் உணர்ந்து கொண்ட தமயந்தி பதில் பேசாது அவன் முகத்தைக் கனிவுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள், சமீப காலத்தில் அடிக்கடி அவனைச் சந்திக்க நேர்ந்த பொழுதெல்லாம் தியாகராஜன் அவள் மீது சுமத்திய அந்தக் குற்றச்சாட்டு அவளுக்குப் புதியதே யல்ல, அடிக்கடி கேட்டுப் பழக்கப்பட்டதானாலும் அன்றைய தினம் அவள் மனம் அவனது கடுமொழி களைக் கேட்டுச் சிறிது வருந்தத்தான் செய்தது.

தியாகராஜன் வெகுநாட்களாகத்தான் அடக்கி வைத்திருந்த பலவற்றையும் ஒரே அடியாகச் சொல்ல விரும்புகிறவன் போல், கோபம் தணியாத குரலில் மேலே படபடப்பாகப் பேசலுற்றான்: 'பிரமாண்டமான பங்களா, நினைத்த இடம் செல்ல சௌகர்யம் நிறைந்த

கார்கள், ஏவியதைச் செய்ய வேலைக்காரர்கள் என பல அனுகூலங்கள் இருந்தும் நீ எங்களுடன் வசிக்க மறுத்து, இந்த ஆச்ரமத்திலேயே தங்கியிருப்பது உனக்கு நன்றாக இருக்கிறதா என்று யோசித்துப் பார். என் விஷயத்தில் உனக்கு ஏன் இந்த வேற்றுமை? நான் உனக்கு அன்னிய மனிதனா? அல்லது, அத்தைதான் உனக்கு வேறு மனுஷியா? எவ்வளவோ? முறைகள் வேண்டியும் எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தைப் பெரிதாகக் கருதி, என் வேண்டுகோளை மறுத்து நீ இங்கே கஷ்டப்பட்டுக் கொண்டு வசிப்பது என்னை வேண்டுமென்றே தண்டிப்பது போலிருக்கிறது. அதைத் தான் சொல்ல வந்தேன். உண்மையை ஒப்புக் கொண்டு உதவி ஏற்றுக்கொள்ள மனமில்லாத ஒரு போலி கர்வம்! உன் வாழ்வைக் குலைக்கும் இந்தக் கெட்ட குணம் என்றுதான் போகுமோ, தெரியாது' என்றான்.

"என் உடலில் ஊறிக்கிடக்கிறது என்று சொல்லிவிட் டீர்களே! அது எங்கே இனி போகப் போகிறது ராஜ்! மீண்டும் மீண்டும் கூறியதையே இன்னும் திருப்பிச் சொல்கிறேன். உங்கள் கோபம் மிகவும் அர்த்தமற்றது என்று புரிந்து கொள்ளுங்கள். நான் இந்த ஆச்ரமத்திற்குச் சிறிது ஏன் மிகவும்- கடமைப்பட்டிருக்கிறேன் என்பது தங்களுக்கு மறந்து விட்டதா? கலாசாலைப் படிப்பிற்கு வேண்டிய பணம் அத்தையிடம் இல்லாத சமயம் எனக்கு ஆச்ரமம் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவிய தல்லவா? அதற்குப் பதிலாக, நான் பட்டம் பெற்று உபாத்தியாயினி ஆனதும் இந்த ஆச்ரமத்திற்குச் சில வருஷங்கள் குறைந்த சம்பளத்தில் உழைக்க ஒப்புக் கொண்டிருந்தேன். ஆச்ரமத்துடன் ஏற்பட்ட எனது ஒப்பந்தம் முடிய இன்னும் ஒன்றரை வருஷம் இருக்கிறது. அதுவரை என் கடமையை நான் எப்படி உதற முடியும்?" என்று நிதானமாகக் கேட்டாள்.

"இதுதான் இப்படியென்றால், நான் கொடுக்கும் பரிசுகளை எல்லாம் ஏதாவது சாக்குச் சொல்லி வேண்டாமென்று புறக்கணித்து விடுவாய். போனமாதம் டெல்லியிலிருந்து நான் வாங்கி வந்த பட்டுச்சேலையை வேண்டாம் என்று ஏற்க மறுத்துவிட்டாய். உனக்காக ஆசையுடன் நான் செய்து வந்த முத்து 'நெக்லஸ்' கையால் தொடக்கூட மறுத்து விட்டாய். ஆடம்பரமான ஆடை, விலையுயர்ந்த நகை இவைகளை அணிந்துகொள்ளப் பிடிக்காது என்று விவாதிக்கிறாய். போலியான ஒரு கர்வம் என்பதைத் தவிர, இதை நான் வேறு என்ன வென்று எடுத்துக் கொள்வது?" என்று அதட்டிக் கேட்டான் அவன்.

சிறு வயதிலிருந்து தியாகராஜன் மீது ஏற்பட்டிருந்த தவிர்க்க முடியாத பாசம், சமீப வருஷங்களில் நீக்க முடியாது பெரும்நேசமாக தமயந்தியின் உள்ளத்திலே மாறி விட்டிருந்தது. தன் உயிருக்கு மேலாக அவனை அவள் காதலித்தாள். எனினும், தன் மீது அத்தகைய சமமான ஒரு பாசம் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ளும் வரை அவன் அளித்த பொருள்களை ஏற்பது முறையாகாது என்பது அவளது கொள்கையாக இருந்தது.

ஆகவே அவள், 'ராஜ்! உங்களுக்கு என்ன சொன்னாலும் புரியாது. ஏன் வீண் வாதம்? விட்டுத் தள்ளுங்கள் அதை' என்றாள் பெருமூச்சுடன்.

'கடைசியாக, உன் மீது எனக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு அதிருப்தியையும் கூறி விடுகிறேன். கல்கத்தாவில் ஒரு பிரபல குஜராத்தி டாக்டர் ஒரு பெரிய நர்ஸிங் ஹோம் திறந்திருக்கிறார் என்று போன தடவை சந்தித்த பொழுது சொன்னேன்; அதைப் பற்றிக் கேட்க நீ சற்றாவது சிரத்தை காட்டினாயா?' என்று அதிருப்தியுடன் வினவினான்.

சங்கோஜத்தினால் தமயந்தியின் முகம் லேசாகச் சிவந்து போயிற்று. "அதைப் பற்றி இப்பொழுது என்ன?" என்று தடுமாற்றத்துடன் வினவினாள்.

"அதை நான் எதற்காகச் சொல்ல வந்தேன் தெரியுமா? அந்த டாக்டர் மிகவும் திறமை வாய்ந்த பெரிய ஸர்ஜனாம். இளம்பிள்ளை வாதத்தினால் ஏற்பட்ட பலவித ஊனங்களையும் ரணசிகிச்சையால் நன்றாக குணப்படுத்தி விடுகிறாராம். நானும் அத்தையும் வெகு நேரம் நேற்று அவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். உனக்குக் காலை குணப்படுத்த ஏற்படும் வைத்தியச் செலவு முழுவதையும் நான் சந்தோஷத்துடன் ஏற்க முன் வந்திருக்கிறேன். நீ மறுக்காது அந்த டாக்டரிடம் ரணசிகிச்சை செய்துகொள்ள வேண்டும்" என்று முடித்தான்.

"ராஜ்?" என்று தமயந்தியின் தொண்டையினின்று எழுந்த குரல் துக்கத்தினால் தடைப்பட்டது. கண்களில் பொங்கிய நீரை சிரமத்துடன் அடக்கிக்கொண்டு, "ஆபரேஷன் என்பதைப் பற்றி என்னிடம் இன்னும் ஒருமுறை பேச வேண்டாம் என்று மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என் காலில் ஏற்பட்டிருக்கும் ஊனம் உங்களுக்கு இரக்கத்தை உண்டாக்கும் அளவு அவ்வளவு பயங்கரமாகவா தெரிகிறது? என்னுடைய விதி என்னை அப்படி இருக்கும்படி சிறுவயதில் திட்டமிட்டதோ, அவ்வாறேதான் என் வாழ்வு முடிவு வரை இருக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றாள் சிறிது கோபத்துடன்.

"இதை ஒரு போலிக்கர்வம் என்று சொல்லாது வேறு என்ன சொல்வது?" எனச் சீறிய தியாகராஜன் காரை பங்களா வாயிலில் கொண்டு நிறுத்தினான்.

"உங்களுக்கு இதைப்பற்றிக் கூறினாலும் விளங்காது ராஜ்! என் வாழ்க்கையில் யாரிடமும் பேச விரும்பாத விஷயம் என் கால் ஊனம். அதை யார் பேசினாலும் என் மனம் எப்படித் துக்கத்தில் துடிக்கும் என்பதை உங்களால் உணர முடியாது, சிறுவயதிலிருந்து நான் இதைப்பற்றி எண்ணியெண்ணி உள்ளம் நைந்து போயிருக்கிறேன். ஆகவே, ஊனம் என்னும் விஷயம் என் உள்ளத்திலே ஆறாத ஒரு புண். ராஜ்! என்னை வெகுவாக அறிந்த தாங்கள் கூட அதைப் பற்றிப் பேசி என் மனத்தைப் புண்ணாக்குகிறீர்கள், இது தர்மமா?" என்று திணறியபடி கேட்ட தமயந்தி, தன் இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மி விம்மி அழத் துவங்கினான்.

"ஒரு சமயம் ஊனம் என்ற காரணம் பற்றி தியாக ராஜன் தன்னை நேசிக்கவில்லையோ என்ற ஒரு சந்தேகம் அவள் உள்ளத்திலே எழவே, அவள் மனம் அந்த வேதனையையும் அவமானத்தையும் தாளாது குமுறியது. அவளது கண்ணீரைக் கண்டு பதைபதைத்துப் போன தியாகராஜன், பரிவுடன் அவள் அருகில் திரும்பி, "தமா! நான் உன் நன்மைக்குக் கூறியதைத் தவறாக எடுத்துக் கொண்டு வருந்துகிறாய். மன்னித்துக்கொள். நீ எங்களுடன் வந்து இரண்டு நாட்களாவது இருந்து சந்தோஷப் படுத்துகிறாயே என்று நான் பெருமிதம் அடைகிறேன். நம் புதிய பங்களாவை நீ கண்டு ஆனந்தப்பட வேண்டுமென அவசரமாக உன்னை அழைத்து வந்தேன். நீ இப்படிக் கண்ணீர் விட்டால் என் மனம் எவ்வளவு துன்பமடையும் தெரியுமா? இதோ பார், அத்தைகூட உள்ளிருந்து அவசரமாக வருகிறார்கள். கண்களைத் துடைத்துக்கொள். அவர்கள் முன் என்னைப் பெரும் குற்றவாளிபோல் விழிக்க வைத்து விடாதே" என்றான் கனிவுடன்.

"தமயந்தி கண்ணு, வாடியம்மா, ஏண்டாப்பா உடம்பு இளைச்சுப் போச்சு!" என்று பரிவுடன் விசாரித்த காந்தி மதியம்மாள் வேகமாக வந்து காரிலிருந்து இறங்கிய தமயந்தியை அணைத்துக் கொண்டாள்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு நமச்சிவாயத்தின் கோபம் கலபத்தில் தணிந்து விட வில்லை. தங்கையிடம் கூடப் பேசப் பிடிக்காதவனாக எழுந்திருந்து வாயிற் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டவன் இரவு வெகுநேரம் ஆகியும் சாப்பிட எழுந்து வரவேயில்லை. அமிர்த்தம்மாள் மிகவும் வேண்டிக்கொண்ட பிறகு தாக்ஷண்யத்தைத் தட்ட முடியாதவன் போல் முகத்தைக் கடுத்துக் கொண்டு இலைக்கு முன்வந்து உட்கார்ந்து கொண்டான்.

அன்று இரவு போஜனத்தின் பொழுது ஒருவரும் பேசவே இல்லை. 'பெரியவர் என்று மதிப்பில்லாமல் வாயில் வந்தபடி அண்ணாவைப் பேசி விட்டாளே என்ன அசட்டுப் பெண்' என்று தன் மூத்த மகளை எண்ணி மனத்திற்குள்ளே நொந்த வண்ணம் வேண்டா வெறுப்பாகத் தனக்களித்த கஞ்சியை இரண்டு வாயாகப் பருகி முடித்தாள் அமிர்தம்.

"மாமா கொஞ்சம் சுயநலக்காரர்தான் என்றாலும் அவர் சொல்கிறபடி செய்தால்தான் என்னவாம்! ஆனாலும் விஜயாவுக்கு இத்தனை கர்வம் ஆகாது!" என்று தனக்குள்ளே எண்ணி வெகுண்ட மோகனா, அவசரம் அவசரமாகச் சோற்றை விழுங்கினாள். முருங்கைக்காய் சாம்பாரும், சுத்தரிக்காய்ப் பொரியலும்

அன்று மிகவும் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. நமச்சிவாயத்திற்கு இருந்த மனநிலையில் அன்று விஜயாவின் சமையலை, வழக்கம் போல் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு ருசி பார்த்துத் திருப்தியாகச் சாப்பிட இயலவில்லை.

"படித்து விட்டோம். இரண்டு காசு சம்பாதிக்கிறோம்" என்று இந்தப் பொண்ணுக்கு எவ்வளவு ஆணவம்? மட்டு மரியாதையில்லாமல் பேசி விட்டாளே! என்று நமச்சிவாயம் தனக்குள் எண்ணி ஆத்திரத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தான். விஜயாவைப் பார்க்கும் பொதெல்லாம் ஜன்ம வைரியைப் பார்க்க நேரிட்டவன் போல் கோபத்துடன் உறுத்து விழித்தான்.

மாமாவின் சினத்தையோ தாயாரின் மனத்தாங்கலையோ விஜயா பொருட்படுத்தவேயில்லை. "நாளை விடிந்தால் மறுபடியும் வேலை தேடும் வேட்டை துவங்க வேண்டுமே! சீக்கிரம் நல்ல இடத்தில் ஒரு வேலை கிடைக்காவிட்டால், அடுத்த மாதம் குடும்பச் செலவுகளை எப்படி நிர்வகிக்கப் போகிறோம்" என்று எண்ணி உள்ளம் வருந்திக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருந்த கவலைகளில் அவளால் அன்று இரவு சரியாகவே சாப்பிட முடியவில்லை, சாயங்காலம் நடந்த குடும்பப் பூசலினால் மன அதிர்ச்சி அடைந்து போயிருந்த தாயாரை இன்னமும் அவள் துன்பப்படுத்த விரும்பவில்லை. ஆகவே, தனக்கு அன்றுடன் வேலை போய் விட்ட சங்கதியை அவள் தாயாரிடம் கூறவில்லை. விடிந்தபிறகு மெல்லக் கூறிக் கொள்ளலாம் என்று வாளாவிருந்து விட்டாள்.

காலை எழுந்ததும் அவசரமாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு நெற்றி மீது பட்டையாக விபூதியைத் தீட்டிக் கொண்டு பெரும் சிவப்பழமான தோற்றத்தில் நமச்சிவாயம் வெளியே கிளம்பிச் சென்று விட்டான்.

எங்கே போனான். எப்பொழுது வருவான் என்பதை அவன் யாரிடமும் சொல்லிக் கொண்டு புறப்படவில்லை.

காலை ஆகாரத்திற்குப் பிறகு மோகனா தாழ்வாரத்தில் ஒரு பாயை விரித்துக் கொண்டு புஸ்தகச் சுமைகளுடன் பரீக்ஷைக்குப் படிக்க உட்கார்ந்து விட்டாள். ஆனால் அவளது சிந்தனை படித்துக் கொண்டிருந்த விஷயங்களின் மீது சிறிதும் லயிக்கவேயில்லை. புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அச்சு எழுத்துக்களுக்கு பதில் அழகியதொரு பங்களாவும் பூந்தோட்டமும் தோன்றி மறைந்தவண்ணம் இருந்தன. உள்ளே அடுப்பை ஊதிச் சமையலுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த விஜயா பக்கம் திரும்பிப் பார்த்த அவளுக்கு தமக்கை மீது கோபம் பற்றிக்கொண்டு வந்தது. "போலி கௌரவத்திற்காக எல்லோரையும் ஏழ்மையிலே உழவவேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறாளே, புத்தி கெட்டவள்' என்று மெல்ல முணுமுணுத்துவிட்டு, புத்தகத்தின் ஏடுகளை ஆத்திரத்துடன் புரட்டிக் கொண்டிருந்தாள்.

கயிற்றுக் கட்டிலின் மீது காலை நீட்டிக் கொண்டு கிழிந்த புடவை ஒன்றைத் தைத்துச் சரிபடுத்திக் கொண்டிருந்த அமிர்தத்தின் கவனம் திடீரென சமையலறைப் பக்கம் சென்றது. "விஜயா! இன்னும் என்னம்மா பண்ணிக்கிட்டிருக்கிறே? மணி பத்துக்கு மேலே ஆயிடுச்சே. ஆபீஸிற்கு நேரமாகலையா?" எனக் கவலையுடன் எச்சரித்தாள்.

தாயாருக்கு என்ன பதில் கூறுவதென்று சட்டென மகளுக்கு விளங்கவில்லை. வேலை போய்விட்டதென்ற சங்கதியைச் சொல்லாமல் இனியும் ஒளித்துவைத்து பயன்இல்லை என்று தோன்றவே, தயங்கியபடி அறையை விட்டு வெளியே வந்தாள், கட்டிலின் காலைப் பிடித்துக் கொண்டு தரையில் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, "அம்மா! நான் ஒரு சங்கதி சொல்லப் போகிறேன்.

பதறிப் போகாதீங்க. அப்படித் தலைபோகிற விஷயம் இல்லை, இருந்தாலும்..." என்று மெல்ல ஆரம்பித்தாள்.

என்னவோ ஏதோ என்று விஷயத்தை அறியுமுன் அமிர்தம் ஒரே பீதி வசப்பட்டு விட்டாள். "அம்மா! எனக்கு நேற்றுடன் வேலை போய்விட்டது! ஒரு மாதச் சம்பளத்துடன் அந்தக் கம்பெனிக்காரர்கள் என்னை வீட்டுக்கு அனுப்பி விட்டாங்க" என்றாள் துயரம் தோய்ந்த குரலில்.

அமிர்தத்தினால் உடனடியாகப் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு விட்டது. கண்களில் பொங்கிய கண்ணீர் தடைப்படுத்த முடியாது தாரையாகக் கன்னங்களில் வழிந்தோடியது.

"வேலை போய்விட்டதா? அப்படியிருந்தும் மாமா விடம் அவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பேசினாயே? எனக்குத் தெரியும். என் பரீட்சைக்கு சமயத்தில் இந்த எழவு வீட்டில் இப்படி ஏதாவது நடந்து தொந்தரவு ஏற்படும் என்று" சீற்றத்துடன் கேட்ட மோகனா, புத்தகத்தைப் படக்கென்று மூடிவைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"வேலை போய் விட்டதென்றால் ஏன் இப்படி நீ பதட்டமடைய வேண்டும். மோகனா! நீ வயதிலே சின்னவள் என்று நான் கட்டுப்பட்டுப் போகிறேன். நான் அம்மாவிடம் பேசும் சங்கதிகளில் நீ தலையிடத் தேவையில்லை. உன் காரியங்களைக் கவனித்துக்கொண்டு சித்த சும்மாயிரு" என்று தங்கையை அதட்டினாள் தமக்கை.

குரோதம் பொங்கி வழிந்த கண்கள் இரண்டையும் உருட்டி விழித்த மோகனா, ஆத்திரம் தாளாது உரத்த குரலில், "இந்தக் குடும்பத்து விவகாரங்களில் அபிப்பி ராயம் சொல்ல எனக்கு உரிமை உண்டு. நான் விவரம்

தெரியாத பச்சைக் குழந்தையல்ல; ஆனாலும் விஜயா! உனக்கு ரொம்ப கர்வம் பிடித்திருக்கிறது. ஏதோ இந்தக் குடும்பத்திற்கு ரெண்டு காசு சம்பாதித்துக் கொண்டு வந்து போடுகிறாய் என்பதற்காக, நீ எங்கள் எல்லோரை யும் அடக்கி ஆள முயற்சிக்கிறாய். அடிக்கடி நாங்கள் உனக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை வார்த்தைகளால் சுட்டிக் காட்டுகிறாய். மாமாவுடைய வயதென்ன? அவர் அந்நாளில் நமக்குச் செய்த உபகாரம் என்ன? அதையெல்லாம் கொஞ்சங் கூட சிந்திக்காமல் நேற்று அவரை எவ்வளவு அவமானப் படுத்திப் பேசினாய்? அம்மாவுக்கு, மாமாவுக்கு எதிராகத் தவறாக உபதேசம் செய்கிறாய். உன் போலி கௌரவத் திற்காக நாங்கள் நாசமடைய வேணும் என்று ஆசைப் படுகிறாய் ஏது, இந்த வீட்டுக்கு நீ பெரிய சர்வாதி காரியாக இருக்கிறாயே! அப்பப்பா, சகிக்கவில்லை" என்று கத்தினாள்.

தங்கையின் கொடுமையான சொற்கள் ஒவ்வொன்றும் சாட்டைகள் போல் பாய்ந்து விஜயாவின் மென்மையான உள்ளத்தை நோகச் செய்தது. எனினும் அவள் சிரமப் பட்டுத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு, "மோகனா என்றிலிருந்து உனக்கு மாமா மீது இவ்வளவு கருணையும் நன்றியும்? நீ தானா பேசுகிறாய் என்று கூட எனக்கு அதிசயமாக இருக்கிறதே!" என்றாள் ஏளனமாக.

முகத்தை கோபத்துடன் சுளித்துக் கொண்ட மோகனா தாயின் பக்கம் திரும்பி, "அம்மா! மாமா சொல்கிறபடி தான் நீ நடக்க வேண்டும். அக்காவின் உபதேசத்தைக் கேட்டு நாம் ஏழ்மையில் நாசமடைய ஒரு போதும் நான் சம்மதிக்க மாட்டேன். நமது கஷ்டத்தை எடுத்துச் சொல்லி, ஒரு கடிதம் போட்டு உதவி வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்யுங்க. நான் வேணுமானா கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். அதை விட்டுவிட்டு, அக்கா சொல்கிறபடி

நீங்க பேசாம இருந்தீங்கன்னா, நாளைக்கு விடியறதுக் குள்ள என் பிணத்தைக் கோயில் தெப்பக் குளத்திலே பார்ப்பீங்க" என பயமுறுத்தலுடன் முடித்தாள். "சாகப் போவதாகச் சொல்லி, என்னாலும் தாயைப் பயமுறுத்த முடியும்" என்கிற தோரணையில் அவள் தன் சகோ தரியை ஒரு முறை உறுத்துப் பார்த்து விட்டு, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"நானும் வந்து அந்தக் குளத்திலே விழுந்து உங்களோட கூடவே உசிரைவிட்டு விடுகிறேன். எனக்கு இந்த உலகத்திலே வாழ என்ன வச்சுக் கிடக்கு? சின்ன வயசிலேயே என்னைப் பாழுங்கிணற்றிலே தள்ளறாப் பலே உங்கப்பாருக்குக் கொண்டு வந்து கொடுத்தாங்க. கட்டினதிலிருந்து இன்னிவரை நான் என்ன சுகம் கண்டேன்? இன்னிக்கு அரிசி இல்லையே, நாளைக்கு உப்புக்கு என்ன பண்ணுவோம் என்று ஒவ்வொரு நாளும் தரித்திரத்திலேயே கழிச்சுவிட்டேன். நாளைக்கு என்கிற விசாரமில்லாமல் அமைதியாக உட்கார்ந்து ஒருநாள் கூட நான் சாப்பிட்டதில்லை, தூங்கினதில்லை. இனி அப்படி ஒரு நல்ல நாளும் வரப்போகுதா?" என்று துக்கத்துடன் திணறிய அமிர்தம் முடிவில் 'ஓ' வென்று வாய்விட்டு அழுதாள். அவளுக்கு ஒத்துப் பாடுவது போல் மோகனா புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழத் துவங்கினாள்.

கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக் கொண்டு எழுந்த தாயின் அருகில் சென்ற விஜயா, "அம்மா! வருத்தப்படாதீங்க, இப்படியே எல்லாம் போயிடாது. ஒரு நல்ல காலம் சீக்கிரம் வரும் கட்டாயம். மோகனா காலேஜ் படிப்பு முடிந்ததும் ஒரு நல்ல உத்தியோகத்துக்கு வந்தா நமக்கு விடிவுகாலம் வந்துவிடும்" என்று சமாதானப்படுத்தினாள்.

விம்மியழுது கொண்டிருந்த சகோதரியின் துயரத்தைக் காண அவளது பேதை உள்ளம் சகிக்கவில்லை. தாயாருக்கு ஒருவாறு ஆறுதல் கூறிவிட்டு தங்கையை அணுகி "மோகனா! ஏன் இப்படிப் பரீக்ஷை சமயத்தில் மனத்தை அலட்டிக் கொள்கிறாய்? அழாதேயம்மா, என் கண்ணல்லவா நீ! மாமாவை நான் வேண்டுமென்றா அவமானப்படுத்தினேன்? அவர் நமக்கு செய்திருக்கும் பல தீமைகளை எண்ணி வெகுண்டு அவ்வாறு பேசி விட்டேன். நீயே யோசித்துப் பார். மாமா நமக்கு என்ன உதவிகளைச் செய்திருக்கிறார் என்று விளங்கும். அப்பா இறந்து போகும் பொழுது நம்மை அனாதையாக விட்டுப் போய்விடவில்லை. சூரியகாந்தத்தில் ஒரு வீடும் நிலமும் வைத்துவிட்டுப் போனார் உலகப் போக்கு ஒன்றும் தெரியாத அம்மாவை ஏமாற்றி நிலத்தையும் வீட்டையும் விற்கச் செய்து, அந்தப் பணத்தை இஷ்டப்படி சூறை யாடினார் மாமா.

"வீடு வாசல் இழந்து, அண்ணனையும் வீட்டை விட்டு ஓட்டிவிட்டு, நாம் பிழைப்பைத் தேடிக்கொண்டு இந்த ஊருக்கு வந்தோம். இருக்கிற ஒன்றிரண்டு நகையையும் விற்று ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு குடும்பத்தை நிர்வகிக்கும் நிமித்தம் அம்மா இட்டிலி சுட்டு விற்று வாழ்க்கை நடத்த வேண்டி வந்தது. தங்கை தெருத்தெருவாக இட்டிலிக் கூடையைத் தூக்கிக் கொண்டு நடக்கிறாளே என்று ஒரு நாளாவது மாமா அனுதாபப்பட்டிருப்பாரா? பெண் பிள்ளை, நீங்கள் பாடுபட்டு உழைக்க வேண்டாம். வீட்டில் இருங்கள். நான் சம்பாதித்துப் போட்டு உங்களைக் காப்பாற்று கிறேன்" என்று ஒரு முறை மரியாதைக்காவது ஒரு வார்த்தை சொல்லியிருப்பாரா?

"எவ்வளவோ கஷ்டத்தின் நடுவில் உபகாரச் சம்பளம் வாங்கி நாமிருவரும் படித்தோம். ஒரு புத்தகமோ அல்லது

ஒரு பென்ஸிலோ வாங்கி நமக்குப் படிப்புக்குச் சிறு உதவி செய்யாவிட்டாலும், மாமா நமது கல்விக்கு எவ்வளவு முட்டுக்கட்டையாக இருந்தார். ஏன் இன்னமும் அவ்வாறுதான் இருக்கிறார்! அம்மாவுக்கு, இல்லாத தவறான யோசனைகள் சொல்லிக் கொடுக்கிறார். அம்மாவின் கூடப் பிறந்த சகோதரன் என்பதற்காக நான் இவ்வளவு தூரம் பொறுமையாக அவரது துஷ்ட காரியங்களைச் சகித்துக் கொள்கிறேன். இல்லா விட்டால் எனக்கு வரும் கோபத்தில்...” என்று கூறி விட்டுப் பல்லைக் கடித்தாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட மோகனா தன் சகோதரியுடன் பேசப் பிடிக்காதவள் போல் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டு வாசிப்பது போல் பாவனை செய்யவே, விஜயா எழுந்திருந்து உள்ளே சமையலைக் கவனிக்கச் சென்றாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு சில தினங்கள் குடும்பத்தில் பயங்கரமானதொரு மௌனம் நிலவியது. ஒவ்வொரு வரும் யந்திரம்போல் அவரவர்கள் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

நகரத்தில் உள்ள பிரபலமான பல ஸ்தாபனங்களிலும் விஜயா முயற்சி செய்து பார்த்து விட்டாள். யாருடைய சிபாரிசும் இன்றி தானே நேரே சென்று வேலைக்காக பெரிய கட்டடங்களின் மூன்று மாடிகளையும் கால் கடுக்க ஏறிச்சென்றதுதான் மீதமாக இருந்தது. ‘வேலை காலி இல்லை, எங்களுக்கு தற்சமயம் தேவையில்லை” என்ற பதில்கள் தான் அவளுக்கு ஒவ்வொரு இடத்திலும் காத்து நின்றன.

அன்று காலை தினசரிப் பத்திரிகையில் கண்ட ஒரு விளம்பரத்தினால் சிறிது உற்சாகமடைந்த விஜயா சிறிதும் காலதாமதம் செய்யாது, விளம்பரத்தில் குறித்

திருந்த ‘தாமரைப் பூ காப்பித்தூள் கம்பெனிக்கு விரைந்து சென்றாள். தன்னைப் போல் அதே ‘டைப்பிஸ்ட்’ வேலைக்குப் போட்டியாக வராந்தாவில், மானே ஜரைக் காண காத்துக்கொண்டு பல பெண்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் விஜயாவின் உற்சாகம் அதல பாதாளத்தில் விழுந்து விட்டது, “மானேஜர் அழைக்கிறார்” என்று கேசவன் வந்து அழைத்ததும், விஜயா மிகவும் கலக்கத்துடன் அவனைப் பின்பற்றிச் சென்றாள்.

கம்பெனியின் மானேஜர் என்ற பதவியில் வீற்றிருந்த மனிதனுக்கு சுமார் முப்பது வயதிருக்கும். பெண்களை முன்பின் பார்த்ததே இல்லை போல் அவன் விஜயாவை ஏற இறங்க விறைத்துப் பார்த்துவிட்டு, உட்கார்ந்து கொள்ளும்படி கட்டளையிட்டான்,

அவனது நறுக்கு மீசை, அவன் கண்களில் மிதந்து நின்ற விஷமப் பார்வை, அவனது பேச்சுக்கள் ஒன்றுமே விஜயாவிற்குப் பிடிக்கவில்லை. “இந்த இடத்தில் வேலை கிடைத்தாலும், பெண்களைப் பார்வையிலே சாப்பிட்டு விடுகிறவன் போல் வெறித்துப் பார்க்கும் இந்த மனிதனிடம் எப்படி வேலை செய்து கௌரவமாக வாழ முடியும்” என்ற கவலையும் அருவருப்பும் ஒருங்கே எய்திய அவள் நெஞ்சு படபடவென்று துடிக்க, பதிலுக்காகக் காத்திருந்தாள்.

“காலையில் வந்த எல்லாப் பெண்களுக்கும் இங்கே வேலை கிடையாது என்று கூறி அனுப்பிவிட்டேன். ஆனால், உனக்கு அப்படிச் சொல்லப் போவதில்லை, உன்னைப் பார்த்ததுமே வேலை கொடுத்து உதவ வேண்டும் என்று என் மனத்தில் இரக்கம் வந்துவிட்டது, பாவம் உனக்கு இந்த வேலை கிடைக்கா விட்டால் உன் குடும்பம் ரொம்ப கஷ்டப்படும் அல்லவா?” என்று பச்சாதாபத்துடன் பேசிய மானேஜர், தன்முன் வீற்றிருந்த

பெண்ணை அர்த்தம் நிரம்பிய கண்களால் ஒரு தினுசாகப் பார்த்தான்.

குப்பென நெற்றி மீது அரும்பிய வியர்வைத் துளிகளை கைக்குட்டையினால் துடைத்துக் கொண்ட விஜயாவுக்குப் பயத்தில் எழுந்திருக்கக்கூட சக்தியற்றுப் போய் விட்டது.

"இவ்வளவு பேர்களுக்கும் இல்லை என்று மறுத்து விட்டு, உனக்கு இந்த வேலையை நான் மனமுவந்து கொடுக்கிறேன். இன்றே வேலையில் சேர்ந்து விட்டதாக 'ஆர்டரில்' எழுதி விடுகிறேன். நீ குடியிருக்கும் தெருக் கோடியில் உள்ள வீட்டில்தான் நான் வசிக்கிறேன். வேலை முடிந்ததும் சாயங்காலம் ஒரு சினிமாவுக்குப் போவோம். திரும்பி உன்னை நான் வீட்டில் கொண்டு பத்திரமாகச் சேர்த்து விடுகிறேன். என்னவோ, உன்னைப் பார்த்ததும் எனக்கு மிகவும் பிடித்து விட்டது" என்று கூறிவிட்டு விஷமமாக மெல்லச் சிரித்தான்.

மின்சாரத்தினால் தாக்குண்டவள் போல் அதிர்ச்சி யுடன் விஜயா இடத்தைவிட்டுத் துள்ளி எழுந்து நின்றாள், அவமானத்தினால் அவளது உடல் பதறியது. ஆத்திரத்தில் என்னவெல்லாமோ பேச வேண்டும் என்று வாயைத் திறந்த அவளால் வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்க முடியவில்லை. "ஐயா! அக்கா தங்கைகளுடன் பிறந்திருந்தால் நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள்!" என்று கூறி விட்டு, அறையை விட்டு வேகமாக வெளியே வந்தாள். உத்தியோகத்திற்கு என்று கிளம்பும் பெண் களுக்கு எவ்வளவு தொல்லைகள் காத்து நிற்கின்றன! என்று தனக்குள் எண்ணிக் குமுறிய விஜயாவின் கண்கள் இரண்டும் நீரால் மறைக்கப்பட்டன. தன் துயரத்தை யாரும் அறிந்து கொள்ளக்கூடாது என்ற சங்கோஜத்தினால் தலையைக் குனிந்து கொண்டு

மாடிப்படிகளில் மெல்லத் தட்டுத்தடுமாறி இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

அது சமயம் புத்தம் புதியதொரு கார் கம்பெனி வாயிலில் வந்து நின்றது. கம்பெனி முதலாளி திடீரென்று மேற்பார்வை செய்ய வந்து விட்டார் என்பதை மின்னல் பொழுதில் புரிந்து கொண்ட டவாலிச் சேவகன், ஒரு பெரிய சலாம் போட்டு, விரைந்து ஓடி காரின் கதவைத் திறந்தான்.

டக்டக்கென பாதரக்ஷையை ஓசை செய்து கொண்டு மிகவும் மிடுக்காக மாடிக்கு விரைந்து கொண்டிருந்த முதலாளியின் கண்களில், எதிரே வந்து கொண்டிருந்த பெண்ணின் கன்னத்திலே துளிர்த்து நின்ற கண்ணீர் சட்டெனத் தென்பட்டது. அறையில் போய் உட்கார்ந்து கொண்டதும் சேவகனிடம், "அந்தப் பெண்ணை நான் பார்க்க விரும்புவதாகச் சொல்லி சீக்கிரம் அழைத்து வா" என்று உத்தரவிட்டான்.

நடந்த விஷயத்தைக் கூறி முடிக்க விஜயாவுக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது. முதலாளியென்று உட்கார்ந்திருந்த அந்த மனிதன் முகத்தைப் பார்க்க வெட்கியவளாக மேஜை மீது பரந்து கிடந்த அவனது கரங்களிரண்டையும் பார்த்துக் கொண்டு, விம்மலுக்கும் கண்ணீருக்குமிடையே, தான் வேலை தேடி வந்த விவரத்தையும் மானேஜர் கூறியவற்றையும் சொல்லி முடித்தாள்.

கோபத்தினால் முதலாளியின் முகம் ரத்தம் போல் சிவந்தது. "உன் பெயர் என்ன சொன்னாய்? விஜயாவா?" என்று பதற்றத்துடன் கேட்ட முதலாளி, அவளது கன்னத் திலே காணப்பட்ட சிறுகாய வடுவை வியப்புடன் உற்றுப் பார்த்தான். 'ஆமாம்' என்று தலையை ஆட்டிய விஜயா, கண்களைத் துடைத்துக் கொண்டு முதல் முதலாக அவனை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தாள். எங்

கேயோ கனவிலே பார்த்தது போன்று அவனது முகம் அவளுக்கு ஒரு பிரமிப்பை உண்டாக்கியது.

"உன் தந்தையின் பெயர் சிவானந்தம் இல்லையா?" ஆச்சர்யத்துடன் கேட்டான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்க விஜயா வாயைத் திறக்குமுன், "விஜயா! உனக்கு உன் அண்ணனைத் தெரியவில்லை? இருபது வருஷங்கள் கழித்துச் சந்தித்துக் கொள்கிறோம். அடையாளம் கண்டு கொள்வது சிரமம்தான்" என்றான் பரபரப்பாக.

"அண்ணா!" என்று வியப்புடன் கூறிய விஜயா, கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு விசித்து அழத் துவங்கினாள். உதவி பெறக் கூடாது என்று பிடிவாதமாக மறுத்திருந்த அண்ணனிடமே வேலைக்கு யாசகம் செய்யத் தன்னைக்கொண்டு வந்துவிட்ட விதியின் விபரீதத்தை எண்ணி அவள் அவமானத்தினால் துடித்துப் போனாள். சற்றுமுன் தன்னைச் துச்சமாகக் கருதிப் பேசிய மானேஜரின் சொற்களைவிட அண்ணனிடம் தான் வேலைக்கு யாசிக்க நேர்ந்தது அவளுக்குப் பெரும் அவமானமாக இருந்தது.

"என்னத்துக்கு அழுகிறாய். விஜயா" என அவன் எவ்வளவோ சமாதானப்படுத்தியும். பச்சிளங்குழந்தை போல் விஜயா வெகு நேரம் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்.

தியாகராஜன் புதிதாக வாங்கியிருந்த பங்களாவைச் சுற்றிப் பார்வையிட்டு விட்டு, தமயந்தியும் காந்திமதியும்

அப்பொழுதுதான் திரும்பி வந்தார்கள். 'உஸ்' என ஆயாசத்துடன் பெருமூச்செறிந்து கொண்டு மின்சார விசிறிக்கு அடியிலிருந்த பெரிய சோபா ஒன்றிலே சாய்ந்து கொண்டாள் காந்திமதி. அருகில் வந்து அமர்ந்த தமயந்தி, "பெரியம்மா! ரொம்பக் களைச்சுப் போயிட்டீங்களே, ஏதாவது கொஞ்சம் சூடாகச் சாப்பிடுகிறீங்களா?" என்று கனிவுடன் விசாரித்த வண்ணம் காந்திமதியின் முகத்திலே அரும்பி நின்ற வியர்வைத் துளிகளைத் தன் புடவைத் தலைப்பில் துடைத்து விட்டாள்.

"முன்போல ஓடியாடி வேலை செய்ய உடம்பிலே சக்தி இப்போது குறைஞ்சு போச்சு. ஒருவாட்டி அந்தத் தோட்டத்தைச் சுற்றி வரதுக்குள்ளே மூச்சே போயிடும் போல எனக்குத் தோணிச்சு. வயது கொஞ்சமா ஆகுது அம்மா? இந்த தைக்கு ஐம்பத்திரண்டு முடிஞ்சு போகுது. ம்!" என்றாள் அலுப்புடன் காந்திமதி.

"உங்களைப் பார்த்தால் யாரும் அவ்வளவு வயசுன்னு மதிக்கவே மாட்டாங்க, பெரியம்மா! இன்னமும் உங்கள் தலைமுடி அதிகமாக நரைக்கக் கூடத் துவங்கலையே!" என்று ஆச்சரியத்துடன் கூறிவிட்டு, தமயந்தி மிக்க உரிமையுடன் காந்திமதியின் மடிமீது தலையைச் சாய்த்துக் கொண்டு சோபாவில் படுத்துக் கொண்டாள்.

'தமா! காலை நோகுதாடா, கண்ணு? தோட்டத்தை அதிகம் சுத்திப் பார்க்க வேணாம்னு அதுக்குத் தான் சொன்னேன். கொஞ்சம் காலுக்கு எண்ணெய் தடவிப் பிடிச்சு விடட்டுமா?" என்று மிகவும் கவலையுடன் வினவினாள்.

'அதெல்லாம் ஒண்ணும் வேணாம், பெரியம்மா! கொஞ்ச நோவுது. ரொம்ப நேரம் நடந்தா கொஞ்ச நேரம் அப்படித்தான் நோவும். பிறகு சரியாயிடும்" என்று கூறிவிட்டு, காந்திமதியின் சிந்தனையைத் தன்

ஊனமான காலினின்று வேறு விஷயங்களுக்குத் திருப்பும் எண்ணத்துடன், "பெரியம்மா! பங்களா பார்த்தீங்களா? எவ்வளவு அழகு!" என்று கூறினாள் தமயந்தி

"ஆமாம், கண்ணு! ஒவ்வொரு பாகமும் நல்ல அழகும் அந்தமுமா அமைஞ்சு இருக்கு. உனக்கு நல்லா பிடிச்சிருந்தா சரிதான். அதிலே இருந்து குடித்தனம் பண்ணப் போற எஜமானி இனி நீதானே? இந்த பங்களா வாங்கின முகூர்த்தம் சீக்கிரம் வீட்டிலே கல்யாணம் நடந்து, நீங்க ரெண்டு பேரும் குடியும் குடித்தனமுமாக இருக்கணும். அவ்வளவுதான்' என்று ஆசீர்வதித்தாள் அவள்.

சங்கோஜத்தினால் சிவந்து போன தன் முகத்தைப் புடவைத் தலைப்பில் மூடிக்கொண்ட தமயந்தியின் உள்ளம் சில நிமிஷங்கள் ஆனந்தத்தில் தவித்துக் கொண்டது. "தோட்டத்திலே எத்தனை புஷ்பச் செடிகள்! மல்லிகை வகையிலே ஒரு டஜனுக்கு மேலே பல தினுசுகள் இருந்ததைக் கவனித்தீர்களா? இனி மேலே உங்க பூஜை அறையிலே மல்லிகை மணம் ஆளையே தூக்கியடிக்கப் போகுது, பார்த்துக்குங்க!" எனக் கேலியாகக் கூறினாள்.

"உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் எப்ப ஆகப் போகுதுன்னு நான் துடியாகத் துடிச்சுக்கிட்டுக் காத்திருக்கிறேன். கல்யாணம் ஆன அடுத்த நிமிஷம் இந்தக் கொத்துச் சாவியைத்தூக்கி உன் கையிலே ஒப்படைச்சுட்டு நிம்மதியாக காஷ்மீர், ராமேஸ்வரம் பார்க்கப் போயிடலாம்னு உத்தேசம்" என்றாள்.

"அப்படிப் போக உங்களை இங்கே யார் விடுவாங்கலாம்?" என்று கொஞ்சலாகக் கேட்ட தமயந்தி, தன் இரு கரங்களையும் நீட்டி, காந்திமதியின் கழுத்தை அணைத்துக் கொண்டாள். "எங்களை விட்டு நீங்க போகப் போவதாகத் திட்டமிட்டிருந்தால், நான்

கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விடுவேன். ஆமாம்!" என்று பயமுறுத்தலாகப் பரிகசித்த தமயந்தி புன்னகை செய்தாள்.

"அப்படியா! எங்கே தியாகராஜனைக் கட்டிக் கொள்ள மாட்டேன்னு என் மூஞ்சியைப் பார்த்துச் சொல், பார்க்கலாம்" என்று விளையாட்டாகக் கேட்ட காந்திமதி, தமயந்தியின் முகவாயை நிமிர்த்திக் கேட்டாள்.

"அப்படி நான் சொல்லிவிட்டால் என்னைக் கடுமையாகத் தண்டிச்சுடுவீங்க போலப் பார்க்கறீங்களே?" என்று கேட்டு விட்டு, மெல்லச் சிரித்த தமயந்தி, வாசலில் கார் வந்து நிற்கும் ஓசையைக் கேட்டு விட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

வேகமாக உள்ளே வந்த தியாகராஜன், அருகிலிருந்த ஆசனம் ஒன்றில் வந்து அமர்ந்து கொண்டான். 'தாயும் மகளும் ஏதோ பெரிய வாக்குவாதம் செய்து கொண்டிருந்தாப் போலக் காண்கிறதே. அதை எனக்குச் சொல்லக்கூடாதா?' எனக் கேலியாகக் கேட்டுவிட்டு, தொடர்ந்தாப் போல். "பங்களாவைப் பார்த்தியா, தமா? உங்கள் இருவருக்கும் பிடித்ததா?" என்று ஆவலுடன் கேட்டான்.

'எனக்குப் பிடிச்சா என்ன, பிடிக்காட்டி என்ன? தமாவுக்கும் உனக்கும் பிடிச்சிருந்தா சரி, இனி அதை ஆண்டு அனுபவிக்கப் போகிறது நீங்க ரெண்டு பேருந்தானே' என்று கூறிவிட்டு, காந்திமதியம்மாள் எழுந்திருந்தாள்.

தனக்கு ஏற்பட்ட சங்கோஜத்தையும் ஆனந்தத்தையும் கட்டுப்படுத்த முயன்ற தமயந்தி, தரை மீது பறந்து விழுந்த பத்திரிகைத்தாள் ஒன்றைப் பொறுக்கி எடுக்க முயற்சிக்கிறவள் போல் கீழே குனிந்து கொண்டாள்.

"இதோ உள்ளே போய் நான் ராஜாவுக்குக் காப்பி பலகாரம் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு காந்திமதி அம்மாள் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்று விட்டாள்.

'தமா!' என்ற கனிவு நிறைந்த குரலைக் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

'அத்தை சற்றுமுன் கூறியதைக் கேட்டாய் அல்லவா? அவர்கள் மனோபீஷ்டமும் என் மனத்திற்கு மிகவும் ஒத்ததாக இருக்கிறது. உன் மனத்தைப் பற்றி அறிய வேண்டியதுதான் பாக்கியாக இருக்கிறது. புதிய கிரகத் திலே என்னுடைய வாழ்வைப் புதுமையாகவும் இனிய தாகவும் ஆக்க என் வாழ்க்கையின் உற்ற துணைவியாக வேண்டும் என்று உன்னைக் கேட்டுக்கொள்கிறேன், உனக்குச் சம்மதம்தானே?" என்று கேட்டுவிட்டு. அவள் முகத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்தான்.

உள்ளமும் உடலும் பரவசமடைந்து போன தமயந்தி யால் பேச முடியவில்லை. ஆனந்த மிகுதியினால் அவள் கண்களில் லேசாக நீர் துளிர்த்தது. உணர்ச்சி வசத்தில் நெஞ்சம் படபடக்க, பேச முடியாது உதடுகள் மெல்ல அசைய அவள் மௌனமாக இருந்தாள். "என்ன தமா! சம்மதந்தானே?" என்று வற்புறுத்தும் தோரணையில் கேட்ட தியாகராஜன் ஆசனத்திலிருந்து எழுந்து அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

இதற்குள் தன் உணர்ச்சிகளை ஒருவாறு கட்டுப் படுத்திக் கொண்டு விட்ட தமயந்தி, 'ராஜ்! இந்த தினம் என் வாழ்விலே ஒரு சுப தினம் தங்களை மணந்து கொள்வதை விடப் பெரும் பாக்கியம் எனக்கு வேறு ஏதேனும் உண்டா? ஆனால்..." என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

"ஆனால் என்றால்...?" என வினவினாள் ஆவலுடன் தியாகராஜன்.

"ராஜ்! நான் 'சம்மதம்' என்று பூரண மனத்துடன் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் தங்களை மணைக்க நான் விரும்புவது, தங்களது தற்சமய அந்தஸ் திற்காகவாவது அல்லது தாங்கள் எனக்கு அளிக்கப் போகும் செல்வ சுகத்திற்காகவாவது அல்ல. இருபது வருஷ காலமாகத் தங்களுடன் சிறு வயதிலிருந்து நெருங்கிப் பழகியதனால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத அன்பினால், வாழ்வு முழுவதும் தங்களைப் பிரியாது ஒன்றுபட்டிருக்க ஆசைப்படுகிறேன். இந்த அழிக்க முடி யாத உண்மையை என்றாவது தாங்கள் சந்தேகிப்பதாகத் தெரிந்தால், அந்தத் துயரத்தைத் தாளமுடியாது, "என்றாள். உணர்ச்சியால் தடைப்பட்ட மெல்லிய குரலில்.

அவளது வார்த்தைகளால் மன இளக்கம் எய்திய தியாகராஜன், "தமா! உன்னை நான் அறியாதவனா? பலவருஷங்கள் நெருங்கிப் பழகிய நாம் ஒருவரை யொருவர் நன்கு அறிவோம் அல்லவா? என்னுடைய குணங்கள் என்னிடமுள்ள குறைகள் எல்லாம் உனக்கு நன்கு தெரியும். அதே போல் உன்னிடமுள்ள குற்றம் குறைகள், உனது நல்ல குணங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். நாம் ஒருவரையொருவர் நன்கு அறிவோம்; ஒருவரை யொருவர் நேசிக்கின்றோம். ஒன்றாக வளர்ந்த நம்மைத் தம்பதியாக்கிப் பார்த்து மகிழ அத்தையும் ஆசைப்படுகிறார்கள். ஆகவே, நம்மைவிடப் பொருத்த மான தம்பதி உலகிலேயே இருக்க முடியாது எனத் துணிவாகச் சொல்வேன். உனக்கேன் விபரீதமான, இல்லாத கவலைகள் எல்லாம்?" என வாத்சல்யமாகக் கேட்டான்.

நாணம் கலந்த புன்முறுவல் ஒன்று தமயந்தியின் மெல்லிய அதரங்களில் தோன்றி மறைந்தது "ராஜ்! நாம் ஒருவரை யொருவர் அறிவோம். இருந்தாலும் மனம் என்பது காலப்போக்கினால் பல சஞ்சலங்களுக்கு அடிமையாகலாம் அல்லவா? அதனால் என் மன உணர்ச்சிகளைத் தங்களிடம் ஒளிக்காது ஆரம்பத்திலேயே சொல்லிவிடத் துணிந்து விட்டேன். இரண்டாவதாக, ராஜ்! தங்களிடம் நான் கேட்டுக் கொள்ள வேண்டியது இன்னொன்று இருக்கிறது நாம் இருவரும் மிகவும் பொருத்தமான ஜோடி எனத் தாங்கள் அன்பு மிகுதியால் இப்பொழுது பேசுகிறீர்கள். என்னிடம் உள்ள ஒரு பெரும் குறை தாங்கள் அறிந்தது தான்" என்று கூறிவிட்டு, நீர் நிறைந்த கண்களால் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சந்தோஷமாகப் பேச வேண்டிய இந்த சந்தர்ப்பத்தில். நீ இல்லாத கற்பனைகளினால் மனத்தைச் சங்கடப் படுத்திக் கொள்கிறாய்!" என்று அன்புடன் கடிந்து கொண்டான் தியாகராஜன் பதிலுக்கு.

"மணந்து கொண்ட பிறகு என்றாவது ஒரு சமயம் என் கால் ஊனம் தங்களுக்கு ஒரு பெரும் குறையாகத் தென்படுமானால், அதை என்னால் சகிக்கவே முடியாது. நொண்டி எனத் தங்களால் அசட்டையாகக் கருதப்படு வதை விட நான் மரணத்தையே ஆசையுடன் ஏற்றுக் கொண்டு விடுவேன்" என்று கூறிவிட்டு, முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டாள் தமயந்தி.

மனவெழுச்சி மிக்க அடைந்த தியாகராஜன் மிக அருகில் அமர்ந்து, "தமா! 'கலாசாலையில் படித்தவள், என்னைவிட மிகவும் கெட்டிக்காரி, புத்திசாலி" என்றெல் லாம் நினைத்துப் பெருமையாக இருக்கிறேன். மகிழ்ச்சி யான இந்த சமயத்தில் 'சம்மதம்' என்று ஒரு வார்த்தை யில் உன் மனத்தை வெளியிட்டு என்னை ஆனந்தப் படுத்த முயற்சிக்காது, அசட்டுப் பெண் போல் கண்ணீர்

விட்டு என்னைக் கலங்கச் செய்கிறாயே! இது நியாயமா?" எனக் கேட்டான்.

"கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தமயந்தி, பதிலுக்கு லேசாகப் புன்னகை செய்துவிட்டு, "ராஜ்! நான் என்ன செய்யட்டும்? சிருஷ்டிகர்த்தா, சிறு உணர்ச்சிகளைக் கூடத் தாள முடியாது குழைந்து போய் விடும் மிக மென்மையான ஒரு உள்ளத்தை எனக்குத் தந்து விட்டான். அதிக ஆனந்தம் ஏற்பட்டாலும் சரி, அதிக துயரம் ஏற்பட்டாலும் சரி, நான் கண்ணீர் விட்டு அழுது விடுகிறேன்" என்று கூறிவிட்டு வெட்கத்துடன் சிரித்தாள்.

"அப்படியானால் என் பாடு மிகவும் சங்கடமானது என்று சொல், உனது கண்ணீர் ஆனந்தத்தைக் குறிக்கிறதா, துயரத்தைக் குறிக்கிறதா என்று ஒவ்வொரு முறையும் ஆராய்ந்தறிய ஒரு தனித்திறமை வேறு எனக்கு ஏற்பட வேண்டும் இல்லையா?" எனப் பரிகாசமாகக் கேட்டு விட்டு, "இப்பொழுது தற்சமயம் ஏற்பட்ட இந்தக் கண்ணீர் எதைக் குறிக்கறது?" என்று விளையாட்டாக வினவினான்.

"எல்லையற்ற ஆனந்தத்தை" எனப் பதிலளித்த தமயர்தி கன்னங்கள் இரண்டும் சிவக்க, பரிவுடன் அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு தட்டில் பலகாரமும், காப்பியும் எடுத்துக் கொண்டு அது சமயம் மெல்ல வந்த காந்திமதி அருகி லிருந்த மேஜை மீது அதை வைத்துவிட்டு, "புது வீட்டுக்கு பிரகப்பிரவேசம் பண்ணினால் இந்தத் தடவை, நம்ப உறவுக்காரர்களையெல்லாம் விடாமல் கூப்பிட்டுக் கொஞ்சம் விமரிசையாகச் செய்ய வேணும். நீ நல்லா சௌக்கியமா இருக்கிறதை எல்லாரும் பார்க்கணும்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

"அத்தை! உங்கள் இஷ்டப்படியே புது வீட்டு கிரகப் பிரவேசத்தை விமரிசையாகக் கொண்டாடுவோம். கிரகப் பிரவேசத்திற்குச் சில மாதங்களில், அந்த வீட்டில் தங்கள் மனம் மகிழும்படி எங்கள் திருமணத்தையும் விமரிசையாக நடத்த உத்தேசித்திருக்கிறேன், சரிதானே?" என்று கேட்டான் அவன்.

ஒரு கணம் விஷயம் விளங்காத காந்திமதி சஞ்சலத்துடன் விழித்தாள். அவளை நீண்ட நேரம் கலவரப் படுத்த விரும்பாத தமயந்தி, மிகவும் ரகஸியமான குரலில், "பெரியம்மா, எங்கள் திருமணத்தைப் பற்றித்தான் சொல்கிறார்! ராஜ் என்னை மணந்து கொள்ள விரும்பிக் கேட்டார். நானும் சரி என சம்மதித்து விட்டேன். தங்களுக்கும் சம்மதந்தானே?" என்றாள்.

"சம்மதத்தைக் கேட்கிறாயே! இதைவிட சந்தோஷமான சங்கதி எனக்கு வேறு என்னம்மா இருக்கு? நீங்கள் இரண்டு பேரும் என்னுடைய இரண்டு கண்கள் போல் அல்லவா? நீங்க ஒன்றுபட்டு வாழ்வதைக் காணுவது என்னுடைய பெரும் பாக்கியமாச்சே!" என்று ஆனந்தத்துடன் கூறிய காந்திமதி, தமயந்தியை இறுகத் தழுவிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு காந்திமதிக்கு திடீரென தன் வயோதிகத்தின் தளர்வு குறைந்து யௌவனம் புத்துயிர் பெற்று மீண்டும் திரும்பி விட்டது போல் ஒரு தெம்பான உணர்ச்சி ஏற்பட்டது. புதிய வீட்டில் குடி புகும் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாட வேண்டிய முஸ்தீப்புகளிலும், வரப்போகும் திருமணத்திற்காக முன்கூட்டியே செய்ய வேண்டிய பல ஏற்பாடுகளிலும் அவள் ஓய்வு ஒழிவின்றி ஈடுபட்டிருந்தாள்.

கிரகப் பிரவேசத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக தமயந்தி லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்தாள்.

முன்கூட்டியே பல ஏற்பாடுகளைக் கவனிக்க தமயந்தியுடன் காந்திமதி புதிய வீட்டிற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே புறப்பட்டுச் சென்று விட்டாள். வீட்டைக் கழுவுவதும், பெருக்கி சுத்தப்படுத்துவதும், ஜன்னல்களுக்கு விதவிதமான வர்ணத்திரை கட்டி அலங்கரிப்பதுமாக இவர்களுடைய பொழுது மிகவும் உற்சாகமாகக் கழிந்தது.

கிரகப்பிரவேசத்திற்கு முந்திய தினம் காலை அவசரமாக வெளியூரில் ஒரு காரியம் எனக் காரிலே புறப்பட்டுச் சென்றிருந்த தியாகராஜன் அன்று சாயங்காலம் பொழுது முழுவதும் திரும்பவில்லை. இருட்டி வெகு நேரம் ஆகியும் அவன் வராததைப் பற்றி தமயந்திக்கும் காந்திமதிக்கும் கவலை தாளவே முடியவில்லை. "விடிந்தால் கிரகப் பிரவேசம், ஊர் கூடிவிடும். இந்தப் பிள்ளையை இன்னமும் காணலையே. வழியில் காருக்கு ஏதாச்சும் ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்னமோ?" என்று கவலையுடன் தனக்குள்ளே முணுமுணுத்த காந்திமதி, வேலை மீது கவனம் செலுத்த முடியாது, உள்ளுக்கும் வாயிலுக்குமாக அடிக்கொரு தடவை நடந்து கொண்டிருந்தாள்.

இரவு வேகு நேரத்திற்குப் பிறகு பழக்கமான ஹாரன் ஓசை கேட்டதும், ஏக காலத்தில் திடுக்கிட்டு ஆவலுடன் தமயந்தியும் காந்திமதியும் எழுந்திருந்து வாயிற்பக்கம் சென்றார்கள்.

பங்களாவின் வாயிலில், அலங்காரமாகப் போடப் பட்டிருந்த பந்தலின் முன்னால் வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய தியாகராஜன், காரின் கதவைத் திறந்துவிட்டுக் கொண்டு யாருக்கோ காத்திருப்பதைக் கண்ட காந்திமதி ஆவல் தாளாது வாயிற்படிக்கு அப்பால் சென்று எட்டி தலையை நீட்டி உற்றுப் பார்த்தாள்.

பின் ஆசனத்தினின்று மூன்று பெண்களும் ஒரு புருஷனும் இறங்குகிதைக் கண்டதும், "யாரோ தியாகராஜனுக்குத் தெரிந்தவர்கள் போலிருக்கிறது" மறுநாள் விசேஷத்திற்காக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான்" என எண்ணி சற்று அசட்டையாக உள்ளே போகத் திரும்பிய காந்திமதி, தன் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்று விட்டாள்.

"காந்திமதி! என்னைத் தெரியவில்லையா? சௌக்கியந்தானே?" என விசாரித்துக் கொண்டு தனியே வரும், மூட்டையுடன் நுழைந்த, அந்த வயதான மனிதனை ஏற இறங்கப் பார்த்தாள். "நடந்ததை யெல்லாம் மறந்திடு, காந்திமதி. குழந்தை நல்லா சம்பாதிச்சு சீரும் சிறப்புமா இருக்கிறதை இந்தப் பாவி கண்ணாலாவது கண்டு சந்தோஷப்பட்டுப் போக வந்திருக்கிறேன். ஏ விஜயா, மோகனா! இங்கே வாங்கடி பெண்களா. இவதான் அத்தை. உங்கள் அண்ணன் வாழ்விலே விளக்கேத்தி வைத்த தெய்வம். நமஸ்காரம் புண்ணுங்கடி! இவள் தங்க மனசாலே உங்களை வாழ்த்தினா, நீங்க நல்லா இருப்பீங்க!" என்றாள் அமிர்தம்.

தன் பாதங்களில் விழுந்து கும்பிட்ட அந்த இரு பெண்களையும், அமிர்தத்தையும், தியாகராஜனையும் மாறி மாறிப் பித்தம் பிடித்தவள் போல் பார்த்து நின்ற காந்திமதியின் உள்ளத்திலே அது சமயம் ஒரு பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது.

"வாங்க, உட்காருங்க" என அவசரமாக உபசரித்து விட்டு, தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் நிமித்தம் உள்ளே வேகமாகச் சென்றாள்.

"என்ன பெரியம்மா!" என்ன ஒரு மாதிரி இருக்கிறீங்க. உங்கள் உடம்புக்கு என்ன?" எனப் பதட்டத்துடன் வினவிய தமயந்தி, அவளைப் பின் தொடர்ந்து வேகமாகச் சென்றாள்.

தொப்பென சோபா ஒன்றில் உட்கார்ந்து கொண்ட காந்திமதி, "தமா! ராஜாவின் காருக்கு வழியிலே ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டது என்று கவலைப்பட்டோமே. அது சரியாகத்தான் போயிற்று. ஆபத்து அந்தப் பாவி நமச்சிவாயத்தின் ரூபத்திலே இந்த வீட்டுக்குள்ளே வந்து புகுந்து விட்டதே! ஐயோ, நான் இனி என்ன செய்வேன்!" என்று தயக்கத்துடன் அரற்றினாள்.

பிறர் பேசிக் கொள்வதை ஒட்டுக் கேட்டறிய வேண்டும் என்ற ஆவலோ சுபாவமோ காந்திமதியிடம் கிடையாது. பெருந்தன்மை மிகுந்த அவளது மனத்தில் இத்தகைய இழிவான குணங்களுக்கு இடமே இருந்ததில்லை. அன்று மாலை, வழக்கம் போல் வீட்டிற்குத் தேவையான சாமான்களைத் தானே நேரில் சென்று வாங்கிவர, அவள் விஜயாவுடன் சென்றிருந்தாள். கடைத் தெருவிலிருந்து திரும்பி வந்ததும் களைப்புத் தாளமுடியாது சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளும் நிமித்தம், பின்கட்டிலிருந்த தனது அறைக்குள் சென்று படுத்துக் கொண்டிருந்தாள்.

அறையின் அருகிலேயிருந்த கூடத்தில் நமச்சிவாயம், அமிர்தம், மோகனா மூவரும் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். அருகில் இருக்கும் அறைக்குள்ளே காந்திமதி படுத்திருப்பதைச் சிறிதும் அறியாத அந்த மூவரும், சில காலமாக, அவள் மீது தங்கள் உள்ளத்திலே பொங்கி வழிந்து கொண்டிருந்த துவேஷத்தைக் காரசார

மான வார்த்தைகளால் விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள்.

கண்களை மூடிக்கொண்டு, விச்ராந்தியாகப் படுத்திருந்த காந்திமதி, அமிர்தம் தன் பெயரை அழுத்தம் திருத்தமாக உச்சரித்து ஏதோ ஆத்திரமாகப் பேசுவதைக் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். அமிர்தம் கூடத்துத் தரைமீது சுவரில் சாய்ந்து கொண்டு, காலை நீட்டியபடி உட்கார்ந்திருந்தாள். தனது நீண்ட ஜடையை முன்பக்கம் தோளின் மீது தொங்கவிட்டுக் கொண்டு, அதைத் தன் இடது கையால் செல்லமாகத் தடவியபடி, சோபா ஒன்றில் உல்லாசமாகச் சாய்ந்து கொண்டிருந்த மோகனாவின் முகத்தில் கோபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

வெள்ளித்தட்டு நிறைய இருந்த ஆப்பிள் துண்டுகளை எடுத்து அவசர அவசரமாகத் தின்று கொண்டு, ஊஞ்சலில் மெல்ல ஆடிக்கொண்டு, உட்கார்ந்திருந்த நமச்சிவாயத்தின் தோற்றம், கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் அக்கிராசனாபதி போல் தோன்றியது. அந்தக் காட்சியைக் கண்ட காந்திமதி, தன் மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் நிமித்தம் ஜன்னலினின்று தலையைத் தாழ்த்திக் கொண்டு படுக்கை மீது சாய்ந்து கொண்டாள்.

"நம்ப எல்லோரும் இங்கே சாப்பிடவும், இருக்கவும் தகுதியில்லாதவங்க போல, அவ நினைச்சிக்கிட்டுப் பேசுகிற பேச்சும், நடத்துகிற விதமும் என்னாலே சகிக்கவே முடியலை. அந்தக் காலத்திலே இந்தப் பாவிக்குப் பயந்துகொண்டு ஒரு நல்லது பொல்லாது ஒண்ணும் கொண்டாட முடியாது, நான் என் வாழ்க்கையை நடத்தி விட்டேன். சின்ன வயசிலேயே புருஷனாலே திரஸ்கரிக்கப்பட்டவள் வீட்டிலே இருக்கிறாளே, அவ மனசு கஷ்டப்படுமேயென்று நான் அந்தக் காலத்திலே ஒரு நல்ல புடவை கட்டினது கிடையாது; ஒரு நல்ல நகை

போட்டது கிடையாது. அந்தக் கஷ்டம் அவள் வீட்டை விட்டு ஒழிஞ்சதும் போயிடுச்சுன்னு நான் நினைச்சிருந்தா, இத்தனை காலம் கழிச்சுத் திரும்ப மறுபடியும் வந்திடுச்சே! இந்த வீட்டிலே இருக்கவும், சாப்பிடவும், அனுபவிக்கவும் எனக்கு உரிமையில்லையா? இவளை விட எனக்குப் பத்து மடங்கு உரிமை இருக்கிறது. ஊர், உலகம், நியாயம் எல்லாம் எனக்கு உரிமை இருப்பதை ஒப்புக் கொள்ளும். ஏதோ அதிர்ஷ்டவசமா இவ அந்தக் குழந்தைக்குக் கொஞ்சம் உபகாரம் செய்து விடும்படி நேர்ந்திடுச்சு. தியாகு மட்டும் வெளியே புறப்பட்டு ஓடிப் போகாம இருந்திருந்தா, அந்த உபகாரத்தை நம்ப செஞ்சிருக்க மாட்டமா?" என்று ஆத்திரத்துடன் கையை வீசிக் கொண்டு கேட்டாள் அமிர்தம்.

பெரிய ஆப்பிள் துண்டம் ஒன்றை அவசரமாகக் கடித்து விழுங்கி முடித்த நமச்சிவாயம் பலமாக மண்டை ஆட்டி, "நல்லாச் சொன்னே போ. தியாகு உருப்படியா ஒரு நல்ல நிலைக்கு வரணும்னு நீயும் நானும் எத்தனை பாடு பட்டோம்! ஞாபகம் இருக்கா உனக்கு? ஒரு நாள் ராத்திரி அந்தப் பயலுக்கு ஜ்வரம் வந்துட்ட போது வைத்தியர் வீட்டுக்கு கொட்டற மழையிலே நான் விழுந்தடிச்சுப் போய் கூட்டி வந்தேன். நீ மத்தக் குழந்தைகளுக்குச் சோறு போடக் கூட பொழுதில்லாம, அவனுக்குத் தவிடு வறுத்து ஒத்தடம் போட்டுக் கொண்டிருந்தியே! நம்ப எத்தனையோ செய்தோம், அதையெல்லாம் யார் இப்ப நினைச்சுப் பார்க்கப் போகிறாங்க?" என்று ஒரு சரடு விட்டான்.

அவன் கூறியது பச்சையான ஒரு பொய் என்பதை அமிர்தத்தின் நெஞ்சம் உணர்ந்தாலும், அவள் அதைப் பொருட்படுத்தாமல், "தாயாருக்கு இல்லாத சொந்தம் அத்தையம்மாளுக்கு வந்திடுச்சு. அடி நாளிலே இந்தப் பாவி என்னை ஆட்டிவச்சது போதாதுன்னு இப்ப வேறே

யல்லவா ஆட்டி வைக்க வந்திருக்கிறாள்? சாவிக் கொத்தை இடுப்பிலே சொருகிக்கிட்டு, தலைமுடியை அள்ளிச் சொருகிக்கிட்டு, ராணி போல வீட்டிலே அவ பண்ணுகிற அதிகாரம் கொஞ்சமா நஞ்சமா? இவ்வளவு சம்பாதிக்கிறானே ஒழிய, தியாகுவுக்கு ஒரு எழவும் தெரியல்லை. இவளை ஒரேயடியா நம்பி, பணப்பெட்டி சாவியைக் கூடக் கொடுத்திருக்கிறான். எதற்கும் 'அத்தை அத்தை'யின்னு சுத்தி வந்து நமஸ்காரம் பண்ணாத குறையா அடிபணிஞ்சு நிக்கிறான். தனக்கு இருக்கிற அதிகார கர்வத்திலே. இந்தப் பாவிக்கு என்னைக் கண்டா ரொம்பத் துச்சமா இருக்குது. அது கண்ணுலே கருநாகம் பிடுங்க! இன்னிக்குக் காலையிலே ஒரு லோட்டா பால் எடுத்து அவ முன்னாடி சாப்பிட்டேன். பாருங்க! சித்தப் பொழுதுக்கெல்லாம் வயிற்றை சுருட்டிப் பிடிச்சிக்கிட்டு ஒரே வலி வந்திடுச்சு. அவ பார்க்கிற பார்வையிலே நமக்கு நிம்மதியாக சாப்பிடக் கூடத் தோணை மாட்டேங்குது" என்றாள் அமிர்தம் ஆத்திரத்துடன்."

"ஆமாம் அம்மா! அத்தைக்கு ரொம்பப் பொறாமை குணம் இருக்கிறது. சிறிய வயதிலே புருஷனால் ஒதுக்கப் பட்டு விட்டவள் அல்லவா? பிறர் சந்தோஷமாக இருப்பதைக் காணச் சகிக்காத ஒரு துர்க்குணம் வந்துவிட்டது. முந்தாநாள், நான் அண்ணாவுடன் கடைக்குப் போயிருந்தேன். நான் ஆசைப்படுகிறேன் என்று அண்ணா எனக்கு சிகப்புக் கல் 'நெக்லஸ்' வாங்கிக் கொடுத்தார் அல்லவா! அதை நான் கடையிலேயே போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன், அன்று முழுவதும் என் கழுத்தை வெட்டுகிறவள் போல் அத்தை என்னைப் பார்த்து முறைத்ததை என்னால் மறக்கவே முடியாது. எத்தனையோ தடவை பேச்சோடு பேச்சாக 'நெக்லஸ்' எப்பொழுது வாங்கியது என்று அறிய பல கேள்விகள்

கேட்டுப் பார்த்தாள். நான் பதிலே சொல்லாது அழுத்தமாக இருந்து விட்டேன்" என்றாள் மோகனா கோபத்துடன்.

"இவளுக்கு என்ன வந்ததாம்? உன் அண்ணன் வாங்கிக் கொடுக்கிறான்; நீ போட்டுக் கொள்கிறாய்! ஏதடா, குழந்தை கண்ணுக்கு லக்ஷணமாக இருக்கிறாளே விதவிதமாக அலங்கரித்துக் கண் குளிரப் பார்ப்போம் என்று இல்லாட்டியும், நல்லா இருக்கிறதைப் பார்த்து வயிறெரிகிறாளே, பாவி, அவள் நாசமாப் போக!" எனக் கை விரல்களைக் கோபத்துடன் சொடுக்கி விட்டு தன் நாத்தியை மனசாரச் சபித்தாள். அமிர்தம்மாள்

"என்னைக் கண்டாலே அத்தைக்குப் பிடிக்கிறதே கிடையாது. நான் எது செய்தாலும் தப்புப் போல கண்டிக்க வந்து விடுகிறாள். அடுத்தாற்போல் அந்த நொண்டிப் பிணம் இருக்கிறதே, அதைக் கண்டதும் மட்டும் எப்படி அன்பு பீறிட்டுக் கொண்டு ஓடி வருகிறது பார்த்தீர்களா? 'தமா, தமா' என்று அழைக்கிற குரலிலே எத்தனை கனிவு! 'தமா தூங்கினாளா? தமா பால் சாப்பிட்டாளா'ன்னு அப்பப்பா! எத்தனை உபசாரம்! இந்த விஜயா இருக்கிறாளே. ரொம்ப சிநேகிதம். 'தமா ரொம்ப இனிமையான குணம் வாய்ந்த பெண். நல்ல ஸ்ட்சியங்கள், சிறந்த கொள்கைகள் கொண்டவள். படித்தவள். அடக்கமான சுபாவமுடையவள். அப்படி இப்படி'ன்னு வாய்க்கு வாய் புகழ்ந்து கொண்டு திரிகிறாள். அந்த நொண்டியும், இங்கே வரும்போதெல்லாம் 'விஜி! விஜி!'ன்னு தான் கூப்பிட்டுக் கொண்டு வருகிறாள். மற்றவர்கள் இருப்பது அவள் கண்ணில் சிறிதுகூடப் படுவதில்லை. தான் படித்தவள், உத்தியோகம் செய்கிறவள் என்ற கர்வம். என்னை லட்சியம் செய்து பேசுவதே கிடையாது" என்றாள் சினம் தணியாத உரத்த குரலில் மோகனா.

கடைசியாக, தட்டில் இருந்த பழத்துண்டத்தை ஒரே வாயில் காலி செய்து விட்டு. 'உம்! என்று அலட்சிய பாவத்தில் சப்புக் கொட்டினான் நமச்சிவாயம். "ஹீ! அது கிடக்கிறது. க்ஷாமதேவதை! படிச்சு விட்டதாம் படிச்சு! மூஞ்சியையும் முகரக்கட்டையும் சகிக்கலை பார்க்கிறதுக்கு. அது உடுத்தியிருக்கிற துணியும், அது செய்து கொண்டிருக்கிற அலங்காரமும். தியாகுவுக்குச் சொந்தமுனு சொல்லிக்கக்கூட யோக்கியதை கிடையாது. போன சனிக்கிழமை காலையிலே யாரோ ஒரு பெரிய மனுஷர் தியாகுவை 'பிஸினஸ்' சம்பந்தமாப் பார்க்க வந்திருந்தார். நான் தமாஷா அவர் வந்த கார் டிரைவரோட பேசிக்கிட்டு இருந்தேன். அப்போ இந்த நொண்டிச் சனியன் நம்ப வீட்டுப் பெரிய காரிலே ஆசிரமத்திலிருந்து வழக்கம் போல் வந்திருந்தது. அது காரைவிட்டு இறங்கியதைக் கவனித்த அந்த டிரைவர், என்கிட்டே ரகசியமா என்ன கேட்டான். தெரியுமா? 'இந்த வீட்டிலே வேலைக் காரிகளுக்குக்கூட கார் கொடுத்தனுப்பிச்சு வரவழைக்கிறாங்களே? தேவலையே' என்றான். அப்பா ஒரு நிமிஷம் எனக்கு அவமானத்திலே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகணும் போலிருந்தது." என்றான்.

அது சமயம் யதேச்சையாக அவர்களைத் தேடிக் கொண்டு அங்கே வந்து கொண்டிருந்த விஜயாவின் காதுகளில் அவளது வார்த்தைகள் அரைகுறையாக விழுந்தன. மாமா வழக்கம் போல் தனது சகுனி பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை விரைவில் உணர்ந்து கொண்ட அவள், "ஏன் அப்படியே செய்கிறது தானே? கை எச்சலாகி விடும் என்று தயங்கி விட்டீர்களோ?" என்று சுடச்சுடக் கேட்டாள்.

விறுக்கென ஆசனத்தினின்று நிமிர்ந்து உட்கார்ந்த மோகனா குறுக்கிட்டு, "அப்படி! இத்தனை நேரம் இந்த 'ஐந்தாம் படை'யைக் காணவில்லை என்று காத்துக்

கொண்டிருந்தோம். வந்து விட்டாய் சமயத்திற்கு!" என்றாள் எரிச்சலுடன்.

"மோகனா! ரொம்பவும் துள்ள வேண்டாம். கொஞ்ச நாவை அடக்கிப் பேசு. நான் ஒன்றும் ஐந்தாம் படை உத்தியோகம் செய்யவில்லை. நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கிறேன். அவ்வளவுதான்!" என்றாள் விஜயா.

"அத்தை பின்னாடி கன்றுக்குட்டி போல் ஓடிக் கொண்டு, நாங்கள் பேசுவதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியாது என நினைக்க வேண்டாம். அத்தை என்னை என்ன செய்து விட முடியும்? அவளைப் படைத்த கடவுள் வந்தால்கூட ஒன்றும் செய்ய முடியாது. ஆனாலும் உனக்கு இத்தனை இறிவான குணம் வேண்டாம். அந்த நொண்டிச் சனியனுடன் சிநேகிதம் செய்து கொண்டு, நீ எங்களுக்கு எதிரா நடப்பது கொஞ்சமும் நன்றாகவேயில்லை." என்று அதட்டினாள் மோகனா.

விஜயா பொங்கி எழுந்து கோபத்தை, உதட்டைக் கடித்துக் கொண்டு சிறிது கட்டுப்படுத்திக் கொண்டாள். நிதானமான குரலில், "மோகனா! தமயந்தியை நீ நொண்டி என்று கூப்பிடுவதை இன்றுடன் நிறுத்திக் கொள். இது அத்தை காதிலோ, அண்ணா காதிலோ பட்டால், பிறகு நீ மிகவும் வருத்தப்பட நேரிடும். மேலும் பிறரிடம் காணப்படும் அங்கஹீனத்தைப் பழித்துப் பேசுவது உன் போன்ற படித்த பெண்களுக்கு அழகா சொல்? தமயந்தியின் கால் ஊனமாகி விட்டதற்கு அவளா பொறுப்பாளி? மேலும், எந்த நிமிஷத்திலும் யாருக்கும் இத்தகைய ஒரு விபத்து ஏற்படலாம். ஏன், நாளைக்கே ஒரு கார் விபத்தில் உன் கால் ஓடிந்து போகலாம், என் கை நொண்டியாகி விடலாம். சிறிது நேரத்தில் என்ன நடக்கப் போகிறது என்று நமக்கு

அறிய சக்தியில்லை! அகம்பாவத்தில் கண்டபடி பேசிவிடுவது நல்லதல்ல" என்றாள்.

பதிலுக்கு முகத்தை வலித்த மோகனா, "அத்தை உனக்கு நல்லா தூபம் போட்டு வச்சிருக்காங்க! வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசறியே" என்றாள் ஏளனமாக.

"வக்காலத்துமில்லை. மண்ணாங்கட்டியுமில்லை. விஜயா பேசுகிறதையெல்லாம் நீ நம்பிவிடுகிறாயா மோகனா? அத்தை பக்கம் பரிஞ்சு பேசுகிறதைப் போல ஒரு நாடகம் இது. அத்தையம்மாளைக் கையில் போட்டுக் கொள்ள அப்படியெல்லாம் பேசி, காக்காய் பிடிக்கிறாள் செய், செய்... எப்படியாவது எல்லோரும் இந்த வீட்டிலே நிம்மதியா ஒற்றுமையா இருக்கணும். அதுதான் என்னுடைய ஆசை" என்று கூறி விட்டுக் கடகடவெனச் சிரித்தான் நமச்சிவாயம்.

"அதைக் கேட்ட விஜயாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வரவே, "மாமா, போதும் உங்கள் பரிகாசம்! காக்காய் பிடிக்கும் வேலையெல்லாம் உங்களுடையது. அத்தையைத் தாஜா செய்து ஆகவேண்டியது எனக்கு ஒன்றுமில்லை, உண்மையில் எனக்கு அத்தைமீது அவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வீண் பொறாமையில் உங்களுக்கு அவர்களுடைய உத்தம குணம் சிறிதும் தெரியவில்லை. கிரகப்பிரவேசத்திற்கு வந்ததாகக் கூறிக் கொண்டுவந்தோம். நடந்ததையெல்லாம் மறந்து விட்டு அத்தை நம்மை எவ்வளவு அன்பாய் உபசாரம் செய்தார்கள். நமது கஷ்டத்தை அம்மா எடுத்துக் கூறியதும், அண்ணா நம் அனைவரையும் வீட்டை விட்டு வெளியேற்றியிருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யவில்லை. அடி நாளில் அம்மாவும் மாமாவும் தெரிந்தோ, தெரியாமலோ செய்த பிசகையெல்லாம் மறந்து மன்னித்து விட்டார்கள். சென்று போன்றவைகளைப்

பற்றி வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்கிறார்களா? நமக்கு நியாயப்படி உரிமை இல்லாத இந்த சுகபோகத்தை நாம் இருந்து அனுபவிப்பதைப் பற்றி என்றாவது குறை சொல்லியிருக்கிறார்களா? வாய்க்கு வாய் அத்தையைப் பற்றி துச்சமாகப் பேசுவது தர்மமே இல்லை. மோகனா! நீ பேசுவதை ஊரார் கேட்டால், கட்டாயம் உன்னைப் போல் நன்றிகெட்ட பெண் இல்லை என்று தான் பழிப்பார்கள்" என்றாள்.

மோகனா தன் இடத்தை விட்டுத் துள்ளி எழுந்து நின்று கொண்டு, தன் சிவந்த முகத்தை மிடுக்காக ஒரு முறை குலுக்கிவிட்டு, 'நன்றி! அத்தையிடம் நான் எதற்காக நன்றி காட்ட வேண்டும்? ஊரார் சொல்ல மாட்டார்களோ? என்னைப் பற்றித் தவறாகப் பேசினால் நான் என்ன செய்வேன் தெரியுமா?" எனப் பல்லைக் கடித்தாள்.

"ஊரார் என்ன? சிநேகிதிகள் என நீ நம்பிக் கொண்டு நினைமும்! பங்களாவிற்கு அழைத்து, காப்பியும் டிபனும் கொடுத்துக் கொண்டாடும் உன் கலாசாலைத் தோழிகள் உன்னைப் பற்றிப் பின்னால் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பது தெரிந்தால், என்ன செய்வாயோ? உன் சிநேகிதிகளில் ஒருத்தி இன்னொருத்தியுடன் இன்று மாலை ஒரு புடவைக் கடையில் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். அவள் என்ன சொன்னாள், தெரியுமா? 'இந்த மோகனாவைப் பார்த்தாயா? தினமும் ஒரு மைசூர் ஜார்ஜெட் புடவை கட்டிக் கொண்டு பெரிய காரில் வந்து இறங்குகிறாள். பேசுகிற பேச்சும், நடத்தையும் தலைமுறை தலைமுறையாகச் செல்வத்திலே புரண்டு கொண்டிருந்தவள்போல் தொனிக்கிறதைக் கவனித்தாயா? நேற்று வரை கிழிந்த மில் புடவையும், கண்ணாடி வளையலுமாக, காலேஜுக்கு பஸ்ஸிற்காக வெயிலிலே காத்துக்கொண்டு நின்றது அவளுக்கு அறவே மறந்து

விட்டதே!' என்று கூறிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஊரார் அப்படித் தான் சொல்வார்கள். அவர்கள் மேல் குறை சொல்லிப் பயன்? உண்மையும் அதுதானே? என்றாள் விஜயா.

'அம்மா!' எனக் கிறீச்சிட்டு அலறிய மோகனா தொப்பெனத் தாயின் மடியில் போய் விழுந்து, தன் இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு, 'விஜயா கன்னாபின்னான்னு பேசுகிறதை நீங்க கேட்டுக்கிட்டு சும்மா இருக்கிறீங்களே. இவள் சொல்லிக்காட்ட வேண்டுமென ஆசைப்பட்டதை, வேண்டுமென்றே ஒரு சிநேகிதி மேல் சுமத்திப் பேசுகிறாள். நான் ஆசைப்பட்ட புடவைகளை உடுத்துவதையும் நகைகள் அணிவதையும் கண்டு இவளுக்குப் பொறாமை" என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

அமிர்தம் அன்புடன் தன் இளைய மகளைத் தழுவிக் கொண்டு, கோபத்துடன் விஜயா பக்கம் திரும்பி, ஆமாம்! உனக்கு உன் அத்தையைப் போல பிறர் வாழ காணச் சகிக்காத துர்க்குணம் ஜாஸ்தி. போ அப்பாலே. உன்னைப் பெத்ததற்கு...' என்று முடிக்காது நிறுத்தினாள்.

'அம்மா...' என்று திகைப்புடன் கூறிய விஜயாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ளவே, மேலே பேச முடியவில்லை கண்களில் நீர் பொங்க அவள் தன் தாயை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டு ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

அது சமயம் யாரோ இருமும் சப்தம் கேட்டு அனைவரும் வியப்புடன் அந்தத் திசையைப் பார்த்தனர். வாயிற்படி அருகில் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு, சினம் பொங்கும் முகத்துடன் காந்திமதியம்மாள் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும். நமச்சிவாயத்தின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. "இவ்வளவையும்

கேட்டுக் கொண்டு இருந்திருக்கிறாளே!" என்ற கிலியில், எழப்போகும் பூசலில் காந்திமதியையும் அமிர்தத்தையும் பங்கெடுத்துக்கொள்ளத் தனியே விட்டுவிட்டு, 'இந்த நாய் ஏன் இப்படிக் குரைக்கிறது? பையனிடம் அதுக்குப் பால் ஊத்தச் சொன்னேனே, மறந்துட்டானா எனன?' எனத் தனக்குள்ளேயே பேசிக் கொண்டு, குபீரென ஒரு பாய்ச்சலில் ஊஞ்சலை விட்டு எழுந்து, பங்களாவின் பின் பக்கத்தை நோக்கி ஓடி மறைந்தான்.

26

காந்திமதிக்கு அது சமயம் என்னவெல்லாமோ பேச வேண்டுமென்று நா துடியாகத் துடித்தது. வருஷங்கள் பல சென்றும், வாழ்க்கையிலே பல அனுபவங்கள் பெற்றும் அமிர்தம் குணத்தில் சிறிதும் அபிவிருத்தியடையாது, அதே பழைய அமிர்தமாக இருப்பதைக் காண அவளுக்கு ஏற்பட்ட வியப்பு கொஞ்சம் நஞ்சமல்ல. ஏழ்மையில் திண்டாடிக் கொண்டிருந்த அவர்கள் குடும்பத்தைத் தங்களுடன் வசிக்க சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்ட தியாகராஜன்பால் சிறிதும் நன்றியில்லாது, அவன் அவ்வாறு செய்தது தங்களுக்கு அவன் செய்ய வேண்டிய கடமையாகும் எனப் பொருள்பட அவள் பேசியதைக் கேட்டு காந்திமதி கோபத்தில் நெஞ்சம் பதைபதைத்துப் போனாள். எல்லாவற்றையும்விட, அவளது அன்பிற்குப் பாத்திரமான தமயந்தியின் கால் ஊனத்தை இடித்துக் காட்டி இழிவாகப் பேசியதை அவளால் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்கவே முடியவில்லை.

கட்டுப்படுத்த முடியாத சீற்றத்துடன் அறையினின்று வெளிப்பட அவளது கோபத்தைக் கண்ட அமிர்தம் கிலியுடன், எழப்போகும் பூசலில் தன் பக்கமிருந்து உதவி புரிய வேண்டும் என்ற பாவனையில் மோகனா வின் முகத்தைப் பரிதாபகரமாகப் பார்த்தாள்.

அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குற்றமுள்ள நெஞ்சு படபடவென்று துடிக்க, திரு திரு வென விழித்துக் கொண்டிருந்த அமிர்தத்தின் இளைய மகளின் வாய் வீச்செல்லாம் அத்தையைக் கண்டதும் பஞ்சாகப் பறந்தோடி விட்டது. பெரிய சண்டையாக வல்லவா முடிந்து விட்டது? இதை எப்படித் தடுப்பது? என்ற பிரச்சனையில் குழப்பமடைந்து போன விஜயா செயலற்று நின்று விட்டாள்.

தன் ஆத்திரம் தீர சுடச் சுட அமிர்தத்தை வசை மாறி பொழிய காந்திமதி வாயைத் திறக்குமுன் ஒரு சிறு சம்பவம் குறுக்கிட்டது.

"அத்தை!" என்று கனிவு நிறைந்த கம்பீரமான குரலில் அழைத்த வண்ணம் அப்பொழுதுதான் வெளியிலிருந்து திரும்பி வந்த தியாகராஜன் அங்கே வந்து கொண்டிருந் தான். களைப்பு நிறைந்த அவனது முகத்தைக் கண்ணுற்ற காந்திமதி, தன் உணர்ச்சிகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, வலுக்கட்டாயமாக ஒரு புன்னகையை மேற்கொண்டு, "என்ன ராஜா! இப்பத்தான் வரயா?" என வினவினாள்.

"ஆமாம், அத்தை! இன்று சீக்கிரமே ஆபீஸிலிருந்து திரும்பி விட்டேன். இன்றைக்கு மோகனா, விஜயா, தமா எல்லாரையும் ஒரு நாட்டியக் கச்சேரிக்கு நான் அழைத்துப் போகப் போகிறேன். தமா வருவதாக ஒப்புக் கொண்டு விட்டாள். அவள் ஒப்புக் கொண்டதற்காக இன்று மழை வந்தாலும் வரும். வீட்டில் இருக்கும்

மற்றவர்களையும் அழைத்து வர வேண்டுமென்று கேட் டுக் கொண்டாள். அதனால் எல்லோருக்கும் சேர்த்து டிக்கெட் வாங்க ஏற்பாடு செய்து விட்டேன். நீங்களும் கூட வர வேண்டும். தெரிந்ததா?" என்றான் சந்தோஷத் துடன்.

"நீங்க எல்லோரும் போய் வாங்க. நாங்க எதற்கு? எனக்கு நாட்டியம் கீட்டியம் எல்லாம் பிடிக்காதப்பா. மேலும் வீட்டு வேலை தலைக்கு மேலே கிடக்கு. சரி ஏதாவது கொஞ்சம் காப்பி பலகாரம் சாப்பிடுகிறாயா? நான் போய்த் தயார் செய்கிறேன்" என்று கூறி விட்டு வேகமாகச் சமையற்கட்டை நோக்கித் திரும்பினாள்.

"மோகனா! நீ வருகிறாய் அல்லவா! நீ கூட அத்தை யைப் போல் சாக்குப் போக்கு சொல்லப் போகிறாயா?" என்று பரிகாசமாகக் கேட்ட தியாகராஜன், மோகனா வின் சிவந்த கண்களைப் பார்த்துவிட்டுத் திகைப்புடன், 'இதென்ன என்ன நடந்தது? அழுது கொண்டிருந்தாயா? என்ன விஷயம்?" எனப் பரிவுடன் விசாரித்தான்.

அவர்கள் ஏதாவது கூறி வீண் மனஸ்தாபத்தை உண்டாக்கி விடப் போகிறார்களே என்ற பயத்தில் விஜயா குறுக்கிட்டு. "இல்லை, அண்ணா! வந்து..." என்று மென்று விழுங்கினாள். நடந்த விஷயங்களை அது சமயம் கூறி தியாகராஜன் மனத்தை நோகச் செய்ய காந்திமதிக்கு விருப்பமில்லை. 'வீணாக அவர்கள் நன்றியற்றவர்களாக இருந்தாலும், தங்கைகள், தாயார், மாமா என்று அவன் மதிப்பும் பிரியமும் வைத்திருக் கிறான். போகட்டும். அதை ஏன் நாம் நடந்ததைச் சொல்லிப் பாழ்படுத்த வேண்டும்?' என்று தன் மனத்திற் குள் எண்ணி இரக்கமடைந்த காந்திமதியின் கோபம், இருந்த இடம் தெரியாது மறைந்து விட்டது. ஆகவே அவள், "என்னவோ பழைய நாள் ஞாபகம் வந்தது.

அப்பாவை நினைச்சுக் கொண்டு குழந்தை வருத்தப் பட்டா. வேறே ஒண்ணுமில்லை" என்றாள்.

காந்திமதி ஏதாவது சொல்லி விடப் போகிறாளே என நடுங்கிக் கொண்டிருந்த அமிர்தம், இதைக் கேட்டதும் தன்னையே நம்ப முடியாது விழித்தாள்.

இறந்துபோன தந்தையை எண்ணி ஒரு கணம் இரக்க வசப்பட்ட தியாகராஜன் மனம் மிகவும் இளகியது. மோகனா அருகில் தரையில் உட்கார்ந்து கொண்டு, "மோகனா! அதெல்லாம் ஏன் நினைச்சு மனம் கஷ்டப்படுகிறே? அப்பாவுக்கு மேலே பல மடங்கு பிரியத்துடன் உன்னைக் கவனிச்சுக்க நான் தான் இருக்கிறேனே. மூஞ்சி சிவக்க இப்படியா அழுவாங்க? எழுந்திரு! முகத்தைக் கழுவிக் கொண்டு, அழகாக டிரெஸ் செய்து கொண்டு கிளம்பு, பார்க்கலாம்" என்று அன்புடன் சமாதானம் செய்தான்.

காந்திமதி அதற்கு மேல் ஒன்றும் பேச இஷ்டப்படாது அங்கிருந்து சமையற்கட்டை நோக்கிச் சென்றுவிட்டாள்.

மின்னல் பொழுதிலே மோகனாவிற்கும் அமிர்தத் திற்கும் இடையே கண்களால் ஒரு சிறு சம்பாஷணை நடந்தது. 'சரி: இப்பொழுது ஒண்ணும் பேச வேண்டாம். அண்ணன் சொல்கிறபடி வெளியே கிளம்பு. பின்னால் பார்த்துக் கொள்ளலாம்' என அமிர்தம் விரைவில் தன் கண்களால் மகளுக்கு ஜாடை செய்தாள்.

நடக்கவிருந்த பெரிய சண்டையை அத்தை பெரிய மனசுடன் தடுத்துவிட்டதை எண்ணி மனவெழுச்சி மிக்க அடைந்த விஜயா, அத்தையைப் பின் தொடர்ந்து கொண்டு சென்றாள். சமையலறையிலே மௌனமாகப் பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்த காந்திமதிக்குப் பின்னால் வந்து நின்ற அவள் உணர்ச்சிப் பெருக்கால் சிறிது நேரம் பேசவே முடியவில்லை. கண்களில் நீர்

தளும்ப, நெஞ்சை உணர்ச்சி கவ்விக்கொள்ள, தழுதழுத்த குரலில் அவள் மெல்ல 'அத்தை!' என்று அழைத்தாள்.

காந்திமதி திரும்பிப் பார்த்ததும், 'அத்தை! உங்கள் மனம் எவ்வளவு பரிசுத்தமானது என்று இன்றுதான் அறிகிறேன்! அண்ணாவிடம் குற்றம் சாட்டி, வீட்டில் கலகம் உண்டாகக் கூடாது எனச் சாதுர்யமாகத் தாங்கள் தடுத்து விட்டீர்கள். இவ்வளவு நல்ல குணம் உள்ள உங்களை நன்றியில்லாமல் அம்மாவும் மாமாவும் தூஷணையாகப் பேசி விட்டார்கள். அத்தை! யார் உங்களை நன்கு புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளா விட்டாலும் உங்களை நான் உணர்ந்து கொண்டு விட்டேன். என் பொருட்டு, அறியாமையினால் தூஷணை செய்த என் தாயையும் சகோதரியையும் நாங்கள் மன்னிக்க வேண்டும். நன்றியற்ற அவர்களது தூர்க்குணத்தை நினைத்து அவமானத்தினால் என் மனம் பதறுகிறது அத்தை. நடந்ததையெல்லாம் நீங்க மனத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது" என்று நாத் தடுமாற, கண்களில் நீர் பெருக இறைஞ்சிக் கேட்டாள்.

சுபாவத்தில் கருணைமிக்க காந்திமதியின் உள்ளம், விஜயாவின் மன வேதனையைக் கண்டு மிகவும் நெகிழ்ந்துவிட்டது. 'சே, அசடே! என்ன நடந்துவிட்டது? நீ ஏன் இப்படி அலட்டிக்கிறே? ஒரு குடும்பத்திலே இப்படியும் அப்படியும் பல தினுசு இருக்கும். அதை யெல்லாம் பாராட்டலாமா? முகத்தைக் கழுவிக் கொண்டு, தலையை அழகாக வாரிகிட்டு நீயும் நாட்டியக் கச்சேரிக்குப் போயிட்டு வாப்பா, கண்ணே!" என்று தேற்றியபடி விஜயாவை அணைத்துக் கொண்டு, அவளது கண்ணீரை அன்புடன் தனது முந்தானையால் துடைத்து விட்டாள்.

பங்களாவின் தோட்டத்திற்குள்ளே நழுவி ஓடிய நமச்சிவாயத்திற்கு வெகு நேரம் பயத்தில் உடல் நடுங்கிக்

கொண்டிருந்தது. தனக்கு ஒன்றும் சம்பந்தம் இல்லை போல் சண்டையிலிருந்து விலகி ஓடிவிட முயற்சித்துக் கொண்டு தோட்டத்தின் பக்கம் நடையைக் கட்டி விட்டாலும், அவன் நெஞ்சும் மார்பும் பக்பக் என அடித்துக் கொண்டன. பின்பக்கம் இருந்தபடியே, பங்களா வாயிலில் தியாகராஜன் கார் வருவதைக் கண்டு விட்டான் 'சரிதான் இனி தொலைந்தது போல்தான்' எனத் தனக்குள்ளே பயத்துடன் சொல்லிக்கொண்டு அவன் ஓட்டமும் நடையுமாக, பங்களாவில் தான் வசிக்க பிரத்தியேகமாக அவன் உபயோகித்துக் கொண்டிருந்த 'அவுட்ஹவுஸிற்குச் சென்றான்.

அமிர்தம் எவ்வளவோ வற்புறுத்தியும், தியாகராஜன் உபசாரம் பல செய்தும் நமச்சிவாயம், பங்களாவிற் குள்ளே தனது வாசஸ்தலத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்பாது, பங்களாவின் தோட்டத்து ஒரு பக்கத்தில் ஒதுப்புறமாக அமைந்திருந்த சிறு வீட்டைத் தான் வசிக்க ஏற்ற இடமாக மாற்றிக் கொண்டான். அதற்குத் தகுந்த காரணம் இல்லாது போகவில்லை. செல்வத்தின் சுகத் திலே வந்து வசிக்க சந்தர்ப்பம் கிடைத்ததும், நமச்சிவாயத் திற்குப் பலவிதமான சபலங்கள் ஏற்படலாயின. தனது அந்தரங்க ஆசைகளையும், தனது நடவடிக்கைகளையும் காந்திமதியோ, தியாகராஜனோ கண்டுவிடக் கூடா தென்பதற்காகவே அவன் அவ்வாறு ஒதுக்குப்புறமாக வசிக்க முற்பட்டிருந்தான்.

மூச்சு வாங்க ஓடி வந்து தனது பிரத்யேக அறையின் நடுவே கிடந்த சாய்வு நாற்காலியில் தொப்பென விழுந் தான் நமச்சிவாயம். முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளை அங்கவஸ்திரத்தினால் துடைத்துக் கொண்டு, சந்தர்ப்பத்தை எவ்வாறு சமாளிக்கலாம் என்ற யோசனை யுடன் எதிரே தெரிந்த சுவரை அண்ணாந்து பார்த்தான்.

வரிசையாக சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பிரபல சினிமா பெண் நக்ஷத்திரங்களின் படங்கள் ஒவ்வொன் றும் அவனது அசம்பாவித நிலையையெண்ணி பல்லைக் காட்டி நகைப்பதைப் போல் அவனுக்கு பிரமை யுண்டாக்கியது. காந்திமதியம்மாள் அவனது பிரத்தியேக வாசஸ்தலத்தை ஒரு முறைகூட கண்களால் தரிசித்ததே கிடையாது. அவள் அவ்வாறு பார்க்க நேரிட்டிருந்தால், ஒரு சமயம் நமச்சிவாயம் அவ்வளவு ஆடம்பரமாக அங்கே தனி வாழ்க்கை நடத்தியிருக்க சாத்தியப்பட்டிருக் குமோ என்னவோ?

பங்களாவில் தியாகராஜன் படுக்கையறையில் காணப் பட்ட அதே மாதிரியானதொரு பெரிய கட்டிலும், மிருதுவான படுக்கையும் நமச்சிவாயத்தின் பிரத்தியேக அறையிலும் காணப்பட்டன. ஜன்னல்கள்கூட அதே விதமான மெல்லிய நீல நிறத் திரைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. சுவரில் அடிக்கப்பட்டிருந்த ஆணிகளில், விதவிதமான வர்ணங்களில் சரிகைக் கரைகள் போட்ட விலையுயர்ந்த அங்கவஸ்திரங்களும், அதற்கு உகந்த பட்டு ஜிப்பாக்களும், தொங்கிக் கொண்டிருந்தன. படுக்கையில் எதிர்ப் பக்கத்திலே முழு உருவம் தெரியும் ஒரு நிலைக் கண்ணாடியும் அதை ஒட்டிய மேஜை மீது சோப்பு, வாசனைத் தைலம், ஸெண்ட் பாட்டில்கள் போன்ற அலங்காரப் பொருள்களும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

படுக்கைக்கு இடதுபுறத்திலே காணப்பட்ட சிறு அலமாரிக்குள், "எப்பொழுதும் யௌவனமாக இருப்பது எப்படி?" "மீண்டும் வாலிபம்" யோகப்பியாச முறைகள்" "கூந்தல் வளரும் தைலங்கள் செய்யும் முறை" இவை போன்ற புத்தகங்களும், சில திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட துப்பறியும் நவீனங்களும் அடுக்கி வைக்கப் பெற்றிருந்தன. அறையின் மூலையிலிருந்த பெரிய

பீரோவின் ஒவ்வொரு தட்டுகளிலும் இன்னும் பல வருஷங்களுக்குத் தேவையான அளவு வேஷ்டிகளும், சட்டை, அங்கவஸ்திரங்கள் முதலியனவும் திணித்து வைக்கப்பட்டிருந்தன.

கட்டிலுக்கு அடியே கிடந்த ஒரு பெரிய கடையில் வேண்டிய போதெல்லாம் எடுத்து, புசித்து, பசியை ஆற்றிக்கொள்ள ஆப்பிள் பழங்களும் ஆரஞ்சுகளும், ரொட்டி பிஸ்கட் போன்ற தின்பண்டங்களும் நிறைந் திருந்தன.

சாய்வு நாற்காலியருகிலே கிடந்த சிறு முக்காலி மீது வைத்திருந்த வெள்ளி சிகரெட் டப்பாவை எடுத்து, நடுங்கும் விரல்களுடன் திறந்தான் நமச்சிவாயம். தியாக ராஜன் உபயோகித்த அதேவித உயர்ந்த சிகரெட்டுகளில் ஒன்றை உருவியெடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

இவ்வளவு ஆடம்பர வாழ்க்கையை நடத்திய அவனுக்கு இவைகளைச் சேகரித்துக்கொள்ள சிறிதும் சிரமம் இருக்கவில்லை. தியாகராஜனது பிரத்தியேக அறைக்குள்ளோ அல்லது ஆபீஸ் அறைக்குள்ளோ போகும் சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுதெல்லாம், யாரும் காணாத சமயம் லபக்கென மேஜை மேல் காணப்படும் சிகரெட் பெட்டிகள், மிகுதியான சில்லறைகள் முதலி யன அவளது சட்டைப் பைக்குள் சென்று மறைந்து விடுவது வழக்கம். மேலும், அமிர்தம்மாளுக்கு வைத்தியம் செய்ய பல டாக்டர்களிடம் அழைத்துச் சென்றதாகக் கூறி அப்போதைக்கப்போது தியாகராஜனிடம் மருந்திற் காகவும் டாக்டர் 'பில்' லுக்காகவும் பெற்ற பெருந் தொகைகளில் பாதியைத் தன் செலவிற்கு தாராளமாக உபயோகிக்க அவன் தவறியதேயில்லை. நிம்மதியாக உடலை அலட்டிக் கொள்ளாது உல்லாசமாக வாழ்ந்த இந்த இன்ப வாழ்விற்கு பங்கம் வரும்படி நாக்கை

அடக்காது கண்டபடி பேசிவிட்டோமே, தியாகராஜனுக் குக் கோபம் வந்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட்டால் என்ன செய்வது, என எண்ணிக் கலங்கிய நமச்சிவாயம், தன் முன்னே வந்து வாலையாட்டிக் கொண்டு நன்றியுடன் நின்ற இரு நாய்களையும் கவனிக்கவே இல்லை.

பல வருஷங்களாகத் தனி வாழ்க்கை நடத்தியதால் உள்ளத்திலே குவிந்து கிடந்த அவனது அந்தரங்க ஆசையை சில நாட்களாக அவன் தான் வளர்த்த இரு பெரும் வேட்டை நாய்கள் மீது செலுத்தியிருந்தான். ரோஜா, மல்லி என முறையே செல்லப் பெயரிட்டு பாலும் ரொட்டியும், வெண்ணெயும் தன் கையாலே ஊட்டி மிகவும் செல்லமாகக் குழந்தைகளைப் போல் அவைகளை வளர்த்து வந்திருந்தான். காந்திமதியம் மாளுக்கு நாய்கள் பூனைகள் போன்ற மிருகங்களைக் கண்டாலே பிடிக்காது. அவள் ஏதாவது ஆக்ஷேபணை செய்து தடுத்துவிடப் போகிறாளே என்ற பீதியில், பங்களாவைத் திருடர்களிடமிருந்து காப்பாற்ற நாய்கள் மிகவும் அவசியம் என்று தியாகராஜனிடம் வற்புறுத்திக் கூறி, அவைகளை வளர்க்க அனுமதி பெற்றிருந்தான். மிருகங்களைக் கூட்டோடு வெறுக்கும் காந்திமதியின் கண்களில் அவைகள் தென்படாதிருக்க, அவைகள் இரண்டையும், பங்களாவிற்குள் நுழையாதபடி, தோட் டத்திலே மட்டும் உலாவி வரும்படி மிகவும் ஜாக்கிர தையுடன் வளர்த்து வந்திருந்தான்.

நமச்சிவாயத்தின் மனநிலையை ஊகித்து உணர்ந்து விட்டன போல், ரோஜாவும் மல்லியும் நாற்காலியின் இரு பக்கங்களிலும் முறையே வந்து நின்று கொண்டு தங்கள் முகத்தை அவன் முன்னால் நீட்டி, 'ம்!ம்!' என்று முனகிக் கொண்டு அவனைத் தேற்ற முயற்சித்தன.

நாக்கை நீட்டிக்கொண்டு முகத்தை அருகில் கொண்டு வந்த அந்தப் பிராணிகளைக் கண்டு அருவருப்புடன் துள்ளி எழுந்த நமச்சிவாயம், "சே, சனியன்களா! அப்பாலே போங்க! மனுஷன் படற அவதி தெரியாம வந்து கொஞ்சுதுகள் பீடை!" என எரிந்து விழுந்தான்.

நாய்கள் இரண்டும் இரக்கத்துடன் அவனைப் பார்த்து விட்டு, தயக்கமாக வெளியே சென்றன.

அது சமயம், பங்களாவிலிருந்து வந்த வேலைக்காரன் "ஐயா, உங்களை எஜமான் கூப்பிடுறாங்க" என்றான்.

"எஜமான் கூப்பிடுகிறாரா!" என்று திகைப்புடன் கேட்ட நமச்சிவாயம், கால் சோர்ந்து தள்ளாடியபடி தொப்பென நாற்காலியில் மறுபடியும் சாய்ந்து விட்டான். "உடனே வரச்சொன்னாங்க" என்று அவனது பயத்தை மேலும் அதிகப்படுத்தி விட்டு வேலைக்காரன் சென்று விட்டான்.

"சரி, இன்று நாம் தொலைந்தோம்!" என்று தனக்குள்ளே கூறிக்கொண்டே நமச்சிவாயம் மெல்ல ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, தியாகராஜனைச் சந்திக்க பெருந்திகிலுடன் பங்களாவின் ஹாலை நோக்கித் தள்ளாடிக் கொண்டு சென்றான்.

ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்த தியாகராஜன் அவனைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் திரும்பி, "மாமா! சும்மாதான் கூப்பிட்டு அனுப்பினேன். நாங்கள் எல்லோரும் ஒரு நாட்டியக் கச்சேரிக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறோம். நீங்களும் வருகிறீர்களா!" என்று உற்சாகமாக வினவினான்.

எதிர்பாராத இந்த வரவேற்பில் ஸ்தம்பித்துப் போன நமச்சிவாயத்திற்குக் குழப்பத்தில் பதில் அளிக்க ஒன்றும் தோன்றவில்லை.

"எனக்கென்னத்துக்குப்பா நாட்டியம் கீட்டியம் இதெல்லாம்?" என ஏதோ வாயில் வந்ததைப் பதிலுக்கு உளறினான்.

அவனது நிலைமையைச் சமாளிக்க உதவுகிறவள் போல் உள்ளிருந்து வேகமாக வந்த அமிர்தம், "ஏன் அண்ணா! நீங்களும் வாங்க, குழந்தை ஆசைப்பட்டுக் கூப்பிடுகிறான். எல்லோரும் ஒருநாள் சேர்ந்து போய்ப் பார்த்திட்டுத்தான் வருவோமே! போய் சீக்கிரம் உடை மாத்திக்கிட்டு வாங்க" என்று எச்சரிக்கும் பாவனையில் கூறினாள்.

வியப்புடன் திரும்பத் தோட்டத்திற்குள் தனியே சென்ற தமயனைப் பின் தொடர்ந்த தங்கை, "என்னவோ ஏதோன்னு பயந்துட்டீங்களா? நான்கூட முதல்லே அப்படித்தான் பயந்தேன். தியாகுவைக் கண்டதும் அவள் நடுநடுங்கி வாயை மூடிக்கிட்டா; நம்ப பேசினதிலே நியாயம் இல்லாதிருந்தா அவன்கிட்ட மூட்டிக் கொடுக்காம வாயை மூடிக்கிட்டிருந்திருப்பாளா? தியாகு அவ பேச்சை ஒண்ணும் காதிலே போட்டுக்க மாட்டான்னு அவளுக்கே தெரியும். அதனாலே காளி போல சண்டை போட உள்ளேயிருந்து ஓடி வந்தவ, அவனைக் கண்டதும் பெட்டிப் பாம்பா அடங்கிப் போய்விட்டாள். இந்த அமிர்தம்மாகிட்ட ஒண்ணும் அவ ஜம்பம் பலிக்காது. தெரிஞ்சுக்கட்டும் அதை அவள்!" என்று கர்வத்துடன் கையை ஆட்டிப் பேசினாள்.

"அப்படியா சங்கதி!" என்று தலையை ஆட்டிய நமச்சிவாயத்திற்கு உற்சாகம் தாள முடியவில்லை. பதினைந்து வயது பாலகனைப் போல் ஒரே துள்ளலில் தன் அறையைச் சென்று அடைந்த அவன், பரபரப்பாகக் கண்ணாடி முன்பு போய் உட்கார்ந்து கொண்டு தன்னை அலங்கரித்துக்கொள்ளத் துவங்கினான்.

காந்திமதியிடம் பயப்பட வேண்டாம் என்ற நம்பிக்கையானது அவனது உள்ளத்தைக் குதூகலத்தில் ஆழ்த்திடவே அவன் மிதமிஞ்சிய உற்சாகத்துடன் 'மல்லி! ரோஜா! வாங்க இங்கே" என ஆசையுடன் தன் இரு அருமை நாய்களையும் உரத்த குரலில் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

நாளை என்பதைப் பற்றிய கவலை சிறிதும் இன்றி செல்வத்தின் சுகத்திலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் விஜயாவின் மனத்தில் சந்தோஷம் நிறைந்து இருக்க வில்லை. தன் உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் கவர்ந்து கொண்டிருந்த மனோகரனைப் பற்றி அடிக்கடி எண்ணி, தனக்குள்ளே சஞ்சலப்பட்டுக் கொண்டு அமைதியின்றி வாழ்ந்து கொண்டிருந்தாள். தங்களது காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்த அமிர்தம், மோகனா இவர்களுக்கு விஜயாவின் மனச்சஞ்சலம் சிறிதும் புலப்படவில்லை. ஆனால், சில காலமாக அவளுடன் நெருங்கிப் பழகி, நட்புரிமை பாராட்டி வந்த தமயந்திக்கு மட்டும், தன் சிநேகிதி ஏதோ ஒன்றை மனத்தில் வைத்துக் கொண்டு வெளியே சொல்ல முடியாது தவித்துக் கொண்டிருக்கிறாள் என்று குறிப்பாகத் தெரிந்து விட்டிருந்தது. ஆனாலும், அவள் மரியாதையை உத்தேசித்துத் தன் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டு அதைப்பற்றிக் கேட்டு அறியத் துணிவின்றி வாளா இருந்து விட்டாள்.

ஒரு நாள் மாலை தமயந்தியும் விஜயாவும் தங்களுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கும் நிமித்தம்

கடைத் தெருவுக்குச் சென்றிருந்தார்கள். துணிக்கடை ஒன்றில் தங்களுக்குத் தேவையான சில ரகங்களை பேரம் பேசி வாங்கிக் கொண்டிருந்த தமயந்தி, "மிஸ் விஜயா! என்ன ஆச்சரியம்! நீங்கள் இந்த ஊரிலா இருக்கிறீர்கள்?" என்று யாரோ மிகவும் சகஜமாக விசாரிப்பதைக் கேட்டு சப்தம் வந்த திசையில் தன் திருஷ்டியைத் திருப்பினாள். நெற்றி மீது சுருளாகப் புரண்டு கொண்டிருந்த கிராப்புச் சிகையும், களை பொருந்திய முகமும், கம்பீரமான தோற்றமும் கொண்ட ஓர் ஆடவன், இடது கையைத் தன் கோட்டுப் பைக்குள் நுணித்துக் கொண்டு வலது கரத்தால் தான் அணிந் திருந்த 'டை'யைச் சரிப்படுத்திக் கொண்டவாறு நின்று கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் விஜயா மிகவும் பரபரப் படைந்து போனாள். அவள் தடுமாற்றத்துடன் கையி லிருந்த அழகுப் பையைக் கீழே தவறவிட்டு, அவசரமாகக் குனிந்து அதை எடுத்துக் கொண்டாள். "ஆமாம், இங்கே தான் வசிக்கிறோம், நீங்கள் அதே கம்பெனியில் தானே இருக்கிறீர்கள்? பார்த்து வெகு நாளாயிற்று!" என்று அவனது கேள்விகளுக்கு அவள் பதிலளித்தாள்.

"முன்னதாகவே ஒருவரையொருவர் அறிந்தவர்கள் போலிருக்கிறது." என ஊகித்துக் கொண்ட தமயந்தி, அவர்களது சம்பாஷணையில் குறுக்கிட விருப்பமில்லாது தனது காரியங்களைக் கவனிக்கலுற்றாள்.

"தமா!" என்று அன்புடன் அழைத்தவண்ணம் நெருங்கி வந்த விஜயா, தாழ்ந்த குரலில் "இவர் தான் மிஸ்டர் மனோகரன், நான் முன்பு வேலை செய்து வந்த கம்பெனி யில், மருந்து விற்பனை செய்யும் பகுதியில் வேலை பார்த்து வரும் ரஸாயன நிபுணர்" என அந்த ஆடவனை அவளுக்கு அறிமுகம் செய்துவிட்டு, தொடர்ந்தாப்போல் "மிஸ்டர் மனோகர்! அவள் என் அத்தை பெண் தமயந்தி.

இப்பொழுது நாங்கள் அனைவரும் இந்த ஊரில் என் சகோதரன் வீட்டில் தான் வசிக்கிறோம்" என்று சுருக்கமாகக் கூறினாள்.

கடைத்தெருவிலிருந்து வந்த பின்பு, அன்று நீண்ட நேரம் விஜயா யாரிடமும் உற்சாகமாக எதுவும் பேசவில்லை. அவளது முகத்தில் அடிக்கொரு தடவை கவலைத்திரை லேசாகப் படர்ந்து மறைந்த வண்ணம் இருந்ததை தமயந்தி கவனிக்கத் தவறவேயில்லை. இரவு போஜனத்திற்குப் பின் குளிர்ந்த நிலவொளியில், சிநேகிதிகள் இருவரும் வழக்கம் போல் பொழுது போக்காக வார்த்தையாட தோட்டத்துப் புல்தரை மீது வந்து உட்கார்ந்து கொண்டனர்.

"விஜி, உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். மனத் தாங்கல் அடையாது பதில் கூறவேண்டும். உன் மனத்தை ஏதோ ஒன்று வருத்திக் கொண்டிருக்கிறது. இன்று மாலையில் கடைத்தெருவிலே சந்தித்த அந்த ஆடவருக்கும் உன் மன வருத்தத்திற்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நான் நினைப்பது சரி தானே?" என்று கேட்டாள் தமயந்தி திடீரென்று.

"உன்னிடம் கூடக் கூறாது இவ்வளவு காலம் ஒளித்து வைத்திருந்தேன். இனி அவ்வாறு செய்தால் வேதனை தாளாது என் உள்ளம் வெடித்துவிடும் போலிருக்கிறது. தமா! உன்னைத் தவிர எனக்கு உகந்த சிநேகிதிகள் யாரும் கிடையாது. உன்னிடம் உண்மையைக் கூற நான் ஏன் சங்கோஜப்பட வேண்டும்!" என்று ஆரம்பித்த விஜயா, மேலே பேச முடியாது தயக்கத்துடன் நிறுத்தினாள்.

"நீ சொல்லாவிட்டாலும் எனக்கு எல்லாம் புரிந்து விட்டது! இன்று மாலை கடையில் சந்தித்த மனோகரன் என்பவரை நீ நேசிக்கிறாய் இல்லையா?" என வினவினாள் தமயந்தி.

"ஆமாம்" என்று தலையை அசைத்த விஜயா கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள். துயரத்தால் அவள் நெஞ்சு இரண்டாகப் பிளந்துவிடும்போல் வேதனை செய்தது.

"தமா! ஆனால் இதில் ஒரு வேடிக்கை இருக்கிறது. நீ அறிந்தால் என்னைக் கட்டாயம் பரிகசிப்பாய். இந்தக் காதலானது ஒருதலைப்பட்டது. வானத்து நிலவுக்கு அழும் குழந்தையைப்போல், கிடைக்க முடியாத அவரது அன்பிற்காக நான் ஏங்கி வருத்திக் கொண்டிருக்கிறேன். நான் அவரை நேசிக்கிறேன். ஆனால், அவருக்கு என் மீது அத்தகைய பாசம் ஒன்றும் ஏற்பட்டிருக்கவில்லை." என்றாள் பெருமூச்சுடன்.

"நீ அதை எப்படி நிச்சயமாகக் கூற முடியும்?" என்று கேட்டாள் தமயந்தி கவலையுடன்.

"அவ்வளவு கூட அறிந்துகொள்ள எனக்குத் திறமை இல்லையா!" எனக் கேட்டுவிட்டு விஜயா வறட்சியாக மெல்ல நகைத்தாள்.

"இவ்வளவு தீர்மானமாகச் சொல்கிறாயே! அவர் மனத்தை வேறு யாரிடமோ பறிகொடுத்து விட்டிருக்கிறார் என நீ சந்தேகிக்க ஆதாரம் ஏதாவது உண்டா?" என தமயந்தி விடாது மேலே கேட்டாள்.

"தமா! என்னை விட நீ படித்தவள், புத்திசாலி! நீயே இப்படிப் பேசுவது எனக்குக் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது. என்னை அவர் நேசிக்கவில்லை என்றால், அவர் மனம் வேறு ஒரு இடத்தில் லயித்திருக்கிறது என்று அர்த்தமா? என்னிடம் அவருக்கு அன்பு ஏற்பட என்ன விதமான குணங்கள் இருக்கின்றன? மனத்தை வசீகரிக்கும் அழகு என்னிடம் இருக்கிறதா? உள்ளத்திற்கு உவகை ஊட்டும் படிப்போ, சாதுர்யமோ இருக்கிறதா? ஒன்றுமில்லை. என்னிடம் குறைகள் தான்

அதிகம் இருக்கின்றன'' என்றாள் விஜயா மிக்க வருத்தத்துடன்.

சிநேகிதியின் தோளின் மீது தன் கரத்தை லேசாக வைத்துக் கொண்டு ஆறுதலாக தமயந்தி பேசலுற்றாள். "விஜி! நம்மிடம் காணப்படும் குறைகள் மட்டுமே பெரிதாகக் கண்களுக்குத் தென்படுமாகில் அப்படிப் பட்டவர்களது அன்பு நமக்குச் சிறிதும் வேண்டிய தில்லை. அழகு அந்தஸ்து, படிப்பு இவைகள் எல்லாம், ஒரு குறிப்பிட்ட அளவுள்ள குணங்கள் அல்ல. ஒருவ ரோடு ஒருவரை இவைகளுக்காக ஒப்பிட்டுப் பார்ப்பது மதியீனம். நீ பார்வைக்குப் பெரிய அழகி அல்ல என்பதற்காக அவருக்கு உன்மேல் அன்பு ஏற்படவில்லை என்றால், அப்படிப்பட்ட மனிதரை எண்ணி நீ ஏங்குவது மிகவும் தவறு.

விஜி! உன்னிடம் நான் கடுமையாகப் பேசுவதாக எண்ணாதே, உன் நலனை உத்தேசித்துச் சொல்கிறேன். இந்தப் பரந்த உலகத்தில் உன்னை உன்பொருட்டு நேசிக்க ஒரு மனிதன் இருக்க மாட்டான் என நீ ஏன் தவறாக எண்ண வேண்டும்? அன்பு என்பது அந்தஸ்திற் காகவோ அழகிற்காகவோ ஏற்படக்கூடாது. தானாக பொங்கிப் பெருகி வரவேண்டும். பலவித நலனை உத்தேசித்து, செயற்கையாகத் தூண்டப்பட்ட அன்பு நிரந்தரமற்றது. அத்தகைய விவாகத்தினால் இரு தரப்பின ருக்கும் சுகம் இல்லை; உதாரணமாக, என் கால் ஊனமாக இருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஒரு குறை பெரியதாக உன் சகோதரன் கண்களுக் குத் தென்பட்டிருந்தால் அவரை மணந்து கொள்ள மறுத்திருப்பேன். அவருடைய பணம், அந்தஸ்து முதலிய பலவும் பற்றி நான் சிறிதும் அக்கறைப்படவில்லை" என்று படபடவென்று பேசிக் கொண்டு போன தமயந்தி திடீரென்று நிறுத்தினாள்.

திடுக்கிட்டுப் போன விஜயா, "தமா! என்ன சொன்னாய்? அண்ணா உன்னை மணந்து கொள்ளப் போகிறாரா? எனக்கு இந்த சங்கதியே கொஞ்சமும் தெரியாதே!" என்று கேட்டாள்.

தமயந்தியின் அழகிய முகத்தில் பிரகாசமானதொரு புன்னகை மலர்ந்தது. "ஆமாம், விஜி! உனக்குத் தெரிவதற்கு பிரமேயமேயில்லை. எங்களது விவாகத்தைப் பற்றி நான் ஒருவருக்கும் தெரிவிக்க விரும்பவில்லை. என் விருப்பப்படி உன் அண்ணா யாருக்கும் இதைச் சொல்லவில்லை. எனினும் சில மாதங்களில் ராஜாவின் தொழில் விவகாரங்கள் ஒரு நிலைக்கு வந்ததும் சிறப்பாகத் திருமணத்தை நடத்திவிட வேண்டும் என்று உன் அத்தையவர்கள் தீர்மானித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் நாங்கள் எங்கள் மன விருப்பத் தைத் தெரிவித்து, அவர்களது மனப்பூர்வமான சம்மதத் தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நீ இவ்வளவு தூரம் மனம் விட்டு என்னிடம் உன் காதல் ரகசியத்தைக் கூறியதனால் உனக்கு மட்டும் நானும் என் அந்தரங்கத்தைக் கூறினேன்" என்றாள்.

"தமா! உன் கையை இப்படிக் கொடு வரப்போகும் திருமணத்திற்கு மனப்பூர்வமான பாராட்டுதல்களை அளிக்கிறேன். ஏற்றுக்கொள். என் அண்ணாவை நீ மணந்து கொள்ளப் போகிறாய் என்பதை அறிய எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது, தெரியுமா?" என உற்சாகத்துடன் அவளது கரங்களைப் பிடித்துக் குலுக் கினாள் விஜயா.

இதற்குப்பின் சிநேகிதிகள் இருவரும் நீண்ட நேரம் தங்கள் மன உணர்ச்சிகளைச் சிறிதும் ஒளிக்காது ஒரு வருக்கொருவர் கூறி மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அடைந்தனர்.

நாட்கள் செல்லச் செல்ல தமயந்தி, விஜயா இவர்களின் சிநேகிதம் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதே போன்று மோகனா, அமிர்தம், நமச்சிவாயம் இம் மூவரின் அட்டகாசங்களும் அதிகமாகிக் கொண்டே வந்தன. தங்களுக்கு அங்கே வசிக்க உரிமைகள் இருப்பதாக எண்ணி இறுமாந்து கொண்டு, அவர்கள் மூவரும் காந்திமதியின் அதிகாரத்தை எந்த வழிகளில் எல்லாம் பறிக்கலாம் என்று பேசி சதியாலோசனை செய்த வண்ணம் இருந்தனர். தியாகராஜனது நன்மதிப்பைக் கவர்ந்து கொண்டு விட்டால், காந்திமதியை அடக்கி விடுவது எளிது என்ற தீர்மானத்திற்கு வந்த அந்த மூவரும், பல வழிகளிலும் அவனது அன்பிற்கு உகந்தவர்களாக முயற்சிக்கலானார்கள்.

அதன்படியே அமிர்தம்மாள் திடீரென மகன் மீது இவ்வளவு காலம் இல்லாத ஒரு அன்பை மழை போல் பொழியத் தலைப்பட்டாள். காந்திமதி கோவிலுக்கோ, கடைத் தெருவிற்கோ சென்றிருக்கும் சமயங்களில் தியாகராஜன் ஆபீசிலிருந்து திரும்பி வந்து விட்டால் போதும், மூவரும் தங்களது அன்பு நாடகத்தை மிகவும் உற்சாகமாக நடிக்க ஆரம்பித்தார்கள்.

"தியாகு வந்திருக்கு, அமிர்தம்! சீக்கிரம் காப்பி பலகாரம் கொண்டுவா!" என்று உரத்த குரலில் கத்தி நமச்சிவாயம் தன் சகோதரியை எச்சரிப்பான். தியாகராஜன் உட்கார சோபாவைத் தட்டிக் கொட்டிச் சரிப்படுத்தி, மின்சார விசிறியை ஓட விடுவான். "உட்காரப்பா, குழந்தை, என்ன வேலை, என்ன வேலை! உடம்பு துரும்பாய் போச்சு. உனக்குக் கொஞ்சம் ஒரு மாசம் ஓய்வு அவசியம் அப்பா, இந்தக் கோடைக்கு எங்கேயாவது ஹாய்யா போய், ஒரு பத்து நாளாவது இருந்து விட்டு வந்தால் தான் சரிப்படும்" என்று புகழ்ச்சியகப் பேசி உபசரிப்பான்.

"அண்ணா, வந்துட்டீங்களா. இன்னமும் காணவில்லையே, வழியிலே காருக்கு ஏதாவது தடங்கல் ஏற்பட்டு விட்டதோன்னு கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன்" என்று மோகனா தேனினும் இனிய குரலில் நயமாக விவரித்துக் கொண்டு ஓடி வந்து அண்ணன் அருகில் அமர்ந்து கொள்வாள்.

"அண்ணா, முதல்லே களைப்புத்தீர ஏதாச்சும் சாப்பிடட்டும். அப்புறம் நீ பேசலாம். சித்த நீ தொண தொணக்காம சும்மா இரு!" எனப் போலியாகத் தன் மகளை அதட்டிவிட்டு, அமிர்தம் ஒரு பெரிய வெள்ளித் தட்டில் நான்கு பேர் சாப்பிடக்கூடிய அளவு பலகாரங்களையும் காப்பியையும் எடுத்து வந்து மேஜை மீது வைத்து, சாப்பிடச் சொல்லி மிகவும் வற்புறுத்தி உபசரிப்பாள்.

இதற்குள் நமச்சிவயாம் மின்சார விசிறியை நிறுத்தி விட்டு, ஓலை விசிறியைக் கையில் எடுத்துக் கொண்டு தியாகராஜன் அருகில் வந்து நின்று கொண்டு விசிறத் தொடங்குவான்.

"அண்ணா!" என்று குழந்தை குரலில் கொஞ்சியழைத்த வண்ணம் மேஜையருகிலே வந்து உட்கார்ந்து கொண்டு மோகனா, தன் கண்களைச் சுழற்றிக்கொண்டு, "என் சினேகிதிகள் எல்லாம் உங்களைப் பற்றி என்ன சொல்கிறார்கள் தெரியுமா?" என அவனது ஆவலைத் தூண்டிவிட்டு, வேடிக்கையாகச் சிரிப்பாள்.

"காந்தி பென்ஸில் கம்பெனி தியாகராஜன்" என்றதும், தலை வெளுத்துப் போன வயதான மனிதர் என்று நினைத்திருந்தோம். இவ்வளவு சிறிய வயதிலே நல்ல பிரபல மனிதராகி விட்டிருக்கிறாரே உங்கள் அண்ணா, என்று ஆச்சரியப்படுகிறார்கள் அண்ணா! இங்கே வரும் போதெல்லாம் அவர்கள் உங்களைப் பற்றி ஏதாவது

பேசி ஆச்சர்யப்பட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள்" என்று முகஸ்துதி செய்வாள்.

"திருஷ்டி பட்டுவிட்டுப் போகிறதே! ஒரு கண் போல் ஒரு கண் இருக்காது. இந்தப் பெண்களையெல்லாம் அப்படிப் பேசும்படி நீ இடம் கொடுக்காதே!" என்று அமிர்தம் இடைமறித்துக் கண்டிப்பாள்.

தெய்வம்கூட புகழ்ச்சிக்கு மயங்குவதாக எண்ணி பக்தர்கள் தங்களது பாமாலைகளில், நீங்கள் அந்த பக்தனுக்கு அதைச் செய்யவில்லையா. இந்த பக்தனுக்கு இதைச் செய்யவில்லையா? என்று கூறி ஸ்தோத்திரம் செய்கின்றனர். அவ்வாறிருக்கையில் மனித உள்ளம் புகழ்ச்சிக்கும் முகஸ்துதிக்கும் மயங்கி விடுவதற்குக் கேட்பானேன்?

அமிர்தம், நமச்சிவாயம், மோகனா என மாறி மாறி மூவரும் செய்த முகஸ்துதிக்குச் செவி கொடுத்த தியாகராஜன், நாளாவட்டத்தில் புகழ்ச்சியை ரசிக்கத் தொடங்கினான். ஏன், மிகவும் விரும்பினான். தொழிலில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் தன்போன்ற மனிதனுக்கு இவ்வாறு அடிக்கடி யாராவது புகழ வேண்டியது அவசியம் என்று கூட எண்ணினான். காப்பி, பலகாரம் போன்று சில நாட்களில் தியாகராஜனுக்குப் புகழ்ச்சி என்பது தேவையான ஒரு ஆகாரமாகக்கூட அமைந்து விட்டது.

தமையனிடம் தனக்கிருந்த சலுகையை தன் சிநேகிதிகளுக்குத் தெரியும்படி பிரபலப்படுத்த மோகனா பெரிதும் விரும்பினாள். ஆகவே, அவள் தனது பிறந்த நாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்திருந்தாள். தியாகராஜனது அனுமதியின் பேரில் அன்று அவர்களது பங்களாவில் ஒரு விருந்திற்கு ஏற்பாடாகியிருந்தது.

கலாசாலையில் தன்னுடன் படித்த பெண்களைத் தவிர, தனக்கு சமீபத்தில் பரிச்சயமாயிருந்த சில பெரிய மனிதர் வீட்டுப் பெண்களையும் மோகனா அந்த விருந்திற்கு அழைத்திருந்தாள். விருந்து நடத்தப் போவதைப் பற்றியோ, யாரெல்லாம் விருந்தினர்கள் என்பதைப் பற்றியோ, அவள் காந்திமதியிடம் ஒரு வார்த்தைகூடத் தெரிவிக்கவில்லை. தேவையான சாமான்களை வாங்கி சேகரிப்பதை அமிர்தமும் நமச்சிவாயமும் ஏற்றுக்கொண்டிருந்தனர். நகரத்திலிருந்த பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு விருந்துச் சாப்பாடு தயாரித்துப் பரிமாறும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பிறந்தநாள் அன்று சாயங்காலம், பங்களா வாயிலில் உள்ள பல மின்சார விளக்குகளும் ஜகஜ்ஜோதியாக எரிந்து கொண்டிருந்தன. தோட்டத்துத் திறந்த வெளியில் மேஜையில் மீது விதவிதமான உணவு வகைகளை ஹோட்டல் சிப்பந்திகள் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

அமிர்தம் மிகவும் விலை உயர்ந்த பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டு, தோட்டத்து வாயில் பக்கம் தன் பெண்ணின் தோழிகளை வரவேற்க மலர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள், நமச்சிவாயம் கூட பிறந்த நாள் வைபவத்தின் கோலாகலத்தில் மூழ்கிப் போயிருந்தான். ஒரே சமயம் பல இளம் பெண்கள் வரப்போகிற படியால் அவன் அது சமயம் தன் தோற்றத்தில் சிறிது அதிகப்படியாக அக்கறை காட்டுவதுதான் சிறந்தது என எண்ணி அன்றைய அலங்காரத்தில் விசேஷ கவனம் செலுத்தியிருந்தான்.

தன்னிடம் ஒருவார்த்தை கூடக் கேளாது, வீட்டிலே அவர்கள் செய்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வாளா இருந்த காந்திமதிக்குக் கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டிருந்தது. ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டிருந்த அவள் எழுந்து

சென்று ஹால் பக்கம் எட்டிப் பார்த்தாள். ஹாலின் நடுவிலே கிடந்த வட்ட மேஜை ஒன்றின் மேல், பெரிய தட்டில் ஒரு 'கேக்' வைக்கப்பட்டிருந்தது. அதன் மீது பல மெழுகுவர்த்திகள் சொருகப்பட்டு அவைகள் எரிந்து கொண்டிருந்தன.

மிகவும் கருத்துடன் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த மோகனா, கையில் ஒரு சிறு கத்தியுடன் மேஜையருகில் நின்று கொண்டிருந்தாள்.

"அவசரப்படாது ஒவ்வொன்றாக அணைக்க வேண்டும்" என்று அவளுக்குச் செய்ய வேண்டியதைச் சொல்லிக் கொடுத்தாள் சிநேகிதிகளில் ஒருத்தி.

அந்தப் பெண்ணின் அலங்காரம், 'கேக்'கை வெட்டி அவர்கள் பரிமாறிக் கொள்ளும் முறை இவைகளைக் கவனித்த காந்திமதி சகிக்க முடியாது, "மோகனா! இங்கே சித்த வந்துட்டுப் போம்மா!" என்று அழைத்தாள்.

எதிர்பாராத சமயம் தன்னை அத்தை அழைத்தது மோகனாவைத் திடுக்கிடச் செய்தது, கேளிக்கையின் இடையே இவ்வாறு அத்தை குறுக்கிடுவதை அவள் வெறுத்தாள். ஆகவே, கோபத்துடன் விடுவிடுவென்று காந்திமதி நின்ற பின்கட்டிற்குச் சென்றாள். சற்றுத் தொலைவிலிருந்து இதைக் கவனித்த நமச்சிவாயமும் அமிர்தமும் ஆவலை அடக்கமாட்டாது மோகனாவைப் பின் தொடர்ந்தனர்.

காந்திமதி தனக்கேற்பட்ட சினத்தை அடக்கிக் கொண்டு, "மோகனா! பிறந்த நாள் என்றால் 'கேக்'கும் மெழுகுவர்த்தியும் நமக்கு எதற்கம்மா? இங்கிலீஷ் படித்து விட்டால் நாம் இங்கிலீஷ்காரர்களாகி விடுவோமா? உன் பிறந்த நாளை நம் சம்பிரதாயப்படி அழகாகக் கொண்டாடியிருக்கலாமே! கோயிலுக்கு ஒரு அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்து, நாலு ஏழைகளுக்குச் சாப்பாடு

போட்டு, கௌரதையாக நடத்தலாமே? அதை விட்டு இதெல்லாம் என்ன? எனக்குப் பிடிக்கவே இல்லை!" என்றாள்.

அவ்வளவுதான்! உடனே, மோகனா, 'ஹோ' வென்று கிறீச்சிட்டு அலறிக் கொண்டு தாயின் தோளில் போய்ச் சாய்ந்து கொண்டு விம்மியழத் தொடங்கினாள். அதைக் கண்ட அமிர்தம் கோபத்துடன், "நல்லாத்தான் இருக்கிறது நீ பேசுகிறது! பிறந்த நாளும் அதுவுமா அதனுடைய சந்தோஷத்தையே கெடுத்து விட்டியே" என்று பதிலுக்குக் கோபித்தாள்

கீழே முற்றத்திலே எழுந்த அழுகுரலைக் கேட்ட நியாகராஜனும் விஜயாவும் மாடியிலிருந்து வியப்புடன் ஓடி வந்தார்கள். மகனைக் கண்டதும் அமிர்தம், நியாகு! நாங்கள் எல்லோரும் அனாதைகள், அப்பா. உன் ஆதரவிலே வாழ்கிறோம். அதுக்காக இவள் இந்த சமயம் பார்த்து அவமானப்படுத்துணுமா? என் குழந்தைகள் சந்தோஷமாக இருப்பதை இவள் காணச் சகிக்க மாட்டேன் என்கிறாளே! ஐயோ கடவுளே! இந்த அநியாயத்தை எங்கே போய்ச் சொல்லுவேன்!" எனப் பிரலாபித்து அழுது ஓலமிட்டாள்.

விஷயம் ஒன்றும் விளங்காத நியாகராஜன், "நடந்தது என்ன? விவரமாகச் சொல்லுங்கள்!" என்று அதட்டினான்.

யாரும் சட்டென பதில் பேசுமுன் நமச்சிவாயம் முந்திக் கொண்டு, "ஒன்றுமில்லை குழந்தே! நீ தானே இந்த விருந்துக்கு அனுமதி கொடுத்து ஏற்பாடு பண்ணினே? காந்திமதிக்கு திடீர்னு கோபம் வந்தது. இப்போ இதையெல்லாம் நிறுத்தி, வந்தவங்களை திரும்பிப் போகச் சொல்லுன்னு எல்லார் முன்னாலேயும் வந்து கூச்சல்

போட்டுது. மோகனாவுக்கு ரொம்ப அவமானமாயிடுத்து" என்றான்.

அதைக் கேட்ட தியாகராஜன் முகம் கோபத்தினால் சிவந்து போயிற்று. "மோகனா! கண்களைத் துடைத்து கொண்டு நீ போய் வந்தவர்களைக் கவனி" என உத்தர விட்டு, அவர்கள் அனைவரையும் அப்பால் போகச் செய்து விட்டு தனிமையாக நின்று கொண்டிருந்த அத்தை யிடம் திரும்பி, "அவள் அறியாக் குழந்தை, அவள் ஆசைப்பட்டதைச் செய்து கொண்டு போகட்டுமே! இதனால் உங்களுக்கென்ன குறைந்து போய்விடும்? அவள் விஷயத்தில் நீங்கள் இனி எதற்கும் குறுக்கிட வேண்டாம். தாயையும் சகோதரிகளையும் சரியாக நடத்தவில்லை என்ற கெட்ட பெயர் எனக்கு வீணே எதற்கு?" என்றான் கடுமையான குரலில்.

காந்திமதியம்மாள் அதற்கு ஒன்றுமே பேசவில்லை. அவளுக்குப் பேசவும் முடியவில்லை. நெஞ்சை யாரோ பலமாக அமுக்குவது போன்ற துக்கம் அவள் தொண் டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டது. 'தியாகராஜனா இப்படிப் பேசுகிறான்?" என நம்ப முடியாதவள் போல், அவள் அவனை பிரமிப்புடன் பார்த்துவிட்டு, மௌன மாகப் பின்கட்டிற்குள் சென்று விட்டாள்.

வெளியே புறப்படுமுன், கடைசியாக ஒரு முறை மாயா கண்ணாடியின் முன் நின்று கொண்டு தன் அலங்காரத்தை மிக்க அக்கறையாகக் கவனித்துக் கொண்டாள். நீண்ட நேரம் சிரமப்பட்டு வாரி முடித்துக்

கட்டப்பட்டிருந்த அஜந்தா ஜடையலங்காரம் சற்று நீண்ட வட்ட வடிவமான அவளது முகத்திற்கு ஒரு தனி சோபையை அளித்துக் கொண்டிருந்தது. காது வரை நீண்டுவிட்டன போல் பிரமிப்பை ஊட்ட வேண்டி, கருத்துடன் பூசப்பட்டிருந்த அஞ்சனம் அவளது இரு கயல் விழிகளையும் விண்மீன்கள் போல ஜொலிக்கச் செய்து கொண்டிருந்தன. தந்தத்திலே செதுக்கினாப் போல் கொழுமையாகத் திகழ்ந்த அவளது கழுத்தில் பூட்டப்பட்டிருந்த ரத்ன ஹாரம், பார்ப்பவர் களுக்கு அஜந்தா குகையில் உள்ள ஓவியங்களின் நினைவை ஊட்டும் வகையில் மிக அழகாகத் துவண்டு கிடந்தது.

கண்ணாடியினின்று திரும்பிய மாயா, ஜன்னல் அருகே போய் நின்றுகொண்டு, வெளியே தெரிந்த நீலவானத்தைச் சிறிது நேரம் சிந்தனையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள். வாழ்க்கையிலே அவள் அதுவரை அனுபவித்திராத நூதனமான உணர்ச்சியினால் கொந்தளித்துக் கொண்டிருந்த அவளது உள்ளத்தினின்று ஏக்கமும் துயரமும் கலந்த நீண்டதொரு பெருமூச்சு எழுந்தது.

உண்மையில், மாயாவுக்குக் கடந்த சில நாட்களாகத் தன் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் விசித்திரமான உணர்ச் சியின் அர்த்தமே பிடிபடவில்லை. அவளது வாழ்க்கையே திடீரென்று பெருமூச்சுடன் கரையைக் கிழித்துக் கொண்டு ஓடும் காட்டாற்றைப் போன்றிருந்தது. வறட்சி யும் வெள்ளமும் மாறிமாறி ஏற்படும் காட்டாற்றைப் போல், ஏழ்மையும், செல்வமும் திடீர் திடீர் என்று அவளது வாழ்விலே மாறி மாறிக் காணப்பட்டு வந்தன.

நிஜ வாழ்விலே இருபத்தைந்து வயதைக் கடந்து விட்டிருந்தாலும், மாயா தோற்றத்திலே பதினெட்டு வயது இளமையுடன், நகரத்திலே மிகவும் அழகியதொரு

பங்களாவில் மிகவும் ஆடம்பரமாகவும், சுகமாகவும் கடந்த இரண்டு வருஷ காலமாக வாழ்ந்து கொண்டிருந்தாள், அவள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவள். இவ்வாறு வாழ்வதற்கு வசதிகள் யாவை? என்று யாரும் அறிந்து கொண்டதில்லை. சாயங்கால வேளைகளில், தெருவின் கோடியிலிருந்த அந்த அழகிய சிறு பங்களாவில் உள்ளிருந்து மானைப் போல் அழகாக அசைந்து நடந்து வெளியே வந்து காரில் ஏறிக்கொள்ளும் ஒரு யுவதியை, அக்கம் பக்கத்தவர்கள் கவனிக்கத் தவறியதேயில்லை. விதவிதமான அலங்காரத்திலே. பார்ப்பவர்கள் கண் களுக்கு அழகு விருந்தாக வெளிப்பட்ட அந்த மங்கை யைப் பற்றி அறிந்துகொள்ளப் பலர் ஆவலுற்றாலும், அவளது வாழ்க்கை பெரும் புதிராகவும் மர்மமாகவும் இருந்தது.

மாயாவின் பூர்வோத்தரம் யாருக்கும் தெரிந்திருக்க இடமே இல்லை. அவள் தந்தை வடநாட்டில் சர்க்கஸ் கம்பெனி ஒன்றில் துஷ்டமிருகங்களை ஆட்டி வைக்கும் உத்தியோகத்தில் இருந்தவர். அதே கம்பெனியைச் சேர்ந்த கேரள நாட்டு அழகிய பெண்மணியை அவர் கலப்பு மணம் செய்து கொண்டிருந்தார். இந்த தம்பதிகளுக்குப் பிறந்த மாயா. தன் மூன்றாவது வயதிலேயே தந்தையை இழந்துவிட்டாள். வடநாட்டிலும், பிறகு தென்னாட்டி லும் தாயின் பிறந்த நாடாகிய கேரளத்திலும் முறையே சில காலம் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருந்த தாயுடன் அவள் வளர்ந்து வந்து கொண்டிருந்தாள். கொஞ்சம் படிப்பு, சிறிதளவு நாட்டியம், சிறிதளவு சங்கீதம் என்று ஒன்றிலும் பூரணமாக ஈடுபடாது, தாமரை இலைத் தண்ணீராக அவளது வாழ்க்கை ஒவ் வொரு முறையும் ஒவ்வொரு கோணத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

வாழ்க்கையில் செல்வத்தை அடைந்து சுகமாக வாழும் நிமித்தம் அவளும் அவளது தாயும் கையாண்ட முறைகள் எண்ணிக்கையற்றவையாக இருந்தன. வாழும் வகையை வகுத்துக் கொடுக்க அவர்கள் எத்தனையோ மனிதர்களின் தயவை நாட வேண்டிய சந்தர்ப்பங்களும் இருந்தன. பெண்மையின் எழிலில் மயங்கி, நிலை தடுமாறிப் போகும் சில மனிதர்களின் பலவீனத்தை அத்தகைய சந்தர்ப்பங்களில் உபயோகித்துத் தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ளத் தாயும் மகளும் ஒரு பொழுதும் தவறியவர்களேயல்ல!

மாயாவிற்கு அன்றைய வரை யாரைப் பற்றியும் எவ்விதமான சிந்தனையும் ஏற்படவில்லை. பகட்டான தொரு புன்னகை, கொஞ்சலான ஒரு வார்த்தை, மிஞ்சினால் கண்களில் மிருதுவான ஒரு பார்வை என அளந்து தனது சாகஸங்களைக் குறிப்பிட்ட சமயத்தில் அள்ளி வீசி விட்டு காரியம் முடிந்ததும் அந்த மனிதரைப் பற்றி அறவே மறந்துவிடும் சுபாவம் உடையவள். அவளுடைய நிர்தாட்சண்யமான உள்ளத்தில் யாருக்கும் இடம் இருந்ததில்லை. அப்படிப்பட்ட மாயாவின் மனம் கடந்த சில தினங்களாகப் பலவிதமான கற்பனை களினால் கலங்கியது உண்மை.

நகரத்தில் மிகவும் அமர்க்களமாக நடந்து கொண் டிருந்த பிரபல நாட்டிய கோஷ்டியினரின் நடனத்தைக் காண்பதே அன்று அவள் தன்னை நேர்த்தியாக அலங்கரித்துக் கொண்டு சென்றிருந்தாள். உயர்ந்த வகுப்பு ஆசனமொன்றில் வந்து உட்கார்ந்து கொண்ட அவள், வழக்கம் போல் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் யாரையும் கவனிக்காது மிகவும் அசட்டையாக இருந்தாள். நடனக் காட்சிகள் துவங்க சில நிமிஷங்கள் தானிருந்தன. அது சமயம் அங்கே கூடியிருந்த சிலரிடையே ஒரு பரபரப்பு காணப்பட்டது. மாயாவிற்கு

முன்னாலிருந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு நெட்டையான மனிதர்தம் அருகில் உட்கார்ந்திருந்த நண்பரிடம், "இதோ பாருங்கள்! முன்னால் வருகிறானே அவன் தான் தியாகராஜன்!" என்று சிறிது தாழ்ந்த குரலில் அறிமுகப்படுத்தினார். கழுத்தை வளைத்துக் கொண்டு அந்தத் திக்கையே கண் கொட்டாது பார்த்த அந்த நண்பர், "என்னய்யா, இவனா அந்தத் தியாக ராஜன்? காந்தி பென்ஸில் கம்பெனி! முதலாளி இவனா? இவ்வளவு சின்னவனாக இருக்கிறானே? கூட வந்திருப் பது அவன் மனைவியோ?" என்று விசாரித்தார்.

"இத்தனை சின்ன வயதிலே பணத்தை அள்ளிக் குவித்துவிட்டான். கூட வந்திருப்பது அவனது சகோ தரிகள். அவனுக்கு இன்னமும் மணமாகவில்லை. சமீ பத்தில் கூட ஒரு கிரகப்பிரவேச வைபவம் நடந்ததே. ஞாபகம் இருக்கிறதா? ரொம்ப தடபுடல் செய்து விட்டான். காந்தி பென்ஸிலுக்கு மார்க்கெட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது. மொத்தத்தில் அதிர்ஷ்டம் நிறைய இருக்கிறதய்யா!" என்று விவரித்தார் முதலில் பேசியவர்.

"பார்க்கவும் லட்சணமாக இருக்கிறான். பணமும் இருக்கிறது; வயதும் கொஞ்சம் தான். கேட்பானேன்! பல பெரிய மனிதர்கள் இவனைத் தங்கள் மருமகனாக் கிக்கொள்ள ஒரு கண் வைத்திருப்பார்கள்" என்று அதிசயித்தார் இரண்டாவது நபர்.

இதற்குள் மாயாவின் பக்கத்திலிருந்த ஒரு பெண் மணி தன் அருகில் இருந்த இன்னொரு பெண்மணி யிடம், "காந்தி பென்ஸில் கம்பெனி தியாகராஜனைப் பாரேன். தங்கைகளையும் கூட்டிக் கொண்டு வந்திருக் கிறான்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அதற்கு மேல் மாயாவால் ஆவலைக் கட்டுப்படுத்த இயலவில்லை. கூட்டத்திலே ஒரு சிறு பரபரப்பிற்கும்

பேச்சிற்கும் காரணமாக இருந்த அந்தப் பெண்ஸில் வியாபாரியைத் திரும்பிப் பார்த்தாள். மாயாவின் நெஞ்சு விவரிக்க இயலாத ஒரு உணர்ச்சியில் படபடவென்று அடித்துக் கொண்டது. யதேச்சையாகத் திரும்பிய தியாகராஜனின் பார்வையை ஒரு கணம் நேருக்கு நேர் சந்தித்த அவள், தன் வெற்றி மீது அரும்பிய வியர்வை யைக் கைக்குட்டையால் லேசாகத் துடைத்துக் கொண்டு, கடைக் கண்ணால் அவன் சென்று அமர்ந்த ஆசனத்தைக் குறிப்பாகக் கவனித்துக் கொண்டாள்.

இரண்டு வரிசைகளுக்கு முன்பாக அமர்ந்திருந்த அவனது முகம் முழுவதும் அவளுக்குத் தெரியவில்லை. எனினும் ஒரு பக்கவாட்டிலே மட்டும் தெரிந்த அவனது கம்பீரமான தோற்றத்தை ஆச்சர்யத்துடன் வெகு நேரம் பார்த்துக்கொண்டே தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

நடனம் முடிந்ததும் அன்று இரவு வீடு திரும்பிய மாயாவுக்குத் திடீரென தன் வாழ்விலே உற்சாகம் மறைந்து ஒரே சூன்யமாகி விட்டது போல் ஒரு ஏக்க உணர்ச்சி ஏற்பட்டது. பீரோவைத் திறந்து, தட்டுகளில் அடுக்கி வைத்திருந்த ஆடைகளை வெறித்துப் பார்த்தாள். நகை பெட்டியில் கிடந்த விலையுயர்ந்த ஆபரணங்கள் அன்று அவளுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. வாழ்க்கையிலே அவள் வேண்டி நின்ற அழகிய பங்களா, கார், ஆடை, ஆபரணங்கள். வசிக்க வசதி, பணம் எல்லாம் இருந்தன. ஆனால், இவை அனைத்தும் அன்று இரவு அவள் மனத்தில் அமைதியையோ திருப்தியையோ உண்டாக்கவில்லை. இவைகள் மட்டும் இருந்து விட்டால் போதாது. தியாகராஜனைப் போன்று யௌவனமும் கவர்ச்சியான தோற்றமும், செல்வமும் ஒருங்கே படைத்த புருஷனின் உள்ளன்பும் கிடைத்தால் தான் வாழ்வு பூரணமடையும்- என்ற வரைக்கும் எண்ணம் தலைப் பட்டு விட்டாள்.

இந்த எண்ணம் அவளது சிந்தனையைச் சதா வியாபித்துக் கொண்டு விடவே மாயாவிற்கு எதிலுமே நாட்டம் ஏற்படவில்லை. நகரத்திலே பலரது கருத்தைக் கவர்ந்து நின்றிருந்த காந்தி பென்ஸில் கம்பெனி முதலாளியை, தன் அன்பனாகக் கொள்ளும் வரை அவளுக்குத் தூக்கம் கூட வராது போல் இருந்தது.

அதற்குப் பின் அவள் தியாகராஜனை இரண்டு முறைகள் வெவ்வேறு இடங்களில் சந்திக்க நேர்ந்தது. ஒவ்வொரு சந்திப்பின் போதும் மாயாவின் காதல் விஷம் போல் அதிகரித்துக் கொண்டே சென்றது. எப்பாடுபட்டாவது முயற்சி செய்து அவனுடன் பேசும்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவள் வெகுவாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தாள்.

அதன் பயனாக அவள் தியாகராஜனது அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி மெல்ல அறிந்து கொண்டிருந்தாள். ஆபீஸ் முடிந்ததும் மாலைப் பொழுது அவன் நகரத்திலிருந்து நாகரிகமானதொரு கிளப்பில் தன் சகோதரிகளுடன் வந்து தேநீர் அருந்துவது வழக்கம் என்பதை அறிந்த கொண்ட மாயா, சில தினங்களாக ஒவ்வொரு நாளும் அந்தக் குறிப்பிட்ட கிளப்பிற்கு சென்றுவரத் தொடங்கினாள்.

எவ்வளவோ முயற்சித்தும் மாயாவினால் தியாக ராஜனது கவனத்தைக் தன் மீது திருப்ப முடிவில்லை. அவன் ஒரு முறைகூட அந்தக் கிளப்பிற்குத் தனியே வந்தவன் அல்ல; அவனுடன் கூட வந்த நான்கு பெண் களும் அவனைச் சுற்றி சதா சூழ்ந்து கொண்டிருந்த தனாலோ என்னவோ, அவன் யதேச்சையாகக் கூட மாயாவின் பக்கம் திரும்பியவன் அல்ல.

அன்று மாலை கிளப்பிற்குச் செல்ல மிக்க அக்கறை யுடன் மாயா உடுத்திக் கொண்டிருந்தாள். ஐந்து மணிக்கு

மேல் தான் தியாகராஜன் அங்கே வருகிற வழக்கம் என்பதை அவள் அறிந்திருந்ததனால், முன்னதாகப் போய்க் காத்திருக்க மனமின்றி 'இன்று என்ன உபாயம் கையாண்டால் காரியம் கைகூடும்' என்று சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

வெளி வராந்தாவில் மாட்டியிருந்த கடிகாரம் மணி ஐந்தடித்ததைக் கேட்டதும் திடுக்கிட்டுச் சிந்தனை கலைந்து மாயா அறையை விட்டு வேகமாக வெளியே வந்தாள். மேஜை மீது கிடந்த அழகுப் பையைக் கையில் தூக்கிக் கொண்டு தாயாரிடம் சொல்லிக்கொண்டு வெளியே வந்தாள்.

காஷ்மீர வேலைப்பாடுகள் செய்த கறுப்பு வெல்வெட் பாதரட்சைகளை அவசரமாக அணிந்துகொண்டு வெளியே செல்லத் திரும்பிய அவள் முகத்தில் பிரகாசம் சட்டென மறைந்தது. லேசானதொரு கடுமை பாவம் பரவியது.

ஆபீஸிலிருந்து திரும்பி வந்து கொண்டிருப்பவன் போலக் காணப்பட்ட மனோகர் இரு கரங்களையும் குவித்து நமஸ்கரித்து, "வெளியில் கிளம்பிக் கொண்டிருக் கிறாப் போலிருக்கிறதே!" என்று புன்னகை செய்தான்.

"ஆமாம்! அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறேன். நங்களைப் பிறகு பார்க்கலாம் அல்லவா? நிர்ப்பந்தமான விஷயம் ஒன்றும் இல்லையல்லவா?" எனப் பதிலளித்த மாயா, அவன் பேசுமுன் படிகளில் இறங்கி ஓடி, தயாரா கக் காத்திருந்த காரில் ஏறிக்கொண்டாள்.

மாயாவின் இந்த மாறுதலான நடத்தையின் தாத்பரி யத்தை மனோகரால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'உட்காருங்கள்!' என்று கூட உபசரிக்காது, அசட்டையாக அவள் நடந்து கொண்டதை அவனால் தாளமுடிய வில்லை. அவமானத்தினால் அவன் உடல் அனலாகப்

பற்றி எரிந்தது. கட்டுக்கடங்காத பிரேமையினால் துடித்த அவனது உள்ளம் பெரும் ஏமாற்றத்தினால் இரண்டாக வெடித்துவிடும் போல் அடித்துக் கொண்டது. அதற்கு மேல் அங்கே நிற்கவும் மனமின்றி, பொங்கி எழுந்த சினத்தைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டு, வீட்டை நோக்கித் தான் ஏறிவந்த மோட்டார் சைக்கிளை வேக மாகச் செலுத்தினான்.

கிளப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த மாயாவின் மனமும் பலவித உணர்ச்சிகளால் கொந்தளித்துக் கொண் டிருந்தது. பூஜை வேளையில் கரடி புகுந்தது போல் அவள் வெளியே சென்று கொண்டிருந்த அந்த சமயம் மனோகரன் அவளைச் சந்திக்க வந்ததை அவள் சிறிதும் விரும்பவில்லை.

மனோகரனது கவர்ச்சிகரமான தோற்றத்தில் சில தினங்களாக மாயா மயங்கிப்போய் அவனுடன் நெருங்கி உறவாட முயற்சித்தது உண்மை. ஆனால், தியாகராஜ னைக் கண்ட பிறகு அவள் கண்களுக்கு மனோகரனோ, வேறு யாரோ உகந்த புருஷனாகத் தோன்றவேயில்லை. 'பொழுது போக்காக ஏதோ விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்தவைகளை எல்லாம் உண்மையென நம்பிக் கொண்டு உரிமை பாராட்டிப் பேச வந்து விட்டான் மடையன்!' என மனோகரன் பால் அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. அவனை அவ்வாறு அசட்டை செய்தது தான் சரியான தண்டனை என்று தனக்குள்ளே சமாதானம் செய்து கொண்டு நொடிப் பொழுதில் கிளப்பை அடைந்தாள்.

அன்று மாயாவிற்குப் பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. வழக்கம் போல் தியாகராஜன் அன்று அங்கே வந்திருக்க வில்லை, அவனுக்குப் பதில் அவளது சகோதரிகள் இருவரும் மாமா நமச்சிவாயமும் வந்திருந்தார்கள்.

தன் சிநேகிதி ஒருத்தியைக் கண்டதும் மோகனா எழுந்து பேசச் சென்றுவிட்டாள்.

விஜயா சற்றுத் தூரத்திலே சில பெண்கள் விளை யாடிக் கொண்டிருந்த டென்னிஸ் ஆட்டத்தைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

ஐஸ்க்ரீமைச் சுவைத்துக் கொண்டு நமச்சிவாயம் மட்டும் திரு திருவென விழித்துக் கொண்டு உட்கார்ந்து திருந்தான். அடிக்கொரு தடவை தன்பக்கமே ஆவலுடன் பார்த்து விழிப்பதை, பாராதது போல் கண்டு கொண்ட மாயா தன் உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு விரைந்து எழுந்து வந்தாள்.

"நீங்கள் தியாகராஜன் அவர்களுக்குத் தந்தையா" என்று ஒரு கேள்வியைப் போட்டு மோகனமான ஒரு புன்னகையை அவன் மீது விசினாள்.

அவ்வளவுதான் நமச்சிவாயத்திற்கு வாயெல்லாம் பல்லாக மாறி விட்டது! தான் இருப்பது பூலோகமா சொர்க்கமா என்று ஒரு பிரமிப்பில் மயங்கிப் போக, மாயா விரித்திருந்த வலையில் முதல் புலியாக வீழ்ந்து விட்டான்.

29

வீட்டிற்குத் திரும்ப நேரமாகி விட்டதென்பதை உணர்ந்து, சகோதரியையும், மாமாவையும் தேடிக் கொண்டு வந்த விஜயா, அவர்கள் இருவரும் அழகு மிகுந்த ஒரு இளம் பெண்ணுடன் மிகவும் பழகியவர்கள் போல் உற்சாகமாக வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். விஜயா யாரிடமும் சட்டென நட்புரிமை

பாராட்டி விடுகிறவள் அல்ல. தங்கை தனக்கு அந்தப் பெண்ணை அறிமுகப்படுத்தி வைத்த பொழுது, மரியாதைக்காக இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு, சீக்கிரமே விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

மோகனாவிற்கு எப்பொழுதுமே பகட்டான அலங்காரம், ஆடம்பரமான பேச்சுக்கள், புதிய புதிய சிநேகிதிகள் யாவும் மிகவும் பிடிக்கும். மாயாவின் அலங்காரம், பேச்சு, நாகரிகம் எல்லாம் மோகனாவின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன.

நமச்சிவாயத்தைப் பற்றியோ சொல்லவே தேவையில்லை. பெண்களிடம் சமமாக உட்கார்ந்து சம்பாஷிப்பது என்றால், அவனுக்கு அல்வா சாப்பிடுவதைப் போன்ற ருசியான விஷயம். மாயாவைப் போன்ற சௌந்தர்யமிக்க யௌவன மாதுடன் நீண்ட நேரம் சம்பாஷிக்கும் ஒரு பாக்யம் கிடைப்பதென்றால், நமச்சிவாயத்தின் சந்தோஷத்திற்கு எல்லையேது? வாயெல்லாம் பல்லாக, முகத்தில் அசடு கலமாக வழிய மாயாவுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்த அந்த சிலமணி நேரம், தன் வாழ்விலே ஒரு மகத்தான சம்பவமாகும் என எண்ணி அகமகிழ்ந்து போயிருந்தான்.

அன்று இரவு வீடு திரும்பிய அவர்கள் இருவரும் அமிர்தம்மாளிடம் கிளப்பிலே சந்தித்த அந்த ரூபவதியைப் பற்றி அலுக்காது, வாய் ஓயாது மாறி மாறி, முடுக்கி விடப்பட்ட கிராமபோனைப் போல் பேசித் தீர்த்தார்கள்.

"அம்மா! அவள் போட்டுக் கொண்டிருந்த ஜாக்கெட், கழுத்தின் கீழே மாங்காய் தினுசிலே பொன் சரிகையில் ஒரு மாதிரியான வேலைப்பாடு செய்திருந்தது பாருங்கள். அதை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதை அவளேதான் தைத்தாளாம். எனக்குக் கூட அதே

மாதிரி தைக்கச் சொல்லித் தருவதாக வாக்களித்திருக்கிறாள்" என்றாள் கொஞ்சும் குரலில் மோகனா.

அமிர்தம்மாளுக்குத் தன் இளையமகள் கூறும் எல்லா விஷயங்களும் அதிசயங்களாகவும், அற்புதங்களாகவும் தென்படுவது வழக்கம். ஆகவே அவள், "அப்படியா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சோபா ஒன்றில் காலை நீட்டிக் கொண்டு சாய்ந்த வாக்கில் உட்கார்ந்திருந்த நமச்சிவாயம், அன்று தன் முன்னால் வெள்ளித்தட்டு நிறைய வைத்திருந்த மாதுளம் பழ முத்துக்களைக் கண்களால் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. மாயாவைப்பற்றிப் பேசும் சுவாரஸ்யத்தில் அவன் தன்னையே மறந்து விட்டிருந்தான்.

"ரவிவர்மா படத்திலே எழுதியது போல என்பாங்களே, அதைப் போல அடாடா! என்ன அழகு. என்ன அழகு போ! அமிர்தம்! நீ ஒரு வாட்டி அந்தப் பெண்ணைப் பார்த்தால் பிறகு சொல்வாய். அவ்வளவு அழகிருந்தும் மனுஷாகிட்ட என்ன மரியாதை! என்ன அடக்கம்! எவ்வளவு இனிமையாய்ப் பேசுகிறாள். தெரியுமா!" என்று அவன் மாயாவை வானளாவப் புகழ்ந்தான்.

சற்றுத் தொலைவில் தனியே தரைமீது உட்கார்ந்து கொண்டு, பத்திரிகை படித்துக் கொண்டிருந்த விஜயாவின் காதுகளில் பேச்சு விழுந்து கொண்டுதானிருந்தது. எவ்வளவு முயற்சித்தும் அவளால் குறுக்கே பேசாதிருக்க முடியவில்லை.

"அம்மா! மாமா பேச்சையெல்லாம் அப்படியே நீங்க நம்பிவிட வேண்டாம், யாரைப் பார்த்தாலும் மாமா, ரவிவர்மா படம் என்றும், மேனகை என்றும், ரம்பை என்று தான் சொல்வது வழக்கம். அதுவும் சமீபகாலத்தில் மாமா கண்களுக்கு எல்லாப் பெண்களுமே அப்ஸரஸ்

மங்கைகளாகத் தென்படுகிறார்கள். மாமாவைக் குற்றம் சொல்வதில் பயன் இல்லை. அவரது வயோதிகக் கண்களுக்கு வாலிபம் மிக அழகாகத் தென்படுகிறது." என்றாள் கோபத்துடன்.

விஜயா இவ்வாறு தன்னை மட்டந்தட்டிப் பேசியது நமச்சிவாயத்திற்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆத்திரத்துடன் அவளை ஒருமுறை வெறித்துப் பார்த்துவிட்டு, "நான் உன்னிடம் பேசவில்லை. நீ ஏன் எங்கள் சம்பாஷணையில் தலையிடுகிறாய்?" என்று அதட்டினான்.

"பின்னே என்ன, மாமா! நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒருமணி நேரமா என்னமோ கதை அளந்து கொண்டிருக்கிறீர்களே? வயது ஆச்சே ஒழிய இன்னும் விவேகம் சிறிதளவுகூட ஏற்படவில்லை. எப்போப் பார்த்தாலும் பெண் பிள்ளைகளைப் பற்றித்தான் பேச்சு "தியாகராஜன் மாமாவா! அவர் ஒரு தினுசான பேர்வழி" என்று நம்மைத் தெரிந்தவர்கள் பரிகசிப்பதைக் கேட்க அவமானமாக இருக்கிறது" என்றாள் சீற்றத்துடன்.

தன் காரியங்களுக்கெல்லாம் கை கொடுத்து ஒத்துழைக்கும் மாமாவை சகோதரி இவ்வாறு துச்சமாகப் பேசியதைக் கேட்டு மோகனாவால் சும்மா இருக்க முடியவில்லை.

"மாமா மேல் குற்றம் பேச வந்து விட்டாயே! நீ மட்டும் எப்படி நடந்து கொள்கிறாய்? வயதானவராச்சே என்று உனக்கு அவர் மேல் சிறிதளவாவது மதிப்பு இருக்கா? உன்னை, எனக்குத் தெரியாதா, விஜயா! உனக்கு என்னிக்குமே அழகான பெண்களைக் கண்டாலே பிடிக்காது" என்று குத்தலாகச் சொன்னாள் மோகனா.

அதைக் கேட்ட விஜயாவிற்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "இதோ பார் மோகனா! நான்

உன்னுடன் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் உன்னை எச்சரிக்க விரும்புகிறேன். முன் பின் தெரியாதவர்களுடைய சிநேகம் ஆபத்தில் தான் கொண்டு போய் விடும்" என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு அப்பால் சென்று விட்டாள்.

"நான் பச்சைக் குழந்தை! எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாள்! எப்பொழுதும் என் சிநேகிதிகளைக் கண்டாலே விஜயாவுக்குப் பிடிப்பதில்லை. பொறாமைக் காரி!" என்று கடுகடுத்த மோகனா, சகோதரி சென்ற திக்கைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"விட்டுத் தள்ளு அவ பேச்சை. அந்த அகங்காரி அத்தை அம்மாளின் துர்ப்போதனையிலே, அவள் பெத்த நாய்க்கே எதிரியாப் போயிட்டா. நான் அவளை என் பொண்ணுன்னு நினைக்கிறதையே விட்டு விட்டேனே! எவனுக்காவது கட்டிக்கொடுத்து அனுப்பி விட்டா, என்னைப் பிடிச்ச பீடை ஒழியும்" என்று மிகவும் கோபத்துடன் தன் மூத்த மகளைச் சபித்தாள் அமிர்தம்.

"அவ கிடக்கிறா, மாமா! நீங்க இதையெல்லாம் மனசில் எடுத்துக்காதீங்க" என்று சமாதானம் கூறிய மோக்னா, இடையே தொடர்பு விட்டுப் போய் வேறு திக்கில் சென்றிருந்த சம்பாஷணையை மீண்டும் துவக்கினாள்.

எவ்வளவு நேரம் பேசினாலும் அவளுக்கு அலுக்காது போல் இருந்தது. எவ்வளது முறை கேட்டாலும் மாயாவின் பெயர். தனிமையானதொரு இனிமையுடன் தொனிப்பது போல் நமச்சிவாயத்திற்குப் மிக்கப் பேரின்பமாக இருந்தது.

கிளப்பிலிருந்து விடை பெற்றுக் கொண்டு பிரியுமுன் மாயா தனது பங்களா விலாசத்தை அவர்களிடம்

கொடுத்து தன் கிருகத்திற்கு அவர்கள் இருவரும் அவசியம் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தாள், மாயாவின் சிநேகிதத்தில் ஏற்பட்டிருந்த அபார மோகத்தில் மோகனாவிற்கு அந்த விஷயத்தை அதிக நாட்கள் தள்ளிப் போட்டு வைக்கக் கொஞ்சமும் விருப்பவில்லை. மீண்டும் ஒரு முறை அந்தப் பேரழகியின் சுந்தர வதனத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டும் என்ற எண்ணத்தில் நமச்சிவாயம் மோகனாவுக்கு மேல் பன்மடங்கு ஆவலுடன் மாயாவின் பங்களாவுக்கு புறப்படக் காத்திருந்தான்.

அன்று மாலை தன்னை மிகவும் சிரத்தையுடன் அலங்கரித்துக் கொண்டு மோகனா தன் புதிய சிநேகிதியைச் சந்திக்கப் புறப்பட்டாள். சில்க் ஜிப்பாவும். சரிகை அங்கவஸ்திரமும், சலவையினின்று எடுத்து உடுத்திய வேஷ்டியுமாகப் புறப்பட்ட நமச்சிவாயம், தேவைக்கு மீறிய அளவு தன் ஆடைகள் மீது சந்தன அத்தரை அள்ளிப் பூசிக்கொண்டிருந்தான்.

பங்களா வாயிலில் வந்து நின்ற காரினின்று இறங்கிய மோகனா மிகவும் தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள். யாருக்கு கிடைக்கக்கூடாத ஒரு அற்புதமான சிநேகிதம் தனக்குக் கிடைத்து விட்டது என எண்ணிப் பூரித்துப் போன அவளது கால்கள் தடுமாறின. "எப்படிப்பட்ட பெரிய மனிதர்களோ! யார் யார் இருப்பார்களோ! மிகவும் கௌரதையாக நடந்துகொள்ள வேண்டும்" எனப் பலவாறு எண்ணிக் குழப்பமடைந்த அவள் நெஞ்சு உணர்ச்சி வசத்தில் படபடத்தது.

மலர்ந்த முகத்துடன் வாயிற்படியருகிலே நின்று எதிர் கொண்டழைத்த மாயாவின் அலங்காரத்தை இரு கண்களாலும் அள்ளி அள்ளிப் பருகினான் நமச்சிவாயம். குளுமையான தென்றல் வீசும் ஜன்னல் அருகே கிடந்த மிருதுவான சோபாவிலே வந்து உட்கார்ந்து கொண்ட

தும் அவனுக்கு இதெல்லாம் கனவா அல்லது நினைவா என்று ஒரே பிரமிப்பாக இருந்தது.

மோகனா சங்கோஜத்துடனும் ஆச்சர்யத்துடனும் தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டாள். தியாக ராஜனது பிரமாண்டமான பங்களாவிலே வசித்த அனுபவத்தினால் அவள் எதையும் அலக்ஷியமாக நோக்கும் ஒரு சுபாவத்தை மேற்கொண்டிருந்தாள். என்றாலும், அந்த பங்களாவின் ஒரு தனிப்பட்ட அழகு அவளது உள்ளத்தைக் கவர்ந்து, அவளது வியப்பில் ஆழ்த்தியது என்றால் மிகையேயல்ல.

ஜன்னலை மறைத்திருந்த திரைச்சீலை, சுவரிலே மாட்டியிருந்த சித்திரங்கள், தரையில் விரித்திருந்த ரத்ன கம்பளம், மேஜைமீது காணப்பெற்ற பூந்தொட்டி என ஒவ்வொரு பொருளிலும், ரசிகத் தன்மை பிரதிபலித்துக் கொண்டிருந்தது. வீட்டின் எஜமானி பெரிய கலாரசிகை என்பதை அங்குள்ள ஒவ்வொரு பொருளும் அறிவித்துக் கொண்டிருந்தது.

"என் தாயாரை நான் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். உங்களைப் பார்க்க வேணும் என்று அவர்கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள்" என்று தேனினும் இனிய குரலில் கூறிய மாயா, கை தேர்ந்த சித்திரக்காரன் தீட்டிய அழகிய ஓவியம் ஒன்று உயிர் பெற்று அசைந்து செல்வது போல் மிக மிக ஒயிலாக உள்ளே திரும்பிச் சென்றாள். அவளது பொன்நிறக் கழுத்தை அலங்கரித்த முத்து சரங்களின் மஞ்சள் முகப்பில் தொங்கிய வர்ணக் குஞ்சலங்கள், மயிலைப் போல் அசைந்து சென்ற அவளது நடைக்குத் தாளம் போடுவன போல் அவளது நீலநிற ரவிக்கை மீது லேசாக அசைந்த அழகை பிரமிப்புடன் மோகனா வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வாருங்கள்! மாயா உங்கள் இருவரையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். நீங்கள் வந்தது பற்றி ரொம்ப சந்தோஷம்" என்று யாரோ உபசரிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கனவினின்று விழித்துக் கொண்டவள் போல் மோகனா எதிரே நின்ற பெண்மணியை உற்று நோக்கினாள்.

நடுத்தர வயதைத் தாண்டிவிட்டிருந்த அந்த ஸ்திரீ சற்று பூசினாப் போல் தடித்த தோற்றங் கொண்டவளாக இருந்தாள். அவளது கூந்தல் தும்பைப் பூவைப் போல் வெளுத்திருந்தது. அவள் அதைப் பின்னால் அள்ளிச் சொருகிக் காட்டிக் கொண்டிருந்தாள். இவள் அணிந்திருந்த வெள்ளைப் புடவையும் வெள்ளை ரவிக்கையும் அவளது கூந்தலின் வெண்மையை இன்னும் மிகைப் படுத்திக் காட்டிக் கொண்டிருந்தன. பட்டையாக அவளது நெற்றியில் துலங்கிய விபூதியைக் கண்டதும் நமச்சிவாயத்திற்கு அவனையறியாமலே அவளிடம் ஒரு தனிமரியாதையும் பயமும் ஏற்பட்டன.

"உங்களைச் சந்திக்கணும்னு நாங்களும் ரொம் ஆவலாக இருந்தோம். ரொம்ப சந்தோஷம். இப்போது வந்து..!" என்று அவன் உளறிக் கொட்டினான் பதிலுக்கு.

அதற்குப்பின் நீண்ட நேரம் வெகுநாள் பழகியவர்கள் போல், அவர்கள் நால்வரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். மாயா தன் கரங்களால் கொண்டு வந்து உபசரித்த சிற்றுண்டிகளை மறுக்க முடியாது புசித்துவிட்டு, பிரியா விடை பெற்றுக் கொண்டு நமச்சிவாயமும் மோகனாவும் தங்கள் பங்களாவிற்குப் புறப்பட்டார்கள்.

மாயாவின் எழிலிலும், நாகரிகத்திலும், பேச்சு நயத்திலும் முந்திய நாளை விட மோகனா இன்னும்

அதிகம் லயித்துச் சொக்கிப் போயிருந்தாள், பிரமிப்பிலும் ஆனந்தத்திலும் அவளது உள்ளம் நிறைந்திருந்தது.

காரில் ஏறிக்கொண்டதும் அதற்குமேல் கட்டுப்படுத்த முடியாதவள் போல் ஆவலுடன், "மாமா! அவள் நடையில், உடையில், பேச்சில் எல்லாவற்றிலும் கலை ததும்பி நிற்பதைக் கவனித்தீர்களா?" என வியப்புடன் வினவினாள் அவள்.

மொந்தைப் பழைய கள்ளைக் குடித்துவிட்டுக் கூத்தாடும் குரங்கைப் போல் நமச்சிவாயம் குதூகலத்தில் மூழ்கிக்கிடந்தான், "சாக்ஷாத் சரஸ்வதி தேவியே மானிட ரூபத்திலே வந்து விட்டாப் போல அவளைப் பார்த்ததும் எனக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. அவள் தாயார் இருக்கிறாளே, அவள் மகா விவேகியாக இருக்கிறாள். என்ன விநயம்! என்ன மரியாதை! நல்லா வாழ்ந்து உடைந்த குடும்பமாம். பரம்பரையா நடத்தையிலே தெரிகிறது, பார்! 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே; சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'னு தெரியாமலா சொல்லியிருக்காங்க" என்று ஆர்ப்பரித்தான்.

மோகனாவின் கண்களில் திடீரென ஒரு பிரகாசம் தோன்றியது. மாமாவின் பக்கம் சட்டெனத் திரும்பி, தாழ்ந்த குரலில், "மாமா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. யோசனை என்ன, ஆசை என்று தான் வைத்துக் கொள்ளுங்களேன்! மாயாவைப் பார்த்தும் எனக்கு அண்ணனது ஞாபகம் சட்டுனு வந்தது. அண்ணன் அந்தஸ்திற்கும், அவர் கௌரதைக்கும் செல்வத்திற்கும் மாயாவைப் போல ஒரு மனைவி கிடைத்தால் என்று நிறுத்தினான்.

"நான் நினைச்சதையே நீயும் நினைச்சிருக்காயே. என்ன ஆச்சர்யம்! தியாகராஜனுக்கு ஏத்த பொண்ணு

இவதான்னு தீர்மானிச்சுட்டேன்" என்றான் நமச்சிவாயம் இரகசியமான குரலில்.

"அம்மாவைக் கூட்டியாந்து காண்பிச்சால், கட்டாயம் அம்மாவும் நாம் நினைச்சதையே தான் நினைப்பாங்க மாமா? மாயா எத்தனை அழகா இருக்கிறாள், பார்த்தீங்களா?" என்றாள் மோகனா வியப்புடன்.

"ஆமாம், மோகனா, லட்டு போலல்லவா இருக்கிறாள்! இவளைக் கட்டிக்க தியாகுவுக்குக் கொடுத்து வச்சிருக்கணுமே?" என ஒத்துப் பாடினான் நமச்சிவாயம்.

சில தினங்களாக தமயந்தி சஞ்சல வசப்பட்டிருந்தாள். விரைவில் கணவனாகப் போகும் தன் அன்பன் தியாகராஜனிடம் அவள் தங்கள் பிற்கால வாழ்க்கையைப் பற்றி எவ்வளவோ பேச விரும்பினாள். அவனது அந்தரங்க அபிலாஷைகளை இன்னும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், தன்னுடைய இலட்சியங்கள், வாழ்க்கையில் கொண்டுள்ள நோக்கங்கள் யாவும் அவனுக்குப் பூரணமாக விளங்க வைக்க வேண்டும் என்றும் அவள் உள்ளம் விழைந்தது.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அவளது விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக எல்லாம் நடந்து கொண்டிருந்தன. தன் வாழ்க்கைத் துணைவியாகப் போகிற அவளிடம் தனியே சில நிமிஷங்கள் இன்பமாக வார்த்தையாடக்கூட தியாகராஜனுக்குப் பொழுது இருக்கவில்லை. மோகனாவும், நமச்சிவாயமும்,

அமிர்தமும் சதா அவனைச் சூழ்ந்து கொண்டிருந்ததனால், அவனைத் தனியே பார்ப்பதே அபூர்வமாகி விட்டது.

வழக்கம் போல், விடுமுறை தினங்களில் அவளைத் தன் பங்களாவுக்கு அழைத்துச்செல்ல, அவன் சென்று கொண்டு தான் இருந்தான். ஆனால் அப்பொழுதுகூட அவனைத் தனியே சந்திக்க முடியாதிருந்தது. 'அண்ணா! அண்ணா' என மழலை மொழியால் உள்ளங்கவரும் வண்ணம் கொஞ்சியழைத்து உறவாடிய மோகனா, அவனது நிழல் போல் ஒவ்வொரு சமயமும் அவன் கூடவே வந்து கொண்டிருந்தாள்.

தமயந்தி மிகவும் பரந்த நோக்கம் கொண்டவள்தான். தியாகராஜனது தாயையோ, அவனது சகோதரிகளையோ அவள் வெறுக்கவில்லை. அவர்களைத் தன்னுடன் வைத்துப் போஷிக்க வேண்டியது அவனது கடமை என்பதை உணர்ந்திருந்தாள். ஆனால், அந்தக் கடமை அவர்களது இன்ப வாழ்க்கையைப் பெரிதும் பங்கப் படுத்துவதைக் காண அவள் கலங்கினாள். "மணமான பின்பும் இந்தச் சுற்றத்தார்கள் தம்பதியின் சுதந்திரத்தில் பலவாறு குறுக்கிட்டுக் கொண்டிருந்தால்..." என்று எண்ணும் பொழுதெல்லாம் அவளுக்கு ஏற்பட்ட சஞ்சலத்தையும் துயரத்தையும் சொல்லவே முடியாது.

சில தினங்களாக காந்திமதியம்மாளிடமும் அவள் ஒரு பெரும் மாறுதலைக் கவனிக்க நேர்ந்தது, மனத்திற்குள் ஏதோ ஒரு கவலையை வைத்துக் கொண்டு வெளியே சொல்ல இஷ்டமில்லாது தவித்துக் கொண்டிருப்பவள் போன்று அவள் தோன்றினாள். தான் உண்டு, தன் வேலைகள் உண்டு என்று ஒதுங்கிப் போகிறவள் போல் அவள் சிறிதும் உற்சாகமின்றிக் காணப்பட்டாள்.

தங்களது பிற்கால வாழ்க்கை, காந்திமதியின் மாறு பட்ட மனநிலை இவை இரண்டும் தமயந்திக்குப் பெரும் பிரச்சினைகளாக மனத்தைக் குழப்பி மிக்க வேதனை செய்தன. தியாகராஜனிடம் இதையெல்லாம் பற்றி மனம் விட்டுப் பேசி ஒரு வழி ஏன் வகுக்கக் கூடாது? என்று ஒரு எண்ணம் அவளை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அதற்குத் தக்க சந்தர்ப்பம் எப்பொழுது கிடைக்கு மென்று ஏக்கத்துடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வழக்கம் போல் அன்று தமயந்தி விடுமுறை தினங்களைக் கழிக்க பங்களாவிற்கு வந்திருந்தாள். இரவு போஜனத்திற்குப் பிறகு தியாகராஜன் ஆபீஸ் காகிதக் கட்டுகளுடன், தனது பிரத்யேக அறைக்குள்ளே சென்று மறைவதை அவள் கவனித்தாள். தன் உள்ளத்தை வருத்தும் பல விஷயங்களைப் பற்றி அவனிடம் வெளிப் படையாகக் கூறித் தங்கள் பிற்கால வாழ்வைப் பற்றி இருவரும் கலந்து ஆலோசிக்க இது தான் தக்க தருணம் என எண்ணிய தமயந்தி, மிகவும் சிரமப்பட்டு அவ்வளவு மாடிப்படிகளையும் கடந்து அவனது அறையை நோக்கிச் சென்றாள்.

"என்ன வேணும்?" என்று அதட்டிய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

நமச்சிவாயம் அங்கிருந்த பெரிய சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டு சிறிதும் மரியாதையின்றி கால்களை அருகிலிருந்த அழகானதொரு மேஜை மீது நீட்டிக் கொண்டிருந்தான். அவனது அதிகாரமான கேள்வி தமயந்திக்கு மிக்க கோபத்தை உண்டாக்கியது. குப்பென சிவந்து போன தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு "உங்களுக்கு ஒன்றுமில்லை!" என்று வெடுக் கென பதில் அளித்துவிட்டு, அவன் அறையை நோக்கி நடந்தாள். குபீரென ஆசனத்தினின்று பாய்ந்து ஓடி

வந்த நமச்சிவாயம், "இப்பொழுது நீ அங்கே எங்கே போறே? தியாகுவும் அவன் தாயாரும் மோகனாவும் ஏதோ முக்கியமான குடும்ப விஷயத்தைப் பற்றிப் பேசிக் கிட்டிருக்காங்க. நானே அங்கேயிருக்கிறது தப்புன்னு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன்." என்றான் அதட்ட லாக.

"அப்படியா!" என்று வினவிய தமயந்திக்கு அதற்கு மேல் அங்கே நிற்க முடியவில்லை. அவமானமும் துக்க மும் அவளை ஒருங்கே தாக்கின. சிரமப்பட்டுப் பொங்கி வந்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு, அவள் நடுமாறியபடி கீழே இறங்கிச் சென்றாள். "நொண்டிப் பிணம்! இதை யார் கூப்பிட்டாங்க? வீட்டிலே நடக்கிற சகல காரியத்திலும் தலையிட்டுக் கொண்டு, சுத்த அதிகப்பிரசங்கி" என இரைந்து தனக்குள்ளே முணு முணுத்துக் கொண்டான் நமச்சிவாயம்.

அது சமயம் மாடிக்கு வந்து கொண்டிருந்த விஜயா தமயந்தியின் மாறுதல் அடைந்த முகபாவத்தைக் கவனித்துத் திகைப்படைந்து போனாள். "என்ன நடந்தது? என்ன?" என்று வியப்புடன் கேட்டவண்ணம் அவள் தன் தோழியைப் பின் தொடர்ந்தாள்.

"ஒன்றுமில்லை" என்று பதிலளித்த தமயந்தி, அவளுக்குக் காரணத்தைக் கூற மறுத்துத் தன் அறைக்குள் சென்று படுத்துவிட்டாள். விஜாயவிற்கு மனம் அத்துடன் சமாதானமடைந்து விடவில்லை. 'தன் அருமைத் தோழியின் கண்ணில் லேசாகத் துளித்த கண்ணீருக்குத் தக்க காரணம் ஏதோ இருந்துதான் ஆகவேண்டும்; மோகனாவோ, தன் தாயாரோ அவள் மனம் புண்பட ஏதோ கூறிவிட்டிருப்பார்கள்' என எண்ணி வெகுண்டு, அதைக் கேட்டறிந்து அவர்களை உடனடியாகக் கண்டிக்க வேண்டுமென மீண்டும் மாடிக்கு விரைந்து சென்றாள்.

தியாகராஜன் அறையில் அமிர்தம், மோகனா இருவரது உரத்த குரல் உற்சாகமாக ஒலித்துக் கொண்டிருந்தது. மிகவும் சுவாரஸ்யமானதொரு சம்பாஷணையில் அவர்கள் ஈடுபட்டிருப்பதை அறிவிப்பது போல் இடை இடையே தியாகராஜன் சிரிப்பது கேட்டது. நமச்சிவாயம் சினிமாப் பத்திரிகை ஒன்றை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தான். "மாமா!" என்று அழைத்த விஜயா, "இங்கே தமயந்தி சித்த முன்னாடி வந்தாளே, என்ன நடந்தது?" என்று சிறிது கடுமையான குரலில் கேட்டாள்.

பத்திரிகையைச் சடக்கென மூடி மடியில் மறைத்துக் கொண்ட நமச்சிவாயம், அவளை எரித்து விடுகிறவன் போல் விழித்துப் பார்த்துவிட்டு, அந்த நொண்டிச் சனியன் ஏதாவது என்னைப் பற்றிக் கோள் சொல்லித்தா? என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும், எனக்கு அக்கறையில்லை!" என்றான் கோபத்துடன்.

"அப்படியெல்லாம் அவளைப் பற்றிப் பேச வேண்டாம் என்று உங்களுக்குக் கடைசி முறையாக எச்சரிக்கிறேன். அண்ணா காதில் பட்டால் பிறகு பெரிய பொல்லாப்பாக்கி விடும்" என்றாள்.

"அட, ரொம்ப பயமுறுத்துறியே! 'அமிர்தமும் மோகனாவும் தியாகுவோட ஏதோ முக்கிய விஷயம் பேசிக்கிட்டிருக்காங்க, அந்த அறைக்குள்ளே போகாதே' என்று சொன்னேன். அதற்காக அவள் என் தலையை வாங்கி விடுவாளோ! தியாகு வரட்டும், அவனையே நான் கேட்கிறேன்!" என்றான் அழுத்தலாக நமச்சிவாயம்.

"நீங்கள் செய்த காரியம் ரொம்பத் தவறானது. அண்ணாவுக்குத் தெரிந்தால் உங்களை மன்னிக்கவே மாட்டார்! தமயந்தியை அண்ணா கட்டிக் கொள்வதாக ஏற்பாடாகியிருக்கிறது. இன்னும் கொஞ்சநாளில் அவள் இந்த பங்களாவுக்கு எஜமானி. அண்ணாவுடன்

பேசுவதற்கு அவளுக்கு இல்லாத உரிமை உங்களுக்கும் எனக்கும் இங்கே என்ன இருக்கிறது? இனியாகிலும் இந்த மாதிரி பிசகெல்லாம் செய்யாமல் கொஞ்சம் நாக்கிரதையாக இருங்கள்!" என்று சுடச் சுடக் கூறி விட்டுக் கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

"தமயந்தியை தியாகராஜன் மணந்து கொள்ளப் போகிறானா! ஏற்பாடாகி இருக்கிறதாமே! இதென்ன கூத்து!" என்று வியப்பும் அதிர்ச்சியும் எய்திய நமச்சிவாயம் வெகு நேரம் ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

அன்று இரவே தன் அருமை சகோதரியிடம் இந்தத் திடுக்கிடும் சங்கதியைக் கூறாவிட்டால் நமச்சிவாயத்தின் தலை வெடித்து விடும் போலிருந்தது. ஆகவே, படுக்கப் போகுமுன் அமிர்தத்தையும் மோகனாவையும் தனியே அழைத்து, இரகசியமான குரலில் விஜயா கூறியதை, இன்னும் தன் கற்பனைப் பூச்சுகளுடன் எடுத்துக் கூறி, அவர்களை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டான்.

அன்று இரவு இந்த மூவருக்கும் தூக்கமே வரவில்லை. தமயந்தியைத் தியாகராஜன் மணந்து கொண்டால் காந்திமதிக்கு அங்குள்ள செல்வாக்கு அதிகரித்து விடும் என்றும், அதற்குப் பிறகு தமயந்தியுடன் கூடி அவள் தன்னை அப்புறப்படுத்த முயற்சிக்கக் கூடும் என்றும் நினையடைந்து போன அமிர்தம் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டாள்.

"அழகுமிக்க அந்த பங்களா, அளவற்ற செல்வம், ஆடம்பரமான சுகபோக வாழ்க்கை இவையனைத்தையும் கேவலம் கால் கூடச் சரியாக அமையாத ஒரு நொண்டிப் பெண் அனுபவிப்பதா? தன்னால் மிகவும் துச்சமாகக் கருதப்படும் ஒருத்தி, சில தினங்களில் இந்த வீட்டிற்கு எஜமானியாவதா! தமயந்தியை அண்ணன் மணந்து

கொண்டுவிட்டால், காந்திமதி அத்தையின் அதிகாரத்திற்குக் கேட்கவா வேண்டும். அவர்கள் அனைவரையும் பங்களாவை விட்டு வெளியேற்ற இரண்டு பேரும் கூடித் திட்டம் போட்டு விடமாட்டார்களா!" -என்று எண்ணிப் பொறாமையினால் கொந்தளித்த மோகனாவிற்குத் தூக்கம் வர மறுத்தது.

மிருதுவான பஞ்சணைகள் நமச்சிவாயத்திற்கு உறக்கத்தைக் கொடுக்க மறுத்தது. அறைக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாக அவன் உலாவிக் கொண்டிருந்தான்.

தன்னை அதட்டி அவமானப்படுத்தியதாக தியாக ராஜனிடம் அந்தப் பெண் சொல்லிவிடப் போகிறாள் என அவன் சிறிதும் அஞ்சவில்லை. அப்படிச் செய்தால் சமாதானம் கூற அவனுக்கா தெரியாது? கெஞ்சினால் மிஞ்சவும், மிஞ்சினால் கெஞ்சவும் செய்து வாழ்ந்துவந்த நமச்சிவாயத்திற்கு இந்த மாதிரியான சிறு சந்தர்ப்பங்களைச் சமாளிக்கவா தெரியாது? அவன் கவலைப்பட்டதெல்லாம் தனது பிற்கால வாழ்க்கையைப் பற்றித்தான். தமயந்தி அந்த வீட்டின் எஜமானியாகி விட்டால், கட்டாயமாக காந்திமதியின், அதிகாரம் வலுத்துப் போய்விடும். கேட்பாரின்றி அட்டகாசமாக வாழ்ந்து வந்த தனது வாழ்க்கைக்கு அந்தக் கிராதகி முற்றுப்புள்ளி வைத்து விடுவாள்! இதற்கென்ன வழி செய்யலாம் என்று எண்ணி, ஒரு யோசனையும் பிடிபடாமல் பொழுது விடியும் மட்டும் கூட்டிலடைக்கப்பட்ட நரி போல் அறையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

மறுநாள் தமயந்தி ஆசிரமத்திற்குத் திரும்பும் வரை பொறுமையுடன் காத்திருந்த அந்த மூவரும் உடனே ஒன்றாகக்கூடி, சதியாலோசனை செய்யத் துவங்கினர். தமயந்தி அந்த வீட்டின் எஜமானியானால் தங்களது சுதந்திரம் கட்டாயம் பங்கப்படும் என்று உணர்ந்த

அந்த மூவரும் வரப்போகும் இந்த விவாகத்தை எப்பாடு பட்டாவது தடுத்துவிட வேண்டும் என்று ஏக மனதாய்த் தீர்மானித்தனர்.

"பச்சைக்கிளி போல் எத்தனையோ பெண்கள் அழகழகாக இருக்கையிலே இந்த நொண்டிப் பிணத்தைத் தானா என் மகனுக்குக் கட்டி வைக்கணும்? எல்லாம் காந்திமதி கடங்காரி வேலையாக இருக்கும்!" என்று ஆத்திரத்துடன் கையை நெரித்தாள் அமிர்தம்.

"ஏன் சிநேகிதிகளில் மாயாவைப் பார்த்தால் சொல்லுங்க, அம்மா. அண்ணனுக்கு ஏற்ற மனைவி அவள்தான். அவள் வீட்டில் இருந்தாலே ஒரு பெரிய அழகு! இவ்வளவு செல்வாக்குடன் பலரோடு பழகுகிற அண்ணா, தம்முடன் கூட மனைவியைப் பல பொது இடங்களுக்குக் கூட்டிச் செல்ல நேரிடுமே! இந்த நொண்டிதான் என் மனைவின்னு சொல்லிக்க அவருக்கு வெட்கமாக இருக்காதா? இதெல்லாம் அத்தை செய்த சூழ்ச்சி!" என்று ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தாள் மோகனா.

"வெளியே போகிறதை விடு! இந்தச் சனியனைக் கட்டிக் கொண்டால் வீட்டிலே தான் மனுஷனுக்கு என்ன சுகம்? தியாகு ஆபீஸிலிருந்து களைச்சு வந்தா, ஒரு காப்பி பலகாரத்தை அவசரமாக எடுத்துக்கொண்டு ஓடி உபசரிக்க இவளால் முடியுமா? காலடி எடுத்து வச்சு நடக்க நாலு நாழியாகாது! அவன் அந்தஸ்துக்குத் தக்க இடத்திலே ஊரிலே பெண்களுக்காக பஞ்சம்? மோகனா சொல்கிறாப் போல அந்தப் பெண் மாயாதான் உன் மகனுக்குத் தக்க பொருத்தமான மனைவி. காந்தி மதிக்கு ஆனாலும் இத்தனை கெட்ட எண்ணம் கூடாது! தன் தங்கச்சி மகள் என்பதற்காக, ஒரு நொண்டிப் பெண்ணைக் கொண்டு வந்து உன் மகனுக்குக் கட்டி வைப்பதா? இதை வெளியே சொல்லாம எதற்காக

ரகசியமா வைச்சிருந்தாளாம்? நீ கூடாதுன்னு சொல்லித் தடுத்து விடலாம் என்கிற பயந்தானே?" என்று கையை ஆட்டி, தலையைக் குலுக்கி ஆத்திரத்துடன் பேசினான் நமச்சிவாயம்.

"நாம் பேசி என்ன நடக்கப்போகுது? நீங்க சொல்றதைக் கேட்டா, அந்தப் பெண் மாயா நல்ல பொருத்தமான வரனாட்டமா தோண்றது. பெண் அழகு. நம்ப குலத்தைச் சேர்ந்தவங்கதான்னு சொல்கிறீங்க. தியாகராஜன் மனசுக்கு அப்படித் தோணணுமே?" என்றாள் அமிர்தம் கவலையுடன். "ஒரு தடவை அவளை நேரில் பார்த்துவிட்டால் அப்புறம் பாரேன். எந்த மனுஷனும் அப்படியே சொக்கிப்போய் விழுந்துவிடுவான்! நான் தீர்மானிச்சு விட்டேன். அமிர்தம், மாயாவை நம்ப தியாகுவுக்குக் கட்டி வைச்சுடறதுன்னு!" என்று ஆர்ப்பாட்டமாக நாற்காலியில் கையை ஓங்கிக் குத்திப் பேசினான் நமச்சிவாயம்.

"மாயாவை அண்ணியாக அடைவது பெரிய பாக்கியம் என்று கருதுகிறேன் நான்!" என மோகனா தன் கண்களை உருட்டி ஆமோதித்தாள்.

மாயா வேண்டியதும் அது ஒன்றுதான். தியாகராஜனை நேருக்கு நேர் சந்தித்து ஒரு சிறு சம்பாஷணை நிகழ்த்த சந்தர்ப்பம் ஒன்று தான் அவளுக்குத் தேவையாக இருந்தது. அதற்குமேல் அவளுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. தன்னுடைய சாமர்த்தியத்தினாலும் பேச்சினாலும் தியாகராஜனைத் தன்பால் கவர்ந்து கொள்ள முடியும் என அவள் பூரணமாக நம்பினாள். அந்தச் சிறு உதவியை நாடியே அவள் மோகனாவையும் நமச்சிவாயத்தையும் தன் பங்களாவிற்கு அடிக்கடி அழைத்து நட்புரிமை பாராட்டி வந்தாள். தங்களுக்குப் பிடிக்காத திருமணத்தைத் தடுத்துவிட ஆலோசித்த

மோகனாவும் அவளது மாமனும், கால தாமதமும் செய்யாது தங்கள் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள். அவர்களது முயற்சி, மாயாவுக்கு மிக்க அனுகூலமாக இருந்தது என்று கூறத் தேவையில்லை.

சமயம் நேர்ந்தபோதெல்லாம் மோகனா தன் புது சிநேகிதியைப் பற்றி தியாகராஜனிடம் புகழ்ந்து பேசி அவளைக் காணவேண்டும் என்ற ஒரு ஆவலை அவனுக்கு உண்டாக்கிக் கொண்டிருந்தாள். மாயாவின் பங்களாவிற்குச் சென்ற சமயமெல்லாம் நமச்சிவாயம், தியாகராஜன் அவளைப் பார்க்க விரும்புவதாக ஒரு பொய்யைக் கூறி மாயாவை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான்.

இவ்வாறு நாலா பக்கமும் எல்லாரும் சேர்ந்து மூளையையும் கற்பனையையும் உபயோகித்து மிகுந்த சிரமத்துடன் உருவகித்த இந்தத் திட்டம் ஒரு நாள் முடிவில் வெற்றி பெற்றுவிட்டது.

நமச்சிவாயம், தியாகராஜன், மோகனா மூவரும் உல்லாசமாகச் சிறிது நேரம் பொழுது போக்காக வழக்கமாகச் செல்லும் அந்தப் பிரபல கிளப்பிற்குச் சென்றிருந்தார்கள். தேநீர் அருந்திக் கொண்டிருந்த அவர்களது மேஜையருகில் மோகனா போட்டிருந்த திட்டப்படி மாயா மிகவும் ஒயிலாக நெருங்கி வந்து, "ஹல்லோ, மோகனா! உன்னைப் பார்த்து எவ்வளவு நாள் ஆயிற்று?" என்றாள் குயிலைப் பழிக்கும் குரலில்.

தியாகராஜனுக்குச் சிந்திக்கக்கூட நேரம் கொடுக்க விரும்பாதவன் போல், "இதுதான் மோகனாவுடைய சிநேகிதி மாயா? சும்மா சொல்லிக்கிட்டிருக்குமே அந்தப் பெண்தான்!" என்று பல்லைக் காட்டினான் நமச்சிவாயம் உற்சாகத்துடன்.

"ஐயோ! என்னைப்பற்றி என்ன உங்கள் அண்ணாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாய் மோகனா?" எனக் கொஞ்சலாகக் கேட்ட அந்தப் பெண்ணை நிமிர்ந்து பார்த்தான் தியாகராஜன். ஆச்சர்யத்தில் சில நிமிஷங்கள் அவனால் பேசவே முடியவில்லை.

"உட்காருங்கள்! உங்களைச் சந்திக்க மிக்க ஆவலாக இருந்தேன்" என்று தன் எதிரே கரங்குவித்து நமஸ்கரித்து நின்ற அந்த அழகியைப் பிரமிப்புடன் பார்த்த வண்ணம்.

மாயா நாற்காலியில் அவனது அருகில் சட்டென அமர்ந்து கொண்டாள். தியாகராஜனது கண்களில் தோன்றி நின்ற அந்தப் பிரமிப்பு, அவளது வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

சில தினங்கள் சென்றன. அன்று இரவு வெளியிலிருந்து திரும்பி வந்த தியாகராஜன் தன் அறைக்குள்ளே சென்று சோபாவின் மீது சாய்ந்து கொண்டான். தன் சகோதரிகளிடமோ, தாயாரிடமோ வழக்கம் போல் அவன் ஏதும் சம்பாஷிக்கவில்லை. தன் உள்ளத்தில் காட்டுத் தீ போல் திடீரென தோன்றியிருந்த நூதனமான அந்த உணர்ச்சியைத் தனிமையிலே இருந்து அனுபவிக்க விரும்பினான்.

எங்கு திரும்பினாலும் அவனது மனக்கண் முன், அந்த அழகிய முகமே வந்து நின்றது. அவனது காதுகளில் இனிய அந்த கொஞ்சல் மிகுந்த குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவனையுமறியாது அவனது கரம்,

கோட்டின் கழுத்துப் பட்டை முகப்பிலே சொருகியிருந்த பட்டு ரோஜாவை மெல்லத் தடவியது.

தன்னுள்ளே பலவாறு சிந்தித்து பிரமிப்படைந்து போன அவன், இருப்புக்கொள்ளாது எழுந்து அறைக்குள்ளே மேலும் கீழும் உலாவினான். சிந்தனையுடன் ஜன்னல் அருகே வந்து நின்று கொண்டு இருளில் மூழ்கிக் கிடந்த பங்களாவின் அழகிய தோட்டத்தை வெறித்துப் பார்த்தான். குளுமையான காற்றினூடே மிதந்து வந்த மல்லிகை மலரின் மணம் அவனது மேனியைச் சிலிர்க்க வைத்தது. கன்னங் குழிய லேசாகச் சிரித்துக் கொண்டு நின்ற மாயாவின் எழில் மிக்க வதனம் அவனது நினைவை மீண்டும் ஓடிவந்து வியாபித்துக் கொண்டது.

தியாகராஜன் அப்பொழுதுதான் அவளது பங்களாவினின்று திரும்பி வந்திருந்தான். மாயா விடுத்த வேண்டுகோளைத் தட்ட முடியாது அன்று சாயங்காலம் அவன் அவளது வீட்டிற்குத் தேநீர் அருந்தச் சென்றிருந்தான். வழக்கம்போல் அவன் தன்னுடன் தன் சகோதரி மோகனாவையோ மாமாவையோ அழைத்துச் செல்லாது தனியே சென்றிருந்தான்.

ஆடம்பரத்திலும் பகட்டான வாழ்விலும் மோகம் கொண்டிருந்த அவனது மனத்தை மாயாவின் அன்றைய அலங்காரம் ஒரு நொடிப் பொழுதில் கவர்ந்து கொண்டுவிட்டது. கலை உணர்ச்சி ததும்பி நின்ற அவளது சிங்காரத்தையும் அழகையும் பிரமிப்புடன் கண்களால் பருகிக் கொண்டிருந்த அவனது உள்ளம் அவனையும் அறியாது ஏனோ தமயந்தியின் தோற்றத்துடன் அவைகளை ஒப்பிட்டுக் கொண்டிருந்தது.

"தாங்கள் இன்று வராது போய் விட்டால், என்ற கவலையில் எனக்கு எதிலும் மனம் ஓடவில்லை!"

என்று வெகுநாள் பழகியவள் போல் உரிமையுடன் கொஞ்சலாகப் பேசிய மாயா. வெள்ளிக் கோப்பைகளில் தேநீரைத் தன் கரங்களால் வார்த்து மேஜை மீது கொண்டு வந்து வைத்தாள்.

"அதிக நேரம் தங்களைக் காக்க வைத்து விட்டேனோ!" என்று வினவிய தியாகராஜன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்வையைச் செலுத்தினான்.

மல்லிகையோ அல்லது சந்தனப் பொடியின் மணமோ என்று ஊகிக்க முடியாத இனிமையானதொரு வாசனை லேசாக அறை முழுவதும் வீசிக் கொண்டிருந்ததை உணர்ந்தான்.

"இங்கே நுழைந்ததும் எனக்குச் சட்டென்று கோயிலின் நினைவு ஏற்படுகின்றது." என்றான் ஆச்சர்யத்துடன்.

"யார் வீட்டிலும் உபயோகிக்கும் சாதாரண ஊதுவத்திகள்தான் இவை. இவற்றின் மணத்தைத் தாங்கள் தெய்விக மனம் என்று புகழ்ந்து பாராட்டுகிறீர்களே! இதே போல் என் அன்பையும் நட்பையும் தெய்விகமானது என்று தாங்கள் பாராட்டினாலும் நான் ஆச்சர்யப்படுவதற்கில்லை!" என்று மோகனமாகச் சிரித்த மாயா, தேநீர்க் கோப்பையை எடுத்து அவனிடம் அளித்தாள்.

சங்கோஜத்தினால் தியாகராஜன் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. உணர்ச்சி வசத்தில் அவனது கரங்கள் நடுங்கின. அதற்கென்ன பதில் கூறுவதென்ற குழப்பத்துடன் மேஜை மீது வைத்திருந்த பூந்தொட்டியைப் பார்த்து, "அ! இந்த ரோஜா மலர்கள் இவ்வளவும் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்தவைகளா?" என்று வினவினான்.

பூந்தொட்டியில் கொத்துக்களாகச் சொருகப்பட்டிருந்த பட்டு ரோஜா மலர்களிலிருந்து மிகவும் பெரிதான ஒரு புஷ்பத்தை மாயா தன் கரத்தில் எடுத்தாள்.

"தங்கள் பங்களா தோட்டத்துடன் எங்கள் வீட்டுச் சிறிய தோட்டத்தை ஒப்பிட்டால் மலைக்கும் மடுவுக்கும் போல் தான்! ரோஜாவிலேயே பல ரகங்கள் தங்கள் தோட்டத்திலிருப்பதாக மோகனா எனக்கு சொல்லியிருக்கிறாள். இருந்தாலும் இந்த ரோஜா மலர்களுக்கு ஒரு தனிப்பட்ட விசேஷம் இருக்கின்றது. நானே என் கரங்களால் நட்டு, தினமும் தண்ணீர் விட்டு ஆசையாக வளர்ந்த செடியிலே மலர்ந்த புஷ்பங்கள் இவைகள். இது எனது நட்பின் காணிக்கையாக இருக்கட்டும்" என்று அவனது கோட்டுப் பட்டை முகப்பில் சொருகினாள்.

அப்போது மாயாவின் கூந்தலில் அலங்கரிக்கப்பட்டிருந்த மல்லிகை மலரின் மணம் குப்பென்று அவனது முகத்தில் வந்து வீசியது. நெற்றியின் மீது அரும்பிய வியர்வைத் துளிகளைக் கைகுட்டையினால் துடைத்துக் கொள்ளும் பாவனையில் தியாகராஜன் தன் முக பாவத்தை மறைத்துக் கொண்டான். வர்ணக் குழம்பினால் மின்னிய நகங் கொண்ட தந்தத்தை நிகர்த்த அந்த இரு கரங்களையும் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போன்ற ஓர் அவா அவனது உள்ளத்திலே தீவிரமாக ஏற்பட்டது. ஆனால் பதிலுக்கு மிக்க அவசரம்" என்று சங்கோசத்துடன் முனகினான்.

தேநீர்க் கோப்பையைக் கீழே வைத்துவிட்டு மாயா தன் அழகிய முகவாயை இடது கரத்தினால் லேசாகத் தாங்கிக் கொண்டு மேஜை மீது சாய்ந்து கொண்டாள். கனவு மிதந்தோடும் அழகிய கருவிழிகளால் அவனை ஏறிட்டுப் பார்த்து, "என்னால் நம்பவே முடியவில்லை.

இதெல்லாம் உண்மையா என்று எனக்கு இன்று ஒரு சந்தேகமாக இருக்கிறது. 'காந்தி பென்ஸில் கம்பெனியின் அதிபரும், நகரத்திலே மிக்க செல்வாக்கும் உள்ள ஸ்ரீமான் தியாகராஜன் அவர்கள் ஏழைப் பெண்ணான என் வீட்டில் வந்து தேநீர் அருந்த ஒப்புக் கொண்டது சாதாரணமாக நடக்கக் கூடிய சம்பவமா? என்னை ஒரு பொருட்டாக மதித்து இவ்வளவது பெரிய கௌரவத்தை அளித்ததற்கு நான் என் நன்றியை எப்படித் தெரிவித்துக் கொள்வது என்றே விளங்கவில்லை!" என்றாள் மிகவும் பாசமாக.

அழகு மிக்க மாயாவின் வாயினின்னு வந்த புகழ்ச்சி தியாகராஜனது சிந்தையைக் கிறுகிறுக்க வைத்தது. "நான் என்ன அவ்வளவு பெரிய பிரபல மனிதன்! தாங்கள் என்னை வீணாகப் புகழாதீர்கள்" என்றான் உற்சாகமாகச் சிரித்துக் கொண்டே.

"உங்களது பெருமை உங்களுக்கு அதிகம் தெரியாதிருப்பதில் வியப்பில்லை. விளையாடுபவர்களைக் காட்டிலும், வேடிக்கை பார்ப்பவர்கள் தானே பந்தயத்தை அதிகம் ரஸிக்கிறார்கள்? தங்களது அந்தஸ்தைக் கண்டு மனம் பிரமித்துப் போயிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் அடியாளும் ஒருத்தி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றாள் பகட்டாக.

தியாகராஜன், முகமும் அகமும் பரவசமடைந்து போனான். "அப்படியா! அப்படியானால் நானும் ஒன்று தங்களைப் பற்றித் தெரிவிக்க விரும்புகிறேன். தங்கள் பேச்சு, தோற்றம். செய்கை ஒவ்வொன்றிலும் கலையின் பரிபூரண ஒளி வீசுகின்றது. அழகும் கலை உணர்ச்சியும் ஒருங்கே வாய்ந்த பெண்மணியை இன்றுதான் முதல் தடவையாக நான் சந்திக்கின்றேன். தங்களது நட்பு கிடைத்ததைப்பற்றி நான் மிக்க பெருமைப்படுகிறேன்" என்றான் உல்லாசமாக, சிறிது துணிவுடன்.

நாணத்தினால் லேசாகச் சிவந்த தன் முகத்தைக் கொஞ்சலாக ஒரு முறை மாயா குலுக்கினாள். பிறகு "வியாபாரத்திலே ஈடுபட்டவர் என்றதும் மிகவும் கடினமான உள்ளம் படைத்தவர் என்று எண்ணியிருந்தேன், ஏது தாங்கள் பெரிய ரஸிகராக இருக்கிறீர்களே! என்னை வெகுவாகப் புகழ்ந்து 'கலைராணி' என்று மறைமுகமாக அழைக்கிறீர்கள். அதற்குப் பதில் தங்களை நான் 'ரஸிகமன்னர்' என்று வெளிப்படையாகக் கூறி விடுகிறேன். அந்தப் பெயர் தங்களுக்கு ஓரளவு பொருத்தம் கூட. ராஜன் என்ற தங்கள் பெயரை மன்னன் என்று பசுந்தமிழில் மாற்றியமைக்கலாம் அல்லவா?" என்று கேட்டு விட்டுப் பச்சிளங்குழந்தை போல் சிரித்தாள்.

"தமிழின் மீது தங்களுக்கு மிக்க விருப்பம் உண்டோ? என்று தியாகராஜன் அவளது அழகிய முகத்தை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு வினவினான்."

"அழகான எந்த விஷயங்கள் மீதும் எனக்கு மிகவும் விருப்பம் உண்டு. உண்மையைச் சொன்னால் தாங்கள் என்னை ஒரு பைத்தியக்காரி என்று தான் எண்ணிக்கொள்வீர்கள்! தங்கள் கம்பெனியில் உற்பத்தி செய்யும் பென்ஸில்கள் மீது பூசப்பட்டுள்ள அழகிய சிவப்பு வர்ணம் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் அவைகளை உபயோகிக்கா விட்டாலும், அந்த ஒரு காரணத்திற்காக, அவைகளைப் பத்திரமாகச் சேர்த்து வைத்திருக்கிறேன். பாருங்கள்!" என்று கூறிவிட்டு மின்னலைப் போல் உள்ளே சென்று ஒரு தந்தப் பெட்டியை எடுத்து வந்து அவன்முன் திறந்து காட்டினான்.

"உங்களுக்கு இந்த வர்ணம் இவ்வளவு பிடிக்கிறதா? ...அடாடா! சாதாரண பென்ஸில்களை இவ்வளவு உயர்ந்த தந்தப் பெட்டியில் பத்திரமாகச் சேர்த்து வைத்திருக்கிறீர்களே?" என்று சிறிது ஆச்சர்யத்துடன் கேட்டான் தியாகராஜன்.

"உங்களுக்கு இவைகள் மிகவும் சாதாரணமாகத் தோன்றலாம். இவைகள் மிகவும் அரிய பொக்கிஷம் போல் தோன்றுகின்றன. ஏனெனில் இவைகளைத் தயாரிக்கும் அந்தப் பிரபல மனிதன் மீது, எனக்கு அவரைப் பாராமலிருக்கும் போதே இத்தனை மதிப்பு!" என்றாள். உணர்ச்சி வசத்தில் பேசுகிறவள் போல் அவளது அதரங்கள் லேசாகத் துடித்தன. கண்களில் மெல்லியதாகக் கண்ணீர்த் திரை ஒன்று படர்ந்தது.

அதைக் கண்ட தியாகராஜனுக்கு என்ன பதில் கூறுவதென்றே தோன்றவில்லை. நூதனமான ஒரு இன்ப உணர்ச்சியில் அவன் உள்ளம் கட்டுக்கடங்காது துடித்துக் கொண்டிருந்தது.

"என்னை வெகுவாகப் பாராட்டி எனது சிறுமைகளை உணரச் செய்கிறீர்கள்" என்றான் முடிவில் பதிலுக்கு.

"புகழ்ச்சியேல்ல... என் உள்ளத்திலே பொங்கி நிற்கும் உண்மை என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விட்ட மாயா, அருகில் வந்து அமர்ந்து கொண்டாள். அதற்குப் பின் வெகுநேரம், பல பொது விஷயங்களைப் பற்றி நேரம் போவது தெரியாது இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

பலவாறு சிந்தித்துக் கொண்டு நின்ற தியாகராஜன் ஜன்னலினின்று திரும்பி ஆசனம் ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டான். "மாயாவைப் போல் இவ்வளவு இனிமையாகவும் மனத்தைக் களிப்பூட்டும் வகையிலும் தமயந்திக்குப் பேசவோ, நடந்து கொள்ளவோ... ஏன் தெரியவில்லை?" என்று தனக்குள்ளே எண்ணிப் பார்த்த அவனுக்கு, தமயந்தி மீது காரணமற்றதொரு கோபம் ஏற்பட்டது.

'அதிகம் படித்துவிட்ட கர்வம்' என்று தனக்குள்ளே மெல்ல முணுமுணுத்தான், இது நாள் வரை அவன்

தமயந்தியால் பாராட்டாத ஒரு சிறுகுறை அன்று இரவு அவன் மனத்தை வெகுவாக உறுத்தியது.

"தோகை மயில் அசைவதைப் போல், மாயா பக்கத்திலே நடந்து வருவதே ஒரு உல்லாசமாகவும் அழகாகவும் காண்கிறதே! என்ன இருந்தாலும் தமயந்தியின் கால் னம் மறந்துவிடக்கூடிய விஷயமல்ல" என்று பலவித சிந்தனைகள் அவனைக் குழப்பிக் கொண்டிருந்தன. இரவு போஜனத்தின் பொழுது காந்திமதி, "என்ன ராஜா இன்னிக்கு ஒரு மாதிரியா இருக்கியே? பசிக்கலையா? உடம்புக்கு ஏதாச்சும்...' என்று கவலையுடன் வினவினாள்.

"ஒன்றுமில்லை, அத்தை! ஆபீசில் இன்று அதிக வேலை. ஒரே களைப்பாக இருக்குது" என்று பதிலளித்த தியாகராஜன் மனத்தில் அந்தக் கேள்வி சுருக்கெனத் தைத்தது. ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டவன் போல், அவன் அத்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் கூசியவனாக, எழுந்து கையைக் கழுவிக் கொண்டு அவசரமாக மாடிக்குச் சென்று விட்டான்.

அறையை அடைந்ததும் விளக்கைப் படக்கென அணைத்து விட்டு, தொப்பென்று படுக்கை மீது உட்கார்ந்து கொண்டான். தமயந்தி மீது ஏற்பட்டது போன்ற அதே காரணமற்ற ஒரு எரிச்சல் அத்தை மீதும் அது சமயம் அவனுக்கு ஏற்பட்டது. சுதந்திரமான அவன் வாழ்க்கையிலே அனாவசியமாகக் குறுக்கிட்டு அவனது சந்தோஷத்தையே நாசப்படுத்த வந்தவர்கள் போல் அவ்விருவரும் அவனுக்குத் தோன்றினார்கள். அவர்களிருவரது பிணைப்பினின்று தப்ப முடியாது தவிக்கிறவன் போல் ஓர் உணர்ச்சி ஏற்படவே, மிகவும் வெகுண்ட தியாகராஜன் போர்வையைப் பரபரவென இழுத்துத் தன் முகத்தை மூடிக்கொண்டு தூங்க முயற்சித்தான்.

ஆனால் மாயாவியின் நினைவு அவனைத் தூ
விட்டால்தானே!

கடும் புயலைப் போல் மிக்க வலிமையுடன் தா
ரென்று மனித உள்ளத்தைத் தாக்கும் இந்த தனிப்பட
பாசத்திற்கு எந்த விதமான கட்டுப்பாடும் இருந்ததில்ல
இருக்கப் போவதில்லை. வேதாந்த மனப்பான்மை
மிக்கவர்கள் இதை விதியென்றும், பகுத்தறிவு நம்பிக்
கொண்டவர்கள் இதை மோகம் என்றும், வெவ்வே
பெயர்களால் அழைத்தாலும், இதனால் விளையும் பய
ஒன்றே தான். புயல் போன்ற தன் அபார சக்தியினா
மனித உள்ளத்தைக் கலக்கி, அறிவை மழுங்கச் செ
விடுவதனால், "இப்படியும் நடக்குமா? இவனா இப்
யெல்லாம் நடந்து கொள்கிறான்?" என்று அதிசயிக்
அளவு பல நிகழ்ச்சிகளை உண்டு பண்ணி விடுகின்

மாயாவுடன் நெருங்கிப் பழகத் துவங்கிய
தினங்களில் தியாகராஜன் முற்றிலும் புதிய மனிதனா
மாறிவிட்டான். இந்தப் புதிய பாசம் அவனது சிந்தனை
யைச் சதா வியாபித்துக் கொண்டிருந்ததனால் வ
தொழில், தன் கடமை முதலிய எல்லாம் அவனு
அறவே மறந்து போயின.

திடீரென்று அவனிடம் காணப்பட்ட மாறுதலா
நடத்தையை அவனது சுற்றத்தார்கள் கவனிக்கத் தவற
யில்லை. அமிர்தம், நமச்சிவாயம், மோகனா முதலா
வர்கள் இப்படிப்பட்ட ஒரு மன மாறுதலை மிக
விரும்பி, அதற்கு முன் கூட்டியே ஏற்பாடுகள் செய்த

களாதலினால், தங்கள் முயற்சி வெற்றி பெற்றுவிட்டதைக் கண்டு உள்ளம் புரித்துப் போனார்கள்.

எவ்வளவோ உயர்வாக மதித்து வந்த அண்ணன், நேர்மையற்ற ஒரு பாசத்திற்கு இலக்காகி, தன் கடமை யினின்று தவறிக் கொண்டிருப்பதை உணர்ந்த விஜயா, மனம் புழுங்கிப் போனாள். தன் அருமைத் தோழியின் நிலையை எண்ணி அவள் வெகுவாக வருந்தினாள். இதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த தன் தாய், மாமன், தங்கை மூவர் மீது அவளுக்கு ஏற்பட்ட கோபமும் வெறுப்பும் கொஞ்ச நஞ்சமல்ல.

தமயந்தியால் முதலில் இதை நம்பவே முடியவில்லை. தியாகராஜனது மாசற்ற நடத்தையில் அவள் பூரண நம்பிக்கை வைத்திருந்தாள். உண்மையைக் கண்கூடாகக் கண்டபொழுது அவள் மனம் பெரும் அதிர்ச்சியை அடைந்து போயிற்று. களங்கமற்ற அவளது அன்பைத் திரஸ்கரித்து விட்டு, தன் செய்கையைப் பற்றிச் சிறிதும் அவன் கவலைப்பட்டவனாகத் தோன்றவில்லை. தனது அபூர்வமான நடத்தை தமயந்தியின் உள்ளத்தை எவ் வளவு நோகச் செய்யும் என்பதையும் அவன் சிந்தித்துப் பார்க்கவேயில்லை.

தன் பால் அவனுக்கு திடீரென ஏற்பட்டிருந்த மன மாறுதலை எண்ணி அவள் உள்ளம் படாதபாடுபட்டது. தன் மதிப்பை அதிகம் போற்றும் அவள், தனது துயரத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளச் சிறிதும் விரும்பவேயில்லை. அதனால் அவள் தன் சிநேகிதி விஜயாவிடமோ அத்தை காந்திமதியிடமோ இதைக் குறித்துப் பேசவேயில்லை. மௌனமாகப் பார்த்தும் பாராதவள் போல் இருந்தாலும், துயரத்தின் சுமையைத் தாளாது அவள் உள்ளம் வேதனையில் துடித்துக் கொண் டிருந்தது. கடந்து போன இன்ப நினைவுகளால் தன் உள்ளத்து வேதனையை அதிகரிக்கச் செய்த அவனது

பங்களாவை அவள் பார்க்கவும் விரும்பவில்லை. ஆகவே, வழக்கம் போல் விடுமுறை தினங்கள் அவர்களுடன் உல்லாசமாகக் கழிக்க அங்கே செல்வதை அடியோடு நிறுத்திக் கொண்டு விட்டாள்.

காந்திமதியம்மாள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள். எவ்வளவோ சிரமப்பட்டு வளர்ந்து மனிதனாக்கி மேம்பாடடையைச் செய்திருந்த தியாகராஜன் தன் கண்முன்னே காமதூரனாகி, நெறி தவறிப் போய்க் கொண்டிருப்பதைக் காண அவளால் சகிக்க முடியவில்லை.

மாயாவின் அன்பிற்கு முன் அவனுக்கு அந்தஸ்து, செல்வம், கடமை எல்லாம் திருணமாக காணப்பட்டன. அவளுடன் நெருங்கிப்பழகத் துவங்கியதிலிருந்து அவனது சொந்தச் செலவுகள் ஒன்றுக்கு நூறு மடங்காக அதிகரித்து விட்டிருந்தன. நகைக்கடைகளிலிருந்தும், துணிக் கடைகளிலிருந்தும் அடிக்கடி பெரும் தொகைகளுக்கு 'பில்'கள் அவனது பெயருக்கு வந்த வண்ணமிருந்தன. ஒரு சிறுவிஷயத்திற்கும் காந்திமதியம்மாளிடம் கலந்து யோசிக்கும் சுபாவமுடைய அவன், இப்பொழுதெல்லாம் தன் அத்தையிடம் தன் காரியங்களைப் பற்றிப் பேசுவது கௌரவக் குறைவென எண்ணினான்.

அவனது தோற்றத்திலும் மிக்க மாறுதல் ஏற்பட்டிருந்தது. ஆடை அலங்காரத்தில் ஆடம்பரம் இன்னும் அதிகரித்து விட்டிருந்தது. மிதமிஞ்சிய கேளிக்கை நிறைந்த வாழ்க்கை அவனது ஆரோக்கியத்தைச் சிறிது குலைத்து விட்டிருந்தது. இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு காந்திமதியம்மாளால் வெகுநாட்கள் வரை இருக்க முடியவில்லை. அமிர்தம் வந்து குடியேறிய பின்பு வீட்டில் அப்போதைக்கப்போது நிகழ்ந்த சிறு குழப்பங்களில் நமக்கென்ன என்று ஒதுங்கிப் போவது போல் இந்த விஷயத்தை அவள் அசட்டை செய்ய

விரும்பவே இல்லை. தன் கண்ணின் கருமணி என வளர்த்த தமயந்தியின் இன்ப வாழ்க்கையை ஒரேயடியாகக் கவிழ்த்துவிட்ட தியாகராஜனது துரோகச் செயலை எல்லை மீறி விடுமுன் நன்கு கண்டித்து புத்திமதி கூறித் திருத்த வேண்டியது தன் கடமை என்று அவள் நம்பினாள்.

இந்த மாதிரியான அசந்தர்ப்பமான சமயத்தில், தன்னுடன் ஒத்திருந்து ஆலோசித்து, நிலைமையைச் சமாளிக்க முயற்சிக்காது கோழைபோல் விலகிக் கொண்டு சென்ற தமயந்தியின் விசித்திரமான மனப்போக்கு அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவேயில்லை. ஒருவரிடமிருந்து ஒருவர் விலகிக்கொண்டு செல்லும் இந்த இரண்டு பேரையும் ஒன்று சேர்த்து அவர்கள் வாழ்வை வளமாக்குவது தன் முக்கிய லட்சியம் என்று தீர்மானித்த காந்திமதி அதற்கு மேல் காலதாமதம் செய்யவில்லை.

பல தினங்களுக்குப் பிறகு அருணோதய ஆசிரமத்தின் வாயிலில் வந்து நின்று பெரிய காரைக் கண்டதும் தமயந்தியின் உள்ளம் உணர்ச்சிவசத்தில் படபடவென்று துடித்துக் கொண்டது. டக்டக் என்று உடனடியாக சப்திக்கப் போகிற அந்தப் பழக்கப்பட்ட பாதரக்ஷைகளின் ஒலியை எதிர்பார்த்த வண்ணம், அவள் வேண்டுமென்றே புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பவள் போல் தலை குனிந்து கொண்டிருந்தாள்.

சப்தமிடாது உள்ளே வந்து எதிர்ப்புறமிருந்த ஆசனமொன்றில் உட்கார்ந்து கொண்ட காந்திமதி, தான் வந்திருப்பதை அறிவிக்க விரும்புகிறவள் போல் லேசாக ஒரு முறை இருமினாள். புஸ்தகத்திலிருந்து நிமிர்ந்த தமயந்தி "பெரியம்மா! நீங்களா? நான் எதிர் பார்க்கவேயில்லை!" என்று வியப்புடன் வரவேற்றாள்!

"நீ தான் எங்கள் அனைவரையும் அடியோடு மறந்து விட்டாய். நான் உன்னை எப்படி மறக்க முடியும்? பெற்றெடுத்தவள் என் தங்கச்சி என்றாலும், வளர்த்து விட்டதனால் பாசம் கிடந்து அடிச்சுக்குது. பார்த்து விட்டாவது போகலாம்னு வந்தேன்" என்றாள் காந்திமதி. இதைச் சொல்லி முடிக்கு முன் அவளது குரல் துக்கத்தில் தடைப்பட்டது.

"பெரியம்மா! தங்களை நான் மறப்பதா? அவ்வளவு பெரிய பழியை அபலையான என் மீது சுமத்துவது தர்மமல்ல. நான் உங்கள் அனைவரையும் பார்க்க அஞ்சி இப்படி மறைமுகமாக ஏன் வாழ்கிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதைப்பற்றிப் பேசினாலும் என் உள்ளம் துக்கத்தைத் தாளாது இரண்டாக வெடித்து விடும்போல் வேதனையாக இருக்கிறது" என்றாள் தமயந்தி. செல்லும் போது கண்களில் கசிந்த நீரை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"தமா! படித்தறிந்த புத்திசாலியான நீ கூட இப்படி நடந்துகிறது நல்லாவேயில்லை!" என்று சிறிது கோபத்துடன் அதட்டினாள் காந்திமதி.

"பெரியம்மா! நீங்கள் சொல்வது விளங்கவேயில்லை இந்த நிலையில் நான் செய்யக் கூடியது என்ன இருக்கிறது?" என்று துக்கத்துடன் கேட்டாள்.

"படித்த புத்திசாலிப் பெண்ணாக இருந்தும் நீ பெரும் கோழையாக இருப்பது ஆச்சர்யமாகவே இருக்கிறது. ராஜாவைக் கண்டித்துப் புத்தி சொல்லித் திருத்த வேண்டியது உன் கடமையில்லையா! ஏன், உரிமையுங்கூட! அதைவிட்டு...?" என்று காந்திமதி சினத்துடன் படபடவென்று மேலே பேசுமுன், "பெரியம்மா! உங்கள் உணர்ச்சிகளை நான் பெரிதும் மதிக்கிறேன். என்மேல் ஏற்பட்ட அனுதாபத்தினாலும், என்மேல் தங்களுக்கு

எப்பொழுதும் உள்ள பிரிக்க முடியாத பாசத்தினாலும் தாங்கள் என்னை இவ்வாறு கோபித்துக் கொண்டு பேசுகிறீர்கள். அதனால் பாதகமில்லை. ஆனால், நீங்கள் என்னிடம் எதிர்பார்க்கும் இந்தக் காரியத்தை என்னால் ஒரு நாளும் செய்ய முடியாது" என்றாள் தமயந்தி மிக்க பிடிவாதமாக.

"ஏன்?" என்று காந்திமதி மிகவும் ஆத்திரத்துடன் அதட்டிக் கேட்டாள்.

"ராஜாவின் முகத்தைக் கூட நான் பார்க்க விரும்பவில்லை. அவ்வாறு இருக்கையில் அவருடன் இதைப்பற்றி நான் எவ்விதம் தர்க்கித்துப் பேசி முடிவு செய்ய முடியும்? என்றாள் மிகவும் நிதானமாக.

"ஏ! இது வீண் பிடிவாதம்!" என்று தடுத்துக் கொண்டாள் காந்திமதி.

தமயந்தி அவளைப் பார்த்துச் சோகமாக ஒரு புன்னகை செய்து விட்டுப் பேசலுற்றாள்! "பெரியம்மா, இதை வீண் பிடிவாதம் என்று தாங்களே கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை. கடந்துபோன தாங்கள் தூய்மை வாழ்க்கையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. என்றாலும், என் உணர்ச்சிகளைத் தாங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளும் நிமித்தம் உங்களுக்கு ஒரு சிறு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு நாள் நடந்த ஒரு சம்பவத்தை நினைத்துப் பாருங்கள்! கட்டின புடவையுடன், ஆவேசம் பிடித்தவள் போல் வீட்டை விட்டுத் தாங்கள் கிளம்பிச் சென்றது எதற்காக? வீண் பிடிவாதத்திற்காகவா...? இல்லை!

"உங்களது இலட்சிய பீடத்திலிருந்து விழுந்துவிட்ட கணவனை அதற்குப் பிறகு நேருக்கு நேர் பார்க்கவும் தாங்கள் அஞ்சினீர்கள். 'இப்படியும் நடக்குமா?' என்று

மன அதிர்ச்சியடைந்து போன நீங்கள், கலைந்து போன உங்கள் இன்ப வாழ்வைத் திரும்பிப் பார்க்கவும் பயந்து அங்கிருந்து ஓடிச் சென்றீர்கள்.

"தங்களது தங்கையின் பெண்ணாகப் பிறந்து விட்டதாலோ என்னவோ, என் இரத்தத்திலும் அந்த விசித்திர மனப்பான்மை ஊறிக் கிடக்கிறது.

"பெரியம்மா! ராஜாவைப் பற்றி நான் எவ்வளவோ எண்ணியிருந்தேன். என் இருதய பீடத்திலே அவருக்கு ஒரு உயர்ந்த ஸ்தானத்தை அளித்திருந்தேன். என் ஆசையும் கற்பனையும் சிதறித் தூளாகி விழுந்து கிடக்கும் காட்சியை என்னால் திரும்பிப் பார்க்க இயலவே இயலாது.

"என்னைப் பிடிவாதக்காரி என்று அழைத்தாலும் சரி, கோழை என்று கூப்பிட்டாலும் சரி, பாதகமில்லை. ஆனால், ராஜாவை மீண்டும் சந்தித்து இது பற்றிப் பேசுவது என்பது முடியாத காரியம். தங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவள் என்பதை அறிவேன். தங்கள் பொருட்டு நான் எதையும் மனமுவந்து செய்ய முன்வருவேன். ஆனால், இந்த இரு விஷயத்தில் என்னை வற்புறுத்தாதீர்கள், பெரியம்மா, பெற்ற மகளைப் போல் என்னை வளர்த்தவர்களாயிற்றே! என் இருதய தாபம் தங்களுக்குப் புரியாத புதிரா!" என்று படபடவென்று பேசிய தமயந்தி, அதற்கு மேல் முடியாது தன் ஒரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு விம்மியழுதாள்.

"தமா! வருத்தப்படாதே! எவ்வளவோ மனசு கிடந்து அடிச்சுக்கிச்சு, ஆதங்கம் காரணமா அப்படிப் பேசினேன்" என்று தழுதழுத்த குரலில் கூறிய காந்திமதி, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தமயந்தியின் கூந்தலை வருடி ஆறுதல் கூறினாள்.

தமயந்தியிடம் இது விஷயமாகத் தோல்வி ஏற்பட்ட போதிலும் அவள் விஷயத்தை அத்துடன் விட்டுவிட வில்லை. எப்படியாவது பாடுபட்டு தியாகராஜனை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் நிர்விரமாக அவளைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்த தனால். மிகவும் துணிவாக ஒரு காரியத்தைச் செய்து விட்டாள்.

பகல் போஜனத்திற்குப் பிறகு மாயா தன் அறையி லிருந்த படுக்கை மீது சாய்ந்து கொண்டு தூங்க முயற் சித்துக் கொண்டிருந்தாள். "யாரோ உன்னைப் பார்க்க வந்திருக்காங்க! உன்னிடந்தான் பேச வேண்டுமாம்" என்று தாயார் கூறியதைக் கேட்டதும் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்தாள்.

கலைந்த கூந்தலும், பவுடர் பூசாத வெளிறடைந்த முகமும் கொண்ட அந்தப் பெண்ணை ஏற இறங்க காந்திமதி முறைத்துப் பார்த்து விட்டு, அவள் நாற்காலிக்கு முன் ஒரு ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்து கொண்டாள்.

அவளை முன்பின் பார்த்திராத மாயாவுக்கு அவள் செய்கை மிக்க வியப்பை அளித்தது. "தாங்கள்!..." என்று இழுத்தாற் போல் கேட்டு விட்டு தயக்கமாக அவள் முகத்தைப் பார்த்தாள்.

"தியாகராஜனது அத்தை காந்திமதியம்மாள்! ராஜா என்னைப் பற்றி உன்னிடம் பேசியிருக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் என்னை உனக்குத் தெரிய வில்லை. நான் இங்கே வந்த காரியம் மிகவும் முக்கிய மானது. நான் கொஞ்சம் ரகஸியமாகவே பேச விரும்பு கிறேன்" என்றாள் காந்திமதி.

மாயாவின் முகம் அவமானத்தினால் சிறுத்துப் போயிற்று. "தாங்கள் பேச வந்த ரகஸியம் அவ்வளவு முக்கியமானதா?" என்று கோபத்துடன் கேட்டாள்.

"ஆமாம்! முக்கியமானது! அதனால் தான் இவ்வளவு அவசரமாக ஓடி வந்தேன். அம்மா மாயா! நீ என் வரைக்கும் தமயந்தி, விஜயா இவர்களைப் போல் ஒரு குழந்தை. நான் அனுபவப்பட்டவள். என்னுடைய புத்திமதியைக் கொஞ்சம் தயவு செய்து கேள். ராஜாவும் நீயும் நடத்தும் இந்த வாழ்க்கை நீதிக்கும் சட்டத்திற்கும் கொஞ்சமும் ஒவ்வாதது. இதனால் உனக்கும் நன்மை யில்லை. பாபகரமான இந்தக் காரியத்தை உன்னைப் போன்ற படித்த புத்திசாலிப் பெண் செய்யலாமா?" என்றாள் மூச்சுத் தடுமாற உணர்ச்சி வசத்துடன்.

அடியுண்ட சர்ப்பத்தைப் போல மாயா சீறியெழுத் தாள். "உங்களது புத்திமதிக்கு நான் இங்கே ஒன்றும் காத்துக் கொண்டிருக்கவில்லை. என் கோபம் எல்லை மிஞ்சி விடுமுன் இங்கிருந்து எழுந்து போய் விடுங்கள்!" என்று இரைந்து கத்தி விட்டு, ஆத்திரத்துடன் எழுந்து உள்ளே சென்று தன் படுக்கையறைக் கதவுகளைப் படீரென்று சாத்திக் கொண்டாள்.

அன்று இரவு வீடு திரும்பிய தியாகராஜன், காரின் கதவைத் திறந்ததும் விழுந்து விடுகிறவன் போல் அவசரமாக இறங்கி உள்ளே ஓடி வந்தான். அவனது முகம் ரத்தம் போல் சிவந்திருப்பதையும், வேட்டை நாய் போல் அவன் அடுக்கடுக்காகப் பெருமூச்சு விடு வதையும் கவனித்த அமிர்தம், நமச்சிவாயம் முதலிய வர்கள் அவன் மிதமிஞ்சிய கோபத்தில் இருக்கிறான் என்பதை உணர்ந்து, திடுக்கிட்டு ஆசனத்திலிருந்து எழுந்து குற்றவாளிகளைப் போல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அத்தை! எங்கே அத்தை?" என்று கர்ஜித்தான் தியாகராஜன்.

"ஏன், உள்ளே இருக்கிறார்கள். கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்" என விஜயா பதிலளித்து விட்டு மின்னலைப் போல் பின்கட்டிற்கு ஓடினாள்.

காந்திமதியம்மாள் தியாகராஜனிடம் இந்தக் கோபத்தை எதிர்பார்த்திருந்தாள் என்றாலும், அவளது கால்கள் தள்ளாடின. நெஞ்சு படபடத்தது. முகத்தில் வியர்வை அரும்பியது 'ஏன் ராஜா! என்ன வேணும்?' என்று ஹீனமான குரலில் கேட்டுக்கொண்டு ஹாலுக் குள் வந்து நின்றாள்.

"என்ன அவமானப்படுத்த வேண்டும் என்று உங்களுக்கு எத்தனை நாளாக ஆசை இருந்தது! யாரைக் கேட்டுக் கொண்டு மாயா விட்டிற்கு நீங்கள் போனீர் களாம்!" என்று கூக்குரலிட்டுக் கத்தினான்.

"நன்றாக வேண்டும்! பார்த்தியா?" என்று அமிர்தமும் மோகனாவும் நாங்கள் நயன பாஷையினால் ஒருவரை யொருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர். காந்திமதியின் கர்வம் அடங்கும் நேரம் வந்து விட்டது என்று சந்தோஷத்தில் நமச்சிவாயம், நடக்கப் போகும் யுத்தத்தை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

இதுவரை மிகவும் சிரமப்பட்டு அடக்கி வைத்திருந்த காந்திமதியின் உணர்ச்சிகள் கட்டுகளை உடைத்துக் கொண்டு பொங்கி எழுந்தன. "யாரையும் நான் கேட்டுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. வெறி தவறி வெட்கமற்று உன் அந்தஸ் தையும் கௌரவத்தையும் குலைத்துக் கொண்டு நீ போழடைவதை நான் பார்த்துக்கொண்டு எவ்வளவு காலம் அம்மா இருப்பது? உனக்குத் தக்க சமயத்தில் புத்தி சொல்ல வேண்டியது என் கடமை யோசித்துப்பார்? நீ செய்யும் காரியம் எவ்வளவு ஒழுங்குக் குறைவானது

என்று புத்திக்குப்படும்" என்று ஆத்திரத்துடன் சுடச்சுடப் பதிலளித்தாள்.

"ஒரு காலத்தில் எனக்கு ஏதோ கொஞ்சம் உதவி செய்து விட்டீர்கள் என்ற காரணத்திற்காக நான் உங்களது அடிமையாகி விட்டேனோ? என் வாழ்க்கையில் தலையிட நீங்கள் யார்? உங்களுக்கு எந்த விதத்தில் உரிமை உண்டு?" என்று கர்ஜித்த தியாகராஜன் குரோதமும் வெறுப்புமாகத் தன் அத்தையை முறைத்துப் பார்த்தான்.

"நான் யாரா?" என்று திக்பிரமையுடன் கேட்ட காந்திமதிக்கு அவமானம் தாள முடியவில்லை. துக்கம் அவள் தொண்டையையடைத்துக் கொண்டது. அவளையுமறியாது அவளது இடதுகரம் இடுப்பிலிருந்து சாவிக் கொத்தை உருவியது.

"ராஜா! இந்தா! இந்தப் பெருமையான பதவி என்னத்திற்கு? என்னுடைய உண்மை நிலை எனக்கு இன்னிக்கித்தான் தெரிஞ்சுது. வாஸ்தவம்! உனக்கு நான் யார்?" என்று கேட்ட காந்திமதி கண்ணில் பெருகிய நீரைச் சமாளித்துக் கொண்டு, கொத்துச் சாவியை அருகிலிருந்த மேஜை மீது வைத்துவிட்டு, விர் என உள்ளே சென்று விட்டாள்.

இது தான் சரியான சமயம் என்று காத்திருந்தவள் போல் அமிர்தம் பாய்ந்து முன்வந்து, "அட, அவள் கிடக்காள்! கோபுரத்தை பொம்மையா தாங்குது? தியாகு, நீ மனசை அலட்டிக்காதே! மேலே போ!" என்று கூறிவிட்டு, அந்தச் சாவிக் கொத்தை எடுத்துத் தன் இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

நீலநிற மேஜை விரிப்பின் மீது மிகவும் நேர்த்தியாகத் தேநீர் கோப்பைகள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. வெளியே செல்ல தன்னை மிகவும் அழகாக அலங்கரித்துக் கொண்டு மாடியினின்று இறங்கி வந்த மாயா, மேஜையருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

பகல் முழுவதும் நன்றாக உறங்கியும், சுபத்திரா அம்மாளின் முகத்தில் தூக்கம் இன்னமும் வழிந்து கொண்டிருந்தது. பாதி மூடியிருந்த விழிகளால் தன் மகளை ஏறிட்டுப் பார்த்து விட்டு, கோப்பையிலிருந்த தேநீரை, தொட்டித் தண்ணீரை ஆவலுடன் உறிஞ்சும் மாட்டைப் போன்று அதிக சப்தம் செய்துவிட்டுப் பருகி முடித்தாள்.

அதுசமயம் வேலைக்காரன், மாலைத் தபாலில் வந்த கடிதங்களைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்து விட்டுச் சென்றான். இடது கரத்தால் மிகவும் அலட்சியமாகத் தபால்களை ஆராய்ந்து பார்த்த மாயாவின் முகம் திடீரென்று ஒளிகுன்றிப் போயிற்று. கடிதங்களின் இடையே காணப்பட்ட விமானத் தபால் உறையைக் கையிலெடுத்ததும் அவளது உடல் பயத்தில் நடுங்கியது. வலது கரத்தில் பிடித்திருந்த தேநீர்க் கோப்பை அவளையுமறியாது நழுவிக் கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக உடைந்து போயிற்று. அதனின்று சிதறிய தேநீர்த்துளிகள், அவளது வெண்ணிறப்பட்டுச் சேலையை நாசப்படுத்தியதுடன், காலடியில் தரைமீது விரிக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த பாரசீக கம்பளத்தையும் கறைபடுத்தி விட்டது.

சாதாரண சமயமாயிருந்தால் தன் கலைப் பொக்கி ஷங்களில் மிகவும் உன்னதமான அந்தக் கம்பளத்தின் கதியைக் கண்டு மாயா பதறிப் போயிருப்பாள். ஆனால் இன்று அதைவிடப் பதட்டமடையக் கூடிய விஷயம் அந்தக் கடிதத்தில் இருந்ததனால் மாயா எதையும் பொருட்படுத்தவில்லை. விரல்கள் நடுங்க, நெஞ்சு பதை பதைக்க, அவசரமாகக் கடித உறையைக் கிழித்து காகிதத்தைக் கையில் எடுத்தாள்.

"அன்புள்ள மாயா,

உன்னிடமிருந்து கடிதங்கள் வந்து பல நாட்கள் ஆகின்றன. உனது மௌனம் எனக்கு மிகவும் விபரீதமாகத் தோன்றுவதுடன், பலவித சந்தேகங்களையும் உண்டாக்குகின்றது. கடிதம் போட ஏன் தாமதமாயிற்று என்பதை விளக்கி உடனே எனக்கு நீ பதில் போட வேண்டும். கூயம் அதிகம் முற்றிப் போனதனால் சாரதா, ஆஸ்பத்திரியில் இறந்து விட்டாள் என்ற செய்தி தந்தியில் நேற்று எனக்குக் கிடைத்தது. வெகு விரைவில் தாய் நாட்டிற்கு வர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு உன் அன்பன்
சஞ்சீவி"

படித்து முடிந்ததும் கடிதத்தைக் கோபத்துடன் கசக்கித் தாய் முன் விட்டு எறிந்தாள் மாயா.

"சஞ்சீவியா எழுதியிருக்கிறான்?" தாயார் ஆச்சர்யத்துடன் கேட்டுவிட்டு, காகிதத்தை எடுத்துப் பிரித்தாள். தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைச் சமாளித்துக் கொள்ள விரும்புகிறவள் போல் மாயா தேநீர்ப் பானத்தை வேறு ஒரு கோப்பையில் நிரப்பி ஒரு வாயில் விழுங்கினாள்.

'சஞ்சீவியின் மனைவி இறந்து விட்டாளாமே! ஐயையோ!" என்று கூவிய சுபத்திரா, தன் மகளின் முகத்தைக் கலக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"மனைவியின் மரணத்தைப் பற்றி அவசரமாக எனக்குத் தெரிவித்திருப்பதன் உட்கருத்து உங்களுக்கு விளங்குகிறதல்லவா, அம்மா? எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. பைத்தியம் பிடித்துவிடும் போல் ஒரே குழப்பமாக இருக்கிறது, என்ன செய்வேன்?" என்று அரற்றிய மாயா, மிகவும் கருத்துடன் நீண்ட நேரம் வாரி முடித்து அழகு செய்திருந்த தன் கூந்தலைத் தன் கரங்களால் பலமாகப் பிய்த்துக் கொண்டாள்.

"பாவி! அவனை நினைச்சாலும் என் குலை நடுங்குகிறது. போன தடவை அவன் சீமைக்குப் புறப்படுமுன் கடைசி முறையாக இங்கே வந்திருந்த போது செய்த அமர்க்களத்தைக் கனவில் கூட நினைத்துப் பார்க்க பயமாக இருக்கிறதே! மூன்று வருஷகாலம் நிம்மதியாக இருந்தோமே, எந்த நிமிஷம் புறப்பட்டு வந்துவிடுவானோன்னு இனி சதா பயந்து கொண்டல்லவா, உசிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கணும்? ஐயோ, இதென்ன சோதனை" என்று கவலை மேலிட்டவளாக சுபத்திரா புலம்பினாள்.

ரஸனை தெரியாத காட்டுமிராண்டி! கையில், விதி பணத்தை அள்ளிக் கொடுத்தது எனக்கல்லவா ஆபத்தாக முடிந்து விட்டிருக்கிறது? ஊதுவத்தி வியாபாரத்திலே இதுவரை குவித்த பணம் அவ்வளவையும் என் காலடியில் சமர்ப்பித்துவிடப் போவதாகப் போன கடிதத்தில் ஏதேதோ பிதற்றி எழுதியிருந்தான். நான் பதிலே எழுதவில்லை. நீண்ட மௌனத்திற்கு உடனே காரணம் தெரிந்தாக வேண்டுமாம்! இவன் மீது எனக்கு எந்த விதமான பாசமும் இல்லை என்பதற்கு முன் மௌனத்தை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? மனத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத மூடன்! உடனே பதில்போட வேண்டும் என்று பயமுறுத்தியல்லவா எழுதியிருக்கிறான்! பதில் போடாவிட்டால் என்ன

செய்து விடுவான்? என் தலையை வெட்டி விடுவானா?" என்றாள் ஆத்திரத்துடன் மாயா.

சுபத்திரா தன் மகளைக் கிலியுடன் நிமிர்ந்து பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டாள். தலையை வெட்டி விடுவானா என்று லேசாகச் சொல்லி விட்டாயே? வீரமங்கலம் சுந்தரத்தேவனுக்கு நேர்ந்த கதிதான் நமக்குக்கூட நேர்ந்து விடும். பட்டப் பகலில் கொள்ளிடக் கரையில் கூசாது செய்த அந்தக் கொலையில் தனக்கு ஒரு சம்பந்தமுமில்லை என்று எட்டு கோர்ட் ஏறி வெற்றி பெற்று வெளிவந்தவனாச்சே! அவனுடன் விரோதித்துக் கொண்டு நம்மால் சமாளிக்க முடியுமா?" என்று பீதியுடன் கேட்டாள். தாழம்பூவை நிகர்த்த அவளது முகம் சஞ்சீவியின் நினைவினால் பிரேதம் போல் வெளுத்து விட்டிருந்தது.

'பணத்தின் வலுவினால் தூக்குக் கயிறுக்குத் தப்பி விட்ட மூர்க்கன், என் கழுத்தில் மங்கலக் கயிறு பூட்ட விரும்புகிறான். விந்தைதான்! இதுவரை அவனது ஆசைக்குக் குறுக்காக சாரதா நின்று கொண்டிருந்தாள். சட்டம், நீதி என்று சாக்குப் போக்குக் கூறி, தட்டிக் கழிக்க இனி வகையில்லை. சீமையிலிருந்து வந்ததும் தன்னை மணந்துகொள்ளச் சொல்லி என்னை நிர்ப்பந்திப்பான். ஐயோ! நான் என்ன செய்வேன்? அவனை நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது அம்மா. இதெல்லாம் தியாகராஜனுக்குத் தெரிந்தால்" என்று கேட்ட மகளின் கண்களில் பொங்கிய நீரைக் கட்டுப்படுத்த இயலாது முகத்தை இரு கரங்களாகவும் மூடிக்கொண்டு விம்மியழுதாள்.

"என்ன செய்வதென்று எனக்கும் புரியவில்லை. அமைதிக்குப்பின் புயல் என்பார்கள். அதுபோல், சில மாதங்களாகக் கடிதம் ஏதும் போடவில்லையே, வெளி நாட்டுக்குப் போனதும் அங்கே ஏற்பட்ட புது சகவாசத்

னால் நம்மை மறந்து விட்டான் என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேன். பெரிய வெடிகுண்டு போலல்லவா இருக்கிறது இந்தக் கடிதம்?" என்று பிரலாபித்தாள் சுபத்திரா.

"அவனைப் பொறுத்தவரை மரணம் ஒன்றுதான் என்னை மறக்கச் செய்யுமாம்! மனைவி என்று என்னி டம் உரிமை பாராட்டும் நாள் என்று வரும் என ஏக் த்துடன் காத்திருக்கிறானாம். இன்னும் எத்தனையோ, சொல்லவும் பிடிக்கவில்லை. ஏதேதோ எழுதியிருந்தான். ழுக்கமான அவனது பிதற்றல் என்று அலட்சியமாக, டசியாக அவனிடமிருந்து வந்த அந்த கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டேன். சீக்கிரம் புறப்பட்டு வந்து விடுவானாமே! நாம் இதற்கு என்ன வழி செய்யலாம்? ம்மா, யோசித்து நீங்க தான் எனக்கு ஏதாவது உபாயம் சொல்ல வேண்டும். தியாகராஜன் எவ்வளவு கண்ணிய மான மனிதர்! கடந்துபோன என் களங்கமான வாழ்க் கையை அறிந்தால் என் முகத்தில் கூட விழிக்க மாட்டார். ம்மா அவர் என்னை வெறுத்துவிட்டால், என்னால் இந்த உலகில் வாழ முடியாது!" என்று விம்மலிடையே சொன்னாள் மகள்.

"அழுவதால் தவிர்க்கக்கூடிய விஷயமா இது? கண்ணீர் விட்டுக் கலங்குவதை விட, தீர யோசித்து ஏதாவது ஒரு வழி செய்தால் பயன் உண்டு. அழகாக சீவியிருந்த தலையைக் கலைத்துக் கொண்டு விட்டாய். ரு, சீக்கிரம்! மாடிக்குப் போய், உன் முகத்தைக் கழுவிக்கொண்டு உடையை மாற்றிக் கொள். தியாக ராஜன் வரும் நேரம்" என்றாள் சுபத்திரா.

அவள் சொல்லி முடிக்குமுன் வாசலில் காந்தி பங்சில் கம்பெனி முதலாளியின் புத்தம் புதிய பெரிய கார் வந்து நின்றது. அதைக் கண்ட சுபத்திரா பதட்டத்

துடன், "போ சீக்கிரம்! உன் முகத்தை இப்போ பார்க்க சகிக்கலை" என்று இரகசியமான குரலில் கண்டித்தாள்.

அவசரமாக எழுந்த மாயா பரபரப்புடன் தாயார் அருகில், மேஜை மீது கிடந்த காகிதத்தை எடுத்துக் கொண்டு மின்னலைப் போல் மாடிப்பக்கம் சென்று மறைந்து விட்டாள்.

தியாகராஜன் உல்லாசமாக உள்ளே நுழைந்த பொழுது தன்னை வரவேற்க அங்கே ஒருவரையும் காணாததைக் கண்டு வியப்படைந்து போனான். பூஜை அறை வாயிலில் தொங்கிக் கொண்டிருந்த திரைக்குப் பின்னால் இருந்தபடி, சுபத்திரா வெளியே தலையைக் காட்டாது "மாயா மாடியில் இருக்கிறாள். உங்களே அங்கே வரச் சொன்னாள்" என்றாள்.

தியாகராஜன் அதைக் கேட்டதும் மிகவும் சந்தோஷத்துடன், மாடிப் பக்கம் விரைந்து சென்றான், விஸ்தாரமான மாடி ஹால் நிசப்தமாக இருந்தது. ஜன்னல் அருகே தோட்டத்தைப் பார்த்த வண்ணம் தன் முதுகுப் புறம் மட்டும் அவனுக்குத் தெரியும் வண்ணம் அசையாது நின்று கொண்டிருந்தாள் அவள்.

"மாயா! மாயா!" என இருமுறை கூப்பிட்டும் அவள் ஏதும் பதில் கூறாதது கண்டு கவலையுடன் அருகில் சென்றான் தியாகராஜன். உரிமையுடன் அவளது தோள்களைப் பற்றி முகத்தைத் தன் பக்கம் திருப்பிய அவன், ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான். மாயாவின் கன்னங்களின் மீது கண்ணீர்த் துளிகள் உருண்டு ஓடிக் கொண்டிருந்தன. 'அழுது கொண்டிருக்கிறாயே மாயா அப்படியென்றால் இன்னமும் நீ என்னை மன்னிக்க வில்லை அல்லவா?" என்று மிகவும் இரக்கமாகக் கேட்டான்.

தன் முகம் அவனது தோள்மீது படும்படி அருகில் வந்து நின்று கொண்ட மாயா, "உங்கள் மீது எனக்குச் சிறிதும் கோபமேயில்லை. உங்கள் அத்தையின் கடும் சொற்கள் என் மனத்தை மிகவும் வேதனை செய்கின்றன. அவைகளை மறக்க முடியவில்லை. தங்களை நான் இவ்வாறு உயிருக்குயிராக நேசிப்பது தவறா? முறை தானா? அவர்களது வார்த்தைகள் என் இருதயத்தை வேல் போல் தாக்கு..." என்று கூறி முடிக்காது விம்மினாள். மிகவும் மிருதுவான அந்த அழகிய முகத்தை கைக்குட்டையால் மெல்லத் துடைத்துவிட்ட தியாகராஜனது உள்ளம், அவமானத்தினாலும் கோபத்தினாலும் கொதித்தது.

"மாயா! எனக்காக நீ என் அத்தையை மன்னித்துவிட வேண்டும். அவர்கள் கர்நாடகப் பழக்க வழக்கங்களில் ஊறிப்போனவர்கள். மரியாதை தெரியாது உன்னிடம் ஏதேதோ வந்து பேசி விட்டார்கள். அதற்குப் பிராயச் சித்தமாக, உன் பொருட்டு நான் எது வேண்டுமானாலும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். என்னை நீ அறிந்து கொண்டது இவ்வளவு தானா? முத்துக்களை நிகர்த்த இந்தக் கண்ணீரை ஏன் வீணே உதிர்க்கிறாய்?" என்றான்.

அவனது கரங்களை லேசாக அப்புறம் தள்ளிவிட்டு மாயா அவனைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை செய்தாள். கண்ணீரால் நனைந்து போயிருந்த அவளது கண் இமைகள், பனித் துளியில் நனைந்த மலர் இதழ்கள் போல் மெல்ல விரித்தன. "கடலில் உள்ள முத்துக்கள் எல்லாம் இந்தப் பாண்டிய நாட்டு மங்கையர் கண்களில் அல்லவா குடியேறிவிட்டன. என்று ஒரு தமிழ்க் கவிஞர் பெண்களின் கண்ணீரை வர்ணித்திருப்பதைப் படித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்ன தவறான வர்ணனை என்று அந்தக் கவியைப் பற்றிக் குறைவாக எண்ணியது உண்டு. ஆனால் இன்று அது எவ்வளவு

உண்மை என்று எனக்குத் தெரிகிறது. மாயா! உனது கண்ணீர் முத்துக்களைப் போல் எவ்வளவு அழகாக இருக்கின்றன தெரியுமா?" என்று கேட்ட தியாகராஜன் சோபா ஒன்றில் சாயந்து கொண்டான்.

"சமீபகாலமாகத் தாங்கள் மிகவும் பெரிய கவியாகி விட்டிருக்கிறீர்கள்! தங்களது ரசிகத் தன்மையைப் பற்றி நான் ஏதும் பேச சக்தியற்றவளாக இருக்கிறேன். தமிழ்க் கவிஞர் ஒருவர், பெண்ணின் கண்ணீரை முத்துக்கள் என வர்ணித்தார். ஆனால் சீனக் கவிஞர் ஒருவரோ பெண்களின் கண்ணீரை மௌனப் பிரசங்கி என்றார். அதற்குத் தாங்கள் இப்பொழுது எவ்வாறு விளக்கம் கூறப்போகிறீர்கள்?" என்று கேட்ட மாயா, தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனது அருகில் வந்து மிக்க உரிமையுடன் அமர்ந்து கொண்டாள்.

"விளக்கம் கூறுவதற்கு நான் உவமையைத் தேடிக் கொண்டு எங்குமே போக வேண்டாம். உனது கண்ணீர்த் துளிகள் பார்த்த அளவிலேயே உனது மனநிலையை எனக்குச் சொல்லாமலேயே சொல்லி விடுகின்றன." என்றான்.

"அப்படியா?" என்று கொஞ்சலாக வினவிய மாயா புன்முறுவல் செய்தாள்.

"உனக்கு ஒரு முக்கிய விஷயம் கூறவே அவசரமாக ஓடி வந்தேன். நேற்று நீ கூறிய செய்தியைக் கேட்டதும் கோபம் கொண்டு அத்தையைப் போய் உடனடியாகக் கண்டித்தேன். அவர்கள் கோபம் கொண்டு, என்னிடம் ஒன்றும் பேசாது இன்று காலை வீட்டை விட்டுப் புறப்பட்டுப்போய் விட்டார்கள்" என்றான்.

"ஐயையோ! அப்படியா?" என்று ஆச்சர்யப்படுகிறவள் போல் அபிநயித்த மாயா, துள்ளி எழுந்து நின்றாள். "என்னால் உங்கள் குடும்பத்திலே வீண் கலகம் ஏற்பட்டு

விட்டதா?" என்று வருத்தம் மிகுந்த குரலில் திகைப்புடன் வினவினாள்.

"அத்தை வீட்டை விட்டுப் போய் விட்டார்கள் என்பதைக் கேட்டதும், என்னைவிட உனக்கு ஏன் இவ்வளவு பதட்டம்! நீ எதற்கும் கவலைப்படாதே! என் சுதந்திரத்தில் அதிகம் குறுக்கிட்டதற்கு நான் கோபித்துக் கொண்டது நியாயமே, அதற்கு வெகுண்டு வீட்டை விட்டு வெளம்பினால் யாருக்கென்ன? எங்கே சென்றார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பற்றி நான் கவலை எடுத்துக் கொள்ளவில்லை. வீட்டை நிர்வகிக்க என் தாயார் இருக்கிறார்கள்; வயதான காலத்தில், ஏதோ கொடுத்த மரியாதையைப் பெற்றுக் கொண்டு தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போகாமல் மிகவும் உரிமைகள் பாராட்டி, தனக்கு சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொண்டிருந்தால் யாரால் தான் சகிக்க முடியும்?" என்றான் கோபத்துடன்.

"பிறகு?" என்று வினவிய மாயா, மறுபடி அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

அவன் கூறிய அந்த சங்கதி, அமைதியற்றுத் தவித்துக் கொண்டிருந்த அவள் மனத்திற்குச் சிறிது சாந்தியளித்தது. தியாகராஜனைக் கணவனாக அடைவதில் ஏற்பட்டிருந்த பல தடங்கல்களில், காந்திமதியென்ற பெரிய முட்டுக்கட்டை, தானே விலகிப் போனதைக் கேட்டு அவள் பெருநிம்மதியுடன் பெருமூச்செறிந்தாள்.

"பிறகு, சொல்வதற்கு அதிகம் ஒன்றுமில்லை. உன் பொருட்டு நான் எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன் என்பதை வற்புறுத்தி மீண்டும் சொல்கிறேன். இனியாவது நீ என்னைப் பூரணமாக மன்னித்து விடுவாயல்லவா?" என்று கேட்ட தியாகராஜன், அவளது மலர்க் கரங்களைப் பற்றித் தன் முகத்துடன் அழுத்திக் கொண்டான்.

"என் பொருட்டுத் தாங்கள் எதையும் செய்வீர்கள் என்பதை நான் நிச்சயமாக நம்பலாம் அல்லவா?" என மாயா திடீரென்று ஒரு புதிர் போட்டாள்.

ஆச்சர்யத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்த தியாகராஜன் "ஏன்? உனக்கு சந்தேகமா?" என்றான்.

"உங்களிடம் நான் ஒரு சிறு உதவியை வேண்டுகிறேன், தாங்கள் மறக்காது எனக்கு அந்த உதவியை அளிக்க வேண்டும்" என்று பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

"உனக்கில்லாதது ஒன்றுமில்லை. தாராளமாகக் கேள்!" என்று உறுதியான குரலில் வேண்டிக் கொண்டான் தியாகராஜன்.

"உங்களுக்கு ஒரு அத்தை இருப்பது போல் எனக்கு மாமன் மகன் ஒருவர் என் சுதந்திர வாழ்க்கைக்குப் பங்கம் விளைவித்துக்கொண்டு இருக்கிறார். அவர் தற்சமயம் சீமையில் இருக்கிறார். அவரைத்தான் மணந்து கொள்ள வேண்டுமென்பது என் தாயாரின் விருப்பம். இன்று உங்களிடம் கூறிவிட வேண்டும் என்று என் தாயார் என்னை மிகவும் நிர்ப்பந்தித்தாள்" என்று கூறி முடிக்கு முன், துக்கத்தினால் அவள் குரல் கரகரத்து, கண்களில் மீண்டும் கங்கை போல் கண்ணீர் பிரவாகம் எடுத்து ஓடியது.

எதிர்பாராத இந்த விஷயத்தைக் கேட்டு, தியாகராஜன், சில வினாடிகள் பேசவும் சக்தியற்றுத் திகைப்புடன் வாளா இருந்தான். பொங்கி எழுந்த கட்டுக்கடங்காத சினத்தை அடக்க முடியாது, "நான்ஸென்ஸ்! நீ என்ன பச்சைக் குழந்தையா? மாமன் மகனை மணக்க வேண்டுமென்று உன் தாயார் உன்னை எப்படி நிர்ப்பந்திக்க முடியும்? எங்கே நானே போய் அவர்களைக் கேட்கிறேன்!" என்று கோபமாக எழுந்தான்.

ஓடிச்சென்று மாயா அவளது கரங்களைப் பிடித்துக் கொண்டு கொஞ்சும் குரலில், "தியாகராஜ்! என்னை உண்மையிலே நேசிப்பதாக இருந்தால் தாங்கள் இப்படிப் பேசக் கூடாது. என் தாயாரிடம் தாங்கள் கோபத்துடன் இது பற்றி ஏதும் கேட்கவே கூடாது. அவர்கள் மனம் நொந்து, என்னை வெறுத்தாலும் வெறுத்து விடுவார்கள். உங்களிடம் நான் கேட்டுக் கொள்ளும் வேண்டுகோளை எனக்காகத் தாங்கள் செய்துதான் ஆகவேண்டும். முன் போல் அடிக்கடி இனி என் வீட்டிற்குத் தாங்கள் வரக் கூடாது" என்று கண்ணீரிடையே கெஞ்சிக் கேட்டாள்.

அதைக் கேட்டு தியாகராஜன் முகம் மிகவும் வாட்டமடைந்து போயிற்று. "மாயா! எனக்கு ஏன் இந்தக் கடும் தண்டனை? பைத்தியமே பிடித்து விடுமே! நான் எப்படி இதைச் செய்ய முடியும்?" என்று கேட்டான் மனத்தாங்கலுடன்.

"தியாகராஜ்! தாங்கள் இந்தச் சிறு உதவியை மறுக்கவே கூடாது. தாங்கள் அடிக்கடி இங்கே வரக்கூடாது என்றால், என்னைத் தாங்கள் பார்க்க முடியாது என்ற அர்த்தமல்ல. நமது நட்பு இங்குள்ள பலருக்கு பகிரங்கமாகத் தெரிவது மிகவும் அபாயம். அதனால், கொஞ்ச காலம், நான் கூறும்வரை, தாங்கள் வராது இருக்க வேண்டும். ஏன் மாமன் மகன் இங்கு வந்ததும் என் மனநிலையை ஒளிக்காது அவனிடம் கூறி, இந்தச் சங்கடத்தினின்றும் என்னைத் தவிர்த்துக் கொண்ட பிறகு, தாங்கள் எப்பொழுதும் போல் இங்கு வரலாம். அது வரை எனக்காக... தியாகராஜ்!... தாங்கள் இந்த உதவி செய்ய வேண்டும்" என்று கெஞ்சினாள் மாயா.

தியாகராஜன் மனம் இதைக் கேட்டு இடிந்து போயிற்று. தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த மோகனாங்கியின் வேண்டுகோளை ஓரேயடியாக

அவனால் மறுக்கவும் முடியவில்லை. "மாயா! உன் பொருட்டு தான் அப்படிச்செய்ய மிகவும் முயற்சி கிறேன். ஆனால், என்னையறியாது உன்னைத் தேடி கொண்டு எப்பொழுதாவது இங்கே வந்து விட்டால் நீ என்னிடம் கோபம்கொள்ளக் கூடாது. என் மனம் இன்று ஒரே குழப்பமாக இருக்கிறது. நான் கூற வந்த பலவும் இன்று என்னால் பேசவே முடியாது போலிருக் கிறது. நாளை வந்து மற்றவைகளைச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்றான்.

வாயிற்படியருகில் போனவன் திடீரென்று திரும்பி, "மாயா! நாளைக்கு நான் இங்கே வருவதைப் பற்றி உனக்கு ஆக்ஷேபணையில்லையே?" என்று கோபமும் வருத்தமும் கலந்த குரலில் சிறிது அதட்டலாகக் கேட்டான்.

மானைப்போல் துள்ளி அருகில் ஓடிய மாயா, தன் கரங்களால் அவனது தோள்களைப் பற்றிக்கொண்டு, "தியாகராஜ்! என் நிலையை அறிந்துகொண்டு தாங்கள் உதவி செய்வீர்கள் என்று அவ்வாறு வேண்டிக் கொண் டேன். தாங்கள் என்னிடம் கோபித்துக் கொண்டு போகிறீர்கள். தங்களை ஒரு நாள் பார்க்காவிட்டால் எனக்கு ஏற்படும் துயரத்தை வார்த்தைகளால் சொன்னா லும் உங்களுக்கு விளங்கவா போகிறது?" என்றாள் கண்ணீருடன்.

அவளது துக்கத்தைக் கண்டு மனம் உருகிப்போன தியாகராஜன் அவளது அழகிய வதனத்தைத் தன் கரங் களில் அன்புடன் தாங்கிக் கொண்டு, "மாயா நான் ஒரு முரடன். உன் மிருதுவான உள்ளத்தை மிகவும் நோகச் செய்துவிட்டேன். மன்னித்துக் கொள். உன் பொருட்டு, பொறுமையாக, இந்த யுகம் முடியும் வரை வேணுமானாலும் நான் காத்திருக்கிறேன். கவலைப்

படாதே!" என்று தேறுதல் கூறிவிட்டு, தயங்கிக் கொண்டே கீழே சென்றான்.

தியாகராஜனது கார் பங்களா வாயிலின்று புறப்படும் வரை ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டு நின்ற மாயா, புதியதொரு உற்சாகம் பெற்றவளாக ஹாலை விட்டு துள்ளிக்கொண்டு வெளியே வந்து வராந்தாவிலிருந்த டெலிபோன் அருகில் ஓடினாள்.

"மனோகர்! நான் தான் மாயா பேசுகிறது. ஆச்சர்ய மாக இருக்கிறதா? உங்களுக்கு என் மேல் கோபம் என்பதை அறிவேன். தாங்கள் ஓய்வாக இருந்தால் ஆபீஸ் முடிந்ததும் இந்தப் பக்கம் வந்துபோக முடியுமா? ஆமாம் முக்கிய விஷயம் ஒன்று உங்களிடம் பேச வேண்டும்" என்று டெலிபோனைக் கீழே வைத்தாள்.

சற்றுமுன் வதைத்துக் கொண்டிருந்த கிலியும், பீதியும் மாயமாக மறைந்து போய்விடவே மாயாவின் முகம் மிகவும் பிரகாசமாகக் காணப்பட்டது.

தமயந்தி சிறு குழந்தையாக இருக்கையில் ஒரு கதையைத் தன் பெரியம்மாளுக்கு அடிக்கடி வாசித்துக் காட்டுவது வழக்கம். காந்திமதியும் அதை அலுக்காது உற்சாகத்துடன் கேட்பது உண்டு.

ஓர் அரசனுக்கு புத்திசாலியான மந்திரி ஒருவன் இருந்தான். எங்கே வெளியே சென்றாலும் அவன் தன்னுடன் ஒரு பெட்டியை எடுத்துச் செல்வது வழக்க மாக இருந்தது. அதை யாரும் திறக்க அவன் அனுமதிப்ப

தில்லை. அவன் மீது பொறாமை கொண்டிருந்த மற்ற அமைச்சர்கள் பொக்கிஷத்திலுள்ள விலை மதிப்புயர்ந்த பொருள்களைத் திருடி அவன் அந்தப் பெட்டிக்குள் சேமித்து வைத்திருப்பதாகக் கதைகட்டி, அரசனிடம் கூறி, அவனையும் நம்பச் செய்து விட்டார்கள்.

அரசியல் காரியமாக வெளியூருக்குச் சென்றிருந்த மந்திரி அப்பொழுதுதான் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் வரும்வரை அரசனுக்குக் காத்திருக்கப் பொறுமையிருக்கவில்லை. கையும் களவுமாக அவனைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் குதிரை மீதேறி மந்திரியை வழியிலேயே சந்திக்கப் புறப்பட்டு விட்டான்.

அரசன் போட்ட கடும் உத்தரவைக் கேட்டு பிரமிப்படைந்து போன மந்திரி பல்லக்கினின்று இறங்கி, மன்னனுக்கு வணக்கம் செலுத்தி விட்டு, "அரசே! தாங்கள் பார்க்கக்கூடிய எந்த விதமான அற்புதப் பொருள்களும் இந்தப் பெட்டியில் இல்லை" என்று தாழ்மையாகத் தெரிவித்துக் கொண்டான்.

அரசன் சமாதானமடையாது பெட்டியை எல்லோர் முன்னாலும் திறக்கும்படி உத்தரவு பிறப்பித்தான். ஆவலுடன் தலையை நீட்டி, பெட்டிக்குள்ளே உற்றுப் பார்த்த எல்லோரும் ஆச்சர்யமடைந்து போனார்கள். நவரத்தினங்களையும் மோகராக்களையும் எதிர்பார்த்த அந்த பொறாமைக்காரர்கள் பெட்டிக்குள் கிழிந்து போன ஆட்டிடையனின் ஆடை ஒன்று இருப்பதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனார்கள். ஏமாற்றமும் வியப்பும் ஒருங்கே எய்திய மன்னன் மந்திரியின் முகத்தைப் பதிலுக்காக உற்றுப் பார்த்தான்.

"ஒரு காலத்தில் ஆடுகளைக் காட்டில் மேய்த்துக் கொண்டிருந்த என்னைத் தாங்கள் கருணை கொண்டு

இந்தப் பதவிக்கு உயர்த்தினீர்கள். அந்தஸ்தினால் ஏற்பட்ட மமதையால் நான் யாருக்கும் தீங்குகள் செய்ய விடக்கூடும் என்ற அச்சத்தில் என் பழைய நிலையை எனக்கு ஞாபகப்படுத்தி, என் சிறுமையை நன்கு உணர்த்த வேண்டியே சதா இந்த ஆடையை என்னுடனே எங்கே சென்றாலும் எடுத்துச் செல்கிறேன்" என்று தாழ்மையாகப் பதிலளித்தான் மந்திரி!

அதைக் கேட்ட அரசன் தன் தவறுக்காக வெட்கமடைந்து விவேகமிக்க அந்த மந்திரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

தமயந்தி கலாசாலையில் படித்து, பள்ளிக்கூட உபாத்யாயினியாக அமர்ந்த பின்னும், காந்திமதி அவளிடம் இந்தக் கதையை விவரித்துச் செல்லும்படி ஏதாவது ஒரு சமயம் கேட்பது உண்டு. அப்பொழுதெல்லாம் நியாகராஜன் தன் அத்தையைப் பரிகசிப்பது வழக்கம். "கேட்ட கதையையே எவ்வளவு தரம் கேட்பீர்கள், அத்தை? உங்களுக்கு இது அலுக்கவில்லையா?" என்று கேலியாகக் கேட்பான்.

"அலுக்கவில்லை. எத்தனை வாட்டி கேட்டாலும், எனக்கு இந்தக் கதை மிகவும் புதுமையாகத் தோன்றுகிறது" என்று அப்பொழுதெல்லாம் அவள் அவனுக்குப் பதிலளிப்பாள்.

அன்று இரவு நகரத்து ரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த மூன்றாம் வகுப்புப் பெண்கள் பெட்டியில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்த காந்திமதியம்மாள் இந்தக் கதையை ஆயிரத்து ஓராவது முறையாகத் தன்னுள்ளே சிந்தித்துப் பார்த்தாள். என்ன முயற்சித்தாலும், அவளுக்கு அந்த ஆட்டிடையனின் மனத்தில் ஏற்பட்டிருந்த விவேகம் சிறிதும் ஏற்படவேயில்லை. ஆசனத்தில் கீழே கிடந்த தனது பழைய தகரப்

பெட்டியைக் குனிந்து பார்த்துக் கொண்டாள். இதுவரை வகித்து வந்த பதவி, அதிகாரம், அந்தஸ்து, செல்வத்தின் சுகம் அனைத்தையும் உதறிவிட்டு, பழையபடி ஏழை காந்திமதியாகத் திரும்பப் போவதென்றால், அது சுலபமான காரியமாகத் தோன்றவில்லை. ஸ்டேஷனை விட்டு நகர்ந்த வண்டி 'ஹோ' வென்று இரைச்சலிட்டுக் கடும் வேகத்துடன் இருளைக் கிழித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. 'சில்' என்று முகத்திலே வந்து வீசிய குளிர்ந்த காற்று அவளது துயரத்தை இன்னமும் அதிகப் படுத்தியது. இருபது வருஷங்கள்! எவ்வளவு பாடுபட்டாள்; உடல் நோக, ராப்பகல் எனப் பாராது உழைத்தாள். இவ்வளவு எதற்கு? தாயில்லாத பிள்ளை, சிறிய அன்னையால் கொடுமைப் படுத்தப்பட்டுவிட்டான் என்ற பச்சாதாபத்தில், தியாகராஜன் மீது அவள் பொழிந்த அன்பு தான் எவ்வளவு? தன் தேக சிரமத்தைப் பொருட்படுத்தாது பாடுபட்டு வளர்த்து மேம்பாடடையச் செய்த அவளை, ஒரு கணத்தில் 'நீ யார்?' என்றல்லவா கேட்டு உதறி எறிந்து விட்டான்? இந்தக் கொடுமையை அவள் யாரிடம் சொல்லி முறையிட்டுக்கொள்ள முடியும்? கண்ணின் கருமணி போல் அன்னைக்கு மேல் அன்புடன் வளர்த்ததற்கு முடிவில் காந்திமதிக்கு இதுதானா பரிசு? – இவ்வாறு பலவாறு எண்ணிய அவளது இருதயம் கட்டுக்கடங்காத உணர்ச்சி வெள்ளத்தில் குமுறியது. அந்த வேதனை தாளாது அவள் சிறு குழந்தை போல் தேற்றுவார் இன்றி வெகுநேரம் விம்மியழுது கொண்டிருந்தாள்.

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு காந்திமதி யாரிடமும் பேசவில்லை. அன்று இரவு அவள் சாப்பிடவும் இல்லை. அவள் பட்டினியாக இருந்ததைப் பற்றி தியாகராஜனோ, அமிர்தமோ கவலை எடுத்துக் கொள்ளவும் இல்லை. பொழுது விடிந்ததும் வழக்கம் போல் ஸ்தானம் செய்து

விட்டு பூஜையறைக்குள்ளே சென்று உட்கார்ந்து கொண்டாள். எவ்வளவோ கடவுளை வேண்டிக் கொண்டும் அவள் மனம் அலைகடலைப் போல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதில் அமைதி ஏற்படவேயில்லை. தியாகராஜன் ஆபீஸிற்குச் சென்று விட்டான் என்று அறிந்ததும் அறையினின்று வெளி வந்தாள். தன்னுடையது என்று உரிமை பாராட்டிக் கொள்ள கூடிய சில பொருள்களைத் தேடி எடுத்து, ஒரு பழைய தகரப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு, யாரிடமும் ஏதும் கூறாது பங்களாவினின்று கால்நடையாகப் புறப்பட்டு விட்டாள்.

விஜயா அது சமயம், நடந்த சங்கதியை தமயந்திக்குத் தெரிவிக்க வேண்டி, அருணோதய ஆசிரமத்திற்குச் சென்றிருந்தாள். மோகனாவும் ஏதோ காரியமாகத் தன் சிநேகிதி ஒருத்தியின் வீட்டிற்குச் சென்றிருந்தாள். நமச்சிவாயமும் அமிர்தமும் மட்டுமே வீட்டில் இருந்தார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் அர்த்த பாவத்துடன் பார்த்துக் கொண்டு, பங்களா வாயில் வராந்தாவில் அவர்கள் இருவரும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு, தள்ளாடிக் கொண்டு செல்லும் காந்திமதியை வேடிக்கை பார்த்துக் கொண்டு வாளாவிருந்து விட்டார்கள். பகட்டிற்காகக் கூட அமிர்தம் காந்திமதிக்கு ஆறுதல் ஏதும் கூற விரும்பவில்லை.

"குடும்பம் என்றால் பலவும் இருக்கும். சின்ன விஷயத்திற்கெல்லாம் இப்படிக் கோபித்துக் கொண்டு வெளியே போகலாமா?" என்று வெறும் வார்த்தைக்காக வாவது சொல்லி விட்டால், எங்கே காந்திமதி மனச்சமாதானமடைந்து திரும்பி வீட்டிற்குள் புகுந்து கொண்டுவிடுவாளோ என்கிற பயத்தில், நமச்சிவாயமும் சிலையைப் போல் ஆடாது அசங்காது நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனது மனத்திலே உள்ள எண்ணங்

களைப் பிரதிபலிப்பன போல் அவளது அருமை நாய்கள் இரண்டும் எஜமானன் அருகில் ஓடிவந்து, வாலை யாட்டிக்கொண்டு குழைவாக நின்று கொண்டிருந்தன.

காந்திமதி, பங்களா கேட்டைத் தாண்டிச் சென்றதும் வேலையாளை சமிக்ஞை செய்து அழைத்த அமிர்தம், "போய் கதவைச் சாத்திப் பூட்டி சாவியை எடுத்துக் கிட்டுவா. இனி மேலே தியாகு வெளியிலே போன உடனே வாசல் கேட்டைப் பூட்டி வைக்கணும். தெரிஞ்சுதா?" என்று புது எஜமானி என்ற தோரணையில் அகம்பாவத்துடன் தனது முதல் உத்தரவைப் பிறப்பித் தாள்.

தங்கையின் முகத்தை மகிழ்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்து நமச்சிவாயம் வஞ்சகமாகப் புன்னகை செய்தான். "மல்லி! ரோஜா! இனி நீங்கள் தாராளமாக பங்களாக்குள்ளே வரலாம். யாருக்கும் நீங்கள் பயப்படவே வேண்டாம்" என்று முணுமுணுத்துக் கொண்டு அந்த இரு நாய்களை யும் அன்புடன் தட்டிக்கொடுத்தான். காந்திமதியின் அதிகாரம் ஒழிந்தது என்ற விஷயம் அவனது உள்ளத்தில் பெரும் அமைதியை உண்டு பண்ணி விடவே, அவன் 'அப்பாடி' எனப் பெருமூச்செறிந்தான்.

வேலைக்காரன் கொண்டு வந்து கொடுத்த சாவியை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டே அமிர்தம் "பூனை கண் மூடினால் பூலோகமே அஸ்தமித்துப் போய் விடுமா! தியாகு ஏதாச்சும் கேட்டால், நமக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லி விடுவோம்!" என்று கூறிவிட்டு, மிகவும் மிடுக்காக உள்ளே திரும்பிச் சென்று காந்திமதி வழக்கமாக உட்கார்ந்து கொள்ளும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

மறுநாள் காலை ரயில் வண்டியை விட்டு இறங்கிய காந்திமதி, ஸ்டேஷன் அருகே நின்று கொண்டிருந்த

மாட்டு வண்டிகளில் ஒன்றை வாடகைக்குப் பேசி ஏறி உட்கார்ந்து கொண்டாள். ஒரு காலத்தில் வேண்டாம் என்று உதறிவிட்டுச் சென்றிருந்த அதே சூரியகாந்தத்திற்கு அவள் இன்று மீண்டும் திரும்பி வந்தாள். வண்டிக்குள்ளி ருந்தபடியே தன்னைச் சுற்றிலும் அவள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டாள். இருபது வருஷங்களுக்கு முன்பு அவள் விட்டுச் சென்றிருந்த அந்த கிராமம் இப்பொழுது முற்றிலும் மாறி விட்டிருந்தது. கல்லும் குழிகளுமாக இருந்த ரயிலுக்குப் போகும் ராஜபாட்டை, தினசரி யாரோ கருத்துடன் பெருக்கி மெழுகி விட்டது போல், நார் பூசப்பெற்று வழுவழுவென்று இருந்தது. இருமருங் களிலும் சில கஜ தூரத்திற்கு மின்சார விளக்குக் கம்பங்கள் காணப்பட்டன. எதிரே மோட்டார்களிலும், சைக்கிள்களிலும், குதிரை வண்டிகளிலும் போய்க் கொண்டிருந்த மனிதர்களின் முகங்கள் எல்லாம் அவளுக்கு மிகவும் புதியதாக இருந்தன. 'மேலத் தெரு' என்று வண்டிக்காரன் கூறியதைக் கேட்டதும் காந்திமதி வண்டியில் நிமிர்ந்து நன்றாக உட்கார்ந்து கொண்டாள்; அவள் இருதயம் உணர்ச்சி வேகத்தில் படபடவென்று அடித்துக் கொண்டது.

தெரு முனையை வண்டி தாண்டியதும் அவள் பரபரப்புடன் திரும்பிப் பார்த்தாள். பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, சில காலம் இன்புற்று இருந்த அவர்களது சிறிய வீடு இருந்த அந்த இடத்தில் இப்பொழுது ஒரு பெரிய மாடி வீடு காணப்பட்டது. வாயிற்படியருகிலே நின்று கொண்டிருந்த யாரோ ஒருவன் அவளை வெறித்துப் பார்த்தான். காந்திமதி தன் ஆவலை அடக்க முடியாது "இந்த வீடு யாருடையது. உனக்குத் தெரியுமா?" என வண்டிக்காரனைக் கேட்டாள்.

"இதுவா? இது பாண்டியக் கவுண்டருடையது. இது முதலிலே சின்னதா, பாழடைஞ்சு கிடந்தது. யாரோ

அமிர்தம்னு ஒரு அம்மாவுக்குச் சொந்தமாக இருந்திச்சு. கடனுக்கு முழுகிப் போகவே, கடன்காரன் இதைத் தன்னுடையதாக்கிக்கிட்டான். அவன் கையிலிருந்து ஒரு சாயபுக்கு மாறிச்சு. அவர் இதை மாடி வீடாகக் கட்டி, நல்ல விலைக்கு கவுண்டருக்கு வித்து விட்டார். ஆரம்பத்திலே யாருடைய வீடாகவோ இருந்திச்சு. இப்போ எவனோ ஒருத்தனுடையதாக இருக்குது. இன்னும் எவன் கைக்கெல்லாம் மாறுமோ, தெரியாது. அம்மா இந்த உலகத்திலே எதையும் நம்முடையதுன்னு சொல்லி சொந்தம் கொண்டாடிக்கவே முடியாது. இன்னைக்கு நம்முடையதாக இருப்பது நாளைக்கு இருக்கும்னு நிச்சயமில்லை" என்று வேதாந்தமாகப் பேசினான்.

'இந்த வீடு ஒரு காலத்தில் என்னுடையதாகவும் இருந்தது. இதிலே நான் என் இளமைப் பருவத்தில் எந்தனையோ இன்ப நாட்களைக் கழித்திருக்கிறேன்' என்று சொல்ல வேண்டும் போல் காந்திமதியின் நா துடித்தது. ஆனாலும் அவள் பதிலுக்கு, "வாஸ்தவம்! நீங்க சொல்வது ரொம்ப சரியானதுதான். ஆனால் மனுஷங்களுக்கு அத்தனை விவேகம் லேசில் வந்து விடுகிறதா?" என்று கேட்டுவிட்டுத் தன் கண்களில் பெருகிய கண்ணீரை ரகஸ்யமாகத் துடைத்துக் கொண்டாள்.

வண்டிக்காரன் முடிவில் தெருக்கோடியை அடைந்தும் காந்திமதி கூறியபடி வண்டியை ஆற்றின் பக்கமாகத் திருப்பினான். வண்டி வீட்டை நெருங்க நெருங்க அவளது சந்தேகம் அதிகரித்தது. நெஞ்சு படபடத்தது. உடல் பயத்தில் வியர்த்தது. "ஐயா! சம்பந்த முதலியார் வீடு இதுதானே?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம் அம்மா! இந்த கிராமத்திலே இவர் ஒருத்தர் தான் இன்னமும் தமது வீட்டை வித்து விட்டுப்

பட்டணத்துக்குப் புறப்படாமல் இருக்கிறவர்" என்று சிரித்தான் வண்டிக்காரன்.

"முதலியாரும் அவர் பெண்சாதியும் சௌக்கியமாக இருக்கிறார்கள் அல்லவா?" எனத் தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டாள் காந்திமதி.

"முதலியாருக்கு வயது எண்பது ஆகப்போகுது. தொண்டு கிழமாயிட்டும், பழங்காலத்துக் கட்டை போருங்க, அப்படியே காஞ்ச குச்சியாட்டமா சிடுக்கினு இருக்கிறார். நிதக்கும் ஆத்திலே போய் ஸ்தானம் பண்ணி விட்டு பட்டையா விபூதி இட்டுகிட்டு, கண்ணாடியைப் போட்டுக்கிட்டு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கிட்டால் போதும்; மேலைத் தெருவிலே என் வண்டி வரத்துக் குள்ளே அவர் படிக்கிற தேவாரம் என் காதில் வந்து விழும்னா பார்த்துக்குங்க" என்று சிரித்தான் வண்டிக் காரன்.

வண்டிகாரனுக்குக் கொடுக்கவேண்டிய சில்லறையை எடுத்துக் கொடுத்து விட்டு, தகரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு, காந்திமதி சம்பந்த முதலியார் வீட்டு வாயிலை அடைந்தாள். விவரிக்க இயலாத ஒருவித உணர்ச்சி வேகத்தில் அவள் நெஞ்சு படபடத்தது. பேச இயலாது தொண்டை வறண்டு போயிற்று.

முற்றத்துக்கு குறட்டிலே வீற்றிருந்த தொண்டுகிழவர், கையில் பிடித்திருந்த புத்தகத்தை தரையில் வைத்து விட்டு, மூக்கின் மீது நழுவி விழுந்த தமது மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு, "யாரது?" என்று அதட்டினார். அந்தக் குரலைக் கேட்ட காந்திமதி அந்தக் கிழவரை ஏற இறங்க பிரமிப்புடன் பார்த்துவிட்டு, "அண்ணாச்சி! நான்தான்!" என்று கூறிவிட்டு உள்ளே வந்து நின்றாள்.

"யாரது? தெரியலையே?" என்று முணுமுணுத்த கிழவி, கயிற்றுக் கட்டிலினின்று எழுந்து உட்கார்ந்து கொண்டு இருமினாள்.

"அண்ணாச்சி! என்னை உங்களுக்குத் தெரியலையா? நான் தான் உங்க தங்கச்சி காந்திமதி! இப்போகூடத் தெரியலையா உங்களுக்கு" என்று தழுதழுத்த குரலில் வினவிய காந்திமதியின் தொண்டை துக்கத்தினால் தடைப்பட்டது.

"காந்திமதியா! நிசமாகவா! எங்கேயம்மா இப்படித் திடீர்னு புறப்பட்டு வந்திருக்காப்ல..." என்று ஆச்சர்யத்துடன் வினவிய சம்பந்த முதலியார் தம்முன் நின்ற வயோதிகப் பெண்மணியை மிகவும் வியப்புடன் பார்த்தார். கீழே விழுந்து காயமடைந்த குழந்தைக்குத் தாயைக் கண்டதும் துக்கம் பெருகி விடுவது போல், காந்திமதிக்கு முதலியாரைக் கண்டதும் துக்கம் பீறிட்டது.

"திடீரென்று புறப்பட்டு வரும்படி எனக்குக் காலம் வந்துவிட்டது. உடனே உங்களைத் தேடிக்கொண்டு நான் வந்து விட்டேன் அண்ணாச்சி! எனக்கு உங்களைத் தவிர உலகத்திலே யார் இருக்கிறாங்க, சொல்லுங்கள்!" என்று கேட்டபடி அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

முதலியார் பதில் கூறுமுன் காந்திமதி விக்கி விக்கித் தன் இருதயம் வெடித்து விடும்போல் அழுதாள்.

வழக்கத்திற்கு மாறாக அன்று மாலை ஆபீஸிருந்து சீக்கிரம் திரும்பிவிட்ட தியாகராஜனைக் கண்டதும்

அவர்களுக்குச் சற்று ஆச்சர்யமாக இருந்தது. "ஏன் தியாகு? உன் உடம்புக்கு என்ன? ஏதோ ஒரு மாதிரி இருக்கிறாயே?" என்று பரிவு தொனித்த குரலில் கேட்டாள்.

"என்ன அண்ணா! எப்படியோ இருக்கிறீங்க?" என்று மோகனாவும் அக்கறையாக விசாரித்தாள்.

அது சமயமிருந்த மனநிலையில் தியாகராஜனுக்கு அவர்களது உபசார வார்த்தைகள் சிறிதும் பிடிக்கவில்லை. "ஒன்றுமில்லை இலேசாக தலைவலி!" என்று கூறிவிட்டு, மாடியிலிருந்த தன் அறைக்குள் சென்றான். அடுத்தாற் போலிருந்த ஹாலினின்று எழுந்த பேச்சுக் குரல் அவனைத் திடுக்கிடச் செய்யவே, மேல்கோட்டைக் கழற்றப்போன தியாகராஜன் ஜன்னல் அருகே வந்து நின்று கொண்டு உற்றுக் கேட்டான்.

எஜமான் வந்ததைக் கொஞ்சமும் கவனிக்காத பங்களா வேலைக்காரி முருகம்மாள், ஒரு கையை இடுப்பிலும், மற்றொரு கையை முகவாயிலும் வைத்துக் கொண்டு அதிசயித்து நிற்கும் பாவனையில் நின்று கொண்டிருந்தாள். டிரைவர் கந்தசாமி, அவள் அப்படிப் பிரமித்துப் போகும்படியான சுவாரஸ்யமான சங்கதி யொன்றை அளந்து கொண்டிருந்தான்.

"அந்தம்மா பெத்தவங்களுக்கு மேலே பதினாயிரம் மடங்கு அன்பா இவரை எடுத்து வளர்த்தவங்க. 'வீட்டை விட்டு வெளியிலே நட'ன்னு சொல்றதுக்கு ஒப்பா கேவலமாகப் பேசிப்பிட்டார். ரோசம் தாங்காமே அந்தம்மா புறப்பட்டுப் போயிட்டாங்க" என்றான் கந்தசாமி.

"பாவம்! தங்கமான மனுசி! முந்தா நாள் சாயங்காலம் வேலைக்கு வரச்சே அம்மாவை வீட்டிலே காணாததிலே எனக்கு அப்பவே பக்குன்னுச்சு. எங்கேயாவது ஊருக்குப் போயிருக்காங்களோன்று நான் கண்டுக்கல்லை. தள்ளாத

வயசிலே வெளியிலே போனா, அவங்க என்ன செய்வாங்க? மனசு வெறுத்துப்போய், சமுத்திரத்திலே, இல்லாட்டி ரயில் முன்னாடி விழுந்து உசிரை மாய்ச்சுக்கிட்டால்..." என்று அனுதாபத்துடன் கேட்டாள் வேலைக்காரி.

"அத்தையம்மா புறப்பட்டுப் போய் மூணு நாள் ஆகப் போகுது. பெரியவங்க ஏதோ கோவிச்சுக்கிட்டுப் போய் விட்டாங்களே, அப்படிப் போக விடறது, தப்புன்னு எஜமானுக்குத் தெரியல்லை. அவர் பாட்டுக்கு நிம்மதியா சனி விட்டதுன்னு இருக்காரு" என்று மிகவும் வெறுப்புடன் சொன்னான் கந்தசாமி.

"பழைய வீட்டிலே இருக்கிறப்போ ஒரு வாட்டி ஐயாவுக்கு இருமல் ஜ்வரம் வந்து பத்து நாள் படுத்துக் கிடந்தாரே! அப்போ அந்த அம்மா ராவு பகல்னு பார்க்காமே, எச்சில் அசிங்கம்னு பாக்காமே ஐயாவுக்கு எத்தனை பண்ணியிருக்கிறாங்க? அதை நினைச்சாவது அந்தம்மாவைப் போய்த் தேடிப் பார்த்து வீட்டுக்கு அழைச்சுட்டு வரவேணாம்? இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான்! தாயார், கட்டின பெண் ஜாதி, அக்கா, தங்கச்சி அம்புட்டுப் பேரும் செஞ்சிருக்கிற உபகாரத்தையெல்லாம் நிமிசத்திலே மறந்துவிட்டு, நன்றி கெட்டவங்களா போய்டுவாங்க!" என்றாள் கோபத்துடன் கையை ஆட்டிக்கொண்டு.

"இந்தா, முருகம்மா! அப்படி ஒரு வார்த்தை சொல்லிப்பிடாதே! ஏதோ சில பேரு அடி நாளையிலே செய்ததை மறந்து, நன்றி கெட்ட துரோகிகளா இருக்கிறாங்க. ஆனா, எல்லா ஆம்பிள்ளைங்களுமே இப்படியா நன்றி விசுவாசமில்லாம மிருகமா மாறிப் போயிருக்காங்க?" என்றான் சிறிது சினத்துடன்.

முருகம்மாள் துயரத்துடன் பெருமூச்சு விட்டாள். "அத்தையம்மா இல்லாம வீடே வெறிச்சுன்னு போயி

ருச்சே! வேலை சரியா செய்யாட்டா ஒரொரு சமயம் கன்னுன்னு விழுவாங்க. ஆனா, பாவம்! மனசு ரொம்ப நல்லதினைது. ஒரு வாட்டி ஒரு நாள் வேலைக்கு வரச்சே தாமதமாச்சுதுன்னு ஓடியாந்தேன். சந்து முனையிலே ஒரு ரிக்ஷா மேலே மோதிக்கிட்டுக் கீழே விழுந்து எல்லா உடம்பெல்லாம் காயமாயிடுச்சு. அதைப் பார்த்த அத்தையம்மா 'ஐயோ பாவி! பிள்ளை குட்டிக்காரி! இப்படி விழுந்திட்டியே? காலு கை ஒடிஞ்சிருந்தா என்ன கதியாகிறது!'ன்னு கேட்டு விட்டு கண்ணாலே தண்ணீர் விட்டுட்டாங்க. அன்னிக்கு என்னைக் காரிலே கூட்டிக்கிட்டு டாக்டர் வீட்டுக்குப் போய், மருந்து வாங்கிப் போட்டு இரண்டு ரூபா பணத்தையும் கொடுத்து ஒரு வாரம் நாள் உடம்பு குணமான பிறகு வந்தா போதும்'னு ஊட்டுக்கு அனுப்பிச்சுட்டாங்க. பொங்கல், தீபாவளி பண்டிகையின் போது என்னை மறக்கவே மாட்டாங்க. சேலை எடுத்து வச்சு, பாக்கு வெத்திலை பாக்கோட, தன் கையாலே ஆசையோட கொடுப்பாங்க. வேலைக்காரங்க எல்லோரும் குடியும் குடித்தனமுமா இருக்கணும்னு ஆசைப்படுவாங்க. ஐயா கோவிச்சுக்கிட்டு ஆபீஸிலே யாரையாவது வேலையை விட்டு தள்ளிட்டா, அவங்க குழந்தை குட்டிகளோட அம்மா காலிலே வந்து விழுந்துட்டா போதும். பாவம்! மன்னிச்சு வேலையிலே சேத்துக்க. தவறு செய்கிறது சகஜந்தானே'ன்னு ஐயாவை வேண்டிக்கிட்டுத் திரும்பி வேலையிலே அமர்ந்திடுவாங்க. யார் கஷ்டத்தையும் தாளாதவங்க. அவங்களை ஐயா அப்படிப் பேசி வெளியே போக வச்சு விட்டா, பூமி தேவிகூட பொறுக்க மாட்டாளே? இதைக் கேட்டதிலிருந்து என் வயிறெல்லாம் என்னவோ பண்ணுது" என்று கூறிவிட்டுக் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

"அத்தையம்மா இப்படி புறப்பட்டு எங்கேயோ போய் விட்டாங்கன்னு விஜயா அம்மா, தமயந்தி அம்மா கிட்டச் சொன்னதுதான் தாமதம், அவங்க கோன்னு அழுவ ஆரம்பிச்சுட்டாங்க. நேத்து மத்தியானம், ஆசிரமத்துக்குக் கார் எடுத்துக்கிட்டுப் போயிருந்தேன், அவங்க ரெண்டு பேரும் சொல்லி அழுகிறதைப் பார்த்து எனக்கு கண்ணுலே ஜலம் வந்துருச்சு. நான் கண்டுக்காது போல வெளியே மரத்தடியிலே குந்திக்கிட்டேன்" என்றான் கந்தசாமி.

"இருக்காதா, பாவம்! அந்தப் பெண்ணை அத்தையம்மா தான் தாய் போல எடுத்து வளர்த்தாங்க! என்னவோ பொண்ணாய்ப் பிறந்து விட்டா ஆறிலேயும் கஷ்டம், அறுபதிலேயும் கஷ்டம்! இந்த ஐயாவுக்குப் புத்தி ஏன் இப்படி மாறிப் போச்சு! தன் தாயார், தங்கச்சி பேச்சைக் கேட்டுக்கிட்டு இப்படிப் மாறிப் போச்சா? இல்லாட்டி வெளியிலே ஏதாச்சும்..." என்று முடிக்காது நிறுத்தினாள்.

"எனக்குத் தெரிஞ்சவரை, வெளியிலே யாரும் ஐயாவுக்கு இருக்கிறாப்பல இல்லை, நான்தான் நிழல்போல சதா வண்டி ஓட்டிக்கிட்டுக் கூடவே இருக்கேனே!" என்றான் கந்தசாமி பெருமையாக.

கீழே கிடந்த குப்பையை அள்ளி முறத்தில் போட்டுக் கொண்டே வேலைக்காரி அவனைப் பார்த்து அலட்சியமாக நகைத்தாள்.

"போங்கய்யா! கண்ணுலே விளக்கெண்ணெய் போட்டுக்கிட்டு நீங்களா கட்டி வச்சுக் காத்தபடி இருக்கீங்க? இத்தனை வயசாகியும் கல்யாணம் கட்டாம சும்மா விட்டிருக்கிறது பெரிய தப்பாப் போயிடுச்சு. அவர் மனசு மாறிப் போனதுக்குக் காரணம், வெளியே யாராவது ஒரு பெண்ணாகத்தான் இருக்கும். எனக்கு

அப்படித்தான் நிச்சயமாப்படுது" என்று தீர்மானமாகக் கூறிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

தோட்டத்தினின்று குளுமையாகத் தென்றல் உள்ளே வீசிக் கொண்டிருந்த போதிலும், ஆத்திரத்தில் தியாகராஜனுக்கு உடல் முழுவதும் அனல் பற்றி எரிவது போல் தோன்றியது. பற்களைக் கடித்துக்கொண்டு அறைக்குள் முன்னும் பின்னும் உலாவினான். கவரில் பெரிதாக மாட்டப்பட்டிருந்த காந்திமதியம்மாளின் உருவப்படத்தின் மீது அவன் பார்வை தற்செயலாகத் திரும்பியதும் அவன் கோபம் பன்மடங்கு அதிகரித்தது.

"குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்ததாம்" என்பது போல் வீட்டை விட்டுக் காளி போல் புறப்பட்டுச் சென்று விட்டு எத்தனை பெரிய பழிச்சொல்லை வாங்கி வைத்து விட்டார்கள்? பெற்றவர் களுக்கு மேல் செய்தார்களாம்! யார் இல்லையென்று மறுத்தார்கள்?! அதற்காக நான் அத்தைக்கு அடிமையாகி விடமுடியுமா? என் வாழ்க்கையை இஷ்டப்படி வகுத்துக்கொள்ள எனக்கு உரிமை கிடையாதா?" என்று எண்ணமிட்டான். அது சமயம் வேலைக்காரன் ஒரு பெரிய வெள்ளித் தட்டில் பலகாரமும் காப்பியும் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

"இதையெல்லாம் யார் கேட்டாங்க?" என்று உரத்த குரலில் அதட்டியதைக் கேட்டு வேலைக்காரன் நடுநடுங்கிப் போய் விட்டான்.

"அம்மா தான் கொடுத்தனுப்பினாங்க" என்று மென்று விழுங்கிய வேலைக்காரனது கரங்கள் பயத்தால் நடுங்கின.

"வேண்டுமென்றால் நானே உன்னை அழைக்கிறேன்! இதையெல்லாம் எடுத்துக் கொண்டு சீக்கிரம் போ வெளியே" என்று தொடர்ந்தாற் போல் ஒரு அதட்டல்

போட்டான் தியாகராஜன். மேஜை மீது வைத்த பலகாரத் தட்டைத் தூக்கிக் கொண்டு வேலைக்காரன் வேகமாக அறையை விட்டுக் கீழே இறங்கிச் சென்று விட்டான்.

மகன் மிகவும் கோபமாக இருக்கிறான் என்பதை அறிந்து அமிர்தத்தின் குற்றமுள்ள நெஞ்சு மிகவும் சஞ்சலப்பட்டது. "ஏன் தியாகு இப்படி ஒரு நாளு மில்லாது எரிஞ்சு விழறான்? மூஞ்சியைப் பார்த்தாலே பேசக்கூட பயமாயிருக்கிறது? அந்தப் பாவி வீட்டை விட்டுப் போனதுக்கு நம்ம மேலே ஏதாச்சும் கோபமா இருக்கிறானா? 'சிவசிவ'ன்னு போட்டதைத் தின்னுட்டு இவள் விழுந்து கிடக்கப்படாதா? சம்பாதிக்கிற ஆண் பிள்ளை அப்படி, இப்படின்னுதான் இருப்பாங்க. இதெல் லாம் இவளுக்கு என்னவாம்?" என்று தன் தமையனிடம் முறையிட்டுக் கொண்டாள்.

ஊஞ்சலில் உல்லாசமாக ஆடிக்கொண்டிருந்த நமச் சிவாயம் முகத்தைச் சுளித்துச் சப்புக் கொட்டி விட்டு "காந்திமதி போனதைப் பத்திக் கவலைப்படுகிறவனா யிருந்தா உடனுக்குடனே பின்னால் ஓடிப்போய் கூட்டி வந்திருக்க மாட்டானா? ஆபீஸிலே ஏதாவது தொல் லைகள் இருக்கும். பசித்தால் தானே சாப்பிடுகிறான். நீ வீணா மனசை அலட்டிக்கிட்டு இல்லாத குருட்டு யோசனையிலே மூளையைக் குழப்பிக்கிறே! நான் இருக்கிற வரைக்கும் நீ எதுக்கும் கவலைப்பட வேண் டாம் அமிர்தம்!' என்று கூறிய வண்ணம் அருகே தட்டிலிருந்த, மைசூர் பாகு துண்டத்தை அவசரமாகப் பிட்டு வாயில் திணித்துக் கொண்டான்.

தியாகராஜன் பித்தம் பிடித்தவன் போல் அறைக்குள் பன்முறை சுற்றி வந்தும் அவனது கோபம் தணியவே யில்லை. ஏதோ ஒரு யோசனைக்கு வந்தவன் போல் கீழே வேகமாக இறங்கி வந்தான். வாயிலில் நின்று

கொண்டிருந்த தனது காரில் ஏறிக்கொண்டு, வண்டியை அருணோதய ஆசிரமத்திற்குச் செலுத்தினான்.

பல நாட்களுக்குப் பிறகு தமயந்தியைச் சந்திக்கச் சென்ற தியாகராஜனுக்கு ஆசிரமத்தைச் சமீபித்ததும் ஆரம்பத்திலிருந்த துணிவு முற்றிலும் அகன்று விட்டது. "தமயந்தி முகம் கொடுத்துப் பேச மறுத்து விட்டால்?" என்ற ஒரு சம்சயம் உடனுக்குடன் தோன்றவே, காரி லின்று இறங்குவதற்குள் அவனது கால்கள் தடுமாறின. தனக்கு ஏற்பட்ட அச்சத்தை வெளியே காட்டிக் கொள்ளாது, மிகவும் சமாதானமாக ஆபீஸ் அறையை அடைந்து தான் வந்திருப்பதை சேவகன் மூலம் தமயந்திக்குத் தெரியப்படுத்தினான்.

"உள்ளே வரச் சொன்னாங்க" என்று சேவகன் பதில் அளித்து விட்டுக் கதவைத் திறந்து அவனுக்கு வழி விட்டு நின்றான்.

தமயந்தியின் எதிரில் ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்ட தியாகராஜனது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

மேஜை மீது குவிந்து கிடந்த காகிதங்களை விரலால் புரட்டிக் கொண்டிருந்த அவள், அவனை ஏறெடுத்து ஒரு முறைகூடப் பார்க்கவில்லை. பலநாள் ஜ்வரத்தில் அடிபட்டு பிழைத்துத் தேறிக் கொண்டிருக்கும் நோயாளி போல் அவளது தோற்றம் மிகவும் நலிந்து காணப்பட் டதை தியாகராஜன் கவனிக்கத் தவறவில்லை.

தமயந்தியால் ஏதும் பேச முடியவில்லை. பல நாட்களுக்குப்பின், அவனைச் சந்திப்பதனால் ஏற்பட்ட ஓர் அதிர்ச்சி, தனக்கு அவன் இழைத்த துரோகத்தினால் நேரம், காந்திமதியம்மாளிடம் அவன் காட்டிய அசட் டைக்காக ஏற்பட்ட கோபம்- என்ற பல்வேறு உணர்ச் சிகள் அவள் உள்ளத்திலே கொந்தளித்துக் கொண்டிருந்

தன. ஆனால், அவள் மிகவும் சாமர்த்தியமாக அவ்வளவையும் கட்டுப்படுத்திக் கொண்டு தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தியாகராஜன் தொண்டையைக் கனைத்துக் கொண்டுதானே முடிவில் பேசலுற்றான். "ஆமா! அத்தை கோபமாக வீட்டை விட்டு வெளியே கிளம்பிச் சென்றதும் நான் அவர்கள் இங்கே தான் நேரே உன்னிடம் தங்கியிருக்க வந்திருப்பார்களென்று நினைத்தேன். ஆமாம்! அவர்கள் இப்போது எங்கே போயிருக்கிறார்களாம்? உன்னிடம் கட்டாயம் சொல்லியிருப்பார்களே?" என்று கேட்டான்.

தமயந்தி உடனே பதில் பேசவில்லை. நீர் நிறைந்த கண்களால் அவனைச் சுட்டு விடுகிறவள் போல் ஒருகணம் நிமிர்ந்து பார்த்துவிட்டு, "எனக்கு அவர்கள் சென்ற விடம் தெரியாது. போலீஸுக்கு இது விஷயமாக தகவல் கொடுத்து எனக்கு உதவும்படி ஒரு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறேன். பல இடங்களில் ஓடியாடிச் சென்று அவர்களைத் தேடமுடியாத ஒரு பரிதாப நிலையில் நான் இருப்பதால் தினசரிப் பத்திரிகைகளில் உள்ள 'விபத்து, துர்மரணம்' போன்ற தலைப்புகளை ஊடுருவிப் பார்க்கிறேன். வீட்டைவிட்டு வெளியேறிய பெரியம்மா அதிக நாட்கள் ஜீவித்து இருக்க மாட்டார்கள் என்று ஏனோ எனது அந்தராத்மா சொல்லிக் கொண்டே இருக்கிறது. தன் உயிருக்குமேல் தான் வளர்த்த இரு குழந்தைகளையும் அவர்கள் நேசித்தார்கள், அந்தக் குழந்தைகளைப் பிரிந்து வாழ்வது என்றால் அவர்களால் சாத்தியப்படாத செய்கை. எனக்கு எவ்வளவோ அவர்கள் செய்தார்கள். அதற்குப் பிரதியாக நான் ஒன்றுமே செய்யவில்லை என்பது மனத்தை ரம்பம் கொண்டு அறுக்கிறது" என்று முடித்த அவளது குரல் தழுதழுத்தது.

அவளது வார்த்தைகள் தியாகராஜன் மனத்தைச் சுருக்கெனத் தைத்தன. தன்னை இடித்துக் காட்டியது போல் அவள் பேசியதைக் கேட்டு அவன் வெகுண்டான். "நீங்கள் எல்லோருமே அத்தையம்மாளின் கதியையே பேசுகிறீர்கள். நீங்கள் யாருமே என்னைப்பற்றி சிந்திக்கவில்லை. தள்ளாத வயதில் வீட்டை விட்டு நான் வேண்டுமென்றா விரட்டினேன்? ரயிலில் விழுந்தோ, குளத்திலே விழுந்தோ உயிரை விடவேண்டுமென்ற தூர்ப்புத்தி ஏற்பட்டால், அதற்கு நானா பொறுப்பாளி? நாலுபேர் முன்னிலையில் என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று பிடிவாதமாகக் கிளம்பி வெளியே போனால் யார்தான் என்ன செய்ய முடியும்?" என்று படபடவென ஆத்திரத்துடன் இரைந்து கேட்டான்.

"வீட்டில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. அதனால் இதைப்பற்றி நான் அபிப்பிராயம் சொல்ல சக்தியற்றவளாய் இருக்கிறேன்?" என்று பதில் அளித்த தமயந்தி நோட்டுப்புத்தக மொன்றைப் புரட்டத் துவங்கினாள். சினம் பொங்கி வழிந்த அவனது முகத்தை நேருக்கு நேர் பார்க்கக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

தமயந்தி தன்னிடம் காட்டிய அசட்டை அவனது கோபத்திற்கு இன்னும் தூபம் போட்டது. "நீ மெத்தப் படித்தவள்! சாமர்த்தியமாகப் பேசுவாய்! சற்றுமுன் சொன்னாயே. அதற்கென்ன அர்த்தம்? நான் கடமையைச் செய்ய மறந்துவிட்டதுபோல் பொருள்பட நான் அவர்களுக்குப் பிரதியாக ஏதும் செய்யவில்லை என்றாயே, அதற்கு என்ன பொருள்? நான் நன்றி மறந்து, வேண்டுமென்று உன் பெரியம்மாவை வீட்டை விட்டு விரட்டி விட்டேன் என்று உனக்கு என் மேல் கோபம்! இல்லையா? சொல்!" என உக்கிரமாகக் கேட்டான்.

தமயந்தியின் முகம் லேசாகச் சிவந்தது, அவளது உதடுகள் உணர்ச்சி வசத்தில் துடித்தன. தன்னைப் பெரிதும் சமாளித்துக் கொண்டு, "ராஜ்! என் கடமைகளைப் பற்றி நான் சொல்லிக்கொண்டேன். அவ்வளவு தான்! தங்களுடைய கடமைகளைப் பற்றிப் பேசவோ தர்க்கிக்கவோ நான் விரும்பவும் இல்லை; எனக்கு உரிமையுமில்லை. தங்களுடன் நீடித்து நான் பேச விரும்பவில்லை. என்னை மன்னிக்கவும்" என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டாள்.

வண்டியில் வந்து உட்கார்ந்து கொண்ட தியாகராஜன் தன் கோபத்தையெல்லாம் யார் மீதேனும் காட்ட விரும்புகிறவன் போலக் கதவைப் படீரென்று சாத்தினான். ஆக்ரோஷத்துடன் வேகமாகக் காரை ஆசிரமத்து வாயிலிருந்து ராஜபாட்டைமீது திருப்பினான். அவனது மனமும் சிந்தனைகளும் எங்கெல்லாமோ நிலை கொள்ளாது ஓடிக் கொண்டிருந்தன. ராஜபாட்டையில் எதிரே வந்து கொண்டிருந்த வண்டிகள் அவனது கண்களில் எறும்புகள் போல் சிறியவைகளாகப் புலப்பட்டன. அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்த பாதசாரிகள் மீது பனிப் படலம் வந்து சூழ்ந்து மறைத்துக் கொண்டது போல் ஒரு பிரமை ஏற்பட்டது. நான்கு ரஸ்தாக்கள் ஒன்றாக இணையும் ஒரு சந்திப்பில் வண்டியை இடது புறமாக, அபார வேகத்தில் திருப்பினான் அவன்.

ஒரே கூச்சலும், போலீஸ்காரன் ஊதல் சப்தமும் காதைப் பிளக்கவே திடுக்கிட்டுக் காரை நிறுத்தினான். வண்டியினின்று இறங்க முடியாது ஒரு கூட்டம் அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டது. இவ்வளவிற்குக் காரணமாக இருந்த பிச்சைக்காரப் பெண்மணி, வண்டிக்கு அப்பால் சில கஜ தூரத்தில் இரத்த வெள்ளத்தில் நினைவற்றுக் கிடந்தாள்!

சம்பந்த முதலியார் ஏற்கெனவே, சொற்களாலும் செயல்களாலும் காந்திமதிக்குப் பல உதவிகள் செய்திருந்தார். ஆனால் தற்சமயம் அவர் செய்த உதவி ஈடு இணையற்றதாக விளங்கியது என்றால் மிகையேயில்லை. வயோதிகப் பருவத்தில் மனம் உடைந்து துன்பப்பட்டு கதியற்றவளாகத் தன்னைத் தேடிக் கொண்டு வந்த காந்திமதியை அவர் முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு தம்முடன் தங்கி வசிக்கும்படி இடம் அளித்தார். இருபது வருஷங்களுக்கு முன் என்றால், இப்படிப்பட்ட ஒரு உதவியை காந்திமதி ஏற்றுக்கொள்ள மறுத்திருப்பாள். யௌவனப் பருவத்துப் பெண்மணியான அவள், முதலியார் தம்பதிகளுடன் சேர்ந்து வசிப்பதைப் பற்றி ஊரிலுள்ள விஷமிகள் தவறாகப் பேசக்கூடும் என்று அஞ்சி நடுங்கியிருப்பாள். ஆனால், இன்று அவள் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லாது இயற்கை அவளிடம் மிக்க கருணை கூர்ந்து அவளது தோற்றத்தை வெகுவாக மாற்றிவிட்டிருந்தது.

தங்கநிற மேனியும், சுருண்ட கூந்தலும், யௌவனத்தின் சோபை அறியாத தோற்றமும் கொண்டிருந்த காந்திமதி, இப்பொழுது தலை வெளுத்து, முகம் சுருங்கி, உடை தளர்ந்து போன வயோதிகப் பெண்மணியாகி விட்டிருந்தாள். அவளை ஏதேச்சையாகப் பார்க்க நேரிடும் யாரும் அவள் யார், முதலியாருக்கு எந்த வகையில் உறவினள் என்ற ஆவலோ, கவலையோ உடைய மாட்டார்கள் என்பது நிச்சயம். வேகமாகச்

செல்லும் வாழ்வுப் பாதையிலே, யௌவனத்திற்கும் வாலிப மிடுக்கிற்குந்தானே இடமுண்டு? வயோதிகர்களைப் பற்றி யாருக்கு என்ன அக்கறை? ஆகவே, காந்திமதி அங்கே அவர்களுடன் தங்கியிருப்பதைப் பற்றி சூரியகாந்தத்தில் யாரும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

இருக்க இடமும், உண்ண உணவும் கொடுத்து உதவியதோடு நிற்காமல் முதலியார், காந்திமதிக்கு மன அமைதியையும் தேடித்தர பல வழிகளிலும் முயற்சித்தார். நொந்திருந்த அவளது உள்ளம் குளிர, தேவாரமும், திருவாசகமும் படித்துக்காட்டி, அவளது சிந்தனையைப் பக்தி மார்க்கத்திலே திருப்பப் பெரும் பாடுபட்டார். அவளது உள்ளத்திலே குமுறி வேதனை செய்து கொண்டிருக்கும் உணர்ச்சிகளைக் குறிப்பாக உணர்ந்து கொண்டு அவ்வுணர்ச்சிகள் அவளது அறிவைக் கலக்கி அவளையே ஒரேயடியாகத் துன்பக் கடலிலே ஆழ்த்தி விடாவண்ணம் அவ்வப்பொழுது தக்க ஆறுதல் மொழிகள் கூறி, புத்திமதிகள் பல எடுத்துக் கூறவும் செய்தார்.

'காந்திமதி! உன்னைப் போன்ற சிறந்த பெண்மணிகளை அடிக்கடி நம் வாழ்விலே சந்திக்க முடியாது. உன்னைச் சிறு பிராயத்திலிருந்தே நான் அறிவேன். மாசில்லாத பசும்பொன் போன்றது உன் மனம் என்பதை நான் பூரணமாக அறிவேன். நீ ஏன் வீணாக வருத்தப் படுகிறாய்? நீ என்ன செய்ய வேண்டுமென்று ஆசைப் பட்டாயோ, எதெல்லாம் உன் கடமை என்று நினைத் தாயோ அவைகளையெல்லாம் நிறைவேற்றி விட்டாய். இதுவரை நீ பிறருக்காக வாழ்ந்தாய். இனி நீ உனக்காக வாழ வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

"இளமைப் பிராயத்திலே என்னிடம் அடிக்கடி அண்ணா, காசி, ராமேச்சுவரம், மதுரை முதலிய க்ஷேத்தி

ரங்களைத் தரிசிக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆனால், தற்சமயம் வீடே பெரிய க்ஷேத்திரமாக இருக்கிறது. எப்பொழுது இவைகளையெல்லாம் கண்ணால் காண்பேனோ" என்பாயே, ஞாபகம் இருக்கிறதா? காந்தமதி, அவைகளைத் தரிசித்து ஆனந்தமடைய உனக்கு இப்பொழுது அவகாசம்தானே ஏற்பட்டிருக்கிறது.

"பிறருடைய ஆசாபாசங்களுக்காக இதுவரை நீ வாழ்ந்து வந்தாய். உனது சொந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள உனக்கு சந்தர்ப்பம் தானே வந்து வாய்த்திருக்கிறது. இதைப்பற்றி நீ சந்தோஷப்பட வேண்டும். மேலும் தங்கச்சி நீ ஒரு சிறு உண்மையைக் கட்டாயம் மறக்கவே கூடாது. நாம் பிறருக்குச் செய்த உபகாரத்தைப் பற்றி திரும்ப நினைத்துப் பார்ப்பதோ அல்லது அதற்குப் பிரதியாக எதுவும் எதிர்பார்ப்பதோ மிகவும் தவறு. பயனைக் கருதாது பிறருக்குச் செய்யும் ஒரு உதவியேதான் தர்மம், தியாகம் என்று அழைக்கப்படுகிறது.

"தியாக வாழ்வு வாழ்ந்த உன் மனத்திலே, தியாக ராஜன் இப்படி நடத்தியது சரியா என்றோ, தமயந்தி இப்படிச் செய்திருக்கக் கூடாதா என்றோ எண்ணங்கள் ஏற்படவே இடம் கொடுக்கக் கூடாது. அவ்வாறு இடம் கொடுத்தால் இருபது வருஷங்களாகச் செய்த தியாகத் திற்கு மகிமை இல்லாது போய்விடும். கடமையைச் செய்துவிட்டாய்! அதன் பலனைப் பற்றிச் சிந்திக்காதே!" என்று இவ்வாறு பலவிதமாக புத்திமதிகள் கூறி வந்தார்.

அவைகளைக் கேட்கும்பொழுது சிறிது நேரம் காந்திமதியின் மனம் அமைதியடைவதுண்டு. அவ்வார்த்தைகளில் ததும்பி நின்ற உண்மை அவள் உள்ளத்திற்குச் சாந்தியை அளித்தது வாஸ்தவமே. ஆனால், அந்த அமைதி நீண்டநேரம் இருந்ததில்லை. இரவு வேளைகளில்

தன்னால் ஆனதைச் சிறிதளவு செய்துவிட்டு, அலுப்புடன் தலை சாய்க்கக் கூடத்துத் தரையில் பாயை விரித்துக் கொண்டு படுத்துவிட்டாள், ஒன்றின் பின் ஒன்றாகப் பல சிந்தனைகள் ஓடி வந்து குவிந்து, அவள் உள்ளத்திலே உணர்ச்சிகள் அலை பாயத் தொடங்கி விடுவதுண்டு.

சில இரவுகள் முற்றத்துத் திறந்த வெளியில் ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டு, தியாகராஜனைப் பற்றிப் பலவாறு எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு முயற்சித்தாலும், மீண்டும் மீண்டும் எங்கெல்லாம் சுற்றினாலும், அவளது சிந்தனை மறுபடியும் தியாகராஜனைப் பற்றியே திரும்பி வந்து, அவளது உள்ளத்தைப் புண்படுத்தி நிம்மதியைக் குலைத்தது.

சம்பந்தமுதலியார் வீட்டிற்கு வந்து அவள் தங்கி ஒருமாத காலம் விரைவில் சென்று மறைந்தது. எவ்வளவு முயற்சித்தாலும் அவள் மனம் அமைதியை முழுவதும் அடையாததால், முடிவில் காந்திமதி யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். ஒரு நாள் மாலை முதலியாரிடம் அவள் தன் உள்ளத்து அவாவை எடுத்து வெளிப்படையாகக் கூறினாள்.

"அண்ணாச்சி! நீங்க சில நாட்களாகச் சொல்லிக்கிட்டு வருகிற ஒரு விஷயம் என் மனசிலே நல்லாப் பதிஞ்சு போயிடுச்சு. சின்னவயசிலே ஆசைப்பட்ட காரியத்தை இப்போ செய்து முடிக்க நல்ல சமயம் வாச்சிருக்குது வாஸ்தவம். ஆகவே, நான் உங்களிடம் உத்தரவு வாங்கிக் கிட்டு கொஞ்ச காலம் இப்படி க்ஷேத்திரங்களைத் தரிசிச்சுக்கிட்டு சுத்தி வரலாம்னு யோசிக்கிறேன்" என்றாள்.

படித்துக் கொண்டிருந்த தேவார புத்தகத்தைக் கீழே வைத்தார் முதலியார். அவளைத் தம் மூக்குக் கண்ணாடி வழியே கூர்ந்து பார்த்துவிட்டு, "தங்கச்சி! உண்மையிலே உன் மனசிலே அப்படி ஓர் ஆசை ஏற்பட்டதா? அல்லது இங்கே இருக்கப் பிடிக்காமல், வேறு எங்காகிலும் போக வேண்டும் என்கிற எண்ணத்தாலே இப்படிப் பேசுகிறாயா? நீ இங்கே எவ்வளவு காலம் தங்கியிருந்தாலும் எனக்கு சந்தோஷம்தான். ஆனால், நீ உண்மையில் கோயில் குளங்களுக்குப் போக ஆசைப்பட்டால், அதை நான் தடை செய்ய விரும்ப மாட்டேன்" என்றார்.

"அண்ணாச்சி! எனக்கு இங்கே சவுகரியக் குறைவு ஒன்னுமே இல்லை. ஆனால், நீங்கள் இவ்வளவு ஆறுதல் கூறியும் மனசிலே சமாதானம் ஏற்பட மாட்டேங்குது. ஒரு சமயம் இந்த ஊர் அதற்குக் காரணமாக இருக்கலாமோ என்று ஒரு சந்தேகம் ஏற்படுவதால், வேறு எங்கேயாவது சென்றால் மனசிலே அமைதி ஏற்பட வழியாகும் என்று நினைக்கிறேன்" என்றாள். அதைக் கூறி முடிக்குமுன் அவளது குரல் துக்கத்தினால் தழுதழுத்தது.

"அமைதியைத் தேடிக்கொண்டு எங்கே சென்றாலும் யாருக்கும் அமைதி கிட்டியதே கிடையாது. அமைதி என்பதற்கு ஒரு தனி குணம் உண்டு. தன்னைத் தேடாதவர்கள், தன்னைச் சிந்திக்காதவர்கள் அவர்களிடந்தான் அது முதலில் ஓர் இடம் பெறும். ஆகவே, காந்திமதி! அமைதியைத் தேடிக்கொண்டு நீ வெளியே போவதிலே லாபமே இல்லை. உனக்கு அது கிட்டாது. அதை மறந்து விட்டு, பொழுது போக்காக வெளியூர்களைப் பார்க்கப் புறப்பட்டுப் போவாயானால், தானே உன்னையறியாது மனம் சாந்தமடைந்து விடும். வாழ்க்கையில் நீ அதிக அனுபவங்கள் பெற்றவள். உனக்கு நான் சொல்ல என்ன இருக்கிறது? க்ஷேத்திரங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து

விட்டு, மீண்டும் நீ இங்கே வந்து எங்களுடன் தங்கி இருக்க வேண்டும் என்று உன்னைக் கேட்டுக்கொள்கிறேன்." என்றார்.

காந்திமதி தன் உணர்ச்சிகளை மட்டுப்படுத்திக் கொண்டு பேசலுற்றாள்; "அண்ணாச்சி! தாங்கள் எனக்கு ஒரு சிறு உதவி செய்யவேண்டும்" என்று பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

"உனக்கு இல்லாத உதவி ஒன்றுமில்லை. தாராளமாகக் கேள் அம்மா!" என்றார் முதலியார். கூடத்து மூலையில் தயாராகக் கட்டி வைத்திருந்த மூட்டையொன்றை எடுத்து வந்து காந்திமதி, சாவதவனமாக அவிழ்த்து அதிலிருந்து ஒருசிறு தகர டப்பாவைக் கையில் எடுத்தாள்.

"என்னுடையது என்று உரிமை பாராட்டிக்கொள்ள என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தது. பல வருஷங்களாகப் பால் விற்று, மோர் விற்று பாடுபட்டுச் சேர்த்திருந்த இரண்டாயிரம் ரூபாய்களை நான் தியாகராஜனுக்குத் தொழில் ஆரம்பிக்க முதலாகக் கொடுத்து உதவியிருந்தேன். அவன் அதைப் பின்னால் தக்க லாபம் கிடைத்த உடனேயே என்னிடம் திரும்பிக் கொடுத்து விட்டான். நான் மறுத்தும் அவன் கேட்கவில்லை. தானே தியை அவன் கட்டிக்கொள்ளப் போவதாக என்னிடம் கூறியபொழுது, எனக்கு ஒரு யோசனை தோணிச்சு. இந்த ரூபாய்க்கு ஒரு நல்ல கெட்டி நகை செய்து என் ஞாபகமாக அந்தக் குழந்தைக்குக் கொடுத்து விடணுன்னு நினைச்சு, அப்படியே ஒரு இருபது பவுனுக்கு ஒரு கொத்து தங்கச்சங்கிலி செய்ய ஏற்பாடு செய்திருந்தேன். அதற்குப் பின்னாலே நடந்த சங்கதிகளை அனைத்தும் தான் உங்களுக்குத் தெரியுமே?

"அண்ணாச்சி! இந்தப் பெட்டிக்குள்ளே, என் மணிக்கு நான் கல்யாணப் பரிசாகக் கொடுக்க வச்சிருந்த

சங்கிலி பத்திரமாக இருக்கிறது. அதை எனக்குப் பதிலாக அவள் கல்யாணத்தின் போது நீங்கள் அவளிடம் சேர்த்து விடவேண்டும். அவள் கல்யாணம் என்றதும் அவளுக்கும் தியாகராஜனுக்கும் ஏற்பாடாகியிருந்த திருமணம் என்று அர்த்தமல்ல. ஒரு சமயம் தமயந்தி மனம் மாறி வேறு யாரையாவது மணந்து கொள்ள இசைந்தாலும், அவளது திருமணத்தின் பொழுது, அவளது வளர்ப்புத் தாயான எனது பரிசாக இதை அனுப்பி வைக்க வேண்டும். இந்தச் சிறு உதவியை எனக்காகத் தாங்கள் செய்யணும். நீங்கள் கட்டாயம் செய்வீங்கன்னு எனக்குத் தெரியும்" என்று உணர்ச்சி வசத்தில் படபடவென்று பேசிக் கொண்டு போனாள் காந்திமதி.

"அப்படியென்றால்?" என்று கேட்டு முதலியார் முன்முறுவல் செய்தார்.

"காசி, ராமேஸ்வரம் முதலான இடங்களுக்குப் புறப்பட்டுச் செல்லும் நான், ஒரு சமயம் திரும்பி வராது போனால், அதற்காக இந்த ஏற்பாடு" என்று காந்திமதி பதிலளிக்குமுன் முதலியார் வாய் விட்டு மெல்ல நகைத்தார். "காந்திமதி உன் யோசனை எனக்குச் சிரிப்பை உண்டாக்குகிறது. ஏனம்மா வயதில் உன்னைவிட நான் இளையவனா? நான் மட்டும் உன்னைவிட நீடித்திருப்பேன் என்று எப்படி நிச்சயமாக எண்ண முடியும்?" என்று கேட்டு விட்டு மேலும் சிரித்தார்.

"வயதில் என்னைவிடத் தாங்கள் மூத்தவர். ஆனால் உங்கள் மனசு மிகவும் இளமையாக இருக்கிறது. வயசில் உங்களைவிட உண்மையில் மிக மிக இளையவள். ஆனால், என் உள்ளம் மிகவும் வயோதிகமடைந்து போய்விட்டது. அதனாலே நான் அதிக நாட்கள் ஜீவிக்க மாட்டேன் என்று நினைக்கிறேன். ஆகவே அண்ணாச்சி நாங்கள் தடை சொல்லாமல் இந்த உதவியை எனக்குச்

செய்ய வேண்டும். பிறகு நான் கேட்டுக்கொள்ள வேண்டியது இன்னொன்று கூட இருக்கிறது. எக்காரணம் பற்றியும் யார் கேட்டாலும் தமயந்தி ஒரு சமயம் விசாரித்தாலும் கூட, நான் எங்கேயிருக்கிறேன், எங்கே போனேன் என்பதைத் தெரியப்படுத்தவே வேண்டாம்!" என்றாள். முதலியார் பதிலளிக்காது தமது சம்மதத்தைத் தலையசைப்பினால் தெரிவித்துக் கொண்டார்.

அடுத்த தினமே காந்திமதி தான் கையில் வைத்திருந்த கொஞ்சம் பணத்துடன், தேவையான சில பொருட்களை மட்டும் சேகரித்து மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு சூரியகாந்தத்திலிருந்து புறப்பட்டு விட்டாள். தான் பார்க்க விரும்பியிருந்த க்ஷேத்திரங்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகத் தரிசித்து மகிழ்ந்தாள். புண்ணிய நதிகளில் நீராடி தன் உள்ளத்தையும் உடலையும் குளிரச் செய்து கொண்டாள். வழியில் காணப்பட்ட பல ஊர்களைப் பொழுது போக்காகச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்து, தன் கவலைகளை மறந்து நிம்மதியாக இருந்தாள். இடையிலே புழுதியடைந்து கிழிந்த ஆடையும், இடுப்பிலே ஒரு சிறு மூட்டையுமாகத் தள்ளாடி, வெயிலையும் மழையையும் லக்ஷியம் செய்யாது அலைந்து திரிந்து கொண்டிருந்த அந்தக் கிழவியைக் கண்ட யாரும், அவள் 'காந்தி பவனத்'தின் எஜமானியாக இருந்தவள் என்று ஒருகாலும் சொல்லவே மாட்டார்கள். தியாகராஜனது பெரிய பங்களாவில் வாழ்ந்து கொண்டிருக்கையில் பார்த்தவர்கள், இவளா, அந்தக் காந்திமதியம்மாள்' என்று வியப்படையும் வண்ணம் அவன் தோற்றத்திலே வெகுவாக மாறி விட்டிருந்தாள். எங்கே தங்கினோம், எங்கே தூங்கினோம், என்ன சாப்பிட்டோம் என்ற சிந்தனையின்றி, சித்தம் கலங்கிப் போனவள் போல், எதன் மீதும் விருப்பம் காட்டாது, தன் இஷ்டப்படியெல்லாம் ஊர்களைச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள்.

இவ்வாறு காந்திமதி க்ஷேத்திரங்களைத் தரிசிக்கப் புறப்பட்டு வெளிவந்து ஒரு வருஷ காலத்திற்கு மேல் ஆகிவிட்டது.

ஒருநாள், காவிரிக் கரையோரத்திலே மிகவும் கோலாகலமாக நடந்து கொண்டிருந்த ஒரு திருவிழாவை வேடிக்கை பார்த்துவிட்டு, குளிர்ந்த நதியிலே ஆசை தீரும்மட்டும் பல தடவை ஸ்நானம் செய்துவிட்டு, கரை மீது ஏறி, தன் ஈர ஆடைகளைப் பிழிந்து கட்டிக் கொண்டு தன்னைச் சுற்றிலுமிருந்த கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாள் காந்திமதி.

"அம்மா! பிச்சை!" என்று ஒரு குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்த அவள், திடுக்கிட்டு, மெய் சிலிர்த்துப் போனாள். சுருண்ட கூந்தலும், பொம்மை போன்ற வட்ட வடிவமான முகமும், அரிசி போன்ற சிறு பற்களும் கொண்ட ஐந்து வயது நொண்டிச் சிறுமி ஒருத்தி, தன் கையில் பிடித்த தகரக் குவளையை அவளிடம் நீட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். காந்திமதியின் கண்களில் நீர் சுரந்து பார்வையை மறைத்துக் கொண்டது. துக்கம் நெஞ்சைப் பிடித்து பலமாக அமுக்கியது. புடவைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த நாணயங்கள் அனைத்தையும் அந்தப் பெண்ணின் தகரக் குவளையில் போட்டு விட்டு, மீண்டும் ஒரு முறை களங்கமற்ற அந்த முகத்தை ஏறெடுத்துப் பார்த்து விட்டு, அங்கு நிற்க மனமில்லாது மேலே நடந்து சென்று விட்டாள்.

அன்று இரவு கோயிலில் சத்திரத்துத் திண்ணையிலே படுத்துக் கிடந்த காந்திமதிக்கு ஜ்வர வேகத்தில் உடல் அனலாகப் பற்றி எரிந்தது. தலை நோவும் இருமலும் தாள முடியாது அவள் அனத்திக் கொண்டிருந்தாள்.

"பாட்டி! என்னைக் கூப்பிட்டீங்களா? என்ன வேணும்?" என்று வினவிய வண்ணம், அந்த நொண்டிப்

பிச்சைக்காரப் பெண் அருகில் வந்து கேட்டாள். தெரு விளக்குக் கம்பத்திலிருந்து மெல்லியதாக வீசிய ஒளியில், அந்தப் பெண்ணை மிரட்சியுடன் பார்த்த காந்திமதி, "உன்னையா? உன்னை நான் கூப்பிடல்லையே!" என்றாள் திணறிக் கொண்டு.

"தமயந்தி, தமயந்தி'ன்னு சும்மாக் கூப்பிட்டுக் கிட்டிருந்தீர்களே?" என்று வினவிய அந்தக் குழந்தை, மிகவும் ஆச்சர்யத்துடன் அந்தக் கிழவியை உறுத்துப் பார்த்தாள்.

"உன் பெயர்கூட தமயந்தியா?" என்று வியப்புடன் கேட்ட காந்திமதி, ஆவேசமடைந்தவள் போல் எழுந்து உட்கார்ந்து, அந்தப் பிச்சைக்காரச் சிறுமியைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு விம்மி விம்மியழுதாள்.

37

கோயில்களைத் தரிசித்துக்கொண்டு காந்திமதி யம்மாள் ஊர்கள் தோறும் அலைந்து திரிந்து கொண் டிருந்த ஒரு வருஷ காலத்தில், தியாகராஜன், மாயா இவர்கள் வாழ்க்கையில் சில புதிய மாறுதல்கள் ஏற்பட் டிருந்தன. தேவநகரில் தங்கள் வீட்டை விற்று விட்டு, தாயும், மகளும் சென்னைக்குச் சென்று குடியேறி விட்டார்கள். தியாகராஜன் அப்போதைக்கப்போது வாங்கிப் பரிசாக அளித்திருந்த விலையுயர்ந்த ஆபரணங்கள் பலவற்றையும் விற்று, அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு தாயும் மகளும் அடையாறில் ஒரு சிறு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு,

முன் போல் மர்மமாக ஆனால், சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அன்று காலை வந்து தினசரிப் பத்திரிகையை அலக்ஷியமாகப் புரட்டிக் கொண்டு ரத்தினக் கம்பளத் தின் மீது படுத்துக்கிடந்தாள் மாயா. சற்றுத் தொலைவில் சலவைக்குத் தரையில் சுவரின் மீது சாய்ந்துகொண்டு, பட்டுச்சேலை ஒன்றிற்கு சரிகைப்பூ வேலைகள் செய்து கொண்டிருந்தாள் அவளது தாய். ஹாலின் மூலையி லிருந்த டெலிபோன் 'கிர், கிர்' என்று ஒலிப்பதைக் கேட்டதும் துள்ளி எழுந்து மாயா அவசரமாக அதன் அருகில் ஓடினாள்; டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்து 'ஹல்லோ' என்று கூவிய அவள் முகம் மிகவும் பிரகாசமடைந்து "அப்படியா? மிகவும் சந்தோ ஷம்!" என்று குதூகலத்துடன் பதிலளித்துவிட்டு, டெலி போனைக் கீழே வைத்தாள். மகள் பதிலளிக்கும் முன் தாயார் சங்கதியை ஒருவாறு ஊகித்துக் கொண்டு விட்டாள்.

"யார்! தியாகராஜன் தானே பேசினான்? என்னவாம் சங்கதி?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"அந்த வழக்கில் அவர் ஜெயித்து விட்டாராம், அந்த சந்தோஷத்தைத் தெரிவிக்க நாளைக் காலை இங்கே நேரிடையாக வரப்போகிறாராம். பாவம்! மூன்று மாத காலமாக அவருக்கு இந்தக் கேஸ் தொல்லை பெரும் தொல்லையாக இருந்தது. அவர் ஜெயித்து விட்டார் என்பதைக் கேட்டதும் எனக்கும் மன நிம்மதி ஏற்பட் டிருக்கிறது" என்றாள் மாயா சந்தோஷத்துடன்.

கையிலிருந்த, பூவேலையைக் கீழே வைத்து விட்டு தாயார் மகளின் முகத்தை நிமிர்த்து பார்த்து ஏளனமான தொரு புன்னகை செய்தாள். "உன் தியாகராஜன் முடிவில் இந்தக் கேஸில் ஜெயித்து விடுவான் என்பது எனக்கு

முன்னமேயே தெரியும். 'பணம் பாதாளம் வரை பாயும்' என்பார்களே. அந்தக் காலத்தில் பணம் பாதாளத்திற்குப் போக வேண்டிய அவசியம் இருந்தது போலிருக்கிறது. இந்தக் காலத்தில் அது கோர்ட் ஏற வேண்டியிருக்கிறது!" என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

"அம்மா! பிறருடைய கஷ்டங்கள் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. முன்போல் பணத்தினால் எல்லாவற்றையும் இப்பொழுது சாதித்துக்கொள்ள முடிவதில்லை. காலம் வெகுவாக மாறிவிட்டிருக்கிறது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி ஓடிவந்த ஒரு பிச்சைக்காரி, அவள் உயிருடன் இருந்தாலும், இல்லாவிட்டாலும் யாருக்கும் லாபமோ நஷ்டமோ இல்லை. அப்படி இருந்த போதிலும் தானாக ஏற்பட்ட இந்தக் கார் விபத்திற்காகத் தியாகராஜனுக்கு எவ்வளவு பணச் செலவு? அதை விட்டுத் தள்ளுங்கள்! எத்தனை மனக்கஷ்டம்!" என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள் மகள்.

"கண்மூடித்தனமாகக் கார் விட்டு வந்தது என்னவோ தப்புதான். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு முன் அந்தப் பிச்சைக்காரி வழியிலேயே செத்து விட்டாளாமே!"

"வண்டியில் குறுக்கே வந்து விழுந்து உயிரை விட்டால் யார் என்ன செய்ய முடியும்? வேகமாக வண்டியோட்டிச் சென்றது என்னவோ குற்றந்தான். ஆனால், அதற்காக அந்தப் பைத்தியக்காரி இறந்ததற்கு அவர் தான் பொறுப்பாளி என்று கூறிவிட முடியுமா? எப்படியோ போகட்டும்! தியாகராஜன் இங்கே வந்தால், தயவு செய்து அவரிடம் இந்தக் கேஸ் சங்கதிகளை ஒன்றும் கேட்கவேண்டாம். ஏற்கெனவே அவர் மனம் மிகவும் புண்பட்டுப்போய் இருக்கிறார்" என்றாள் மாயா.

"பயப்படாதே! நான் என்ன அவ்வளவு முட்டாளா? மரியாதை தெரியாது இந்த வழக்கைப் பற்றிப் பேசுவதற்கு? நான் தியாகராஜனிடம் இதுவரை கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு மேல் அதிகப்படியாக ஏதுவும் பேசியிருக்கிறேனா?" என்று கூறிவிட்டுச் சிரித்தாள் தாயார்.

மாயா பதில் பேசவில்லை. ரத்தினக் கம்பளத்தின் மீது சாய்ந்து கொண்டு அவள் கண்களை மூடியவாறு சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள்.

சிறிது நேரம் வாளா இருந்த சுபத்திரா ஆவலை அடக்கமாட்டாதவள் போல் தானே மறுபடியும் பேசலுற்றாள்; "மாயா சில காலமாக நீ செய்து கொண்டு வரும் காரியங்கள் ஒன்றுமே எனக்குச் சரியாகப் புரிய வில்லை. எவ்வளவு சொந்த வேலைகள் இருந்தாலும் கோர்ட்டு தொல்லைகள் பல இருந்த போதிலும், தியாகராஜன் மாதம் ஒரு முறை இங்கே வந்து உன்னைக் கண்டுவிட்டுப் போகிறதில் தவறுவதேயில்லை. அவன் வரும்பொழுதெல்லாம் நீ மிகவும் உற்சாகமாகவும் குதூகலமாகவும் இருக்கிறாய். அவனை அன்புடன் வரவேற்று உபசரிக்கிறாய். அதைக் காண்பவர்களுக்கு தியாகராஜன் மீது நீ உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறாய் என்ற எண்ணம் ஏற்படும்!" என்று பேசி முடிக்குமுன், ஓய்யார மாக அவளை நிமிர்த்து பார்த்த மகள், "அது உண்மை தான், அம்மா!" என்றாள் நிதானமான குரலில்.

"மாயா! இந்த தியாகராஜனிடம் உனக்கு சிநேகம் ஏற்பட்ட பிறகு நீ என்னிடம் கூட பொய் சொல்ல ஆரம்பித்து விட்டாய்! தியாகராஜன் மீது நீ உண்மை யான பாசம் வைத்திருந்தால், இந்தப் பைத்தியக்காரன் மனோகரன் ஏன் இங்கே வந்து அலைய வேண்டும்? எப்பொழுது வாரம் முடியும், விடுமுறை தினம் வரும்

என்று காத்திருப்பவன் போல் இடையே உள்ள இரு நூறு மைல் தூரத்தையும் இரண்டு மைல்களாக நினைத்துக் கொண்டு, உன்னைப் பார்க்கத் தவறாது வாரம் தோறும் வந்துவிடுகிறானே? அவனைக் கண்ட போது, நீ அவனிடம் காட்டும் பரிவையும், அன்பையும் பார்த்தால், அவனைத்தான் உண்மையாக நேசிக்கிறாய் என்று பார்ப்பவர்கள் எண்ணிக் கொள்வார்கள்!" என்றாள் சிறிது கோபத்துடன் தாயார்.

"அதுவும் உண்மைதான் அம்மா! மனோகரன் மீதும் எனக்கு அன்பு உண்டு" என்று கூறிவிட்டு, 'க்ளுக்' கென்று சிரித்தாள் மாயா.

"உனக்கு இதென்னவோ வேடிக்கையாக இருக்கிறது. ஆனால், எனக்கு இது விபரீதமாகத் தோன்றுகிறது. மனோகரனுடன் நீ தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை, தியாகராஜன் அறிந்தால் பிறகு உன்னை மன்னிக்கவே மாட்டான். அவனை எல்லோரையும் போல நீ எண்ணிக்கொண்டு இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைக்க முயற்சிக்காதே! ஒரு எல்லை வரையில் அவன் கட்டுப்பட்டு இருப்பான். எல்லை மீறி விட்டால் அவன் மனம் ஒரேயடியாக மாறிவிடும். தியாகராஜன் சாதாரண மனிதன் அல்ல, ஒரு பெரிய தொழிலை வைத்து நிர்வகிக்கும் முதலாளி. நம்மை விடத் தந்திரக் களிலும் சாகசங்களிலும் வியாபாரிகள் கைதேர்ந்தவர்கள். ஆகவே, அவனை ஒரேயடியாக முழுதும் நம்பிவி வேண்டாம். உனக்குச் சொன்னால், குற்றமாகத்தான் தென்படும். மணிக்கணக்காக உட்கார்ந்து கொண்டு பக்கம் பக்கமாக அவனுக்கு நீ காகிதங்கள் எழுகிறாயே அவன் உனக்கு அப்படி இதுவரை நீண்ட கடிதங்கள் ஏதாவது ஒன்று எழுதியிருக்கிறானா? அப்படி ஏதாவது எழுதினாலும், தன்னைப் பற்றியோ உன்னைப் பற்றியோ ஏதேனும் அதில் கண்டிருக்கிறானா?" என்று கேட்டாள்

மாயா திடுக்கிட்டு உட்கார்ந்தாள். தாயார் கூறிய வார்த்தைகளில் நிரம்பி நின்ற உண்மை அவள் மனத்தைச் சுருக்கென்று தைத்தது. ஆமாம்! தியாகராஜன் இது வரை ஒரு கடிதத்தில் கூட 'உன்னை நேசிக்கிறேன்' என்றோ, 'உன்னை மணந்து கொள்கிறேன்! என்றோ எழுதவேயில்லை. தனது தொழில் விவகாரங்கள், கோர்ட் வழக்குத் தொல்லைகள் இவைகளைத் தவிர, அவன் இதுவரை அவளுக்கு எழுதியிருந்த பல கடிதங்களில் வேறு ஒரு விஷயமும் இருந்ததில்லை... இந்த உண்மை அவளுக்கு ஏன் இதுவரை புலப்படவில்லை. தியாகராஜன் தன்னை நினைத்தபோது உதறிவிடமுடியும்; அவனிடம் தனக்கு எவ்விதப் பிடிப்பும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட மாயாவின் நெஞ்சு படபடவென திகிலுடன் அடித்துக் கொண்டது.

தன் கலக்கத்தைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு, "தியாகராஜன் மனம் மாறி என்னை மறந்து விட்டால், நான் அதற்காக உயிரை விட்டு விடப்போவ தில்லை. மனோகரனை மணந்து கொண்டு சுகமாக வாழ்வேன். உண்மையில், அம்மா, என் மனநிலை சில கதைகளில் வரும் கதாநாயகிகளின் மனநிலையை ஒத்திருக்கிறது. ராமன் மீது காதலா, அல்லது கோவிந்தன் மீது அன்பா என்று புரியாது தவிக்கும் அந்தப் பேதைப் பெண்கள் போல், தியாகராஜனா, மனோகரனா என்று நிர்மானிக்க முடியாது தவித்துக் கொண்டிருக்கிறேன். இருவருடைய குணமும் எனக்குப் பிடித்திருக்கிறது. தோற்றத்திலும் இருவரும் என் மனத்தைக் கவர்ந்திழுக்கிறார்கள். உண்மையில் யாரை மணந்து கொள்வது என்று முடிவைத் திருவுள்ளச் சீட்டு போட்டுக் குலுக்கி எடுக்க வேண்டும் போலிருக்கிறது" என்று கூறிவிட்டு, வேலியாக நகைத்தாள்.

மாயா வேண்டுமென்றே இவ்வாறு பரிகாச தோரணையில் பேசுகிறாள் என்பதை உணர்ந்து கொண்ட தாயார், "இருவரும் தோற்றத்திலும் குணத்திலும் ஒத்தவர்களாக இருந்தாலும், பண விஷயத்தில் வேறுபட்டவர்கள். அதை நீ மறந்திருக்க மாட்டாய். அது ஒருபுறமிருக்க, மனோகரன் பேச்சுக்களையும் செய்கைகளையும் கண்டு அவனையும் ஒரேயடியாக நம்பி விடமுடியாது. எது கேட்டாலும் வேடிக்கையும் விளையாட்டுமாக நீ பேசித் தட்டிக் கழித்து விடுகிறாய். ஆனால் சில நாட்களாக என் மனசிலே ஒரு பெரும் திகில் குடிக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி உன்னிடம் பேச வேண்டாம் என்று என்னால் சும்மாவும் இருக்க முடியவில்லை" என்றாள் தாயார் முடிவில் மிகவும் அன்புடன்.

மாயா அதற்கு உடனடியாக ஏதும் பேசவில்லை. நகத்தைக் கடித்துக் கொண்டு அவள் யோசனையில் ஆழ்ந்து போனாள்.

"அது சமயம், "தந்தி!" என்ற குரல் கேட்டு இருவரும் ஏக காலத்தில் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். தந்தி சேவகன் அளித்த உறையை வாங்கிக்கொண்டு கையெழுத்திட்டு அவனை அனுப்பி விட்டு, அவசரமாக உறையைக் கிழித்தாள் மாயா.

அதை ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டு மிகவும் கோபத்துடன், "நீங்கள் மனசில் கொண்டிருக்கும் திகில் இதோ தத்ருபத்தில் வந்து நிற்கிறது. இந்தாருங்கள்!" என அதை தாயாரின் அருகில் வீசி எறிந்தாள்.

"சீமையிலிருந்து சஞ்சீவியல்லவா தந்தி கொடுத்திருக்கிறான்! எட்டாந்தேதி காலை விமானத்திலே புறப்படுகிறானாம். நேரே அவன் இங்கே நம் வீட்டுக்குத்தான் வரப்போகிறானாமே! விமான நிலையத்திலே வந்து சந்திக்க வேண்டுமாம். அடபாவி! நான் நினைச்சபடியே

தான் செய்கிறான்!" என்று ஆச்சரியத்துடன் சுபத்திரா கூவினாள்.

"பூமாலையொன்று எடுத்துக்கொண்டு வந்து வரவேற்க வேணும் என்று ஏன் அறிவிக்கவில்லை? விமான நிலையத்திற்கு வந்து சந்திக்க வேண்டுமாம்! ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் அதிகாரத்திற்குக் குறைவில்லை! தேவநகரிலிருந்து சென்னைக்கு நாம் விமானம் மாற்றிக் கொண்டதை நீங்கள் ஏன் அவனுக்குத் தெரிவித்தீர்கள்?" என்று மகள் கோபத்துடன் சீறினாள்.

"தெரிவிக்காவிட்டால் அவன் நம்மை இலேசில் விட்டு விடுவானா? சஞ்சீவியின் குணத்தை முழுதும் தெரிந்து கொண்டே நீ இப்படிப் பேசுவது ஆச்சர்யமாக இருக்கிறது. அடுத்த வாரம் அவன் இங்கே வந்து விடுவான். அதற்கு மேல் நாம் என்ன செய்யப் போகிறோம் என்று எனக்கு ஒரே கலக்கமாக இருக்கிறது!" என்றாள் தாயார் கவலையுடன்.

"அவன் புறப்பட்டு வரும் ஆகாய விமானம் விழுந்து நொறுங்கி நாசமடையட்டும். அப்படியே அவன் சுகமாக எனக்கு வந்து சேர்ந்தாலும் நான் விமானம நிலையத்தில் போய் அவனைச் சந்திக்கப் போவதில்லை. சஞ்சீவி என்னை என்ன செய்ய முடியும்?" என்று கோபமாகக் கத்திவிட்டு, ஆத்திரத்துடன் தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் மாயா.

அடுத்த நாள் இரவு தோட்டத்தில் தியாகராஜன் அருகிலே மாயா உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தாள்.

முதல் நாள் முழுவதும் வடித்த கண்ணீரின் சாயையோ, அவள் உள்ளத்திலே கொந்தளித்துக் கொண்டிருந்த உணர்ச்சிப் போராட்டத்தின் நிழலோ, அந்த சுதந்தரவதனத்தில் சிறிதும் காணப்படவில்லை.

முத்துச் சுடர்போல் பிரகாசிக்கும் நிலவொளியில், காதல் போதையில் திளைத்துக் கொண்டிருந்த தியாகராஜனுக்கு தான் கூற வந்த விஷயத்தை வெகுநேரம் சொல்லாது மறைத்து வைத்திருக்க முடியவில்லை.

"மாயா! என் சகோதரி மோகனாவுக்குக் கல்யாண ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். என் மாமா வும் தாயாரும், விரைவில் மோகனாவின் திருமணம் முடிந்து விடும். விஜயா தனக்குக் கல்யாணம் செய்து கொள்ளப் பிரியமில்லை என்று மறுத்து விட்டாள். மேலே ஏதோ பரீட்சைக்குப் படிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். இந்தக் கோர்ட் விவகாரம் முடியட்டும் என்று நான் இதுவரை காத்திருந்தேன். என் தொழில் சம்பந்தப்பட்ட காரியங்களை ஒரு வழியாக முடித்துக்கொண்டு இந்த வருஷ முடிவில் நாம் இருவரும் வெளிநாடுகளுக்கு ஒரு சுற்றுப் பிரயாணம் போய் வரவேண்டியது என்று திட்டமிட்டிருக்கிறேன். உனக்கு சம்மதந்தானே?" என்று கேட்டான்.

"அப்படியென்றால்!"... என்று மாயா வினவிவிட்டு அவனைக் கூர்ந்து பார்த்தாள் சிறிது சந்தேகத்துடன்.

"அப்படியென்றால், நம்முடைய திருமணத்திற்குப் பிறகு வெளிநாடுகளுக்கு ஒரு உல்லாச யாத்திரை போய் வர உனக்கு சம்மதமா என்று கேட்கிறேன் மாயா! பாரிஸ் நகரத்தைப் பார்க்காது செத்துப் போனால் உன் ஆத்மா சாந்தி அடையாது என்று சொல்லுவாயே அடிக்கடி! ஏன், இப்பொழுது உன் விருப்பத்தை மாற்றிக் கொண்டு விட்டாயோ?" எனக் கொஞ்சலாகக் கேட்டான்.

தியாகராஜனது மனைவி, வெளிநாட்டுப் பிரயாணம் இரண்டு வார்த்தைகளும் மாயாவின் உள்ளத்தையும் உடலையும் பூரிக்கச் செய்தன. அது சமயம் அவள்

சஞ்சீவியைப் பற்றியோ, மனோகரனைப் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை.

"தியாகராஜ்! உங்கள் உன்னதமான அன்பிற்கு நான் சிறிதும் தகுதியற்றவள். உங்கள் வார்த்தைகள் என்னை எவ்வளவு ஆனந்தப்படுத்திவிட்டன. தெரியுமா? என்னால் விவரிக்கவே முடியவில்லை" என்று கூறிவிட்டு அவனது கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டாள். தன் கரங்களின் மீது சூடாக இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்ததை தியாகராஜன் உணர்ந்தான்.

அமிர்தம்மாள் பகல் போஜனத்திற்குப் பின் காந்தி பவனத்தின் முன் ஹாலில் மின்சார விசிறியடியில் நாரையில் ஓய்வாகக் கால்களை நீட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாள். ரேடியோப் பெட்டியருகில் தலையை நீட்டிக் கொண்டு வீற்றிருந்த நமச்சிவாயம் ஒரு கவுளி துளிர் வெற்றிலைகளுக்கு அவசரமாகச் சுண்ணாம்பு தடவும் வேலையில் ஈடுபட்டிருந்தான். அவனது வாய் வாசனைப் பாக்குத்தூளை ரசித்து மென்று கொண்டிருந்தது.

பங்களாவின் வாயிலிலே போடப்பட்டிருந்த பெரிய கொட்டாரப் பந்தல் முழுவதும் பிரித்துக் கலைக்கப்பட்டிருந்த போதிலும், ஜன்னல்களில் இங்குமங்கும் சிறிதளவு ஒட்டிக் கொண்டு தொங்கிய வர்ணக் காகிதத் தோரணங்கள், சில தினங்களுக்கு முன்பு அங்கு நடந்

தேறிய ஒரு விசேஷ சம்பவத்தை அறிவித்துக் கொண்டிருந்தன.

காற்றிலே படபட வென்று சப்தத்துடன் கம்பிகள் மீது மோதிக் கொண்ட அந்தத் தோரணங்களை நிமிர்ந்து பார்த்துவிட்டு, அமிர்தம்மாள் மிகவும் திருப்தியாகப் பெருமூச்செறிந்தாள். "அண்ணா தியாகுவுக்கு, மோகனா மேலே தனியா ஒரு அபிமானம். கல்யாணம் முடிஞ்ச கையோட அவன் மாப்பிள்ளை வீட்டவங்களுக்குக் கொடுத்த விருந்தைப் பார்த்து அவர்கள் எல்லோரும் அசந்தே போயிட்டாங்க. அன்னிக்கு சுமாரா ஒரு பத்தாயிரம் பேர் வந்து சாப்பிட்டு இருப்பாங்களா? என்ன கூட்டம்! என்ன சாப்பாடு! அவன் கம்பெனியிலே வேலை செய்கிற அத்தனை பேரும் ஆளுக்கு ஒரு பரிசு எடுத்துக் கொண்டுவந்து கொடுத்த ஒரு அழகே அழகு! மோகனா கல்யாணத்துக்கு வந்த பரிசுகளைத் தனியா அவள் ஒரு அறை முழுவதும் வச்சாலும் இடம் பத்தாது. ரொம்ப விமரிசையாக நடத்தி விட்டான் பையன்!

"கூடிய சீக்கிரம் அவன் கல்யாணமும் இது மாதிரி நல்லா விமரிசையா நடந்தா என் மனசு சந்தோஷப்படும். மோகனாவையும் அவள் புருஷனையும் மணப்பந்தலிலே பார்க்கையிலே, இந்தக் காட்சியைப் பார்க்க அவர் கொடுத்து வைக்கலையே என்று எனக்குத் துக்கம் தாள முடியவில்லை" என்று கூறிவிட்டு முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அமிர்தம்மாள்.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த நமச்சிவாயத்தால் பேச முடியவில்லை. "அடி! நீ ஒரு..." என்று குழறிவிட்டு, எழுந்து போய் ஜன்னல் அருகே சென்று, பேச முடியாது தடை செய்த வெற்றிலைச் சாற்றை, "காந்தி பவனத்தின் வெள்ளை வெளேரென்றிருந்த

வெளிச்சுவரில் கறைபடும்படி காறித் துப்பினான். பிறகு மறுபடி முன்னிருந்த இடத்தில் வந்து அமர்ந்துகொண்டு, தங்கையின் பேச்சைக் காதில் கேட்க விடாது அலறிக் கொண்டிருந்த ரேடியோவைப் படக்கென மூடி விட்டு, கனைத்துக்கொண்டு மிகவும் அழுத்தலாகப் பேசலுற்றான்.

"பத்தாயிரம் பேர் என்று குறைச்சலா சொல்லிட்டியே? ஒரு லக்ஷம் பேர் சாப்பிட்டார்கள் என்று மாப்பிள்ளை வீட்டில் பேசிக் கொண்டார்கள். சம்பந்தி வீட்டார்களுக்கு நம் மோகனாவைக் கட்டிக் கொண்டதில் ரொம்பத் திருப்தி, அவங்க அந்தஸ்துக்கு குறையாதபடி தியாகுவும் எல்லாம் நடத்தி விட்டான். பெண்ணுக்கு ஒரு பங்களாவும் காரும் மணப் பரிசாக அண்ணன் கொடுத்ததைப் பத்தி சம்பந்தி வீட்டில் ரொம்பப் பெருமைப்படுகிறாங்க. இதெல்லாம் கொடுக்க வேண்டியது தான். ஏன்னா, அவங்க அந்தஸ்து கொஞ்சமா நஞ்சமா? அதுக்குத் தக்கபடி நடக்காவிட்டால் நன்மைப் பார்த்து அவங்க சிரிக்க மாட்டாங்களா!" என்றான்.

"ஆமாம், நீங்க சொல்கிறது ரொம்பவும் சரிதான், அண்ணா, மோகனாவின் மாமனார் சுந்தர முதலியார் இந்தப் பட்டணத்திலே பிரபல வக்கீலாக இருந்தார். ஏழு வருஷத்துக்கு முந்தி மாரடைப்பிலே திடீர்னு போயிட்டார். அவர் இருந்தால் இந்தக் கல்யாணம் இன்னும் பத்து மடங்கு விமரிசையாக நடந்திருக்கும். முதலியார் தன்னுடைய நான்கு பெண்களையும் நல்ல இடங்களிலே சுட்டிக் கொடுத்திருக்கிறார். பாத்தீங்களா அண்ணா!" என்றாள் வியப்புடன் அமிர்தம்.

"என் கிட்ட சொல்ல வரியே! முழுக்க முழுக்க இந்தக் கல்யாணத்தை நடத்தி வச்சவன் நான். எனக்கு முதலியார் குடும்பத்தைப் பத்தி நீ எடுத்துச் சொல்ல

ணுமா? 'சுந்தரமுதலியார் மூத்த மகன் கதிரேசனுக்
மோகனாவைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானிச்சிரு
கிறேன். பையன் பி.ஏ. படிச்சு விட்டு ஏதோ கம்பெனியி
உத்தியோகமாக இருக்கிறான். சொத்து ஏகப்பட்ட
கிடக்கிறது. மோகனாவுக்கும் பையனைப் பிடிச்சிருக்
நீங்க என்ன சொல்றீங்க,ன்னு தியாகு என்னைக் கே
டான். நான் உடனே சொன்னேன்; 'தம்பி! தொழிலிலே
நீ கெட்டிக்காரன்; இல்லையென்று சொல்லவில்லை
உலக அனுபவம் உனக்கு அவ்வளவு போதாது. க
யாணம் என்கிறது, பென்ஸில் வியாபாரம் போன்றதல்
ஆகவே பொறுப்பு முழுவதையும் என்கிட்ட ஒப்படை
சுடு. சுந்தர முதலியார் பரம்பரை, பூர்வீகம், அவங்
சொத்து, கடன் உடன், அவங்க வீட்டவங்க குணா
நடத்தை அத்தனையும் ஒரு வார காலத்திலே துப்பு
துலக்கி அலசிக்கொண்டு வந்து விடுகிறேன். அதற்கப்பா
நிச்சயிக்கலாம்' என்று சொன்னேன். தியாகுவும்
என்று சொன்னவுடனே, நான் புறப்பட்டுப் போ
நைஸா விஷயங்களை விசாரிச்சு சேகரம் பண்ணி
கொண்டுவந்து விட்டேன். முதலியார் குடும்பத்தை
பத்தி நாலுபேர் கிட்ட கேட்ட உடனேயே எனக்கு
பிடிச்சுப்போச்சு.

"சுந்தர முதலியார் யார்னு நினைக்கிறே? நம்ப ஊரி
விருசாமி கங்காணி என்று கேள்விப்படடிருப்பாயே
அவருடைய மருமகன் தான் இவர். சுந்தர முதலியா
பாட்டன் வெள்ளைக்காரன் ஒருவன் கிட்ட துபாஷியா
இருந்து கொள்ளை கொள்ளையாக சம்பாதித்தவரா
என்று பெருமை ஒங்கிய குரலில் மிகவும் ஆர்ப்பாட்
மாகப் பேசினான்.

"பரம்பரையாகப் பெரும் பணக்காரர்களாக வாழ்ந்
வந்த குடும்பம். நம்ப மோகனாவுக்கும் இந்த இ

கிடைச்சது அதிர்ஷ்டம் தான்!" என்று வாயெல்லாம் பல்லாக இளித்துக் கொண்டு பதிலளித்தாள் அமிர்தம்.

சற்றுத் தொலைவில் வராந்தாவில் கதைப் புத்தக மொன்றைப் படிக்க முயற்சித்துக் கொண்டிருந்த விஜயாவின் காதுகளில் அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையே நடந்த சம்பாஷணை முழுவதும் கணீர் என்று கேட்டது.

மோகனாவின் கல்யாணம் நடந்து பதினைந்து தினங்களுக்கு மேல் ஆகிவிட்டிருந்தன. சுந்தர முதலியார் மகன் கதிரேசனை மணந்து கொண்டதில் மோகனாவுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. மாப்பிள்ளை வீட்டில் நடந்த கல்யாணத்திற்குப் பிறகு, தியாகராஜன் பங்களாவில் மிகவும் விமரிசையானதொரு விருந்தும் நடந்தது. அது முடிந்தவுடன் புதிய தம்பதி, உல்லாசமாகச் சில நாட்கள் தங்களது மண வாழ்க்கை இன்பத்தைத் தனிமையிலே நுகர குற்றாலத்திற்குச் சென்றிருந்தார்கள். அமிர்தம்மாளுக்கும், நமச்சிவாயத்திற்கும் இந்தக் கல்யாணத்திற்குப் பிறகு, பேசுவதற்கு வேறு எந்த விஷயமுமே அகப்படவில்லை.

தினசரி இதே சம்பாணையைக் கேட்க நேரிட்ட விஜயாவிற்கு மிகவும் அலுப்பாக இருந்தது. இடையே குறுக்கிட்டுப் பேசினால், அம்மாவும் மாமாவும் கோபிப் பார்கள் என்பதை அவள் அறிவாள். தன் மூத்தபெண் தான் தேர்ந்தெடுத்த மணமகனை மணக்க மறுத்து விட்டது பற்றி அமிர்தத்திற்கு மிகவும் கோபம். மாமா ஏதாவது விஷயமாகப் பேசி மனத்தைப் புண்படுத்தக் கூடும் என்று அஞ்சி விஜயா பொறுமையுடன் அவர் களிருவரும் வாய் ஓயாது புகழ்வதைச் சகித்துக் கொண் டிருந்தாள்.

கூஜா நிறைய இருந்த குளிர்ந்த தண்ணீரை ஒரே வாயில் காலி செய்துவிட்டு சகோதரி பக்கம் திரும்பிய

நமச்சிவாயம் மேலும் பேச ஆரம்பித்தான். "மோகனா வுக்கு அதிர்ஷடம் என்று கொஞ்சமா சொல்லிவிட்டியே! சுந்தரமுதலியார் வீட்டு மருமகளாகப் போனது அவள் முன்பிறப்பிலே செய்து பூஜாபலன் என்று நினைத்துக் கொள்! முதலியார் தமது நாலு பெண்களையும் நாலு ராஜாக்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார்னு நான் சொல்வேன். மூத்த பெண்ணை வடவலூர் ஜமீன் இளையப்பிள்ளைக்குப் கொடுத்திருக்கிறார். இளைய பெண்ணைப் பட்டணத்திலே ஒரு பெரிய உத்தியோகஸ் தனுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

"மூணாவது பெண்ணை டெல்லியில் சர்க்காரிலே வேலை பார்க்கிற ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்குக் கொடுத்திருக்கிறார். மூணாவது பெண் வீட்டிலே- அங்கே மந்திரிகளும், பெரிய பெரிய ஆபீஸர்களும், வெளிநாட் டிலிருந்து வருகிற வெள்ளைக்காரர்களும், விருந்தும் மூயும் எப்பவும் சாப்பிட்டுக்கிட்டே இருப்பாங்களாம் டில்லியில் அவருக்கிருந்த வேலையிலே கல்யாணத்துக்கு வருவாரோன்னு எல்லோரும் சந்தேகப்பட்டுக் கிட்டிருந் தாங்களாம். அவர் வந்ததுபத்தி மாப்பிள்ளை வீட்டவர் களுக்கு மிகவும் பெருமையாக இருந்திச்சு. அடுத்த வருஷவாக்கிலே அமெரிக்காவுக்கோ, ஆப்பிரிக்காவுக்கோ அவரை தூதராக சர்க்கார் அனுப்பினாலும் அனுப்பும்னு அங்கே அன்னிக்கு எல்லோரும் பேசிக் கொண்டாங்க. நாலாவது பெண்ணைத்தான் டாக்டர் நடேச முதலியார் மகன் டாக்டர் சம்பந்தத்திற்குக் கொடுத்திருக்கிறாங்க. அந்தப் பையன், எலும்புகளைப் பத்தி என்னமோ தனியா படிச்சுவிட்டுப் பட்டணத்திலே பெரிய ஆஸ்பத்தி ரியிலே பெரிய டாக்டராக வேலை பார்க்கிறானாம்.

மோகனாவின் கொழுந்தன் குமாரசாமி தன் மச்சான் போல பெரிய டாக்டராகி விடணும்னு ஆசைப்பட்டுக் கிட்டு அவனும் டாக்டருக்குப் படிக்கிறானாம். மொத்தத்

லே, எல்லாம் பெரிய குடும்பம். நல்ல படிச்ச அறிவாளிகள் நிறைஞ்ச குடும்பம். பெண்களைக் கட்டிக் கொடுத்து விட்டதாலே சொத்தை பையன்கள் ரெண்டு பேரும் பங்கிட்டுக்கிட்டால் ஆளுக்கு எதேஷ்டம் கிடைக் கும். கல்யாணத்தை நடத்தின பங்களாவைப் பார்த்தியா, எத்தனை பெரிசு?" என்றான் மூச்சுவிடாது நமச்சிவாயம்.

"பங்களா பெரிசுதான். ஆனால் சில இடங்களிலே இடிஞ்சு போகிறாப்பல இருந்துச்சே..." என்று இழுத்தாப் போல் கூறினாள் அமிர்தம்.

"பழசா! நல்ல ராசி வந்த பங்களா! பாட்டன் காலத்தே பிடிச்சு வாழ்ந்து வந்த இடமுன்னு, விற்க மனசு இல்லாம அதிலேயே வசிச்சிட்டு இருக்காங்களாம். பழசுன்னு சொல்றியே! நேத்து வந்த புது பணக்காரங் களாயிருந்தா பங்களாவும் புதுசாக இருக்கும். பரம்பரை பரம்பரையா பணக்காரங்க பார்! அதனாலே பங்களா யும் பழசாக இருக்கிறது. நினைச்சால் இந்தப் பட்டணத் திலே உள்ள எல்லா பங்களாக்களையும் வாங்கிப்போட அவர்களுக்கு அந்தஸ்தில்லையா? என்னவோ அமிர் தம், உன் மகளுக்கு என்னால் ஆனது ஒரு நல்ல கௌர வமான இடத்திலே பார்த்துக் கல்யாணம் பண்ணிவச்சு விட்டேன். தியாகுவுக்கும் அந்தப் பெண் மாயாவுக்கும் இதைப் போலவே, விமரிசையா கல்யாணத்தை முடிச்சு விட்டா, என் கடமை முழுதும் தீர்த்துவிடும்" என்று கூறிவிட்டு எழுந்தான்.

அமிர்தம் பதில் கூறவில்லை. தன் இளைய மகள் மோகனாவின் இன்பம் நிறைந்த எதிர்கால வாழ்வை அவள் பலவிதமாக எண்ணிப் பார்த்து கற்பனை உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். வயிறார உண்டதன் களைப்புத் தாளமுடியாது நமச்சிவாயம் 'ஹவ்' என்று கொட்டாவி விட்டுக் கொண்டு சிறிது

நேரம் கண்ணயரும் நிமித்தம் தனது அறைக்குள் சென்று மிருதுவான பஞ்சணையில் சாய்ந்து கொண்டான். சில நிமிஷங்களில் அவன் அறையிலிருந்து குறட்டை சப்தம் எழுந்து கொண்டிருந்தது. உச்சி முகட்டையே பார்த்துக் கொண்டு தரைமீது படுத்திருந்த அமிர்தமும் சில நிமிஷங்களில் நித்திராதேவி வசப்பட்டு விட்டாள். எவ்வளவு நேரம் அவ்வாறு தூங்கியிருப்பாளோ, அவளுக்கே தெரியாது.

"அம்மா! அவர்கள் வந்திருக்கிறார்கள். எழுந்திருங்கள்" என்று விஜயா தன்னைத் தட்டி எழுப்புவதை உணர்ந்த அமிர்தம் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்து உட்கார்ந்தாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு மிரள விழித்தபடி, "யார் வந்திருக்கிறாங்க?" என்று வியப்புடன் கேட்டாள்.

"மோகனாவும் அவள் கணவனும் வந்திருக்கிறார்கள்" என்று விஜயா தாழ்ந்த குரலில் எச்சரித்துவிட்டு, வேகமாக உள்ளே சென்று விட்டாள். முந்தானையால் முகத்தை அவசரமாகத் துடைத்துக்கொண்டு, கூந்தலை அள்ளி முடித்து, கொண்டு, பரபரப்பாக அமிர்தம் எழுந்தாள். உல்லாச யாத்திரைக்குக் கணவனுடன் சென்ற தனது அருமை மகளை வரவேற்க வாயிலுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

மணப்பெண்ணுக்குத் தியாகராஜன் பரிசாக அளித்திருந்த அந்தப் பெரிய புதிய காரில் அமர்ந்திருந்த மருமகன் கதிரேசன், தன் மாமியாரைக் கண்ட பிறகும் கூட காரை விட்டுக் கீழே இறங்கவில்லை. தன் மகள் மட்டுமே வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வருவதைக் கண்ட அமிர்தம்மாளுக்குக் கொஞ்சம் வியப்பாக இருந்தது. மோகனாவின் முகத்தைப் பார்த்ததும் அவளது வியப்பு பெரும் திகிலாக மாறிவிட்டது. புதிய மணப் பெண்ணின் முகத்திலே குடியிருக்கவேண்டிய உற்சாகமும் சந்தோஷமும் அதில் சிறிதும் காணப்படவில்லை.

வெகுநேரம் அழுது கொண்டிருந்தவள் போல் அவளது முகம் சிவந்து, கண் இமைகள் லேசாக வீங்கிக் காணப்பட்டன. "ஏன் அவர் உள்ளே வராமல் காரிலே உட்கார்ந்திருக்கிறார்? அண்ணனை விட்டு அவரை உள்ளே அழைக்கச் சொல்லட்டுமா?" என்றாள் அமிர்தம் கவலையுடன்.

"வேண்டாம், வேண்டாம்! அவர் என்னை இங்கே கொண்டு வந்து விட்டுப் போகத்தான் வந்தார். நாளைக்குள்ளே என் சாமான்களை எல்லாம் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு அங்கே திரும்பி வந்து விட வேண்டும் என்று என் மாமியார் உத்தரவு போட்டிருக்கிறாங்க. நாளைக் காலையிலே வண்டி எடுத்து வந்து என்னை அழைத்துப் போவதாக அவர் சொல்லியிருக்கிறார்." என்று மெல்லிய குரலில் தலையைக் குனிந்தபடி பதிலளித்தாள் மோகனா.

விழித்துக்கொண்ட நமச்சிவாயம், தன் அறையை விட்டு அவசரமாக வெளியே வந்தான். அரை குறையாக சம்பாஷணையைக் கேட்டுவிட்டு "அட! அதனால் என்ன? உன் புருஷன் வீட்டுக்கு நீ இப்ப வேணாலும் புறப்பட்டுப் போயேன்! உன்னை இங்கே நாங்கள் அப்படி பூட்டியா வைத்துக் கொள்ளப் போகிறோம்?" என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, உரத்த குரலில், "மாப்பிள்ளை! வண்டியை விட்டு இறங்கி வாங்க. காப்பி கிப்பி சாப்பிடலாம். அப்படியே வாசலோடே போகிறது நல்லாவா இருக்கு?" என்று கத்திக்கொண்டு வாயில் பக்கம் சென்றான்.

கதிரேசன் அவனை எரிந்து விடுகிறவன் போல் முறைத்துப் பார்த்து, "வேலை இருக்கிறது. மற்றொரு சமயம் வருகிறேன்" என அசட்டையாகப் பதிலளித்தான். நமச்சிவாயம் மேலே வற்புறுத்துமுன் காரை "காந்தி

பவன'த்தின் வாசலினின்று வேகமாக வெளியே செலுத்திக்கொண்டு சென்றுவிட்டான்.

தன்னை அவன் அவ்வாறு அலக்ஷியப்படுத்தியது நமச்சிவாயத்தின் மனத்தை வெகுவாக உறுத்தியது. அதைப் பொருட்படுத்தாமல் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு, "மோகனா, உன் புருஷனுக்குக் கோபமா என்ன? ஒரு மாதிரியாக இருக்கிறாரே!" என்று வினவினான்.

"உங்களுக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் ஏன் நீங்கள் தலையிட வேணுமோ தெரியவில்லை..? என் கணவரை நீங்கள் கூப்பிட்டு உபசரிக்க வேண்டுமென்று நான் கேட்டேனா? உங்களால் எனக்குத் தொல்லையும் துன்பமும் தவிர..." என்று கூறிமுடிக்க முடியாது பற்களைக் கடித்துக்கொண்டு பாதரக்ஷைகள் பலமாக ஒலிக்க ஆத்திரத்துடன் மாடிப்படிகள் மீது வேகமாக ஏறிச் சென்றாள் மோகனா.

நமச்சிவாயத்திற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "கல்யாணம் ஆனதுமே உனக்கு மண்டைக் கர்வம் ஜாஸ்தியாகி விட்டது. நேத்தி இருந்த நிலைமை நினைச்சுப் பார்க்காமே பேச வேண்டாம். ஏதடா, இவ்வளவு செய்தானேன்னு கொஞ்சம்கூட நன்றியில்லையே? சட்! நீங்கள் எல்லாம் ஒரு மனுஷங்களா!" என்று பதிலுக்குக் கத்தினான்.

"அதிகப் பிரசங்கித்தனமா வாயில் வந்தபடி பேசினால் பின்னாடி வருத்தப்படுவீங்க. நன்றி காட்டணுமாம்! எதற்காக? என், வாழ்க்கைக்கு எத்தனை பெரிய இடைஞ்சலாக இருக்கிறீங்கன்னு தெரிஞ்சா நீங்கதான் எனக்கு நன்றி காட்டணும்?" என்று காரமாகப் பதிலளித்துவிட்டு மோகனா மேலே சென்றாள்.

"வீட்டுக்குள்ளே வந்ததும் வராததுமா பேசுகிறதைப் பார்!" என்று கோபத்துடன் உறுமிய நமச்சிவாயம், தன் சகோதரியை விழுங்கி விடுகிறவன் போல் வெறித்துப் பார்த்துவிட்டு, தோட்டத்திற்குள் சென்று விட்டான்.

அமிர்தம்மாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மோகனாவின் பதட்டத்தையும், கோபத்தையும் கண்டு அவள் நிலைடைந்து போய் எதுவும் குறுக்கே பேசத் தோன்றாது சிலைபோல் நின்றுவிட்டாள். "இங்கே நின்று கொண்டிருந்தால்? மோகனாவைப் போய் விசாரிப்போம். வாங்கம்மா" என்று விஜயா எடுத்துக் கூறிய பின்புதான் அமிர்தத்திற்குத் தன் உணர்வு ஏற்பட்டது.

தாயைக் கண்டதும் மோகனா விஷயத்தைக் கூறாது 'ஹோ'வென்று வாய்விட்டு விம்மியழத் துவங்கினாள். விஜயாவும், அமிர்தமும் பலவாறு தேறுதல் கூறிய பின்பு ஒருவாறு கண்களைத் துடைத்துக்கொண்டு, தாயின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்து, "அம்மா! அம்மா! இந்த மாமாவினால் என் வாழ்க்கையே பாழாகிவிடும் போல இருக்கிறதே. நான் என்ன செய்வேன்!" என்று விம்மினாள்.

"மாமாவுக்கும் உன் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம், புரியவில்லையே?" என்று திகைப்புடன் கேட்டாள் விஜயா.

"மாமாவின் காலில் காணப்படுகிற புண்ணை என் கொழுந்தன் பார்த்து விட்டார். அவர் டாக்டருக்குப் படிக்கிறவர் அல்லவா? விருந்து நடந்த சமயம் அதை அவர் தன் அக்கா புருஷன் டாக்டர் சம்பந்தத்திடம் சுட்டிக் காட்டினாராம். அவரும் பார்த்து விட்டு..." என்று முடிக்க முடியாது விம்மினாள்.

"நாலு மாசத்துக்கு முந்தி உன் மாமா வாங்கிப் போட்ட புது செருப்பு ஒண்ணு வலது காலிலே கடிச்சு புண்ணாகிவிட்டது. அது ஆறாம தொந்தரவு கொடுத்துக் கிட்டு இருக்கு. அதுக்கு என்னவாம்?" என்று எரிந்து விழுந்தாள் தாயார்.

"செருப்புக் கடித்ததால் ஏற்பட்ட புண் இல்லையாம். அவர்கள் இதைப் பத்தி விசாரித்து அறிந்து வைத்திருக் கிறார்கள். மாமா நம்மிடம் இப்படிப் பொய் சொல்லி மறைத்து வைத்திருகிறார். அவர் வைத்தியம் செய்து கொள்ளும் டாக்டர் என் கொழுந்தனுக்கு சிநேகிதர். அவர் உண்மையை என் கொழுந்தனிடம் சொல்லி விட்டார். அம்மா, மாமாவுக்கு வந்திருப்பது குஷ்ட நோயாம்" என்றாள் கண்ணீருடன்.

"நிஜமாகவா!" என்று விஜயா வியப்புடன் கேட்டாள். அமிர்தம்மாள் வாயடைத்துப் போய் நின்றாள்.

"குஷ்டம் என்பதை மறைத்து வைத்து பெண்ணைக் கொண்டு வந்து தங்கள் குடும்பத்தில் கட்டிவைத்துவிட்ட தாக என் மாமியார் மிகவும் கோபமாக இருக்கிறார். மகன் டாக்டருக்குப் படிக்கிறான் அல்லவா? என் மாமியாருக்கும் நோய்களைப் பற்றி அரைகுறையாகச் சிறிது தெரியும். அவ்வளவுதான்! அவர்கள் நான் தொட்ட பாத்திரத்தைத் தொடவே பயப்படுகிறார்கள். என்னைக் கண்டு அஞ்சி ஓடும் அவர்கள் நடுவே நான் எப்படி யம்மா வாழமுடியும்?" என்று கேட்டுவிட்டு, துக்கம் தாளாது விம்மியழுதாள் மோகனா.

மகனின் கண்ணீரைக் கண்டு தாயின் மனம் சங்கடப் பட்டது. தன் சகோதரியின் தாம்பத்ய வாழ்க்கையின் இன்பம் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதைக் கண்டு விஜயாவும் உள்ளம் கலங்கிப் போனாள். "பிறகு...?" என்று அவள் கேட்டாள்.

"பிறகு என்ன? உல்லாச யாத்திரைக்குப் போயிருந்த சமயம், இவர் தம்பி இதைப் பற்றி ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டார். கடிதத்தைக் கண்டதும் இவர் தம் குடும்பத்தைப் பற்றிப் பேசிய பேச்சுக்களை என்னால் சகிக்க முடியவில்லை. அத்துடன் விட்டாரா? உடனே என்னை அங்கிருந்து டாக்டரிடம் அழைத்துச் சென்று எனக்கு இந்த நோய் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்கச் சொன்னார்.

"விஜயா! நீ என்னை விட எவ்வளவோ அதிர்ஷ்ட சாலி என்று எண்ணிக்கொள். சுந்தரமுதலியார் வீட்டில் மூத்த மருமகளாகப் போகிறோம் என்று நான் மிகவும் கர்வப்பட்டுக் கொண்டேன். கல்யாணம் என்பது கதை களில் சித்தரிக்கப்படுவது போல் தாம்பத்ய வாழ்வின் இன்பத்தின் ஆரம்பமல்ல. அது ஒரு சூதாட்டம். நீங்கள் எல்லோரும் நான் மிகுந்த பணக்கார இடத்தில் புகுந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? என் புக்ககம் கழுத்துமட்டும் ஒரே கடனில் மூழ்கிக் கிடக்கிறது; பரம்பரை பணக்காரர்கள் என்று போலி கௌரவந்தான் முடிவில் மிஞ்சப் போகிறது. அத்துடன் இல்லாது நம் அண்ணனைப் புதுப் பணக்காரன் என்று என் மாமியார் இடித்துக் கூறி மிகவும் அவமரியாதை யாகப் பேசி என் மனத்தைப் புண் செய்கிறார்கள். மாமாவின் நோயைப் பற்றி தெரிந்ததும் என் கணவர் இந்த வீட்டுக்குள் நுழையக்கூடப் பயப்படுகிறார். அம்மா, அவருடன் வாழ நான் ஆசைப்பட்டால் பிறந்தகப் பக்கமே திரும்பிப் பார்க்கக் கூடாதாம். அந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டால் அவருடன் வாழ முடியுமாம். இல்லா விட்டால் நான் இங்கேயே இருந்து கொள்ளலாமாம். நான் என்ன செய்வேன்? வியாதி என்ற ஒரு காரணம் சொல்லி அவர்கள் விவாகரத்துக்

கோரினால்... எனக்குப் பயமாக இருக்கிறது" என்று கூறிவிட்டு, தாயின் தோளைப் பற்றிக்கொண்டு அழுதாள்.

"ஐயோ, நான் என்ன செய்வேன்?" என்று பதிலுக்கு அமிர்தம்மாள் மகளுடன் கூடச் சேர்ந்து கொண்டு ஓலமிட்டாள்.

அன்றுகாலை, ஒரே சமயத்தில் அண்ணனும் தங்கையும் மிகவும் பரபரப்போடு காணப்பட்டனர்.

காலைச் சிற்றுண்டி அருந்திவிட்டு ஹாலுக்குள் வந்து உட்கார்ந்து கொண்ட தியாகராஜன் அதுசமயம் தன் பெயருக்கு வந்த அவசரத் தபால் ஒன்றைப் பிரித்தான். கடிதத்தைப் படித்து முடிக்குமுன் அவன் உடல் பயத்தினால் வியர்த்தது; நெஞ்சு படபடத்தது. கடிதத்தைச் சட்டைப் பைக்குள் பத்திரமாக வைத்துக்கொண்டு மாடியறைக்கு விரைந்தான். சில நிமிஷங்களில் வெளியே செல்ல ஆயத்தமாக உடுத்திக்கொண்டு, சிறு தோல் பெட்டி ஒன்றுடன் அவன் பங்களாவினின்று புறப்பட்டு விட்டான். தான் எங்கே, எதற்காகப் போகிறோம் என்பதை அவன் யாரிடமும் கூறவில்லை. அவனது முகத்திலே படிந்து நின்று கவலைத் திரைகளைக் கண்ட அமிர்தம்மாளுக்கு அவன் போகுமிடத்தைப் பற்றி விசாரிக்கத் துணிச்சல் வரவில்லை.

காப்பி, பலகாரம் சாப்பிட்ட பின்பு விஜயா, தன் அறைக்குள் சென்று படிப்பதற்காக வழக்கம் போல் அன்று வந்த காலைப் பத்திரிகையைக் கையில் எடுத்

நாள். இரண்டாவது பக்கத்தை யதேச்சையாகப் புரட்டிய அவள், பத்திரிகையில் கொட்டை எழுத்துகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு செய்தியை வியப்புடன் வாசிக்கலானாள்.

விஷயத்தை முழுவதும் அவளால் வாசிக்க முடிய வில்லை. பத்திரிகையைப் பிடித்திருந்த அவளது கரங்கள் உணர்ச்சி வசத்தில் நடுங்கின. அவளது இருதயம் இரண்டாக வெடித்து விடும் போல் ஆத்திரமும் துயரமும் தாளாது பதறியது. கண்களை நீர் மறைத்துக் கொண்டது. பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, சோபாவின் கை மீது முகத்தைப் பதித்துக்கொண்டு வெகுநேரம் குமுறி யழுதாள். பங்களா வாசலினின்று கார் புறப்படும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு எழுந்து சென்று எட்டிப் பார்த் தாள். தியாகராஜன் அவசரமாக காலை வேளையில் எங்கு போய்க் கொண்டிருந்தான் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது.

கார் பங்களா தோட்டத்தைக் கடந்து அப்பால் செல்லும்வரை வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்ற விஜயாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. கண்ணீ ரால் வாடியிருந்த தன் முகத்தைக் கழுவிக்கொண்டு வெளியே செல்லத் தன்னைத் தயாரித்துக் கொண்டாள். அன்று காலை வெளி வந்திருந்த தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தையும் தேடி ஒரு கட்டாகச் சேர்த்து எடுத்துக்கொண்டு கீழே வந்தாள்.

மோகனாவைப் புக்ககத்திற்கு அனுப்பி விட்டதி லிருந்து அமிர்தம்மாள் மனதில் ஏக்கம் குடிகொண் டிருந்தது. தன் இளைய மகள் பெரிய இடத்தில் குடி புகுந்து மிகவும் மேன்மையாக வாழ்க்கை நடத்தப் போகிறாள் என்று பலவும் கற்பனை செய்து கொண்டிருந் தாள். மோகனாவை அவளது புக்ககத்தார் நடத்திய

முறையைக் கண்டு அமிர்தம்மாளின் தாயுள்ளம் ஏமாற்றத்தில் இடிந்துவிட்டது. உள்ளூரிலே மோகனா தன் கணவனுடன் வசித்து வந்தும், தன் தாயை அடிக்கடி வந்து காண அனுமதிக்கப்படவில்லை. அவளுடைய புக்ககத்தவர்கள் யாரும் காந்தி பவனத்தின் எல்லையைக் கூட மிதிக்க அஞ்சி வெறுத்தோடினார்கள். தன் இளைய மகளுக்காக அவள் வாழ்விலே அதுவரை செய்யாத ஒரு காரியத்தையும் துணிந்து செய்தாள்.

அமிர்தம்மாளுக்கு அண்ணன் நமச்சிவாயத்தின் மீது அபார பக்தி உண்டு. சிறு பிராயத்திலிருந்து அண்ணன் கைபொம்மையாக அவன் இஷ்டப்படியெல்லாம் ஆடி வந்த அவள் மோகனாவின் வாழ்க்கை நலத்தை உத்தேசித்து தன் மதிப்புக்குரிய அண்ணனை ஒரே கணத்தில் விரோதித்துக் கொண்டு விட்டாள்.

நமச்சிவாயத்தின் உடலிலே தோன்றியுள்ள வியாதியானது அவனுடன் சேர்ந்து வசிப்பவர்கள் அனைவரையும் தொத்திக்கொள்ளக் கூடும் என்ற பயம் ஒருபுறம் இருக்க, அதன் காரணமாகத் தன் செல்லமகள் புக்ககத்தில் சிறுமைப்படுகிறாள் என்பதை அறிந்த அமிர்தம் வெகுண்டாள். மகளின் சுகத்திற்கு முன்னால் அவள் தன் அண்ணன் மீது கொண்டிருந்த பாசம் தூசிக்குச் சமமாகப் புலப்பட்டது.

விஷயத்தை மோகனா எடுத்துச் சொன்னதிலிருந்து அமிர்தம் தன் அண்ணனிடம் முகங்கொடுத்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டுவிட்டாள். அத்துடன் இல்லாமல், மகள் கணவன் வீடு சென்று சில தினங்களுக்குப் பிறகு, ஒரு நாள் மெதுவாக அவள் தியாகராஜனிடம் மாமனுக்கு வந்துள்ள நோயைப் பற்றிக் கூறிவிட்டாள்.

நமச்சிவாயத்தின் வாழ்க்கையில் அன்றைய நாள் வரை அவன் கஷ்டம் என்பதையே அனுபவித்து அறியாதவன், உடல் நோக அவன் தன் வாழ்க்கைக்காக உழைத்து அறியாதவன். அமிர்தம்மாளின் குடும்பம் தரித்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கையில் கூட, அவன் சுகவாழ்விற்கு ஒரு சிறு பங்கமும் ஏற்படவில்லை. வயிறார உணவும், வாய்நிறைய வெற்றிலையும், மேனியில் சரிகை அங்கவஸ்திரமுமாக அவன் உல்லாச புருஷனாகத் தான் திரிந்து கொண்டிருந்தான்.

நமச்சிவாயம் பிறருக்குத் துன்பம் விளைவிப்பதிலே ஒரு தனி இன்பம் அனுபவித்துப் பழக்கப்பட்டவன். காந்திமதியை இருமுறை கண்ணீருடன் வீட்டை விட்டு வெளியே விரட்டி வெற்றி கண்டவன். தமயந்திக்கும் நியாகராஜனுக்கும் நடக்கவிருந்த திருமணத்தைக் கலைத்து தமயந்தியை காந்தி பவனத்தைத் திரும்பிக் கூட பார்க்க வொட்டாது செய்து மகிழ்ந்தவன். அன்று நாள்வரை ஏழ்மையிலும், செல்வத்திலும் தன் அருமைச் சகோதரியைத் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டுவித்த தனிப்பெருமைக்கு உரித்தானவன். எடுத்துக்கொண்ட காரியங்கள் அனைத்திலும், கைகொண்ட சூழ்ச்சிகள் எல்லாவற்றிலும் ஜயம் ஒன்றையே கண்டிருந்த அவனது வெற்றிப் படலத்திற்கு ஒரு நாள் திடீரென்று முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது!

நமச்சிவாயத்தின் உடலைப் பற்றிய நோய் பிறருக்கு அபாயம் விளைவிக்கும் தன்மையுடையதாகையால், அவன் அவர்களுடன் சேர்ந்து காந்தி பவனத்தில் வசிப்பது தவறு என்றும், அந்த நோய்க்குச் சிகிச்சை செய்யும் தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் அவன் சென்று வசிக்க வேண்டியது தான் நியாயம் என்றும், அதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் ஒரு நாள் தியாகராஜன் தன் மாமனிடம் கண்டிப்பாகக் கூறி விட்டான்.

காந்தி பவனத்தின் சுகமான வாசம், ருசி மிகுந்த போஜனம், உல்லாசமான கார் சவாரி, ஆர்ப்பாட்ட

மிக்க வறட்டு அதிகாரம் இவை அனைத்தையும் ஒரே விநாடியில் உதறிவிட்டு, நோயாளிகள் நிறைந்து இருந்த ஆஸ்பத்திரி ஒன்றில் வியாதிக் காலத்திலே, யாரும் கவனிக்காத அனாதை போல் வாழ்க்கை நடத்த வேண்டு மென்றால்? நமச்சிவாயத்தால் தனது பிற்கால நாட்களைச் சிந்தித்துப் பார்க்கவும் இயலவில்லை. அமிர்தம்மாள், தியாகராஜன் இவர்கள் இருவருடைய கால்களில் விழுந்து கெஞ்சாத குறையாக, மிகவும் வேண்டிக் கொண்டான். வயோதிகத்திலே ஊசலாடிக் கொண்டிருக்கும் கிழவனை வெளியே விரட்டினால், அவர்களைப் பாவம் வந்து சூழ்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடும் என்று பயமுறுத்திப் பார்த்தான். நன்றி கெட்ட நயவஞ்சகர்கள் என்று அவர்களைச் சபித்தான்.

ஆனால் பயமுறுத்தல், சாபம், கண்ணீர் ஒன்றிற்கும் தியாகராஜனோ, அமிர்தமோ மசிந்து விடவில்லை. தேவ நகருக்கு ஐம்பது மைல்களுக்கு அப்பாலிருந்த குஷ்டரோக ஆஸ்பத்திரியில் தன் விருப்பத்திற்கு மாறாக நமச்சிவாயம் அனுமதிக்கப்பட்டான். அங்கிருந்து சிகிச்சை செய்து குணமடைந்துவிட்டால் ஒரு சமயம் பின்னால் மறுபடியும் தனக்கு காந்தி பவனத்தில் வாசம் கிட்டக்கூடும் என்ற ஒரு சிறு நம்பிக்கையினால் அவன் தியாகராஜனை அதிகம் வெளிப்படையாக எதிர்த்துக் கொள்ளாது வேறு வழியின்றி உட்பட்டான்.

நமச்சிவாயம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டும் கூட மோகனாவின் கணவன் வீட்டவர்கள் காந்தி பவனத்திற் குள் வர அஞ்சினார்கள். அந்த பங்களாவின் சுவர்களில் வியாதி ஒட்டிக் கொண்டிருக்கும் என்ற அச்சம் அவர் களுக்கு. கணவனது கட்டளைக்குப் பயந்து மோகனா மாதங்கள் பல ஆகியும் தன் தாயை வந்து ஒரு முறை கூடப் பார்த்துப் போகவில்லை.

இளைய மகளைப் பற்றி எண்ணி உள்ளூர வருந்திக் கொண்டிருந்த அமிர்தத்தின் உடலில் தளர்ச்சி அதிகம் ஏற்பட்டு விட்டது. முன்போன்று இடுப்பில் சாவிக் கொத்தைக் சொருகிக் கொண்டு அதிகமாகவீட்டில் உலாவி வர அவளால் முடியவில்லை; விருப்பமும் இருக்கவில்லை! வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை மருமகள் விஜயாவின் கையில் ஒப்படைத்து விட்டு அமிர்தம்மாள், வேளைக்குப் போட்டதைச் சாப்பிட்டு, விட்டு தன் இளைய மகளைப் பற்றி எண்ணி ஏங்கி உருகுவதில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

வாயிற்புறத்து ஹாலில் சுவரில் சாய்ந்துகொண்டு கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருந்த அமிர்தம் வெளியே புறப்படத் தயாராக தன் மூத்த மகள் அங்கே வருவதைக் கண்டாள். "கொஞ்சம் வெளியே கடைத் தெருவரை போய்விட்டு வருகிறேன்" என்று மகள் கூறியதும் முற்றிலும் காதுகளில் விழவில்லை.

அருணோதய ஆச்ரமத்தை அடைந்ததும் காரினின்று விஜயா அவசரமாக இறங்கினாள். தயாராகத் தான் சேகரித்து எடுத்து வந்த பத்திரிகைச் சுமையை வாரி எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக தமயந்தியின் அறையை நோக்கி விரைந்து சென்றாள்.

அன்று ஆச்ரமத்தின் விடுமுறை தினம். வழக்கத்திற்கு மாறாக சற்றுத் தாமதித்துப் படுக்கையினின்று எழுந் திருந்த தமயந்தி, அப்பொழுதுதான் காலை பலகாரம் அருந்திவிட்டு, மறுநாள் நடத்த வேண்டிய வகுப்புப் பாடங்களைப் பற்றித் திட்டமிட, தன் மேஜையருகில் வந்து உட்கார்ந்தாள்.

"தமா!" என்று கிறீச்சிட்டுக் கத்திக் கொண்டு தொப் பென ஆசனமொன்றில் வந்து விழுந்த விஜயாவைக் கண்டதும் அவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

சில தினங்களாக காந்தி பவனத்தில் நடந்து வந்து கொண்டிருந்த ஒவ்வொரு விஷயத்தையும் அவள் விஜயா மூலம் அறிந்து கொண்டிருந்தாள். எனவே, அவள், "என்ன விஷயம்? ஏன் இப்படிப் பதறுகிறாய்? மோகனா வீட்டவர்கள் ஏதேனும் புது தொந்தரவு கொடுத்தார்களா?" என்று வினவினாள் கவலையுடன்.

விஜயாவுக்குப் பேச முடியாது துக்கம் வார்த்தைகளைத் தடுத்து, இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்து விட்டு, தான் சுமந்து வந்த பத்திரிகைகளைத் தமயந்தியிடம் நீட்டினாள்.

விஷயத்தை ஊகிக்க முடியாது தமயந்தி ஆச்சரியத்துடன் ஒரு பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் பக்கங்களைப் புரட்டினாள்.

"பிரபல ஊதுவத்தி வியாபாரியின் கொலை
சில விவரங்கள்"

என்ற கொட்டை எழுத்துக்களில் காணப்பட்ட ஒரு செய்தி, பத்திரிகையின் இரண்டாவது பக்கத்தில் காணப்படவே அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

"நான்கு தினங்களுக்கு முன்பு 'அசோக விலாஸ்' என்ற இங்குள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தஞ்சையைச் சேர்ந்த ஊதுபத்தி வியாபாரி சஞ்சீவி என்பவர் வந்து தங்கியிருந்தார். சில தினங்களுக்கு முன்புதான் அவர் தமது வெளிநாட்டுப் பிரயாணத்திலிருந்தே தாய் நாட்டிற்குத் திரும்பி வந்தவர் எனத் தெரிகிறது.

"இரண்டு நாட்களுக்கு முன்பு சாயங்காலம் சுமார் ஐந்து மணிக்கு ஹோட்டலை விட்டு ஒரு டாக்ஸியில் சஞ்சீவி வெளியே சென்றார். திரும்பி வரும்பொழுது அவருடன் ஒரு வாலிபரும் கூட வந்திருந்தார். அவர்களுக்கிடையே ஹோட்டல் அறையில் பலத்த வாக்கு வாதம் நடந்தது. அதற்குப்பின், அந்த வாலிபர் புறப்பட்டுச்

சென்றுவிட்டார். அவர் சென்ற ஒரு மணி நேரத்திற்கெல்லாம் ஹோட்டல் சிப்பந்தி சஞ்சீவிக்கு இரவு போஜனம் எடுத்துக்கொண்டு அறைக்குள் போய்ப் பார்க்கையில் அவர் நினைவு இழந்தவராகக் கட்டிலில் கிடப்பதைக் கண்டான். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் சஞ்சீவி மரணமடைந்து போனார்.

"போலீஸார் இது பற்றிப் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என முன்பே பிரசுரித்திருந்தோம். அதைப்பற்றி மேலே கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:-

"சஞ்சீவி என்பவர் தஞ்சையைச் சேர்ந்த பிரபல ஊதுபத்தி வியாபாரி. அவருக்கும் மாயா என்ற ஒரு பெண்மணிக்கும் பல நாட்களாகத் தொடர்பு இருந்திருக்கிறது. சஞ்சீவி வெளி நாட்டிற்குச் சென்றிருந்த சமயம், மாயாவுக்கு மனோகரன் என்ற வாலிபரிடம் சிநேகம் ஏற்பட்டிருக்கிறது. இவர், விஸ்வபுரியில் உள்ள ராபர்ட்ஸன் கம்பெனியில் மருந்து விற்பனை செய்யும் பகுதியில் ரஸாயன நிபுணராக வேலை செய்கிறவர். சஞ்சீவி வெளி நாட்டிலிருந்து வந்ததும், தமது காதலுக்கு இடையூறாக அமைந்து விடுவான் என்று மனோகர் அஞ்சினார் என்பதற்கும், அதைத் தவிர்க்க பல உபாயங்களைக் கையாண்டார் என்பதற்கும் போதிய அத்தாட்சிகள், கடிதங்கள் வாயிலாக இறந்து போனவர் வசம் கிடைத்துள்ளன.

"பிரேதப் பரிசோதனையில் சஞ்சீவி, 'ஆர்ஸினிக்' என்னும் பாஷாணத்தினால் மரணமடைந்துள்ளார் என்பது விளங்கியுள்ளது.

"அவர் இறந்துபோன அன்றைய சாயங்காலம், அவருடன் ஹோட்டல் அறையில் விவாதித்துச் சண்டை

யிட்டது மனோகரன் என்பவர் தான் என்பதற்குச் சாட்சிகள் கிடைத்துள்ளன. ராபர்ட்ஸன் கம்பெனியில் சில நாட்களுக்கு முன்பு, மனோகர் தமது சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்று ஆர்ஸினிக் பாஷாணத்தை விலை கொடுத்து வாங்கினார் என்பதற்கும் ஆதாரம் இருக்கின்றது. மனோகர் வசம் ஆர்ஸினிக் பாஷாணம் இருந்திருக்கிறது. இறந்தவருக்கும் அவருக்கும் காதலில் போட்டி இருந்திருக்கிறது. இறந்தவர் ஆர்ஸினிக் பாஷாணத்தினால் மரணமடைந்திருக்கிறார்.

"இதுவும் இன்னும் பல ஆதாரங்களும் காரணமாக மனோகர் என்னும் வாலிபரை நேற்றைய தினம் போலீஸார் விஸ்வபுரியில் கைது செய்திருக்கிறார்கள். கேஸ் சம்பந்தமாக அவரை சென்னைக்குக் கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது. மேலும் இந்தக் கேஸ் சம்பந்தமாக மாயா என்னும் பெண்மணி நேற்று போலீஸாரால் விசாரிக்கப்பட்டாள். சஞ்சீவி சென்னைக்கு வரப் போகிறார் என்பது தனக்குத் தெரியும் என்றும், ஆனால் அவரை அவள் சந்திக்கவே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும், அவள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள்."

பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு தமயந்தி விஜயாவின் அருகிலே வந்து உட்கார்ந்து கொண்டாள். "விஜயா! உன் வருத்தத்தின் தாத்பரியம் இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. இந்த சமயம் உனக்கு நான் எவ்வாறு அனுதாபம் சொல்வதென்றே தெரியவில்லை. இதைப் படித்ததும் என் மனமும் வெகுவாகக் கலக்கமடைந்திருக்கிறது" என்றாள்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு விஜயா தன் சிநேகிதியை மிகவும் பரிதாபமாகப் பார்த்தாள். "தமா! மனோகரன் மீது நான் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்பதை நீ அறிவாய். அவருக்கு இந்த விதமான

கஷ்டம் ஏற்பட்டிருப்பதைக் காண என்னால் தாளவே முடியவில்லை தமா! அவரை நான் ஓரளவு அறிவேன். ஒரு எறும்பிற்குக் கூடத் தீங்கு செய்ய நினைக்க மாட்டார். அவ்வளவு இரக்கமான குணமுடையவர். அவர் போய் இப்படிப்பட்ட பயங்கரமான ஒரு கொலையைச் செய்திருப்பாரா? அவர் குற்றவாளி என்று நீ நினைக்கிறாயா?" என்று விம்மினாள்.

சிநேகிதியின் தோள் மீது பரிவுடன் தன் கரங்களை வைத்துக்கொண்டே, தமயந்தி, 'விஜி! நான் நினைப்பது ஒருபுறம் இருக்கட்டும். பொதுவாக ஒரு மனிதன் இந்தக் காரியத்தைச் செய்வான், இதை செய்யமாட்டான் என்று யாரும் நிச்சயமாகக் கூறி விடமுடியாது. அதுவும் காதல் பற்றிய காரியங்களில் ஆண்களின் மனது எப்படியெல்லாமோ மாறுதலையடையக் கூடியது என்பது என் சொந்த அனுபவம். இதிலே ஒரு வேடிக்கையைப் பார்த்தாயா? என் கற்பனைக் கோட்டைகளைத் தகர்த்துப் பொடியாக்கிய அதே பெண்மணி, உன் அன்பனின் வாழ்க்கையிலும் குறுக்கிட்டிருக்கிறாள்?" என்றாள் நயரத்துடன்.

திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள் போன்று விஜயா ஆசனத்தில் விருக்கென நிமிர்ந்து உட்கார்ந்தாள். "தமா! இப்பொழுது தான் என் மூளையில் ஒரு சங்கதி உதயமாகியது. இந்தக் கொலைக் கேஸினால், அண்ணன் பெயருக்கும் அபக்கியாதி ஏற்பட இடமிருக்கிறதே! கேஸ் நடக்கையில் மாயாவைப் பற்றி விசாரிக்கும் பொழுது, அண்ணனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு அம்பலமாகி விடுமே! ஏற்கனவே, அந்த மோட்டர் விபத்து பற்றிக் கோர்ட் நடவடிக்கைகளைப் பத்திரிகையில் படிக்கையில் என் மனம் மிகவும் நொந்து போயிற்று. அதை குறித்து நம்மைத் தெரிந்தவர்கள் சிலர் என்னிடம் கேட்ட பொழுது என் உடல் அவமானத்தில் குன்றிப்

போயிற்று. இந்த கேஸினால் அண்ணாவுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறதே என்று அச்சமாக இருக்கிறது. ஐயோ! நான் என்ன செய்வேன்!" என்று அரற்றினாள்.

தமயந்தி பதில் பேசவில்லை. கண்களில் பொங்கி வந்த நீரைச் சமாளிக்கும் நிமித்தம் அவள் தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிநேகிதிகள் இருவரும் இவ்வாறு துயரப்பட்டு வெகு நேரம் வருந்திக் கொண்டிருந்த அதே நாள் சாயங்காலம், சென்னையிலிருந்த ஒரு ஹோட்டலில் மாடி அறையில் தியாகராஜன் இருப்புக்கொள்ளாது, அறைக்குள் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தான். அஸ்தமித்து வெகு நேரம் ஆகியும், விளக்கு ஏற்றக்கூட யோசனையின்றி அவன் அறைக்குள் இருளில் வேகமாக நடந்து கொண்டிருந்தான். கதவை யாரோ விரலால் மெல்லத் தட்டும் சப்தம் கேட்டதும் பரபரப்புடன் திறந்தான்.

அறைக்குள் நுழைந்த மாயா சட்டென்று கதவை உள்ளே தாழிட்டுக்கொண்டு அவனிடம் பாய்ந்து ஓடி வந்து இரு கரங்களாலும் அவன் தோள்களைத் தழுவி, தன் முகத்தை அவன் மார்பிலே பதித்துக்கொண்டு, விம்மியழுதாள். "அன்பரே! என்னைப் பற்றி இந்தப் பத்திரிகைகள் எவ்வளவு தவறாகவும் ஆபாசமாகவும் எழுதியுள்ளன! இதையெல்லாம் தாங்கள் நம்புகிறீர்களா?" என்று துக்கத்துடன் திணறிய அவள், மெல்லிய குரலில் கேட்டாள்.

அறையில் பரவிக்கிடந்த இருளில் அவள் முகபாவம் அவனுக்கு முழுவதும் தெரியவில்லை என்றாலும், அந்த இனியகுரலில் தேங்கி நின்ற துயரம் அவன் இருதயத்தை வேதனையில் குலுக்கியது.

"மாயா! பத்திரிகைகளைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படப்போவதில்லை. நான் இருக்கும் வரை நீ யாருக்கும் அஞ்சவேண்டாம். இந்தக்கேஸ் சம்பந்தப்பட்ட வரை என்ன செலவானாலும் அதற்கு நான் பொறுப்பாளி. நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம்!" என்று உறுதி கூறிவிட்டு, தொடர்ந்தாற் போல், "ஏன் இப்படி பயத்தால் பதறுகிறாய்! உனது கரங்கள் ஏன் இப்படி நடுங்குகின்றன?" என்று வினவினான் கனிவுடன்.

"உங்களைப் பற்றி எண்ணும்பொழுது எனக்கு இந்த நடுக்கம் ஏற்படுகின்றது, தியாகராஜ்! இந்தப் போலீஸார் இரண்டு தினங்களாக என் வீட்டிற்கு எவ்வளவு முறைகள் வந்து போனார்கள் தெரியுமா? எவ்வளவு கேள்விகள்! நிலவற்றைப் பற்றி நினைக்கவும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. தங்களை மணந்து சந்தோஷமாக இருக்கப் போவதாக எவ்வளவோ இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். அதற்குள் இப்படிப்பட்ட ஒரு தூர்ப்பாக்கியம் எனக்கு வந்து ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ் சம்பந்தமாக நான் சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்ல நேரிடுமாம். கோர்ட், வக்கீல்கள் பத்திரிகைக் காரர்கள் இவர்களைக் கண்டாலே எனக்கு நடுக்கமாக இருக்கிறது. எனக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களைக் கூறவே தங்களை அவசரமாகக் கடிதம் எழுதி இங்கே வருவித்தேன். என் வீட்டைச் சுற்றிப் போலீஸார் கண்காணிப்பு இருப்பதால் தங்களை அங்கே நான் சந்திக்க விரும்பவில்லை. இப்பொழுது கூட என் பின்னால் யாராவது போலீஸ்காரர்கள் தொடர்ந்து துப்புக் காண வந்துள்ளார்களோ என எனக்கு நடுக்கமாக இருக்கிறது" என்று கண்ணீர் உகுத்தாள்.

"போலீஸ் என்றால் ஏன் இந்த பயம்? உன்னை அவர்கள் கடித்தா விழுங்கிவிட முடியும்? நீ என்னைச்

சந்திப்பது பற்றி அவர்களுக்குத் தெரிந்தால் அதனால் என்ன?" என்று தேற்றினான் தியாகராஜன்.

"தியாகராஜ்! என் அன்பே! இந்தக் கேஸில் என் பெயரை இந்தப் பத்திரிகைக்காரர்கள் மிகவும் மாசு படுத்தி எழுதுவார்கள். கேட்கக்கூடாத அசம்பாவிதமான கேள்விகளை வக்கீல்கள் கேட்டு என்னை அவமானப் படுத்துவார்கள். இந்த அவமானமும் கஷ்டமும் என் பெயருடன் போகட்டும். தங்கள் பெயரை வீணாக இந்தக் கேஸில் சம்பந்தப்படுத்தி களங்கப்படுத்துவதை நான் விரும்பவில்லை. ஆகவே, தாங்கள் என்னைச் சந்திப்பது, இனி என்னுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வது யாவும் கொஞ்ச நாட்கள் மிகவும் ரகஸியமாக இருக்கட்டும் என்று கேட்டுக் கொள்ளவே இங்கே தங்களைக் காண ஓடோடியும் வந்தேன். தியாக ராஜ்! உங்களை நான் எவ்வளவு தூரம் நேசிக்கிறேன் என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டுமா?" என்று கேட்டுவிட்டு கண்ணீருடன் விம்மினாள்.

ஜன்னல் வழியே வெளியிலிருந்து வீசிய ஒரு விளக் கின் மெல்லி ஒளி அது சமயம் மாயாவின் முகத்தில் வந்து விழுந்தது. கண்ணீரால் கலங்கிய அவளது இரு விழிகளிலும் ததும்பி நின்ற சோகம் தியாகராஜனது உள்ளத்தை உருகச் செய்து விட்டது. "மாயா! என் கண்ணே! யார் என்ன சொன்ன போதிலும், இன்பத்தி லும் துன்பத்திலும் உன்னை நான் கைவிடமாட்டேன், நிச்சயம்!" என்று உணர்ச்சியுடன் கூறி அந்த அழகிய முகத்தை மார்புடன் அணைத்துக் கொண்டான்.

ஸ்ரீமதி கமலம்மாளைப் பார்த்தவர் எவரும் அவளது ஆரோக்கியத்தைப் பற்றிச் சிறிதும் சந்தேகப்படவே மாட்டார்கள். மண்ணிலிருந்து பிடுங்கி எடுத்த கிழங்கைப் போல் அவள் தனது ஐம்பத்திரண்டாவது வயதில், கொழு கொழுவென்று மிகவும் செழுமையாகத்தான் காணப்பட்டாள். ஆரோக்யம், அவளது ஒவ்வொரு அவயத்தினின்றும் பொங்கி வழிந்தோடிக் கொண்டிருந் ததற்கு அவளது வாழ்க்கைத் தரமும், ஆடை அலங்காரங் களும் ஒரு விதத்தில் காரணமாக இருந்தன என்றே கூறலாம்.

கமலம்மாளின் தந்தை, அவளது பாட்டன், அவரு டைய பாட்டன் என்று பரம்பரையாக மிகவும் செல்வந் தர்கள். பரம்பரை பணக்காரக் குடும்பத்தில் உதித்த பிரபல வக்கீல் சுந்தர முதலியாருக்கு வாழ்க்கைப் பட்டாள். ஆகவே, அவளது செயல், பேச்சு, காரியம் ஒவ்வொன்றிலும் பணத்தின் செருக்கு தொனித்ததில் ஆச்சர்யமில்லை. செல்வத்திலே புரண்டு- கொண்டிருந்த கமலம்மாளுக்கு எளிமை என்பதே சிறிதும் தெரிய வகையில்லாதிருந்தது. ஆடம்பரமும் படாடோபமும் இல்லாவிடில், தங்கள் குடும்பத்தின் கௌரவம் குலைந்து விடும் என்று அவள் அஞ்சினாள்.

சுந்தரமுதலியார் குடும்பம், கழுத்து மட்டம் கடனில் மூழ்கியதற்குக் காரணம், அவரது அருமை மனைவி ஸ்ரீமதி கமலம்மாளின் ஊதாரிச் செலவுகள் தான் என்று அவர்களின் சுற்றத்தார்கள் குறை கூறியது ஓரளவிற்கு

உண்மையே! ஏனெனில் கமலம்மாளுக்கு எந்தக் காரியத்தையும் சிறிய அளவிலே செய்யத் தெரியாது. குடும்பப் பெருமையினாலே மிகவும் அழுந்திக்கிடந்த அவளது வாழ்க்கையின் தத்துவங்களும் தற்காலத்திற்குச் சிறிதும் ஒவ்வாதவையாக இருந்தன. ஒரு குறிப்பிட்ட தொழிலில்தான் பணம் சம்பாதிப்பது தகும்; எல்லா வேலைகளையும் எல்லோரும் செய்வது தகாது; ஏழையாகப் பிறப்பதே குற்றம் என்றெல்லாம் அவள் விசித்திரமான கொள்கைகள் கொண்டிருந்தாள்.

தனது அபிப்பிராயங்களையெல்லாம் கொஞ்சமும் அஞ்சாது வெளியிட அவள் ஒரு நாளும் தயங்கியதே இல்லை. ஏனெனில், அந்த வீட்டுக்கு அவள் தான் ராணி. தமது வாக்குச் சாதுர்யத்தால், பிரபல வக்கீலாக விளங்கியிருந்த சுந்தரமுதலியார் தமது வீட்டில் மனைவியின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசியவரேயல்ல.

பிள்ளைகள் இரண்டு பேரும் அவ்வாறே தந்தை காட்டிய வழியை அணுவளவும் பிசகாது கடைப்பிடித்து வந்தனர். பெரியவனாக வளர்ந்து, கல்வி கற்று, தனிப் பொறுப்பை ஏற்கத் துவங்கிய பின்னரும் கதிரேசனுக்குத் தாயாரிடம் அபாரமான ஒரு பயபக்தி! வைத்தியக் கல்லூரியிலே படிக்கும் கதிரேசனது தம்பி, தாயார் கீறிய கோட்டைத் தாண்டவும் தயங்கும் பயந்தாங் கொள்ளி!

இவ்வாறு முப்பது வருஷங்களாக எதேச்சாதிகாரம் செய்து கொண்டு ராணிபோல் வாழ்ந்து வந்த கமலம் மாளை, சில தினங்களுக்கு முன் வந்த ஒரு சிறு பெண் அவ்வளவு சுலபமாக அடக்கி உட்கார வைத்துவிட முடியுமா, என்ன?

ஆரம்பத்திலிருந்து கமலம்மாளுக்குத் தியாகராஜன் வீட்டு சம்பந்தம் அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை.

பெண் அழகாக இருக்கிறாள் என்றும், கல்யாணத்தை விமரிசையாகச் செய்வார்கள் என்றும், முடிவில் ஒருவாறு ஒப்புக் கொண்டாள். என்ன இருந்தாலும், தங்கள் குடும்பம் போல் அவர்கள், பல தலைமுறைகளாகச் செல்வந்தர்கள் அல்லவே! சமீபத்திலே பணத்தைக் கண்டுபிடித்த புதுப்பணக்காரர்கள் தானே!- என்ற ஒரு அலட்சியம் அவள் உள்ளத்திலே ஆரம்பத்திலே குடி கொண்டிருந்தது.

தியாகராஜன் தன் தங்கைக்கு எவ்வளவோ சீர் வகைகள் செய்வான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஒருசமயம் அவன்தன் சொத்து முழுவதையும் மோகனா வுக்கே எழுதி வைத்திருந்தால் கமலம்மாள் சந்தோஸம் அடைந்திருப்பாளோ, என்னவோ! ஆனால் திருமணத் திற்குப் பின் தன் மருமகள் தங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்த சீர் வகைகள் கமலம்மாளுக்குச் சிறிதும் திருப்தி யளிக்கவே இல்லை. மேலும் நமச்சிவாயத்தின் நோயைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அவளது ஏமாற்றம் சீற்றமாக மாறியது. அவளது கோபம் முழுவதும் மோகனாவின் மீது திரும்பியது. தாய்க்கு பிள்ளையாக கதிரேசன் தன் மனைவியை, தாயார் வார்த்தைகளாலும், செயலாலும் சிறுமைப்படுத்துவதைக் கண்டும் காணாதவன் போல இருந்தான்.

கமலம்மாளுக்கு எப்பொழுதும் தனது ஆரோக்கியத் தைப் பற்றிக் குறை சொல்லிக் கொண்டிருப்பதிலே அலாதியான ஒரு தனி ஆசை. நோயாளி என்று படுக்கை யில் படுத்துக்கொண்டு வீட்டிலுள்ள அனைவரது கவனத்தையும் கவரவேண்டும் என்று ஒரு அலாதியான விருப்பமும் அத்துடன் இருந்தது. எனவே, அடிக்கடி அவள் சாதாரணமான ஒரு தலைவலிக்குக்கூட கம்பளி யைப் போர்த்திக்கொண்டு படுத்து விடுவாள். அதுவும்

தன் மூத்த மருமகள் வீட்டிற்கு வந்ததும் அப்படி அவள் நோயாளியாகப் படுப்பது அதிகரித்தது.

மோகனாவுக்கு நோய் நொடி ஒன்றுமில்லை என்று வைத்தியப் பரீட்சை மூலம் நிச்சயமாகி விட்டது. அவள் தன் பிறந்த வீட்டுப் பக்கமே போவதில்லை. பணம், சீர் இவைகள் தான் கொண்டு வரவில்லை. கொஞ்சம் இடுப்பு ஒடிய மாமியாருக்குப் பணிவிடைகள் தான் செய்யட்டுமே! அவளுக்கு அதைவிட வேறு என்ன வேலை? என்ற எண்ணம் கமலம்மாளுக்கு ஏற்பட்டது.

வழக்கமாக, அவளுக்கு வருகிற மண்டையிடி ஒன்று அன்று காலை அவள் படுக்கையை விட்டு எழுந்திருந்த போது கூடவே எழுந்து விட்டது! குளித்து விட்டுக் காப்பி பலகாரத்தை முடித்துக்கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்த அவள் தலையை இரு கரங்களாலும் பிடித்துக் கொண்டாள். ஆபீஸிற்குச் செல்ல ஆயத்த மாகிக் கொண்டிருந்த கணவனுக்கு, உபசரணைகள் செய்து கொண்டிருந்த மோகனா இதைக் குறிப்பாகக் கவனித்தாள். "அம்மாவுக்குத் தலைவலி போல இருக்கிறது" என்றான் கதிரேசன்.

கணவன் வீட்டிற்கு வந்த சில தினங்களில் கதிரேசனது குணத்தை மோகனா நன்கு அறிந்து கொண்டிருந்தாள். அவளது கற்பனையில் உருவாகியிருந்த கணவனுக்குக் கதிரேசன் முற்றிலும் மாறுபட்டவனாக இருந்தான்.

இளவயதிலே வாலிபர்களுக்குத் தம் புதிய மனைவியரிடம் தோன்றும் அபரிமிதமான பரிவோ, அன்போ அவனிடம் எள்ளளவும் இருக்கவில்லை. தன் ஓய்வு வேளைகள் முழுவதும் மோகனா, காதல் நவீனங்களைப் படிப்பதிலும், கற்பனை நிறைந்த திரைப்படங்களைக் கண்டு களிப்பதிலும் திளைத்திருந்தவள், தனது இல்லற வாழ்க்கையை அந்தக் கண்களாலே தன்னுள்ளே

தித்திரித்து மகிழ்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கணவன் கதிரேசனுக்கு, கண்ணே என்று அழைக்கவோ தேன்போல் இனிக்கப் பேசவோ தெரியவில்லை. முத்து உதிர்ந்துவிடும் போல அஞ்சி, பேச்சை அளந்து பேசினான். சிலரைப் போல் தன் அன்பைச் செயலில் காட்டவும் அவனுக்குத் தெரியாது. போதாதற்குப் பொறுமையே இல்லாத முன் கோபி, தான் மனத்தில் நினைப்பதைப் பிறர் செயலில் செய்துவிட வேண்டும் என்று அதிகமாக எதிர்பார்க்கும் அவசர குணம் வேறு.

மோகனா எதிர்பார்த்த அளவு தாம்பத்ய வாழ்வில் இன்ப நிலவு பொழியவில்லை. "கல்யாணம் என்பது இவ்வளவு தானா!" என்ற ஒரு பெரும் ஏமாற்றம் அவள் உள்ளத்திலே நிறைந்திருந்தது. மோகனாவை அறிந்தவர்களுக்கு அவள் இத்தகையதொரு இல்லற வாழ்விலே ஈடுபட்டுச் சகித்துக் கொண்டிருப்பதைக் காணச் சிறிது வியப்பாகத்தான் இருந்தது. இவ்வளவு வயதிற்கு மேல் கல்யாணம் என்னத்திற்கு என்று அவளது தோழிகளில் ஒரு சிலர் வம்பு பேசினார்கள். மோகனாவாவது, பொறுமையாகக் கணவனுடன் வாழ்கிறதாவது, என்று ஒரு சிலர் வம்பு ஜோஸ்யம் கூறினார்கள். ஆனால், மோகனாவுக்கு அவளது இரத்தத்திலே ஊறியிருந்த ஒரு தனிப்பட்ட குண விசேஷத்தைப் பற்றி யாரும் உணரவேயில்லை.

காந்திமதியம்மாளின் பிடிவாத குணம் அவளது அண்ணன் மகளான மோகனாவிடம் இருந்ததில் வியப்பில்லை. எப்படியாவது பாடுபட்டு கதிரேசன் அன்பைப் பெற்று விடுவது, கமலம்மாளின் நன்மதிப்பையும் பெற்றுவிடுவது, ஏமாற்றமாகக் காணப்படும் குடும்ப வாழ்வை இனிதாக மாற்றி விடுவது என்றெல்லாம் அவளையும் அறியாது ஓர் ஆத்திரம் மிகுந்த பிடிவாதம்

அவளது உள்ளத்தில் எழுந்து, அவளை ஒரேயடியாக மாற்றி விட்டது. எனவே அவள், "அம்மாவுக்குத் தலைவலி போல இருக்கிறது" என்று கணவன் கூறிய அளவில் அவன் மேலே சொல்லப் போவதை ஊகித்துக்கொண்டு விட்டாள். "அம்மாவைப் போய்க் கொஞ்சம் கவனி, அவளுக்கு என்ன வேணும் என்பதை விசாரி" என்று கணவன் கூறு முன்னரே, வேகமாக உள்ளே சென்று தலைவலி மருந்து டப்பியையும், சாப்பிட வெந்நீரும் எடுத்துக்கொண்டு மாமியாரிடம் சென்றாள்.

அதுசமயம் விடுமுறைக்காகப் பட்டணத்திலிருந்து ஊருக்கு வந்திருந்தஅவளது மைத்துனன் குமாரசாமி காலைப் பத்திரிகையுடன் அங்கே வந்தான். "அம்மா! அந்தக் கொலைக் கேஸில் இன்னிக்கு வக்கீலுடைய குறுக்குக் கேள்விகள் ரொம்பப் பிரமாதம்!" என்று உற்சாகத்துடன் சொன்னான்.

மகனைக் கண்டதும் தாயார் தனது தலைவலியை மறந்து வெடுக்கென எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். "அதுக்குள்ளே தீர்ப்பு ஆயிடுச்சா? அவனுக்குத் தண்டனை கிடைச்சுட்டதா?" என்று ஆவலுடன் விசாரித்தாள்.

வெந்நீர்ப் பாத்திரத்தை மாமியாரிடம் நீட்டிய மோகனாவின் கரங்கள் நடுங்கின. அவளது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அன்று பத்திரிகையில் வெளியான சஞ்சீவியின் கொலையைப் பற்றிப் படித்ததிலிருந்து அவள் திகிலடைந்து போய் இருந்தாள். எங்கே தியாகராஜனும் இந்தக் கொலைக்கேஸில் சம்பந்தப்பட்டு விடுவானோ என்ற ஒரு கிலி அவளது உள்ளத்திலே குடி கொண்டு இருந்தது. அவ்வாறு ஏதாவது ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டு தியாகராஜனும் கோர்ட்டிற்கு இழுக்கப்பட்டு விட்டால்!...

ஏற்கெனவேயே அவளது பிறந்தகத்தைப் பற்றி இழிவாக நினைக்கும் அவளது கணவன் வீட்டவர்கள் அவளைச் சும்மா விட்டு விடுவார்களா? தன் சுயநலத்தை வேண்டியாவது அவள் தியாகராஜனுக்கு இந்தக் கேஸில் எவ்வித சம்பந்தமும் ஏற்படக் கூடாது, அவன் பெயருக்கு இழுக்கு வரக் கூடாது எனத் தன் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு நாளும் பத்திரிகையைப் படிக்கையிலே அவளுக்கு ஒரே நடுக்கமாக இருந்தது.

குமாரசாமி மோகனாவின் வெளிறடைந்த முகத்தைக் கவனியாது உற்சாகமாகக் கேஸைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தான். வக்கீலின் மனைவியாக வாழ்வு நடத்தியதால் தனக்குச் சட்ட ஞானம் தானாகவே வந்து விட்டதாக கமலம்மாளுக்கு எண்ணம். ஆகவே, அவள் தன் தலைவலியை மறந்து குதூகலத்துடன் மகனிடம் பேசினாள்.

"அம்மா! இந்த வருஷம் வைத்ய பாடத்தில் எங்களுக்கு நியாய சபையில் வழக்கு நடத்தும் முறை, அதில் வைத்தியருக்கு உண்டான பங்கு இவற்றை எல்லாம் பற்றிப் படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்கள் கலாசாலை ஆசிரியர், இந்தக் கொலைக் கேஸிற்கு மாணவர்கள் சிலரைப் பிரத்யேகமாக அனுமதிக்க ஏற்பாடு செய்திருந்தார். வழக்கு தொடங்கிய முதல்நாள் நான் நேரிலிருந்து வழக்கைக் கவனித்தேன்" என்றான் குமாரசாமி.

தாயாரின் கண்கள் வியப்பினால் விரிந்தன. "அப்படியா!" என்றாள்.

"அன்று கோர்ட்டில் ஏகக் கூட்டம் குற்றவாளிக்காக ஆஜராகும் வக்கீல் மிகவும் பிரபலமானதொரு ஆசாமி. அதனால்..." என்று முடிக்கும் முன் கமலம்மாள்,

"உம்! பிரபலமான வக்கீல்! உங்கப்பா இருந்திருந்தா, இந்தச் சாட்சிகளைப் பிச்சு வாங்கிட மாட்டாரா?" என்றாள் அலட்சியமாக.

"அப்பா தான் இப்போது இல்லையே! அதை விட்டுத் தள்ளுங்கள். குற்றவாளியைக் கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தின போது என் மனம்கூட அவனைப் பார்த்துக் கலங்கிப் போச்சு. வயது முப்பதுக்குள்ளே தான் இருக்கும். பார்க்க மிகவும் கம்பீரமான தோற்றம். முகத்திலே நல்ல பிரகாசம். அவனைப் பார்த்தால் யாரும் அவன் சஞ்சீவிக்கு விஷம் கொடுத்துக் கொன்றிருப்பான் என்று நினைக்கவே முடியாது" என்றான்.

"கொலையாளின்னு மூஞ்சியிலே எழுதியா ஒட்டியிருக்கும்? உங்கப்பா அடிக்கடி சொல்கிறதுண்டு; ஒரு மனிதன் பெண் மோகத்திலே தன் புத்தியைக் கலங்க விட்டு விட்டால் பிறகு அவன் ,என்ன செய்வான், என்ன செய்ய மாட்டான்னு சொல்ல முடியாது. ஆமாம் அந்தப் பெண், அவள் பெயர் என்ன? மாயாவா, ரம்பையா? அவளை விசாரித்த அன்னைக்குக் கோர்ட்டுக்குப் போயிருந்தியா" என்று வினவினாள்.

சற்றுத் தொலைவில் இருந்த மேஜைமீது தாறுமாறாகக் கிடந்த புத்தகங்களை அடுக்குவதில் ஈடுபட்டிருந்த மோகனா, தன் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

"இப்படிப்பட்ட பயங்கரமான கொலைக் கேஸ் ஒன்றில் சம்பந்தப்பட்டிருக்கும் பெண்மணியின் நட்பை அடைய, அவள் ஒரு காலத்தில் எவ்வளவு ஆவலுடன் மாயாவின் துணையுடன் வலுவில் சென்று அதைப் பெற்றுக் கொண்டாள்! மாயாவிடம் சென்று உறவாடியது. அவளுக்கும் அண்ணனுக்கும் உள்ள தொடர்பு

இதெல்லாம் மாமியாருக்குத் தெரிந்து விட்டால்!" பயத்தில் மோகனாவின் வாய் உலர்ந்து போயிருந்தது.

குமாரசாமி பேப்பரைத் தரைமீது போட்டுவிட்டு மறுபடியும் உற்சாகத்துடன் பேசலுற்றான். "ஓ போயிருந்தேனே! மாயாவைப் பார்க்க அன்று கோர்ட்டு வாசலில் வந்திருந்த கூட்டம் ஒருபெரிய சினிமா நட்சத்திரத்தைக் காணக்கூட அவ்வளவு கூடி இருந்திருக்காது. ஒரு பெரிய காரில் இருபுறமும் பாதுகாப்புடன் வந்து இறங்கினாள் அவள். கோர்ட்டு வாயிலை அவள் மிதித்ததும் ஜனங்களிடையே என்ன பரபரப்பு! கை தட்டல்! ஆரவாரம்! கூட்டத்தைப் போலீஸ் படையினர் பயமுறுத்திக் கலைக்க வேண்டியிருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இகழ்ச்சிக்கு இருக்கும் ஆதரவு புகழ்ச்சிக்கு இருப்பதில்லை!" என்று சிரித்தான்.

"அது போகட்டும். அவள் உண்மையில் அவ்வளவு அழகியா!" என்று தாயார் ஆவலுடன் விசாரித்தாள்.

"கூண்டிலே அவள் ஏறி நின்றதும் தன்னைச் சுற்றிலும் அலட்சியமாக எல்லோரையும் நிமிர்ந்து பார்த்தாள். அவள் அன்று கூண்டிலே நின்ற தோற்றத்தைச் சில பத்திரிகை நிருபர்கள் கவிதா உணர்ச்சி பொங்க விவரித்தார்கள். ஒரு பத்திரிகை விவரித்திருந்தது; ! "மாயா கூண்டிலே வந்து நின்றதும், திடீரென்று ஒரு நிசப்தம் ஏற்பட்டது. தலைக்கு மேல் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறிகள் கூட சில வினாடி ஆடாது அசையாது நின்று விட்டன போல் ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. சர்க்கார் சார்பாக சாட்சிகூற, சௌந்தர்ய தேவதையே வந்து விட்டது போல் எல்லோர் மனத்திலும் ஒரு மயக்கம் ஏற்பட்டது உண்மை என்றெல்லாம் எழுதி இருந்தது.." என்று கூறிவிட்டு நகைத்தான்.

கமலம்மாள் எரிச்சலுடன் சப்புக் கொட்டினாள். "வேலையத்தவங்கள்! சௌந்தர்ய தேவதையாம்! என்ன வர்ணிப்பு வேண்டிக் கிடக்குது? சஞ்சீவிக்கும் அவளுக்கும் ரொம்ப நாள் சிநேகிதமாம். இந்த மனோகருக்கும் அவளுக்கும் நாலைஞ்சு மாசமா சிநேகிதமாம். இதெல்லாம் பத்தி வக்கீல்கள் ஒண்ணு விடாமல் அலசி விட்டாங்க. கோர்ட்டில், நானும் தான் இந்தக் கேஸ் விவரத்தைப் பத்திரிகையில் படிச்சிக்கிட்டு வரேனே? வெட்கம், மானம் ஏதாவது துளி இருந்தால் அவள் உயிரை வைச்சுக் கொண்டு இன்னும் இருப்பாளா? சே சே!" என்றாள்.

"மனோகரனுக்கு ஆஜராகி உள்ள வக்கீல் அவளைச் சும்மாவா விட்டார்? சர்க்கார் தரப்பிலே சாட்சியாக வந்து நின்றவுடன் குறுக்குக் கேள்விகளில் கொன்று விட்டார்! ஆனால் அம்மா! அவளுக்குத்தான் என்ன நெஞ்சழுத்தம்? என்ன துணிச்சல்! அவர் கேட்ட கேள்வி களுக்கெல்லாம் அலட்சியமாக 'டக் டக்'கென பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். மனோகரன் இரக்கமாக ஒருமுறை அவளை நிமிர்ந்து பார்த்தான். நாங்கள் எல்லோரும் அவள் ஏதோ தடுமாறி விடுவாள் என்று நினைத்தோம். அவளை ஒருமுறை விறைத்துப் பார்த்து விட்டு, வக்கீல் கேட்டதற்கு ஆணித்தரமான பதில் கொடுத்தாள்" என்றான்.

"உம்! உங்கப்பா மட்டும் இப்போ உசிரோட இருந்திருக்கணும்? இவள் சங்கதி வேறுவிதமாக ஆகி இருக்கும். ஒரு சமயம் அம்பலவாணன் கொலை கேஸிலே எதிர்தரப்பு சாட்சி சொல்ல வந்த ஒரு ஜில் மோகனாங்கியை அவர் கேட்ட கேள்வியிலே, அவள் அப்படியே கூண்டிலேயே அழுதுவிட்டாள்! சாட்சி களைப் பிச்சு நாராய்க் கிழிச்சுப் போட்டுடுவாரே என்னவோ இந்த மனோகரனுக்கு இப்படிப் புத்தி போ

வேண்டாம். கௌரவமான குடும்பத்துப் பையன். அம்மாவுக்கு ஒரே பிள்ளையாம். அவங்க தாயார் கண்ணும் கண்ணீருமாக நிற்பாங்க. அதை நினைக்கும் போது கொஞ்சங்கஷ்டமாக இருக்குது. ஆமாம்! கேஸை ஏன் இப்படி இன்னும் இழுத்துக்கிட்டுப் போறாங்க? காதலில் தனக்கு போட்டியாக சஞ்சீவி வந்து விட்டான்னு பொறாமைப்பட்டு அவனை விஷம் வச்சுக் கொன்னுட்டான்னு பட்டவர்த்தனமாகத் தெரியுதே? என்னைக் கேட்டால், மாயாங்கிற அந்தக் கள்ளிக்கும் சேர்த்துத் தூக்குத் தண்டனை போடணும்னு சொல் வேன், வெட்கம் கெட்டவள்!" என்று ஆத்திரத்துடன் பேசி முடித்தாள் கமலம்மாள் தன்னுடைய தீர்ப்பை.

திடீரென்று அவளுக்குப் புதுநினைவு ஒன்று ஏற்படவே, மருமகள் பக்கம் திரும்பி. "ஆமாம்; உன் கல்யாணத்தின் போது உனக்கு மாயான்னு யாரோ ஒருத்தி புடவை ஒண்ணு பரிசாக அனுப்பியிருந்தாளே, அது யார்?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

மோகனாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு கணம் அவளால் பேசவே முடியவில்லை. "அவளா? அவள் என் சிநேகிதி ஒருத்தி. அவளுக்கும் இந்த மாயாவுக்கும் சம்பந்தமே கிடையாது!" என்று குழறினாள்.

கமலம்மாள் தன் மருமகளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "உனக்கு என்ன உடம்புக்கு? எப்படியோ இருக்கியே?" என்று அதட்டினாள்.

"ஒண்ணுமில்லை, அத்தை!" என்று கூறிவிட்டு அங்கிருக்க மனமின்றி மெல்ல பின்கட்டிற்குச் சென்று விட்டாள் மோகனா.

மாமியாரிடம் சட்டெனக் கூறிய பொய் அவள் மனத்தை வெகுவாக உறுத்திக் கொண்டிருந்தது. அவளுக்குப் பரிசு அனுப்பிய மாயாதான் அந்த வழக்கில்

சம்பந்தப்பட்டிருக்கிறவள் என்று பின்னால் தெரிந்து விட்டால்? இவ்வளவு அபக்யாதி அடைந்துவிட்ட பெண்மணியை அண்ணா கடைசியில் திருமணம் செய்து கொண்டால்? தியாகராஜனின் மனநிலை இப்பொழுது எப்படியிருக்கிறதோ? மாயாவைப் பற்றி அவன் என்ன நினைக்கிறானோ? இதையெல்லாம் தாயாரிடமாவது சென்று நேரில் பேசித் தெரிந்து கொள்ளலாம் என்றால், அதற்கும் வழியில்லை. பிறந்த வீட்டின் தொடர்புக்கே அவளது மாமியார் முற்றுப்புள்ளி வைத்திருந்தாள். அவளுக்குத் தெரியாது பிறந்தகம் போய் வருவதென்பது முடியாத காரியம். பிறகு தெரிந்து விட்டால் கமலம்மாள் மன்னிக்கவே மாட்டாள்.

பலவாறு யோசித்துக் கொண்டு முற்றத்துக் குறட்டிலே உட்கார்ந்தாள் மோகனா. அந்த வீடு முழுவதும் ஒரு முறை சுழன்றது. அவள் கண்கள் இருண்டன. விழித்துக் கொண்டபொழுது வீட்டு வேலைக்காரி தன் முகத்தைத் தண்ணீரைத் தெளித்து துடைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

"இந்த சமயம் நீங்க பொறந்த வீட்டிலே இருக்கணும். பிள்ளைத் தாய்ச்சிப் பெண்ணை, இங்கேயே வச்சுக்கிட்டுத் தானும் கவனிக்காம, பிறந்த வீட்டுக்கும் அனுப்பாம இந்தம்மா செய்கிறது நல்லாவேயில்லை! நல்ல கவனிக்காட்டி நாளைக்கி ஏதாவது உடம்புக்கு ஆபத்து ஏற்பட்டா?" என்று அனுதாபமாகப் பேசினாள் வேலைக்காரி.

தடுமாறிக் கொண்டு தன் அறைக்குள்ளே சென்று படுக்கையில் சாய்ந்து கொண்ட மோகனாவுக்குத் துக்கம் தாள முடியவில்லை. சில மாதங்களில் அவள் தாயாகும் நிலையிலிருந்தாள் வழக்கமாக இது சமயம் பெண்கள் மனத்திலே ஏற்படும் ஒரு கலக்கம் அவளிடம்

குடியிருந்தது. அவளுக்கு ஆறுதல் சொல்லி, இன்பமாக இரண்டு வார்த்தைகள் சொல்ல, அந்தப் பெரிய பங்களாவில் யாரும் இருக்கவில்லை. தன் உடல் நிலையை அவள் அமிர்தம்மாளுக்குக் கடிதம் மூலம்கூடத் தெரிவிக்கவில்லை. தெரிவித்துத்தான் என்ன பயன்? அமிர்தம்மாள் பெண்ணைக் காண அங்கே வந்தால் அவளுக்கு கமலாம்மாள் நல்ல வரவேற்பு கொடுக்கப் போவதில்லை.

பற்பல சிந்தித்த மோகனாவின் உள்ளம், திடீரென காந்திமதி அத்தையைப் பற்றி எண்ணியது. 'அத்தை...! அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு தியாகராஜனையும் தமயந்தியையும் வளர்த்திருப்பார்கள்? அவர்கள் இருவர் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருப்பார்கள்? தமயந்தி பாவம்! அவள் தியாகராஜனை எவ்வளவு நேசித்தாள்? அவர்களுக்கு நடக்க இருந்த திருமணத்தைச் சூழ்ச்சி செய்து கெடுத்து, அண்ணன் மனத்தைக் குழப்பி, அத்தையைத் தள்ளாத வயதில் வீட்டை விட்டு விரட்டியது எவ்வளவு பெரிய துரோகச் செயல்! வளர்ந்த பாசத்தினால் அத்தையின் மனம் என்ன பாடு பட்டதோ, வயதான காலத்தில் வெளியே போய் என்ன கஷ்டமெல்லாம் அனுபவிக்கிறார்களோ? அத்தை அப்படி என்ன, வீட்டிலிருந்தவர்கள் மீது விரோதம் பாராட்டினார்களா? விஜயாவிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லையா? அவர்களைச் சரியாக அறிந்து கொண்டு, பட்சமாகப் பழகி இருந்தால் விஜயாவிடம் காட்டிய பரிவைவிடப் பன் மடங்கு அன்புடன் நடந்து கொண்டிருப்பார்களே!

'அத்தை எவ்வளவு கெட்டிக்காரி! மாயாவின் நேசிதம் தவறு என்று புத்தி சொன்னார்களே! அப்பொழுது குற்றமாகப் பட்டது! மாயாவின் குணம் இப்பொழுதல்லவா தெரிகிறது. அத்தையைக் கொடுமை

செய்த பாவந்தான் போலிருக்கிறது. மாமாவிற்கு இவ்வளவு கடும் நோயாக வந்திருக்கிறது. அத்தை மனம் நொந்து வடித்த கண்ணீர் என் வாழ்க்கையிலும் பழிவாங்க வந்திருக்கிறது.

"ஐயோ! அத்தை! என்னை மன்னித்து விடுங்கள். அகம்பாவத்திலே, அறியாமையில் உங்களுக்குத் தீங்கு செய்து விட்டேன். நானும், உங்களுக்கு அண்ணனையும் தமயந்தியையும் போல் ஒரு குழந்தைதான், என்னை மன்னித்து என் வாழ்வை வளமாக்க ஆசீர்வாதம் செய்யுங்கள், எங்கேயாவது உங்களைச் சந்திக்க முடிந்தால், நான் செய்த தவறுக்கு உங்கள் காலில் விழுந்து என் கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவி விடுவேன், அத்தை! அத்தை!" என்று பலவாறு தனக்குள்ளே எண்ணி உள்ளம் உருகிய மோகனா, பச்சாதாபம் தாளாது விம்மியழுதாள்.

நமச்சிவாயத்தின் ஆரோக்யம் நாளடைவில் சீர்குலைந்து போய்க் கொண்டிருந்தது, சத்துள்ள உணவு, நவீனமான சிகிச்சை முறைகள் இவைகள் ஒன்றும் அவனுக்குப் பலன் அளிக்கவில்லை. அவனது உடலைப் பற்றியிருந்த நோய் சிகிச்சைகளுக்கு குணமாகாத மிகவும் கடுமையானதொரு தனி வகையாக இருந்தது. அத்துடன் வயோதிகத்தினால் தளர்ந்து விட்டிருந்த அவனது உடலில் நோயைத் தாங்கும் சக்தி மிகவும் குறைவாக இருந்தது. ஆகவே, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மாதங்களில் நோயின் கொடுமையால்

நமச்சிவாயம், அடையாளமே தெரியாது உருமாறிப் போயிருந்தான்.

தியாகராஜனது பண உதவியினால் அவனுக்கு அதே ஆஸ்பத்திரியில் நிம்மதியாக வசிக்கப் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. அவனுக்குத் தனியாக ஒரு அறையும், நன்றாகக் கவனித்து உதவி செய்ய வேலையாட்களும், தாதிகளும் அமர்த்தப்பட்டிருந்தனர். 'காந்தி பவன'த்திலே அவனது பிரத்தியேக அறையை அலங்கரித்துக் கொண்டிருந்த புத்தகங்கள், படங்கள் முதலியன எல்லாமே ஆஸ்பத்திரி அறைக்குள் வந்து குடியேறியிருந்தன.

அன்றைய தினம் பகல் பொழுது சிறிது நேரம் உறங்கி விட்டு, அப்பொழுது தான் நமச்சிவாயம் விழித்துக் கொண்டான். மேஜை மீது தாதி கொணர்ந்து வைத்து விட்டுப் போன பால் பாத்திரத்தை எடுத்துக் கொண்டான். குடம் குடமாகப் பாலையும், கூஜா நிறையக் காப்பியையும், தட்டு நிறையச் சிற்றுண்டி வகைகளையும் அலட்சியமாக ஒரே வாயில் விழுங்கும் வழக்கமுடைய அவனுக்கு சில காலமாக உணவில் கூட நாட்டம் குறைந்திருந்தது. நோயின் கடுமையால், முன்போல் அவனால் கண்டதை எல்லாம் சாப்பிட்டு, சமாளிக்க இயலாது போயிருந்தது. இதனால் அவன் மிகவும் நயக்கத்துடன் பாத்திரத்தைக் கையில் எடுத்தான். ஒரு வாய் பாலைப் பருகியதும் விளக்கெண்ணெயைச் சாப்பிட்டவன் போல் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, அதை உடனடியாக மேஜை மீது வெறுப்புடன் வைத்து விட்டு எழுந்து, ஜன்னல் அருகே கிடந்த நாற்காலியில் சென்று அமர்ந்து கொண்டான்.

வழக்கம் போல், மாலை வேளையில் நோயாளியாக அங்கு தங்கி உள்ள உறவினர்களைக் காண வருவோரின் கூட்டம் அன்றும் ஆஸ்பத்திரிக்குள் நிறைந்து காணப்

பட்டது. தோட்டத்திற்குள் வந்தும், வெளியே சென்று வண்ணமாக இருந்த வாகனங்கள் எழுப்பிய சப்தமும் நோயாளிகளைக் காண வந்தவர்களின் பாதரட்சைகள் செய்த ஓசையும் சேர்ந்து அந்தி வேளையில் அங்கே ஒரே இரைச்சல் மயமாக இருந்தது.

பொழுது போக்காகப் படிப்பதற்குக் கையில் எடுத்த பத்திரிகையை நமச்சிவாயம் அலுப்புடன் கீழே போட்டு விட்டு, நாற்காலியில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டான். தனிமையையும் இந்தப் பயங்கரக் கூச்சலையும் ஒருங்கே அனுபவிக்கும்படி அவனை அவனது உறவினர்கள் அங்கே அனுமதித்து விட்டிருந்தார்கள். அதை எண்ணும் பொழுதெல்லாம் நமச்சிவாயத்தின் உள்ளம் ஆத்திரத்தில், அனல் பிழம்பாகக் கொதித்தது என்று கூறத் தேவையே இல்லை.

வராந்தாவிலே 'டக் டக்' என பாதரட்சை ஓசை கேட்டதும் நமச்சிவாயம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். கதவை மிகவும் மெதுவாகத் திறந்துகொண்டு, உள்ளே எட்டிப் பார்த்த தாதி, "உங்களைப் பார்க்க வேணுமென்று இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். அனுப்பட்டுமா?" என்று கேட்டாள். நூதனமானதொரு ஆவலில் நமச்சிவாயத்தின் நெஞ்சு ஒரு கணம் தீவிரமாக அடித்துக் கொண்டது. தனது பரபரப்பைச் சமாளித்துக் கொண்டு, தொண்டையைக் கனைத்துக் கொண்டான். "அனுப்பு!" என்றான் அழுத்தமாக.

கதவைத் திறந்து கொண்டு மெல்ல உள்ளே நுழைந்த அமிர்தம், அறையைச் சுற்று முற்றும் பார்த்து விட்டுத் தயக்கத்துடன் ஓரமாகக் கிடந்த பெஞ்சி மீது உட்கார்ந்தாள். எங்கே நோய்க் கிருமிகள் காற்றிலே பறந்து ஓடி வந்து தன் மீது ஒட்டிக் கொண்டு விடுமோ என்று

அஞ்சுகிறவள் போல் அவள் தன் புடவைத் தலைப்பை இழுத்துத் தன் உடல் முழுவதையும் பயத்துடன் போர்த்திக் கொள்வதை, கடைக் கண்ணால் கவனித்த நமச்சிவாயம், கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு வாளா இருந்தான்.

தொடர்ந்தாப் போல் உள்ளே வந்த விஜயா, நேரே தாயின் அருகில் சென்று பெஞ்சி மீது உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் அறையிலே மௌனம் நிலவியிருந்தது. எதற்காகத் திடீரென்று அவர்கள் இருவரும் தன்னைக் காண வந்திருக்கிறார்கள் என்பது நமச்சிவாயத்திற்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் அவர்கள் வரவை அவன் எதிர்பார்த்துக்கொண்டு தான் இருந்தான். தங்கள் காரியத்திற்காக வந்திருக்கும் அந்தக் காரியவாதிகளே முதலில் பேசட்டும் என்று ஆத்திரத்துடன், இவன் வந்தவர்களை 'உட்காருங்கள்' என்று கூட உபசரிக்காது வாளாவிருந்தான்.

தன் அண்ணனிடம் அமிர்தம் யோக க்ஷேமம் விசாரிக்கட்டும், பிறகு தான் பேச ஆரம்பிக்கலாம் என்று விஜயா பேசாதிருந்தாள்.

நோயினால் ஒரேயடியாக உருமாறிப் போயிருந்த சகோதரனை ஏற இறங்கப் பார்த்த அமிர்தத்திற்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. ஆச்சர்யமும் அருவருப்பும் ஒருங்கே எய்தி விட்டிருந்த அவள், பேசும் சக்தியை இழந்து சிலைபோல் அசையாது உட்கார்ந்திருந்தாள்.

விகல்பமான இந்த மௌனத்தை முடிவில் விஜயா தான் கலைக்க நேர்ந்தது. அறையைச் சற்று முற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு, "பரவாயில்லை. நான் எதிர் பார்த்ததை விட இடம் நன்றாகத்தான் இருக்கிறது

ஏன் மாமா! உங்களை இங்குள்ள டாக்டர்கள் நன்றாகத் தானே கவனித்துக் கொள்கிறார்கள்?" என வினாவினாள்.

நமச்சிவாயம் அவளை எரித்து விடுகிறவன் போல விறைத்துப் பார்த்து, "ஆஹா! மாமா மேல் என்ன அன்பு! மாமாவின் சௌகர்யத்தைப் பற்றி என்ன அக்கறை! ஆஸ்பத்திரிக்கு நான் வந்து ஆறு மாதமாகியும், 'இருக்கிறேனா செத்தேனா' என்று எட்டிப் பார்க்கக் கூட உங்களுக்குப் பொழுது இருக்கவில்லை. நான் மட்டும் அந்தக் கடிதம் எழுதியிருக்காவிட்டால், இன்னிக்கு இங்கே வந்திருப்பீங்களா? எனக்குத் தெரியும். என்னைப் பார்க்கணும் என்று வராவிட்டாலும், அந்தக் கடிதத்துக்காகக் கட்டாயம் வருவீங்கன்னு தெரியும். உங்களை எனக்கா தெரியாது?" என்று கோபத்துடன் பெருமூச்சு வாங்க இரைந்து பேசினான்.

அமிர்தம்மாளுக்கு அதற்கு மேலும் பேசாதிருக்க முடியவில்லை. "அண்ணா! பல காரணங்கள் கொண்டு எங்களால் உங்களை வந்து பார்க்க முடியவில்லை. உடம்பு குணமானதும் உங்களைத் திரும்பக் கூட்டிக் கொண்டு விட நாங்கள் எல்லாரும் ஆவலாகத்தான் இருக்கிறோம். தியாகுவும் உங்களுக்காக, பணத்தைப் பணம்னு பாராமல் எவ்வளவு செலவு செய்கிறான்! நீங்க அனாவசியமா எங்க மேலே குறை சொல்கிறது நல்லவேயில்லை" என்றாள் மெல்லிய குரலில்.

நமச்சிவாயம் அதைக் கேட்டதும், அடிபட்ட புலியைப் போல், சினம் தாளாது எழுந்து நிமிர்ந்து தன் தங்கையை வெட்டி விடுகிறவன் போல் உறுத்து விழித்தான்.

"என்னை வந்து பார்க்க உனக்கு எங்கே பொழுது இருக்கு? புது சம்பந்தி வந்திருக்கும் மோகத்தில் உனக்கு மற்ற மனுஷர்களைப் பத்தி நினைவு ஏது? பார்க்கக்

கண்ணுதான் ஏது? மோகனாவின் புக்ககத்துப் பெருமையை எடுத்துப் பேச உனக்கு நாள் முழுவதும் போதாது, உன் மகன் தியாகராஜனைப் பற்றியோ சொல்ல வேண்டாம். நல்ல நாளிலேயே கம்பெனி வேலையைக் கூட கவனிக்கப் பொழுது இல்லாம, அந்தக் கேடு கெட்டவளுடன் சுத்திக் கொண்டிருந்தான். இப்போ கேட்கவா வேணும்? அவளோடு வக்கீல் வீட்டுக்கும், சாட்சிகள் வீட்டுக்கும் அலைய அவனுக்குப் பொழுது சரியாக இருக்கும். மோகனாவைப் பத்தி ஒண்ணுமே பேச வாய் இல்லை. கழுத்திலே ஒரு மஞ்சள் கயிறு ஏறினதும், அவளுக்குத் தலைகனத்துப் போச்சு, சந்தல் புடைவையைக் கட்டிக்கிட்டு அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஆலாப் பறந்த அமிர்தம்மாள் பெண்ணா அவ இப்போ! "காந்தி பென்ஸில்" கம்பெனி முதலாளியின் தங்கை; சுந்தரமுதலியார் மருமகள்; கதிரேசன் மனைவி. ஆஹா! அவளுக்கு இந்த ஏழை மாமாவைப் பற்றி நினைவுகூட இருக்குமா? அவளது நினைவுக்கு மாமாதான் தகுதியா? மூத்த பெண் விஜயா, அவள்தான் இப்போ காந்திமதி அத்தையம்மாளின் ஸ்தானத்திலே அமர்ந்திருக்கிறாளே? பெட்டிச் சாவியை இடுப்பிலே சொருகிக்கிட்டு அந்தஸ்தா வீட்டைச் சுத்தி வரவே அவளுக்கு நேரமில்லையே! இந்தப் பாழும் மாமா உயிருடன் இருந்தால் என்ன, செத்தால் தான் அவளுக்கு என்ன கவலை!" என்று படபடவென்று பேசித் தீர்த்தான்.

"மாமா வயது அதிகம் ஆயிற்றே ஒழிய உங்களுக்கு இன்னும் விவேகம் என்பது சிறிதளவுகூட ஏற்பட வில்லை. இங்கே நான் இன்று எதற்காக வந்திருக்கிறேன், தெரியுமா?" என்று ஆரம்பித்தாள் விஜயா மிகவும் எரிச்சலுடன்.

"அதை நீ எனக்குச் சொல்ல வேண்டுமா? அது எனக்குத் தெரியும். மோகனாவின் கணவனுக்கு

உண்மையை எழுத வேண்டாம். தியாகராஜனைப் பற்றிய தகவல்களைப் போலீசாருக்கு ஒன்றும் தெரிவிக்க வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்வதற்கு வந்திருக்கிறீங்க அம்மாவும் மகளும்! தெரியாதா உங்களை? சுயநலப் புலிகள்! நன்றி கெட்ட துரோகிகள்! இன்னிக்கு நீங்க சாப்பிடும் சோற்றுக்கும், உங்கள் வீட்டில் எரியும் விளக்குக்கும், நீங்க இருக்கும் இந்த நிலைக்கும் காரணம் யார்னு ஒரு நாளாவது யோசித்துப் பார்த்திருப்பீங்களா? இந்த நமச்சிவாயம் இல்லாதிருந்தால் அமிர்தம்மாளின் பெண்கள் நடுத்தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டு நிற்பார்கள்!" என்று ஆத்திரத்துடன் கத்திய நமச்சிவாயம் மார்பின் மீது படார் என்று அடித்துக் கொண்டான்.

"அண்ணா! எல்லாம் நீங்கள் செய்த உதவிதான். இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் ஏத்தி வைத்த விளக்கால் தான் எங்கள் குடும்பம் இன்னிக்கு நல்ல நிலையிலே இருக்கிறது. ஆனால் இது சமயம் நீங்கள் எங்களிடம் நடந்துக்கிற முறை, உங்களுக்கு அழகாக இருக்கிறதா? யோசித்துப் பாருங்கள்! உங்களை வந்து பார்க்கணும் என்று கடிதம் எழுதிக்கேட்டால் நாங்கள் வராமலா இருந்து விடுவோம்? உண்மையாக மோகனா வின் கல்யாணத்திற்குப் பிறகு எனக்கு எங்கேயும் கிளம்பவே பொழுது இல்லை. அந்தப் பெண்ணை அந்த இடத்தில் கொடுத்ததைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் பெருமையில்லை. அதுக்குப் பதில் எதுவும் துக்கமாக இருக்கிறது.

"மோகனாவை மாமியார் வீட்டிலே சிரமப்படுத்தறாங்க. குழந்தையை இன்னும் ஒரு நாள் கூட நான் போய்ப் பார்க்கவில்லை. அவளும் இங்கே வருகிறதில்லை. தியாகராஜன், நாளு மாசமா ஊரிலேயே அதிகம் தங்குகிறதில்லை. நாகபுரியிலே ஒரு 'பிராஞ்ச்' கம்பெனி

ஆரம்பிச்சிருக்கிறான். அதனாலே அங்கேயே தங்கியிருக்கிறான். இந்த சமயத்துக்கு விஜயாவாவது கூட இருந்து வீட்டைக் கவனித்துக் கொள்கிறாளேன்னு எனக்கு மனசில் கொஞ்சம் நிம்மதி.

"அண்ணா! என் நிலையிலிருந்து யோசிச்சுப் பாருங்க! இந்த வீடு, இந்த சொத்து, சுகம் எல்லாம் என்னுடையதா? உங்க உடம்பு பூரணமாக குணமானால் ஒழிய உங்களைத் திரும்ப வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வரக் கூடாதுன்னு தியாகராஜன் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறான். இதனாலேயே மோகனா வீட்டு மனுஷர்கள் நம்ப வீட்டிற்கே வருகிறதில்லை. பெண்பிள்ளை, நான் என்ன செய்வேன்! "உடனே வந்து கூட்டிக் கொண்டு போங்கள். இல்லாவிட்டால் உங்கள் ரகஸ்யத்தை அம்பலமாக்கி விடுவேன்"னு ஒரு பயமுறுத்தல் கடிதாசி எழுதிப் போட்டிருக்கிறீங்களே. இது உங்க வயது ஆண்பிள்ளை செய்கிற காரியமா?" என்றாள் புத்தி சொல்லும் தோரணையில்.

"கடிதத்தைக் கண்டதும் ஓடி வரத் தெரிஞ்சதல்லவா? அப்படிப்பட்டவள் எனக்கும் ஒரு வழி செய். என்னுடைய வியாதி, கூட இருக்கிறவங்களை ஓட்டிக் கொள்ளும் அபாய நிலையைத் தாண்டி விட்டதுன்னு டாக்டர் சொல்கிறார். அதனாலே இன்னிக்கே என்னை உங்களோடே கூட்டிக்கொண்டு போய் விடு. தன்னந் தனியா ஏன் என்று கேட்கக்கூட மனிதர்கள் இல்லாத இந்தப் பாழும் ஆஸ்பத்திரியில் அனாதை போல என்னைப் போட்டு வச்சியே! இந்தப் பாவம் உன்னைச் சும்மாவா விடப்போகுது?" என்று உறுமினான் நமச்சிவாயம்.

"நீங்கள் இந்த நிலையில் திரும்ப அங்கே வருவது சாத்யமில்லை. அண்ணா ஒப்புக்கொள்ள மாட்டார்;

'காந்தி பவனம்' எங்களுடைய வீடு அல்ல. அதனால் உங்களைக் கூட்டிக்கொண்டு போகமுடியாது. வேறு ஏதாவது உதவி வேண்டுமானால் செய்யத் தயாராக இருக்கிறோம்" என்றாள் சிறிது கோபத்துடன் விஜயா.

"நான் அங்கே வருவது தியாகராஜனுக்குப் பிடிக்காதா? ஏன் பிடிக்கும்? பிடிக்கும்படி செய்ய வழி எனக்குத் தெரியும். மோகனா வீட்டவர்கள் என்னால் தான் 'காந்தி பவன'த்திற்கே வருவதில்லையா? நான் எழுதப் போகும் சில உண்மைகளைத் தெரிந்து கொண்ட பின், அவர்கள் மோகனாவை என்ன செய்வார்கள்? விவாகரத்து செய்து வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்? பார்க்கலாம்' என்று கையை ஆட்டி ஆக்ரோஷமாகப் பேசினான்.

"அண்ணா! உங்களுக்கு தியாகராஜன் மேல் இருக்கும் கோபத்தை, குழந்தை மோகனா மீது காட்டுவது தகாது. வீணாக அவள் வாழ்வைப் பாழ் செய்யாதீர்கள். ஏற்கெனவே நம்மேல் அவளுடைய புருஷன் வீட்டார் மனஸ்தாபமாக இருக்கிறார்கள். நீங்கள் ஏதாவது அபத்தமாகக் கடிதம் எழுதிப் போட்டால், மோகனாவை அவர்கள் மிகவும் துன்பப்படுத்துவார்கள். உங்கள் காலில் விழுந்து கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக, தயவு செய்து என் குழந்தைகள் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்து விடுங்கள், அண்ணா!" என்று மிகவும் குழைவாகக் கேட்டுக் கொண்டாள் அமிர்தம்.

பேசி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகை தொண்டையை அடைத்துக் கொண்டது; கண்களில் நீர் பொங்கியது.

"உன் குழந்தை என்றதும் உனக்கு மனது எப்படி அடிச்சுக் கொள்கிறது! கூடப் பிறந்தவனான நான்

இங்கே படும் அவதியைப் பார்த்து உனக்கு ஒரு இம்மியாவது இரக்கம் ஏற்பட்டதா? 'ஐயோ! அண்ணன் நோயினால் வேதனைப்படுகிறானே' என்று ஒரு சொட்டுத் தண்ணி உன் கண்ணில் எப்பொழுதாவது வந்திருக்கிறதா? என்னை இந்தக் கோலத்தில் பார்க்கையிலாவது உன் மனசு கொஞ்சம் கலங்குதா? இல்லை; உன் மனசு என் விஷயத்தில் பாறாங்கல், மன்னிக்கணுமாம்! எதற்காக? நன்றி கெட்ட உன் குழந்தைகளை நான் ஏன் மன்னிப்பேன்? மாமனுக்கு நோய் வந்து விட்டது என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடினானே தியாகராஜன். அவனைக் கண்டு சமூகமே முகத்தைத் திருப்பிக்கொண்டு ஓடும்படி செய்ய எனக்கு சாமர்த்தியம் உண்டு!

"இந்தப் போலீஸ்காரர்கள் எவ்வளவு முட்டாள்கள்! அந்த மனோகரன் ஒருத்தன் தான் இந்தக் கொலையைச் செய்திருப்பான் என்று அவனை மட்டும் பிடித்துக் கொண்டு கோர்ட்டிலே நிறுத்தியிருக்கிறார்கள். தியாகராஜன் தான் இந்தக் கொலையைச் செய்திருக்கக் கூடுமென்று எனக்குத் தோன்றுகிறது. மாயா அவளுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்று என் வசம் சிக்கியிருக்கிறது. இதெல்லாம் ஒரு சமயத்திற்கு உதவும் என்று நான் எடுத்து வைத்திருந்தது நல்லதாகி விட்டது. 'நமது காதலுக்குக் குறுக்கே யார் வந்தாலும், அந்த எதிரி அதிக காலம் ஜீவித்திருக்க முடியாது' என்ற அவள் அதில் எழுதியிருக்கிறாள். மாயாவுக்கும் தியாகராஜனுக்கும் இடையே உள்ள காதல் சமாசாரம், ஒருவருக்கும் தெரியாத ரகஸ்யமாக இருக்கிறது. ஆனால் அதைப் இப்பொழுது நான் அம்பலமாக்கப் போகிறேன்.

"சஞ்சீவி கொலைக்காக உன் மகனும் போய்க் கூண்டில் நிற்கட்டும், ஊரே பார்த்துச் சிரிக்கட்டும். மாயாவுடன் காதல் புரியலாம். அவளுடன் ஊரைச்

சுற்றலாம், உல்லாசமாக இருக்கலாம். இந்தக் கொலையில் மட்டும் சம்பந்தப்படாது தூர விலகி ஓடிப் போய் விடலாமோ! அவளுடன் ஜோடியாகக் கோர்ட்டுக்கும் போய் வரட்டும். காந்தி பென்சில் கம்பெனி முதலாளி யின் யோக்கியதை எல்லோருக்கும் தெரியட்டும். இதையெல்லாம் விவரமாகப் போலீஸிற்கு ஒரு கடிதம் எழுதி, மாயாவின் கடிதத்தையும் அதில் அடக்கம் செய்து அனுப்பி விடுகிறேன்.

"உன் சம்பந்தியம்மாள் கமலம்மாவுக்கும் அத்துடன் ஒரு கடிதம் எழுதி விடுகிறேன். கொலைக் கேஸில் சம்பந்தப்பட்டு அவதிப்படும் இந்த மாயாதேவி, தனது மருமகளின் ஆருயிர்த் தோழி என்பது அவளுக்கும் தெரியட்டும். மாமாவுக்கு வந்த வியாதியை விட, இந்தக் குடும்பத்திலே அண்ணனுக்கும் தங்கைக்கும் உள்ள அபக்கியாதி எப்படிப்பட்டது என்பது தெரிந்து, கமலம்மாள் அவமானத்தினால் போய்த் தோட்டத்துக் கிணற்றில் விழுந்து சாகட்டும்" என்று ஓயாது மூச்சு விடாது, கத்தினான் நமச்சிவாயம்.

"அண்ணா! என் குழந்தை மோகனாவின் வாழ்வைப் பாழாக்காதீர்கள்! உங்களை மன்றாடிக் கேட்கிறேன். இந்த ஒரு தடவை எனக்காக..." என்று பேச முடியாது அமிர்தம்மாள் விக்கி விக்கி அழுதாள்.

"உன் நன்றி கெட்ட குழந்தைகள் நாசமாகப் போகட் டும்! யாருக்காவும் நான் எடுத்த முடிவைக் கைவிடப் போவதில்லை" என்று பல்லைக் கடித்தான் நமச்சிவாயம்,

அதைக் கேட்ட விஜயா அதற்கு மேல் பொறுக்க முடியாது சீற்றத்துடன் எழுந்தாள். "நன்றி! யாருக்கு யார் நன்றி காட்ட வேண்டியது என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உங்கள் மூளைக்கு உதயமாகும். இந்த நிலையிலும் உங்களை கைவிடாது காப்பாற்றி

வருவதற்கு என் அண்ணனுக்கு நீங்கள் ஏழு ஏழு ஜன்மத்திற்கும் கடமைப்பட்டவர்கள். அப்படியிருந்தும், கொஞ்சம் கூட மனிதத் தன்மையின்றி, அணுவளவும் நன்றியில்லாது பேசுகிறீர்கள். வயதாகி விட்டது; நோய் வேறு பீடித்திருக்கிறது; அந்திமக் காலத்தில் கடவுளை நினைத்து மனம் பக்குவமடைய வேண்டிய பருவத்திலே, உங்கள் மனத்தில் ஏன் இந்த விகாரமான சிந்தனை?" என்றாள்.

அதைக் கேட்ட நமச்சிவாயம் ஆத்திரம் தாளாது, "நிறுத்து அதிகப்பிரசங்கி! கிழவன் ஒருவன் தான் உலகத் தில் சாக வேண்டுமா? சாவு யாருக்கும் எந்த சமயமும் வரக்கூடும். நீ இங்கிருந்து வீடுபோய்ச் சேர்வாய் என்று என்ன நிச்சயம்? வழியிலே உன் கார்மோதி, நீ நடு வீதியிலே சாகவும் கூடும். வாலிப மிடுக்கிலே, என்னைக் கிழவன் என்று குத்திக் காட்டிப் பேச வேண்டியதில்லை" என்று கர்ஜித்தான்.

"அண்ணா! பச்சைக்குழந்தை, அவளை ஏன் சபிக்கிறீர்கள்? உங்களுக்குப் புத்தி மழுங்கி விட்டதா? இதெல்லாம் என்ன பேச்சு!" என்று இடைமறித்தாள் அமிர்தம்.

"அம்மா, அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லட் டும்! எனக்கு ஒன்றும் பயமில்லை. சாவைக் கண்டு நான் ஒன்றும் நடுங்கவில்லை. இவர் சொல்லிவிட்ட தனால் நான் இன்று வழியிலே இறந்துவிடப் போகிறேனா! மாமா! சபியுங்கள்! நன்றாக உங்கள் மனம்போன மட்டும் எங்களைச் சபித்துக் கொள் ளுங்கள்! அக்கறையில்லை. உங்கள் பயமுறுத்தலுக்கெல் லாம் மசிந்து நாங்கள் உங்களை வீட்டிற்கு அழைத்துப் போகப் போவதில்லை. அதைப் செய்மேரன், இதைச் செய்வேன் என்று எங்களுக்கு முந்தா நாள் போட்ட

காகிதத்தில் பயமுறுத்தியிருந்தீர்கள். பயந்து கொண்டு உங்களை அப்படிச் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்ள நாங்கள் இங்கே வரவில்லை. புத்தி சொல்லிப் போகத்தான் வந்தோம்" என்றாள் விஜயா.

"புத்தி சொல்கிற ஆளைப் பார்!" என்று இகழ்ச்சியாகக் கூறினான் நமச்சிவாயம்.

"பயமுறுத்தல் என்பது எல்லோரிடமும் பலிக்காது. சொன்னபடி செய்து விடுவார்களோ என்று நடுங்கிக் கொண்டு ஓடுகிறவர்களிடம் தான் பயமுறுத்திக் காரியத்தைச் சாதிக்க முடியும். 'எங்கே, செய்து கொள் பார்க்கலாம்' என்று துணிச்சலாகத் திரும்பி விடும்போது, பயமுறுத்துகிறவர்களின் பாடு ஆபத்தாகி விடும் மாமா!

"தியாகராஜனை நீங்கள் என்ன செய்து விடமுடியும்? அவனுக்கு மாயாவுக்கும் உள்ள தொடர்பை பகிரங்கப் படுத்தப் போகிறீர்கள். அவ்வளவுதானே? செய்து கொள்ளுங்கள். மோகனாவின் மாமியாருக்கு மாயாவைப் பற்றிக் கடிதம் எழுதப் போகிறீர்கள்! இதற்காக அவளை விவாகரத்து செய்துவிட உத்தேசித்தால் அவர்கள் செய்து விடட்டும். என் தங்கை மோகனா அப்படியொன்றும் கதியற்ற பெண் அல்ல. படித்தவள். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவளுக்குச் சக்தியுண்டு. இதையெல்லாம் சொல்லி எங்களை பயமுறுத்த வேண்டியதேயில்லை. இதற்காக பயந்து கொண்டு நாங்கள் உங்களை அழைத்துப் போகப் போவதுமில்லை. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், பயமில்லை!" என்று கோபத்துடன் பதில் அளித்த விஜயா, தாயின் பக்கம் திரும்பி "அம்மா, எழுந்திருங்கள்! நேரமாகிறது, போவோம். மாமாவுக்குப் புத்தி கலங்கியிருப்பதால் பேசிப் பயனில்லை!" என்றாள் சீற்றத்துடன்.

அமிர்தம்மாள் சரக்கென எழுந்திருந்தாள். அண்ணனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள். "ஆதிமுதல் என் குடும்பத்தை உள்ளேயிருந்து கெடுத்தவர் நீங்கதான். உங்க பேச்சைக் கேட்டு நான் என்ன தப்புக் காரியமெல்லாம் செய்திருக்கிறேன்னு இப்பத்தான் தெரிகிறது. தியாகராஜன் உங்களுக்குச் செய்திருக்கிற பல நன்மைகளையும் மறந்து அவனுக்கு ஏதாச்சும் நீங்கு செய்தீங்கன்னா, சாமி பொறுக்க மாட்டார்" என்று கூறிவிட்டு வெறுப்புடன் வேகமாக வெளியே சென்று விட்டாள்.

இந்த வாக்குவாதத்திற்குப் பிறகு நமச்சிவாயம் கொந்தளிக்கும் எரிமலை போல் ஆத்திரத்தில் வெகு நேரம் குமுறிக் கொண்டிருந்தான். "நாம் நாசமடையும் பொழுது பிறர் வாழ்வதா" என்று ஒரு பொறாமை மன நிலையில் அவன் தனது வஞ்சத்தை அந்தக் குடும்பத்தின் மீது தீர்த்துக்கொள்ள அன்றிரவு காகிதமும் பென்சிலுமாக எழுத மேஜையருகில் உட்கார்ந்தான்.

"நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்" என்கிற பழமொழி நமச்சிவாயத்தின் விஷயத்தில் உண்மையாகிறது. ஒருமுறை கடிதத்தை எழுதி திருப்தியடையாது, கிழித்துப் போட்டு விட்டு யோசனை செய்ய கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

தோட்டத்தினின்று வீசிய குளிர்ந்த காற்றை அனுபவித்த வண்ணம் இரண்டு அடி முன் வைத்த அவன் தடால் என்று இருட்டில் தடுமாறிக் கீழே விழுந்து விட்டான். கிழ வயது, நோயால் தளர்ந்த உடல், கூர்மையான வாயிற்படியில் தலை பலமாக மோதி விடவே நினைவு தவறிவிட்டது.

நமச்சிவாயத்தின் ஈமச் சடங்குகள் ஒருவாறு நடந்தேறின. மயான பூமியினின்று திரும்பி வந்த அமிர்தம் தனது ஈர ஆடைகளை மாற்றிக்கொண்டு ஊஞ்சலின் மீது வந்து அமர்ந்தாள். "கிழப்பிராணன் சிறு அடி கூடத் தாள முடியலை. வழுக்கி விழுந்தது தான் சாக்காகப் போயிட்டது! எமன் வந்து இப்படி வாசப்படியிலே நிக்கிறான்னு தெரியாம, அன்னிக்கு என்ன பேச்சு பேசினான் பாவி!" என்று தரையை வெறித்துப் பார்த்த வண்ணம் தானே பேசிக் கொள்கிறவள் போல் மெல்லிய குரலில் சொன்னாள். அருகில் உட்கார்ந்திருந்த விஜயா திடுக்கிட்டு, "அம்மா!" என்று ஆச்சர்யத்துடன் அழைத்தாள். "நல்லபடி இருந்தா எவ்வளவோ சிறப்பா போயிருப்பான். கடைசி காலத்திலே என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான். ஒப்புக்குக்கூட எனக்கு அழுகை வரவில்லை" என்றாள் அமிர்தம் ஆத்திரமாக.

விஜயாவுக்கும் அவள் மாமனுக்கும் இடையே ஒற்றுமை என்பது கடுகளவு கூட இருந்ததில்லை. என்றாலும், நமச்சிவாயம் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் அவளது கண்கள் அவளையறியாமலே கலங்கி விட்டன. பாவம்! கிழ வயதில் கொடிய நோய்க்கு இலக்காகி வேதனைப்பட்டு, அனாதை போல் ஆஸ்பத்திரியில் உயிர்விட நேர்ந்ததே என, அவனது முடிவைக் குறித்து எண்ணி அவள் மனம் மிகவும் உருகியது உண்மையே. தாயின் விசித்திரமான இந்த மனமாறுதலைக் கண்டு அவள் அதிர்ச்சி அடைந்து போனாள்.

"என்ன இருந்தாலும் உங்களுடன் கூடப் பிறந்த சகோதரன் இல்லையா அம்மா! என்னமோ தெரியாத்தனம்; செத்தவர்களைப் பபற்றிக் கடுமையாகப் பேசுவது தவறு, விட்டுத் தள்ளுங்கள்!" என்றாள் அவள்.

"தெரியாத்தனம்னு எவ்வளவோ விட்டுக் கொடுத்துக் கொண்டு தான் இருந்தேன். பாம்புக்குப் பால் வார்க்கிறாப்பல அடி நாளிலிருந்து இந்த சதிகாரனுக்கு எவ்வளவோ செய்தேன். கடைசியிலே என் குடியையே கெடுக்க அல்லவா திட்டம் போட்டிருந்தான்? என் கண்மணி மோகனாவின் வாழ்வைப் பாழ்படுத்தத் துணிஞ்சானே, பாவி! தெய்வத்துக்கே பொறுக்கலை, பண்ணின அநியாயத்துக்கு நல்ல தண்டனையா, ஒரு நிமிஷத்திலே சாவு வந்து அவனைக் கொண்டு போய்விட்டது."

ஆத்திரத்துடன் பேசி நிறுத்திய அமிர்தம் தன் கரங்களைச் சொடுக்கினாள்.

தாயின் முகத்தை வியப்புடன் பார்த்த விஜயா லேசாகப் புன்முறுவலித்தாள். "அம்மா! மரணம் என்பது ஒருவருக்கும் தண்டனையாகாது. கெட்டவர்கள் மட்டும் செத்துப் போவார்கள். நல்லவர்கள் அனைவரும் சிரஞ்சீவியாய் வாழ்வார்கள் என்றிருந்தால் தானே, சாவை தண்டனை என்று சொல்ல முடியும்? இன்றைக்கு, மாமா இறந்து விட்டார். இன்னொரு நாள் நீங்களும் நானும் இறந்து போகப் போகிறோம். அப்படியிருக்கையில் மரணத்தை தண்டனை என்று தவறாக அழைக்கிறீர்களே. மேலும், மாமாவோ இறந்து விட்டார். இனி அவரைப் பற்றிக் கடுமையாகப் பேசித்தான் என்ன பயன்? எவ்வளவு மனஸ்தாபமிருந்தாலும் இறந்தவர்களைப் பற்றிக் குறைவாகப் பேசுகிறது மனிதத்தன்மைக்கே இழிவாச்சே!" என்றாள்.

"நல்லபடியா நடந்து கொண்டிருந்தா, நான் ஏன் இப்படிச் சொல்லப் போகிறேன்" என்றாள் பதிலுக்கு அமிர்தம்.

"மாமாவின் சுபாவம் நமக்குத் தெரியாத புது விஷயமா? எப்பொழுதுமே பிறருக்குத் தொந்தரவு கொடுப்பதிலே அவருக்கு ஒரு தனி ஆனந்தம், ஆனால் அவரைப் பற்றிக் குறை சொல்வதில் பயன் இல்லை விவேகமும், அறிவும் நல்ல இருதயப் பண்பும் ஏற்பட அவருக்கு வாழ்வில் சந்தர்ப்பங்களே இருக்கவில்லை என்னவோ அம்மா! உலகத்திலே அவர் எடுத்த பிறவியை முடித்துக் கொண்டு போய்விட்டார். இனிமேல் அவரை நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ பேசித்தான் பயன் என்ன?

"சரி உங்களுக்காக எடுத்து வைத்த சாப்பாடு ஆறிப்போகுது, எழுந்திருங்க அம்மா" என்றாள் விஜயா முடிவில்.

அமிர்தம் அதற்குப்பின் தன் மகளுடன் விவாதிக்க வில்லை. ஆனால், அன்று வெகு நேரம் அவளுக்கு விஜயா சொன்ன அந்த வார்த்தை மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. மரணம் ஒரு தண்டனையா? இதைப் பலமுறை தன் உள்ளத்தைக் கேட்டு கொண்டாள் அவள்.

நெருங்கிய உறவினர்களைப் பிரிந்த பின் யாருக்கும் இயல்பாக ஏற்படும் ஒருவிதக் கலக்கம் அமிர்தம்மாளையும் பற்றிக் கொண்டு விட்டது. பகல்பொழுது கழிந்து இரவு சமீபித்து வருவதை உணர்ந்ததும், அவளது கலக்கம் இன்னும் அதிகரித்தது. தனியாக விஜயாவின் துணையின்றி பங்களாவுக்குள் எங்கு செல்லவும் பயமாக இருந்தது. ஜன்னல் கைபிடிச்சுவர் மீது கால் மேல் கால் போட்டுக் கொண்டு நமச்சிவாயம் ஒரு முழு

ஆப்பிளைச் சுவைத்துத் தின்றுகொண்டு உட்கார்ந்திருப்பது போல் ஒரு பிரமை ஏற்படவே, தப்பித் தவறிக்கூட, அந்தத் திசையைப் பார்க்க அவளுக்கு ஒரே கிலியாகி இருந்தது.

இரவு வெகுநேரம் ஆகியும் அன்று அவளுக்கு தூக்கமே வரவில்லை. அருகில் விஜயா துணையாகப் படுத்துக் கொண்டிருந்தும் அவள் மனத்திலே அமைதியே ஏற்பட வில்லை. மிகவும் முயற்சி செய்து இரவு வெகு நேரம் சென்ற பின்பு தூங்குவதற்குக் கண்களைச் சிறிது மூடினாள். சற்றுத் தொலைவில் ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல் அசையும் சப்தம் கேட்டது. கண்களைத் திறந்து பார்க்க அஞ்சி உற்றுக் கவனித்தாள். நமச்சிவாயம் ஊஞ்சலை ஆட்டும்பொழுது எழும் அந்த 'கிரிக் கிரிக்' என்ற சபத்தம், தொடர்ந்து நன்றாகக் கேட்டது. அமிர்தத்தின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. உடலெல்லாம் திகிலில் குப்பென வியர்த்து விட்டது. இன்னும் நன்றாக உற்றுக்கவனித்தாள். ஊஞ்சல் ஆடும் சப்தம் திடீரென்று நின்று விட்டது. அதைத் தொடர்ந்து யாரோ அருகில் நடந்து வருகிறது போல் காலடி ஓசை கேட்டது. அதைக் கேட்டு அமிர்தம்மாளின் நெஞ்சு தண்டவாளத்தின் மீது துரிதமாக ஓடும் ரயில் வண்டி போல் தீவிரமாக அடித்துக்கொண்டது. 'அமிர்தம்! அமிர்தம்!' என்று அண்ணன் அழைப்பதைப் போலக் கேட்கவே, அதற்கு மேல் தாளமுடியாத நிலையில் கிறீச்சென அலறிவிட்டாள்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்ட விஜயா, எழுந்து விளக்கைப் போட்டாள், உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை கிடுகிடுவென நடுங்க, அமிர்தம்மாள் கண்களில் நீர் வழிய, "விஜி! கிட்டவா! எனக்குப் பயமாக இருக்கு" என்று குழறினாள்.

"என்னம்மா! சொப்பனம் கண்டீங்களா? பயந்து போயிட்டீங்க போலிருக்கு" என்று கேட்ட வண்ணம் தாயாரின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள் பெண்.

"அண்ணன் இங்கே வந்து என்னைக் கூப்பிட்டது போல் கேட்டது பயந்துட்டேன்" என்று முணுமுணுத்தாள், உடலைச் சிலிர்த்துக் கொண்டு அமிர்தம்.

அதைக்கேட்ட விஜயா லேசாகச் சிரித்தாள். "அம்மா! இதெல்லாம் வீண் பிரமை. செத்தவர்கள் திரும்பி வர முடியுமா? உயிருடன் இருக்கையிலே செய்யமுடியாத துஷ்டத்தனங்களை மாமா செத்த பிறகு தானா நமக்கு செய்யப் போகிறார்! சுன்னா பின்னாவென்று மனத்தை கற்பனையில் ஓட விடுவதைவிட, கடவுளைச் சிந்திப்பதில் ஈடுபடுத்துங்கள். வீண் பகைமையும், பயமும் இருக்காது" என்று ஆறுதல் கூறினாள்.

விஜயாவுக்கு இருந்த விவேகமும் அறிவும், வயதாகியும் தனக்கு ஏற்படவில்லையே என எண்ணித் தனக்குள்ளே வெட்கமடைந்த அமிர்தம், மறுபடியும் படுக்கையிலே படுத்துக் கொண்டாள்.

நமச்சிவாயத்தின் மரணம், ஒரு வழியில் அமிர்தத்தின் அகங்காரத்தை ஒடுக்கிவிட்டதென்றே கூறவேண்டும். "வியாதின்னு ஒருநாள் படுத்தவன் இல்லை. நன்றாகத் தின்றுகொண்டு உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்தான். அவர்கள் பாட்டன், முப்பாட்டன் வாழ்ந்த கணக்குப்படி பார்த்தால் இன்னும் இருபது வருஷம் தாராளமாக வாழ்ந்திருக்கலாம். குடும்பத்திலே கொடிய வியாதி மாயமாய் வந்து மனிதனைக் கொண்டு போய் விட்டதே! ஆஸ்பத்திரிக்குப் போய் ஆறு மாதம் கூடச் சரியாக ஆகவில்லையே!" என்று தனக்குள்ளே அடிக்கடி அண்ணனைப் பற்றி சிந்திக்கத் துவங்கினாள். இந்த

விதமான எண்ணத்துடன் உடனடியாக அவளுக்குக் கூடவே ஒரு சிந்தனை ஏற்பட ஆரம்பித்தது. ஆரோக்யமாக கல்லுப் பிள்ளையார் போலிருந்த நமச்சிவாயமே போய் விட்டான்; அடிக்கடி ஜுரத்திலே தளர்ந்து கிடக்கும் அமிர்தம்மாள் எந்த மட்டில்? அண்ணனுக்குப் பின் அதிக நாட்கள் வாழ்ந்திருப்பாள் என்பது என்ன நிச்சயம்? இந்த எண்ணம் அமிர்தத்தை உடல் சிலிர்த்து, உள்ளம் நடுங்க வைத்தது. தானும் கூடிய சீக்கிரமே மரணமடையக் கூடும் என்று நினைக்கும் பொழுதெல்லாம் அவளுக்கு ஒரே திகிலாக இருந்தது. 'மரணம்' என்ற வார்த்தையை உச்சரிக்கவும் அமிர்தம் அஞ்சினாள்.

நாளுக்கு நாள் அவள் மனம், சாவைப் பற்றி எண்ணி, கோழையாகிக் கொண்டு வந்தது. அதனால் அகங்காரமும் மிடுக்கும் இழந்து உள்ளத்திலே பயம் ஏற்பட்டது. சாவைப் பற்றிய பயம். அவளது அறிவுக் கண்ணை மெல்லத் திறந்து விட்டது. அதனால் கடந்து போன காரியங்களை ஆராய்ந்து பார்க்கும் ஒரு நல்ல மனப் பான்மை ஏற்பட்டது. தான் அன்றுநாள் வரை செய்த பல பிசகுகளையும் அவள் தீவிரமாக எண்ணிப் பச்சாதாபமடைந்து வருந்தினாள். விஜயா கூறுவது போல், மரணம் என்பது யாருக்கும் ஒரு தண்டனை என்று கூற முடியாது. ஆனால், நமச்சிவாயத்திற்கு வந்த கொடிய நோய் ஒரு சமயம் அவன் செய்த துஷ்ட காரியங்களுக்குக் கடவுள் கொடுத்த கூலியோ! அப்படியென்றால், அவனுடன்கூட அவைகளில் துணை புரிந்த அவளுக்கு என்ன தண்டனைகள் காத்து நிற்கின்றனவோ?

'ஒரு பாவமும் அறியாத காந்திமதியை வீட்டை விட்டுத் தூரத்தினதற்கு என்னவெல்லாம் சம்பவிக்கப் போகின்றதோ? உயிரோடு இருக்கையில் நமச்சிவாயத்திற்கு எத்தனை பேராசைகள் இருந்தன! இது வேண்டும், அது வேண்டும் என்றெல்லாம் துடித்துக் கொண்டிருந்

தானே! என்னத்தை வாரிக் கட்டி எடுத்துக் கொண்டு போனான்? ஒன்றுமில்லை! இந்த உலகை விட்டுப் போகையில் யார்தான் என்னத்தை எடுத்துக் கொண்டு போகிறார்கள்? அவ்வாறு எடுத்துப்போக முடியும் போல், இது எனக்கு வேண்டும், என்னுடையது இது, என்றெல்லாம் அகங்காரமாகவும், பேராசையுடனும் நடந்து கொள்கிறோமே; என்ன மதியீனம்' என்று பலவாறு எண்ணி மனம் இரங்கி வந்து அமிர்தத்திற்கு ஞானோதயம் ஏற்பட்டிருந்தது. அவள் உள்ளத்திலே வெறுப்போ ஆத்திரமோ யார் மீதும் இல்லை. அதற்குப் பதில் பச்சாதாபம் நிறைந்திருந்தது. தான் செய்த பிசகை எண்ணிப் பார்த்துப் பச்சாதாபமடையும் பொழுது, மனித உள்ளத்திற்கு அதைவிட வேறு தண்டனை வேண்டியதேயில்லை!

அமிர்தம்மாள் தான் செய்த வினைக்குத்தக்க தண்டனையைத்தானே அனுபவித்து விட்டாள். காந்திமதியை எங்கேயாவது தேடிக் காணக் கூடுமானால், தான் செய்த பிசகுகளுக்காக அவளது பாதங்களில் விழுந்து மன்னிப்பு வேண்ட அவள் தயாராக இருந்தாள் என்றால், அவளது மனமாற்றத்தைப் பற்றி அதிகம் விவரிக்க வேண்டியதேயில்லை.

சில தினங்கள் சென்றன. தியாகராஜன் அன்று தான் சில மாதங்களுக்குப் பிறகு நாகபுரியிலிருந்து ஊருக்கு வந்திருந்தான். மாமா இறந்து போன சங்கதி அவனுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றாலும், அவனுக்கு மரியாதைக்குக்கூடத் தன் தாயை அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று தோன்றவில்லை. அவனது சிந்தனையும் மனமும் நடந்து கொண்டிருந்த 'சஞ்சீவி கொலை வழக்கிலே' ஒரேயடியாக லயித்து விட்டிருந்தன. "நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந்தார். கீழே விழுந்த, அதிர்ச்சியால் நினைவு இழந்து இரண்டு நாளில் உயிர் போய் விட்டது. இருதயம் பலஹீனமாக இருந்ததனால்

மரணமடைந்து விட்டார் என டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்" என்று தங்கை, நமச்சிவாயத்தின் மரணத்தைப் பற்றி அண்ணனுக்கு விவரித்துச் சொன்னாள். அப்பொழுதுகூட அவன் 'அப்படியா? பாவம்!' என்று இரங்கி ஒரு வார்த்தை சொல்லவில்லை. மௌனமாகத் தலையை அசைத்து விட்டு, அதிக நேரம் தாயாரிடமும், தங்கையிடமும் பேசிப் பொழுதைக் கழிக்க விருப்பமின்றி தனது அறைக்குச் சென்று விட்டான்.

அவனைக் குறைகூறிப் பயன் இல்லை. மாயா மீது கொண்டிருந்த மோகம், அவனது உள்ளத்தை எரிமலை போல் தகித்துக் கொண்டிருந்தது. மாயா என்ற பெயரைத் தவிர வேறு யாருடைய பெயரையும் உச்சரிக்கக்கூட அவனுக்குப் பொழுது இருக்கவில்லை.

நமச்சிவாயம் இறந்து ஒருமாத காலம் சென்றபின், ஒரு நாள் அமிர்தம்மாள் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. கடிதத்தை மகளிடம் கொடுத்து அதைப் படிக்கும்படி கேட்டுக் கொண்டாள். அவள் உறை மீது லேசாகப் பதிந்திருந்த தபால் முத்திரையை ஊன்றிப் பார்த்த விஜயா சூரியகாந்தம் என்ற பெயரைக் கண்டதும் ஆச்சர்யத்துடன் பரபரப்பாக உறையைக் கிழித்து, காகிதத்தைக் கையில் எடுத்தாள்.

"திருமதி அமிர்தம்மாள் அவளுக்கு மிக்க வணக்கம். க்ஷேத்திராடனம் செய்ய வெளியே புறப்பட்டிருந்த காந்திமதி தற்சமயம் இங்கே எங்களுடன் சூரியகாந்தத்திலே தங்கியிருக்கிறார்கள். சில நாட்களாக அவர்களது உடல்நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கவில்லை. இதை உறவினர்களான தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என்

கடமை என நினைத்து எழுதுகிறேன். வித்தியாச மாக எண்ணினால் மன்னிக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள
"சம்பந்த முதலியார்"

இதைப் படித்து முடித்ததும் விஜயா வியப்புடன் "அம்மா! அத்தை சூரியகாந்தத்திலேயா இருக்கிறாங்க!" என்று கூவினாள்.

"காந்திமதியின் உடல்நிலை மிகவும் திருப்திகரமாக இல்லை' என்ற செய்தி, அமிர்தம்மாளுக்கு விவரிக்க இயலாத ஒரு அச்சத்தைக் கொடுத்தது. நமச்சிவாயம் போய் விட்டான்! அடுத்தது காந்திமதியா? அதற்கு அடுத்த முறை அமிர்தம்மாளாக இருக்கலாம் அல்லவா? சாவைப் பற்றி எண்ணி மெய் விதிர்த்த அமிர்தம் விஜி! ஒன்று செய்வோம். மோகனாவுக்கும் சங்கதியைத் தெரியப்படுத்து, அவளும் வந்தால் எல்லோருக்கும் போய் அத்தையைப் பார்த்து, இங்கே கூட்டிக் கொண்டுவர வழி செய்வோம். ஒருத்தருக்கு இரண்டு பேராய்ப் போய் கூப்பிட்டால் தான் அவள் மனசுமாறி இங்கே வருவாள். 'கடைசிக் காலத்திலே, யாருமில்லாத அனாதை போல் அவ செத்தான்'னு கெட்ட பெயர் நமக்கு ஏன்? இங்கே நாம்ப அவளை அழைச்சிட்டு வந்து, நல்ல வைத்தியம் செய்து வியாதியைக் குணப்படுத்த வேண்டியது தான் நம் கடமை; அது தான் நமக்கு அழகு. நான் செய்த பாவமெல்லாம் போதும், இந்தப் பாவமும் எனக்கு எதற்கு? இது அவ வீடு. அவளுடைய சொத்து இதெல்லாம். இங்கே வந்து நிம்மதியா அவ உயிரை விடட்டும்" என்றாள்.

விஜயாவின் மனத்திலும் இதே எண்ணம் அது சமயம் ஏற்பட்டிருந்தது. தாயும் தன்னைப் போலவே எண்ணு வாள் என அவள் சிறிதும் நினைக்கவேயில்லை. தாயின்

மனமாற்றம் அவளுக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. எனினும், அதை வெளியே காட்டிக் கொள்ளாது "ஆகட்டும், அப்படியே செய்வோம்" என்றாள்.

அதிக கால தாமதம் செய்யக் கூடாது என்ற துடிப்பில் விஜயா, உடனேயே விஷயத்தைத் தமயத்திக்கு அறிவிக்க ஆசிரமத்திற்கு விரைந்து சென்றாள். காரிலிருந்து அவசரமாக இறங்கி, ஓட்டமும் நடையுமாக ஆபீஸ் அறையை அடைந்த அவளுக்கு மூச்சு வாங்கியது. "தமா! ஒரு சங்கதி! அத்தை இருக்கும் இடம் தெரிந்து விட்டது! சூரியகாந்தத்தில் தான் தற்சமயம் இருக்கிறார்கள்." என்று பதட்டமாகப் பேசி முடிக்கு முன், தமயந்தி, மேஜையின் ஒரு அறையைத் திறந்து தனக்கு வந்திருந்த கடிதம் ஒன்றை அவளிடம் நீட்டினாள். "நீ சொல்லப்போகும் விஷயம் எனக்கும் தெரிந்தது தான். இந்தக் கடிதத்தைப் படித்துப் பார், விளங்கும்" என்றாள் அவள். விஜயா குவலுடன் கடிதத்தைப் பிரித்தாள்.

"அன்பு மிக்க குழந்தை தமயந்திக்கு கடவுள் கிருபையால் நீ சுகமாக நீடுழி வாழ வேண்டும் என்பது என் பிரார்த்தனை. உன் தாயார் காந்தி மதியம்மாள் உங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்த பின்பு வேறு எங்கும் போக விருப்ப மின்றி நேரே சூரியகாந்தத்திற்குத் தான் வந்தார்கள். தற்சமயம், எங்களுடன் தான் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஒரு வருஷ காலமாக க்ஷேத்திரங்கள் பலவற்றைத் தரிசித்துத் தமது பொழுதை சாந்தமாக பக்திமார்க்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். சில நாட்களுக்கு முன்பு ஒரு உற்சவத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வருகையில் மும்முரமான ஜுரத்துடன் வந்தார்கள். பலவிதமான சிகிச்சையினால் ஜுரம் தணிந்து விட்டதென்றாலும், நாளுக்கு நாள் அவர்கள்

உடல்நிலை மிகவும் நலிந்து கொண்டு வருகிறது. பூர்ண ஆரோக்யம் திரும்பவும் வரும் என்ற நம்பிக்கை குறைந்து விட்டதனால் உனக்கு இதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

காந்திமதிக்கு, தான் நோயாக இருப்பதைப் பற்றி உங்கள் யாருக்கும் தெரிவிக்க இஷ்டமே யில்லை. அவர்களுக்குத் தெரியாமல் இந்தக் கடிதத்தை நான் உனக்கு எழுதுகிறேன். உன் தாயார் உடல்நிலை கவலைக்கு இடமாக உள்ளது என்கிற உண்மையை உனக்குத் தெரிவிக்காவிடில், நான் என் கடமையினின்று தவறியவன் ஆகிவிடுவேன். உன் மாமி அமிர்தம்மாளுக்கும் இதைப் பற்றி எழுதித் தெரிவித்திருக்கிறேன். உன் தாயின் அந்திய காலத்தில் நீ அவளுக்கு ஏதேனும் செய்ய விரும்பினால், இது தான் தகுந்த தருணம்.

காந்திமதியை நான் உனது தாய் என்றுதான் அழைக்க விரும்புகிறேன். சிறு குழந்தைப் பருவத்தில், நினைவு தெரிந்த நாள் முதல் உன்னைத் தன் சொந்த மகளைப் போல் அருமையாக வளர்த்தவள் அவள். ஆகவே காந்திமதி உன் வரையில் சொந்தத் தாய்க்கு ஈடானவள், இன்னும் விவரிக்கப் போனால் எனக்கு ஒரு வார்த்தையைச் சொல்லி இந்தக் கடிதத்தை முடிக்க வேண்டு மென்று ஆவலாக இருக்கிறது. குழந்தையைப் பெற்று விட்டதனால் மட்டும் ஒரு பெண் தாயாகிவிடமாட்டாள்; குழந்தையை ஆசையுடன் வளர்த்து, மனிதனாக ஆக்கும் பெரும் பணியைச் செய்வதால்தான் பெண் தாய் என்னும் பதவியை அடைகிறாள்.

இதெல்லாம் பற்றி உனக்கு நான் அதிகம் கூறவேண்டாம். நீ என்னைவிட அறிவிலும் கல்வியிலும் தேர்ந்தவள்.

இப்படிக்கு உன் அன்புள்ள
தாத்தா சம்பந்த முதலியார்"

கடிதத்தைப் படித்து முடித்த விஜயாவின் கண்கள் கலங்கின. உணர்ச்சி வசப்பட்டுப் போன அவள், தலையை நிமிர்ந்து தன் தோழியை அர்த்தபாவத்துடன் பார்த்தாள். வெகுநேரம் அழுததனால் தமயந்தியின் கண் இமைகள் சிவந்து வீங்கியிருந்ததை அப்பொழுது தான் முதல் முதலாக அவள் கவனிக்க நேர்ந்தது, "தமா! சம்பந்த முதலியாருக்கு நாம் மிகவும் கடமைப்பட்ட வர்கள். நம் நன்றியை அவருக்கு எப்படித் தெரிவிப்பது என்றே விளங்கவில்லை. அத்தையைப் பார்க்க வேண்டும் என்று அம்மா மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். இங்கிருந்து எல்லோரும் ஒன்றாகப் போகலாம் என்பது என் விருப்பம். நீயும் வர வேண்டும்" என்றாள்.

"கடிதத்தைப் பார்த்தவுடனேயே சூரியகாந்தத்திற்குக் கிளம்ப சகல ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறேன். இதுவரை உத்தியோகம் செய்து நான் சேர்த்து வைத்த பணம் என்னிடம் கொஞ்சம் இருக்கிறது. அவை பாங்கியிலிருந்து எடுத்து வர ஏற்பாடு செய்து விட்டேன். எங்கள் ஆச்ரமத் தலைவியிடம் விஷயத்தைச் சொல்லி ஒரு மாத காலம் லீவு எடுத்துக்கொள்ள உத்தரவும் பெற்றுக் கொண்டு விட்டேன். இனி ஊருக்குக் கிளம்பும் வேலை தான் பாக்கி" என்றாள் தழதழத்த குரலில்.

"அத்தையைப் பார்க்க மோகனா வருவதாக இருந்தால் அவளையும் அழைத்துக்கொண்டு, எல்லோரும் ஒன்றாகச் செல்வோம். தமா, நீ எங்களுடனேயே வா. எனக்காக

வர வேண்டும்" என்று மிகவும் வற்புறுத்தலாகக் கேட்டாள் விஜயா.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தமயந்தி சிநேகிதியைப் பார்த்து மிகவும் சோகமானதொரு புன்னகை செய்தாள். "வருவதில் ஆக்ஷேபணை இல்லை. இந்த மனநிலையில், ராஜாவைச் சந்திக்க எனக்கு எப்படியோ இருக்கிறது. அதனால் நான் தனியாகப் போக விரும்புகிறேன்" என்றாள் தமயந்தி, தயக்கத்துடன்.

"தமா, நீ தாராளமாக எங்களுடன் வரலாம். அம்மாவுக்கு இப்பொழுது மனம் மிகவும் மாறியிருக்கிறது. நடந்ததை நினைத்து அவள் மிகவும் வருத்தப்படுகிறாள்! ஆகவே, நீ அம்மாவிற்காகச் சிறிதும் தயங்க வேண்டாம். அண்ணனைப் பற்றியோ கவலையே படவேண்டாம். தமா! உன்னிடம் சொல்ல எனக்குக் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது. அண்ணன் இவ்வளவு நன்றி கெட்டுப் போவார் என்று நான் நினைக்கவேயில்லை. அத்தையின் உடல் நிலையைப் பற்றி அண்ணனிடம் நான். 'டிரங்கு' டெலிபோனில் பேசினேன். 'உடனே வர முடியுமா?' என்றும் விசாரித்தேன். தமக்கு முக்கிய வேலைகள் பல இருப்பதால் தற்சமயம் வர இயலாது என்று கூறி 'போனை' 'டக்' கென்று வைத்து விட்டார். இப்பொழுதெல்லாம் அண்ணன், இங்கே உள்ளூரிலிருக்கும் கம்பெனியைக் கூட சரியாக கவனிப்பதில்லை. சதா வெளியூர்களில் தான் வாசம் செய்கிறார். அதைப்பற்றி அதிகம் பேசக்கூட எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள்.

அதைக் கேட்ட தமயந்தி, பதில் பேசவில்லை தன்னை மீறி எழுந்த கண்ணீரைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டு, "உன்னுடன் வருகிறேன். சீக்கிரம் புறப்பட ஏற்பாடு செய்" என்று மட்டும் கூறினாள்.

மிகத் தொலைவிலிருந்து வந்ததாக அறிவிப்பது போல், புழுதி படிந்திருந்த பெரிய கார் ஒன்று, அன்று காலை சூரியகாந்தத்தில், சம்பந்த முதலியார் வீட்டு வாயிலில் வந்து நின்றது. தண்ணீர் எடுக்க ஆற்றுக்குப் போய்க் கொண்டிருந்த இரண்டொரு பெண்கள், வண்டியினின்று இறங்கிய ஊருக்கு முற்றிலும் புதியவர்களாகக் காணப்பட்ட அந்தப் பிரயாணிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

வீட்டிற்குள் நுழைந்த அந்த நான்கு பெண்மணிகளையும் கவனித்த சம்பந்த முதலியார், அவர்கள் யாரென்று சட்டென்று ஊகித்துக் கொண்டு விட்டார். படித்துக் கொண்டிருந்த புஸ்தகத்தைக் கீழே வைத்து விட்டு, அவர்களை வரவேற்க எழுந்திருந்தார்.

கட்டிலின் அருகே சென்ற தமயந்தியினால் துயரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எலும்பும் தோலுமாக மிகவும் உருமாறியிருந்த காந்திமதியைக் கண்டதும், 'பெரியம்மா!' என்று அழைத்துவிட்டு, ஓடிச்சென்று அவளைக் கட்டிக் கொண்டு, குழந்தை போல் தேம்பி அழத் துவங்கி விட்டாள். அந்தக் காட்சியைக் கண்ட அமிர்தத்தின் கண்களில்கூடக் கண்ணீர் வந்து விட்டது. "இப்படி இளைச்சு, துரும்பாகிப் போயிட்டியே! எங்களுக்கு ஒரு வார்த்தை தெரிவிக்காம இருந்தது நியாயமா?" என்று வினவியபடி அமிர்தம் கட்டிலின் அருகே தரைமீது உட்கார்ந்து கொண்டாள்.

"அத்தை! உங்களை உயிரோட பார்க்கவாவது எங்களுக்கு பாக்கியம் இருந்ததே, நான்தான் மோகனா. இப்படி என்னைப் பாருங்கள் என்று மனவெழுச்சியுடன் கூறிய மோகனா, தான் செய்த தவறுகளுக்குப் பிராயசித்தம் செய்வது போல், அத்தையின் கால்களைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். எவ்வ

ளவோ சிரமப்பட்டு, தன் புக்ககத்திலே உத்தரவு வாங்கிக் கொண்டு அவள் அங்கே அவர்களுடன் வந்திருந்தாள். காந்திமதியைப் பார்க்க மற்றவர்களைக் காட்டிலும் அவளுக்குத்தான் மிக்க ஆறுதலாக இருந்தது.

"அத்தை! நாங்கள் எல்லோரும் உங்களைக் கூட்டிக் கொண்டு போக வந்திருக்கிறோம். அங்கே ஊருக்கு நம்ப வீட்டுக்குப் போனதும் உடம்பு நல்ல சுகமாகி விடும்" என்று அன்புடன் பேசிய விஜயா, காந்திமதியின் கரங்களை வருடினாள்.

'இதெல்லாம் கனவா அல்லது நனவா?' என்று காந்தி மதிக்குச் சில விநாடிகள் ஆச்சர்யமாக இருந்தது. அவளது சந்தேகத்தைப் போக்க விரும்புகிறவர் போல், சம்பந்த முதலியார், இடையே தமது தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "காந்திமதி, உன் உடம்பைப் பற்றி நான்தான் இவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" என்று ரத்னச் சுருக்கமாக விளக்கினார்.

தமயந்தியின் கரங்களைப் பலஹீனமான தன் கரங்களால் ஆசையுடன் வருடினாள் காந்திமதி, உணர்ச்சி வசத்தில் அவளால் பேசவே முடியவில்லை. கண்களில் நீர் தளும்ப, அவள் எல்லோரையும் பார்த்து விட்டு தன்னைச் சுற்றிலும் இங்குமங்கும் ஆவலுடன் பார்த்தாள். அவள் அவ்வாறு யாரைத் தேடுகிறாள் என்பதைக் குறிப்பாக உணர்ந்து கொண்ட தமயந்தி, "பெரியம்மா! நம் ராஜாவுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் வெளியூரிலிருப்பதால், உடனே எங்களுடன் வர முடியவில்லை" என்று சமாதானம் கூறினாள்.

"எனக்குத் தெரியும். அவன் வருவான் என்று. என் ராஜா! என் கண்மணி! என்னை இப்பொழுதாவது வந்து பார்க்காமலிருப்பானா! வருவான்!" என்று முணு முணுத்த காந்திமதி, சந்தோஷமும், துயரமும் ஒருங்கே எய்திய ஒரு வித உணர்ச்சி வசத்தில் அழுதாள்.

அன்று காலை, நகரத்தின் அலுவல்கள் மிகுந்த ஒரு பிரதேசத்தில் பாட்டைசாரிகளின் பாதைமீது இரு நண்பர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் அருகிலிருந்த காப்பி ஹோட்டல் ஒன்றிலிருந்து அப்பொழுதுதான் வெளியே வந்திருந்தார். முறுகிய மசாலா தோசையையும், ஸ்பெஷல் காப்பியையும் ஒருகை பார்த்துவிட்டு, வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு நின்ற அவர் மனம் இன்பமான காலை வேளையிலே வம்பு பேச மிக ஆவலுடன் துடிதுடித்துக் கொண்டிருந்தது. இன்னொருவர், வீட்டிற்குச் சமையலுக்கு காய்கறிகள் வாங்கிவர அருகிலிருந்த மார்க்கெட்டிற்கு வந்திருந்தார். அவர் சமான்கள் வாங்கிக்கொண்டு சென்ற பின்புதான் அவருடைய சகதர்மிணி சமையலுக்கு ஏற்பாடுகள் செய்யத் துவங்க வேண்டும். அவசரமாக ஸ்நானம் செய்துவிட்டு, வண்ணானிடமிருந்த உடுப்புகளைத் தேடி, எடுத்து வைத்துக்கொண்டு, பாதி வெந்ததும் வேகாததுமாக மனைவி பரிமாறும் உணவைச் சூடு ஆறு முன்னே அவசரமாக விழுங்கிவிட்டு, ஆபீஸிற்கு ஒன்பது மணி பஸ்ஸைப் பிடிக்க, வண்டிகள் நிற்குமிடத்திற்கு ஓட வேண்டும். அவ்வளவு காரியங்கள் இருந்தும், அவர் நண்பரைக் கண்டதும் பல்லை இளித்துக் கொண்டு வம்பு பேசுவதிலே தன்னை மறந்து நின்று விட்டார்.

"என்னய்யா! கடைசியிலே இப்படித் தீர்ப்பாகி விட்டது? நேற்று ராத்திரி, பேப்பர் வாங்க நம்ப தெருக்

கடையிலே என்ன கூட்டம் போங்க! நம்ப சின்னப் பையன் முண்டியடித்துக் கொண்டு ஒரு பத்திரிகை வாங்கிக்கொண்டு வந்து விட்டான். அதைப் படிச்சு விட்டுத் தான் ராத்திரி வீட்டிலே எல்லோரும் தூங்கப் போனோம்" என்று சிரித்தார் வெற்றிலை பாக்கு ஆசாமி.

"எனக்கு நேற்று சாயங்காலம் ஐந்து மணிக்கே விஷயம் தெரிந்து விட்டது. ஆனாலும் தீர்ப்பு மிகவும் கடுமை யானது. நான் எதிர் பார்க்கவேயில்லை, ஜூரர்களில் ஒருவருக்கு மட்டும் அபிப்பிராயபேதம் இருந்ததாம் பாவம், ஸார்" என்று அனுதாபப்பட்டார் இரண்டாவது ஆசாமி.

"இந்தக் கேஸ் அந்த ஜட்ஜ் முன்னாலே விசாரிக்கப் படுகிறதுன்னு பத்திரிகையிலே படிச்ச போதே எனக்குத் தீர்ப்பைப் பற்றித் தெரியும். அந்த மனுஷன் பெரிய பச்சை மிளகாய் ஆச்சே! கேஸ் முடிவைப் பற்றி ஆச்சரி யப்படுவதற்கு என்ன இருக்கிறது!" என்றார் வெற்றிலை பாக்குக்காரர்.

"பாவம்' பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையாம், சின்ன வயசு, களை கொட்டும் முகம், கேட்க சகிக்கல்லை. கஷ்டமாக இருக்கு. தூக்குத் தண்டனை விதித்து விட்டார் கள்னு கேட்டதும், அந்தப் பையனுடைய தாயார் அலறி விட்டாளாம். கஷ்டம் ஸார், கஷ்டம்" என்று அனுதாபத் துடன் தலையை அசைத்தார் இரண்டாவது மனிதர்.

"குற்றவாளி மனோகரனைப் பற்றி அனுதாபப்படு கிறீர்களே! செத்துப் போனவரைப் பற்றி நினைச்சுப் பார்த்தேளா? அவனுக்கும்தான். தாய், தந்தை, அக்கா, தங்கை, அண்ணன், தம்பி எல்லா உறவினர்களும் இருப் பார்கள். அவர்கள் மனசு என்ன பாடுபட்டிருக்கும்?"

என்று விவாதித்தார் முதலாவது மனிதர், வெற்றிலைச் சாற்றைக் கீழே காறித் துப்பிவிட்டு.

"செத்துப் போனவனைப்பற்றி ஏனோ துளிகூட வருத்தம் ஏற்படவில்லை. அவன் மகா அயோக்கியனாம். உளதுவத்தி வியாபாரத்திலே ஏதோ கொஞ்சம் பணம் வந்து சேர்ந்ததும் அவன் பண்ணாத அட்டூழியங்கள் பாக்கியில்லையாம். பெரிய காமாதுரனாம். சமூகத்திலே உழல் செய்து கொண்டு திரிந்து கொண்டிருந்த அந்தப் பாவி போனதே நல்லதாயிற்று. இந்தக் கேஸிலே அந்த ஜூரர்களைத் தவிர நம்மைப் போன்ற வெளி மனிதர்கள் யாருக்காவது சஞ்சீவி இறந்து போனான்னு வருத்தமோ அனுதாபமோ, துளி இருந்ததா சொல்லுங்கோ! இப்படிப் பட்ட ஸ்திரீலோலன்களுக்குச் சரியான தண்டனை இப்படித்தான் வந்து சம்பவிக்கும்" என்றார் கோபத்துடன் இரண்டாவது மனிதர்.

"பேஷ்! நன்றாக இருக்கிறது உமது தீர்ப்பு! நீர் ஜட்ஜாக இந்தக் கேஸிற்கு உட்கார்ந்திருந்தால், இப்படி ஜட்ஜ் மெண்ட் எழுதி வைத்துவிட்டுப் போகலாம். நாம் யாரய்யா ஒரு உயிரை எடுக்க? கெட்டவன் என்கிற தற்காக ஒருத்தனுக்கு விஷத்தைக் கொடுத்து கொன்று விட நமக்கென்ன அதிகாரம்? சட்டத்தின் கண்களுக்கு நல்லவன், தீயவன் என்ற பேதமே கிடையாது. அநியாயம் யாருக்கு இழைக்கப்பட்டாலும் அதற்குத் தக்க தண்டனை வழங்க வேண்டியது அதனுடைய பொறுப்பு. போகட்டும் ஐயா. உணவுப் பஞ்ச காலத்திலே, இன்னொருத்தனும் உலகத்திலிருந்து ஒழியட்டுமே! நீர் ஏன் அவனுக்காக இப்படி உருகுகிறீர்?" என்று கேட்டார் முதலாவது ஆசாமி சிரித்துக்கொண்டு.

"தூக்குன்னு இப்போ தீர்ப்பாகி விட்டாலும், அப்பீல் என்று இருக்கிறதல்லவா? பார்க்கலாம்" என்றார் இரண்டாவது மனிதர்.

"அப்பீலில் மட்டும் எங்கே ஜெயிக்கப் போகிறான். ரொம்ப கஷ்டமான கேஸ் ஐயா!" என்றார் முதலாமவர்.

"இதுவரையிலே துரைசாமி வாதாடின கொலைக் கேஸ்களிலே இதுதான் முதல் தோல்வி. மனோகரனுக்கு துரைசாமி ஆஜராகிறார்னு கேட்டதுமே கேஸ் ஜெயிச் சுடும்னு பூரணமா நினைச்சுண்டு இருந்தேன். உங்களுக் குத் தெரியுமா ஸார் சமாசாரம்? மனோகரனது நண் பர்கள் சிலர், அவன் விடுதலை அடைந்துவிடுவான்னு பூரணமாக நம்பி, பூமாலையுடன் வெளியே காரில் காத்துக் கொண்டிருந்தார்களாம். இந்தப் பாழும் ஜூரர்கள், இப்படிக் கடைசியில் தலையில் கல்லைத் தூக்கிப்போடுவார்கள்னு யாரும் நினைக்கவே வில்லை. த்ஸோ! த்ஸோ!" என்று சூள் கொட்டினார் அவர்.

"யார் என்ன செய்ய முடியும்? சாட்சிகள் அவ்வளவு பலமாக எதிர்ப்பக்கத்திலே அமைஞ்சுவிட்டது. சரி ஐயா, காலை வேளையிலே கொலைகளைப் பத்திப் பேச்சு என்னத்துக்கு? ஆமாம் உங்க மூத்த பெண்ணுக்கு கோதண்டராமனது ஜாதகத்தைப் பார்த்தீங்களாமே! அந்த வரனைப்பற்றி என்னை முதல்லே ஒரு வார்த்தை விசாரிக்கப்படாதா! பொல்லாத மனுஷியாச்சே கோதண்டத்தின் தாயார்!" என்று, கொலையிலிருந்து கல்யாணத்தைப் பற்றிய வம்பில் பாய்ந்தார் வெற்றிலை பாக்குக்காரர்.

மூத்த பெண் என்றதும், தமது வீட்டின் ஞாபகம் ஏற்படவே, இரண்டாவது ஆசாமிக்கு அப்பொழுது தான் தாம் மார்க்கெட்டிற்கு வந்த நினைவு ஏற்பட்டது. "அதைப் பற்றிப் பிறகு பேசுகிறேன்" என்று ஒரே பாய்ச்சலில் அவர் காய்கறிக் கடையை நோக்கி ஓடினார்.

சற்றுத் தொலைவிலிருந்து வெற்றிலை பாக்குக்கடை யொன்றில் சிலர் நின்று கொண்டிருந்தனர். "சஞ்சீவி

கொலை வழக்கு. எதிரிக்குத் தூக்குத்தண்டனை, பாட்டுப் புத்தகம் காலணா!" என்று கூவிக்கொண்டு சென்றான் ஒரு பையன்- "ஏய்! இங்கே வா!" என்று அவனைக் கை தட்டி அழைத்து, காலணா நாணயத்தை நீட்டி, புத்தகத்தைப் பெற்றுக்கொண்டார் ஒருவர். "மாயாவின் சாட்சி'ன்னு கூட ஒரு பாட்டுப் புத்தகமிருக்கு. அதற்கு காலாணாதான் விலை. வேணுமா சாமி?" என்று கேட்டான் பையன். "சரி, அதையும் கொடு" என்று கேட்டு வாங்கிக் கொண்டார் அந்த மனிதர்.

"நேற்று சாயங்காலந்தான் தீர்ப்பு சொன்னார்கள். அதற்குள்ளே அதைப் பாட்டாகப் பாடி அச்சில் ஏற்றி, புத்தகமாக்கி விட்டானே அந்த ஆசாமி! எத்தனை விரைவில் கவிதை பிறக்குதய்யா இந்த நகரத்தில்!" என்று வியந்த மற்றொரு ஆசாமி, அவனது கையிலிருந்த புத்தகத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

"மூச்சு விடும் முன்னே முந்நூறும், ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ என்பது போல் கொலை, தூக்கு இதையெல்லாம் பற்றிக் கவிபாட ஆயிரக்கணக்கில் கவிஞர்கள் இருக்கிறார்கள். அந்த மனோகரனுக்கு நல்ல விளம்பரம் வந்து விட்டதய்யா! பாடல் பெற்றுவிட்டான். இனி அவனுக்கு என்ன குறை" என்று வேடிக்கையாகப் பேசிச் சிரித்தார் அவர்களில் ஒருவர்.

"கால் ரூபாய்க்குக் காதல் நவீனம், காலணாவுக்குக் கவிதைகள், எழுத்துலகம் இப்படியா கீழே இறங்க வேண் டும்! கஷ்டம்!" என்று பெருமூச்சுவிட்ட எழுத்தாளர் ஒருவர், அந்தப் புத்தகத்தைப் பார்க்கவும் பிடிக்காதவர் போல் முகத்தைத் திருப்பிக்கொண்டு அப்பால் சென்று விட்டார்.

புத்தகத்தைப் பிரித்து, சுவையுடன் பக்கங்களைப் புரட்டி மகிழ்ந்த ஆசாமி, சற்றுத் தூரத்திலே ஒரு டிராம்

வண்டி வருவதைக் கண்டு ஒரே பாய்ச்சலில் அந்தத் திக்கிற்கு விரைந்தார். வாழைப்பழத் தோலின் மீது பாதரக்ஷை வழுக்க, வேகமாக நகர்ந்து வண்டியைப் பிடிக்க முயற்சித்த அவர், சில விநாடிகளில் அதன் அடியிலே நசுக்குண்டு போக இருந்தார். ஆனால், எதிர்பாராத விதமாக வண்டியில் கண்டக்டர் அவருக்கு ஒரு கை கொடுத்து, உள்ளே இழுத்துப்போட்டு, வரவிருந்த பெரும் விபத்தைத் தடுத்துவிட்டார்.

"என்னய்யா! பார்த்து ஏறக் கூடாது? கொஞ்சம் தப்பியிருந்தா, செத்துப் போயிருப்பியே, இத்தனை நேரம்!" என்று கடிந்து கொண்டார் பிரயாணிகளில் ஒருவர்.

விபத்திலிருந்து தப்பிய மனிதர் கரத்திலிருந்த புஸ்தகத்தைக் கூர்ந்து கவனித்து விட்டு கண்டக்டர், புன்னகையுடன், "சரிதான், சஞ்சீவி கொலைக் கேஸ் பாட்டுப் புத்தகம் படிக்கிற ஜோர்லே, இப்ப டிராம் அடியிலே ஒரு கொலை நடக்க இருந்தது. இப்படிக் கொடு ஐயா பார்க்கலாம் அதை" என்றார்.

இதற்குள் அங்கிருந்தவர்களின் சம்பாஷணை அந்தக் கொலைக் கேஸின் மேல் திரும்பிவிட்டது. 'த்ஸோ த்ஸோ!' என்று அனுதாபப்படுகிறவர்களும், கையைத் தட்டி ஆர்ப்பாட்டமாக சஞ்சீவிக்குப் பரிந்து பேசுகிறவர் களும் போட்ட இரைச்சலும், சிரிப்பும் டிராம் வண்டிக்கு அந்த மாலை வேளையில் ஒரு தனி சோபையைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

நகரத்தின் மற்றொரு மூலையில் பெரிதாகக் காணப் பட்ட ஒரு பங்களாவில் சமையலறைக்கு முன்னிருந்த தாழ்வாரத்தில் ஒரு வயதான பாட்டியம்மாள் காலை நீட்டிக் கொண்டு ஓய்வுக்காக அமர்ந்திருந்தாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த வண்ணம் பத்திரிகையைப்

புரட்டிக் கொண்டிருந்த காலேஜ் யுவதியான தனது பேத்தியின் பக்கம் திரும்பி, "அப்படின்னா, அந்தப் பையனுக்குத் தூக்குப் போட்டு விடுவார்கள் என்று சொல்லு! பாவம், தாய்க்கு ஒரு பிள்ளையாமே? அவனை விடுதலை பண்ணியிருக்கப்படாதோ? செத்தவன் என்னவோ செத்து விட்டான். சின்னஞ்சிறு வயசான இந்தப் பையனைத் தூக்கிவிட்டால், போனவன் திரும்பியா வரப்போறான்" என்றாள் மிகவும் அனுதாபத் துடன்.

"தேவலையே நீங்க சொல்கிறது! அப்புறம் சட்டம்னு எதற்கு? நீதி, கோர்ட்டுன்னு எதற்கு? சின்ன வயது என்றோ, படித்தவன் என்றோ, பணக்காரன் என்றோ நியாயம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. விஷம் கொடுத்துக் கொன்னான்னு ருஜுவாகியிருக்கிறது. அதுக்கு எவ்வளவு தண்டனை கொடுக்க வேண்டுமோ அதை நீதிபதி கொடுத்திருக்கிறார். இதுதான் பாட்டி சட்டம்" என்று தலையை அசைத்து அழுத்தமாகப் பேசினாள் பேத்தி.

அதிருப்தியுடன் பாட்டி முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள். "சட்டம் குட்டிச் சுவராய்ப் போச்சு, போ சாட்சிகள் எல்லாம் நிஜத்தைச் சொல்றான்னுள்ளு யார் கண்டது. வேணும்னு கட்சி கட்டிக் கொண்டு அத்தனை பேரும் புளுகியிருப்பான்கள், மனோகரன் விஷத்தைக் கொடுத்த போது எவனாவது கண்ணால் பார்த்தானா? ரொம்ப அக்கிரமம்! அந்த வயசான தாயாருக்காகவாவது விடுதலை பண்ணியிருக்கலாம். அவள் வயிறு எப்படிக் கொதிச்சிருக்கும்!" என்றாள் கோபத்துடன் பாட்டி. மனோகரனுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையைக் கேட்டதிலிருந்து அவளுக்கு சட்டத்தின் மீது ஒரே கோபம்.

"தேவலை பாட்டி, நீங்கள் பேசும் நியாயம். மனோ கரன் விஷத்தைப் பொட்டலத்திலிருந்து பிரித்து காப்பி

டம்ளருக்குள் கொட்டியதைப் பக்கத்திலிருந்து பார்த் திருந்தால் தான் சாட்சி கூறலாம் என்கிறீர்களோ? கொலை நடந்ததை யாரும் கண்ணால் பார்த்திருக்க முடியாது. ஊகத்தினாலும் போதிய சாட்சிகளாலும் தான் ஜூரர்கள் தங்கள் அபிப்பிராயத்தை முடிவு செய்ய முடியும்" என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள் அந்த யுவதி.

"என்னவோ உலகம் வரவர ரொம்ப கெட்டுக் கிடக்கு. என் ஆயுசிலே இந்த மாதிரி கேட்டதுமில்லை. நடந்தது மில்லை. காலங்கார்த்தாலே கேட்கிற சமாசாரம் இப்படியா இருக்கணும்? சிவ சிவா!" என்று தனக்குள்ளே முணுமுணுத்த பாட்டி எழுந்து பூஜை அறைக்குள் சென்று விட்டாள்.

பங்களா வாயிலின் முன்புறத்தில் வளர்ந்திருந்த பெரிய வேப்ப மரத்தடியில் ஒரு வேலைக்காரி, வெற்றி லையை மென்று கொண்டு உல்லாசமாக உட்கார்ந்திருந் தாள். "அடி! என் ராஜாத்தி! நீ இங்கேயா இருக்கிற? உள்ளாரே காணுமேன்னு தேடிக் கண்ணு பூத்துப் போச்சுதே, அந்த வெத்திலையிலே ஒண்ணு உன் தங்கக் கையாலே சுண்ணாம்பு தடவி இப்படிக் கொடு, பார்க்க லாம்" என்று பங்களா வேலைக்காரன் பரிகாசமாகப் பேசிக்கொண்டு கண்களைச் சிமிட்டிக்கொண்டு அருகில் வந்து நின்றான்.

தனது அகன்ற விழிகளை ஒருமுறை சரசமாகச் சுழற்றிவிட்டு, சிவந்த உதட்டிலே ஒரு விஷமப் புன்ன கையை வரவழைத்துக் கொண்ட அவள், "இனி மேலே என் கிட்டக் கொஞ்சம் ஜாக்கிரதையாத்தான் பேசு. இந்த மாதிரி சரசமெல்லாத்தையும் உட்டுடு. என் மாமன் மகன் ஊரிலிருந்து வந்திருக்கு. அது காதிலே பட்டு துன்னா, உன்னைச் சும்மாவுடாது" என்றாள் அவள்.

"அது யாரவன் உன் மாமன் மகன்? இந்த ராஜாத்தி கிட்ட இந்த கந்தசாமிக்கு இருக்கிற ஆசைக்கு, மாமன் மகனும் அத்தை மகனும் ஒண்ணும் செஞ்சுக்க முடியாது, கட்டிக்கப் போகிற புருஷன்கிட்ட பேசுகிற பேச்சைப் பார்! வெற்றிலையை எடு" என்று உரிமையுடன் மிகவும் பாசமாக அவள் கையைத் தொட்டு, வெற்றிலை வாங்கிக் கொண்டான்.

"உனக்கு ஆசை ஆயிரம் இருக்கும். மாமன் மகனுக்குத் தானே கட்டிக்க உறவு இருக்கு? நீ இப்படி என்கிட்ட வாலை ஆட்டினியோ, அது உன் கழுத்தைச் சீவிவிடும் சீவி" என்று கழுத்தை வெட்டுவது போல் ஜாடை காட்டி விட்டுச் சிரித்தாள் அவள்,

"சீவிட்டா சும்மா உட்டுடுவாங்க! இப்போ அந்த ஐயாவுக்கு நேர்ந்திருக்குதே அது போல உன் மாமன் மகனும் தூக்குக் கயிற்றிலே தொங்கணுமாக்கும்! சும்மா ஒண்ணும் கந்தசாமியைப் பயமுறுத்தவாணாம்" என்றான் அவனும் பதிலுக்குப் பரிகாசமாக.

"ஆமாம் மச்சான்! இப்போ அந்த பொம்பளை என்ன செய்வாளாம்! மனோகரனைத் தூக்கிலே போட்ட பின்னாடி அவ என்ன செய்வாள்? அவரு மேலே ரொம்ப ஆசையா இருந்தாளாமே" என்று விசாரித்தாள் அவள் கவலையுடன்.

"இந்தப் பொம்பளைகள் மனசுதான் ஒரு குரங்கு ஆச்சே! இந்த மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குக் குரங்கு தவறாப்பல, இந்த மனோகரன் போனா, இன்னொரு ஆசாமி அவளைக் கட்டிக்க இருக்கவா மாட்டான்?" என்று சூள் கொட்டினான் அவன்.

"இந்தா! அப்படி ஒரு பேச்சு பேசினியோ, தெரியுமா? பொம்பளைகளைப் பத்தி அவதூறு பேசாட்டி உனக்குப் பொழுதே போவாதே. பாவம் அந்தப் பொண்ணு. மாயா!

அவ என்ன செய்வா? தான் ஆசை வச்சிருந்த மனுஷன் இன்னொருத்தனை, கொலை செஞ்சுட்டான்னா அவ என்ன செய்ய முடியும்? மரண தண்டனை போட்டுட்டாங்கன்னு தெரிஞ்சதும் அப்படியே மயக்கம் போட்டு விழுந்திடுச்சாம். அவங்க வீட்டு வேலைக்காரி எனக்கு சொன்னா. நீ இப்படிப் பொம்பளைகளை இழிவாகப் பேசினீன்னா உன் முகத்திலே கூட இனிமே முழிக்க மாட்டேன், ஆமாம்!" என்று கூறிவிட்டு, கோபத்துடன் எழுந்திருந்தாள்.

"யாரோ செத்தான், எவனுக்கோ தூக்கு. எந்த பொம்பளையோ மயங்கி விழுந்தாள்னா நமக்கு என்ன! விட்டுத் தள்ளு, இந்தப் பேச்சை! கோவிச்சுக்காதே, சும்மா அப்படிச் சொல்லி உன்னை வேடிக்கைப் பார்த்தேன். இப்படி உட்கார். எங்கே புறப்பட்டுட்டே?" என்று கூறிக்கொண்டு அவள் கரத்தைப் பிடித்துத் தன் அருகில் அவளை அமர்த்திக் கொண்டான்.

சஞ்சீவி கொலைக் கேஸில் வழங்கப்பட்ட தீர்ப்பு இவ்வாறு நகரம் முழுவதும் பலரது வாயில் பலவிதமான உருவத்துடன் அகப்பட்டுக்கொண்டு சின்னா பின்னா மாகிக் கொண்டிருந்த அது சமயம், சிறைச்சாலையில் தனது அறைக்குள்ளே சுவரைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் மனோகரன். சற்று முன்புதான் அவனது வக்கீலும் அவனது பெற்றோர்களும் அவனைப் பார்த்துப்போக வந்திருந்தினர். வயோதிகத்தினால் சற்றுத் தளர்ந்திருந்த தனது தந்தை முதல்நாள் தீர்ப்பைக் கேட்ட பின் ஒரே இரவில் தொண்டுக் கிழவராகி விட்டார் போல் அது சமயம் அவன் கண்களுக்குத் தோன்றினார். அதிகமாக எதுவும் அவரால் பேச முடியவில்லை என்பதை அவர் முகம் அறிவித்தது.

"எவ்வளவோ உன்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். தெய்வம் சதி பண்ணிவிட்டது. என் மகனுக்கா கொலைகாரன்னு பட்டம்!" என்று நாத்தடுமாற அவர் முனகிவிட்டு உணர்ச்சி வேகத்தில் கீழே விழுந்து விடாவண்ணம் சுவரில் சாய்ந்து கொண்டு நின்றார்.

அதைக் கேட்ட மனோகரனது இருதயம் இரண்டாக வெடித்துவிடும் போல் துயரத்தில் குமுறியது. புருஷனுக்குப் பின்னால் தயங்கிக் கொண்டு உள்ளே வந்து தாயாரால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க இயலவில்லை.

"என் துரையே! ஐயோ! என் தலையில் கல்லைப் போட்டுட்டியே!" என்று அவனைக் கண்டதும் வாய் விட்டுக் கதறியழுது விட்டாள். அவள் இரவு முழுவதும் தூங்கவில்லை. அழுத வண்ணமாக இருந்தாள் என்று அவளது வீங்கிய முகமும், சிவந்த கண்களும் விளக்கிக் கொண்டிருந்தன. தன் பொருட்டு தாய்பட்ட வேதனைக் காண மனோகரனால் சகிக்கவே முடியவில்லை. தாய் தந்தை மகன் அந்த மூன்று பெயர்களுக்கும் அந்தத் துயரமான சமயத்தில் பேசுவதற்கு சங்கதி ஏதும் இருக்கவில்லை, 'நேரமாகி விட்டது' என்று வார்டர் எச்சரித்தவுடன் கனவினின்று திடுக்கிட்டு விழித்தவள் போல் அவனது தாயார், பதட்டத்துடன் தன் மகன் முகத்தை ஏக்கமாகப் பார்த்தாள். "வயிறு செய்த பாவம்! உனக்கு இந்தக் கஷ்டம் வந்தது" என்று நாத்தடுமாறப் பேசிய அவள் மகனைப் பிரிய மனமில்லாதவள் போல் அணைத்துக் கொண்டு உடல் குலுங்க அழுதாள்.

"அ'ம்மா! அம்மா!" என்று அரற்றிய மனோகரனும் சிறு குழந்தை போல் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறி விட்டான். இந்த உருக்கமான காட்சியைப் பார்க்கப் பயந்தவர் போல் வக்கீல் மெல்ல முகத்தை அப்பால்

திருப்பிக் கொண்டார். மெல்ல அவளை அந்த அணைப் பிலிருந்து பிரித்து அழைத்துக்கொண்டு, தள்ளாடியபடி தந்தை வெளியே சென்றார். கண்களைத் துடைத்துக் கொண்டு மனோகரன் தாயார் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு நின்றான், 'ஈன்ற பொழுதினிலும் பெரிதுவப்பாள் தன் மகனைச் சான்றோர் எனக்கேட்ட தாய்' என்ற தெய்வப் புலவரின் வாக்கு அவனது ஞாபகத் திற்கு வந்தது. பெற்ற தாய் மனம் மகிழ நல்ல காரியங்கள் ஏதும் செய்யா விட்டாலும், அவன் அவனது கிழத்தாயா ருக்குச் செய்துள்ள அபசாரம் எவ்வளவு பெரிது! தள்ளாத வயதிலே அவளுக்குத் தீராத துக்கத்தையும் அவமானத்தையும் அல்லவா கொண்டு வந்து கொடுத்திருக்கிறான்?

-இவ்வாறு எண்ணிய மாத்திரத்தில் அவன் கண்களில் நீர் மல்கியது. துக்கம் நெஞ்சைப் பிளந்தது. 'அம்மா! என்னை மன்னியுங்கள். அடுத்த ஜென்மத்திலாவது இந்தப் பாவத்திற்கு ஈடுசெய்து விடுகிறேன்' எனத் தனக்குள் முனகிக் கொண்டான்.

அதற்குள் அறைக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டு பொழுதைக் கழித்த அவனுக்கு நிமி ஷம் யுகம் போல் பயங்கரமாக நீண்டு காணப்பட்டது. "தூக்குத்தண்டனை என்று தீர்மானம் செய்துவிட் டார்கள். இன்னும் ஏன் தாமதம்? சட்டென்று தண்ட னையை நிறைவேற்றித் தொலைப்பதுதானே வெளியில் இருந்துகொண்டு தண்டனையை எதிர்நோக்கிக் காலங் கழிக்கும் படி குற்றவாளிக்கு இந்தச் சித்திரவதை வேறு ஏன்?" எனத் தனக்குள்ளே எண்ணி ஆத்திரப்பட்டான். வராந்தாவிலே காலடி ஓசை கேட்கும் பொழுதெல்லாம், இவ்வளவு துன்பச் சிந்தனைகள் நடுவிலே அவனது கண்கள் அவனையறியாது ஆவலுடன் கதவின் பக்கம் திரும்பிப் பார்த்தவண்ணமிருந்தன.

"கட்டாயம் மாயா வருவாள். இந்த சமயத்தில் வந்து பார்த்து ஆறுதலாக இரண்டு வார்த்தைகளாவது சொல்ல அவள் நிச்சயமாக வருவாள். அவள் என்ன செய்வாள். எதிராகச் சாட்சி சொல்லும்படி சந்தர்ப்பம் அவ்வாறு அமைந்துவிட்டது. சாட்சி கூறுகையிலே ஒரு சமயம் அவன் முகத்தை அவள் எவ்வளவு ஏக்கத்துடன் பார்த் தாள். மரணதண்டனை என்பதைக் கேட்டதும் அவள் உள்ளம் வெடித்துப் போய்க் குமுறி அழுதிருப்பாள், மாயா அவனை எவ்வளவு நேசித்தாள்? பாவம், இந்தக் கொலைக் கேஸினால், வீணாகப் பலரது பழிப்புக்கும் ஆளாகி, அவள் வருந்தும்படி நேரிட்டது. எவ்வளவோ கௌரவமாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து கொண் டிருந்தவள், அவன்மீது அன்பு கொண்டதால் அல்லவா, இவ்வளவு பழிச்சொல்லுக்கும் இலக்காக நேர்ந்தது?" -என்று தனக்குள் பலவாறு எண்ணி, வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

சில தினங்கள் சென்ற பின்பு ஒருநாள் மாலை 'கரக் கரக்' என்று வார்டனின் பாதரக்ஷைகளின் சப்தம் வராந்தா அருகிலே கேட்டது, மனோகரன் திடுக்கிட்டுக் கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

"உங்களைக் காண ஒரு அம்மா வந்திருக்காங்க" என்றார் வார்டர்.

மனோகரனது இருதயம் ஆவலினால் படபடவென்று அடித்துக்கொண்டது. துயரமும் சந்தோஷமும் ஒருங்கே எய்தியவனாக மிகவும் பதட்டமாக எழுந்திருந்து கதவருகில் வந்தான். கதவைத் திறந்து உள்ளே வழிவிட, மெல்ல உள்ளே தயக்கத்துடன் வந்த பெண்மணியைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"நீங்களா?" என்று வியப்புடன் கேட்டு விழித்தான் அவன்.

என்னவெல்லாமோ பேசவேண்டும் என்று முன் கூட்டியே யோசித்துக் கொண்டுதான் வந்திருந்தாள் விஜயா. காந்திமதியம்மாளுக்கு உடல்நிலை சிறிது குணமானதும், அமிர்தமும் அவளுடைய இரு பெண்களும் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். தமயந்தி மட்டுமே சூரியகாந்தத்தில் தன் பெரிய தாயாருக்குப் பணி விடைகள் செய்யும் நிமித்தம் கிராமத்திலே தங்கி விட்டிருந்தாள்.

நகரத்திற்குத் திரும்பி வந்த விஜயா, மனோகரனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது என்ற செய்தியைப் பத்திரிகைகளில் கண்டதும் துடித்துப்போய் விட்டாள். தண்டனை நிறைவேறும் முன் உயிருக்கு மேலாகத் தான் நேசித்த அன்பனை ஒரு தடலவ கண்டு ஆறுதல் கூறாவிடில் அவள் மனத்திலே அமைதியே ஏற்படாது போல் ஒரு தீவிரமான துடிப்பும் ஏக்கமும் ஏற்பட்டன. விஜயாவினால், தன் துயரத்தை மனத்திற்குள்ளேயே அடக்கி வைத்திருக்க முடியவில்லை. ஆகவே, அவள் தன் தாயார் அமிர்தம்மாளிடம் தான் மனோகரன் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றிக் கொஞ்சமும் ஒளிக்காது ஒரு நாள் கூறிவிட்டாள். அமிர்தம்மாள் இப்பொழுது ஒரேயடியாக மாறி விட்டிருந்தாள். ஆதலினால் தன் மகளின் காதல் விஷயம் அவள் உள்ளத்தைக் மிக்க வேதனை செய்தது. விஜயாவின் வேண்டு கோளை ஒரேயடியாகப் புறக்கணிக்க முடியாது, அவள் மகளுடன் சென்னைக்கு மனோகரனைக் காணப் புறப்பட்டாள்.

"என்னால் நம்பவே முடியவில்லை. நீங்கள் என்னைக் காண இங்கே வருவீர்கள் என்பதைக் கனவில்கூட நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் மனோகரன், நன்றி உணர்ச்சி மேலோங்கிய நடுங்கும் குரலில்.

"உங்களைப் பார்க்க அனுமதி வாங்க மிகவும் சிரமமாக இருந்தது. அண்ணன் கம்பெனியில் வேலை செய்யும் மானேஜர் உதவியால் ஒருவாறு என் ஆசை கைகூடியது. உங்களை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தேன்" என்றாள் விஜயா பதிலுக்கு. துயரத்தினால் அவள் குரல் கம்மியது.

மனோகரனுக்கு என்ன கூறுவது என்றே விளங்கவில்லை. தன்னைப் பார்க்க தேவநகரிலிருந்து அவள் சென்னைக்கு வந்திருப்பதைக் கண்டு ஆச்சர்யமும் பச்சாதாபமும் ஒருங்கே எய்தியவனாக வாளா இருந்தான்.

"மிஸ்டர் மனோகரன்! தீர்ப்பு எவ்வாறு இருந்த போதிலும், நீங்கள் நிரபராதி என்பதை பூரணமாக நம்புகிறேன்" என்று துக்கத்துடன் திணறினாள் விஜயா. அதைக் கூறி முடிக்குமுன் அவளது கண்கள் நீரால் நிறைந்து கொண்டன.

மனோகரனுக்கு அதைக் காண மனத்தை என்னவே செய்தது, உணர்ச்சிகள் அவனது தொண்டையைப் பிடித்துக் கொண்டன. முடிவில் சிரமப்பட்டு "மிஸ் விஜயா! உங்கள் வார்த்தைகள் என் மனத்திற்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது என்று வார்த்தைகளால் சொல்லவே முடியாது. என்னிடம் நீங்கள் காட்டும் இந்த நட்பிற்குப் பிரதியாக ஏதும் இதே ஜன்மத்தில் என்னால் செய்வதற்கில்லை என வருந்துகிறேன்" என்றான் நாக்குழற.

விஜயா என்னவோ பேச வாயைத் திறந்தாள். அவளது உதடுகள் மட்டும் துடித்தன. வார்த்தைகள் நெஞ்சை விட்டு எழும்ப மறுத்தன. கண்களில் நீர் தாரையாக வழிந்தது. அதற்குள் வார்டர் 'நேரமாயிற்று என்று எச்சரிப்பது போல் இருமும் சப்தம் கேட்கவே, கூற

வந்ததைக் கூறாமல் அவள் மௌனமாக விடை பெற்றுக் கொண்டாள்.

விஜயாவின் துயரத்தைக் கண்டு மனோகரன் உள்ளம் மிகவும் நெகிழ்ந்து போனான். முத்துக்களைப் போல் உருண்டு கன்னங்களின்று வழிந்து அவளது புடவையை நனைத்த கண்ணீரைக் கண்டு அவன் கலங்கிப் போனான். ஆறுதலாக ஏதோ கூறவேண்டுமென்ற உணர்ச்சி வேகத்தில் அவள் பின்னாலேயே நடந்து கதவுவரை வந்து விட்டான். அதற்கு அப்பால் அவன் வெளியே போக முடியாது என்பதை நினைவுறுத்து கிறவன் போல் வார்டர் தனது கரத்தை நீட்டினான். மனோகரன் தனது நிலையை உணர்ந்து கொண்டு துயரத்துடன் திரும்பி உள்ளே சென்றான். மறு நிமிஷம் பலம் பொருந்திய இரும்புக் கதவுகள் பெரும் சப்தத்துடன் சாத்தி பூட்டப்படும் சப்தம் கேட்டது.

வெளியே தனக்காகக் காரிலே காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அமிர்தம்மாள் பக்கத்திலே ஏறி உட்கார்ந்து கொண்டாள் விஜயா. கார் சிறைச்சாலை வாசலை விட்டு வேகமாக வெளியேறியது. சிறிது நேரம் மௌனமாக இருந்த விஜயா தாயின் பக்கம் திரும்பி "அம்மா? அப்பீலில் மனோகருக்கு தண்டனை குறைக்கப் பட்டால், நம் குலதெய்வத்துக்குப் பன்னீர் அபிஷேகம் செய்து வைத்து விடுவதாக வேண்டிக் கொண்டிருக் கிறேன்? நீங்களும் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்றாள் மிகவும் மெல்லிய குரலில். அதைக் கூறி முடிக்கு முன் அவளது கண்களில் முத்துக்களைப்போல் மீண்டும் கண்ணீர்த் துளிகள் உதிர ஆரம்பித்தன.

தியாகராஜன் கைப்பெட்டியைத் திறந்து மாயா அளித்த பரிசான காஷ்மீர் சால்வையை எடுத்துக் குளிருக்கு அடக்கமாகப் போர்த்திக் கொண்டு ஜன்னல் அருகே உட்கார்ந்து கொண்டான். அந்த உயர்ந்த வகுப் புப் பெட்டி அவனைத் தவிர, வேறு மூன்று பிரயாணி களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. வண்டி புறப்பட சில நிமிஷங்களே தான் இருந்தன. வெளியே ஸ்டேஷனில் காணப்பட்ட ஜனத்திரளில் அந்த மூன்று பிரயாணிகள் யாராக இருக்கக்கூடுமென்று அவனால் ஊகிக்க முடிய வில்லை. சிறுதுநேரம் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, மிகவும் அலுப்புடன் படுக்கை யில் சாய்ந்து கொண்டான். முன்பின் பார்த்திராத அந்த பிரயாணிகள் மீது அவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"முன்கூட்டியே உயர்ந்த வகுப்புப் பிரயாணச் சீட்டு களை வாங்கித் தயாராக வைத்துக் கொண்டிருந்ததால் தான் என்ன? வண்டி புறப்பட சில நிமிஷங்களுக்கு முன்பு வந்து தங்கள் ஆசனங்களில் அமர்ந்து கொண் டால், உயர்ந்த வகுப்பின் கௌரவம் குறைந்தா போய் விடும்? முதல் மணி அடித்த பின்பு, மூச்சுத் திணற ஓடி வந்து, தடால் என்ற சப்தத்துடன் கதவை அவசர மாகத் திறந்து, பெட்டிகளைக் கிறீச் என்ற கோர முழக்கத் துடன் கூலியாள் உள்ளே தள்ள, மூட்டைபோல் ஆசனத் தில் வந்து விழுவதனால் கூடப் பிராயணம் செய்யும் மற்றவர்களுக்கு எவ்வளவு இடைஞ்சலாக இருக்கும்

என்று நினைப்பதேயில்லை. என்ன மனிதர்கள் இவர்கள்" என்று தனக்குள்ளே சிறிது கோபத்துடன் சிந்தித்த வண்ணம் கண்களை மூடிக்கொண்டான் அவன்.

மாயாவிடமிருந்து வந்த கடிதம் அவனுக்குக் காலை யிலேயே கிடைத்திருந்தால் இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு ரயிலில் பிரயாணம் செய்ய வந்திருக்க மாட்டான். உயர்ந்த வகுப்புப் பிரயாணச் சீட்டுகளில் ஒன்றே தான் மீதியிருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் சென்று ஸ்டேஷனுக்கு வந்திருந்தால் அந்த ஒன்றும் தியாகராஜனுக்குக் கிடைத்திருக்காது. ஆபீசை விட்டு வெளியே கிளம்ப எழுந்த சமயந்தான் பாழும் ஆபீஸ் பையன் மாயாவின் கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். சற்று முன்னதாகக் கொடுத்திருந்தால், தியாகராஜன் அவளைக் காண விமானத்தில் அல்லவா பறந்து போயிருப்பான்! கடிதத்தின் உறையைக் கிழிக்கு முன்பே அவனது உள்ளம் அலை பாய்ந்தது. மாயா முத்துக்களை நிகர்த்த எழுத்துக்களில் நீலநிறக் காகிதத் தில் சில வரிகளே எழுதியிருந்தாள்.

"அன்பரே! இந்தப் பயங்கரமான கேஸ் நம்மை இதுவரை பிரித்து வைத்திருந்தது. இனி மரணம் கூட நம்மைப் பிரிக்க முடியாது. தங்களைக் காண வேண்டும் என்ற ஆசையினால் என் கண்களும் மனமும் துடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கடிதம் கண்டதும் தாமத மின்றி பறந்தோடி இங்கே வருவீர்களென எதிர்பார்த்து ஒவ்வொரு க்ஷணமும் காத்திருப்பேன்!"

கடிதம் மூலம் வந்த மாயாவின் குரல், காந்தம் இரும்பை இழுப்பது போல் பலமாக அவனை சென் னைக்கு இழுத்தது. ஆபீஸினின்று அவசரமாகக் கிளம்பிய அவன், முதலில் "வருகிறேன்" என்று சுருக்கமாக ஒரு தந்தியை அவளுக்கு அனுப்பினான். பிறகு தான் தங்கி

யிருந்த வீட்டிற்குச் சென்று தேவையான சாமான்களைச் சேகரித்துக்கொண்டு அந்திப் பொழுது அங்கிருந்து கிளம்பும் வண்டிக்குப் புறப்பட்டு விட்டான்.

கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த அவன், நீலநிறக் கடல் பாரீஸ் நகரம் என்று கற்பனை உலகில் மாயாவுடன் எங்கெங்கேயோ சுற்றிக் கொண்டிருந்தான். "கூஜாவை இப்படிக் கொடுங்கள்!" என்று கீச்சுக் குரலில் கதவு அருகில் யாரோ ஒரு பெண்மணி இரைந்து கத்தி னாள். மறுநிமிடம் தடால் என்று கதவு திறக்கப்பட்டது. கூலியாள் பெட்டி படுக்கைகளைக் கரகரவென்ற சப்தத்துடன் இழுத்து உள்ளே தள்ளினான், தியாக ராஜனது இன்பக் கனவுகள் கலைந்தன. திடுக்கிட்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு இரண்டாவது மணி அடிக்கும் தறுவாயில் அவசரமாக வண்டிக்குள்ளே ஓடி வந்து ஏறிக்கொண்ட அந்தப் பிரயாணிகளை ஓரக் கண்ணால் வெறுப்புடன் கவனித்தான்.

இருபது வயதிற்கு மதிக்கும் இளம் பெண் ஒருத்தி அவள் தான் கூஜாவைப் பற்றி அவ்வளவு உரத்த குரலில் கிறீச்சிட்டு அலறியவள். வண்டிக்குள் ஏறியதும் ஏறாதது மாக வெள்ளிக் கூஜாவைத் திறந்து வெள்ளி டம்ளரில் தண்ணீரை விட்டு நிரப்பி தன் அருகே வந்து அமர்ந்து கொண்ட வாலிபனிடம் கொடுத்தாள். அவன் அவளது கணவனாக இருக்க வேண்டும் என்று தியாகராஜன் தனக்குள்ளே ஊகித்துக் கொண்டான். பாலைவனத்திலே பல நாட்கள் திரிந்து களைத்து விட்டவன் போல் அவன் தண்ணீரை வாங்கி, 'கடகட'வென்ற பெரும் சப்தத்துடன் குடித்துப் பெருமூச்சுவிட்டான். தியாக ராஜன் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு காஷ்மீர் சால்வையை நன்றாகத் தலை மீது இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்கையில் சாய்ந்து கொண்டான். அவன் படுத்திருந்த ஆசனத்தின் மீது விளக்கு மறைப்பினின்று

எழுந்த பெரும் நிழல் ஒன்று விழுந்து வெளிச்சத்தை மறைத்துக் கொண்டிருந்ததால், அவனை அந்த இரு பிரயாணிகளும் கவனிக்கக்கூட இல்லை. படுத்திருந்த படியே, ஓரக்கண்ணால் மேலும் அவர்களை தியாக ராஜன் ஆராய்ந்தான்.

அந்தப் பெண் கிறீச்சென்ற பயங்கரமான குரல் கொண்டிருந்தாலும் பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகர மானவளாகத்தான் இருந்தாள். ஜன்னல் மீது படிந்திருந்த அவளது வலது கையை முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரை, நானாவித வர்ண வளையல்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. தியாகராஜனுக்குச் சட்டென்று விஷயம் விளங்கி விட்டது. கர்ப்பிணியான அந்தப் பெண் தன் கணவனுடன் பிறந்தகத்திற்குப் பிரசவத்திற் காகச் சென்று கொண்டு இருந்தாள். ஒரு சமயம் கதவு ஓரத்தில் நின்று கொண்டு கூலிக்காரனுக்குச் சில்லறை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்த வயோதிக மனிதர் அந்தப் பெண்ணின் தந்தையாக இருக்க வேண்டும் எனத் தனக்குள்ளே எண்ணமிடலானான்.

இதற்குள் இரண்டாவது மணி அடித்துவிட்டது. வண்டி சோம்பலினால் படுக்கையினின்று ஏழ மன மின்றி உடலை நெளித்துக்கொள்ளும் சிறுவனைப்போல் உடலை லேசாக வளைத்துக் கொண்டு ஸ்டேஷனை விட்டு மெல்லக் கிளம்பியது. தியாகராஜனது ஊகம் சரியானது என்று நிரூபிக்கிறவள் போல், அந்தப் பெண், கதவுப் பக்கம் திரும்பி அப்பா! இங்கே வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள். இந்தக் குளிர் காற்று உங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது" என்று அழைத்தாள். ஸ்டேஷனை விட்டு வெளியேறி விட்டதனால் 'ஓ' வென்ற கூச்சலுட னும் தனக்கு உரித்தான குலுக்கலுடனும் வண்டி வேக மாக ஓடிக் கொண்டிருந்தது. மகளின் வேண்டுகோளை மீற முடியாதவராக கதவருகில் நின்று கொண்டிருந்த

அந்த வயோதிகர், உள்ளே திரும்பினார். விளக்கின் வெளிச்சம் அவரது முகத்திலே பளிச்சென்று பட்டது. நரைத்துப் போன சிறு உச்சிக் குடுமி. தீர்க்கமான நீண்ட மூக்கு. மெலிந்த உதடுகள், தீக்ஷண்யமான கண்கள் என அவரது முகத்தை விரைவில் ஆராய்ந்து கவனித்த தியாகராஜன் திடுக்கிட்டுப் போனான். அந்த முகம் எங்கேயோ பார்த்த ஒரு முகமாக அவனுக்குத் தோன்றி யது. கண்களை இறுக மூடிக்கொண்டு சிறிது நேரம் யோசித்தான்.

விரைவில் அவனுக்கு அது யார் என்று விளங்கி விட்டது! உச்சிக் குடுமியை மறைக்க, ஒரு வெள்ளைத் தலைப்பாகையும், கம்பளிச் சட்டைக்குப் பதில் நீண்ட கறுப்பு அங்கியையும் தன் கற்பனையிலே அந்த வயோதி கருக்கு அணிந்து பார்த்துக்கொண்ட பிறகு அவர் யார் என்பதைப் புரிந்து கொண்டான்.

சஞ்சீவி கொலை வழக்கிலே, மனோகரனுக்காக வாது செய்து தோல்வியுற்றிருந்த வக்கீல்தான் அவர். "வட தேசத்தில் வாழ்க்கைப்பட்டிருந்த தமது மகளைப் பிறந்த கத்திற்கு அழைத்துப் போக வந்தவர் போலும்!" என்று தனக்குள்ளே மெல்லக் கூறிக் கொண்டான். தொண்டை யைக் கணைத்து ஒரு முறை இருமிவிட்டு, கம்பளியை நன்றாக இழுத்துக் கழுத்தின் மீது சுற்றிக் கொண்டு, மகளும் மருமகனும் உட்கார்ந்திருந்த ஆசனத்திற்கு அருகே வந்து அமர்ந்து கொண்டார் அவர். "மாயாவை அவ்வளவு குறுக்குக் கேள்விகள் கேட்டு அவளது மென்மையான மனத்தை நோகச் செய்தார்! இரக்கமற்ற கல் நெஞ்சன்!" என்று அவரைத் தனக்குள்ளே கடிந்து கொண்டு வெறுப்புடன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு தூங்கும் பாவனையில் இருந்தான் தியாக ராஜன்.

வண்டி அடுத்த ஒரு சிறு ஸ்டேஷனில் நின்றுவிட்டு மீண்டும் கிளம்பியது. அதுவரை மௌனமாக இருந்த வக்கீலின் மருமகன், "என்னாலே நம்பவே முடியவில்லை. குற்றவாளி சார்பில் நீங்கள் வாதிக்கப் போவதை அறிந்ததும் அந்த வாலிபன் விடுதலை அடைந்து விடுவான் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தேன். கேஸின் முடிவைக் கேட்க மனது மிகவும் கஷ்டப்பட்டது" என்றான்.

"அப்பா இது வரை எடுத்துக்கொண்ட கொலைக் கேஸ்களில் அப்பா பக்கம் தோற்றுப் போனது இது தான் முதல் தடவை. சங்கதியைப் பேப்பரில் படித்த பிறகு எனக்கு அன்று பூராவும் சாப்பிடக் கூடத் தோன்ற வில்லை. மிகவும் வருத்தமாக இருந்தது. குற்றம் சாட்டப் பட்டவன் நிரபராதியென்ற நம்பிக்கை அப்பாவுக்கு ஏற்பட்டால் தான் அவன் பக்கம் வாதிக்க ஒப்புக் கொள்வார். இல்லாவிட்டால் லக்ஷரூபாய் வருவதானாலும் ஒத்துக் கொள்ளவே மாட்டார்" என்று தந்தையின் புகழைப் பாடினாள் அந்தப் பெண் தொடர்ந்தாப்போல.

மருமகன் தொண்டையைக் கணைத்துக் கொண்டு தாழ்ந்த குரலில், "ஒன்று உங்களைக் கேட்க வேண்டு மென்று காலையிலிருந்து ஆவலாக இருந்தேன். ஆமாம், உண்மையில் அந்த மனோகரன் நிரபராதி என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று வினவினான்.

வக்கீல் தொண்டையைக் கணைத்துக் கொண்டு நியாய சபையில் ஜூரர்களைப் பார்த்துப் பேசும் தோரணையில் தம்மைச் சுற்றிலும் ஒரு முறை கவனித்தார். வண்டியிலிருந்த மற்றொரு பிரயாணி, நன்றாகப் போர்த்திக் கொண்டு, ஆழ்ந்த நித்திரையிலிருப்பது போல் தோற்றமளிக்கவே, அதைக்கண்டு திருப்தியடைந்தவராக மெல்லிய குரலில், "ஆமாம்! இந்த வழக்கில் மனோகரன் நிரபராதி. அதை நான் பூரணமாக நம்புகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட தியாகராஜனது நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. நன்றாக மூச்சுவிட்டு சுவாசிக்கவும் பயந்தவனாக, சம்பாஷணையை மேலே கவனிக்கலுற்றான்.

"அப்படியென்றால் உண்மையில், சஞ்சீவிக்கு விஷம் கொடுத்துக் கொன்றது யார்!" என்று மருமகன் வினவினான். வண்டி அதுசமயம் ஒரு நதியின் பாலத்தின் மீது கடபுடா என்று கோர சப்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. ஓவென்று வண்டி போட்ட இரைச்சலும் ஜன்னல் வழியே விர் என்று வீசிய குளிர் காற்றும் தியாகராஜனது மேனியைப் புல்லரிக்கச் செய்தன. "குற்றம் செய்தது ஒருவன். தண்டனை அடைவது இன்னொருவன் என்றால், கேட்க எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது. அப்பா! நியாயம் எப்பொழுதும் பிசகுவதில்லை. கோர்ட்களில், பூரணமாக சாட்சிகள் இல்லாவிடில், குற்றவாளியென்று கருதப்படுகிறவனுக்குக் கடுந்தண்டனை விதிக்க மாட்டார்கள் என்கிறார்களே! மனோகரன் நிரபராதி என்றால், அவனுக்கு விதித்துள்ள தண்டனை எவ்வளவு பெரிய தவறாகும்!" என்று வியப்பும் வருத்தமும் கலந்த குரலில் மகள் கேட்டாள்.

"அபூர்வமாகச் சில சமயங்களில் நியாயம் நிரபராதி விஷயத்தில் தவறி விடுவதும் உண்டு. அந்த அபூர்வமான சந்தர்ப்பம் இப்பொழுது மனோகரனுக்கு நேர்ந்திருக்கிறது!" என்று பெருமூச்செறிந்தார் வக்கீல்.

"கோர்ட் விவாதங்களை விவரமாகப் பத்திரிகையில் பார்த்துக் கொண்டு தான் வந்தேன். மனோகரனைக் குற்றவாளி என தீர்மானிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருந்தன என்று எனக்கு அவைகளைப் படித்தபோது தோன்றியது."

வக்கீல் மீண்டும் தமது தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டார். அவர் என்ன கூறினார் என்பதை தியாகராஜன் மிகவும் சிரமப்பட்டுத்தான் கேட்க முடிந்தது. ஏனெனில், அவர் அவ்வளவு தாழ்ந்த குரலில் பேசினார். போதாதற்கு ரயில் வண்டி ஓடும் போது எழுப்பிய சப்தம் வேறு அவரது வார்த்தைகளைக் கேட்கவொட்டாது அமுக்கின. "பார்த்துக் கொண்டேயிருங்கள். இன்னும் சில மாதங்களில் சஞ்சீவி கொலைக் கேசைப் பற்றி நீங்கள் அனைவரும் மறந்துபோன பிறகு, பத்திரிகையின் ஒரு மூலையில், 'நகரத்தில் பிரபல வியாபாரி இன்னாருக்கும், திருமதி மாயாவுக்கும் திருமணம் மிகவும் எளிய முறையில் நடந்தது' என்ற ஒரு சிறு செய்தியைப் படிக்க நேரிட்டால் நான் ஆச்சர்யப்படவே மாட்டேன்!" என்றார்.

தியாகராஜன் உடலை அவன் போர்த்தியிருந்த மெல்லிய காஷ்மீர் கம்பளம் பல ஊசிகள் குத்துவதைப் போல் உறுத்தியது. கீழுதட்டைக் கோபத்துடன் அழுத்திப் பற்களால் கடித்துக்கொண்டு படுக்கையில் லேசாகச் சிறிது புரண்டான்.

அந்தக் கிளிமூக்கு வக்கீல் இன்னும் ஏதேனும் மேலே பேசினால் படுக்கையினின்று துள்ளி எழுந்து அவர் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைக்கவேண்டும் போல் தாள முடியாத ஆத்திரம் அவனது உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆனால் பொறுமையுடன் தூங்குகிறவன் போல் வேதனை தரும் அந்தச் சம்பாஷணையைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டு அவன் வாளா இருந்தான்.

"அப்படியா!" என்று வியப்புடன் கூவினான் வக்கீலின் மருமகன், அதிகம் பேசிக் களைத்து விட்டதனால் தாகம் தாங்காது தவிப்பவன் போல் கூஜாவை எடுத்துத் திறந்து ஒரு டம்ளர் தண்ணீரைக் கடகடவென்ற சப்தத்துடன் அவன் பருகினான். மீண்டும் தியாகராஜன் அருவருப்புடன் முகத்தைச் சுளுக்கிக் கொண்டான்.

வக்கீல் தொடர்ந்து பேசினார். "கொலை ஒன்று நடந்ததென்றால், அந்தக் கொலைக்கு ஒரு முகாந்திரம் இருந்திருக்க வேண்டும். மனோகரனுக்கு இந்தக் கொலை செய்ய ஒரு முகாந்திரமும் இருக்கவில்லை" என்றார் அவர்.

"அப்படியா!" என்று வியந்தான் மருமகன்.

"சாட்சி கூற வந்தாளே, அந்த மாயா! அவள் உண்மையில் எப்படிப்பட்டவள்!" என்று விசாரித்தான். தொடர்ந்தாற் போல் அவன்.

வக்கீல் பற்களை நறநறவென்று கோபத்துடன் கடித்துக் கொண்டது போன்ற ஒரு பிரமை தியாகராஜனுக்கு ஏற்பட்டது. அந்தக் கேள்விக்கு அவரது பதில் சற்று உரத்த குரலில் அவன் காதுகளில் வந்து விழுந்தது.

"அவளா! அவள் பெயருக்கேற்றபடி ஒரு மாயப் பெண்மணிதான்! அவள் மேல் கொண்ட மோகத்தின் பயனைத்தான், பாவம்! மனோகரன் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கடையிலிருந்து வாங்கிய ஆர்ஸினிக் விஷத்தை அவன் அதற்குப் பிறகு என்ன செய்தான் என்ற உண்மையை எவ்வளவு கேட்டும் கூறவேயில்லை" என்றார்.

"மாயா அவனை மிகவும் காதலித்தாளாம். அப்படியிருந்தும் அவனுக்கு எதிராக, அவள் சாட்சி கூறியது மிகவும் ஆச்சரியந்தான்!" என்றான் மருமகன் வியப்புடன்.

"உம்! காதல்! அவளுடைய வாழ்க்கையில் அந்த வார்த்தைக்கு அர்த்தம் ஏதாவது உண்டா? அவளது காதல் வலையிலே விழுந்து பொருளையும் உயிரையும் விட்ட வாலிபர்களில் இந்த முட்டாள் மனோகரனும் ஒருவன். அவ்வளவுதான். விஷத்தினால் மரணமடைந்த சஞ்சீவியும் ஒரு காலத்தில் அவளது காதலனாகத்தான் இருந்தான். அதற்கு முந்தி, அவளது காதலர்கள் வரிசையில், நகரத்துப் பட்டுத்துணிக் கடைக்காரனும், நகை வியாபாரி ஒருவனும்

இருந்தார்கள் அதற்கு முந்தி எவ்வளவு பெயர்களோ!" என்றார் அலட்சியம் தொனித்த குரலில் வக்கீல்.

"வழக்கின் பொழுது அவள்தான் ஒரு மிட்டாதாரின் ஏக புதல்வி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாளே, அப்படியென்றால் அது பொய்யா! அப்படியல்ல என்று உங்களால் நிரூபிக்கப்படுத்த முடியவில்லையா?" என வினவினான் மருமகன் விடாப்பிடியாக.

"மிட்டாதாரின் புதல்வி! முகத்தைப் பார்க்கையிலே எங்கிருந்து வந்தவள் என்று அதில் எழுதி ஒட்டியிருக்கிறதே! அவள் தாயார் சர்க்கஸ் கம்பெனி ஒன்றில் வேலை செய்து வருகையில் அவளுக்கு ஒருவருடன் ஏற்பட்ட கள்ள நட்பின் பயனாக உதித்தவள் மாயா. தந்தை யார் என்று கூட நிச்சயமாகத் தெரிந்திராத பெண்மணி, மிட்டாதாரின் ஏக புதல்வியாகி விடமாட்டாளா? மாயாவின் தாய், சில வருடங்களுக்கு முன் கடனில் மூழ்கி, திவாலாகி பிறகு அம்மை நோயால் இறந்து போன கருங்கனூர் மிட்டாதாரிடம் வசித்து வந்தது வாஸ்தவம், மிட்டாதாரின் அபிமான ஸ்திரீயாக இருந்தவள் அவள். அப்படியிருக்கையில் மாயாவுக்கு அவர் எப்படித் தந்தையாக முடியும்? இந்த உண்மையை என்னால் தக்க சாட்சிகள் இல்லாததனால் நிரூபிக்க முடியவில்லை. கருங்கனூர் மிட்டாதாருக்கு உற்றார் உறவினர் என்று யாரும் கிடையாது. அது பல வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயமாகையால் நாட்டுப் புறத்திலிருந்து சரியான சாட்சிகளையும் தயாரிக்க முடியவில்லை" என்றார் வக்கீல், மிகவும் கோபத்துடன்.

"கேட்க ஆச்சர்யமாக இருக்கிறது. இன்னும் சில தினங்களில் இந்த மாயா யாரோ ஒரு பிரபல வியாபாரியை மணந்து கொண்டு விடுவாள் என்று ஜோஸ்யம் கூறினீர்களே! அவன் யார்?" அன்று வினவினான் மருமகன் ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு.

"மாயா தன் காதலர்களில், நல்ல கொழுத்த பணக்காரனாகவும், சொன்னதையெல்லாம் கேட்டு ஆடக்கூடிய மடையனாகவும் ஒருவனைச் சந்தித்தாள். அவனை மணந்து கொண்டு, நிம்மதியாகத் தனது காதல் லீலைகளுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, இவளை விட உத்தம ஸ்திரீ உலகிலும் இருப்பாளா என சமூகம் வியக்கும் வண்ணம் புனிதமான ஒரு இல்லற வாழ்வை வாழ விரும்பினாள். அதற்கு முட்டுக்கட்டையாக சஞ்சீவி எனும் அவளது பழைய காதலன் சீமையிலிருந்து கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல் சமயத்திற்கு வந்து சேர்ந்தான். குணத்தில் அவன் மனோகரனைப் போன்று ஏமாந்த மனிதன் அல்ல. தன் சொந்த மனைவி இறந்ததும், அவன் விடுதலையடைந்த பறவையாகிவிட்டான். தன்னை உடனே மணந்துகொள்ள வேண்டும் என்று மாயாவை நிர்ப்பந்தித்தான். அவனை உதறிவிட்டு, தான் மணந்துகொள்ளத் திட்டமிருந்த அந்தப் பெரிய வியாபாரியை எவ்வாறு அடைவது என்று அவளுக்கு வழி தோன்றவில்லை. ரஸிகத்தன்மை மிகுந்த அந்த ஓய்யாரி தீவிரமாக யோசனை செய்தாள். முடிவில் ஒரு வழி தோன்றி விட்டது" என்று ஆத்திரமான குரலில் படபடவென்று பேசினார் வக்கீல்.

"அப்படியென்றால் அப்பா! அவள் தான் சஞ்சீவிக்கு விஷம் கொடுத்துக் கொன்றாள் என்கிறீர்களா?" என்று வியப்புடன் கிரீச்சிட்டு கூவினாள் இதுவரை மௌனமாக இருந்த மகள்.

நியாகராஜன் நெஞ்சு, ரயில் வண்டியை விட மிகவும் துரிதமாக அடித்துக் கொண்டது. காஷ்மீர் சால்வை முள்ளால் செய்த ஒரு போர்வைபோல் அவன் உடலை வேதனை செய்தது.

"சஞ்சீவி மரணமடைந்த அன்று சாயங்காலம் சுமார் நான்கு மணிக்கு அவன் மாயாவின் பங்களாவில் அவளுடன் பேசிக் கொண்டிருக்கிறான். சிரித்த முகத்துடன்

மாயா ஒரு அழகிய தேநீர்க் கோப்பையை நீட்டினாள். தோட்டத்து ரோஜாச் செடிகளை நாசம் செய்த பூச்சிகளைக் கொல்ல மருந்து தயாரிக்கப் போவதாக மனோகரிடம் பொய் சொல்லி வாங்கிய அந்த ஆர்ஸினிக் விஷம் அதற்குள்ளிருந்த காப்பியில் நிறைந்திருந்தது. உனக்கு நான் சொன்னால் புரியாது. மாயாவின் மோகனப் புன்னகையைக் காணும் எந்த இளைஞனும், அவள் ஆலகால விஷத்தை விஷம் என்ற உண்மையைக் கூறிக் கொடுத்தாலும், சிறிதும் அஞ்சாது வாங்கிக் குடித்து விடுவான். அந்தப் புன்னகைக்கு மனத்தை மயக்கும் அவ்வளவு சக்தி உண்டு! தன்னை மணந்துகொள்ள அவள் ஒப்பியதாகச் சொல்லக் கேட்டதும் முட்டாள் சஞ்சீவி, சந்தோஷத்தில் தன்னை மறந்து விட்டான். விஷம் நிறைந்து நின்ற காப்பியை அவள் கரத்தினின்று வாங்கித் தானே குடித்து விட்டான்!" என்றார் வக்கீல், நடந்த ஒவ்வொன்றையும் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தவர் போல்.

"அப்படியா! உங்களுக்கு இவ்வளவு தெரிந்திருந்தும் இதை ஏன் நீங்கள் நியாய சபையில் வெளிப்படுத்தவில்லை?" என்று மகள் ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

"இதெல்லாம் என்னுடைய ஊகம், அம்மா. ஆனால், இது உண்மை என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். எனக்குத் தெரிந்து விட்டால் போதுமா? இந்த உண்மையைத் தக்க சான்றுகளுடன் நியாய சபையில் விளக்க வேண்டாமா? நடந்த உண்மைக்கு போதிய சாட்சிகள் கிடைக்கவில்லை. அதனால் தான் நிரபாரதி மனோகரன் தூக்கு கயிறை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறான்." என்றார் மிகவும் கோபத்துடன் தந்தை.

"பாவம், மனோகரன்! அவனது பெற்றோர்கள் மனம் என்ன பாடுபடும்! கௌரவமாக வாழ்ந்தவர்களாம்" என்று மருமகன் அங்கலாய்த்தான்.

"அன்று அவனைச் சிறைச்சாலையில் காணச் சென்ற போது என்னுடைய நிர்த்தாட்சண்யமான மனம்கூட அவன் தாயாரின் கண்ணீரைக் கண்டு கலங்கி விட்டது" என்று கூறிய வக்கீல் தொடர்ந்தாற்போல், "மோகம் என்பது ஒரு மனிதனை எவ்வளவு பெரிய படுகுழியில் கொண்டு தள்ளுகிறது என்பதற்கு, இந்த மனோகரனை விட அத்தாட்சிக்கு வேறு யார் வேண்டும்? முன்பின் தெரியாத ஒரு மோசக்காரி விரித்த காதல் வலையில் விழுந்தான். ரோஜாச் செடிப் பூச்சிகளைக் கொல்ல விஷம் வேண்டும் என்று கேட்டதை நம்பிக்கொண்டு பாஷாணத்தை அவளிடம் கொண்டு கொடுத்தானே! அந்த முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது? மனோகரனுக்கு இப்பொழுது உண்மை தெரிந்திருக்கும். மாயா தான் ஆர்ஸினிக் பாஷாணத்தினால் சஞ்சீவியைக் கொன்றவள் என்ற உண்மை நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால், தான் சந்தேகப்படுவதை அவன் வக்கீலான என்னிடம் கூறிக் கொள்ளாது மறைத்து வைத்தது தான், கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு சமயம் விஷத்தை சஞ்சீவிக்கு மாயாவின் தாய் கொடுத்திருந்தால் என்று அவனுக்கு இன்னொரு சந்தேகமும் ஏற்பட்டிருக்க வேண்டும்; அல்லது, மாயாவை அவன் அவ்வாறு மிதமிஞ்சிக் காதலித்திருக்க வேண்டும். அவளுக்குப் பதிலாக தானே தூக்கு மேடைக்குப் போய் விடுவதென்று ஆரம்பத்திலிருந்து ஒரே திட்டமாக உண்மையைப் பூர்ணமாக மறைந்து விட்டான். முட்டாள் மனிதன்!" என்றார் அவர்.

"ஒரு சமயம் மாயா மணந்துகொள்ளப் போகும் அந்த முட்டாள் வியாபாரியும் இந்தக் கொலையில் சம்பந்தப் பட்டிருப்பானோ என்னவோ! அவன் யார்? அவனை உங்களுக்குத் தெரியுமா?" என்று கவலையுடன் விசாரித்தான் மருமகன்.

தியாகராஜன் நெஞ்சு வெடித்து விடும் போல் அடித்துக் கொண்டது. உடலினின்று உயிர் போய்விட்டதைப் போன்ற

ஒரு பயங்கரமான உணர்ச்சி அவனுக்கு அது சமயம் ஏற்பட்டது.

"அவனா! அவனைப் பற்றிப் புலன் விசாரித்து நொடிப் பொழுதில் அறிந்து கொண்டு விட்டேன். 'காந்தி பென்ஸில்' என்று தேவநகரில் உள்ள பெரிய பென்ஸில் கம்பெனியின் முதலாளி அவன். தியாகராஜன் என்று பெயர். மணமாகாத உல்லாச பிரும்மச்சாரி. மாயா விரித்த வலையில் விழுந்தான். காதலர்களில், இவன் ஒருவனைத்தான் மாயா, நல்லதொரு பெரிய புள்ளி என்று தேர்ந்தெடுத்து, கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தாள். சஞ்சீவி விஷத்தினால் கொல்லப் பட்டதற்கு இந்த தியாகராஜன் தான் காரண பூதம், இவனை மணந்துகொள்ளத் திட்டமிட்ட மாயா இடைஞ்சலாக இருந்த சஞ்சீவியை ஒரு கொசுவை அடித்துக் கொன்று விடுவது போல் இமைப்பொழுதில் மேல் உலகிற்கு அனுப்பிவிட்டாள். ஆனால், அந்த தியாகராஜனுக்கு இந்தக் கொலையில் கடுகளவும் சம்பந்தமேயில்லை. இன்றுவரை, இந்த நிமிடம் வரை அந்த முட்டாள், மாயாவை பெண்களி லேயே ஒரு ஸ்திரீ ரத்னம் என்று நம்பிக்கொண்டு இருக்கிறான். அவனுடைய பணமும் செல்வாக்கும் துணை இருக்கின்றன என்ற நெஞ்சழுத்தத்தில் தான் மாயா அவ்வளவு கர்வமாக, தலை நிமிர்ந்து சாட்சிக் கூண்டிலிருந்து எல்லோரையும் அலட்சியமாகப் பார்த்துப் பேசினாள். மனோகரனைவிட நான் அந்த தியாகராஜனைப் பற்றித் தான் மிகவும் அனுதாபமடைகிறேன். காலணா முதலின்றி சொந்த வியாபாரம் செய்து முன்னுக்கு வந்த மனிதன். நல்ல திறமைசாலி. வியாபாரத்துறையிலே இவ்வளவு கெட்டிக்காரனான ஒரு மனிதனா, இந்தப் பாரத கண்டத் திலே, அவனது வாழ்வை ஒளி செய்ய நல்ல குலத்தில் பிறந்த ஒரு நல்ல பெண் கிடைக்காமல் போய்விட்டாளா? இதைத்தான் விதி என்று சொல்வார்கள்" என்று விரக்தியாக முடித்தார் வக்கீல்.

மூச்சுவிடாது கேட்டு வந்த மகள் மிகவும் கவலையுடன், "அப்பா! பல மனிதர்களிடம் காதல் நாடகம் நடித்த மாயா தியாகராஜனிடம் உண்மையான அன்பு கொண்டிருப்பாள் என்று எப்படி நிச்சயமாகக் கூற முடியும்? அவனை விட இன்னும் உயர்ந்த ஒரு பணக்காரனைச் சந்திக்க நேர்ந்து விட்டால் இந்த தியாகராஜனை உதறி விட அவளுக்கா வழி தெரியாது?" என்று கேட்டாள்.

"சஞ்சீவியிடம் நீட்டிய இந்த டீ கோப்பையைத் தன் கணவன் தியாகராஜனிடமும் கூசாது நீட்டிப் புன்முறுவல் செய்வாள். அந்த முட்டாளும் சஞ்சீவியைப் போலவே வாங்கிப் பருகிவிட்டு எமலோகத்தை விரைவில் எய்துவான்?" என்றார் தந்தை.

"ஒரு மனிதனைக் கொல்ல வேண்டுமென்றால் அசாத்திய மான துணிச்சல் இருந்தால் ஒழிய முடியாத காரியம். ஒரு பெண்மணிக்கு ஆனாலும் இவ்வளவு துணிச்சல் ஆகாது?" என்றான் வியப்பு மிகுந்த உரத்த குரலில், வக்கீலின் மருமகன் முடிவில்.

"அப்பா! உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? நான் பிறக்கு முன்பு ஒரு கேஸில் நீங்கள் வாதித்ததைப் பற்றி அடிக்கடி அம்மா சொல்வாளே. அந்தப் பெண்ணுக்குக் கூட என்ன தைர்யம்! தன் கணவனை கோபத்திலே ஓங்கி கடப்பாரை யால் அடித்துக் கொன்று விட்டாளாமே?" என்று மகள், பழைய சம்பவம் ஒன்றை வக்கீலுக்கு ஞாபக மூட்டினாள்.

"அது என்ன கேஸ்? எனக்கு இதுவரை சொன்ன தில்லையே!" என்று மருமகன் வம்பு விசாரித்தான்.

"அதுவா!" என்று கேட்டுவிட்டு வக்கீல் சூள் கொட்டினார். "புதிதாக நான் தொழிலை ஆரம்பித்த சமயம். முதல் முதலாக ஒரு கொலைக் கேஸிற்குக் குற்றவாளி சார்பில் ஆஜராகி வெற்றி பெற்ற கேஸ் அது. நாகம்மாள் என்ற ஒரு பெண்மணி. தனது அபிமான புருஷனைக் கடப்பாரையினால் அடித்துக்

கொன்று விட்டதாகத் தொடர்ந்த வழக்கு அது. நாகம்மாள் தன்னைக் கொல்ல வந்த காதலனைத் தற்காப்பு நிமித்தம் அடித்துக் கொன்று விட்டாள். அவளது காதலன், ஒரு சிறுவனைக் கடத்திக் கொண்டு வந்து தன் வீட்டில் அடைத்து வைத்திருந்தான். அவனைத் தப்பி ஓட உதவி செய்து விட்டாள் என்பதனால் கோபங் கொண்டு முரட்டுத்தனமாக அவளைக் கொலை செய்ய அவன் கத்தியும் கையுமாக அணுகினான். தன்னைக் காத்துக்கொள்ள மனிதன் செய்யும் கொலை உண்மையில் கொலையே அல்ல. தற்காப்பினால் ஏற்பட்ட மரணம் என்று விவாதித்து அவளுக்கு நான் விடுதலை வாங்கி அளித்து விட்டேன். ஆனால், அந்தப் பெண்மணிக்கு சித்தப்பிரமை அத்துடனே ஆரம்பித்து விட்டதனால், நேரே உடனே பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாள். அதற்குப் பிறகு அவளைப் பற்றி எனக்குத் தெரியாது. எனது முதல் கேஸிலே வெற்றியேற்பட அவள் காரணமாக இருந்ததனால் அடிக்கடி அந்தக் கேஸைப் பற்றி நான் பேசுவதுண்டு" என்றார்.

"நாகம்மாளுக்கும் மாயாவைப்போல் ரொம்பத் துணிச்சல், அப்பா!" என்று வியந்தாள் மகள்.

"சே! நாகம்மாளை, இந்த மாயாவுடன் ஒப்பிட்டுப் பேசாதே. மாயா செய்துள்ள இந்தக் கொலை, தீர்மானித்து முன்கூட்டி யோசித்த பயங்கரமானதொரு காரியம். நாகம்மாள் செய்த கொலை. அந்த வினாடியில் திடீரென்று ஏற்பட்ட ஆவேசத்தின் விளைவு. இரண்டிற்கும் இடையே மிகவும் பெரிய வித்தியாசமிருக்கிறது. நாகம்மாளிடம் நான் கேஸைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தபோது, அவள் கூறிய சில உண்மைகள் என் மனத்தை உருக்கி விட்டன. ஒரு பேதைச் சிறுவனின் வாழ்வைப் பாழ்படுத்த இருந்த தன் காதலனை அவள் கொலை செய்ததைப் பற்றி வருந்தவே யில்லை. 'அந்தச் சிறுவன் எங்கேயாவது ஓடிச் சென்று பிழைத்துக் கொண்டால், ஒரு சமயம் அதிர்ஷ்டவசத்தால்

நல்ல ஒரு நிலையில் வாழ்ந்தால், என்றாவது தன்னைப் பற்றிச் சிறிது நினைத்துக்கொள்ள மாட்டானா' என்று நான் அவள் எண்ணினாளாம். அவள் செய்த பெரிய நியாகத்தை அந்தச் சிறுவன் இப்பொழுது உணர்ந்து பார்க்கக்கூட முடியாது. ஆனால் அது எவ்வளவு உயர்ந்தது என்பதை நான் அன்று அறிந்தேன். உண்மையைக் கேட்டு இரக்க வசப்பட்டுத்தான் நான் அவளுக்காக அப்பொழுது வாதாடினேன். நாகம்மாள் கொலைகாரியே அல்ல நியாகி. -அவளுடன் இந்தப் பாவி மாயாவை ஒப்பிட்டுப் பேசாதே, குழந்தாய்! கேட்கவும் சகிக்கவில்லை' என்றார் உணர்ச்சி வசத்துடன் வக்கீல்.

விர் என்று பல்லைக் கிட்டும் அளவு கொடுமையாகக் குளிர் காற்று ஜன்னல் வழியே வீசிக் கொண்டிருந்தும் நியாகராஜனது ஆடைகள் வியர்வையால் தெப்பலாக நனைந்து விட்டிருந்தது. மூடியிருந்த அவனது கண் இமைகளினின்றும் இரண்டு திவலை கண்ணீர் உருண்டு தலையணை மீது விழுந்தது. ஒரு பெரும்பாறை பெயர்ந்து நெஞ்சின் மீது விழுந்து அமுக்கிக் கொண்டுவிட்டது போல் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் ஏக காலத்தில் அவனது இருதயத்தைப் பலமாக அழுத்தின.

அஸ்தமிக்கும் சமயம். 'அரிக்கன்' விளக்கைப் பொருத்திக்கொண்டு வந்து வாயிற் திண்ணையில் தமயந்தி வைத்தாள். முடங்கிக் கொண்டு படுத்திருந்த சம்பந்த முதலியார் எழுந்து உட்கார்ந்தார். விளக்கு வெளிச்சத்தில், 'அவர் முகத்தில் வேதனையும் வியாகூல மும் ஒருங்கே பொங்கி வழிந்து கொண்டிருந்தது நன்கு புலப்பட்டது. குழந்தாய், இப்படி உட்கார்!' என அவர்

உத்தரவிடவே, உள்ளே செல்லத் திரும்பிய தமயந்தி திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

"காந்திமதி ஏதாவது ஆகாரம் கொஞ்சம் சாப்பிட்டாளா?" எனக் கவலையுடன் வினவினார்.

"சற்றுமுன் கொஞ்சம் பழரஸம் கொடுத்தேன், அதையும் வேண்டாமென்று மறுத்து விட்டாங்க" என்று பதிலளித்த தமயந்தியின் குரல் துயரத்தினால் நடுங்கியது.

"உன்னிடம் சொல்ல வேண்டாம்னு பார்த்தேன். ஆனால், மறைச்சு வைப்பதிலே பயன் இல்லையென்று தோணிச்சு, அதனாலே..." என்று இழுத்த முதலியார் சிறிது தயங்கிவிட்டு, மிகவும் தாழ்வான குரலில், "இன்று பகல் வந்து பார்த்த டாக்டர், இன்னும் நாலைந்து நாள் தள்ளுவது கூட சிரமம் என்று சொல்லிவிட்டார்!" என்று நிறுத்தினார்.

தமயந்தியின் கன்னங்கள் மீது கண்ணீர்த் துளிகள் ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடுவதை விளக்கு வெளிச்சத்தில் கண்ணுற்ற அவர் நெஞ்சம் துணுக்குற்றது. "குழந்தாய்! என்னத்திற்கு வருத்தப்படுகிறாய்? காந்திமதி இனி பிழைக்க மாட்டாள் என்பது நமக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயம்தானே! இது சமயம் நீ இவ்வளவு அதைர்யப்படலாமா?" என்று அன்புடன் ஆறுதல் கூறினார். அவர் முகத்தை மிகவும் இரக்கமாக ஏறிட்டுப் பார்த்த தமயந்தி பதில் பேசாது கண்ணீர் உகுத்த வண்ணம் இருந்தாள்.

"பெற்ற குழந்தைக்கு மேல் ஆயிரம் மடங்கு உன்னை காந்திமதி எடுத்து அன்புடன் வளர்த்தவள். உன் கல்விக்காக அரும்பாடுபட்டாள். அவ்வளவிற்கும் பிரதியாக நீயும் இந்த ஒரு மாத காலமாக இரவென்றும் பகலென்றும் பாராது, அருவருப்பு இல்லாமல் அவளுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டு வருகிறாய். இவ்வளவு

புத்திசாலிப் பெண்ணாக நீ வளர்ந்திருப்பதைக் காண என் மனம் பூரிக்கின்றது. பெரியவர்கள் மனம் குளிரச் செய்யும் காரியங்களுக்குப் பயன் இல்லாது போகாது. குழந்தாய்! உனக்குக் கடவுள் அருள் எப்பொழுதும் இருக்கும்" என்று ஆசீர்வதித்தார் முதலியார்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தமயந்தி நன்றிப் பெருக்கு மேலோங்க அவரைப் பார்த்து லேசாகப் புன்முறுவலித்தாள். 'தாத்தா! பெரியம்மா இனி பிழைக்க மாட்டார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். கடந்த நான்கு நாட்களாக அவரது உடல்நிலை எனக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையையும் போக்கடித்து விட்டது. விரைவில் அவர்கள் நம்மை விட்டு மறைந்து போய் விடுவார்கள் என்பதற்காக நான் இப்பொழுது வருந்தவில்லை. எங்களுக்காக எவ்வளவோ பாடுபட்டு, உடல் நலிந்து, மெய் சோர்ந்து போன அவர்களுக்குக் கடைசி நேரத்தில் மன அமைதிக்குக் கூடவா பஞ்சம் ஏற்பட வேண்டும்! அதையெண்ணித்தான் என் உள்ளம் வேதனையில் குமுறுகிறது. இரவு வேளையில் நான் சிறிதும் தூங்குவதில்லை. பெரியம்மா இருமினாலும் தும்மினாலும் உடனே எழுந்து அருகில் சென்று, அவர்கள் ஆயாசத்தைப் போக்க முயற்சிக்கிறேன். கவனக் குறைவு சிறிதும் இன்று வேளைக்கு வைத்தியர் கொடுத்த மருந்தை எடுத்துக் கொடுக்கிறேன். மனத்திற்கு உற்சாகம் கொடுக்க வேண்டி பத்திரிகைகளும் கதைகளும் படித்துச் சொல்கிறேன். எவ்வளவு முயற்சித்தாலும் அவர்கள் மனத்திலே என்னால் அமைதியை உண்டு பண்ண முடியவில்லை, தாத்தா!" என்று கூறி முடிக்காது துக்கத்துடன் தமயந்தி திணறினாள்.

"அவள் மனத்திலே அமைதியில்லை என்பதை நானும் அறிவேன். அவளது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதைப் பற்றி இன்றைய தபாலில், விஜயாவுக்கும்

அமிர்தத்திற்கும் எழுதியிருக்கிறேன். தியாகராஜனுக்குத் தனிப்பட்ட ஒரு நீண்ட கடிதம் இன்று பகல் தபாலில் அவனது நாகபுரி விலாசத்திற்குப் போட்டிருக்கிறேன். அண்ணனுக்கு விஷயத்தைத் தெரிவித்து உடனே புறப்பட்டு வரும்படி புத்தி சொல்ல வேண்டும் என்று விஜயாவிற்கும் தனியாக எழுதியிருக்கிறேன். காந்திமதிக்கு நினைவு தவறி விடும் முன் அவன் வந்தால் பயன் உண்டு" என்று கூறிவிட்டு ஆயாசத்துடன் பெருமூச் செறிந்தார்.

"நேற்று இரவு முழுவதும் பெரியம்மா தூங்கவே யில்லை. இரண்டொரு தடவைகள் அவர்கள் 'ராஜா! ராஜா!' என்ற அவர் பெயரைச் சொல்லி அரற்றினார்கள். இன்று காலை என்னிடம் 'ஏன் ராஜா இன்னமும் ஊரிலிருந்து வரவில்லையா? நான் உடனே பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவதாக ஒரு கடிதம் போடக் கூடாதா?' என்று கேட்டுவிட்டுச் சிறு குழந்தைபோல் தேம்பியழுதார்கள். அதைக்காண என்னால் சகிக்கவே முடியவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் இறந்து கொண்டு வரும் அவர்களிடம், பொய் சொல்லி ஏமாற்றிக் கொண் டிருக்கிறோமே' என்று என் மனம் மிகவும் வேதனைப் படுகின்றது" என்றாள் துக்கத்துடன், அவள் கண்கள் கலங்கின.

"இன்னமும் காலம் தவறி விடவில்லை. காந்திமதி நினைவு தவறுமுன், அவளது கடைசி நிமிஷத்திற்காவது தியாகராஜன் அருகில் வந்து அவளைக் கண்டு ஆறுதல் சொன்னானால், இவ்வளவு நாட்களாக அத்தைக்கு அவன் இழைத்துள்ள பல தீமைகளையும் கடவுள் மன்னித்து விடுவார். அப்படியில்லாது காந்திமதி வேதனையுடன் அவனைக் காணவில்லை என்ற மனக் குறையுடன் உயிர் துறப்பாளானால், அதைவிடப் பெரிய பாவம் தியாகராஜனுக்கு வேறு ஒன்றுமில்லை. பணம்

இருக்கலாம். அந்தஸ்து இருக்கலாம். புகழ் இருக்கலாம். ஆனால் என் போன்ற வயோதிகர்களின் அன்பும் ஆசீர்வாதமும் அவனுக்கு இருக்கவே இருக்காது. ஆனால், அவன் இவ்வளவு நன்றி கெட்டவனாக இருப்பான் என்று நான் நினைக்கவேயில்லை. எதற்கும் ஒரு எல்லையுண்டு. மனிதத் தன்மையினின்று பிரிந்து அவன் இவ்வளவு கயவனாகி விட்டதைக் காண என் நெஞ்சு கொதிக்கிறது" என்று கோபத்துடனே பேசிய முதலியார், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவர் போல, "குழந்தாய்! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்றார்.

அவர் பேசி முடிக்குமுன் அவள் குறுக்கிட்டாள். "தாத்தா! நீங்கள் கூற வரும் யோசனையை நான் காரிய அளவிலே செய்துவிட்டேன். நேற்றைய தினம் பெரி யம்மாவின் உடல் நிலையைக் கண்டு கிலியடைந்து போன நான், இனி தாமதம் செய்வது தவறு என்று என் கைப்படவே ஒரு கடிதம் எழுதி நேற்றே தபாலில் சேர்த்துவிட்டேன். இதை உங்களிடம் சொல்லிக் கொள்ளக் கூட மிகவும் வெட்கமாக இருக்கிறது தாத்தா! நடந்த விஷயங்கள் அனைத்தும் நீங்கள் அறிவீர்கள் அல்லவா! இவ்வளவிற்குப் பிறகு எனக்கு அவர் முகத்தைப் பார்க்கவோ பேசவோ விருப்பம் இருக்க வில்லை. அவரை என் வாழ்விலே இனி ஒரு கணமும் நினைக்கக் கூடாதென்று ஒரே உறுதியாக இருந்த நான், வெட்கத்தை விட்டு, எனது கொள்கைகளை உதறிவிட்டு, உடனே பெரியம்மாவை வந்து ஒரு முறையாவது பார்த்துப் போக வேண்டிக் கொண்டு ஒரு கடிதம் எழுதிப் போட்டிருக்கிறேன். உலகில் உள்ள அஷ்ட ஐச்வரியங்களை எனக்குப் பரிசாக அளித்தாலும் இந்தக் காரியத்தை நான் செய்திருக்க மாட்டேன். பெரியம்மா உயிர் துறக்கும்பொழுது மன அமைதியுடன் சந்தோஷ மாக இவ்வுலகினின்று செல்ல வேண்டும் என்ற ஒரு

எண்ணத்திற்காக நான் இதைச் செய்தேன்" என்றாள் நாத்தடுமாற.

"குழந்தாய்! கடவுள் உனக்கு சகல சௌபாக்கியத்தையும் அருள்வார்! பெருந்தன்மை மிகுந்த உனது உள்ளம் என்றும் வாழட்டும்" என்று உணர்ச்சி பொங்க முதலியார் அவளை மீண்டும் மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார்.

"தாத்தா! ஒரு சமயம் என் கடிதத்தைப் பார்த்துத் தியாகராஜன் இங்கே வந்தார் என்றால், அவர் எனக்கு இதுவரை செய்துள்ள அவமரியாதையை மறந்து அவரை மன்னித்து வரவேற்பேன். நீங்கள் சற்று முன் சொன்னீர்களே, பெரியம்மாவின் கடைசி நிமிஷத்தில் இங்கே வந்து அவர்களுக்கு மன ஆறுதல் கொடுத்தால், அவர் செய்துள்ள பல தீங்குகளையும் கடவுளே மன்னித்து விடுவார் என்று. அவ்வாறானால் நான் மட்டும் அவர் மீது வன்மத்தை உள்ளத்திலே புதைத்து வைத்திருப்பது நியாயம் ஆகுமா? கடந்த சில தினங்களாக நான் நடந்து போனதையெல்லாம் என் உள்ளத்திற்குள்ளே பல்வேறு கோணங்களிலிருந்தும் சிந்தித்தேன். தியாகராஜன் என்னை மணந்து கொள்ள விருப்பம் இன்றி மனம் மாறினார் என்றும், அவரது அன்பு குறைந்துவிட்டது என்றும், நான் ஏன் அவரிடம் கோபம் கொள்ள வேண்டும்? பிறரிடம் அளவுக்கு மிஞ்சி எதையும் எதிர்பார்ப்பதனால்தானே ஏமாற்றம் என்பது ஏற்படுகின்றது? என்னுடன் கூட ஒன்றாக ஒரே வீட்டில் வளர்ந்தார் என்ற காரணத்திற்காக நான் ஏன் அவரிடம் அன்பை எதிர்பார்க்கவேண்டும்? திருமணம் என்பது ஒருவருடைய சொந்த விஷயம். இஷ்டப்பட்ட வாழ்க்கைத் துணை வரைத் தேட ஒருவருக்குப் பூரண சுதந்திரமுண்டு. வேறு ஒரு பெண்ணை அவர் மணந்துகொள்ள விரும்பினால் அதற்காக நான் உள்ளம் உடைந்து அவர்மீது இதுகாறும் கொண்டிருந்த கோபம் நியாயமற்றது. ஆகவே, தாத்தா

அவரை நான் மன்னித்து விடப் போகிறேன். அவர் நாமதம் செய்யாது வரவேண்டும் என்பது ஒன்று மட்டும் நான் தற்சமயம் எனது பிரார்த்தனை" என்றாள் உணர்ச்சி பொங்கும் மெல்லிய குரலில்.

தமயந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த சம்பந்த முதலியார், "குழந்தாய்! இதற்கு என்ன பதில் சொல்வது என்று எனக்கு விளங்கவில்லை. காந்திமதியைப் போலவே நீயும் பெருந்தன்மையே உருவான ஒரு பெண்ணாக வளர்ந்திருக்கிறாய். அதை அறிய என் உள்ளம் உவகையால் பூரிக்கின்றது. கடவுள் அருள் உனக்கு மேலும் மேலும் பொங்கட்டும் என்று ஆசீர்வதிப்பதைத் தவிர, இந்த ஏழைக் கிழவன், உனக்கு என்ன செய்ய முடியும்! என் வாழ்விலே கஷ்டம், சுகம், நன்மை, தீமை, அனைத்தையும் நான் பார்த்தும், கேட்டும், அனுபவித்தும் இருக்கிறேன். இவை அனைத்திலும் ஒரே ஒரு உண்மையை அன்றும் நான் கண்டிருக்கிறேன். இன்றும் காண்கிறேன். நல்லது செய்தவர்கள் கெட்டார்கள் என்று அவச் சொல் ஏற்பட்டதேயில்லை; தீமை செய்தவர்கள் நன்றாக வாழ்ந்தார்கள் என்றதும் இல்லை. இதை நீ நிச்சயமாக நம்பலாம். நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு இன்றைக்குப் பயன் இல்லாவிடில் இன்னொரு நாள், கட்டாயம் ஏற்படும்" என்றார்.

அவர் பேசி முடிக்குமுன், தெருவின் மறுகோடியிலின்று வேகமாக வந்த ஒரு வாடகை மோட்டார் வண்டி கிரீச்சென்ற சப்தத்துடன் வாயிலில் வந்து நின்றது. தமயந்தியும் முதலியாரும் ஏக காலத்தில் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தனர். சுருண்ட கேசம் நெற்றி மீது புரள, புழுதி படிந்த ஆடையுடன் மிகவும் அலங்கோலமாகவும் களைப்பு மிக்கவனாகவும் வண்டியிலின்று இறங்கிய ஆடவனைக் கண்ட தமயந்தியின்

உள்ளம், தாங்கொணா மகிழ்ச்சியினால் வெடித்து விடும்போல் அடித்துக் கொண்டது.

"தாத்தா! அவருக்கு ஆயுசு நூறு! பெரியம்மாளிடம் போய்ச் சொல்கிறேன். எதிர்பாராது சந்தித்தால் அவர்கள் உடம்புக்கு அதிர்ச்சி தாளாது போய்விடும்!" என்று வேகமாகக் கூறிவிட்டு மின்னலைப் போல் உள்ளே சென்று மறைந்தாள்.

பெட்டியையும் படுக்கையையும் தானே சுமந்து கொண்டு தயங்கியபடி வீட்டை நெருங்கிய தியாகராஜன், அவைகளைத் திண்ணை மீது வைத்துவிட்டு அங்கே உட்கார்ந்திருந்த அந்தப் பெரியவரை ஏற இறங்கப் பார்த்தான். 'ஐயா! என் அத்தைக்கு உடம்பு இப்பொழுது எப்படி இருக்கிறது' என்று திகிலுடன் வினவினான்.

"வா, தம்பி! உனக்காகத்தான் அவள் இன்னமும் காத்திருக்கிறாள். வா நல்ல சமயத்திற்கு வந்தாய். இன்றைக்கு வராது நீ நாளைக்கு வந்திருந்தால்கூட நிலைமை எப்படி மாறியிருக்குமோ! உன்னைப் பற்றியே ஒவ்வொரு நிமிஷமும் விசாரித்துக் கொண்டேயிருக்கிறாள். நீ உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று நானும் தமயந்தியும் கடிதங்கள் எழுதிப் போட்டிருக்கிறோம். அதற்குள் நீயாகவே வந்தது நலமாயிற்று. வா, உள்ளே போகலாம்" என்றார் முதலியார்.

"தமயந்திகூட கடிதம் போட்டிருக்கிறாளா?" என்று ஆச்சர்யத்துடன் வினவினான் தியாகராஜன். அவனது உள்ளம் பலவிதமான உணர்ச்சிகளால் பதைபதைத்தது.

"இதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது? உன் அத்தை உன்னைப் பார்க்க வேண்டுமென்று துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறாள். அவள் துடிப்பைக் கண்டு வாளா இருப்பது தர்மமல்ல என்று உனக்கு தமயந்தி கடிதம் எழுதினாள். ஏன் தயங்கிக் கொண்டு இங்கே நிற்கிறாய்?

உள்ளே வா, அப்பா! ஒவ்வொரு நிமிஷமும் உன்னைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் உன் அத்தை இனியாவது நிம்மதியுடன் உயிரை விடட்டும்" என்றார்.

தியாகராஜன் துயரம் தாளாது தன் கீழுதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டான். குற்றவாளியைப்போல் நெஞ்சு பதற, கால்கள் தடுமாற உள்ளே சென்றான். தமயந்தியின் மடிமீது சாய்ந்து படுத்திருந்த காந்திமதியம்மாள் ஒளிமங்கிய தன் கண்களைச் சிரமப்பட்டுத் திறந்து உறுத்துப் பார்த்தாள். அவளது கால்கள் அவளை அறியாது உயர எழும்பின.

"ராஜா! என் கண்ணே? வாடா! துரையே?" என்று உரத்த குரலில் கூவி விட்டாள் அவள் உணர்ச்சி வசத்தில். அந்தச் சில வார்த்தைகளுக்குத்தான் எவ்வளவு சக்தி இருந்தன! தியாகராஜனிடம் ஏற்பட்டிருந்த பணத் திமிரையும், வினாடியில் தவிடு பொடியாக்கி விட்டன. சிறு பையனாக இருக்கையில், சிவானந்தம் கோபத்துடன் உதைத்து நொறுக்கி விடும் பொழுதெல்லாம் தியாகராஜன் நோவுதாளாது, ஓடிவந்து அத்தையின் மடியிலே விழுந்து விடுவான். முதுகின் மீது பட்டிருக்கும் பிரம்புக் காயத்தின் மேல் தேங்காய் எண்ணெயை எடுத்து அத்தை பூசும்பொழுது அந்தச் சிறுவனுக்கு எவ்வளவு இதமாக இருக்கும்! அத்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவளது அணைப்பிலே எவ்வளவு ஆறுதலை அப்பொழுதெல்லாம் கண்டிருந்தான்! இன்று அவ்வாறே காதலிலே ஏற்பட்ட அதிர்ச்சியால் அவன் மனம் மிகவும் புண்ணாகி விட்டிருந்தது. அத்தையின் அன்பு மொழிகள் அந்த புண்ணிற்கு நோய் குறைக்கும் மருந்துபோல் மிகவும் ஆறுதலாக இருந்தன. வெட்கமும் துயரமும் தாளாது, வயதையும் தன் நிலைமையையும் மறந்து தந்தையிடம் அடிபட்டு மனம் நொந்த சிறுவன்போல்

தியாகராஜன் ஓடிவந்து காந்திமதியின் பாதங்கள் மீது விழுந்தான்.

"அத்தை, அத்தை!" என்று அரற்றிய அவன் சிறுபிள்ளையைப்போல் சிறிதும் லஜ்ஜையின்றி விம்மி யழுதான். "ராஜா! ராஜா!" என்று பதிலுக்கு அரற்றிய காந்திமதி சந்தோஷம், துக்கம் என்ற இரண்டு உணர்ச்சி களும் ஒருங்கே உள்ளத்தில் அலைபாய, கண்கள் தாரை யாகக் கண்ணீரை வடிக்க, தன் கண்ணினும் இனிய மைந்தனை அன்புடன் இறுகத் தழுவிக் கொண்டாள்.

தன் மனவெழுச்சியைச் சிரமப்பட்டுக் கட்டுப் படுத்திக் கொண்டு, தமயந்தி தலை நிமிர்ந்து பார்த்தாள்.

அறையிலிருந்த சிறு சிம்னி விளக்கு என்றுமில்லாத காந்தியுடன் மிகவும் பிரகாசமாக ஒளிவீசிக் கொண் டிருந்ததைக் கண்டான். ஜன்னல் வழியே மெல்ல வீசிய காற்று, அன்று மிகவும் இனிமையாக இருந்தது. முற்றத்திலே தெரிந்த வானத்தின் ஒரு பகுதி கருமேகம் சிறிதும் இன்றிப் பளிச்சென்று காணப்பட்டது. அதிலே சிதறிக் கிடந்த விண்மீன்கள், வைரமணிகளைப் போல் ஜொலித்தன. இயற்கை செயற்கை எல்லாம், அன்று இன்பமாகவும் அமைதியாகவும் காணப்பட்டன. அவளது உள்ளத்திலும் அத்துடன் அமைதி ஏற்பட்டது. ஆகவே, அவள் தியாகராஜன் அத்தையின் பிடியினின்று விடுபட்டு தன் பக்கம் திரும்பி, 'தமா' என்று அழைத்த பொழுது, முகத்தை மறுபுறம் வெறுப்புடன் திருப்பிக் கொள்ளவில்லை. "ராஜ்! நீங்கள் மிகவும் களைத்திருக் கிறீர்கள். சாப்பிட ஏதாவது தயார் செய்து கொண்டு வருகிறேன்" என்று இனிமையாகப் பதில் அளித்தாள்.

ஒருவார காலம் சென்றது. நாளடைவில் அத்தையின் உடல் நிலை மிகவும் நலிந்து கொண்டு வருவதைக் கண்ணுற்ற தியாகராஜனுக்கு ஒரு சிறு யோசனை

தோன்றியது. அதை அவன் அத்தையிடம் கூறிவிட விரும்பினான்.

அன்று மாலை, தமயந்தி, நோயாளிக்கு மருந்து கொடுத்துவிட்டு, வழக்கம்போல கட்டிலின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள். கால் அருகே உட்கார்ந்து கொண்ட தியாகராஜன் "அத்தை!" என்று ஆரம்பித்தான்.

"என்னப்பா ராஜா?" என்று வாத்ஸல்யத்துடன் கேட்டாள் காந்திமதி.

"எனக்கு ஒரு சிறு ஆவல் ஏற்பட்டிருக்கிறது. காந்தி பவனத்திலே உங்களுடைய அறையிலேயே நீங்கள் வந்து வசித்தால் உடம்பு சீக்கிரம் குணமாகிவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால், உங்களையும் தமயந்தி யையும் நாளைக்கு நமது காரில் பத்திரமாக தேவநகருக்கு அழைத்துச் சென்று விடலாம் என்று யோசிக்கிறேன்" என்றான்.

சாய்ந்தபடி படுத்திருந்த காந்திமதி அதைக்கேட்டதும் திடுக்கிட்டவள் போல் நிமிர்ந்து உட்கார்ந்தாள். "ராஜா! வேண்டாம், வேண்டாம்! என்னால் சூரியகாந்தத்தை விட்டு இனி வரமுடியாது. நான் பிறந்து வளர்ந்த இந்த மண்ணிலேயே நான் இறந்து மறைந்துவிட ஆசைப் படுகிறேன்" என்றாள் ஆவேசம் வந்தவள் போல்.

"அத்தை! இங்கே பல வசதிகள் குறைவாக இருப்ப தாகத் தெரிகின்றது. நமது பங்களாவில், உங்கள் அறையில் உங்களை மிகவும் சௌக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறது. எனக்காக நீங்கள் நடந்ததை மறந்து திரும்ப நம் வீட்டிற்கு வர வேண்டும்" என்று விநயமாகக் கேட்டுக் கொண்டான்.

"ராஜ்! இனி நான் எதற்காக அங்கே திரும்ப வர வேண்டும். ஒரு முறை பல வருஷங்களுக்கு முன் உன் தகப்பனார் என்னை வீட்டைவிட்டு வெளியேறும்படி

உத்தரவு போட்டார். அதற்கும் பின் பல வருஷங்கள் கழித்து நீ ஒரு முறை என்னை வீட்டை விட்டு வெளியே செல்லும்படி மறைமுகமாய்ச் சொன்னாய். உன் மகனும் என்னை அவ்வாறு வெளியே போகச் சொல்லவில்லை என்ற குறையா உனக்கு? உன் சந்ததியார் என்னைத் தங்கள் வாழ்க்கையிலிருந்து விலகும்படி உத்தரவிட ஒரு சந்தர்ப்பத்தை இனி நான் ஏன் கொடுக்க வேண்டும்? உன்னுடைய வாழ்விலே இனி எனக்கு சிறிதும் இடம் கிடையாது. இந்த உண்மையை நான் ஒரு வருஷத்திற்கு முன்னாடியே அறிந்து கொண்டு விட்டேன். என் மனம் இப்பொழுது வெகுவாக மாறி விட்டிருக்கிறது. பதவி, அந்தஸ்து, உரிமை என்ற ஒன்றையும் என் மனம் நாட வில்லை. அமைதி ஒன்றைத்தான் அது மிகவும் தேடி நாடிக் கொண்டிருந்தது. அந்த அமைதியும் உன்னைக் கண்ட பிறகு எனக்குப் பூரணமாக ஏற்பட்டுவிட்டது. இனி எனக்கு என்ன வேண்டும்? ஒன்றுமில்லை! ஒவ்வொரு நிமிஷமும் எம்பெருமானின் திருவடிகளைக் காண ஆவலுடன் விரைந்து கொண்டிருக்கிறேன். இனி எனக்கு வேண்டியது ஒன்றுமில்லை ராஜா! மேலும், குழந்தாய்! எனக்கு ஒரு பெரும் படிப்பினை ஏற்பட்டது. பெற்ற தாயை இகழ்வது எவ்வளவு மதியீனமோ அதேபோல, பிறந்த மண்ணை வெறுத்து ஓடுவதும் பெரும் முட்டாள்தனமாகும். எந்த சூரியகாந்தத்தின் மண்ணை உதறி வெறுத்து விட்டு, பல வருஷங்களுக்கு முன் வெளியேறினேனோ, அதே ஊர்தான் எனக்கு இறுதிக் காலத்திலே அடைக்கலம் அளித்தது. இதை வெறுத்தது என் மதியீனம் என்று அறிந்து வருந்தினேன். அதற்குப் பிராயச்சித்தமாக நான் இந்த மண்ணிலேயே மரித்து மறைய விரும்புகிறேன். என் ஆவலை நீ மறுக்காதே, ஆக்ஷேபிக்காதே!" என்று உணர்ச்சிவசத்தில் மூச்சு தடுமாறக் கூறினாள்.

அதைக் கேட்ட தியாகராஜன் மனம் மிகவும் குழைந்து போனான். "அப்படியானால், அத்தை! எனக்கு இதனால் என்றும் ஒரு அழியாத பழி ஏற்படும் என்பதைத் தாங்கள் மறக்கலாமா? கடைசிக் காலத்தில் தன் அத்தையை அனாதைபோல் ஒரு கிராமத்தில் உயிரைவிட அனுமதித் தான் தியாகராஜன் என ஊரார் தூற்றுவார்கள். என் மனமும் அப்படித்தான் எண்ணி என்னைச் சித்திரவதை செய்யும். நான் செய்த பிசகுகளுக்கு மன்னிப்பே கிடையாதா, அத்தை?" என்று துயரத்துடன் கேட்டான்.

மிகவும் பலஹீனமாகிவிட்டிருந்த காந்திமதிக்குப் பேசவே முடியவில்லை. அவளுக்கு மூச்சுத் தடுமாறியது. "ராஜா, நீ வீணாக மனசை அலட்டிக் கொள்கிறாய். எனக்கு உண்மையிலேயே ஏதாவது செய்ய விரும்பினால் ஒன்றே ஒன்று உண்டு" என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"சொல்லுங்கள், அத்தை! ஒன்று என்ன, ஆயிரம் என்றாலும், நான் செய்யத் தயார். நான் செய்த தீங்கு களுக்கு ஈடு செய்துவிட எனக்கு ஒருவழி காட்டுங்கள்!" என்றான் ஆத்திரத்துடன்.

அருகில் வரும்படி கையை அசைத்தாள் காந்திமதி. தன் முகத்தருகிலே ஓடி வந்து குனிந்து கொண்ட அவனது காதுகளில் அவள் தனது கடை-சி விருப்பத்தை மெல்லக் கூறினாள். தியாகராஜன் முகமும் அகமும் அதைக் கேட்டு மலர்ந்தன.

"அத்தை! உங்கள் விருப்பத்தைச் சத்தியமாக நான் நிறைவேற்றி வைப்பேன்! நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்!" என்று உறுதியாகப் பதில் கூறிவிட்டு அவளது நலிந்த கரங்களைத் தன் கன்னத்துடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

தனது படுக்கையடியில் தலையணையின் கீழ் வைத்திருந்த தங்கச் சங்கிலிக் கொத்தைத் துழாவி எடுத்த காந்திமதி, தன் அருகே வீற்றிருந்த தமயந்தியின் கரத்திலே அதை வைத்து, "தமா, என் கண்ணே! உனக்குக் கல்யாணத்திற்குப் பரிசாகக் கொடுக்க நான் தயாரித்து வைத்திருந்தது. யாரை நீ மணந்து கொண்டாலும் என் மனப்பூர்வமான ஆசி உனக்கு என்றும் உண்டு. என் ஊனக் கண்களால் உன்னை அன்று காணக் கொடுத்து வைக்கா விட்டாலும் என் ஆத்மாவாவது அதைக் கண்டு ஆனந்தப்படும்" என்று கூறித் தழுவிக் கொண்டாள்.

தமயந்தியின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அவளது கரங்களை நனைத்தன. இந்த சம்பவத்திற்குப் பிறகு காந்திமதி மிகவும் சந்தோஷமாகவும், அமைதியாக வும் காணப்பட்டாள். அவளது முகத்திலே தனியான தொரு பிரகாசமும், பேச்சிலே உற்சாகமும் காணப் பட்டன. அணையும் விளக்கு முடிவிலே மிகவும் பிரகாசமாக எரிந்துவிட்டு அணைந்து விடும் என்பார்கள். அதேபோன்று, வானுலக வாழ்வை நோக்கிப் போய்க் கொண்டிருந்த காந்திமதி தனது கடைசி நாட்களில் மிகவும் தெளிவுடன் காணப்பட்டாள்.

அமிர்தமும் விஜயாவும் முதலியாரின் கடிதத்தைக் கண்டு அங்கு வந்திருந்தனர். காந்திமதியின் பேச்சுக்களை யும், அவள் முகத்தில் காணப்பட்ட களையையும் கண்டு இனி அவள் பிழைத்து விடுவாள் என்றே அமிர்தம் நம்பினாள்.

அன்று சாயங்காலம் சூரியன் அஸ்தமிக்கும் தருவா யில் வழக்கம்போல் தமயந்தி குத்துவிளக்கை நன்றாகத் துடைத்து, திரியிட்டு, எண்ணெய் வார்த்துக் கூடத்திலே ஏற்றி வைத்தாள். சற்றுத் தொலைவில் ஊட்கார்ந்திருந்த விஜயாவை காந்திமதி ஜாடை செய்து அருகில் அழைத்து

"தோத்திர புத்தகத்தை எடுத்து வந்து படி. கேட்கிறேன் என்றாள்.

விஜயா புத்தகத்தை எடுத்து வந்து திறந்து,

"பாருருவாய பிறப்பற வேண்டும்,
பக்திமெயும் பெற வேண்டும்
சீருருவாய சிவபெருமானே,
செங்கமல மலர்போ
லாலருவாய வென்னா ரமுதே,
யுன்னடியவர் தெகைநடுவே
யோருருவாய நின்றவரும் காட்டி,
யென்னையு முய்யக் கொண்டருளே"

என்ற பாடலை இனிய குரலில் வாசித்தாள். சுற்றத் தார்கள் தன்னைச் சூழ்ந்து இருக்க, பாடலின் இனிமை காதுகளில் ஒலிக்க, அமைதியும் ஆனந்தமும் நிரம்பப் பெற்றவளாகக் காந்திமதி தன் இரு கண்களையும் மூடிக் கொண்டு, வானுலக வாழ்க்கைக்குப் பிரயாணமானாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்த தமயந்தி, "பெரியம்மா!" என்று கூவிவிட்டாள்.

அதைக் கண்ணுற்ற சம்பந்த முதலியார் விரைவாக எழுந்து அருகில் வந்து, "குழந்தைகளே! ஒருவரும் அழக் கூடாது. காந்திமதி இவ்வுலகினின்று போய்விட்டதைக் குறித்து நீங்கள் அழுவது அவளது மறைவை அவமதிப்பது போலாகும். தமயந்தி! கண்ணீரைத் துடைத்துக் கொள். உற்றுக் கவனி! என்ன கேட்கிறது என்று உணர்வாய்!" என்று மிகவும் உணர்ச்சியுடன் அதட்டலாகக் கூறினார்.

தமயந்தியும் மற்ற அனைவரும் அவர் சொற்படியே உற்றுக் கவனித்தனர். அந்திக் காற்றிலே மிதந்துகொண்டு வந்து அருகிலிருந்த கோயிலின் ஆலாட்ச மணி ஓசை 'ஓம்! ஓம்!' என்று இனிமையாக ஒலித்துக் கொண்டிருந் தது. வானுலகத்தின் பொற் கதவுகளை காந்திமதிக்காக

தேவர்கள் திறந்தார்கள் போன்ற ஓர் உணர்ச்சி எல்லோர் உள்ளத்திலும் அது சமயம் ஏற்படவே அனைவரும் மெய்சிலிர்த்து அவளது சாந்தமான முகத்தை ஆச்சரியத் துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சில வருஷங்களுக்கு முன் தியாகராஜன், வியாபரத் துறையில் தனக்கு மிகவும் பழக்கப்பட்டிருந்த ஒருவர் வீட்டில் ஏற்பட்ட மரணச் சடங்கிலே கலந்துகொள்ள நேர்ந்தது. சவத்தின் மீது வீசிய துர்க்கந்தத்தை மறைக்க அந்த வீட்டவர்கள் அறைக்குள் ஒரு பெரும் கத்தை ஊதுவத்தியைப் புகைக்க விட்டிருந்தார்கள். தான் படித்த பள்ளிக்கூடத்தைத் திரும்பப் பார்வையிட விரும்பிய மாணவனைப்போல் பதற்றத்துடன் காரினின்று இறங்கிய தியாகராஜன் மாயாவின் அழகிய பங்களாவிற்குள் தயக்கத்துடன் நுழைந்தான்.

ஹாலினின்று குளுமையாக வீசிய காற்றில் மிதந்து வந்த நறுமணம் நாசியிற் பட்டதும் அவனுக்குச் சட்டென அந்தப் பிண அறையின் ஞாபகம்தான் வந்தது. அருவருப்புடன் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். ஜன்னல் அருகே வேஜையொன்றில் படம் விரித்து தலைநிமிர்ந்து நின்ற வெள்ளி சர்ப்பம் தன் வாயினின்று கக்குவதைப் போன்று ஊதுபத்திப் புகை மண்டலத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

சாவை நினைவுறுத்திய இதே நறுமணத்தை ஒரு காலத்தில் அவன் தெய்விக மணம் என்று அழைத்தது உடனடியாக ஞாபகம் வரவே, ஒரு கணம் அவன்

உடல் சிலிர்த்துப் போனான். "நமது அன்பைப் போல் இது தெய்விகமானது!" என்று தொடர்ந்தாற்போல் மாயா கூறிய கேலி மொழிகள் அவனது சிந்தனையில்கூட எழவே, தியாகராஜன், கைக்குட்டையை எடுத்து நெற்றி மீது ஆறாக வழிந்தோடிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான். தான் வந்திருப்பதை அறிவிக்க எண்ணிய வனாக, தொண்டையை லேசாகக் கணைத்துவிட்டு, இருமுறை இருமினான்.

பூஜை அறையினின்று திரையை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தாள் சுபத்திரா அம்மாள். வியப்பினால் அவளது விழிகள் கீழே தெறித்துவிடும் போல் குத்திட்டு நின்றன. எதிர்பாராத அவனது வரவு அவளது கைகளைப் பதறச் செய்தது.

"வாருங்கள்! உட்காருங்கள்" என்று வாய் குழறி வரவேற்றுவிட்டு, "மாயா!" என்று பின்கட்டை நோக்கி உரத்துக் குரல் கொடுத்தாள்.

பகல் முழுவதும் நன்றாகத் தூங்கி விட்டுச் சோம்பலுடன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த மாயா, தாயாரின் அபயக் குரல் கேட்டதும் அப்படியே எழுந்து வந்துவிட்டாள். உட்கார மனமற்றவன் போல், தனது கழுத்துப்பட்டையை நெருடிக் கொண்டு நின்று கொண்டிருந்த தியாகராஜனைக் கண்டதும், அவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள். "ஓ! நீங்களா!" என்று மெல்லிய குரலில் வினவி விட்டு, வாராது நெற்றி மீது புரண்டு கொண்டிருந்த தனது கூந்தலை, இடது கரத்தால் ஒதுக்கிக் கொண்டாள். சாயம் போன கிழிந்த ஜார்ஜெட் சேலையும், தூக்கக் காலத்தில் சோபையிழந்த முகப்பூச்சு இல்லாத முகமாகவும் மிகவும் அலங்கோலமான நிலையில் தன் காதலனைச் சந்திக்க நேர்ந்ததே என்ற அவமானத்தில் அவளது முகம் சிவந்து போய் இருந்தது.

"உன்னைப் பார்த்து ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வந்தேன்" என்று ஆரம்பித்த தியாகராஜன், அவளை அலக்ஷியமாக ஏற இறங்க உற்றுக் கவனித்தான். அவனது பேச்சு பார்வை எல்லாமே வழக்கத்திற்கு மாறாக இருந்ததை சட்டென உணர்ந்த மாயா, கோபத்துடன் கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள். அவன் என்ன பேசப் போகிறான் என்று முன்னதாகவே ஊகித்துக் கொண்டது போல் உணர்ச்சி வேகத்தில் அவளது நெஞ்சு படபடத்தது. தனது மன எழுச்சிகளைச் சாமர்த்தியமாக அடக்கிக் கொண்டு, மிடுக்காக ஹாலுக்குள் வந்து ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டாள்.

"நீண்ட நேரம் பேசி உனது பொழுதை நான் வீணாக்க விரும்பவில்லை. அதனால்..." என்று பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தான் தியாகராஜன்.

"உட்கார்ந்து கொண்டு பேசலாம். நிற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லையே?" என்று எரிச்சலும் குரோதமும் மேலோங்கிய குரலில் வினவிய மாயா, இடுங்கிய இமைகளால் அவனை வெட்டி விடுகிறவள் போல் வெறித்துப் பார்த்தாள். அவளைக் கண்டதும், வழக்கமாக தியாகராஜனிடம் ஏற்படும் அந்த மகிழ்ச்சியோ, உற்சாகமும் சிறிதும் அன்று அவனிடம் காணப் படவில்லை. வர்த்தகத்துறையிலே சமமாகச் சந்திக்க நேர்ந்த ஒரு வியாபாரியிடம் பேசுவது போல் மிகவும் நிர்த்தாக்ஷண்யமான குரலில், "எனது அத்தை காலமாகி விட்டதனால் உடனே உன்னை வந்து சந்திக்க முடியாது போயிற்று" என்று கூறிவிட்டு, எதிரே ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

தன்பால் அவனுக்கு ஏற்பட்டிருந்த அலட்சிய மனோபாவத்தை மாயாவால் தாள முடியவில்லை. ஆத்திரத்தில் அவளது உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் துடியாகத் துடித்தது. 'வருகிறேன்' என்று தந்தியடித்துவிட்டு, உடனே

வராது போனதற்கு ஏதோ காரணம் இருந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டேன். உங்கள் அத்தையின் மறைவைப் பற்றிப் பத்திரிகையில் படித்து விட்டு, உடனே உங்களுக்கு நான் அனுதாபக் கடிதம் ஒன்று எழுதியிருந்தேனே?" என்றாள் மிகவும் ஏளனமாக.

"கிடைத்தது. மெத்த வந்தனம்" என்று பதிலளித்த தியாகராஜன், தொடர்ந்தாற்போல், "உன்னிடம் நான் இங்கே பேசவந்த விஷயம் மிகவும் முக்கியமானது. உனக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாதலால் நான் இங்கே வந்தேன்" என்றான்.

கோபத்தினால் சிவந்துபோன தன் அழகிய விழிகளை உருட்டி, மாயா அவனை எரித்து விடுகிறவள் போல் உறுத்துப் பார்த்தாள். "நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். தந்தி அடித்த பின்பு எப்பொழுது வரவில்லையோ, அப்பொழுதே எனக்கு உண்மை விளங்கிவிட்டது. 'என் அத்தையின் கடைசி வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. அதனால் நான் தமயந்தியை மணந்துகொள்ளப் போகிறேன்' என்றுதானே சொல்ல வந்தீர்கள்? இப்படி நடக்கும் என்று எனக்கு முன்னமேயே தெரியும். கிழப் பிணம் வீட்டை விட்டுப் போனதைக் கண்டு நீங்கள் கலங்கிய உடனேயே, எனக்கு நீர் ஆண்மையற்ற பெரும் கோழை என்பது தெரிந்துதான் இருந்தது. கடமையாம்! கடமை! அந்த நொண்டிச் சனியனை மணந்து கொள்ளப்போவதை என்னிடம் தெரிவிக்காவிட்டால், உமது கடமை காற்றிலே பறந்து விடுமா?" என்று படபடவென்று ஆத்திரத்துடன் இரைந்து கத்தினாள். முகம் சிவக்க, கண்களில் நீர் பெருக, மூச்சுத் தடுமாற சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

இருந்த இடத்தை விட்டு சிறிதும் அசையாத தியாகராஜன், "மாயா! என் அன்புக்கு உகந்த அவர்களை

இவ்வாறு கண்டபடி பேசினால், நீ அதன் பயனைப் பிறகு அனுபவிக்க நேரும். ஜாக்கிரதை! நான் உன்னிடம் பேச வந்த விஷயம் என் திருமணத்தைப் பற்றியதல்ல. உன்னைப் பற்றியதாகும். ஆத்திரப்படாமல் கவனமாகக் கேள்" என்று பதிலுக்கு அவன் அதட்டினான்.

"உனக்குப் பணம் ஏதாவது வேண்டியிருந்தால் கேள். கொடுத்து விடுகிறேன் என்று ஆறுதல் கூற வந்திருக்கிறீர்கள். உயிருக்கு உயிராக நேசிக்கும் பெண்களை முடிவில் உதறியெறிந்து விடுவது உங்களைப் போன்ற உல்லாச பிரம்மச்சாரிகளின் வழக்கந்தானே? உங்கள் செய்கையைக் கண்டு நான் ஆச்சரியப்படவேயில்லை. உங்கள் பேச்சை நம்பி ஏமாந்து போனேனே என்று என் மீதுதான் எனக்குக் கோபம் ஏற்படுகிறது. நயவஞ்சகப் பாவி! இன்னும் பேசுவதற்கு என்ன இருக்கிறது? எழுந்து போய் விடுங்கள் இங்கிருந்து!" என்று புண்பட்ட பெண் புலிபோல் சீற்றத்துடன் கூக்குரலிட்டாள் மாயா.

அவளது கண்ணீரையும் ஆர்ப்பாட்டத்தையும் கண்டு தியாகராஜன் சிறிதும் அஞ்சவில்லை. மிகவும் அமைதியான குரலில், "நீ அதிகம் உபசரித்து வேண்டினாலும் நான் இங்கே அரைக்கணம் கூட நிற்கப் போவதில்லை. சஞ்சீவி கொலைக்கேஸில் தண்டிக்கப்பட்டுள்ள மனோகரன் 'அப்பீல்' செய்து கொண்டிருக்கிறான். அவனை விடுதலை செய்யும் பொறுப்பு முழுவதையும் என்னுடையது என்று எண்ணி அவனுக்காக நான் கேஸ் செலவு முழுவதையும் ஒத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மாயா அவனைத் திகிலுடன் நிமிர்ந்து பார்த்தாள். "மனோகரன் 'அப்பீல்' செய்து கொண்டிருக்கிறானா? உங்களுக்கு அவன் மீது திடீரென்று அக்கறை ஏற்படக் காரணம்? காதலில் உங்களுடன் போட்டியிட்டுத் தோற்றான் என்று அவன்

மீது பச்சாதாபமோ?" என மிகவும் ஏளனமாகக் கேட்டு விட்டுக் கோபத்துடன் தன் பற்களைக் கடித்துக் கொண்டாள் மாயா.

அவளது மொழிகளைக் காதில் வாங்கிக் கொள்ளாது மிகவும் அசட்டையாக, "அவன் நிரபராதி. தான் செய்யாத ஒரு கொலைக்காக ஒரு மனிதன் அநியாயமாகத் தூக்கிலே மடிவதற்கு நான் இது வரை உதவி செய்து கொண்டிருந்தேனே என்று என் மனசாட்சி உறுத்துகின்றது. எப்பாடுபட்டாவது அவனுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து விடுவது என்று தீர்மானித்துவிட்டேன். இதனால் என் சொத்து முழுவதும் செலவானாலும், நான் பின் வாங்கப்போவதில்லை. மேலும், மனோகரனை என் சகோதரி விஜயா மிகவும் நேசிக்கிறாள். அவளுக்காகவும் நான் இது விஷயமாகப் பெரிதும் முயற்சிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றான் நிதானமாக.

மாயாவின் முகம் பயத்தில் வெளிறடைந்து போயிற்று. முகப்பூச்சு இல்லாததனால், கண்களைச் சுற்றியிருந்த கரு வட்டங்களும், கன்னத்துச் சதை மீது தோன்றியிருந்த சுருக்கங்களும் தெளிவாக விளக்கு வெளிச்சத்திலே அவளது உண்மை வயதைப் பறையறிவித்துக் கொண்டிருந்தன. "உங்கள் கடமையுணர்ச்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால், இதைப் பற்றி என்னிடம் வந்து கூறுவதன் நோக்கந்தான் எனக்கு இன்னமும் புலப்படவில்லை" என்று இகழ்ச்சியாக மெல்லச் சிரித்தாள் அவள்.

"ஏன் நான் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு இங்கே வந்து உன்னிடம் இவைகளைத் தெரிவிக்கிறேன் என்பதை நீ அறிவாய். மனோகரன் நிரபராதி என்றால், குற்றத்தைச் செய்தது வேறு யாரோ ஒருவர் என்றுதானே அர்த்தம்? அதனால்..." என்று தியாகராஜன் முடிக்கு

முன், மாயா சடக்கென்று ஆசனத்தினின்று எழுந்து நின்றாள். கோபத்தில் அவளது உடலும் நெஞ்சமும் ஒருங்கே நடுங்கின. கண்களில் நீர் லேசாகத் திரையிட்டு மறைத்துக் கொண்டது.

"நிறுத்தும்! அதிகமாக ஏதேதோ பேசிக்கொண்டு போக வேண்டாம். நீர் எப்படிப்பட்ட வஞ்சகன் என்பதை நான் அறிந்து கொண்டு விட்டேன். மனோகரனுக்காக நீர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் எனக்கு அக்கறை இல்லை. என்னை மறைமுகமாகப் பயமுறுத்த வேண்டாம். மனோகரன் நிரபராதி என்று விடுதலை செய்ய உங்களுக்கு செல்வாக்கு இருக்கலாம். அதேபோல் எனக்கு இந்தக் கேஸில் எவ்வித சம்பந்தமுமில்லை என்று எட்டுக் கோர்ட்டுகள் ஏறினாலும் நிரூபித்துக்கொள்ள சாமர்த்தியம் இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம்" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு, அவனைப் பார்க்க விருப்பமற்றவள் போல் உள்ளே செல்லத் திரும்பினாள்.

ஆசனத்தினின்று எழுந்த தியாகராஜன், "கடைசியாக ஒரு வார்த்தை! எனக்கு நீ இதுவரை எழுதியுள்ள கடிதங்கள் அனைத்தையும் நான் நெருப்பிலிட்டு நாசப் படுத்திவிட்டேன். அவைகளைப் பற்றி நீ இனி கவலைப்பட வேண்டாம். இதுவரை என்னிடம் காட்டி வந்த அன்பிற்கு பிரதியாக நான் உனக்கு ஒரு சிறு உதவி செய்ய விரும்புகிறேன். நீ பாரீஸ் நகரத்திற்கோ வேறு வெளிநாடு எங்கேனுமோ போக விரும்பினால், அதற்கு வேண்டிய பொருள் உதவியை எப்பொழுதும் கொடுத்து உதவச் சித்தமாக இருக்கிறேன்" என்றான். நீரால் நிறைந்த கண்களால் அவனை ஏறிட்டு ஒருமுறை உறுத்துப் பார்த்த மாயாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"தயவு செய்து நீங்கள் இங்கிருந்து சீக்கிரம் சென்று விடுங்கள். அதுதான் நான் தங்களிடம் எதிர்பார்க்கும் கடைசி உதவி!" என்று இகழ்ச்சியாகப் பதிலளித்து விட்டு உள்ளே வேகமாகச் சென்றாள் மாயா.

இதுவரை சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்ற சுபத்திரா அம்மாள், "பார்த்தியா! நான் அப்பவே சொன்னேன்! கடைசியில் கையை உதறி விடுவான். இவனை நம்பாதே என்றேன். நீ என் பேச்சைக் கேட்கவேயில்லை. அவன் எழுதியிருக்கும் கடிதங்களில் ஒன்றாவது உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்று அவன் பிடிகொடுத்து எழுதியிருந்தானா? காலணா முதலில்லாது பல லக்ஷம் பணம் சம்பாதித்த வியாபாரியல்லவா? அந்த வியாபார தந்திரத்தை உன்னிடமும் காட்டிவிட்டான். அவனைச் சொல்லி என்ன, உனக்கு சாமர்த்தியம் போதாது" என்று எரிந்து விழுந்தாள்.

"ஆமாம்! எனக்கு சாமர்த்தியம் போதாது. அவன் ஜெயித்து விட்டான்; நான் தோல்வியடைந்து போனேன். அதை நானே ஒப்புக் கொள்கிறேனே? நீங்க வேறு சொல்லிக் காட்ட வேண்டுமா?" என்று சீறி விழுந்த மகள், ஹாலின் மூலையில் மேஜையொன்றின் மீது வைத்திருந்த தியாகராஜனது புகைப்படத்தை எடுத்து ஆத்திரத்துடன் கீழே வீசி எறிந்தாள்.

கலகல வென்ற சப்தத்துடன் உடைந்து, நாலாபுறமும் சிதறிய படத்தின் கண்ணாடியைப் போன்று மாயாவின் உள்ளமும் ஏமாற்றத்தினால் சுக்கல் சுக்கலாக உடைந்து போயிற்று. இனி இந்த ஜென்மத்தில் தியாகராஜனது அன்பு மீண்டும் கிட்டாது என்ற பயங்கர உண்மையை எண்ணிப் பார்த்தவள் துயரம் தாளாது, சிறு குழந்தையைப் போல் தேற்றுவார் இன்றி அழுதாள்.

காந்திமதியம்மாள் மரணமடைந்து 1 வருட காலம் மிகவும் விரைவாக ஓடிச் சென்றுவிட்டது. இந்த ஒரு வருட காலத்திலே தியாகராஜன், அமிர்தம் முதலியோரின் வாழ்க்கையிலும், பலவிதமான மாறுதல்கள் விரைவாக ஏற்பட்டன. தியாகராஜன் எடுத்துக்கொண்ட சிரமங்களினாலும், வக்கீல் துரைசாமியின் உறுதியான நம்பிக்கையினாலும் முயற்சியினாலும், மேல் கோர்ட்டில் செய்து கொண்ட அப்பீலில் மனோகரன் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டான். விடுதலையான சில தினங்களில் அவனுக்கும் விஜயாவிற்கும் திருமணம், எவ்வித ஆடம்பரமுமின்றி எளிய முறையிலே, சூரிய காந்தத்திலே அவர்களது குல தெய்வம் முருகன் சந்நிதியிலே நடந்தேறியது. திருமணத்திற்கு மோகனாவும் அவளது வீட்டவர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

தியாகராஜன் தங்கை மோகனாவின் கணவனுக்குத் தனது கம்பெனியிலே ஒரு பெரிய வேலை போட்டுக் கொடுத்திருந்ததனால், கமலம்மாளுக்கு, சம்பந்தி வீட்டவர்கள் மேல் ஏற்பட்டிருந்த தப்பு அபிப்பிராயம் மறைந்து விட்டிருந்தது. மோகனாவிற்கும் பிறந்த பெண் குழந்தைக்கு அவளது அத்தையின் பெயரை 'காந்தி' என்று சுருக்கி சூட்டி மகிழ்ந்தாள் என்றால் அவளுக்கு ஏற்பட்டிருந்த மன மாற்றத்தைப் பெரிதும் விவரிக்க வேண்டாம்.

தன் இரு பெண்களுக்கும், தக்க இடங்களில் விவாகம் செய்து வைத்த பின்பு அமிர்தம்மாளுக்கு இனி உலகிலே தான் சாதிக்க வேண்டிய காரியம் ஒன்றும் இல்லை யென்றதொரு உணர்வு ஏற்பட்டது. அண்ணன் இறந்து போனான்; அதற்குப் பிறகு காந்திமதியும் மறைந்து போனாள். சாவினது ஜாபிதாவில் மூன்றாவதாக எஞ்சியுள்ள தான் உலகினின்று மறைந்து போகு முன் இதுவரை சேர்த்து வைத்த பாப மூட்டையை உதறிவிட்டுச்

சென்றால்தான் கதி மோட்சம் உண்டு என்று எண்ணிக் கலக்கம் அடைந்தாளாதலால், தியாகராஜன் எவ்வளவோ வேண்டியும் அவள் காந்தி பவனத்தில் வாழ விரும்பாது, மகனிடம் கொஞ்சம் பொருளை வாங்கிக் கொண்டு காசி யாத்திரைக்குப் புறப்பட்டு விட்டாள். "குழந்தே, என்னைத் தடுக்காதே அப்பா! கையும் காலும் கண்ணும் நல்லா இருக்கும் போதே நான் காசிக்குப் போயிட்டு வந்துடறேன்! ஒரு சமயம் என்னாலே அங்கிருந்து திரும்பி வர முடியாது போயிட்டா, அதுக்காக நீ கொஞ்சமும் வருத்தப்படாதே. சத்தியம் என்பதற்காக சகலத்தையும் துறந்த அரிச்சந்திரன் காவல் காத்த புண்ய பூமியிலே, சாவதற்கு மிகவும் கொடுத்து வச்சிருக்கணும். யமதர்மனே வந்து காவல் செய்த இடமானதனாலே மரணம் என்பதன் பயமே கிடையாதுன்னு கோடிக்கணக்கான இந்துக்கள் நம்புகிறார்கள். அதனாலே நான் அங்கேயே செத்துப் போனால், உன் தாயார் பிறவிக் கடலைக் கடந்து விட்டாள் என எண்ணி சந்தோஷப் பட்டுக்கொள். ஒருசமயம் நான் திரும்பி வந்தால், காந்திமதிக்குச் செய்தது போல், கடைசி நிமிஷம், என் உடலை எடுத்து ஆடம்பரமில்லாமல் அடக்கம் செய்துவிடு. எனக்கு இனி வேறே என்ன வேணும்?" என்றாள் நாத்தடுமாற உணர்ச்சி பொங்க.

தன் மாற்றாந் தாயிடம் தியாகராஜனுக்கு எவ்விதமான பாசமும் அதுவரை இருந்ததில்லை என்றாலும், வயோதிகத்தினால் தளர்ந்து, மரணம் ஒன்றையே எதிர்நோக்கி மகனிடம் விடைபெற்றுக்கொண்டு அவள் காசி யாத்திரை புறப்பட்ட பொழுது, அவனது கண்கள் கலங்கிவிட்டன. "அம்மா! எங்களை விட்டுப் போகாதே!" என்று கூவியழைத்து அவளைத் தழுவிக் கொண்டு அழ வேண்டும் போல் அவனது மனம் ஏக்கத்தில் துடித்தது எனறால் மிகையே இல்லை.

அன்றைய தினம் சூரியகாந்தம் முழுவதும் தியாக ராஜனைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆற்றங்கரை ஓரமாக இருந்த மாந்தோப்பு மாளிகையை அவன் விலைக்கு வாங்கி, பழுது பார்த்து, வெள்ளை யடித்துப் புதுப்பித்து, சூரியகாந்தத்தில் பெண்கள் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்த சில பெரியோர்களுக்கு அதை நன்கொடையாக வழங்கியிருந் தான். 'நாகம்மாள் பெண்கள் பள்ளிக்கூடம்' என்ற பெயர் சூட்டப்பட்ட அந்தக் கட்டடத்தை, சம்பந்த முதலியாரையே திறந்து வைக்கும்படி அவன் வேண்டிக் கொண்டிருந்தான். தொண்டுக் கிழவராகிவிட்ட போதிலும் 'நல்லதொரு காரியம் செய்கிறோம்' என்ற மகிழ்ச்சியிலே, யௌவனத்தைத் திரும்பப் பெற்றவர் போல் மிகவும் உற்சாகமாக வீட்டிலிருந்து நடந்து வந்து, கட்டடத்தைத் திறந்து, பொருள் கொடுத்து உதவிய தியாகராஜனையும், அதிலே படிக்கப் போகும் மாணவி களையும் மனமார வாழ்த்தினார் சம்பந்த முதலியார். விழாவிற்காக வந்திருந்த தமயந்திக்கும் தியாகராஜனுக்கும் அன்று இரவு முதலியார் வீட்டிலே பலமானதொரு விருந்து நடந்தது.

பால் போன்றதொரு அழகிய நிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஆற்றங்கரையின் கல் மீது உட்கார்ந்து கொண்டு தமயந்தி, சற்றுத் தொலைவிலே ஆகாயத்தை நோக்கிக் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற நாகம்மாள் பெண்கள் பள்ளிக்கூடத்தின் கட்டடத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு லேசாகப் பெருமூச்செறிந்தாள். அவளுடன் தனிமையிலே சில வார்த்தைகளைப் பேச வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ந்து வந்திருந்த தியாகராஜன், "நாகம்மாள் என்ற பெயரை ஏன் இந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சூட்டினோம் என்பது இங்குள்ள பலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அத்தையின் கடைசி

வேண்டுகோளை நான் நிராகரிக்கவே விரும்பவில்லை. 'எனக்கு ஏதாவது செய்ய விரும்பினால் இந்த ஊரில் பெண்கள், கல்வியில் முன்னேற ஒரு சிறு பள்ளிக்கூடம் கட்டிவை' என்று அவர்கள் கடைசியாக என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு, 'நாகம்மாள்' என்ற பெயரை வைக்க வேண்டும் என்றும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். காந்திமதி என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்று என் மனம் மிகவும் விரும்பினாலும் அத்தையின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாது. அந்தப் பெயரையே வைத்தேன்" என்றான் மெல்லிய குரலில்.

"இன்றைய விழா மிகவும் சிறப்பாக நடந்தது. இந்த ஆற்றங்கரை எனக்குக் கடந்துபோன ஒரு சம்பவத்தை நினைவூட்டுகிறது. குழந்தையாக நான் இருக்கையிலே என் கல்வியின் பொருட்டு வீட்டை விட்டுக் கிளம்பிய பெரியம்மா நடக்க முடியாது என்னை இங்கே இறக்கி விட்டுச் சோர்வுடன் உட்கார்ந்துவிட்டார்கள். என் கல்விக்காக அவர்கள் எவ்வளவு பாடுபட்டார்கள்? அதையெல்லாம் எண்ணும் பொழுது என் மனம் மிகவும் வேதனைப்படுகின்றது. இப்பொழுது பெரியம்மா உயிருடன் இருந்தால், இந்தப் பள்ளிக்கூடத்தைக் கண்டு எவ்வளவு ஆனந்தமடைந்திருப்பார்கள் தெரியுமா? ராஜ்! பெரியம்மாவை விட இனி தியாக புத்தியுள்ள பெண் களை நம் வாழ்விலே பார்க்கப் போகிறோமா! பதவி, பட்டம் இவைகள் மீது அவர்களுக்கு ஆசை சிறிதுமே இருக்கவில்லை. தன் பெயரைப் பள்ளிக்கூடத்திற்கு வைப்பதைவிட உங்கள் வாழ்க்கையைத் துலங்கச் செய்த நாகம்மாள் பெயரையே வைப்பது பொருத்தமென்று எண்ணி அவ்வாறு உங்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் கடைசி விருப்பத்தைத் தாங்கள் பூர்த்தி செய்ததைக் கண்டு என் மனம் மிகவும் ஆறுதல் அடை

கின்றது. நாகம்மாளுக்கு ஏற்பட்ட தீங்கைப் பற்றிப் பெரியம்மா அறியாமலே உயிர் துறந்தது மிகவும் நன்மையாயிற்று" என்றாள் மிகவும் தாழ்ந்த குரலில்.

"தமா, அப்படியானால் உனக்கு உண்மை தெரியுமா?" என வியப்புடன் கேட்டான் தியாகராஜன்.

"உங்களுடைய மோட்டாரில் மோதுண்டு இறந்த பெண்மணியை யாரோ பிச்சைக்காரி என்றுதான் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். காயம் பட்ட பெண்ணின் முன்கரத்திலே 'நாகம்மாள்' என்று பச்சை குத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தைப் பத்திரிகை படித்த உடனேயே அவளைப் பற்றி நான் விசாரிக்க ஏற்பாடுகள் செய்தேன். பைத்தியக்கார ஆஸ்பத்திரியி லிருந்து வெளியே தப்பி வந்தவள் என்று அவளைப் பற்றிய மற்ற விவரங்கள் எனக்குக் கிடைத்தன. அறிந்தோ, அறியாமலோ தாங்கள் அவளுக்கு இழைத்த கொடு மையை எண்ணி நான் எவ்வளவு நாட்கள் துயரப் பட்டிருக்கிறேன், தெரியுமா?" என்றாள்.

"தமா! என் ஆயுசிற்குள் அதற்கு ஈடாக நாகம்மாள் நினைவை சூரியகாந்தத்திலே என்றும் நீடித்திருக்க நிலை நாட்டி விடுவது என்று தீர்மானித்திருக்கிறேன். இந்த 'நாகம்மாள் கலாசாலை'யாக மாறி, முடிவில் 'நாகம்மாள் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் திகழப் போகிறது. அதை நீ பார்க்கப் போகிறாய். அப்பொழுதாவது நீ மன்னிப்பாய் அல்லவா, தமா?" என்றான் உணர்ச்சி பொங்க நடுங்கும் குரலில்.

திடுக்கிட்டுத் திரும்பிய தமயந்தி, "ராஜ்! என்ன சொன்னீர்கள்?" என்று பதற்றமாக வினவினாள்.

"ஆமாம். தமா! அத்தை, நாகம்மாள், சம்பந்த முதலியார் இவர்கள் எல்லோரும் என்னை மன்னித்து விட்டார்கள். ஆனால் நீ மட்டும் என்னை இன்னமும்

மன்னிக்கவில்லை என்பதை அறிவேன். ஞாபகமிருக் கிறதா? பல வருடங்களுக்கு முன்பு முதல் முதல் எங்கள் வீட்டிற்கு நீ வந்த சமயம், என்னிடம் எவ்வாறு நட்புரிமை கொண்டாய்? அப்பா செம்மையாக உதைத்த தனால் நோவு தாளாது விம்மியழுது கொண்டிருந்த என்னிடம் என்ன கூறினாய்? நினைத்துப் பார்; "பையா அழாதே!" என்றாய். அன்று என் உடல் அடியினால் நோவுண்டு இருந்தது. இன்று என் உள்ளம். நான் உங்கள் அனைவருக்கும் இழைத்த தீங்குகளை எண்ணி நோவுற்று வேதனையினால் துடிக்கிறது. தமா! என்னை மன்னித் தேன் என்று சொல்!" என்று மூச்சுவிடாது தனது மனத்திலே அதுவரை அடக்கி வைத்திருந்த எல்லாவற்றை யும் கூறி முடித்த அவன், அவளது இரு கரங்களையும் எடுத்து முகத்திலே பதித்துக் கொண்டு விம்மினான்.

மிக்க மனவெழுச்சி அடைந்த தமயந்தி, "ராஜ் நடந்த வைகளை நாம் மறந்துவிடுவோம். இதோ என்னைப் பாருங்கள்!" என அவன் முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் தன் கரங்களால் துடைத்தாள்.

"தமா! சூரியகாந்தம்தான் நம்மை முதன் முதலில் நண்பர்களாக ஆக்கியது. அதே சூரியகாந்தம் இன்று நம்மை மறுபடியும் ஒன்று சேர்க்கட்டும். கடந்த ஒரு வருடமாக உன்னை நான் கேட்கும் அதே வேண்டு கோளை இன்று கடைசி முறையாகக் கேட்கப்போகிறேன். இவ்வளவு முறைகளும் மறுத்ததுபோல் இன்று நீ மறுத்தா யானால் என்னை நீ மன்னிக்கவில்லை என்று தான் அர்த்தமாகும். தமா, நீ என்னை மணந்து கொள்வாயா?" என்றான், துக்கத்திலே தடைப்பட்ட மெல்லிய குரலில்.

நதியையே நோக்கிக் கொண்டு, தமயந்தி மௌனமாக இருப்பதைக் கண்ணுற்ற தியாகராஜன், "தமா! எப்பொழுதும் சொல்கிற 'முடியாது' என்ற பதில்தானா இப்பொழுதும்?" என்று மிகவும் ஏக்கத்துடன் கேட்டான்.

நெற்றி மீது கலைந்து விழுந்த அவனது சுருண்ட கேசத்தைத் தன் விரல்களால் மெல்ல ஒதுக்கி விட்ட தமயந்தி, "ராஜ்! ரொம்ப நேரமாக நாம் இங்கே தனித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். தாத்தா அங்கே நமக்காக விழித்துக் கொண்டு காத்திருப்பார். வாருங்கள் போகலாம்" என்றாள்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிடு சீக்கிரம். இந்த சந்தோஷ சமாசாரத்தை முதலியாருக்கு நாம் இப்பொழுதே தெரிவிக்கலாம்" என்றான்.

"நாகம்மாள் பள்ளிக்கூடத்தை நம் வாழ்நாளிலேயே நாகம்மாள் கலாசாலையாக்கி விடுவோம். அதைப் பல்கலைக்கழகமாக்கும் பொறுப்பை நமது சந்ததியார்கள் எடுத்துக் கொள்ளட்டும். சரிதானே!" என்று கூறிவிட்டு மெல்லச் சிரித்த தமயந்தி, தியாகராஜனது கரத்தை ஆதரவாகப் பிடித்துக்கொண்டு எழுந்திருந்தாள்.

மேகப் படலத்திலிருந்து வெளிவந்த பூர்ணிமைச் சந்திரன் அது சமயம் மிகவும் பிரகாசமான வானவீதி யில் ஒளிவீசிக் கொண்டிருந்தது

—முற்றும்—

திருமகள் நிலையம்